நடுநிலைக் கடவு ளேயென வழுது னைந்துகொண் டேவரும் போது. (௱௪௭)

அவ்வழி தன்னிற் றுளசிதா சரவ ரனைவுறக் கண்டிவ ளவனைச்
செவ்விசேர் பாக வதரெனத் தெரிந்து சேவடி சேர்ந்துநான் வணங்கில்
வெவ்விய லினைத்து நீக்குவா ரென்று விரைந்தவ ணிறங்கிமற் றவர்தந்
திவ்விய பதுமச் சேவடி வணங்கத் திகழுமாப் பிளையெனத் தெரிந்து. (௱௪௮)

நீதியின் மனைவி யொடுசுக மாக நெடும்பகல் வாழ்கென வாழ்த்த
மேயவள் கூட வந்தவ ரெல்லா மிகுநகை செய்யமா தாசர்
ஏயவ ரெல்லா மென்னகை செய்தா ரெனவவ ளையயான் பெண்ணே
ஆயவ ளென்று தன்வர லாறெல் லாமவர்க் குரைசெய்தா ளாகி. (௱சகூ)

ஐயரே யென்னை யளித்திட வேண்டு மென்றடி வணங்கின ளாகப்
பொய்யிலா ரிதுவென் புதுமையென் றெண்ணிப் புரையிலா விட்டல னுன்னை
மெய்யதா நான்சொல் விதிப்படி செய்வா னஞ்சிடே லெனவவர் விளம்பத்
தையலா ளுகித் தயங்குதல் கண்டோர் தனித்தனி யதிசயங் கொண்டார். ()

இவ்விதப் புதுமை யந்நக ரரச னிருசெவிக் கமுதெனக் கேட்டுச்
செவ்விது தாசர் செயலென வந்து திருவடி வணங்கினன் புகழ்ந்தான்
அவ்வித மான மணமகன் றன்னை யழைத்தனன் கொண்டுபோய் மனையில்
நவ்விசேர் விழியா டன்னைமுன் போல நன்மண முடித்தபி னல்லோர். (௱ருக)

(வேறு) அக்கோ மகன்செய் வழிபாடு பெற்றன் பிஞரோடு
மெய்க்கோ குலத்துற் றிடமுனு நதிமேவி மூழ்கித்
திக்கோர் புகழத் திகழ்கண் ணனைச்சேவை செய்து
தக்கோர் புகழும் பிருந்தா வனந்தன்னில் வந்து. (௱ருஉ)

வளர்சார்ங் கபாணி தனைக்கண்டு வந்தித்தொர் மாத
வளவங் குறைந்து மதுராபுரத் தின்க ணணமி
கிளர்நீர் யமுனை படிந்தங்கு றுங்கேச வன்றாட்
டளமா மலரைத் தலைமேற்கொ டுதங்க லானா. (௱ருங)

யுகநான்கி னுஞ்சா லடியார் புகழோதி நின்ற
தகவாற் பிரிய ரெனுந்தாசா தநகில்லில் வாது
மிகநீர் நயந்து செயும்புதத கமவேணடு மென்ன
அகமே நினைந்தா ரிவாசீ ரதிலான தின்மை. (௱ருச)

மதுவொ ன்றியசீர்த் துளவோன் றெரியாமல் வந்தே
அதுவும் புரிந்த துளதென் றமைவாக வைத்தான்
புதிதொன் றுளதாய்ப் புனை புத் தகங்கொணடு போர்து
துதிநின் றியலா லயத்துற் றதுசொல்லி முறறி. (௱ருரு)

நானே தெரிந்திங் கெழுதாத தைநாடி ராமன்
தானே யெழுதுந் தகைபாமி னின்றென்று சாற்ற
ஆனு வியல்பிற் பெரியோ ரதையாய்ந்து கண்டு
மேனு முரைப்ப துளதோ வெனமெய்ச் சுகின்றார். (௱ருசா)


ராமன் னெழுதத் தகுஞ்சீர்பெறுநாதா தம்மை
ஏமுன் னுறுவோ ரிவர்சீர் புனைந்தேத்து கிற்போர்
பூமன்னி வாழ்வா ரரிக்கன் புறுபுந்தி மேவித்
தாமின் புறுவா ரழியாப் பதஞ்சார்குவாரே. (௱ருஎ)

துளசிதாசர் திருவடிகளேசரணம்.

ஆகச் சரித்திரம் (ங) க்குச் செய்யுள் (௬உசா).

முற்றிற்று.

நாமதேவர்சரித்திரம்



மாமகள்கோ னுத்தவரை யுஞ்சுகரை யும்பார்த்து மண்ட லத்தி
லேமகராய்ப் பிறக்கவேனப் பாலாழி நாதனே யெம்மைக் காப்பத்
தாமளவா கப்புரியா தயோனியிறுறேன் றவதாக வருள்க வென்று
காமருவு துதிசொலக்கு ஞநிதியு மற்றவரை நந்த ராக்கி. (க)

கிளிஞ்சிலகத் தமைத்துமுகில் கங்கையிலும் பீமையிலுங் கிளர்வ தாகத்
துளிகளுடன் விழப்பெய்ய நியமித்தான் பீமநதி தோன்றி மேன்மேல்
வளர்பெருக்கி லேமிதந்து கிளிஞ்சில்வர வதனுள்ளே வாழ்மெய் யன்பர்
தளர்வறவிட் டலநாமந் தனைத்துதித்துக் கொணடின்பந் தழைப்ப தானார். (உ)

ஞானநலங் களிலுயர்ந்து பண்டரியிற் குணையெனு நங்கை யோடு
தானமருந் தாமாஜிச் செட்டிதினம் பீமநதி தன்னி லாடி
ஆனஹரி விட்டலனைச் சேவித்து வருநியதி யதுமா றாமல்
ஊனமற வொருநாளிற் கற்பிலுயர் மனைவிநினைத் தொன்று சொல்வாள். (ந)

உயிர்த்துணைவீர் நமக்குமக வுண்டாக விட்டலனுக் கோதிப் போற்றி
அயிர்ப்பறநீர் பெறுகவென மூப்பின்மிகுந் துளகாலத் தரிவை யேநின்
வயிற்றுறுமோ மகவுனக்கு நல்லறிவின் றெனப்புகல மனைவி நோக்கி
இயற்றயன்கன் றெடுகொணா யரைமறைக்கச் சேய்கன்று யியல்வ தானன், ()

பெருமையைநீ ரறியாது பேசுகின்றீ ரென்றுரைத்த பின்று மாஜி
திருமணவா ளன்பாற்போய்க் கோயிலிடை நின்கருத்தைச் செப்பு கின்றேன்
அருளுவனேற் பெறுகென்று கோயிலுக்குப் போயமல னடிசே வித்துப்
பொருவரியா யென்மனைவி கருத்தைநிறை வேற்றுகெனப் போற்றி நின்றார். ()

அக்கணத்தே துயில்வரச்செய் தவர்கனவிற் பீமநதி யதிற்கி ளிஞ்சில்
புக்குறுசே யினைநாளைப் போந்தெடுத்துக் கொள்கவென் று பூமி நாதன்
தக்குறச்சொல் பொழுதுணர்ந்து மனைவந்து மனைவிக்கு ச்சாற்றி யன்பின்
மிக்கவர்பின் றுளுதயத் தெழுந்து சென்று மூழ்கினபின் மிதக்கக் கண்டார். ()

மிதந்தகிளிஞ் சிலையெடுத்து வந்துதிறந் ததைநோக்க விளங்குஞ் சேயை
இதநாதருதீம் பாலுதவற் கியாருளரென் றெண்ணிமனை யிடத்தின் மேவிச்
சுதன்றனைநீ கொள்கென்ன மனைவிக்குக் கொங்கைகனி சுரந்து தீம்பால்
உதைந்தொழுக வாங்கிமுலை யூட்டினாள் பெருமகிழ்ச்சி யுள்ளத் தோங்க. (எ)

சேய்பெறுக் காலத்திற் சிறுவனைத்தந் ததற்குதவத் தீம்பா லுந்தந்
தாயவவர் மகிழ்விற்கோ ரளவுண்டோ வமலனரு ளளவே யாக
மேயதிரு மதலைக்கு நீராட்டி விட்டலன்றன் னுமை மேவ
ஏயபடி நாமதேவெனப்பெயர்வைத் தார்புவியெல் லாமீ டேற. (அ)

நாடோறுந் தாய்தந்தை யன்பின்வளர்ப் பதனாலே நாளுமோங்கிப்
பீடேறுங் காலத்தி லொருநாட்சந் தைக்கினிய பிதாத்தா னேக
ஈடேறு மகன்றன்னை நோக்கியன்னை பிரசாத மிதனைக் கோயில்
ஊடேறி விட்டலனுக் குவப்பாக நிவேதித்திங்குறுக வென்றாள். (கூ)

பிரசாதந் தனையேந்திக் கோயிலிற்போய் விமலனுக்குப் பெருநீ ராட்டித்
தரமான வுடையுடுத்தித் தொடைசூட்டிப் பலகலனுந் தயங்கச் சார்த்தி
வரதூப தீபந்தந் துபசார வகையனைத்தும் வழங்கி நாமர்
திரமாக வணங்கியிந்தப் பிரசாதங் கொள்கவென்று திருந்தச் சொன்னார். (௰)

நாதனருந் தாததுகண் டென்பிதாக் கொணர்வதனை நாளு முண்பாய்
நீதவிர்ந்தா யின்றுபுசிப் பதையெனது பிதாசசந்தை நிலைகளுப் போந்தார்
ஆதலினா னுன்கொணர்ந்தே னென்பாலே தோகுறைநீ யருந்தா துற்றாய்
ஏதுசெய்வே னென்றயர்ந்தார் விக்கிரக முண்பதென்றே யெண்ணங் கொள்வார்.

இவ்வகைசொல் லியுமருந்தா திருப்பதனைக் கண்டடிகே ளின்று நீமுன்
செய்வகைசெய் யாதிருந்தா யென்றன்னை பாற்சென்று செப்பு வேனேல் [ன்
அவ்வகைக்கென் குறைசெய்தா யென்றென்னையடிப்பாள் மற்றதற்கென் செய்வே
எவ்வகையான் பிழைசெயினும் பொறுத்திதனையுண்கவெனவிரங்கிச் சொன்னார்.

சொன்னதுகேட் டுளமிரங்கி யழுகண்ணீர் துடைத்துமுகச் சோர்வு நீக்கித்
தன்னதிரு கரங்கொண்டு தழுவவவர் பிரசாதந் தனைமுன் வைக்க
மன்னுபெரு மானுமுள மகிழ்ந்துண்டிங் குண்டதனை மறவோ ருக்குப்
பன்னலென நாமதே வடிவணங்கித் தாமுறையும பதிக்குச சென்றா. (௰௩)

வந்தமகன் றனையன்னை பிரசாதம் யாக்குதவி வந்தா யென்னச்
சிந்தைமகிழ்ந் தமுதுசெய்தார் திருமாலென் றுரைத்திடலுஞ் சேயை நன்றுன்
றந்தைவந்த பின்பறிது மென்றிருந்து தாமாஜி வந்த பின்பு
முந்துநடந் ததையுரைக்க வியப்புற்றுச சோதிக்க முயல்வு கொண்டார். (௰௪)

நாமதே வரைநோக்கித் தாமாஜி நேறறுணட நாத னின்றும்
தாமமுது செய்வதைநீ காட்டென்று பிரசாதந் தனைககைக கொணடு
நேமமொடு கோயிலுக்குள் ளேசென்றங் கயனின்று நிவேதி யென்ன
மாமணிவண் ணனுககுபசா ரங்களெல்லாம் புரிநதுதுதி வாயப்பச் சொல்லி. ()

உண்டருள வேண்டுமென்று கைகூப்ப விட்டலனு முவந்துன் றந்தை
கண்டுகொள வெளியாகே னெனநாம தேவாபின்னுங் கைகள் கூப்பி
விண்டுநீ யோகபட னெனதுபிதா வுக்குனுரு விளஙகக காட்டிக்
கொண்டுவரு பிரசாதங் கொண்டிலையேல் விடேனுன்னைக் கொள்வா யென்றார்

பாண்டுரங்க னதுகேட்டு மகிழ்ந்துநகை கொண்டுமிகு பரிவுபூண்டு
வேண்டுபடி யுண்டருளி விடைகொடுக்கத் தாமாஜி வியந்து காதல்
நீண்டுநீ மகனாத லாலேநா னிமலனைதிா நிறகக் கண்டேன் [ர்
ஈண்டுநீம்வாவென்றழைத்துக்கொண்டுமனையேகியில்லாட்கெல்லாஞ்சொன்னா

குணுயிபதி தனைநோக்கி யிவனைநாந் தேவனெனக் கொள்வ தன்றி
ஒனாதுமக னெனக்கொள்வ தயோகியிற்றேன் றியதினு லுணமை யன்பன்
பணுமுடிசேர் பாம்பமளிப் பரமனுக்கென் றனுதினமும் பணிமா றமல்
அணுவிவருங் காலத்தின் மகனுக்கு மணஞ்செயுநா ளாயதென்று. (௰௮)

சடங்கனைத்துந் தகச்செய்து மணஞ்செய்த பின்புமகன் றனக்கோர் மைந்தன்
விடங்கமிகத் தோன்றுதலு மகிழ்ந்துசவு ளஞ்செய்ய வேண்டு நாளின்
மடங்கல்வடி வாயினான் வரிசைகொண்டு வரத்தெரிந்து மகன்மைந் தற்குத்
திடங்கொள்பெய ரிடுகெனநா ராயணனென் றேநாமஞ் சிறக்க வென்றான். ()

பின்புமரு மகளைமக னொடுசேர்த்து வைத்துவிதி பெருகச் செய்து
முன்பனரு ளுடையணிகள் முதலியன தரிப்பித்து முகுந்தன் செல்ல
அன்புசெய்து வருநாளிற குணயிமகன் றனைநோக்கி யைய யாங்கள்
துன்புறுமூப் படைந்துற்றோ மிரவுபக னீஹரியைத் துதிப்ப தாகி. (௨௰)

ஆகமறந் தனுதினமும் விட்டலனைப் பற்றிக்கொண் டமைவதானால்
வாகுடனே குடும்பரக்ஷை யாகுவதெப் படியவண வத்து ளோர்கள்
நாகரிக ராயுலகிற் குடும்பரக்ஷை செய்துகொணடே நாத னுமை
யோகமுறு கின்றனரவ் வாறன்றி நீவேறு யுறுகின் றாயே. (௨௧)

நாங்களுமுன் மனைவிமக னொடுநாளு நல்குரவி னலித னோக்கிப்
பாங்குளரெல் லாருநகைக் கின்றனரே யென்செய்வோம் பகரா யென்னத்
தீங்கறுமெய் யன்பினருக் கனுதாபம் பிறந்துதிருக் கோயில் சென்றங் [ய்
கோங்குமுதல்வனைப்பணிந்துபாணடுரங்காவெனைக்குடும்பத்துறவேன் செய்தா

உனக்கிரக்க மில்லையோ வெமதுதுய ரறிந்திலையோ வென்ன வோதி
மனக்கலக்க மாயக்கணணீர் வடித்துநின்றார் தமைநோக்கி மலராள் கேள்வன்
நினக்கின்று துன்பமுற நியமித்த தாரொன்று நெடுங்கண் ணீரை
வனக்கையினாற் றுடைந்தினிது மார்பினூ டுறவணைகக வகுக்க லானார். (௨௩)

(வேறு) மறைபுக ழொருவநின் மலரடி மறவா
துறைவுறு மெனதுள முறுதுய ருறவே
குறைபுகல் கிறநினை குறைகில னைதநின்
நிறையருள் கொடுகளை வுறநினை கெனவே. (௨௪)

அன்பினா மொழிவதை யமலனும் வினவி
என்புடை யமருதி யினியுனை யடையா
துன்புறு பவவினை யெனவடி தொழுதே
இன்புட னிவணுற லினிதென வுறும்வார. (௨௫)

களிமிகு தெளிவொடு கருணைநன் னிதிதன்
அளிமிக வமலநி னருள்வடி வெனதுள்
ஒளிர்தர வருளுவ தொடுபெயர புகலத
தெளிவருள் பவமெவை செறியினு மெனலும். (௨௬)

அடியனை யருள்பவ னலர்மக டனைநீ
நெடிதுண ரிவனது நிலைதனை யெனவே
முடிவறு மகிழ்வொடு முகிழ்நகை புரியாக்
கடிமனை யுளசெயல் கழறுக வெனவே (௨௭)

மடியொடு மனைவிபொன் வளரிட நெடுவான்
நெடிதுடை யவகிழி துகினெகிழ் மனைவி
இடிமனை யுடையவெ னியல்பறி கிலையோ
நொடிகென வருள்குவை யெனநுவ றரவே. (௨௮)

எனுமடி யவர்மொழி யினிதென வினவிப்
பினுநகை புரிவொடு பெரிதிங னுறுகால்
அனையொடு மனைவித மகவயி னழலா
ரவினை வுறுவது வெகுளியின் மிகவே; (௨௯)

தோமியல் புரிமிடி றுழைவதி னுகர்தற
காமியை விலையுன தகவயி னதனைப
போமியல் புரிபுதல் வனுமிலை யெனவே
மாமியை மருமகள் வசைபல புகல்வாள. (௩௰)

துகிலிலை யுணவிலை சுகமிலை யாமிவ
வகைபட வோமனை வந்தன னெனவும்
தகுதியி லரிபெயா தானவில வகிலென
றருவிழி நீருட னுரைதரு பொழுதே. (௩௧)

பண்டரி புரவிறை பரிவுட னகையுட்
கொணடுயா ககபதி குறைவறு விடையாய
மணடனில வரமிசை மலிதன நிறையத
தொணடாத மனையது தருவினன வருவான் (௩௨)

கேசவ வணிகனெ னகிளா பெயாகொண
டாசறு தெருவிடை யடைகுநா தமைபெங
கேசக ளுமன திடமென வினவப
போசன மிலன்மனை புதியவா புகுதல. (௩௩)

நன்றென வுறவினா ரகைதர நாமாக
கொன்றுத லறிவற வுவாமனை யதனைத
துன்றிட வருமவ னெதிாதனு குநரைப
பினறையும வினவின னவாமனை பெறவே (௩௪)

எஙகென வினவின னெதிரவ ணியலவோா
பைஙகுலை மிகுவன படாவுறு கொடிதாழ
அஙகென விடைதனை விரைவினி லனுகென
றெஙகனு முறைபவ னெயதினன மனைவாப. (௩௫)

வநதவ னிலவிடை வதிபவா யாாநீா
தநதிடு கதவிசு தகுபுதி யவனயான
மூநதுறு வீரென முதுவாக னிலைநீ
பிநதுக வெனவிடை யுதவினள் பினையும. (௩௬)

அயலவ ளொடுதின மரிபெயா புகலவாா
பயிலுவ ரொனிலவா பசிதவி ரெனவில
இயலறி கிலாபதி யெளிதினின மொழிவாா
அயிலபொரு ளௌவையுா வகவயி னடைவாா. (௩௭)

வறுமைபின வகைதெரி கிலாசொலும வசையும.
அறிகிலா நலிதுவ ரெமையென வறையும
குறிதெரி ஹரியெதிா குறுகுதி யெனலும
அறைகுவ ரெவரொனு மவளறி வுறவே. (௩௮)

யாரொரு நாமன துறவின னவனுக
கானது கொடுமனை யணுகின னெனலும
தானது பெறும்வகை தவிசது கொடுவந
தனைமி விதிலினி துறைகென வுறமுன (௩௯)

புதியவ னெனவுரை பொழுதுள மகிழாள்
இதுதன மெனுமிடை யுதவின டவிசென்
றதிநகை கொடுலக ரலனென நன்பன்
நிதிநசை யிலனரி பஜனையி னிமிர்வான். (ச௦)

ஆதலி னவனை நீ நலிதர லவன்மா
உதுகொள் செலவுறி லினுமுத வுவனின்
நாதனொ டுரைநய னறுகின னெனவென்
றோதலு மாதிவ ளுரைநனி புரிவாள். (சக)

ஐயநி னகமுனி வுறமுன ரறையும்
வெய்துரை பொறுகமசெய் வெகுளலை யினிதிங்
கெய்தினை யமுதுசெய் தேகென விறைவன்
செய்தில னமுதவ னில்பொழு தினிலே. (சஉ)

(வேறு) என்று நாயக னங்குநின் றினிதெழுந் தருளிக்
குன்று போலுயர் கோபுர நிலைவளர் கோயில்
சென்று மாமலர்த் திருவொடு புரிசெயல் செட்டி
நன்று றைதிட நாமதே வின்மனை நல்லாள். (சங)

இங்கு நீசிறு மகிழ்வுகொண் டென்றிருக் கணவர்
பங்க யாசனி நாயக னிடத்துறு பக்தி
பொங்க நாடொறும் புரிந்தது பலித்ததிப் பொழுதென்
றங்கை கூப்பிமற் றப்பொதி தனையவிழ்த் ததிலே (சச)

சிலபொன் கைக்கொடு செறிநிரை யாவணஞ் சென்று
பலவும் வேண்டுவ வணிகனிற் பெற்றுத்தன் பதிக்கு
நலம தாகவந் தறுசுவைப் போனக நன்காக்
குலவ வேயமைத் தறவெளிச் சென்றதோர் குறையி. (சரு)

மைந்த னன்புக்கு மலர்மக ளுநயகன் மகிழ்ந்து
விந்தை செய்துறு விளைவறி யாடனி விளைந்தே
அந்த நாளுண வினுக்கமை வனசில வாய்ந்து
வந்து றம்பொழு தேகினை வுற்றனள் மகனை. (சசா)

ஈட்டு கின்றிலை பொருளென முனிந்ததை யெண்ணி
வாட்ட மீக்கொடு சென்றவன் கோயிலில் வதிவான்
நாட்டு மிப்பொழு தெனக்கொடு நாயகன் கோயில்
காட்டு கோபுரத் திடைவந்து கண்டுகை குவித்து. (சஎ)

வாயி லூடுசெல் வழியவள் வரவறி மாயன்
நேய மைந்தனைத் தனதுபின் புறமுற நிறுவி
மேய போதுவந் தவளது தெரிந்துசீர் விமலா
ஏய நின்வயி னன்புமிக் கென்மக னென்றும். (சஅ)

குடும்ப வாழ்க்கையை யிகந்துநின் கோயிலே குறுகி
இடும்பை யென்பது தெரிந்தில னியல்வுற விங்கே
நெடும்பல் காலமு நின்னையே பற்றின னின்றால்
படும்ப டர்க்கியா மாற்றலம் வறுமையிற் பட்டு. (சகூ)

தளர்வு கூர்தர விங்ஙனம் புரிவது தகவோ
அளவி லன்பொடு வளர்த்ததிவ் வாறுற வன்றே
இளர்வ தாயெமைக் காப்பது கருதியே கெழும
உளவு ளுலெங்கள் குடிகெட லாகுமோ வுரைப்பாய். (௫௰)

நின்னை நம்பினர் நேயர்பா னீபெறு நினைவே
உன்ன தாயுறு கின்றதோர் பருக்கைநொய் யவலோ
டின்ன பெற்றுநீ தருவது பேரின்ப மென்றால்
என்ன யான்றர வுளமிடி யல்லதொன் றின்றே. (௫௧)

மன்னி ரந்தனை யுளவறிந் தனைதிரு மார்பா
அண்ணன் மாபலி வீடண னென்பவ ராலே
எண்ணி நீயெவ ரிடத்தினும் பெறுவதே யிசைந்தாய்
வண்மை யுன்வயி னெங்ஙன முளதென வவப்பாம். (௫௨)

சேட னுனுநின் செய்வினை செப்புதற் கெளிதோ
நீட நானுனைத் தேவென நினைந்துநிற பதனுல
ஆட லாகிய தெய்வநன் னிலையுள தன்றேல்
வாடன் மேவுதி யெனைக்கண்ட வுடனென்றன் மகனை. (௫௩)

உனது பின்புறந் தனிலொளித் தனையிஃ துவப்போ
அனக செப்புதி யென்னனு மமலனங் கறைவான்
கனகை கொண்டுநின் மகன்றனை நான்கெட நயவேன்
வனம ரக்கனி பழுத்திடில் விழுவது வம்போ. (௫௪)

அன்ன தேயெனச் சகத்தெனுந் தருவதா யமைந்த
என்ன தாகிய தாளிணைக் கீழ்விழு மிவனை
நின்ன தோர்மக னென்னுதி யவனது நிமித்தம்
சொன்ன நானுமோ நாமரு பதமொடு துலங்கி (௫௫)

நாம தேவனென் பால்வர நணுகின னயப்புற்
றூம தன்றென நீவிலக் குவதிங னடாது
நீம கன்றனைக் கூஉய்ச்செல நினைவுறி லெனக்கு
வேம கம்பெரி தென்றிடக் குணுயிபின் விளம்பும். (௫௬)

உழுது நன்னிலத் திடும்பயி ருழவனை யுரப்பி
வழுவு றுதிறை கொள்புர வலனென மாயா
பழுதி லாதுநான் வளர்த்தமைந் தனைப்பரி வின்றி
எழுது கின்றனை நின்பொரு ளெனவிஃ தியலோ. (௫௭)

என்ற போதவட் கிரங்கியத் தயாநிதி யேழாய்
நின்றனக்குநேர் யாருளர் நீபுரி தவமோ
ஒன்ற னுலுமிங் கோதரி தொப்பிடின் மலர்மேல்
நின்ற நான்முக னிடத்துநா ரதமுனி நேராய். (௫௮)

ஆத ரத்தினஞ் சனைவயி னனுமனு த்தான
பாதனுக்கொரு துருவனத் திரிமுனி பயந்த
மாதத் தாத்திரே யர்முத லோர்களை மான
தேத்தோர்மகன் றன்னைநீ பெற்றனை நினைக்கில். (௫௯)

எனவி னுவ்ய குணுயிமா மாயனே யெனக்குத்
தனைய னுமனின் றுள்விடா னுயினுந் தாயாம்
எனையு மென்குடும் பத்தையும் பாலன மியற்றப்
புனைவு செய்துமற் றவனையென் பால்வர ப்புரிதி. (௬௰)

என்று வேண்டுதற் கெம்பிரான் மனமிசை வின்றி
மன்றன் மாமல ராண்முத லியமனை வியரை
நன்று நோக்கிநீ ரேனுமிக் குணுயியை நயந்து
சென்று சேர்கநின் மனைக்கெனச் செப்புகி றென்றான். (௬௧)

நாத னுருரைத் தருளிய படிசொல நயந்த
மாத ரார்தமை நோக்கிநுங் கேள்வனை மறையும்
ஏத நீங்கிய தினத யாளனென் றிசைத்துட்
போத நீடிய தீனரோம் வயினின்றிப் போமோ. (௬௨)

நலிவு மிக்கயா மகன்றனை வளர்த்துநன் னலந்திற்
பொலிவு பெற்றுறு வோமிவ னுலெனப பொருந்த
மெலிவு றுத்தியிவ் விட்டலன் றனின்மயல் விளைத்துக்
கலியு றசெய னீவிருங் காண்டிரே கண்ணால் (௬௩)

இரக்க மில்லைகொ ணுங்களுக் கும்ஜகத் தெங்கும்
பரக்க வுண்டுதெய் வங்களை வேதனம் பற்றிப்
புரக்க மற்றிந்த விட்டலன் போற்புதல் வனைப்பின்
கரக்க வில்லறப் பயனறச் செயலெங்குங் காணேம். (௬௪)

ஆத லால்விட்ட லன்றிருத் தேவிமீ ரருளிக்
காத னுயகன் றனக்குளம் வரநனி கண்டு
நீது தீரவென் புதல்வனை விடும்படி செய்ம்மின்
போது கேனெனப் புதல்வனை நோக்கினள் புகல்வாள். (௬௫)

உலக மோகன னுய்ச்சமு சாரத்தை யொழிக்க
இலகு கின்றவன் பாலென்னை யிடைவிடா திருத்தல்
குலவு நங்குடி மிடியிடைப் படுவது குறியாய்
பலவென் சொல்லிநீ வருகிலை யேலிவா பாகக. (௬௬)

வலிந்து னைப்பறறி யீர்த்தியான் போகுதல் வழுவேன்
நலிநதி டற்குமு னெழுகென நாதனை நோக்கிப்
பொலிந்தி ருத்தியான் புகல்வதற் கொன்றுநீ புகலாய்
மெலிந்தி டெங்குடி கேடனே யென்பது வினவி. (௬௭)

பாண்டு ரங்கனுன் மகன்றனை யழைத்துங்கள் பதிக்கு
வேண்டு காரியஞ் செயககொடு போதென்னை வெறுக்கேல்
ஈண்டு கென்னநா மனையழைத் தவள்வயி னீந்தான்
ஆண்டு நாமனைக் கைக்கொடு போமவ ளறைவாள். (௬௮)

நாம நீயிந்தப் பண்டரி நாதனை நயந்து
ஏம வாழ்க்கையை யிகழ்ந்தனை யிங்ஙனஞ் செயவோ
யாம்வ ளர்த்ததுன் றனையென நாமதே வெதுவும்
தாமு ரைத்திடா தமலனைப் பிரிதலாற் றளர்ந்து. (௬௯)

அழுது டன்வரக் கூஉய்க்கொடு போயக மடைந்தாள்
பழுதி ஞமதே வகத்துத்தன் பண்ணியா லமைந்த
வழுவில் போனக வகைகளும் பாத்திர வகையும்
தழுவு செல்வமுங் கண்டனர் தியங்கினா சலித்து. (௭௰)

அன்னை யிவ்வள மாயின வெப்படிக் கமைந்த
தென்ன மற்றவள் யானறி யேனென வெதிர்ந்து
பன்னி யானரா ஞாயிதன் பதிதனைப் பார்த்து
நன்ன யத்துநீ ராடிநீர் வருகென நவில (௭௧)

கேட்டு நாமதே விவள்வெறுப் பின்றியே கினாதி
நாட்டு கின்றதற் புதமென நாரியை நோக்கி
ஈட்டு செல்வமிங் கெவ்வணத் தியைந்ததென் றிடம்ப
நீட்டு செல்வத்தை வெறுத்திகழ வாரென நினைந்து (௭௨)

மாறு கூறில விருக்கமற் றதுதெரி ஜஞயி
கூறு கின்றன ளையநின் வயினன்பு கொண்டு
தேறு கேசவ செட்டியென் போனபொருள் செறிந்து
வீறு மோர்பொதி கொண்டுவந் தனனின்று விரும்பி, (௭௩)

கொண்டு வந்தவன் றனைநின் றன் மனையவள் கூறிந்து
மண்டு மிப்பொதி யேதெனக் கேட்டலும வணிகன
கண்டு போன்மொழி யாயுன்றன் கணவனென் கருத்தக
கண்டு காதல ளுதலி னவன்மிடி யகல. (௭௪)

பொதிநி ரம்பிய பொருள்கொடு வந்தனன் பொருந்தும
இதுவெ லாஞ்செல வானபின் பின்னரு மீவென்
வதுவை மென்குழ லாயினிச் கணவனை வருதரேல்
அதிக வன்புட னிருத்தியென் றிட்பொழு தகன்றன. (௭௫)

என்று நாடொறுந் தனக்கினி தாழிய மியற்றித
துன்று கின்றவள் சொல்வது கேட்டகந் தூயோர்
நன்று நன்றிது செய்தவ னிறையென நயாது
குன்றின் வீழ்தரு மருவியிற் கணகணீர் குழும. (௭௬)

வருந்தி யிப்பொரு ளாலெனை மயககவோ மாயா
திருந்தி லேன்பொருட் டிங்ஙனஞ் செய்வதுன் செயலோ
பருந்தி லேறிய பண்ணவ பரமபா வனசீர்
பொருந்து சீதர புவிமக ளுயக புனித. (௭௭)

யாக மேசெய்துந் தவம்பல வியற்றியும யாணா
யோக மேசெய்து முனைப்பெறு கிறகில ருழல்வார்
ஆக பொன்றர நீவரற் கெத்தவ மயாந்தேன்
மாக வைகுந்த நினையன்றி வேறொன்று மதியேன். (௭௮)

ஆகி நிற்கநீ செய்தது தகுதியன் றென்றே
யூகி யாய்ப்பொரு ளனைத்தும்வை திகர்பெற வுதவிச
சோகியாநிற்க வரும்பிணி தொலைந்தவர் போல
ஏகி யுள்ளகத் தமுதுசெய் தினிதிருந தனரே (௭௯)

(வேறு) இப்படி யியற்றிய விவர்முன் போலவே
ஒப்பறு விட்டல னுற்ற கோயிலிற்
றப்பறச் சார்ந்தவன் றன்னை நாடொறுஞ்
செப்புறு பஜனைசெய் திருக்கு நாளிலே. (௮௰)

விட்டல னொருதின மவரை மெய்விருப்
புட்டர வழைத்துநா மாவு னரப்பகேள்.
சுட்டிய பொருளெலாந் தோய்ந்து நின்றுளேன்
றிட்டமோ டென்பது தெளிதி யல்லையோ. (௮௧)

ஆதலா லென்னிடத் தன்புசெய் தல்போல்
நீதமா யுயிர்தொறு நேசம் வைத்தியென்
றோதலு மன்பர்நீ யுரைக்க வேண்டலேன்
மாதயா வுளனுயிர் தோறும் வாய்ந்தென்றா. (௮௨)

அன்னவர் கருத்துல கறியச் செய்வதை
யுன்னிய நாதனங் கோர்து வாதசி
மன்னிய பொழுதுயாத் திரையின் வாய்த்துளார
நன்னரு ண்டிடும்பயி னுயிற் றேன்றியே. (௮௩)

சோறிட வேண்டிப்பா கூலவு காலையில்
மாறு கோண் டடித்தவர் வெருட்ட மற்றொரு
வீறுளோன் சுட்டமு தெடுத்து மேற்செலப்
ப்றியே யடித்ததைத் திரும்பக் கொண்டனன். (௮௪)

மற்றுநீ ராடுவோர் மடியைத் தீண்டலுற்,
செற்றவர் சரியாய்த் தீண்டிற் றீங்கிலை
இற்றிதற் கெனப்பல ராலு மொற்றுன்றி
சுற்றியங் கொருபுறஞ் சோர்ந்து நிற்கவே. (௮௫)

பாத்திரை துன்னுவோ ரிதனைக் கண்டியாம
வாய்த்தசோ றிடுதுமேல் வருநம் போடொறுத்
தீத்திரள் விழியுகச் சினந்து ரப்பலுங்
காத்ததிங் கெவர்க் குநற் கருணையின் றெறு (௮௬)

தன்னகத் தன்புளோர் தங்க கத்துவந்
தன்னவர் மிசையுமப் பத்தை வாய்க்கொடு
பன்னரும் புரத்துளோர் பலருங் காணவே
துன்னிவெள் ளிடைவரத் தொடர்ந்த லுற்றனர். (௮௭)

நெய்யிலா தப்பத்தை நீயுண் ணற்கயான்
கையிலே கொடுவருங் கலத்து நெய்யிலே
பையவே துவைத்தியான் றருவன் பைப்பயச்
செயதியா லமுதுவிக் காமற் செல்லவே. (௮௮)

என்றவர் மொழிவல்பா லெய்த மற்றது
நின்றிடத் தோய்த்திவர் நிரம்ப வூட்டலு
மென்றதுண் டிடக்கண்டு வியந்து வேறுளார்
நன்றுநா மனைப்பித்து நண்ணிற் றென்றனர். (௮௯)

ஜீவ்கா ருணியத்திற் நிறம்பு கின்றில
ஞுவ்லா னுமன்பே ரறிஞ னென்னவுந்
தாவிலர் சிலர்சொலுந் தருணந் தன்னிலே
மேவுநா யுருக்கொடு விளங்கு ஸ்ரீதரன். (௬௰)

நகைசெயக் கண்டுநீ நாயு ருக்கொடோ
தகைதர வந்தனை சௌரி யென்னவே
வகைதெரி யன்பரை நோக்கி மாதவன்
மிகைதவி ரெனையெந்த விதங்கண் டாயென்றான். (௬௧)

(வேறு) கோபா லாவுனை யுணர்ந்து கொண்டவி
சோபா கேசரர் சொன்ன லதறிநு
லேபா வந்தெரி வெய்தி னேனென
மாபா மாரபன் மகிழ்ந்து போயினான். (௬௨)

சின்னாள் பின்செல வாக வேமலா
மின்னா ளுயகன் மேவெ காதசி
நன்னா ளுண்டிட நாம தேவரைச்
சொன்னான் வாவென வன்பு துன்னியே. (௬௩)

அவ்வா றோதிய வமல னுக்கிவ
ரோவ்வா தாலரி தினமு ணறகெனச்
செவ்வே நீயரி சேர்தி னந்தனைத்
தவ்வா தெய்துற வோத காதென. (௬௪)

உன்னைய் முன்னரு ருக்குமாஙகத
னன்னா னேநிக ரம்ப ரீடனில்
நின்னா லேயியல் கிறகு நீரல
நன்னா ளென்னலு நாம ரோதுவார். (௬௫)

கோவே நின்னருள் கொணடு முற்றுத
லோவே னென்றுமெ னசசொல் வோரநமை
மாவே றும்மணி மார்ப னாகிய
தேவே சோதனை செய்ய வெண்ணியே. (௬௬)

மூப்பால் விஞ்சிமு திர்ந்த வேதிய
னுப்போய் நாமரை யன்ன மீகென
வாய்ப்பா காதரி மன்னு மிததினம்
தூய்ப்பா னன்னமெ னச்சொ லிப்பினே. (௬௭)

கந்தங் காய்கனி காத லிப்பிரேல்
நந்தும் வெம்பசி தீர நல்குவேன்
அந்தண் ணீரென வன்ன மில்லையேல்
சிந்து மென்னுயி ரென்று செப்பியே. (௬௮)

நாமா நீபுவி கண்ணு யிர்க்கெலா
மாமா றன்புசெய் யன்ப னென்னவே
பூமீ தோர்புக லப்பொ ருந்தினேன்
[illegible] றோதனி யாய மோவென. (௬௯)

மறையோ னத்திவ ராது கொள்கென
இறையோய் விண்டுவி னன்ப ரில்வரல்
முறையோ வெங்கொலை முந்திடாதெனத்
தறைமேல் வீழ்ந்துயிர் சாதல் மெய்யென. (௱)

செத்தா னின்னொடு சாத நிண்ணம்யான்
அத்தா வென்னுமு ளுவி போயினன்
முத்தா பந்தெற முந்தி னோர்தெரிந
துய்த்தார் சந்திர பாகை யொணகரை. (௱க)

பலருங் டினர் பார்த்து நாமநீ
நலவ னென்றுபோ நண்ணி யன்னமீ
கிலனென் றிப்பழி யெய்தி னுயெனச
சொலவுங் கேட்டெது வுஞ்சொ லாதரோ. (௱உ)

தகனஞ் செய்திடத் தக்க விந்தனம
புகவெய் துஞ்சவத் தோடு பொன்றிட
அகமுன் கொண்டத னோடே ணைந்தெரி
நகநன் கிட்டனா நாம தேவரே. (௱௩)

அதுகண் டோருளோர யாரும் யாருமிங
கிதுசெய் யாரென வெய்த வற்புதங
கதுவும் வெங்கனற் கட்கி டந்தமா
முதுமன் வேதியன் முந்தெ ழுந்தரோ (௱௪)

சங்கு சக்கரந் தங்த கைகளும்
பொங்கு குண்டலம் பொலிகி ரீடமோ
தங்கு மானன முந்த யங்குபொன்
பொங்கு மம்பர மும்பொ ருந்தவே. (௱௫)

தோன்றி யன்பரைத் தொட்டெ டுத்துனைப்
போன்று ளோரிலைப் புவன மூன்றிலு
மேன்ற நாமதே வினைம கிழ்ந்துசீர்
சான்ற மாலரு டந்து போயினன். (௱௬)

(வேறு) அன்புருக் குமணி தன்னை யகமகிழ்ந் தினிதினோக்கிப்
பின்பொரு தினத்திற் பாண்டு ரங்கமால் பேசு கின்றான்
என்பொடு சரீர மெல்லா மெனக்குநோ வுறுத லாலே
நின்புது மலர்க்கை யாலே நீபிடி யென்னக் கேட்டு. (௱௭)

அலர்மக ளுத னேகின் னுகநோ வுறுதற் கென்னே
உலகிடைப் புரிந்த செய்கை யுரைத்தரு ளென்ன லோடு
மிலகுறு பொன்னே நாம னியல் மனைக் கெய்தி னார்கள்
தலமெலாம் புகழ நின்ற சாதுசற் சனர்களாக. (௱௮)

அன்னவர் தமக்கெ லாம்யா னவிர்கலை தோய்த்துத் தந்து
மன்னவர் பானஞ் செய்ய வார்புனல் முகந்து தந்தும்
பன்னு மூழியங்க ளெல்லாம் பலபல புரிந்துந் தாசிக்
கென்னமா வரைத்துத் தந்து மென்னுடம் பயர்த லானேன். (௱௯)

ஸ்ரீ பக்தலீலாமிர்தம்.

என்னமால் புகலக் கேட்ட விந்திரை நகைத்து நாதன்
தன்னைமெல் லணைமேற் சாயச் சார்த்தித்தன் மலர்க்கை தன்னால்
நன்னரா யுறப்பிடித்து நலஞ்செய்தா ளாக வோர்நாள்
மின்னினார் பஜனை செய்ய மாதவன் கோயிற் கன்பர். (௱௰)

தமக்கொரு துணையு மின்றித் தமியராய்ப் பாடக் கண்டு
சமைப்புறு தவர்பி னின்று காருத்தன் றாளங் கொட்டு
மமைப்பது கண்ட தொண்ட ரனைவரு மின்பத தாழ்ந்தார
இமைப்பறு தேவ ரெல்லா மினிதுபூ மாரி பெய்தார். (௱௰௧)

பின்னரும் பாண்டு ரங்கன் பெரிதக மகிழ்வு கொண்டு
தன்னரைக் கியன்ற தாம்பீ தாம்பர மவிழ்ந்து வீழ
உன்னகில் லாதங் காட வுற்றனன் ஞான தேவர்
மன்னரங் கதனைக் கண்டு நாதனைப் புகழ்ந்து நின்று. (௱௰௨)

செங்கையைப் பற்றி யெல்லாந் தெரிபரந் தாமா நீசால்
பங்கயக் கண்ணு தேகம் பற்றபி மான மின்றி
இங்கயர் கின்ற செய்கை யென்னென வினவ நாதன்
அங்கவர் தம்மை நோக்கி யகமகிழ்ந் தினிது சொல்வான். (௱௰௩)

பற்றொன்று மில்லே னுமன் பஜனையா லவச மானேன்
இற்றைநா ளென்ன ஞான தேவரம பரத்தை யேந்திச்
சுற்றிட விடையி லங்குத தோன்றினா கீர தாசா
மற்றவா தனமையெ லாரும் தழுவினா மகிழ்வு கூர்ந்து. (௱௰௪)

அவ்வையிற் கையி லேயா லாதிமை யேந்தி வந்தாள்
நவ்வியை வென்ற நோக்கி னளினையங் கதனை நாமா
செவ்வையி னேந்தி நாதன் திருமுகந் தோன்றச் சூழ்ந்தார்
வவ்விய பாண்டு ரங்கன் மகிழ்ந்தொன்று புகல்வ தானான். (௱௰௫)

ஞானதே வேயின் றிங்கு நவில்கின்ற பஜனை நன்றே
ஆனதென் றுரைத்த போதி லமலநீ தாளங் கொட்டித்
தானினி தாட லுற்றுற் றனியின்பந் தானெய் தாதோ
யானினிப் புகல்வ தென்னோ வென்றனா ஞான தேவர். (௱௰௬)

நாதனு மகிழ்ந்து வந்த நல்லவர் தமக்கெல் லாந்தன்
ஓதனந் தரப்பெற் றியாரு மோங்கிய வுவகை கொண்டு
ஸ்ரீதர முகுந்த தேவ தேவவென் றினிது போற்றிப்
போதல்செய் தனர சோதை புதல்வனை மறப்பி லாதார். (௱௰௭)

நாமதேவர் திருவடிகளே சரணம்.

ஆகச் சரித்திரம் (௪) க்குச் செய்யுள் (௫௪௩).

முற்றிற்று.

நாமதேவர் சரித்திரம்.

நாமதேவவொரு தொழிலு மின்றியரி நாமமோதினரிருந்துழித்
தாமமேவியகு ளுயிமற்றது தனைத்தெரிந்து மகனேநமக்
கேமமேவிவர வீட்டலின்றியுறி லெவ்விதத்திலினி யில்லறம்
சேமமெய்துமென நிதியலாதுதொழில் செய்வதெப்படி யெனச்சொனுர். (க)

அதவிளுவியகு ளுயிபண்டரிய டைந்து கொஞ்சமுமி ரங்குறு
இதய மேவிமலி தானியங்கொடு சமைத்தொர் வேளையளை யுதரமே
நிதமு முண்டுமிகு பொருள் பெறீஇ யதனைநெடியவட்டி கொளநேர்ந்ததால்
மிதமிலாதபொரு ளுடுலோபிதா தாவெனும்பெயரை மேவினேன். (உ)

பாலடைந்தெனது குமரனேர்பயனு மின்றியேயுலவு பண்பினேன்
ஏலநன்குதொழி லெய்துறப் பொருள்க ளில்லையீடுமிலை யாதலிவ்
வேலையொண்பொருளோ ராயிரந்தனி விராகன்வேண்டுமென விட்டலன்
சாலவங்கவ னுளத்தின்மேவிநிதி தரமயக்கவவ னன்றெறு. (ங) ந—

ஆறுமாதவள வுக்கொர்சீட்டெழுதி வாங்கிநன்னிதி யளித்திடப்
பேறமேவிமனை யெய்திநாமனொடு பேசினுணிதிகொ ணர்ந்ததைக்
கூறியேயநிதி கொண்டுவாணிப நடாத்தியுதியமி கக்கொளீஇ
மாறிலில்லற நடத்துகென்றவர்கை நிதியெலாமுற வழங்கினுள். (ச)

அந்தநன்னிதிய டைந்தநாமர்சில வந்தணுளருட ஞய்வுறு
எந்தவாணிபமி யற்றினும்வருவ தேதமல்லதிலை யேயெனச்
சிந்தைசெய்துசமா ராதனைத்தொழில தேயிகப்பர பலந்தரும்
வந்தநன்கிதனின் மேலதின்றென மகிழ்ந்துகாசிநகர் மன்னினுர். (ரு)

கங்கைமாநதி பரந்துலாவிவரு கரையிலங்கொரு மடத்தினில்
தங்கிநீடுமன தானமித்திர ஞெளி சாயுமாலைவரையாற்றிமேல்
கங்குலூறுமரி நாமகீர்த்தனை கனிந்துசெய்துவரு காலையில்
எங்குமிச்செயறெ ரிந்துபூசுரர்கள் மனைவிமக்களுட னெய்தினுர். (சு)

ஏண்டிசைப்புறனு நாமதேவர்புக ழெய்தியெங்குநிறை வுற்றதால்
பண்டரிபபுரியி லுள்ளவேதியர்கள் பலருமாவலுட னேகுழூஉக்
கொண்டுநல்லுணவு முண்டுதக்கணைகைக் கொண்டுமீடுமென வேகலைக்
கண்டுதாதாசாவ்க் காரன்கேட்கவவர் கழறவோர்ந்துகவை யுற்றனன். (எ)

தீனரானநாம தேவருக்கிவிதச் செய்கைசெய்யவேது வாயென
தானகாணமது வாய்த்துதென்றறிக வாத்திரத்துடன்வி ரைந்துபோய்
மானகாசியைய டைந்துதொக்கபல வறுமையோர்மகிழ வீதலும்
போனகந்தரலு நோக்கியேக்கமொடு புந்திநொந்துடல் புழுங்கியே. (அ)

உண்மையாகவிவர் வர்த்தகத்தொழிலு ஞற்றுவாரென நினைத்தியான்
தண்மையாவுதவு கடனதானதன முழுதும்வாரியிவண் சார்வுறு
வண்மையாளர்களு நாணமேவுறவ ழங்குகின்றனரெ ஞேமனத்
திண்மையோபொருள்கை யெய்துறுவினியென்செய்வதென்றுளம் வருந்தியே

ஸ்ரீபக்தலீலாமிர்தம்.

[illegible]றுக்கீடுபெறு மாணதாகவொரு காணிபூமியிலை வீடிலை
[illegible]ட்மையில்லைதரு தற்கியைந் தவுறன் முறைய ரில்லையீதனேடுமென்
குடியழிந்ததென வெண்ணமுற்றயர்தல் கண்டுநாமர்துயர் கொண்டுவந்
தடியின்மீதுமுடி சூடிநின்றுமிக வாவலோடுதுதி செய்தனர். (௰)

வேறு

துதிசெய் காலையவண்வந்து சூழ்ந்த மறையோர் களைநோக்கி
மதியீர் சமாராதனைக்குரிய வள்ளலிவர்தம் மலர்க்கரத்தால்
விதியாய்க் கிருஷ்ணார்ப் பணமென்று விடுநீ ரோற்றுப் புசிப்பீர்நற்
றதியில்வந்தா ரிவர்தகமை சாற்றுந் தரமதலவன்றே. (௰௧)

என்னப்புகழ்ந்து சங்கற்ப மிசைத்து நீர்வார்த் தருளுமென்று
சொன்னமொழிவர்த் தகன்றனது சுருதிபுகலுந் தாணுக்கெறிந்து
முன்னமுணிந்து நின்றிந்த மோசஞ்செயவர்த் தகத்துக்கென்
றென்னைமயக்கிக் கடன்வாங்கி யிங்கப்பொருளைக் கொடுபோந்து. (௰௨)

பல்லாயிரவர் தமக்கன்னம் படைக்கநேர்ந்த படுபாவி
எல்லாப்பொருளுங் கவர்ந்தென்னை யேழையாக்கு வித்ததன்றிப்
பல்லோரறியத் தத்தஜலம் வார்க்கும் படியும் பகர்ந்தனையே
கல்லோமரமோ வுன்னெஞ்சங் கள்வனுனைபபோற் கண்டிலனே. (௰௩)

மீட்டு நின்னைக் கடன்கேளா மார்க்கஞ் செய்யவேண்டி யென்னைக்
கேட்டகூது முழுதுணர்ந்தென் கேழொன்றில்லாக் குடிகேடா
நீட்டமாக வளர்தருவி னீங்கி நெடுநாளா யுலாந்த
காட்டம் பூத்தல் காணினுமென் கரநீர்வார்த்தல் காணுயே (௰௪)

என்று வணிக னியம்பியபோ தூதகம் வார்த்தற் கிங்கிவரை
யன்றி யானே வதிகார முடையே னல்லே னுதவினல்
இன்றிங் கிவர்பா லேற்றுண்ணு மென்னூற் றடையொன் றிலையென்று
நன்றி நாமருளைசெய்ய வுணர்ந்தார் தொக்க நான்மறையோர். (௰௫)

தரும வணிகப் பெருமானே தாங்க முடியாப் பசியனலை
ஒருமை மனமா யாற்றுதலுக் குமது கருணை புரியு மென்பார்
பெருமை பெருக வுண்பவரைத் தடுத்தல் பெரிய பிழைய தென்பார்
கரும மனைத்து நீங்குறுமெங் கரத்தி னீர்வார்த் தருளுமென்பார். (௰௬)

பல்கா வதங்கள் கடந்துபெரும் பசியோடடைந்தே மன்னமின்னே
நல்காயென்னில் ரவுரவமா நரகிற் சேரச் சபிப்ப மென்பார்
ஒல்கா வீயாவுலோபநின்னை யுன்ருய் சுமந்தென் பயந்த தென்பார்
அல்கா நிந்தை பலபலவா யறையக் கேட்டங் காகுலித்து. (௰௭

அந்தோ பொருளுக்கழிவு வருமெனவோர் தேவ ராலயம்பு
[illegible]தில்லை யரைக்காசுங் கொடுத்ததில்லை பிட்சை பெற்ற
[illegible]தாயர் சிரார்த்தமுநான் றந்ததில்லை யிதுவரையும்
[illegible]மதேவரால் மறையோர் பழித்தற் கிடமானேன். (௰௮)

நாமதேவர் சரித்திரம்.

தாழை யடிநீர் வார்க்கி னன்னீர் தலையிற்றாங்கித் தருமதுபோல்
ஏழை யானோர் வர்த்தகஞ்செய் தெய்து மிலாப மதனாலென்
பேழைக் குறைவு தீருமெனும் பேரா சையினாற் கடனாக
மாழை கொடுத்தேன் கானலிற்பெய் மழைபோலானே னெனவிரங்கி. (௰௯)

மறையோர் குழுவோ வகல்வதில்லை வாய்நிந்தனையோ வொழிவதில்லை
உறையோ தனம்போ யுண்பதில்லை யுதகம் விடேனேல் விடுவதில்லை
சிறைபோ லென்னைச் சூழ்ந்த விவர்புசித்தா லென்னைச் சேர்வதென்ன
குறையென் றொருசூழ் தனக்குள்ளே கொண்டுவணிகன் கூறலுற்றான். (௨௰)

வேறு

வாருமந்தண ரேயென்மேற்பழி கூறுகின்றன மாறவே
நீரம் வாக்குவ னேலு மென்னலு நேர்ந்தனர் கடல் சூழ்தரு
பாரு மம்பரமுந்தருங் கரி பலவு நட்டமு நாமரைச்
சேருமெற்கிலை யென்று வாசதனனேற்ற வையர் சிரித்தனர். (௨௧)

நாமர் நன்குப சாரமுஞ்செய நான் மறைக்குழுவுண்ட பின்
காமர் சந்தன புட்பமும்மடைக் காயுந்தக்கணை யுங்கொடுத்
தாமிகன் பின்வணங்கவாசி வழங்கியாரும கன்றபின்
றீமிகுந்தெரி கின்றநெஞ்சொடு வணிகனங்கிது செய்தனன். (௨௨)

கடனினேதர வேண்டும் வேறொரு காரியம்புரி தற்குனை
விடனலாதிலை யென்பை யேலுயிர் விடுவனிட்சயமாகவென்
றடமாதாயுரை செய்த போழ்தினிலனபா காளியன் முடி மிசை
நடனமாடிய கருணை கூர்தரு நம்பினை நாதனை யுன்னுவார். (௨௩)

ஆதிமூலபராபரா சருவாதரா ஜகாட்சகா
சோதிரூப வரூப நிட்களா சுதந்தசதத்துவதற்பரா
வேதகீத விநோதமாதவவி மலவச்சுக ரேசவா
சீதசாகர மீது கணவளர் தேவதேவகி நந்தரு. (௨௪)

கண்ணகண் மணியாக நின்றொளிர் காரணைகரு மாமுகில்
வண்ணவம்புஜ நாபகுஞ்சர வரதபுட்பதிவாகரா
தண்ணருந் துளவார நவநிதசார சோரசிகாமணி
எண்ணுதற்கரு நாமரூப மிலாதெலா நிறை யெந்தையே. (௨௫)

கல்வினுங்கடு நெஞ்சமும் வடகனலையுஞ்சுடு கோபமும்
கோல்லும் வாணிகர் வார்த்தையும் பகைகொண்டு செய் பிடிவாதமும்
சொல்ல வாய்வரவில்லை செட்டி செய்துயர மாற்றுவை தொறுவர்க்காய்க்
கல்லெடுத்து முன்மழை தடுத்தருள் கண்ணனே கடல் வண்ணனே- (௨௬)

என்ன நாமர்துதித்த போழ்தவரிதய மீமிசையிலகுறும்
அன்ன வூர்தியினத்தனற் புதவர்ச்ச நல்லுரு வாயெதிர்
துன்னியன்பவ வணிகனிங்குறு தோய மூழ்கிடினி ரணமக்
கன்னனீங்குறும் வகைசெய்வே னெனக்கருணை யோடுரை கழறினன். ௨௭

ஞான நோக்கொடு நோக்கியவ்வுரை நன்குணர்ந்தருளுமதே
வானவுத்தமர் மானதப்பூணி யாற்ற வண்ணல் மறைந்தனன்
மானவத்தன வணிகரேதிருவர நதிப்புனன் மூழ்கியிங்
கேகலத்தொடு வருதிர் நுங்கடன் யாவுமிக்கண மீகுவேன். (௨௮)

என்று நாமருரைத்த சொற்செவி யெய்த நீரிடை யென்றனைக்
கொன்று தீர்த்திட வெண்ணியோ கொலைபாதகா கபடாமொழிந்
தன்று நீகடன் வாங்கிரையறி வுற்றனன் முழுகேனென
நின்றுவாது செய்வர்த்தகன்றனை நெடிது வாழ்த்தி வழுத்துவார். (௨௯)

ஐயநின்னிகர் புகழ்படைத்தவரகில மீதெவருளரொருல்
செய்யுமிவ்வன தான நின்னது செய்த வப்பலவூதியம்
எய்தும் வர்த்தக மிதனின் மிக்கனவிலையுகாந்தமு மோய்விலாப்
பெய்யு மாரியிற்செலவு செய்யினும் பெருகுமல்லது குறைபடா. (௩௰)

வேறு

கோதறு குணத்தவா குலித்தனீக்கவென்
றோதரத்தோடி வரறையுக் கேட்டனன்
ஏதுதந்திர மொழியியம்பினும் விடேன்
வாதிடாதென் கடன்வழங்கு மென்றனன். (௩௧)

அன்ன தேற்பகீரதியதனின் மூழ்கி நீர்
துன்னு நும்மிரண மூந்தொலையச் செய்குவன்
என்னலு நாமரோ யென்னைக்கங்கை நீர்
தன்னிடை யழுத்தியே சதியியற்றவோ. (௩௨)

எண்ணி நீர்கடன் கொடாதிருக்கு மெத்தனம்
பண்ணினீர் மூழ்கலேன் பணத்தை யீம்மென
தண்ணகத் தோடினேஸ் நானஞ்செய்து நீர்
நண்ணுவீரென நனி நாமர் கூறினார். (௩௩)

மறையவர் மரபினில் வந்த வர்த்தகன்
நிறைபுனலாவலை நின்று மூழ்கலும்
நறைகமழ் துளவணி நாதன் மாயையால்
அறைதரு பாதல மதிலடைந்தனன் (௩௪)

நவமணி மண்டப மதனிறைப்பனோர்
உவமை யிலரியணையும்பர் பல்வகைப்
பவவிருள கற்றுறு பரிதி போலவெம்
உவணகேதனன்றுருக்கரசி லுற்றனன். (௩௫)

மாதவர் வானவர் நாரதாதிய
சாது சற்சனரெலா மிலேச்சர் தன்மையாய்
மோதுமா யெம்பிரான் முன்ன ரெண்ணிலா
ஆதரவுடனிறை யாயிருந்தனர். (௩௬)

வருக்கைமாதேங்குமாதளை செவ்வாழையைந்
தருக்கள் கற்பகவல்லி சாதஞ்சண்பகம்
மருக்கமழ் மல்லிகை முல்லை கத்திகை
திருக்குடி யிருந்தெனச் சிறந்திலங்குமால். (௩௭)

கிள்ளை கேகயஞ் சாதகங்கபோத நாகணவாய்ப்
பிள்ளை கோகிலங்க பிஞ்சலம் பிங்கலை யன்றில்
வெள்ளை யன்னமூர்க்குருவிச கோர மீன்குத்தி
கொள்ளை கொண்டவண் பாடலு மாடலுங்குறையா. (௩௮)

காலமொன்றினுங் காண்கிலாவற்புதக்காட்சி
சாலவெங்கணும் விளங்கலுந் தமனியவுலகம்
போலிலங்கலுங் கண்டனன் மெய்புளகிக்கக்
கோலமண்டபத்தி யாவரு நோக்கினர் கூவி. (௩௯)

ஈங்குவந்தவா றெவனென வினவலும் வணிகன்
சாங்கமாய் வரலாறவை முழுவதுஞ் சாற்ற
ஓங்குமெங்கள் வேந்துண்பதற்கழை யெனவுரைத்தார்
பாங்கிருந்தெ மோடருந்திடற் கெய்தெனப் பகர்ந்து. (௪௰)

கொழுத்தவூன் சமங்கூட்டிய முலைமுகை மூரல்
முழுத்த நெய்யினில மைந்தனசெய்கை நன்முறைய
பழுத்தமுக்கனி பாலுளவாவெனப் பரிந்து
வழுத்தவாணிகன் பதறினன் றிகைத்தனன் மயங்கி. (௪௧)

தனமும்போயின சாதியும்பிரஷ்ட மாவதற்காம்
இனமுமாயின துருக்கரோடுண்ண வீக்கின்றார்
அனமுண்கேனெனில் யாவினை செய்வர்கொலென்று
மனங்கலங்கி மேனாமதேவரை நெஞ்சின்மதித்து. (௪௨)

இங்கு காப்பதற்கொருவரு மெனக்குறவில்லை
அங்குமக்கு நான் கடன் கொடுத்தூதிய மடையத்
தங்கினே னிவண்டுருக்கரோ சாதமும் படைத்துப்
பங்கதாயுண வீர்க்கின்றார் பாவியேன்றன்னை. (௪௩)

உம்மை யல்லது காக்கு நரில்லென வோதச்
செம்மை சேர்குண நாமதேவருமிது தெரிந்தங்
கம்மை போல வந்தெய்தியாகு லித்திடலருளோ
டிம்மையே பிறவாத வீடுதவுமிவ்விறைவன். (௪௪)

பாண்டுரங்கனம் பதிதபாவனனுண்மையாக
வேண்டுரெங்களினிடை விடாதிருப்பவன் மற்றோர்
யாண்டு நீங்குறாச்சாது சற்சனரிவர் தம்மோ
டண்டிருந்து நீருண் பதிற்பேறு வேறின்றே. (௪௫)

ஸ்ரீபக்தலீலாமிர்தம்.

பிரமராதி தேவர்க்கரிதாம் பிரசாதம்
இரமதாஞ்ச மாராதனைச் செய்கையாலுமக்குக்
காமதா நெலிக்கனி யெனக்கிடைத்ததை விலக்கில்
வரமதேயி தன்மேலிலையுண்கென வகுத்தார். (௪௬)

வேறு

பெயர்வானவர் பேசிய தியாவுமுணர்ந்
தயர்வேதிய வாணிகனங் கறைவான்
மயல் கூர்தரு மோகன மந்திரமே
பயில்வீரதறல் வசியம் பணினீர் (௪௭)

கடனென்று பெருங்கன கங்கொடுவெண்
மடலொன்று வரைந்தெனை வைக்கெனவீர
திடனென்றனதான மதீந்து பொருள்
கெடநேர்ந்தனை கீழ்நிலம் வீழத்தினையே. (௪௮)

வீழ்த்திப்புறமான மிலேச்சரொடு
சூழ்த்துய்த்திடு மாமொழி கூறினையே
வாழ்த்தற்குறு மென்மரபும முழுதும்
தாழ்த்தக்கரு துற்றனீா தக்கனவோ. (௪௯)

சொல்லைத்தடை செய்கவிர் சூழதருமிவ்
எல்லைக்கணிலாம லெனைக்கொடுபோய்
தொல்லைப்புவி சேர்ப்பிாதுடாந தினியான்
இல்லைக்கடன் கேட்பதிதுணமையதே. (௫௰)

எனைவீடடையும் படிசெய்குவிரேல்
புனையும்புகழ் புண்ணியமும்மையென
இனையுமனனோடு மிரங்கிமிக
நினைகின்ற வனீரறி நேர்மையராய். (௫௧)

குறையொன்றடையாதுமை மெய்ம்மைகுல
மறையோருடனுண்ண மயங்கல்நம
திறையோனருள் செய்வனினித்தகையாய்
பொறைகூரென நாமர்புகன்றனரோ. (௫௨)

அடமாய்மொழி யீரரியாடகியென்
னிடமீந்திடி லுண்டிசெய் தெய்துவலென்
றுடனோதவுவந்துதவிய் பதமாக்
கிடநாலெருமுட்டையு மீந்தனரோ. (௫௩)

அறநன்குடை யீர்யவனர்த்தலனிற்
புறனுக்குமெனப் புகல்வர்த்தகனை
உறநும்விழி மூடுறு மென்றளவில்
இறமாகவு மூடுதல்செய்தனனே (௫௪)

வேறு.

நாமதேவர் சரித்திரம்.

மூடியபோழ்து பண்டரிபுரத்து முந்துறுசந்திரபாகை
நீடியநதியினனந்தவத்திரத்தினி னொழுகுற வெழுந்தனனுங்
காடியமறையோர் தொகுதியும் பஜனை யாதரத்தொடு புரிபவருங்
கூடிவிட்டலனைத் துதித்தலும் வணிகன் குறிக்கொடு கண்டனன்கூறும். (ருரு)

வாரணவாசிக்கங்கையங் கரைக்கண்வதிந்தயான் சந்திரபாகை
சேர்தரற்கிஃது சொற்பனமென்னச் சிந்தனைசெய்வனேனுணற்குக்
கூர்தரநாமர்கொடுத்தபல் சாமக்கிரயங்களிருக்கின்ற குறிக்கில்
பேரதிசயமீதென்றவர்தகையைப் பேணியக்கரைவருகாலை, (ருசு)

வத்திரமதனில் மூடியெரு முட்டைகளை மட்டுமவிழ்த்து வீழ்தருமா
றத்திருநதியிலுதறியே நனைந்தவாடையோடில் விடையடையப்
பத்தினிகண்டு நாமருக்கீந்தபணமெலாம் வாங்கி வந்தனிரோ
இத்தனை நாணீடித்தகாரணம தென்னென வர்த்தகனியம்பும். (ருஎ)

என்னுயிர் பிழைத்து வந்ததே பெரிதென்றிசைத்து மேவீர வஸ்திரங்கள்
தன்னையேபிழியும் போழ்தெரு முட்டையொன்ற திற்றங்குற றேக்க
மின்னிடுதங்கமாய் விளங்குவதைக்கண்டு மெய்புளகித மடைந்து
நன்னலநிறைந்த நாமரிவ்வுலக நரரலர மரரேயாமால். (ருஅ)

விட்டலனமர் பொருட்டெனக் களித்தமிகு தனங்களை யெலாநதியில்
இட்டனனெனது விதியிலுள்ளன போலியைந்தனவென வுளம்வருந்தி
நிட்டூரமாக நாமரை நாயேனிந்தை செய்தவையெலாம் பொறுத்துன்
மட்டவிழ்கமலபதங்களை நாளும்வழுத்துற வருள்செய்வாயென்று. (ருக)

அல்லுநன்பகலு மச்சுதவிட்டல அடியவர் சகாயவென்கின்ற
சொல்லுமேழை யருக்கீதலு முரியதொழில தாயுவந்து வாழ்ந்தனனால்
நல்லுணர் வுடையோரனை வரும்புகழு நாமராண்டை யனைவணங்கிப்
பல்வகையுயிர் கட்குயிரதாய் விளங்கும் பதிதபாவன பரந்தாமா. (சுய)

காண்பொருள் காண்பான் காட்சியுங் கடந்துகருதுவோர்கருத்தினுக் கெட்டாச்
சேண்படு பரமசின்மயானந்த தேஜோமயத் திருவாழ்வே
வீண்படுவினை யேற்காக நீதாழ்ந்த மிலேச்சவேடங்கொடு போந்தாய்
தூண்படு மரியேபிரகலாதனர் முன்றூயர் போற்பே யருகுவனே. (சுக)

என்றடியிறைஞ்சு நாமரையண்ண லிருகையாலெடுத்து மார்புடனே
ஒன்றுறத்தழுவி யுச்சிமோந்தன் பினுவப்புறு மொழிபலபுகன்று
நன்றிசேர்பண்டரா புரமதனிற மரோடடைந்தனர் வானோர்
அன்றுபூமாரி அன்பர்தம் மீதுமையன்மீதும் பொழிந்தனரால். (சுஉ)

நாமதேவமல சரித்திரமதனை நாவினை வின்றவர்கேட்போர்
நேமமாய்ப் புத்தகத்தினைவைத்து நித்தியம் பூசனைபுரிந்தோர்
பூமியிற்றர்ம்மார்த் தத்தொடுகாமம் பொருந்திறற் புகழினையடைந்து
காமனைப்பயந்தோன் கழலிணையடைந்தெக் காலமுநித்திய வாழியரோ. (சுஙா)

முற்றிற்று.

கபீர்தாசர் சரித்திரம்.

——:0:——

பேசுறு கங்கையி லேமுசில் பெய்ய
ஈசனை மைக்கவி ழிந்தகி ளிஞ்சில்
வீசுதி ரைப்புனன் மேவிமி தக்க
மாசில யோனிவ திந்தவ ராகி. (க)

நல்லத வச்சுக ராமநன் னைமஞ்
சொல்வது விட்டிலர் சோர்விறி யானம்
புல்லினர் மேவுறு போதுநெய் நூல்கொண்
டொல்லெனொ லிப்புன லூடிழி வுற்று (உ)

தோமறு மாறுது வைத்தத மால
மோமிகி ளிஞ்சிலை முன்வர நோக்கி
ஆமதி ழிந்தத னைகொடு வந்து
வாமநெ டுங்கரை வைத்துவ கிர்ந்தே. (ங)

ஏரலி டைத்திகழ் வெய்துறு சேயை
ஆர்வமி கத்தன தங்கையி லேநதிச்
சாரமு யறசியி லாதுந னம்பெற்
றோரின்ம கிழ்ந்தக முற்றன னன்றே. (௪)

உறறது ருக்கனு யிாத்துணை
கற்றிலை கொள்பவர் கற்பக நேர்கண்
டற்றும கன்பெற வாயின தென்று
சொற்றிட மற்றவள் கொங்கைசு ரந்தே. (ரு)

நேசமு டன்கொடு பாணிறை யத்தந்
திசனை யெண்ணியெ ழிற்கொள்க பீர
தாசரெ னும்பெயர் தநதுவ ளர்த்தாள்
மாசறு தன்பதி மாமகிழ் வெயத. (சா)

வாமம கன்வளர் வாகியி ராம
நாமம்வி டாதுந வின்றுறல் கண்டு
தோமறு காசியு ளோர்கடு ருக்கத்
தீமத னுக்கின சேய்வர வற்றே. (எ)

என்றுது ருக்கனி யன்றத வத்தை
நன்றும தித்தனர் நாளும்வ ளர்ந்து
நின்றுசி றந்தநெ டும்புதல் வர்க்கு
மன்றல்பு ரிந்தும கிழ்ந்தன ரீன்றோர். (அ)

பின்புமண ங்கொள்க பீரர்ப வஞ்சத்
தின்பில ராகியி ராமநன் னைமத்
தன்பின ரானத றிந்தவ விந்தர்
துன்பொடி கழ்ந்தனர் சொல்லுத லானார். (கூ)

வாழைவ னந்தனில் வந்தொரி லந்தை
தாழ்வற நின்றுத ழைப்பது போலக்
கேழ்கிளர் நங்குல னிற்கிளர் கின்றான்
வீழ்புனன் மீதுமி தந்தவ னென்றே. (௰)

ஹரிபஜ னந்தனி லன்புமி குந்து
புரிதரு கின்றக பீரர்பு ணர்ப்பைத்
தெரிதரு தாய்மக னேதொழில் செய்யா
துரியநி னைப்பிலை யாகியு றைந்தால். (௰௧)

இல்லற வாழ்வினி யெங்ஙன டக்குஞ்
சொல்லுதி யென்றுதொ குந்தறி தொட்டு
வல்லையி னெய்யென மற்றது கேளா
நல்லதி யானந லத்திலி ருந்தார். (௰௨)

மன்னிய தன்னைம றந்தன ருற்ற
அந்நிலை கண்டவ ளன்னவர் தம்மைத்
துன்னியு ரப்பியெ னேதரு மம்போ
துன்னினை வற்றனை யுற்றனை யென்றாள். (௰௩)

என்றவள் கோபமி குந்தினி யெற்றாற்
கொன்றுவ ளென்றக மஞ்சியு ணொந்து
நன்றென வோர்முழ நண்ணிட நெய்து
முன்றனி நின்றமு யற்சியின் மூழ்க. (௰௪)

கண்டவர் கொண்டக ருத்திடை நின்ற
விண்டுநெய் யாதிவன் மேவுறி லன்னை
மண்டுவள் கோபமெ னத்தறி மன்னி
உண்டுநெய் கின்றதெ னக்கனி யூறி. (௰௫)

தாய்மகிழ் கொண்டிட நெய்வது தன்னில்
மேயின னன்பாவி ழித்துநெய கிறகில்
ஓய்வுறு வானெழி கிறகினு ஞற்றும்
ஆயநெய் தற்றொழி லானபி னன்பர் (௰௬)

தாய்வயி னெய்தது தன்னைம டித்துப்
போயுத வுறறிடு போதும கிழ்ந்து
நீயித னைக்கொடு நீடுக டைக்கண
மேயினை விற்றிவண் மேவுதி யென்றாள் (௰௭)

நன்றென வாவண வீதிந டந்து
சென்றொரு பால்விலை செய்திட வுற்றோர்
நின்றதி யானநி னைப்பினு டம்பை
அன்றும றந்தன ராகிய மர்ந்தார். (௰௮)

கலைகொள வந்தவர் கண்டிது மிக்க
விலைபெறு மென்றுவி லங்கின ராக
அலரிப டும்பொழு தாகிய பின்றை
பலரும கன்றனர் பக்தரு ணர்ந்தார். (௰௯)

ஆங்கய லெங்ரும ளாவினர் நோக்கி
வாய்குந ரிங்கொரு வருமிலை யென்று
ஈங்கிது விற்றிலை யென்றனை கோபத்
தோங்குவ னொன்றனு ருற்றனர் மாதோ. (௨௰)

சற்றவ ணின்றுச லித்தொரு பாழ்வீ
டுற்றது கண்டதி லெய்தியு றைந்தார்
மற்றவ ருள்ளம றிந்திட மாயன்
முற்றிய வேதிய னுயவண் முந்த. (௨௧)

உடலந டுக்குட னுற்றவ ரைந்தொட்
டடலரி தாசனி னன்பினெ னக்குப்
படர்குளிர் தீர்கலை தாபரி வோடென்
றிடவிலை செட்வதை யிருதுணி செய்து. (௨௨)

ஒருதுணி யீயவு டன்கொடு சென்றோன்
மருவிய பக்கிரி மாவடி வுற்றுத்
திருகவும் வந்தரி சிந்தனை செய்வோர்
அருகினி னின்றித றைந்தன னன்றே. (௨௩)

நிற்குண னனகு தாகிலை வின்றிச்
சொற்கணி ராமவெ னச்சொலு கிப்போய்
நிற்குரை செய்வதெ னீயருளொ ற்கோர்
நற்கலை யென்னன லன்பர்ந யின்றார். (௨௪)

நீருரை செய்யுரி ராமய னேகாண்
சீரி யென்றுவதெ ருன்டுரை செய்து
சாரொரு துண்டது தன்னையு மீந்தார்
பார்மக னயக னன்புப யின்றார். (௨௫)

பக்கிரி யானைப ரம்பரன் மற்றோர்
எக்கிய வேதிய னகியவ் வன்ப
ருக்கனை தன்வயி னுற்றுன்ம கன்றான்
விற்கல னுடைவெ றுஞ்சத னத்தே. (௨௬)

மேவியி ராமனெ னும்பெயர் யீடா
நாவின வின்றுறை கின்றன னங்காய்
நீவிலை செய்கெனு மாடையை நேர்ந்த
மாவிர தப்படி மர்க்கருள் செய்தான். (௨௭)

என்பது கேட்டவ னெய்திய போது
வன்புறு தண்டம்வ குப்பனெ னத்தாய்
நின்புடை யெய்துவ னேவவ னேரான்
துன்புசெய் தேள்வெளி துன்னுவ தன்றே. (௨௮)

ஆதலி னென்பினர் நீயடை வாயேல்
நீதரு மைந்தனை நேர்வகை செய்வேன்
வாதனி யென்றுரை மாமறை யோன்பின்
னேதனி வந்தவ னெய்துமி டத்தே. (௨௯)

திமிர்குல வேதிய னின்வெளி நிற்கத்
தமியுள டைந்துறு தனயனை நோக்கிக்
குமிவிலை செய்கலை யெங்கது காட்டுத்
*திமிரிடை யேனிவ ணெய்துதல் செய்தாய். (௩௰

எனவினை சொல்லவி ருந்தவர் கேட்டு
மனமிக வஞ்சினர் மாறுரை கூறு
அனகரை நோக்கிய வன்னையெ னேடா
வினவுவ தற்குவி ளம்பலை யென்றாள். (௩௧

அப்பொழு தில்வெளி நின்றவ னம்மே.
இப்படி யன்பினி யம்பிலி யமபான்
ஒப்புரை தண்டமு ளுற்றிடி லுண்மை
செப்புவ னென்றுரை செய்தது கேட்டாள். (௩௨

கோலது தேடுமு னேயொரு கோல்கொண
டேலவ டித்திடு கென்றுகை யீந்தான்
சாலமு னிந்தவர் தம்மைய டித்தாள்
மூலம றைப்பொருள் முதுகடி பட்டு. (௩௩

வேதனை சாலவி ளைந்தத னாலே
நீதனை யன்றனை நீடுசி னத்து
மோதுத லென்முது கிற்படு கின்ற
ஆதலின் விடுவிடு கெனவும றைந்தான். (௩௪

விண்டுரை செய்வது கேட்டும்வி டாதே
மண்டிய றைந்திட வந்துமு னின்றான்
அண்டிய ஜானகி யோடுவி லஙகைக்
கொண்டுவி டாளடி யென்றுகு றித்தே (௩௫)

ஜானகி ராமனெ ழுந்தது தன்னை
ஞானக பீரர்தெ ரிந்தாந யந்து
தேனகு பூங்கர் சேவடி வீழ
யான்மகி ழன்பவி டேனுனை யென்றான். (௩௬)

தாயும கிழ்ந்துச ரோருக நாபன்
சேயபொ லன்கழல் சோர்ந்துவ ணங்க
மாயவ னிந்தம கற்பெற லாலே
நீயுறு பாக்கிய நிகரிலை யென்றே. (௩௭)

மறைவுற மகனைய ணைத்தனள் மார்பில்
நிறைவுறு செல்வநி றைலொளிர் நேமிக்
கிறைவனை நோக்குவ தாயினதென்னுக்
குறைவறு செல்வனைக் கூய்க்கொடு போனாள். (௩௮)

(வேறு) போனபின்பு முன்போலப்புதல்வனைக்காயாதரிதன்பஜனைபோற்றித்
தானுமினி திருக்கவன்பர் மனைவிவயிற் கருப்பமுற்றுத் தனையன் றன்னை
யீனமகிழ் வொடுகமால் தாசரெனும் பெயரியம்பி யிவர்ந்து போற்ற
ஞானநல நனிசிறந்து மகன்வளர்ந்தே ழாண்டுசெல நவிலு கின்றார் (௩௯)

*திமிரம்—திமிர்-என அம் விகுதி குன்றியது.

தந்தைதனை நோக்கியைய தனித்துவா ரகைகாணத் தமியேற் காசை
மூந்துறுத லாலெனக்கு விடைகொடுக்க வெனவினவு மொழியைக்கேட்டு
மைந்தவுனக் கிவ்வயதிற் கோபாலன் றிருப்பதியில் வாஞ்சை வாய்ந்த
தெந்தநல்ல தவப்பயனோ வெனமகிழ்ந்து கபீரர்விடை யீந்தாரன்றே. (சம)

விடைபெற்ற திருமைந்தர் தாதையிரு தாள்வணங்கி மேவும் போதில்
நடைபெற்ற வழிகளெல்லாம் ராமநா மம்பெரிது நவின்று செல்ல
இடைபெற்ற வூர்கடொறு மிருப்பவர்கள் கீர்த்தனங்கேட் டின்பு கூரத்
தொடைபெற்ற துளவணியுந் திருமால்வாழ் துவாரகைப்போய்த் துன்னினரே.

கோமதியா நதிகண்டு வணங்கியதின் மூழ்கியன்பிற் கோபி சார்த்தி
ராமவெனு நாமமதை நாநவிலச் சபமாலை நளிர்கை க்கொண்டு
தாமரைநா பனையுள்ளந் தனினிறுவிக் கோயிலிடைச் சார்ந்து கண்டு
நேமநெறித் துதிபயின்று நான்குதிங்க ளவ்வூரி னிலவி னரே. (சஉ)

பின்புகண்ணன் கோயிலிற்போ யடிவணங்கி நின்றுருவம் பிரியா தென்று
ளன்புசெய வமைத்தியென வேண்டினர்சித் திரகூட மடைய வாங்கே
இன்புறுவிட் டுணுதாச ரெதிரேவந் திவரையினி தேத்தித் தாழ்ந்து
தன்பவனங் கொடுபோந்து பாதபூ சனைபுரிந்து தகவு பேசி. (சா)

போசனஞ்செய் வித்தன்றி ராத்திரியி லரிபசனை புரியக் கேட்டு
நேசமுட னெல்லோரு மிக்குறுந்தை செயல்புதுமை நெடிதென் றோத
மாசறுவிட் டுணுதாசர் மகிழ்ந்திவர்க்கெவ் வளவுபொருள் வழங்கி னலுந்
தேசுதரு மோவென்றோர் மாணிக்கங் கொடுவந்து திருமுன் வைத்து- (சச)

இந்தமணி யிரவுதனி லிருளகற்றுங் கொடுபோமி னென்று கூற
வந்தகமால் தாசரதை வேண்டாரென் பிதாவென்று மறுத்துஞ் சொல்வார்
தந்தமணி யுங்கல்லுஞ் சரிதானெங் களுக்கமறை யவர்தாங் கட்கு
மூந்துதனம் வேந்தனுக்கு மணிமிடியி னோர்க்கன்ன மொழியுந் தூசு (சரு)

வித்தையா ளருக்குணவி யாத்திரைசெய் வோர்க்களிக்க வேண்டுங் கண்டீர்
சுத்தனவ னவரேதும் வேண்டாரென் றருள்கூர்ந்து சொல்லக் கேட்டு
மெத்தமகிழ் வுடனெழுந்து விட்டுணுதா சாவணங்கி விருப்பு றுதார்
வஸ்திரத்தி லவர்தெரியா வகைமணியை முடிந்துவைத்தார் மகிமை நோக்கி. ()

பின்னரங்கு நின்றுகமால் விடைபெற்றுந் தம்மூர்க்குப் பெயர்ந்து தாதை
தன்னடியை வணங்கிநிற்கக் கபீரதா சவர்கலையிற் றங்கு கின்ற
நன்னர்முடி தனைநோக்கி யவிழ்த்துமணி யைக்கண்டு நல்கி னோர்யா
ரென்னவெனக் குத்தெரியா தேமுடிந்தார் விட்டுணுதா சென்று சொன்னர். ()

சொன்னதுகேட் டுக்கபீர் தாசரனு தாபமிகத் துன்பு கூர்ந்தங்
கின்னலுட னழுவதுகேட் டகத்துமனை யாள்வெளிவந் திதுவென் னென்று
மன்னுமவர் பதம்பிடித்து வினவவவர் நங்குலத்துக் கினம்வாய்ந்த
தென்னவெனிற் கமாலரிநா மத்தைவிற்று மணிகொணர்ந்தா னென்று கூற.

அதுகேட்ட கமாலதா சுடனேயவ் விடநீங்கி யகன்று தந்தோர்
பதிசேர்ந்தங் கவர்கையின் மணிகொடுத்துத் திரும்பவுந்தன் பதிக்கு வந்து
*பிதுமாதாக் களைவணங்கித் தாமுன்போய்ச் சரித்தவ்விடம் பிறந்த வெல்லாம்
இதமாக வுரைத்தருளக் கேட்டபிதாப் பெருமகிழ்ச்சி யெய்தினரே. (சகூ)

---

*பிது—பிதா.

திருமைந்தன் றனைத்தழுவக் கமாலருந்தன் பிதாவடியைச் சேவித் தேத்தி
அரிபசனஞ் செய்துவந்தா ராயிருக்கத் தீர்த்தவா சிகளாய் மூவர்
ஒருநாளத் தமித்தபின்பு மனைக்குவரக் கபீரர்கமா லுவந்து கண்டு
வருவோரை வணங்கியா தனைத்திருத்த வந்தவரு மகிழ்ந் திருந்தார். (௫௰)

சனகாதி களைப்பார்த்து ஸ்ரீரமணன் சந்தோஷித் ததுபோ லன்பு
கனமாகக் கபீர்தமது மனைவிதனை விரைந்து கூஉய்க்கண்டாய் மூவர்
மனைசார்ந்துண் ணாதிருத்தல் கூடாதா லமுதருத்தி மகிழச் செய்தி
எனமாத ரிவ்வேளை யனமிலதே யயல்வீட்டு மிலையென் பாரே. (௫௧)

விலைகொடுத்து வாங்கவுமோர் காசுமின்றே யெனமகனை விரைந்து கூவி
அலைவுறுத்திக் களவுசெய வொருகடையின் சுவர்துளைத்தங் கதனுட் போக்க
நிலைபெறுத்து கமால்வேண்டு வனகொணடு மற்றெவையு நேடாராகிப்
புலைநிகர்த்துத் திருடல்புரை யெனவணிகற் குணாத்திப்பின் போக வேண்டி.

சொலிவிரைந்து வெளியில்வரத் தொடர்ந்தவன்காலைப்பிடிக்கத்துளைப்புறத்தே
நலிவுகொ.ண்டு நின்றபிதாத் தனைநோக்கிக் கொணர்ந்தவற்றை நல்கிச் செட்டி
வலிமிகுந்து கொண்டதனு லெனதுதலை யரிந்துகொடு மனைபோ கென்ன
மெலிவதின்றித் தலையரிந்து கொடுகபீர் மனைதனக்கு விரைந்து வந்து. (௫௩)

உணவுதரு பொருள்மூட்டை தனைமனைவி கையிலளித்தங் குளது கூற
அணவுமனை யாள்மகனை யிழந்ததற்கு மிரங்கிமனை யடைந்தோ ருக்குங்
குணமொடமு தருத்திப்பின் றுயில்விக்கத் துயின்றுநீர் குடையக் காலை
தணவினரிங் கங்குசெட்டி கூவென்னக் கேட்டுவர்து சார்ந்தோ ரெல்லாம். ( )

அடையாளந் தெரியாமற் றலையரிந்து போந்திருட ரடுத்த வுன்னைத்
தடியாதும் பொருளெல்லாங் கொள்ளாதும் போனதுநின் றவமே யென்ன
விடிவாக வேந்தனிடம் வணிகன்போய் நடந்தசெயல் விளம்ப வேந்தன்
புடைசார நின்றவரைத் திருடரைநீர் கழுவேற்றப் போமி னென்றான். (௫௫)

தலையிலாச் சவந்தனையுங் கழுவேற்றி ணாரசன் பணித வாமல்
அலையுலாம் புனலாடி யவாவந்து விடைகொண்டே யகலும் போது
உலைவிலா மனக்கபீர் மனைவியொடு போநதுமிக வுபச ரித்து
நிலைநலோ ரொடுநகரின் புறத்துவந்து கழுவில்முண்ட நிற்கக் கண்டு. (௫௬)

தீர்த்தவா சிகள்முண்டந் தனைக்கழுவி லேற்றுவரோ தேயத் தென்று
பார்த்துவியந் துறவவரைச் சவந்தனது கைகுவித்துப் பணியப் பார்த்து [ன்ன
நேர்த்தெவரும் வியந்துநிற்கச் சவம்வணங்கும் புதுமையென்னே நிகழ்த்துகெ
ஆர்த்தவறி வினர்கேட்கக் கபீரும்மை வணங்குதலா லரிக்குத் தாசன். (௫௭)

இவனாக வேண்டுமென வெண்ணுகின்றே னெனவவரு மெழிலி வண்ணப்
பவநாசன் றாசனிவன் யாரென்னக் கபீரரெல்லாம் பரிந்து சொன்னார்
அவர்வேண்டா வெண்மயருத்த மகனுயிர்விட் டானேயென்ற றைய நல்லீர்
எவனேனு *மரிதாச ரின்பொருட்டுக் கொலையுண்டா லினிதே யென்றார். (௫௮)

மூவருங்க பீர்மனைவி தனைநோக்கி மகன்றலையென் முன்னே கொண்டு
வாவறிது மெனமனைக்குப் போய்த்தலையைக் கொடுவந்து வணங்கி யீய
ஆவலுட னேதலைமேற் றண்டத்தை வைத்துடன்மே லமைவு செய்து
மேவுகெனத் தட்வுதலுந் தலைபொருந்த மகன்றூங்கி விழித்தாற் போல. (௫௯)

உயிர்மேவிக் கழுவைவிட்டுக் கீழிழிந்து மூவரையு முவந்து போற்றி
இயலோடு வணங்கிநிற்க வூரிலுள்ளோர் யாவருங்கண் டிறும்பூ தெய்திப்
புயல்மேனிப் பெருமான்ற னடியார்க ளடிவணங்கிப் புகழ்ந்து போற்றச்
செயிர்தீர்ந்தோர்விடைபெற்றுச்சென்றபின்புகபீர்மனையைச்சேர்ந்துவாழ்ந்தார்

(வேறு) அப்படியி ருந்தவரோர் நாள்பஜனை செய்துபெரி தாவ ணவழி
இற்புகுத வோர்வனிதை கற்றிரிகை யாலரிசி யிற்பு ரியுமா
உற்பவநி னைந்தழுமு னுற்றவர்க ளோனெனவு ரைப்பதி லர்பால்
நிப்படநி ரஞ்சனரெ திரந்துவின வப்புரையி னெஞ்சினர் சொல்வார். (௬௧)

திரிகையரை பட்டரிசி சிந்துவது போற்பிறவி செய்தி கிரியால்
அருகியரை பட்டுயிர முங்குகிற தேயெனவு ழக்க ருதினேன்
பெரியதவ ரேயெனமு னைக்கணரி ரிக்குநிகர் பெற்று றுவர்காண்
மருவரித ளுமமுறை வைணவரெ னச்சொலமகிழ்ந்த னரரோ. (௬௨)

பின்பொருவ ருக்கொருவர் வந்தனமு டன்றழுவு பெற்றி யினராய்
அன்பொடுக பீரர்மனை வந்தரித ளுமமுறை யாசை யின்மிகுந்
தின்பொடுப்ர பந்தகவி யெண்ணிலவி யற்றியரு ளீச னினைவே
மன்பவம கற்றுமென ஞானநலம் விஞ்சினர்வ ரும்ப கலிலே. (௬௩)

(வேறு) தேசிகோத் தமரால் ஞானந் திகழ்வுற வேண்டு மென்று
மாசறு மிராமா னந்தர் மனைவயின் வந்து கண்டு
காசறு மெதிகட் கெல்லாங் கடவுள்போல் விளங்கு கின்ற
நேசரே யெனக்கு ஞான நிலைதனை யுபதே சித்து. (௬௪)

புரந்தருள் கென்னப் பாதம் போற்றினர் வணங்கி நிற்க
நிரந்தரம் பொருந்து ஞான நிலையினர் கபீரை நோக்கித்
தரந்தபு மவிந்த ரென்னுஞ் சாதியோர் தமக்கு ஞானந்
திரந்தரு மறையோர் போதஞ் செய்வது தகுதி யன்றால். (௬௫)

என்னவே ராமா நந்த ரிசைப்பது கேட்டுத் தாசர்
மன்னுமுக் கரண சுத்தி வாய்ந்தியா னும்மால் ஞானந்
துன்னிட வேண்டி வந்தேன் சுரந்தருள் கென்று கூற
அன்னது கேட்டி ராமா நந்தரா காதென் றோத. (௬௬)

யாதுநாஞ் செய்வ தென்று மனைக்குவந் திருந்து தாசர்
சாதுவா மிராமா நந்தர் தாண்முடி தாங்கு தற்கு
மோதுசீ ரிராம நாம முரைத்திடக் கேட்ப தற்குந்
தீதுநீ ருபாய நாடித் தீர்த்தமற் றவரா டற்கு (௬௭)

வருவழிக் குழிய கழ்ந்து மற்றதி லிருக்க வன்றோர்
பரிதிதோன் றுதற்கு முன்னே படர்பொழு தடிக பீரர்
திருமுடி தீண்ட யாவர் சிரத்திலோ படலா யிற்று
மருவுமென் காலென் றஞ்சி வருந்தியே யிராமா வென்றார். (௬௮)

என்னமெய்க் குருவே யுந்தா ளென்றலை படவும் பெற்றேன்
மன்னுசீ ரிராமா வென்றும் வாக்கிசைத் திடவும் பெற்றேன்
நன்னயத் தெனக்கீ டேற்ற நண்ணிய தெனவா னந்தந்
துன்னியக் குழியி னின்று மெழுந்தனர் துதிக்கக் கண்டார். (௬௯)

இந்துருக் கனுக்கு நேய மிசைவுற மனத்துக் கொய்துஞ்
சுத்தரன் றென்று பின்னுந் துயரிவன் றனக்குச் செய்து
மெய்த்திறந் தெரித்தல் வேண்டு மெனவொன்று மவிளம்பா ராகித்
தத்துநீ ராடச் சென்றார் கபீரர்தம் மனைக்குச் சாரதார். (எ0)

தாசர்பி னிராமா நந்தர் தாசனென் றமைத்த பாடல்
ஆசறு கீர்த்த னங்க ளாகமற் றெங்கு மோதி
நேசமோ டுலவு கின்ற நிலைகண் டிராமா நந்தர்
கூசலின் றவாசி ரததிற பாதுகை கொண்டு மோதி. (எக)

நானுப தேசஞ் செய்யா திருக்கநீ ரனியென் குருசன்
றுனென வமைத்துப பாடல் சாற்றிடத் தகமோ வென்ன
ஊனமில் கபீர ருநதா ளுற்றது ந் தலையி லுண்டு
மேனவி லிராம நாமம் விளம்பிய ததுவு முண்டு. (எஉ)

மற்றுமிங் குமது பாத மரவடி யெவருங் காண
எற்றல்போ லென்சி ரததி லேற்றிய திலையோ வென்று
சொற்றனர் சிரததி னிணறுஞ் சோரிசோர் வுறவ ணங்க
முற்றவுண மகிழ்ந்து தாசா முடிமிசைத் திருக்கை வைத்து. (எங)

உன்னைப்போல் ஞான பகதி யுளளவ ரெவரு மில்லை
என்னநற் செவியிற கிருஷண நாமத்தை யிசையக கூறித்
துன்னினர் மனைககி ராமா நந்தராந துறவி பின்பு
மன்னினா கபீரா தாம்வாழ மனைககுமா மகிழ்ச்சி கூர்ந்து. (எச)

சிலநாலா துதிக்கத தீயோர் சிறுவனைக கொன்ற தீயோன்
நலவரி நாமந தனனை நவில்கின்று னல்லோன் போல
வலநல வேடங கொணடு வாழ்நல்வரு சகமே யென்று
பலபல விகழவு கூறிப பழிததவ மானம் பணண. (எரு)

நினைத்தொரு நான்கு திககு நிறைநதசா துக்க ளெல்லாந்
தனித்தனி வந்தோர நாளிற றலைப்பெயது புசிப்ப தாயென்
மனைககுநீர் வருக வென்று கபீரரே வரைந்த தாக
இனிததபத திரஙக ளெஙகு மெழுதிவிட் டிருப்ப தானார். (எசு)

பத்திர மெங்குஞ் செல்லப் பார்த்தசா துக்க ளெல்லாம
அத்தின மதனி லேவந் தடுத்தனர் கபீரா கணடு
மொய்த்துநல் லோரக ளெல்லா மொருவழி முயங்கற் கொத்த
தெத்திற நலனோ வென்று வினிதுபே ரின்பங் கொணடு. (எஎ)

ஒவ்வொரு வரையுஞ் சேவித் துகநதுறு தோத்தி ரங்கள்
செய்வது செய்யப் பூமேற் றிருமகள் கொழுந னீங்கு
மெய்வகை யெனவந் தோர்க்கு விருந்திடா திருக்கி னிந்தை
வவ்வுறு மெனக்க பீரர் வடிவுகொண் டடைந்து மாதோ. (எஅ)

ஒருவருக் கொருவ னாகி யூழியம் பலவுஞ் செய்து
திருவமு தருத்தும் போது சேர்ந்ததீ யவர்கள் கண்டு
மருவிய பலக பீரர் வயங்குவ தென்னே யென்று
கருதின ரதிச யிக்கக் களிப்புடன் மூன்று நாளும். (எகூ)

நலவுப சாரம் பெற்று நனிமகிழ் சிறக்கச் செய்து
பொலனணி யாடை தந்து பொருந்துதோத் திரங்கள் செய்யச்
செலவிடை கொண்டு போனார் திருத்துசீ தானும் போனன்
பலபடி யிகழ்ந்த தீயோ ரனைவரும் பயந்து வந்து. (அ0)

மெய்யன்ப ரடியிற் றாழ்ந்து விளம்புவார் கபீர ரேறுஞ்
செய்யாநன் மனத்தே னமற் செய்பிழை பொறுத்தி ரென்னத்
துய்யதோத் திரங்கள் செய்து தொழுதுபோ யினர்க பீரும்
பெய்யுமா முகிலன் ஞானி நினைத்திது பேச லுற்றார். (அக)

எனையவ மானஞ் செய்ய வெண்ணினோர் நாண வந்த
அனைவரு மகிழ்ச்சி கூர வமைத்தனை யாயி லுன்றன்
நினைவருங் கருணை தன்னை யென்னென்று நிகழ்த்து கிற்பேன்
வினைதெறக் கழல்கால் பூண்ட விமலனே யென்று வாழ்த்தி. (அஉ)

(வேறு) அன்பினரி ருந்துசில நாள்கழிவ தான
பின்புதிரு மால்புரம டைந்துபுகழ் பேசி
இன்புதரு சேதுசெல வெண்ணிவிட லன்றன்
முன்புவிடை பெற்றுவழி முந்தினர்ந டந்தார். (அங)

வருவழியோ ரூர்தனில்வ திந்திரவு தன்னில்
அரிபசனை செய்ததைய றிந்தனரெ லாரும்
பெரிதும கிழ்வுற்றனர்பி றங்கொருஜி வாவு
மருவுதத்து வாவுமவண் வந்தனர்ம கிழ்ந்து. (அச)

ஞானநலம் விஞ்சியந லோரரித ருமம்
பானரிவ ரென்றடிப ணிந்துதுதி பன்னி
மோனவுப தேசமருள் செய்கெனமொ ழிந்தார்
ஆனவிரு வோர்நினைவ றிந்துவரு மன்பர். (அரு)

மற்றவர்சி ரத்தினிடை வைத்தனர்க ரத்தை
உற்றவுப தேசமுமு ணர்த்தியருள் செய்து
நற்றியரு சேதுமுதல் நண்ணுதல னண்ணிப்
பெற்றுவளர் காசிநக ருற்றனர்பெ யர்ந்தே. (அசு)

மெய்யருப தேசவுரை மேவுமறை யோர[illegible]
தையன்மிகு தம்பிதமை யன்றமையி கழ்ந்தார்
நொய்யதொர விந்தனைய டைந்தனர்நு ழைந்தென்
றுய்யநக ருள்ளமறை யோர்பலரு மொன்றாய். (அஎ)

இகழ்வதைஉெ ணுதிருவ ரும்பெறுத லான
மகன்மகட மக்குமரு கன்மருகி வாயா
தகமிகவ ருந்திவளர் காசியைய டைந்து
தகவுறுக பீரரைவ ணங்கினர்த ளர்ந்தே. (அஅ)

ஐயவெம தூரிலுறை யந்தணர்க ளெல்லாந்
துய்யவுமை யுற்றடிதொ ழற்கிசைகி லாது
நையவுரை செய்தெமைந லிந்தனர்க ளென்ன
மெய்யறிக பீரவரை நோக்கிவிடை சொல்வார். (அகூ)

நின்மகனை நின்றன்மக னுக்குநெறி யாக
என்னுரைவ ழாமணமி யற்றுபுமி னென்னச்
சொன்னபடி செய்வதுது ணிந்துதம தாரை
மன்னினர்மு கூர்த்தமிட மறையவரெ லோரும. (கூ0)

மற்றவா கத்தினிடை வந்துதெரி நீவிா
முற்றமுறை தீர்மிருக முந்துசெய லிற்செய்
பெற்றிநல னன்றெனவி ரைந்துநனி பேசி
உற்றபுரை தீர்வதையு ஞற்றியுற வாகி. (கூக)

குருவெனவ விரதனைய டைர்ததுகு றித்தால்
திருமகன்ம ணளன்மகிழ் செய்கிலனெ னக்கொான்
டுருகுமன மேயமுட னுற்றமக னுக்குக
கருதுமக டந்துமக ளுககுரிய காந்தன். (கூஉ)

எய்தும்வகை யும்புரிய விவ்விருவ ரும்போய்
மெய்யறிக பீரடிவ ணங்கினர்வி ளம்பத்
துய்யருமகி ழ்ந்தனர்து தித்தடிப ணிந்து
பொய்யிலிரு வோருநகர் புக்கனரு றைந்தார். (கூ௩)

துளவமணி யோடொருது வாதசநன் றுமம்
வளர்வடிவ ராயமரும் வைணவரொ ருநகே
தளர்வில்ப திரைுயிரர்த யங்குமொரு காசி
வளாநகர டைந்திவணில் வந்தநமர் கட்கு. (கூ௪)

உணவருளு முத்தமநல் வைணவர்க ளுணடோ
அணவுறிவு ரைதநிரென வாய்வுறுதல் கணடோா
இணர்துளவி ஞனடியி றைஞ்சுமொாது ருககன
புணர்வதுள தென்றுபுக லககடிது போனா. (கூ௫)

தீமையில்க பீரர்செவி சேரவொரு சீதா
ராமவெனு நல்லுரைந வின்றிடவி ருவி
மாமனையி லுற்றவரெ மூந்துவெளி வநது
தோமிலரை நோக்கினர்து தித்தனாப ணிந்தாா. (கூ௬)

பணிகுநரை வந்தவர்கள் பாாத்தனரெ மகஇங்
குணவிடுக வென்னநல தென்றுறுக பீரா
அணைகவிவ ணென்றவரை யவ்வயின கன்று
வணிகருல னோர்துளசி தாசனிடை வநது. (கூஎ)

அனுகென்மனை வந்தபதி ரையிரர்த மக்கும்
வணிகர்நில காவுளம கிழ்ந்தினித ளிததி
உணவெனிவு னக்குநல னூஉங்குவரு மென்னப்
புணர்வதறி யாவணிக ரைன்றுபுகல கிற்பான். (கூஅ)

நீயினவு கின்றபடி நேர்வுறிலெ னக்குன்
றேவியையோர் நாளிரவு சேர்வகைசெய் கிற்பா
யோவெனவ ளிப்பனென வோதிடமு ரைத்தாா
ராவிலரி நாமமதை நாளுநவில் கிறபோா. (கூகூ)

சொல்லுதிட னுக்கிசைவு கொண்டுவரு தொண்டா
நல்லுணவு செய்யும்வகை யாவுகனி நல்கப்
புல்லுநர்த மக்குதவி நன்மகிழ்பொ ருத்திச்
செல்லும்வகை தம்மனைவி யார்க்கினிது செப்பி. (௱)

ஓரிரவு நீவணிக னுக்குமகிழ் செய்யச்
சாருதல்வி ரும்பியல லோவுணவு தந்தான்
நேரிலரி தாசர்பெற லாதலது நேரப்
பேருதியெ னக்கொடுபெ யாந்தினிது சென்றார். (௱க)

சென்றுவணி கன்புடைசெ றிந்தவன்ம னத்துக்
கொன்றும்வகை யின்றிரவு முற்றுமுறு கென்ன
நன்றெனா வின்றுவணி கன்கடையி னணை
அன்றவாபு கன்றபடி யமைமியதில் *வங்கன். (௱௨)

அகமகிழ்வு றும்பொழுதி லஃதநக ரெல்லாந்
தகவுபுரி யுந்தலைவ னுகிமலர் தங்கு
மகள்கொழுநன் வந்துவணி கன்றனைவெ ருட்டி
மிகவிலைவ ணகியெதிர் நின்றிதுவி ளம்பும. (௱௩)

தனமநமி குத்தபுலை யாவெனது தங்கை
உனையணைய வெணணினைய தாலினியொ ரம்பால்
நினதுதலை கொய்வெனென நேர்பொழுது செட்டி
மனமதுது ளங்கிமிக வநதடிப ணிநது. (௱௪)

என்பிழைபொ றுத்தெனுயி ருக்கபய மீந்தால்
அன்புகொள வென்பொருள னைத்துமினி நீவேள்
என்பதைவி ளவியினி யின்னபுரி வாயேல்
துன்புறவு னைததலைது மிப்பெனென வோதி (௱௫)

கற்பின்மிகு கின்றவிவர் கான்மிசைவி ழுந்தே
அற்புபுரி யன்னவர்த மக்குமென வன்னான்
சிற்பரன வின்றபடி தேவியைவ ணங்கி
எற்பிழைபொ றுத்தருள்க வென்றுதுதி செய்தான். (௱௬)

அன்பன்மனை யாரையினி தய்வயினி ருந்தும்
இன்பொடுகொ ணர்ந்துமனை யிற்புகவி டுத்துப்
பொன்பொருவி ளுயகன்ம றைந்துவெளி போதப்
பின்பறிக பீரர்மனை யாரொடிது பேசும். (௱௭)

என்னுரைக டந்திரவி லேயவணி ராது
துன்னினையி தென்னெனவு டன்றெழுது சொல்வார்
மன்னுநகர் துன்னெரதி காரியவண் வந்து
சொன்னவணி கன்றனைய டர்ந்தெதிர்தொ டர்ந்து. (௱௮)

இங்கெனைவி டுத்தினிதி னேகினனெ னப்பூ
மங்கையனை யார்சொலம கிழ்ந்திலர்மு னிந்து
தங்குமதி காரியிடை தாம்விரவி நின்று
கங்குறுயில் கின்றவவ னைக்கடி தெழுப்பி. (௱௯)

---

*வங்கன்—சண்டாளன்.

என்னிதுபு ரிந்தனையெ னத்தொழுது நின்றே
இன்னவகை யேதுமறி யேனெனவி சைத்தான்
சொன்னதிட வாய்மையினு ணர்ந்திதுதொ குத்தோன்
மன்னுபுகழ் ராமனென வெண்ணிவணி கன்பால். (௱௰)

வந்தவணி காபுகலு மாமறைக ளாலு
முந்துதவ யோகமுயல் மோனர்செய லாலும்
இந்திரன்மு தற்பலவி மைப்பிலர்க ளாலு
நைந்துமறி தற்கரிய நாயகனை யன்றோ. (௱௰௧)

ஊரினதி காரியென வுன்னியுளை கின்றாய்
நேரிரவி லென்றிவர்நி கழ்ததவுணர் செட்டி
பேரறிவி னீருமது பேரருளி னாலே
யாருமறி யாதபொரு ளென்வயின டைந்த. (௱௰௨)

உம்மதரு ளாலெனவு ரைத்தடிவ ணங்கி
வெம்மையனு தாபமுள மேவியரி நாமனா
செம்மையுட னோதினனி ருக்குமனை சேர்ந்து
நன்மைசெய்க பீரரியை நாடினரி ருந்தார். (௱௰௩)

கபீர்தாசர் திருவடிகளே சரணம்.

ஆகச் சரித்திரம் ௫-க்கு செய்யுள ௱௰௩.

முற்றிற்று

ஞான தேவர் சரித்திரம்.

———:o:———

கங்கைநதிக் கரையிலாப் காவெனுமூ ரிற்குலக ருணிக ராகிப்
பொங்குவிண்டு பக்தரொனுங் கோவிந்த பண்டிதரோர் புருடர் வாழ்ந்தார்
அங்கவர்பத் தினிபதிவி ரதாசிரோ மணியாநி ருபாயி யார்க்குத்
தங்குவெகு நாளாகப் புத்திரனில் லாதாசை தழைத்துப் பின்பு. (க)

தேவருளால் ஞானபக்தி திருந்துமொரு வடிவாகிச் சேய்பி றக்க
ஆவலுட னக்குழந்தை யைப்பார்த்துத் தாய்தந்தை யளவி லின்பு
மேவிவிடோ பாவென்னும் பெயர்வைத்து முபநயன விதியுஞ் செய்தார்
தாவிலந்தப் பிள்ளைபல கலைகளுங்கற் றறிவில்மிக்க சான்றோ ராகி. (உ)

தீர்த்தமா டக்கருதித் தாய்தந்தை யிடத்துவிடை சேரப் பெற்று
நேர்த்தவரை வணங்கியவ்வூர் விட்டரிதன் னாமத்தை நினைந்து சொல்லிப்
போய்த்துவா ராவதிக்கட் பொங்குறுகோ மதிமூழ்கிப் பொருந்து கண்ணன்
வாய்த்துளகோ யிற்புகுந்து வணங்கியவ்வூர் விட்டுமெச்ச வடிவாய் முன்னே. ()

சங்கவசு ரன்றனக்கு வீடுதந்த மாலிடத்துச் சார்ந்து காதல்
பொங்கவணங் கித்தரும புரிகண்டு மூலமா தவம்போய்க் கண்ணன்
தங்குறுபா லுகாதீர்த்தஞ் சோமனு தங்கால யவனன் றன்னை
மங்குறச்செய் மருங்குகண்டு தவளபுரி யடைந்தின்ன மார்க்கத் தெல்லாம்.(சு)

உள்ளதீர்த் தங்களெல்லாம் படிந்தளகா வதியென்னு மூரைச் சேர்ந்து
தெள்ளியசக் கரதீர்த்தஞ் சேர்ந்தாடித் தீரத்திற் றிருமா றன்னை
எள்ளிலருச் சனைசெய்தங் கிருக்கும்போ தவ்வூர்வா ழிருபி றப்பின்
விள்ளுசித்தோ பண்டிதரவ் விடோபாவைக் கண்டெங்கு மேவிற் றென்றும். ()

பேரெதென் றும்வினவப் பிரமசரி யாப்காமூர் பெயர்வி ருத்தா
சாரிகளுக் குப்பிறந்த விடோபாயா னித்திசையிற் றடினி யாட
நேர்வுறுவே னென்றுசொல்லச் சித்தோபண் டிதர்சுதின நேர்ந்த தென்று
போரமகிழ்ந் தெம்மனைக்குப் புகவேண்டு மென்றுமிகப் புகழ்ந்து கொண்டு (சு)

வந்தாறு சுவைச்சோறுண் பித்துப்பின் றுயில்வதிய விரண்டு பேரும்
சிந்தாகு லந்தீரச் சித்தோபண் டிதர்கனவிற் பாண்டு ரங்கன்
நந்தாத பிரமசரிக் குன்மகளை மணஞ்செய்து நல்கு கென்ன
மூந்தாத ரத்துடனே யன்னவருக் கதுதெரிய மொழிந்தார் கேட்டு. (எ)

பிரமசரி யெனக்கந்தப் பாண்டுரங்க னிவ்விதத்தைப் பேசொ ணாதோ
திரமுறவெ னச்சித்தோ பண்டிதரின் றிங்கிருத்தல் செய்கவென்னத்
தரமிகுபண் டரிநாத னன்றிரவில் விடோபாத்தன் கனவிற் சார்ந்து
நிரவுறவே மணத்தியவள் வயிற்றிடையோர் நால்வர்நல்லோர் நேர்வா ரென்று.

சொன்னதுகேட் டுடன்விழித்துச் சித்தோபண் டிதருக்குத் தோன்றச் சொல்ல
நன்னரவர் புரோகிதரை யழைத்துநல்ல முகூர்த்தம்வைத்து மகளை நல்கிப்
பின்னரொரு நான்குநாள் கழித்தபின்பு சித்தோபண் டிதரைப் பேணித்
துன்னுமிது கடகமதி யாதலாற் பண்டரிபோய்த் தொழுதல் வேண்டும். (கூ)

என்றுசொல்ல நின்மனைவி யுடன்செல்க வேனமாம னியம்பக் கூட்டி
நன்றுமதி பாகாவில் வந்தாடிப் பண்டரிவாழ் நாதன் கோயிற்
சென்றுவலஞ் செய்துகரு டத்தம்பஞ் சேவித்துத் திருமால் பாதம்
நின்றும்வி ழுந்துந்தொழுது நிற்கவங்குச் சித்தோபண் டிதரு நேர்ந்தார். (ய)

வந்தவரை வணங்கியான் சேதுசென்று வரவேண்டு மெனவ குக்க
முந்துமவர் மனங்கண்டு நன்றுபோய் வருகவென மொழிந்து தாம்வாழ்
தந்தவள காபுரிபோய்ச் சார்ந்தனர்வி டோபாபண் டரிநா தன்பால்
உந்தவிடை பெற்றுஸ்ரீ சைலமல்லி கார்ச்சுனமே முதலா மூர்கள். (யக)

பலவும்போய்க் கண்டுசே துவுமாடிப் பின்னளகா பதியை மேவி
நிலவியமா மனைவணங்கி நாலுநாள் கழிந்தபின்பு நிகழ்த்து கின்றார்
நலமிகவென் றந்தைதாய தமைக்காண வேண்டும்விடை நல்கு கென்ன
இலகுசித்தோ பண்டிதர்யா னுங்காண வேண்டுமெழு கென்றெ ழுந்து. (யஉ)

தம்பதிக ளுடனுப்காம் வந்துதாய் தந்தையர்க்குத் தண்டஞ் செய்து
நம்பெருமான் விடைப்படியே மணமாயிற் றென்றுளது நவிலக்கேட்டே
இன்பமிகுந் தாரபின்பு மகளைமரு மகனைவிடுத திருகரு மூர்க்கு
நம்புசித்தோ பண்டிதர்சென் றூர்பின்பு தாய்தந்தை மரண நண்ண. (யங)

வருந்தாமல் விடோபாத்தன் குடும்பத்தில் மனமின்றி யவகலோர்ந்து
பெருந்தாழ்வு கொடுபோநதார் சித்தோபண டிதர்மருகற் கிதங்கள் பேசிப்
பொருந்தாது குடும்பத்திற் பொருளுந்தே டாதிருக்கிற புகலில் வாழ்க்கை
திருந்தாதெம மூர்க்குவரு கென்றழைத்துக கொடுபோந்து சேர்ந்தி ருந்தார். ()

அவ்வூரி லரிபசனஞ் செய்துகொண்டு மாடிமதி யெகர்த சிக்குத்
தவ்வாதாண் டுகடோறும் விடடலனைச் சேவித்துத் தங்கு நாளில்
வெவ்வாளி யனையவிழி மனைவியைப்பார்த் தெனக்குமிக வெறுப்புச் சார்வ
திவ்வாழ்விற் காசிபோய்ச் சன்னியா சம்பெறமற் றெனக்கு வேணடும். (யரு)

நீவிடைநல் குதியென்ன நேரிழையாா மறுமொழிதா னேரா தேபோய்த்
தாவில்தந்தை தனக்கோதச் சித்தோபண் டிதர்மகளைத் தானும் பார்த்து
மேவியபுத் திரனில்லார் சன்னியா சம்பெறுதல் விதியன் றென்னத்
தேவிவிடை தராதிருக்கக் கங்கைபோய் வருதுமெனச செப்பிப் போனார். (யசா)

வலைவழுவு மான்போலத் திருவேணி சங்கம்போய் வருபிர யாகை
அலைதருபுஷ் கரதீர்த்தத் தாடிவிண்டு பத்தர்சொல்லும் புராணங் கேட்டு
நிலையில்சமு சாரந்தான் ஜனனமர ணத்தைநல்கு நெறிமற் றென்று
மலைவில்சீர் பாதர்தமைச் சற்பாவத் துடன்வணங்கி வருமெ னக்கு. (யஎ)

துறவிலிச்சை யுளவதனைத் தரல்வேண்டு மெனவவரும் துணைவி மக்கள்
உறவினருண் டோவென்ன நானொருவ னேயென்ன வுற்ற தீக்ஷை
பெறவருளிச் சன்னியா சத்துவைத்தார் ஸ்ரீபாதர் பின்வி டோபா
அறமிகுகா சியில்நான்கா மாச்சிரமம் பெற்றிருப்ப தறிந்து மன்னோ (யஅ

சித்தோபண் டிதர்பிள்ளை பெறுதவர்க்குத் துறவருளல் சிறந்த தன்றென்
றத்தாலே துயரடைய மனைவியுங்கேட் டுத்துன்ப மடைந்து தேறிக்
கொத்தார்பைந் துணரரச மரஞ்சூழ்தல் தினவிரதங் கொண்டு மேவி
எத்தாலுந் தடையின்றி வருநாளிற் கணவனுக்குத் துறவன் றீந்தார் (௰௯)

ஒருநாளவ் வரசடியி லிருக்கவிடோ பாமனைவி யுற்றுப் போற்ற
வரநான்கு மகப்பெறுதி யெனவுதவக் குறுநகையம் மங்கை கொண்டாள்
திரமோது சிபாதர் சிரிப்பதென்னே நங்காய்நீ செப்பு கென்னத்
தரமேவு மணம்புரிந்த புருடனின்றி மகப்பெறவுந் தகுமோ வென்றாள். (உ௰)

உன்கணவ னெங்கேயென் றவர்கேட்கச் சமுசார வுறவு நீத்து
நன்குதுற வினரானார் பிள்ளையான் பெறுவதெங்ங னவிலு கென்ன
மன்குருவும் பிள்ளையில்லார் துறவுபெற லோபாவம் வழங்கி னோர்கரும்
*தன்குதெறும் பாவமே யென்றடையா ளங்கேட்டுத் தாந்தெ ரிந்து. (உக)

மிகவருந்தி நங்காயுன் றந்தைதனைக் கொணர்கவென்ன விரைந்து சென்று
தகவுரைக்க வவர்வந்து தண்டனிட ஸ்ரீபாதர் சாற்று கின்றார்
மகளையொரு வாகனத்தி லேற்றிநீ காசிநகர் வருக வென்ன
முகமனொடு துறவினரைக் கூய்க்கொண்டுமனமகிழ்ந்துமுடுகிப் போனார். (உஉ)

போனபின்பு சிபாதர் சைதன்னிய சென்றுபெயர் புனைந்த சீடர்
ஆனனத்தை நோக்கியுனக் கில்லாளுண் டோவின்றே வறைதி யென்ன
ஞானகுரு வடிவணங்கி விடோபாவுள் ளதுகூற நல்ல தென்ன
ஊனமிலா மனைவியுடன் போய்வாழ்க வூரிலென வுடனே சென்று. (உங)

கூடியபின் னூரிலுள்ளோர் துறவுகொண்டோ னில்வாழ்க்கை கொள்ள லாமோ
நாடிலிது பிழையென்று பழிகூறத் திருமாறன் றுமங் கூறி
வீடில்விடோ பாவிருக்க வேதியரெல் லாம்விலக்கி விடவு நீங்கி
நாடிவனத் திற்குடிசை யியற்றியதி லேயிருந்தார் நாரி யோடு. (உச)

இரவுபக லிராமநா மம்புகன்று தினமுமிரந் தீரா றுண்டு
தரமருவு பாகவதங் கீதைமுத லியகேட்டுத் தங்கிப் பின்பு
திரமருவு மும்மகனு மொருபெண்ணும் பிறக்கவவ ரிற்சி றப்பு
விரவுசதா சிவனென முன்மகற்கு நிவர்த்தியென விதித்து நாமம் (உரு)

விண்டிரண்டாம் பிள்ளைக்கு ஞானதே வென்றுபெயர் மேவச் செய்து
மண்டுமூன் றாம்பிள்ளை பிரமனுக்குச் சோபான னெனமா நாமம்
கொண்டுநான் காம்பிள்ளை மாயைக்கு முத்தாயி யெனக்கு றித்தார்
பண்டுவிடோ பாவென்று பெயர்கொண்டு துறவறத்தும் பயின்று ளோரே. ()

அவகுலத்திற் பிறந்தமக்க ளானனமும் பார்க்கலா காதென் றியாரும்
எவமுரைக்கப் பிள்ளைகளும் வளர்ந்துவர வத்யயன மிசைக்குங் காலம்
நவமடுக்க மனைவிபுரு டனைநோக்கி யுபநயன நடத்த வேண்டுந்
தவமகிழ்ந ரேயென்னச் சைதன்னியர் மறையவர்க ளுமைவ ரித்து. (உஎ)

யானிழைத்த பிழைபொறுத்துப் பிராய்ச்சித்த நூல்வழியே யியற்று கென்று
ஞானமிகு வேதியரை வணங்கவங்கு முதற்பிள்ளை நலோரே யுங்கள்
ஆனனங்கள் கண்டபோ தேபுனித மாயினே மாத லாலே
ஊனமற வறுவருக்கும் பிராய்ச்சித்த முனுற்றுகென வுரைத்து நிற்க. (உஅ)

---

*தன்கு—களிப்பு.

உடம்பைநீ ரூக்குவதை யன்றிவே றொன்றுமிலை யுபாய மென்று
திடங்கொள்கலை வேதியர்தேர்ந் துரைசெய்ய வனுதாபஞ் செறிந்து நோக்கிச்
சுடங்குசொலு மறையவரை வணங்கியே திரும்பிப்பா ராமற் சார்ந்தே
இடங்கொள்வனத் திற்புகுந்தார் தனியாகிச் சைதனிய ரென்ப மாதோ. (௨௯)

'போனவரைக் கண்டவர்க ளனுதாபக் கனல்சுடலே போதும்வேறே
*ஆனல்சுட வேண்டுவதின் றென்றார்க ணிவர்த்திதே வணுகி நின்று
ஞானமிகு வேதியரே யெமக்குநீர் விதிப்பதனை நவிலு கென்ன
ஊனமறை யோரேனும் மூர்க்குப்போ யுமக்குள்ள வுறவோ ராலே. (௩௰)

குலமுறையைத் தெரிந்தெழுதி வருகென்ன ஞானதே வரைக்கு றித்து
நலமலியு நிவர்த்திதே நமதுகுல நமக்குநன் றாய்த் தோன்றும் போது
'சொலவெவவரைக் கேட்கின்ற தெனச்சீவ முத்தபதந தோன்றி னாலும்
வலமருவு சுதர்மத்தை விடலாகா தெனஞான தேவ குத்தார். (௩௧)

சாதிதன்னு லொன்றுமில்லை பத்தியன்றி யரிபாதஞ் சார மாட்டார்
நீதிதெரிவ சிட்டர்முத லினர்பிறப்பின் வகையென்ன நினைந்து பாக்கில்
தீதியலுங் குலத்தினனுய்க் கடவுளிடத் தன்புளனேற் றீங்கின் றென்னு
ஓதினநூ லில்லையோ வென்றுசோ பானரித முரைதது நின்றார். (௩௨)

மறையவரங் கவர்பிறப்பின் வகையெழுதித் தந்துதணடம் வருக்கா ராக
நிறையுமறி வினர்கோதா விரிநதியி னீராடி நீங்கி யப்பாற்
குறைவறுசீர்ப் பிரமபுரங் குறுகியதில் வேதியரைக் கூட்டிவைத்துப்
பொறையுடையீ ரெனவணஙகிய பத்திரமுந் தந்துளதும் புகன்று நின்றார். ()

அங்கவரும் பிராய்ச்சிதத மில்லையென வதிற்சில்லோ ரலர்மே லான
மங்கைபதி யிடத்தன்பு வாய்ந்துளதே லதுபோது மாறு வேண்டாம்
உங்கடமக் கெனநாங்க ளுணர்ந்தபடி யேயுரைத்தி ருறவீ ரென்னப்
பங்கமில்லாக் குணததினிரால் ஞானதே வெனப்பெயரும் படைத்து வீரே. ()

என்றுசிலர் சொல்லும்போ தங்கொருவ னீர்ப்பொதிகொ ளிக்க டாவுக்
கொன்றுபெயர் ஞானனென்றாற் பயனென்னை யெனஞான தேவுணாந்து
நன்றுசொன்னு யானுமது வுஞ்சரியே யெனநவில நனிமு னிந்து
துன்றுமவ னதற்கூற்ற துனக்குறுமோ வென்னவது தொடரு மென்றார். (௩௫)

அதுகாண்பே னெனத்தடிகொண் டெற்றினனக் கடாவதனை யநத வெற்றல்
முதுஞான தேவர்முது கிற்பட்டுத் தடித்ததனை முனைவர் நோககிச்
சதுர்வேத நின்னைப்போற் சாற்றுமோ கடாவென்ன ஞான தேவர்
இதுகால மேகாண்டீ ரெனவெழுந்து கடாத்தலையி லெழிற்கை வைத்து. (௩௬)

வேதமொழி கெனவருள வியாசரைப்போ லதுநான்கு வேதஞ் சொல்ல
ஏதமிலா மறையவர்க ளெல்லாருங் கண்டுவியப் பெய்திப் பூமேற
போதன்முத லினர்புரிதற் கரியசெயல் புரிகுதலாற் பொருந்துமின்னோர்
ஓதில்நர ரல்லரவ தாரிகளே யிவர்க்கெவர்தா முனூற்றல் செய்வார். (௩௭)

தண்டமெனப் பொருளாசை தங்கியநா மறையோராய்ச் சனித்த தன்றி
மண்டுநல்ல வொழுக்கமிலேம் பத்தியிலேம் பரிசுத்த மனமு மில்லேம்
கண்டவிவ ரைப்போலு மறையோரின் றிவர்தம்மைக் கருதி யீன்றோர்
அண்டுமென்ன தவத்தினரோ வெனப்புகழ விவர்களுமங் கவரை யேத்தி. ()

---

*ஆனல்—அனல்—நீட்டல்விகாரம்.

எல்லாரும் பெருமையே யெனவவ்வூ ரினரெல்லா மிவரோ சால
நல்லோர்க ளரிதாச ரென்றுகொண்டா ரதுபுகன்ற நால்வ ரும்போய்
வல்லாேனார் மறையவன்ற னகத்திறங்கிப் புராணசிர வணமுஞ் செய்து
சல்லாப விநோதவரி பசனைவினைப் பகலிரவுந் தங்கு நாளில்　(௩௯)

மற்றிவர்தங் ககமுடைய மறையவற்குப் பிதுர்த்திதிதான் வந்த தென்று
சுற்றமுள மறையவரை யுணக்கூவ வவர்துறவி சுதரைக் கூட்டி
உற்றநின்பால் வருகிலோ முணற்கென்ன விறிவுரைக்க வுதனைக் கேட்டு
முற்றுமறை யோன்றிகைத்து மோனமாய் வீட்டிருந்து முன்னு கின்றான்.　()

தனைநோக்கி ஞானதே வென்னேநீ சலித்திருக்கை சாற்று கென்ன
எனையீன்றோன் றிதியின்று மறையவரிங் குணவெய்தா திகழ்ந்தா ரென்ன
அனையவனை யறுசுவைப்போ னகமமைத்தி பிதிரரே யடைந்துண் பாரென்
றினையசொல வவன்வியந்து நீராடல் முதல்புரிந்தங் கியைவு செய்தான்　(௪௧)

கதலியிலை யிடத்திலே யறுசுவைப்போ னகம்படைத்துக் கைதொட் டுண்ணப்
பிதுரரெங்கே யெனவினவ ஞானதே வக்கதையை யிலைமேற் பெய்ய
எதிர்தருமப் பிதுர்க்கடமக் கர்ங்கியபாத் தியமுதலா மெல்லாந் தந்து
சதுருடனு சனந்தந்து வத்திரநூ டனைத்துடன்றக் கனையுந் தந்தான்.　(௪௨)

தூபதீ பத்துடனே பிதுருருவ சனார்த்தனவா சுதேவ மூர்த்திக்
கேபிரிய தாமென்று சொன்னவுட னமுதுசெய்தார் பிதுர்க்க ளெல்லாம்
மாபனவ னதுகண்டு வியப்புடனு னந்தமுற்றான் மற்றவ் வூர்வாழ்
பாபமில்வே தியரெல்லாஞ் சாளரத்து மிறப்பிடத்தும் பதுங்கிப் பார்த்தார்　)

அவர்பார்க்கப் பிதுர்க்களெல்லாம் போசனஞ்செய் தானவுடன் ஞானதேவர்
பவநீத்தீ ரெருகென மறைந்தார்க ளதுகண்ட பார்ப்பா ரெல்லாம்
நவமீதே பிதுரர்வரச் செயுந்திறத்தை நாடுங்கா னரமேர யல்லர்
உவமையிலா மும்மூர்த்தி யொருமாயை யேயிவர்க ளுண்மை யென்று　(௪௪)

இங்கிவர்தம் மகிமையறி யாதேநாங் குலமதத்தா லிகழ்ந்தோம் வீணே
நன்கிதல வெனப்போனார் பகடுமறைக் கருத்தெவரு மறிய நாளுஞ்
சங்கையறச் சொல்வதனை ஞானதே வுணர்ந்துவியா சமுனி சாற்றுஞ்
சிங்கலிலா முறைதவறு மெனப்பகட்டை நோக்கமுன்போற் றிகழ்ந்த தன்றே.

(வேறு) தமக்கிதஞ் செய்து நின்ற சதுர்மறை யவனைப் போற்றி
எமக்கினி விடைநல் கென்ன விசைவுகொண் டவ்வூர் நீங்கி
அமைப்பரும் பெருமை பூண்ட மகாலய மென்னு மவ்வூர்
கமைப்பெருந் தவத்து நால்வர் கடுகினர் வந்து கூடி.　(௪௬)

பிரவரா வென்னுந் தீர்த்தம் பெரிதுவந் தாடி யங்கே
பரவுத லான போது பற்றறு ஞான தேவர்
திரமுலாங் கீதை தன்னை யாவருந் தெரிவ தாகத்
தரமுள வியாக்கி யானஞ் சமைக்கச்சோ பான தேவர்.　(௪௭)

யாவரு மறியப் போதித் திருந்தன ரிருக்கு நாளில்
மூவரு மிவர்க டன்மை கைணியர் வேந்தன் முன்னிப்
பாவரு நீர்சு வானு பவத்தினை மேவ வேண்டுந்
தாவற வெனலுங் கேட்டு நால்வருந் தாளில் வீழ்ந்து.　(௪௮)

நாதனே யெமக்கு நீரே ஞானசற் குருநான் ஞமிப்
போதுப தேசஞ் செய்க வென்னலும் பொருந்து சீலர்
மேதகு மூபதே சஞ்செய் திடவிவர் மேவிப் பின்பு
சாதுசற் குருவே சொல்லச் சமைத்தனர் ஞான தேவர் (சுகூ)

(வேறு) தமதுசுவா னுபவமா மமிர்தானு பவமெனுஞ்சாத் திரத்தைப் பின்பு
நமவென்று மாளசா தேவியா லயத்திலரி நாமஞ சொலலிக்
கமவறிவோர் நடந்துசென்ரு ராலயத்தி னருகிறந்த கரும்ப கட்டைச்
சமமுறவே சமாதிசெய்ய மைசோபா வெனுமபெயர்தான் றங்கிற் றென்றும்.

(வேறு) முத்தா யிமொழிப் படிமுன் னிவாவாழ
அத்தா னமதா மளகா புரியைப்
பத்தா தரமோ பெயின் றனரால்
நத்தார் கரஞ மகவின் றவரே (ருக)

அவ்வூ ரினர்யா வருமங் கவர்தம்
மெய்வா சகமும் புரிமே தகவும்
செவ்வே வினவிக் களிசேர்ந் தவராய்த்
தவ்வா தெதிர்வந் துதழீ இனரே (ருஉ)

தழுவுற் றிவர்தம் மினமக் குளதோம்
வழுவுற் றிடுமென் றுமகிழ்ந் துறையப்
பழுதுற் றவிசோ பனெனும் பனவன்
கெழுமுற் றிலன்வே றுகிளத் துவனே. (ருங)

துறவுற் றவனுக் கிவரோ சுதராய்
முறைதப் பினர்தம் முகமுந் துறலோ
அறமெய்ப் பிழையா லிதடா நதெனக்
குறைசொற் றனஞ யிரகோ டியரோ. (ருச)

ஒருநா ளினிவர்த் தியெனும பெரியோர்
திருநே ரிளையா ளொடுசெப் புவரால்
அருமா மதுரச் சுவையப் பமுணத்
தருவா யெனவே தருதற் கிசைவாள். (ருரு)

மாவே முதலா யவெலாம் வருவித்
தேவே வவியற் றுறுமோ டுகொளப்
போவாள் குயவன் மனைபோம் வழியில்
மேவா தவிசோ பனுமே வினனே. (ருசு)

கண்டே யெதிரெய் துகருத் திலளாய்
விண்டே யொருபா னுறமே வுதலும்
பண்டே பழிகூ றுவிசோ பனெனே
அண்டா தெதிரே யயலா யினதே (ருஎ)

நீயெங் ககல்வா யதுநே ருதியென்
றேயங் கவனே திடவிக் குயவன்
வாய்நன் கடைசுட் டிடவல் லகலம்
ஈயென் றுகொள்ற் கிவணெய் தினனே. (ருஅ)

என்றுனை யெனக் குழுனெய் தினதால்
நன்று சுதறும் புனலா டிடநான்
சென்று லலதொன் றுசெயற் கிலதென்
றென்று முனிவோ டுரையா டினனே. (௫௯)

இனியென் முனரெய் தல்செயா யெனவே
நனியங் கைகொடெற் றிநடந் தமுனே
வனையுங் குயவன் மனைவந் திவளுக்
கெனையன் றியடுங் கலமீ குதியேல். (௬௰)

உன்னைக் கடிதா கவொறுப் பலெனப்
பன்னப் பரிவுற் றிவளும் படரா
மன்னத் தனியோ டுவழுங் குகெனப்
பின்னக் குயவன் பெறவீ கலனே. (௬௧)

ஈயா தமையால் மனையெய் திபரிக
ஆயா சமதா யழவப் பொழுது
பாயா றுபடிந் தறுஞா னபரர்
மேயா ரவண்வந் துவிஞு வினரே. (௬௨)

என்னீ யழுவெய் தியகா ரணமென்
றன்னூர் தெரியச சொலுமா யிழைதான்
மன்னு தரமற் றவிசோ பன்வலிந்
தின்னு புரிவுற் றதையன் றியினும் (௬௩)

அப்பஞ் சுடவோ டளியா தபடிஃ
செப்புங் குயவன் செயவுஞ் செய்தனன்
தப்பின் றெனவோ தினள்சா ளரவாய்
மெய்ப்பொன் றிவிசோ பன்விஞு விடவே. (௬௪)

அவனன் னதுசெய் தல்சுபா வமதற்
கெவமென் னையெனச் சொலினா னபரர்
தவனன் சுடலா கியசட் டியெனக்
கவனந் தருதம முதுகே கனல. (௬௫)

உதரக் கனலைப் புறமுய்த் தவராய்
இதனிற் சுடுவா யினிதப் பமென
விதனக் கொடிசுட் டுநிரப் பிவிராய்
அதனைத் தனதண ணருடன் மிசைவாள். (௬௬)

செய்யுஞ் செயலத் தனையுந் தெரிவான்
மெய்யொன் றுவிசோ பன்வியந் திதெனே
வையந் தனிலிங் கிவர்மா னிடரோ
ஐய மிலைமுத் தொழிலா ரவரே. (௬௭)

இத்தன் மையரா யினரிங் கிவரைச்
சித்தந் தெரியா துதிகைத் துளயான்
நித்தம் பலநிந் தைநவின் றனனே
எத்தன் மையினிற் பிழைதீர் வனெனு. (௬௮)

எண்ணிக் கடிதிங் கிவரைச் சரணம்
பண்ணப் புகுவே னெனவே பதிவாய்
நண்ணத் தெரிஞா னலக் கடவுள்
உண்ணக் கலனைப் புறமுய்த் தனரே. (சுகூ)

அதுகண் டவிசோ பன்வலிந் தவருண்
பதுகைப் பிடிபற் றிமிசைந் திடலுங்
கதுவுஞ் செயல்கண் டுபெருந் தெனநீ
இதுவுண் டனைகே சரியே கெனவே. (எ௰)

ஆங்கன் னதுகூ றவுணர்ந் தவனுந்
தங்கும் மவர்தா ளில்விழுந் துபணிந்
திங்கென் மயல்போ கவிசைத் தருள்வாய்
நன்கொன் றியஞா னசிகா மணியே. (எக)

என்னப் பரிபக் குவமெய் தியவன்
துன்னத் தெரிஞா னசுகோ தயரும்
பன்னத் தகுமென் றுபதே சபலன்
றன்னைப் பெறுவித் தனர்தம் மருளால். (எஉ)

(வேறு) இப்படி யிருக்குங் காலத் திணையிலா ஞான தேவர்
ஒப்பில்பண் டரியின் மேவி யுகந்தருள் பாண்டு ரங்கன்
றப்பிலாச் சேவை செய்து தாழ்ந்தபி னாமதேவர்
வைப்பதா மனைக்கு நேரே வரும்பொழு தெதிர்ந்த நாமர் (எங)

கரகம லங்கள் கூப்பிக் காசினிசை வணங்கி நின்று
தரணியி லெவரா யுமழுத் தரிக்கவொன் றவத ரித்துத்
திரமிகு கின்ற ஞான தேவரே யுமது பாத
தரிசனை கிடைக்க யான்செய் தவமென்ன தவம தாமோ (எச)

என்றனர் புகழக் கேட்டங் கெதிரவற்கு ஞான தேவர்
நன்றுமை நோவார் யாரே ஞானதாற் சிவன் முதலி
ஒன்றிய தெனினும் புவி லுளசேத் தலங்க ளெல்லாஞ்
சென்றதி லாடி நல்ல க்ஷேத்திரங் காணல் வேண்டும். (எரு)

ஆதலா லும்மோ டேக வமைந்துநான் வந்த திந்தக்
காதலை நீரே தீர்க்கக் கடவதென் றினிது கூற
ஏதமி னாம தேவர் யானென ததின மல்லேன்
கோதறு பாண்டு ரங்க னதீனத்திற் குலவு கிற்பேன். (எசு)

என்பது கேட்ட ஞான தேவர்நன் றெழிலி வண்ணன்
தன்புடைச் சார்ந்து கேட்கத் தரிலின்று கொள்ளுவ னென்று
அன்பரைக் கூய்க்கொண் டேகி யடைந்தனர் கோயின் மேவிப்
பொன்புகழ் கொழுநன் பாதம் போற்றினர் வணங்கிச் சொல்வார் (எஎ)

அமலனே கமல லோச னாபுய லாழி வண்ணா
கமலநா பாநின் சேவை கண்டுகொண் டிருக்கு நாம
நிமலரைத் தீர்த்த மாடு நெடுந்தல மெல்லாஞ் சென்று
விமலராய் வருக வென்றே டெனருள் விடையென் றோத. (எஅ)

கேட்டலும் பாண்டு ரங்கன் கிளர்ந்தெழு ஞான தேவே
வாட்டமி னுமன் நீர்த்த மருவாற் றலங்க ளான
ஈட்டமெல் லாநா னேயென் றிருக்கின்று னவனை யுன்பால்
கூட்டிநா னனுப்ப வெண்ணங் கூடிடா தென்செய் கேனே. (௭௯)

ஆயினுந் தீர்த்த மாடற் கவசர முனக்கென் னென்ன
மாயவ னுரைக்கக் கேட்டு வழுவிலா ஞான தேவர்
நீயருள் செய்த நாமர் நிமலரா யிருத்த லாலே
மேயவ ரோடு கூட விருப்புமிக் குளதெ னக்கு. (௮௰)

அன்றியுந் தீர்த்த மாடற் காவலு முளது நாமர்
ஒன்றற வருள்செய் கென்ன வொப்பிலாப் பாண்டு ரங்கன்
நன்றுபொன் னினைவிட்டாலு நாமனை விடுத்தற் கொல்லேன்
நின்றநின் வேண்டு கோளை நிரப்பவும் வேண்ட லாலே. (௮௧)

எனைவிட வேறே யாரு மில்லாத நாம தேவன்
றனைவிடா துடன்கொண் டேகித் தாபின்ன ரென்று கூறி
வினையறு நாம தேவே விடாதெனை யுணர்வுற் கொண்டு
வனைபல தீர்த்த மாடி வருகென விடைவ குத்து. (௮௨)

நாமதே வங்கை பற்றி ஞானதே வங்கை தந்தான்
தாமதைக் கண்க ளொல்லா ததுமபநீர் பெருகி வாரப்
போமவர்க் கிரங்கி யுள்ளம் பொருமினன் புலம்பி னைந்தான்
ஏமுறு ஞான தேய ரீசனை வணங்கிப் போற்றி. (௮௩)

சந்திர பாகை யென்னுந் தடநதி சார்ந்து மூழ்கி
வந்துபுண் டலிகர் தமமை யிருவநும் வணங்கி வாழ்த்த
மைந்துறு நாமா தம்மை வழிவிடக் கூட வந்த
செந்திரு மகடன் கோமான் றிரும்பினன் கோயில் சேர்ந்தான். (௮௪)

சேர்ந்தவன் கால்க ளெல்லாஞ் செந்துகள் படிந்த மேனி
வார்ந்துறு கணக ளிரின மயங்கிட வதனைக் கஞ்சம்
சோர்ந்துறு வதனைக் கண்டு துலங்குசெம் பூமேற கோதை
நேர்ந்திது வென்னே யென்னே நிமலசொல் கெனவி னவி. (௮௫)

பாதநா மனைவி ளக்கப் பாண்டுரங் கன்சொல் கின்றான்
தீதறு குணத்தி னவி வேறிலை யெனச்சேர்ந் துற்ற
ஏதமில் நாம தேவன் பிரிவேனும் விசிக மென்னைக்
காதலான் மிகவு நொந்து களைத்துளே னென்று கூற. (௮௬)

நாமனு மாரி வேண்டி நலங்கிய பயிரிற் சோர்ந்து
பூமிசை விழுந்து தொண்டர் பொலிவிலா திருத்தல் செய்யா
மாமலர் விழியி னனைத் தேற்றிட மயங்கித் தொண்டர்
தாமவ னுறக்கூய்ச் சொன்னு டாமரை மலர்மேற் செல்வி (௮௭)

நாதனைத் தேற்றச் சொன்ன நலந்தெரிந் தன்ப ரெல்லாம்
சீதள வுபசா ரங்கள் செய்திடத் தேறு நின்ற
மாதவன் றன்னை நோக்கி மாயவா வுனக்கிச் சோர்வு
போதரற் கென்ன வேது புகலுதி யென்று கேட்க. (௮௮)

உதித்தநாட் டொடங்கி யென்னை யொழிவிலன் சேவை செய்து
மதித்துள வன்பி ஞலே பிணித்தனன் மருவு நாமன்
விதித்துள தீர்த்த மாட மேவினுன் பசிதா கங்கள்
எதிர்த்துள பொழுதேன் செய்வா னெனத்தளர் கின்றே னென்ருன். (அகூ)

இன்னன மடியார் தேற்ற விருந்தனன் பாண்டு ரங்கன்
நன்னல ஞான தேவ ருடன்செலு நாமதேவர்
பின்னுற நோக்கி நோக்கித் தாய்தனைப் பிரிந்தபிள்ளை
என்னநெக் குருகிப் போற்றி யென்குல தேவே கோவே. (கூ0)

என்னுயிர்க் கிறையே யின்ப ரூபமே யெனைப் பிரிந்து
துன்னுகின் றனையோ வென்று சோர்வொடு ஞான தேவர்
பொன்னடிக் கமலந் தாழ்ந்து பணிதமெய்ப் போத மூர்த்தி
நன்னலப் பாண்டு ரங்கன் பிரிவுநா னணைய லாலே. (கூக)

உயிரெனக் குறுத லாகா துடனந்தப் பாண்டு ரங்கன்
செயிரில்பொற் சேவை தன்னைச் சேவிக்க வேண்டு நீரே
மயர்வறக் காட்டு கென்ன மாயனை மன நிதி னுளனே
உயர்வுறக் கொள்வ தல்லா லுளன்கொலோ விங்ங னென்ருர். (கூஉ)

சாதகப் பறவை மேக தாரையை வேண்டல் போல
நாதனைச் சகுணத் தன்றி நாடலே னென்று நாமா
ஓதலு ஞான தேவ ருலகக்கா ரணனை வேண்டித்
தீதற வசித்துக் கொண்ட திறலுளீ ரெனக்கன் ஞனே. (கூங)

வசியஞ்செய் வதற்குத் தக்க சாதன மார்க்கந் தன்னை
விசிதமா யுரைசெய் கென்று வேண்டலு நாம தேவர்
சுசிபெறு கற்ப கம்போ யுலோபனைத் தொடாநது வேண்டும
இசைவென வென்னைக் கேட்டீ ரெனினும்யா னறிந்த மட்டும். (கூச)

உரைசெயக் கேளு மென்ன வுரைக்கின்ருர் தனது தேக
வரையிலே வெறுப்பு மற்றச் சரீரங்க ளினில்வி ருப்பும
புரையறக் கொண்டு நானென் னகந்தையை முழுதும் போக்கித்
தரையிடை யிருந்துஞ் சேராத் தகையனுய்த் திருமா லன்பு. (கூரு)

தொடர்தலே சுத்த மான பசனையத் தொடர்ச்சி யின்றிப்
படர்தலிற் பயனென் ஞகும பருந்துவா கனன்றன் பாடல்
அடைவுடன் கேட்ட லேசி ரவணமா மவனை நெஞ்சிற்
றிடமுற வமைத்த லேமன் மனனமாந் திருமா லனறி. (கூசு)

வேறிலை தெய்வ மென்று விரும்பலே தெளிவா நாமம்
கூறுத லொடுபொற் பாதங் கூடலே 'பேரா நந்தம்
தேறிய விவற்றை யன்றிச் செப்புவ தெல்லாம் பந்தம்
மாறறு ஞான தேவே யென்றடி வணங்கிச் சொன்ஞர். (கூஎ)

அமுதமென் மாரி போல வவர்சொன்ன வதெலாங் கேட்டுத்
திமிரறு ஞான தேவர் திரிபுவ னங்க ளுள்ளும்
திமிரரி பத்தி யுள்ளோர் நாமரை நிகர்வ ரில்லை
சமரெனு நாமர் பத்தி நாதனே யறிய வல்லான். (கூஅ)

என்பன பலவும் பேசி யிருவருந் தீர்த்தந் தோறும்
அன்புட னாடு வாரா யத்தின புரியில் வந்த
பின்பரி நாமந் தன்னைப் பேசியே நாம தேவர்
முன்புறக் கண்டோ ரெல்லா மொய்த்தனர் பசனை செய்ய. (௯௯)

அதுதெரிந் தவ்வூ ராளு மரசனு மவிந்தன் வந்து
கதுவின னென்னே பாடல் கழறெனக் கேட்க நாமர்
மதுவிரி துளப மாலை வாழ்த்துகின் றேனென் றோத
வதையுறு பசுவுக் காவி வரப்புரிந் தனையே யானால். (௱)

நீயரி பசனஞ் செய்த னிசமல தாயி னுன்னை
மாய்வுறு வகையான் செய்வேன் வலிந்தென வுவிந்தன் கூறி
ஏயவுறப் பிழைக்கச் செய்தற் கெத்தனை செல்லு நாள்கள்
ஆய்வொடு புகன்று பின்ன ரத்தொழில் புரிக வென்ன. (௱௧)

வினவினர் நம்போ லாது விட்டலன் விரைந்துற் றாழும்
தினஞ்சில செல்லு மென்னச் சிந்தைசெய் தவிந்தன் றேற
நனைவிரி தாரோ யுய்ய நாலுநாள் வேண்டு மென்றார்
கனைகழல் வேந்தன் கேட்டுக் கடிமனை யதனுட் சென்றான். (௱௨)

நரபதி யகன்ற பின்னர் நாமதே வரியை யெண்ணிப்
பரமபா வனகா ருண்ணிய பக்தபா லனப வித்ர
முரகரி முகுந்த மாய முளரிசேர் நாப மாசுந்
தரசநாத் தனவை குண்ட சௌரிசஞ் சனந யாளா. (௱௩)

விடல பாண்டு ரங்க பூமேன் மின்மகிழ் கொழுந வேரி
மடல்விரி துளப வென்று வாழ்த்தினர் நாலு நாளும்
தொடையின்மே லிறந்து போன சுரபிதன் னிலையைக் கொண்டு
படர்படு கின்ற வெல்லாந் தெரிந்தனன் பாண்டு ரங்கன். (௱௪)

நாலுநாட் பகலி ராவு நயந்துள நாம தேவர்
வாலிய மனத்திற் றோன்றி வருந்தலை பசுவுக் காயி
ஏலவுண் டாகி நிற்ப தெழுந்துபா ரென்று பத்த
பாலனன் பிழைக்கச் செய்த படிகண்டு பரனைப் பார்த்து. (௱௫)

நீயிந்த நாலு நாளாய் நினைவின்றி யெனைம றந்து
போயினை யென்றோ வென்னப் புரவலன் றனக்கிப் போதே
மாய்வுறு பசுவுக் காவி வரச்செய்வே னெனச்சொல் லாமல்
ஏயினை நாலு நாளென் றியம்பிய வதுபொய் யாமல். (௱௬)

வந்துளே னினியிவ் வாறு வருந்தலை சங்கற் பத்தால்
சந்தத முனத தீனஞ் சார்ந்துள வென்மேற் றப்பு
நிந்தனை சொலவோ ணாது நீமகிழ் கென்று கூறி
இந்திரை கொழுந னேக வெதிர்நின்ற பசுவைப் பார்த்தார் (௱௭)

எவ்வகை பசுவுக் காவி யீவரென் றவ்வூ ரார்கள்
ஐவகை யொழிந்து சொன்ன நரபதிக் குணர்த்த வன்னான்
கொய்வகை யாற்றுண் டான கோவுயிர் பெறுவ துண்டோ
மெய்வகை காண்போ மென்ன வியந்தனன் விரைந்து வந்தான். (௱௮)

உயிர்பெற்ற பசுவைக் கண்டோ கோ விவர் தெய்வ மென்னுச்
செயிரில்பொற் சரணந் தாழ்ந்தா னிரண்டுள வூரா ரோடு
மயலறு நாம தேவர் மாண்புகழ் மிகக்கொண் டாட
நயமிக வரிநா மத்தை நவின்றுகொண் டிருந்தார் பின்னா. (௱௯)

அத்தின புரியை நீங்கி யங்கங்கும ரிநா மத்தைப்
பைத்தபல் பாடை யாரும் பகர்ந்தனர் பாடிக் கொண்டு
சுத்ததீர்த் தங்க ளாடிச் சுரநதி துளேந்தி ராமன்
மெய்த்ததீர்த் தனங்கள் பாடும் விசுவாநா தனையும் வேண்டி. (௱௰)

இங்கவோர் நான்கு காறுஞ் சிறந்தன ரிருக்க வவ்வூர்
தங்குறு கபீரர் வீட்டிற் றனியொரு நாளி ராவில்
அங்கரி தாசர் சேர வவர்க்கன்ன மிடற்கு வேண்டி
நங்கையார் கபீரர் பாரி யெண்ணினர் நள்ளி ராவில. (௱௰௧)

ஆவண மெல்லா மின்றி யங்கொரு வணிகன் மட்டு
மேவர விருக்கக் கண்டு மேவிய வரிதன் றாசர்க்
கேய்வன தருதி பின்ன ரீகுவன் விலையென் றோத
நீவளர் காம நீக்க நினைதியே லோர்வே னென்றான். (௱௰௨)

கேட்டவர் மலர்மென் மங்கை கேள்வனன் குமானென் றெண்ணாக்
கோட்டமில் மனத்தி றேநீ குறித்தவ ணினைவுக் கேற்ப
நாட்டநல் லுறுதி கூறி வேண்டிய நல்கப் பெற்று
வீட்டுளோ ரடுமூற் றீந்து மீளுவர் பதியை நோக்கி. (௱௰௩)

பின்விலை தருவ னென்று பேசுதல் மறந்து நீயென்
பொன்விலைக் காய நேர்ந்தி புணர்சியென் பதற்கு நேர்ந்து
முன்விலை யியா தெல்லாம் வாங்கிட முந்திற் றாதல்
மன்விலைக் காக வேக டைந்த நெட்டவ னடக. (௱௰௪)

தாசர்நீ யரிதன் றாசர் தம்பொருட் டிவ்வா றெய்ந்த
நேசமென் சொல்கே னென்று மகிழ்ந்தனா நிசியி ராவில்
வீசுறு துளிக ளுள்ளோ யுனைக்கொளெடு விகப்பல் யானே
பேசின வணிகன நன்பா லென்றனா பெயர்ந்தார் கொண்டு. (௱௰௫)

தோண்மிசை யினவரை நோக்கித் தொண்டருக் குதவி செய்த
மாண்வணி கன்ற னுள்ள மகிழ்வுசெய் தடைந்து யென்ன
நீண்மறு கடைந்து செட்டி கடையிடை நிறுவி மீண்டார்
காண்வர விரும்பி நின்ற வணிகன்கண் காண வந்தார். (௱௰௬)

வந்துள கபீர தாசர் மனைவியை வணிகன் கண்டு
மூந்துளைப் படியே வந்தா யளறுகால் முகந்தி டாமல்
எந்தவண் ணத்தா லென்று மகிழ்ந்தனன் வினவ வேழைச்
சந்தவார் குழலார் நீசெய் யுதவிக்குத் தளிர்த்தென் றோதர். (௱௰௭)

புயமிசைச் சுமந்து கொண்டு போந்தனர் விடுத்தா ரென்ன
நயமிகு செட்டி யோகோ நன்றுநன் றெனவி யந்து
பயமிகுந் தனுத பித்துப் பரிந்தனன் பற்பல் யோனி
வயமதாய்ப் பிறந்த லைந்து மனிதனா யுதித்தும் வீணே. (௱௰௮)

காமத்தி லழுந்திச் சான்ற கபீரர்த மனைவி யார்க்கு
நோமத்தை யிழைத்தே னந்தோ நுவலரும் பாவி யானேன்
யாமத்தில் வந்த வன்னை தெய்வமே யாரு மென்று
தோமத்தைப் பொறுத்தி தாயே யென்றடி தொழுது வீழ்ந்தான். (௱௰௯)

அன்னைநீ கபீர தாச ரடிமிசை யென்னை வீழ்த்தி
நன்னய வபய நல்க நவிலுதி கொடுபோ வென்று
பின்னரும் வணங்கச் செய்கை பிழையென வுள்ளம்பேர்ந்து
மன்னனு தபித்த போதே பவமெலா மாய்ந்து தீர்ந்த. (௱௨௰)

ஆயினுங் கபீர தாச ரன்புறச் செய்வே னென்று
கூயினர் செட்டி தானுங் குடும்பவன் மயலை நீங்கிப்
போயினன் கூட வில்லம் புகுந்துதா சரைப்ப ணிந்து
மேயின பிழைக ளெல்லாம் பொருத்தருள் விளைக்க வென்றான். (௱௨௧)

தொண்டரும் வணிக னுள்ளந் தெரிந்தனர் தழுவித் தூய
புண்டரீ கக்கை தன்னைத் தலைமிசைப் பொருத்தி நேயம்
கொண்டருள் செய்தார் செட்டி யரிபசனத்திற் கூர்ந்தான்
அண்டிய வன்று தொடடு நாமதே வனைத்துங் கேட்டார். (௱௨௨)

ஒருகபீ ருண்மை யெல்லா ஞானதே வுணர வோதி
இருவருமவரிருக்கு மில்லிடை வரலு மன்பு
பெருகுறவெதிரே வந்து வணங்கினா பெரிது போற்றித்
தருதவி சிடையி ருந்து சாற்றுவர் ஞான தேவர். (௱௨௩)

மிகநெடும் பாவ மெல்லாம் வீந்திட வுலகத் துள்ளே
சுகரொடுத் தவர்க ணீவீர் தோன்றினீ ரன்றே யென்ன
அகமகிழ் கபீரு நாம தேவரு மடிவ ணங்கப்
புகழ்மிகு ஞான தேவர் கபீரரைப் பொருந்த நோக்கி. (௱௨௪)

புண்டலீ கருக்கு நேயம் பூண்டொரு பாண்டு ரங்கன்
பண்டரி புரததிற் செங்கன் மிசையடி பதித்து நிற்றல்
கண்டுநீர் வருக வோர்கா லென்றலுங் கபீர தாசர்
விண்டதேள் மதியி லேகா தசித்தின மேவு வேன்யான். (௱௨௫)

(வேறு) என்றுகபீரரு மினிதிது கூறிட விருவோருஞ்
சென்றுக யாபிர யாகையி லாடினர் சீராமன்
துன்றிட யோத்திம துரையொடு கோகுல முந்துன்றி
நன்றுது வாரகை நண்ணினர் மீளுறு நாடன்னில். (௱௨௬)

மாமிகு செல்வசி றைந்துவ ளர்ந்துள மார்வாடர்
தாமுறை தேயம டைந்துள போதுறு தாகத்தா
லேமிக வாடின ரிருவரு மோர்கிண றிற்சென்று
காமுறு நீருண வழியிடை யாதுக ளைக்கின்றார். (௱௨௭)

ஞானந லோர்வரு நாமரை நோக்கினர் நவில்கின்றார்
நானறி வேன்லகி மாவதி னீருண நன்றென்று
மேனவி லுங்கிணற் றூடிழி வுற்றயம் வெய்துண்டு
பானமு வந்துண நீரறி கின்றிலிர் பண்டென்றார். (௱௨௮)

நன்றென நாமர்ந யந்தனர் பண்டரி நாதன்ருள்
ஒன்றுக ருத்துட ஞேமது சூதன வோராமா
என்றுமெ னக்கரு ளீசவி ரைந்திவ ணெய்துற்று
நின்றவெ னக்குறு தாகம தைத்தெறு நீயென்ருர். (௩௨௯)

அப்படி நாமர கத்துநி னைத்துள வப்போது
மெய்ப்புறு பண்டரி நாதன்ம லர்த்திரு மேனுட்டம்
வைப்புறல் செய்துமி னேயொரு நாமனை வாயாமல்
எய்ப்புற லாயின வின்றுது டித்தறி டத்தோளே. (௩௩௰)

என்னவ னுக்கவ ணெய்தின வோவென விடருறறு
மன்னின நாமர்வ ருந்தினர் தாகம தாலென்று
சொன்னசொன் மாறுமு னேதெரி வுறறெந்நா தோன்ருமும்
நன்னரு றும்புனல் பொங்கிவ ழிந்தன நாமாககே. (௩௩௧)

வழிபுன லுண்டும கிழ்ந்துள நாமர்தம வதனஙகளை
டொழியுறு கின்றில னுளமவ்ட லவ்கொரு முருபானமை
முழுதுல கும்பெறு மென்றுபு கழு னா முது நாணா
பொழுதினி மிர்ந்துவ ழிந்துள நீரபொலி யாயிபாறும. (௩௩௨)

நாமர்பொ ருட்டுறு சீர்குடை யததனு ன்மாதம
தாமதி லெயதுவா தாரணி யோரது தனைவிடடு
மாமதி யோரொரு நாமரு மற்றும்வ திந்துளள
தோமறு நீர்தொறு மாடினா வதரிதொ டார்துறறு. (௩௩௩)

பின்சக நாதம டைந்தனர் கண்ணபி ரானைககண
டின்சுக வாரிது ளைந்தன ரெங்குமெ நாநதாடி
முன்சிறை செய்துள சேதுவ டைந்தனர் மூழகபின்
மன்சிவ ராவிடை நாகந லீசனில் வநதெய்தி. (௩௩௪)

அரிபச னஞ்செய யாவரும் வந்தன ரானந்தம்
புரிபொழு தத்தின பூசனை செய்மறை யோர்போது
தெரிவழி யின்றிநி ஸறந்துள ராகிய சீர்கண்டு
பரிவுற லாகியு ரப்பினா மற்றவர் பாங்கேக. (௩௩௫)

அன்னவர் சொற்செவி கொண்டில ராயரி நாமத்தைப்
பன்னலு மங்கவர் சூத்திரர் நீயிப ரந்துறறு
மன்னுறு கூக்குரல் செய்வத டாதெமை மண்டுற்றுத்
துன்னினர் திண்டினிர் போமினெ னப்பல வுருசொன்னா. (௩௩௬)

கோயிலி லேதொட லாலொரு தீதிலை கொள்கென்று
வாயிலு ளோர்சொல மறையவர்நாமர்முன் வந்தெய்தி
நீயிர்பி னேசெலு மென்றுநி கழ்த்திட நின்ருரோ.
டாயினர் பின்புற நின்றரி நாமம தேசொலல. (௩௩௭)

இன்புட னுடினர் யாவரு முவணை ணி ருக்கின்ற
ஒன்பதி லக்கப தாகையி ழிந்தன வோமாயன்
அன்புறு மேலுல கூற்றவை யோடிவ ரானந்தப்
பொன்புனை மார்பனெ மெம்புகழ் போற்றுத லைக்கண்டு. (௩௩௮)

மழை பெய்தனர் வானவர் கண்டவர் பொறபெய்த
ராமரெ னககொரு நாதனி சைந்துள நாளெல்லாந
சீமறு மே துமு ருதருள செயது சிறபபினறி
ஏமந் டசன்மு னினறுபி னெயதவி சைதநதெனனே. (௧௫௯)

பாடலி டுததன னொறு பரிந்தனா பணபாக
நாடரி நனகுந யயபுற யவ லைட நாகேசன
மீடமா கோயினமு கபபி செயுறு பெடபோடு
நீடவெ கிாந்துதி ருமபின னுமாமு னேராக. (௧௬௦)

குடதிசை யாகிவி ளஙகின சநதி கோயிறகுள்
நடநவி னுமறை நனகுவி யாதுந வசசெய்கை
தொடாவுறல கனெடுநொ பூாருளா சறசனா சூழவுற்றுத்
திடமுட னேபுகழ ஞான ராசைகி டுககெனன. (௧௬௧)

மடமையி னுனவிழை கி ஈன யாவுமவ குககின்றுன்
விடலரும விட்டல னெனமகிழ வாயயி டியுஙகாறுந
திடமுடனேனெடு மாலைநெ டுநதுதி செயதுறறா
விடிபொழு தீசனை ப பபடு வேதியா வெளிவநதாா. (௧௬௨)

வநவா ருரியன மேன்முக மாகவும யாவாறே
நாதுபி லினமைம ககு தோபதி நாயாககாய
ம ா மேநிரி வாயய தோமெ யா றறு
மூா துறு ராழ ி னைககனு மெற மு மமையைததாா. (௧௬௩)

மினமய வொனபடி லககன ரு டகோடி மறறென்றி
னெனமைய னாபினா கனடுவி யநதுமு னெலவோரும
னனமைய நாமரு ா முக றெழுந டெ தாது
தனமைய தனறெனை ய ரய னுரழி ா ழவுறறே. (௧௬௪)

யாஙகளபி னை நடெ லாஙகமை செபடுகென வேநாமா
டாஙகின வாககுப சாரா எமபல வுநடெயதே
ஓஙகிய வாறள முனுசெயது பினயிலை யுஙகொணடாா
தீஙக று ராயா ருா ி ா வேணடினா செனருரே. (௧௬௫)

தாயை னைநதுரு கனறெ ா வேயிரு வோாதாமும
மேயினா பணடரி கோபுர மேனமுடி மேவககண
டேயவண வாதனை செயதொரு கோயின்மு னேயெய்தி
மாயனை யேபுசழ செயதுத மாகம றநதஙகே. (௧௬௬)

விழுமொரு ராமனை ஞானந லோதெளி மேவததாம்
தழுயின ராயரி சனவிட மேகொடு தாம்வநதாா
நழுவலி லாதந லனபுமி குநதுந யநதேற
வழுவறு நாமாவ ணஙகினா பணடரி மாறனனை. (௧௬௭)

பணடரி நாதனெ முநதெகி வநதுறு பரிவோடே
தொணடரை நன்றுத ரீஇன னுமாதொ ழுந்தோறும்
புணடரி கமபொரு வும்பத மீதுபொ ழிந்தாாகண்
மண்டிய நீரோடு நின்பிரி வினிவர வையாதி. (௧௬௮)

என்றவ ரைத்திரு மால்பிரி வுற்றனை யிதுகாறும்
இன்றிர வும்பக லுந்துயி லெற்கரு ரேசாலத்
துன்றிய துன்னையெ திர்ந்தபி னஃதுதொ லைந்துற்ற
நன்றினி நாமவெ னைப்பிரி யாதிவ ணண்ணென்றான். (௱௪௯)

தன்கள மீதுத யங்கிய தண்டுள வந்தன்னை
நன்கவர் தோளில ணிந்தவர் கண்ணின னீர்மாற்றி
மின்கவி னுங்கைக ளாலவர் மேனியின் மேனீவி
மன்கரு ணாகய னத்தருள் மேன்மிக வைத்துற்றான். (௱௫௰)

வீறுங வர்த்திந லோர்பின ரோடுவி சோபாவும்
கூறிய பண்டரி நாதன்வி ளங்குறு கோயிற்குள்
தேறிய நாமரி டம்புரி செய்கைதெ ரிந்தாதி
மாறனை யேத்தினர் நாமரை வந்தும தித்தாரே. (௱௫௧)

ஆகிய காலையு ருக்கும ணித்திரு வாலாத்தி
வாகுட னேகொடு வந்துசு பூற்றினள் நாமர்க்கு
நாகர்பெ ழிந்தனர் பூமழை நன்மைந வின்றார்மைம்
மேகநீ றத்தின ருமரை நோக்கிவி ளம்புற்றான் (௱௫௨)

ஆடினை தீர்த்தம தற்கிறு வாகிய தைச்செய்ய
நாடுதி யென்றலு நாமரு நன்றென நாதன்றான்
ஏடுறு தாமரை யாளிட நாமரை யின்பாகப்
பீடுட னேகொடு சென்றவ ளோடிது பேசுற்றான். (௱௫௩)

நாமனி யற்றிய யாத்திரை நல்விர தந்தன்னை
ஏமுற முற்றிட னன்றென விந்திரை யெங்கோனே
தூமன னாகியெ லாமற விட்டுனை யேசூழ்ந்து
காமுறு வோனெது செய்குவ னீயது காவென்றே. (௱௫௪)

மாமறை வேதியர் வந்துண வேசொலி மற்றெல்லாம்
ஆமள வாகவ மைத்திடெ னத்திரு மாலாஞ்ஞோன்
நாமர டிப்பொடி நண்ணிட முன்னவா நன்றாகப்
போமதி யற்றியொர் வேதிய னைப்பினர் போகின்றான். (௱௫௫)

சந்திர பாகைநெ டுங்கரை மீதுத யங்குற்ற
மந்திர வேதியர் தம்புடை வந்துவ ணங்குற்றான்
அந்தநல் வேதிய ரென்னென நாமாக னன்புள்ளேன்
வந்தவ னந்தனி யானென வந்தது ரைக்கின்றான். (௱௫௬)

இந்தந ணுமனி யற்றுறு போசன மெல்லோரும்
வந்துண வேண்டுமெ னச்சொல வம்மறை யோர்யாரும்
முந்துவ மென்னமு குந்தன டைந்தனன் மொய்கோயில்
இந்திரை கண்டனள் சித்திக ளெட்டையு மேய்கென்றாள். (௱௫௭)

வந்துள சித்திக ளெட்டும்வ ணங்கிவ ழாதொன்று
தந்தன யாவும மைந்தன பின்புத னுமர்க்கு
முந்தின மங்கள நானமு டிந்தபின் மொழிகின்ற
மந்திர மோதினர் வரிசைவ ழங்கினர் மலர்மின்னார். (௱௫௮)

பூடணை மாடைசு கந்தமு டன்புனை பூவோடு
சூடுதல் செய்தனன் மால்பொறி நாமர்து லங்கக்கண்
டாடின திட்டிக ழிந்திட வேயரு ளாலாத்தி
நீடவெ டுத்தலு நாமர்த மைத்தழீஇ நின்றான்மால். (௨௫௯)

ஞானந லோரொடு நால்வரு மற்றுள நல்லோரும்
தீனத யாநிதி செய்வகை கண்டுசி றந்தோங்க
லானந னாமரை நும்மென யாருள ரரிபத்தர்
ஊனமி லீரென வோதிமி கப்புகழ் வுற்றாரே (௨௬௦)

வேதிய னாகிய மால்பினர் வேதிய ரெல்லாருஞ்
சேர்தர லாகவ ழைத்தொளிர் கின்றசெ ழும்பீடத்
தாதர வாகநி றுத்திய லங்கிர்த மாகச்சேர்
பாதம்வி ளக்கியோர் பூசனை யுந்தனி பாலித்து. (௨௬௧)

பதமுறு நீர்பரு கிப்பொலன் மிக்கொளிர் பட்டாலே
இதமுட னன்குது டைந்நந லாசன மேறச்செய்
ததிமது ரஞ்செறி முக்கனி சர்க்கரை யப்பஞ்சேர்
விதவித வர்க்கமி கச்சுவை யின்கறி மேன்மேலும் (௨௬௨)

நெய்தயிர் பானமி ரச்செறி போனக நிறைவெல்லாம்
கைதவி ராதுப டைத்தவ ருண்பது கண்டார்வம்
பெய்தர நாமர்சங் கற்பச லந்தனி பெய்யச்செய்
தைதவர் யாவரு மமுதுசெய் திடும்வகை யையசெய்தான். (௨௬௩)

அந்தணர் யாவரு மமுதுசெய் தானபி னவர்கட்குச்
சந்தன கந்தசு கந்தவி ரத்தொடு தாம்பூலத்
தெந்தவி தங்களு முதவிய பின்னவ ரெல்லோரு.
முந்தம ரச்செய்து நீவிர்கள் காணநும் முன்னேயான். (௨௬௪)

அமுதுசெய் துதவுவ றக்கணை யென்றுபி னலர்மங்கை
தமியுத வோதன மிசையவி ருந்தொரு தன்னாமன்
நிமிர்சுவை யோதன முடனுண வெங்கென ரேடித்தான்
அமரதிரு வாயிலில் வந்தவ சந்தனை யறிவுற்றே. (௨௬௫)

தூக்கினன் வந்திடு தவிசிடை யேயவர் தொகவைத்து
நீக்கவி ளைப்பினை யவரது கண்டழ நெடுமாலும்
போக்கறு வீரமு துண்கென நன்குபு கன்றானாய்
ஆக்கிய நல்லமு தூட்டினன் வாயிடை யப்போது· (௨௬௬)

என்னொரு நாமநீ யேனமு கின்றனை யென்றானை
ன்னய மாகவ வன்பத மேற்றலை நண்ணச்செய்
தன்னபொ லன்கழல் பற்றியெ னாதநின் னருளென்றுந்
துன்னுபி றப்பிடை தோறும மைக்கதொ டார்ந்தென்றார் (௨௬௭)

மாலது கேட்டும கிழ்ந்துனை யென்றுமறக் கேனென்
றேலவு ரைத்தமு தூட்டிட நாமரு மின்பானார்
சாலமி சைந்தக லத்திடை யமுதொரு தானுண்டான்
கோலவி ருந்தபி ராமணர் கண்டிது கூறுற்றார் (௨௬௮)

சூத்திர னுண்டக லத்திடை வேதிய னுஞ்சோறு
வாய்த்திட வுண்பது வுந்தக வோவிவன் மறையோனே
ஈத்துள சோறினி துண்டிழி வுற்றனம் யாமின்று
சேர்த்துள தோஷநி வர்த்தியெ னேயென நினைவுற்றார் (ளசுகூ)

மிச்சினு கர்ந்தபி ரானொரு நாமரை மேவக்கொண்
டச்சுத னுமமு ரைத்தமர் வேதிய ரருகுற்று
மெய்ச்சவர் காலிடை யிட்டுள தக்கணை மேன்மேலும்
வைச்சினி தீவுழி யென்முகம் வாட்டம்வ குக்கென்றான் (ளஎ௰)

வேதிய னாகிய நீயொரு சூத்திரன் மிச்சிற்குச்
சாதக னாயின னென்னையி ழிந்தநீ தருகின்ற
ஓதன முண்டவெ மக்கது நேர்வகை யுண்டோவென்
றேதம டைந்தன மென்றனர் வேதிய ரெல்லோரும் (ளஎக)

பொய்கள வோடுபொ ருந்திய கட்குடி புன்காமம்
செய்கொலை செய்பவன் யாரெனி னுந்திரு மானுமம்
பெய்தரு வாயின னேலவன் மிச்சிலகள் பெரிதன்றே
எய்துவ தெவறினி துணடன னெனறன னென்னம்மான் (ளஎஉ)

வேதியர் செய்கையெ லாமற விட்டொரு மால்நாமம்
ஓதுவ னேலவன மிசசிலை யுணபது மேவாநீதம
தீதது செய்தனை ாவகை சுநதர பாகைக்குப்
போதுக வெனறனா மவநிப ா மாலரி புகல்கின்றான் (ளஎங)

சித்தம லஞ்செறி சுத்தம தாகித் திகழுவைரா
கத்தொடு சற்சங் கமதிடை கூடிக கவினார்மால்
பத்தியி னுமம் பகர்வுறின் முன்சேர் பவமெல்லாம்
மொய்த்துள திதெல் லாமற மூழ்கு முதனுனம் (ளஎச)

ஆதலி னீரே யறிஞாகள் சொல்லு மவையெல்லாந்
தீதற யானே செய்யவ குக்குா திறனெனனுப்
போதுக வென்று நாயாகை பறநி போதநதான்
வேதியர் சொன்ன வகைகநதி மூழ்கி விதிசெய்தான் (ளஎரு)

பின்னரை பீதாம் பரமது டுத்திப் பெரிதார்வத்
துன்வை வர்க்குத தானம ளித்தான் சொனவாறே
நன்னரெ னக்குச் சுத்தயவி ளங்க நனிசெய்தீர்
என்னவ ணங்கி நல்விடை பெற்றா னினிதாக (ளஎசு)

அன்பரு டன்கோ யிற்குள டைந்தங் கவரோடும்
இன்பொட ருந்திப் பின்விடை யன்பர்க் கினிதீந்தான்
முன்பொரு நார தன்கர வீணை முறைசாலப்
பொன்பத மீதிற் கும்பிடல் செய்து புகழ்கின்றான். (ளஎஎ)

அன்னவ னுக்குத் தன்கள மாலை யதைநல்கித்
தன்னக லத்துப் பொன்மணி மேவத் தழுவுற்றான்
முன்னிய பாமை தன்னிடம் வீணை முனிமேவத்
தன்னிவ ணங்கித் தவிசிலி ருக்கிச் சொலகின்றாள். (ளஎஅ)

அவ்வவ ரெந்தச் சாதிய ரேனு மதுதோரா
இவ்விட லன்றன தன்பர்க ளெச்சிற் கேக்குற்றுச்
செய்வகை நன்றே செப்புதி யென்னத் திகழ்வீணை
வவ்விய கையோன் பாமையை நோக்கி வகைசொல்வான். (௱எகூ)

கோமள மின்னே நின்திரு மாணிர்க் குணனுகி
நாமமு மின்றி நல்லுரு வின்றி நவையின்றிப்
பூமியி லுள்ளோ ருய்வகை ரூபம் பொலிவுற்றே
ஆமனு யிர்க்கன் பெய்திட லிவ்வா றயர்கின்றான். (௱அ௰)

ஆகலி னன்னு னுக்கொரு தோடமு மடைவுண்டோ
நீசரு தென்றே போயின பின்பந் நெடுமால்பால்
பாகன சொற்பொன் னெச்சில ருந்தல் படிநாமே
யோகமு றென்ன மாயன தற்கங் குரைசெய்வான். (௱அக)

தந்தையு டன்றாய் குருமனை மக்க டமரெல்லா
சிந்தையி லன்பா லல்லது வேறோர் நிலையில்லை
செந்திரு வேயங் கவர்கள்பொ ருட்டே செறிகின்றேன்
மைந்துற வென்சீர் வரவலி தறியார் மகியோரே. (௱அஉ)

இகபரம் வேண்டா ரெனையல தன்ப ரிதனாலே
அகமகிழ் வுற்றே யவர்பெயர் சொல்வே னதுவன்றித்
தகவவ ருருவுஞ் சிந்தனை செய்வே னவர்சாற்றத்
தொகுபணி யுஞ்செய் வேனிது வேயென் றுணிவென்றான். (௱அங)

(வேறு) இப்படித் திருமால் பொன்னோ டியம்புறு பொழுதிற் பானு
தப்பற வுதய மாகச் சார்ந்தனர் தொண்டரெல்லாம்
பொற்புறு கோயிற் குள்ளே புகுந்தரி பசனை செய்து
சிற்பரன் பதம்வ ணங்கத் திருநெடு மாலுங் கண்டு. (௱அச)

அன்னவர் தமைப்பக் கத்தே யமர்தரச் செய்து பொன்னே
னென்னல்யான் றோஷந் தீர்க்க நிற்புழி நேர்ந்து கொண்டேன்
நன்னயத் தின்று மன்ன நான்மறை யவருக் கெல்லாம்
இன்னமு திடுவே னென்ன வாதலா லியற்றல் வேண்டும். (௱அரு)

என்றவன் றன்னை நோக்கி யிந்திரை யிசைந்து சொல்ல
நன்றென மறையோர் தம்பா னணுகிவே தியரே நீவிர்
இன்றுமுண் பதற்கு நேர்வீ ரென்னவு மறையோ ரெல்லாம்
துன்றுது மென்றார் நாதன் கோயில் போய்த் துன்னி னனே. (௱அசு)

அந்தணர் தீர்த்தமாடி யடைந்தனர் கோயிற் கப்போ
திந்திரை கொழுநன் பார்ப்பா னெனச்சென்று தொழுது கூட்டி
வந்துபொற் பீடத் தேற்றி மலரடி கழுவு நீர்கொண்
டுய்ந்தன னென்று கூறி முறைமுறை யுபச ரித்தான். (௱அஎ)

அறுசுவைக் கறியோ டின்சோ றடைவுட னமுது செய்ய
மறுவறச் செய்துண் போது மாலரி நாமந் தன்னைப்
பெறுமொரு பிடிசோற் றுக்கும் பேசுக வெனலு மன்னார்
உறுதொறுஞ் சொல்லி யுண்டா ருண்டபின் சுத்தஞ் செய்து. (௱அஅ)

சந்தன கந்தத் தோடு தாம்பூல முதல பெற்று
விந்தையோ டிருக்க நாதன் வேதியர் தம்மை நோக்கி
அந்தணீர் சுதின மின்று மானதா லுமைச்சே வித்தேன்
உய்ந்தனென் பேரா னந்தக் கடலிடை முழுகி யுற்றேன். (௱௮௯)

ஆதலா லடிய ரோடிங் கியானுனு மளவு நீவிர்
ஏதமின் றிருக்க வேண்டு மென்றடி யாரக ளுக்குப்
பாதபூ சனைகள் செய்யப் பரிந்தனர் கண்ட நாமர்
நாதனே யெமைப்பூ சித்த னல்லதோ வென்ன நக்கான். (௱௯௰)

எனக்குமை யன்றி வேறே பெருமையின் றெனவி யமப
மனக்களிப் புறறுத தொணடா மருவியுண் பொழுது மாயோன்
வனக்கரத் தூட்ட வெசசில் தெறிததிட மடியின் மாற்றி
உனற்கரு மடிய ரெலலா முணபபினு மூட்டி னனே. (௱௯௧)

சிலர்க்குப சரித்த லெசசில் தெறித்திடிற் றுடைத்தல் செய்து
பலர்க்குமங் குபசரிககும பரமனைப் பாாததுப் பாாப்பார்
நலத்தகு நயிட்டி கததை நணணுவோன ருனு மல்லன்
வலத்தகு தவவி ராக மேவினோன் றானு மலலன். (௱௯௨)

மறையவன் றானு மல்ல னனசசிலா வருககச் சில்லோா
நிறைபரம் பொருளே யாகி நோதரு விட்டோ பாததான்
குறைவிலா வடியாக காகக கொணடுநன் மனித வேடம்
முறைமுறை தொணடு செயது முயலகின்ற விவன்மற றென்ன. (௱௯௩)

பகர்கின்ற வழனைக் கேட்டுப பணடரி நாதன் மிக்க
நகைகொணடு மிளிாநு ரீட நலா கொளுள டலஙக ளென்கு
புகர்கொணட தோள்க ளோநது பொருபடை பொன் பூணமார்பு
முகமின்னப் பொன்னி னுடை முயஙகுறப பொலிநதுநின்றான். (௱௯௪)

நின்றவவ் வடிவை நோககி நிறைமறை யவரோ டன்பர்
துன்றிய மகிழ்சசி கூாந்து தொழுதுகூத தாடலானார்
அன்றரி யவரை நோக்கி யகிலபிர பஞசமாயை
வென்றுதே காபி மானம விடுததெனை யேய டைந்தார். (௱௯௫)

அன்பெனுங் கயிறறிற் கட்ட லானநா னவர தீனம்
என்பதை யன்றி வேறே யிலையென மறையோ ரெல்லாம்
பன்பல வேத மெல்லாம் பதிதபா வனனென் றுன்னை
இன்புட னுரைப்ப தெங்க ளிடத்தின்று விளங்கிற் றென்றார். (௱௯௬)

பரமபா வனவின் றுன்னைப் பார்த்தது போல நேகம்
தரமுட லெடுத்த போதுந் தயஙகயாம் பார்த்தல் வேண்டும்
திரமுற நினது நாமஞ் செப்பவும் வேண்டு மிந்த
வரமருள் கென்ற வநத மறையவர் தம்மை நோக்கி. (௱௯௭)

சிரித்தருள் செய்தன் னுரைச் சேர்த்துமார் பழுந்தப் புல்லித்
திருத்திய ஞானதேவர் சேவடி யடைந்து நீவிர்
பரித்திர் மெய்ஞ் ஞான மென்று பகாந்தனன் பகரக் கேட்டோர்
விசித்தது புரிது மென்று வணங்கினார் மீண்டு மீண்டும். (௱௯௮)

ஞானதே வேநீ ரிந்த நான்மறை யவர்கட் கெல்லாம்
ஊனமி லுபதே சஞ்செய் தருளுக வெனவு ரைத்தான்
சானகி ரமணன் ஞான தேவருந் தாள்வ ணங்கி
ஈனமில் சொரூப சாக்ஷாத் காரத்தை யெல்லோ ருக்கும். (௨௱௬௧)

இதவுப தேச மாக வியம்பினர் தலைமேற் கைவைத்
துதவிய பொழுதெல் லோரு முற்றன ரக்ஷ யத்தை
நிதமரி பசனை செய்து நிருமலன் றனைச்சே வித்து
நுதலிய தடைநீ ரென்று நுவன்றனர் ஞானதேவர். (௨௱)

சிறிதுநாட் சென்ற பின்பு சீர்கொள்விட் டலன்பாற் சென்று
நெறிதரு மவன்றன் பாத நேர்நின்று வணங்கித் தேவா
அறிவுற வெனக்குத் தஞ்ச மாகநற் சமாதி நல்கென்
றுறிதிகொ டுரைப்பக் கேட்டங் குணர்ந்துவிட் டலன்சொல் வானல் (௨௱௧)

எனக்கரும் பிராண னாகி யிருக்கின்ற ஞான தேவா
உனக்குவேண் டியதை யானே யுதவுகின் றேனென் றோதி
மனக்கித மாக மிக்க மங்கல சுபதினத்தில்.
தனைத்தொழுந் தாச ரெல்லாஞ் சார்ந்திட வரவ ழைத்து. (௨௱௨)

கீர்த்தனம் பலவும் பாடக் கிளர்திரு விழாவுண் டாக்கிச்
சீர்த்தநல் லுண்டி யாதி செயுஞ்சிறப் பெல்லாஞ் செய்து
தீர்த்தரா கியசா துக்கள் சேர்வுறீஇ ஞான தேவர்.
போர்த்தினி தாகச் சூழ்ந்து போந்திடத் தானும் போந்து. (௨௱௩)

இந்திரா யணிக்கூ லத்தி லியலளிங் கியெனு மூரில்
வந்துசித் தேசு ரன்றன் வளர்திருக் கோயின் மாடு
பைந்துண ரார ஜாநு பாதவத் தடியி னின்று
செந்திரு நாதன் யார்க்குந் தெரிவுறச் செப்பு கின்றான். (௨௱௪)

கார்த்திகைத் திங்கண் மேவுங் கண்ணப க்ஷத்தி லோங்குஞ்
சீர்த்திசே ரென்றி னத்திற் சேர்வன்யான் வருடந் தோறும்
தீர்த்தமா மிங்கென் றோதத் தெரிந்துள சனக ராதி
மூர்த்தியா முனிவ ரோடு முந்தரி தாசர் சூழ்ந்து. (௨௱௫)

ஹரிதிரு நாம கோஷ மார்த்திட வாத்தி யங்கள்
புரிவுற முழங்கத் தேவர் பூமழை பொழியக் கண்ணன்
திரிபிலா துணர்ந்த ஞான தேவர்க்குச் சமாதி தந்து
பரிவினு ளங் குற்றுப் பண்டரி புரத்தைச் சார்ந்தான் (௨௱௬)

சிற்சில நாள்க ளங்குச் சென்றபி னமதேவர்
பொற்புறு ஞான தேவர் பொருந்தரும் பிரிவி னாலே
அற்பக லனுத பித்தா ராகிய செயலைத் தேர்ந்து
விற்பொரு விமானத்தேறி மேவினர் ஞான தேவர். (௨௱௭)

வந்துவிட் டலனை நேரே வணங்கிப்பின் னமதேவர்
முந்ததி சயிப்பக் கண்டு மொழிந்தவர் மனவ ருத்தம்
பிந்துறப் புரிந்தங் காறு பெறுமதி யிருந்து போந்தார்
அந்தமில் லவரைத் தியானிப் பவர்களுக் கருள்செய் துற்றார். (௨௱௮)

இவ்வித நிவிர்த்தி தேவர்க் கினிதுதிரி யம்ப கத்துஞ்
செவ்விய வியற்சோ பான தேவர்க்குத் தகுதி யாக
ஒவ்வுசம் வச்ச ரத்து முவந்திடச் சமாதி தந்தான்
திவ்விய நலஞ்செய் பாண்டு ரங்கனுந் தீர்த்தன் மாதோ. (உ௱௬)

ஞானதேவர் திருவடிகளேசரணம.

ஆக சரித்திரம் ௬-க்கு செய்யுள் ௨௱௩௰௬.

முற்றிற்று.



கூர்மதாசர்சரித்திரம்

சூரியன்றனித் தேர்விடு தொன்மையர்
நேரில் மாலரி நாமநி னைப்பினர்
ஏரி லேய்பிர திட்டான மென்பதோர்
ஊரில் வேதியர் சாதியி லுற்றனர். (௧)

ஏர்கொள் கால்களி லாமற் பிறந்தவர்
கூர்ம தாசரெ னப்பெயர் கொண்டிடச்
சார்வ தாகியத் தாய்தந்தை தம்வயிற்
சீர்சி றந்திடச் செல்வர் வளர்ந்தனர். (௨)

சீர்த்த தானவவ் வூரிற் சிறந்தரி
கீர்த்த னங்கள் கிளத்துகின் றோர்வயின்
ஊர்த்த டைந்தன ருத்தம நாமத்தி
லார்த்த வன்பின ராகி யனுதினம். (௩)

கேட்டு வந்தனர் கேட்பதிற் பண்டரி
நாட்டு மான்மிய முந்நவில் வோர்களால்
ஈட்டு மின்பத் தழுந்தி யிருகரம்
கூட்டிக் கும்பிட்டுக் கூறத் தொடங்கினர். (௪)

தொடர்வின் விட்டலன் மெய்ப்புகழ் சொல்லுவீர்
முடவன் பண்டரி போக முடியுமோ
கடவ தென்னெனக் காருத்தன் முசர்கள்
திடமெ லாமுளேம் யாங்கள்செல் கின்றிலம் (௫)

நீசெ லற்கெங்ங னேருமென் றேநகை
தெசு றப்புரிந் தாரது தேர்ந்தவர்
மாச றுத்தொளிர் மாதவன் பண்டரி
நேச மிக்கது நேர்வதின் றேயெனு. (௬)

அனுத பித்தங் ககன்றனர் சின்னெறி
நனிந கழநதுந லந்திகழ் மாருதி
சினக ரத்துத தெறும்பசி தாகத்தால்
மனமி ளைத்துவ ருந்திவி ழுந்தனர். (௭)

சிவ ரட்சக னேதிகழ் பண்டரி
மேவு முதத்தம னேயினி வேறிலர்
காவல் செய்பவர் நீகளை கண்ணதாய்
ஆவல் கொண்டெனை யாண்டிட வேண்டுமே. (௮)

என்று தோத்திரஞ் செய்தன ரோத்தலும்
நன்று பண்டரி நாதன யந்தனன்
ஒன்று வேதியனுகியங் குற்றனன்
நின்று நீயெங்கு நேருதி யென்றனன். (௯)

பண்ட ரிக்குப படரும கருத்துளேன்
அண்டி னேனென வன்னவர் கூறலும்
தொண்டல் வணணனுங் கூடி னதுதுணை
மண்டெ னக்கென மாமகிழ் கொண்டனன். (௰)

எய்துங் காலில னுகிய வென்றுணை
நொய்து மற்று நுமக்கிய லாததே
ஐது நும்பெய ரேதுரை யீரென
வெய்தில் விட்டல னென்பெய ரென்றனன். (௰௧)

இன்னும பண்டரி யிற்கடை வைத்துளேன்
துன்னு கின்றன னங்குத் தொடர்ந்துமை
நன்னர் மெல்ல நடப்பவன் யானென
மன்னு கூரும தாசர் மகிழ்ந்தனர். (௰௨)

அட்டுப் போனக மன்பினீ ருண்டிட
இட்டுப் பண்டரி யெய்து மளவுநான்
முட்டில் லாமலி யற்றி முயங்கிடம்
கிட்டு வேன்முந்தி யென்று கிளத்தினுன் (௰௩)

அன்றி ராவவ ரோடு மமர்நதுகீழ்
என்று தோன்றுமு னேயெழுந் தேகுதீர்
குன்றி டும்வழி யீதெனச் சொல்லியே
சென்று பேரச்செய்தேமறை வாயினுன் (௰௪)

தாசர் தாமுந் தவழ்ந்தொரு தங்கிடம்
தேச றுங்கதிர் பாடுறச் சென்றனர்
நேச ஞானதி மலனு மவ்விடத்
தேசி றந்தவந் தின்னமு தூட்டினான். (௰௫

வாவி சேரி வசதியில் லாவிடம்
மேவி லங்கவர் மேவவு மைத்துடன்
தாவி லாமதி நான்கு தவழ்ந்தவர்
ஆவ லோடு லகுளையை யண்மினர். (௰௬

அன்று கார்த்திகை யான தசமியாய்
நன்று நாளை யேகாதசி நண்ணிடச்
சென்று சேருவர் செல்லுவோர் பண்டரி
என்றி யான்செல்வ தென்றுளத் தேங்கினா. (௰௭

கண்ணனே முகில் போலுங் கருநிற
வண்ணனே பொன் மகிழுங் கொழுநனே
எண்ண னேரு மிறைய வனேயுனை
நண்ண கிற்கில னேயு நானரோ. (௰௮

என்செய் கேனென் திருகரங் கூபபியே
முன்செ றிந்தவர் தம்முன் மொழிந்தனர்
பொன்சி றந்த புகர்நிறத் தெம்பிரான்
தன்சி லம்படி காணுந்தகவிலேன் (௰௯)

ஆத லாலிவ் வனுதன் மிசைத்தயை
மாத வன்செய்திங் கேனும்வந் தன்புடன்
தீதில் சேவை தரும்படி செப்புவீர்
போது வீரென நன்றென்று போயினர் (௨௰)

ஞான தேவர் முதலிய நால்வரோ
டான நாமரு மந்தவி சோபரும்
கான மோடரி நாமங் கழறியே
ஏனை யன்பர்க ளோடினிதாடினர் (௨௧)

பாண்டு ரங்க னவர்தமைப பார்த்தருள்
ஈண்ட வேயெனக் கின்னுயி ராமிந்த
மாண்ட ஞானநன் மாதவர் முன்னவர்
பூண்ட தானவி ராகப் பொருப்ப்ரோ (௨௨)

ஆன்ம போதக ராயருள் கின்றசோ
பான தேவர்வி சோபர்பண் பாகிய
ஞான யோகிய ரானநல் லன்பரோ
டூன மில்லவ ரொன்னவு ணர்த்தினன் (௨௩)

எனது நாமஞ்சொல் வோர்களி லேமிகு
கனமு லாவிய காரண நாமர்க்கு
தனிநல் லன்புட னுமை நவில்வதால்
இனிது நாமதே வென்னத் தகுமெ௱ (௨௪)

அவரை மார்போ டணைத்துக்கொண் டானந்தம்
இவரு போது லகுளை யிருந்துமா
தவனன் றுமத்தை சாற்றிக்கொண் டேமிக
நவநல் லன்பர்கள் நண்ணினர் கோயிற்கே (உரு)

வந்து மாதவன் பாதம்வ ணங்கினார்
சிந்தை யன்புமி கச்சிறந் தேத்தினர்
முந்து கூர்மர் மொழிந்ததை யெம்பிரான்
விந்தை கூர விளம்பினர் வேண்டினர் (உசு)

வினவி மாதவன் மிக்க விரைவுடன்
தனது பானின்ற தண்ணளி நாமமை
அனக ஞானநல் லோனைமிக் கன்பொடு
நனிவி ரும்பினன் நோக்கி நவிலகின்றான் (உஎ)

கூர்ம தாசன் குறித்தெனைக் காணவே
ஆர்வ மிக்குள ஞதலி னீவிரும்
வாரு மென்றுட னேகொடு மன்னினன்
சாரு நாமர் தமைவிளை யாடவே (உஅ)

எண்ணி யவ்வழி யவ்விரு வோரையுங்
கண்ணி யொன்று கழறுகின் றன்மறை
நண்ணி நாளு நடங்கிளர் கின்றதாள்
மண்ணின் மீது வரவலி தாகவே. (உகூ)

மிக்க தாக விரும்பினன் யான்புனல்
புக்க துண்டு வருமள வும்புகுந்
திக்கடைக்க ணிருத்தி ரெனச்சொலித்
தொக்க தோர்கொடிப் பாதையிற் றுன்னினன் (௩0)

சாவந் தியாமேள தாச ரரிபெயர்
ஓவதின்றி யுரைத்துக்கண் மூடியே
மேவு மெய்யவ சத்தொடு மேவிய
ஆவ யிற்சென் றவரை யுணர்த்தினன் (௩க)

அவர்வி ழித்தனர் நோக்கின ரையன்றன்
நவவி சித்திர நண்ணிய மேனியை
உவமை யற்றநீ யென்னுழை யும்வரத்
தவமி ழைத்ததென் ஞேவென்று சாற்றினர் (௩உ)

தழுவித் தாள்களிற் றழ்ந்துமெய் யன்பினில்
முழுகி நின்ற வவர்முக நோக்கியே
அழிவி லோருரை யச்சுதன் கூறுவான்
வழுவி லீர்நான் வருவழி தன்னிலே (௩௩)

இருவர் சோர ரெனைத்தொடர் கின்றனர்
வெருவி யுன்வயின் மேவின னீயெனைக்
கரவு செய்கெனக் கண்ணிச் சிறிதுபோ
திரவி தன்னையெங் கேயொளிக் கின்றதே (௩௪)

அண்டம் யாவும் வயிற்றி னடக்கிய
கொண்ட லேயுனை யெங்குக் கொடுசென்று
கண்டி டாவகை செய்வது காணென
விண்டு ஞானம் விளம்பலிப் போதேனே (௩௫)

வினாவி லென்னை மறைத்தியென் றேவிளம்
புனாவி னுவி யுசாவின ருள்ளத்தைப்
புனாத புத்துப் பொதிவதல் லாலொரு
தனாயி லேயென்று தன்றனி மார்பையே. (௩௬)

போழ்ந்த போது புகுந்தனன் மார்பிலே
வாழ்ந்தி ருக்க வயங்கு கொடிகளாற்
சூழ்ந்து சுற்றித் தொடுத்திருந் தார்வயின்
ஆழ்ந்தி ருந்தவ னங்கறை கின்றனன் (௩௭)

மெள்ள விந்தநல் வேலையி லேசெய்த
எள்ளி லாவுப காரத்துக் கென்செய்வேன்
வள்ள லேயொர்கை மாறிலை மற்றென்றான்
உள்ளமேவிய வொண்பொருளானவன். (௩௮)

ஆரவெங்கு மமர்ந்துமென்னுவிக்கா
தாரமான தயாநிதியேயெனை
நேரநின்றதற்கேதுநிரப்புவென்
சேரவென்று தியானித்திருந்தனர். (௩௯)

அங்கிருந்தவரான நன்னுமர்தாம்
எங்குப்போயின னெம்பெருமானெனுத்
தங்குகின்றிலர் சார்ந்தவன் வந்திலன்
பொங்குகின்ற நெடும்பொழுதாயிற்றே (௪௰)

என்றுமற்றவனெய்தடி நோக்கியே
சென்றிச்சாவந்தியாமேளர்சேரிடம்
நன்றுதாழ்ந்திங்கு நண்ணியநாதனை
ஒன்றிக்கண்டதுண்டோவென்றுரைசெய்தார (௪௧)

மோனமொன்று மொழிந்திலராயுற
லானபோதிவர் மார்பிலமர்ந்தனன்
பானம்வேண்டும் பரமன்றனையிவர்
தான்விழுங்கிய தெப்படித்தானெனு (௪௨)

காணுனது கரந்தனையாயினி
யாணரிப்பொழுதேயுயிர் மாய்வன்யான்
மாணவந்தெனைக்காவெனமாதவன்
எணகத்துளே னெவ்வகை யெய்துவேன். (௪௩)

என்றுமெள்ள விசைப்பதுகேட்டனர்
கன்றிமெத்தக்கதறியழுதனர்
துன்றியுள்ளுறை சோதிதனைக்கொண்டு
நின்றதாசனா நோக்கிநிகழ்த்துவான். (௪௪)

என்னைக்கண்டிலனாகி யிந்நாமன்றான்
மன்னப்பட்டனன்றுன் பத்தில் வைத்தநீர்
நன்னர்க் காட்டுதிர் நாமன்றனக்கெனை
என்னக்கேட்டவா நாமர்க்கிசைக்கின்றார். (சரு)

வருந்தன்மின்னென மாலுக்குநாமர்க்கும்
பொருந்துதண்ணளியுமனபும பொங்குதல்
தெரிந்துமற்றவர் தேறவவிழுத்தனா
வரிந்திருந்த கொடிகளை மால்வந்தான். (சசா)

கண்டுநாமா கனிந்துகழல்பற்றிக்
கொண்டு நின்றனர் தம்மைத்தழீ இக்கொடு
தொண்டர் கண்ணீர் துடைத்துத்திருத்தினன்
அண்டி டந்தந்த வன்னவரோடுபின். (சஎ)

ஞானதேவரு நாமருஞ்சேரவே
ஆனகூரும தாசரகத்துறத
தானினைந்து தழீ இக்கொடுசார்ந்தனன்
மேனிகழ்ந்தலருளை விமலனே. (சஅ)

சார்ந்தசேதியைக் கூருமதாசரும்
நேர்ந்துகண்டு நெடிதுபணிந்தன்பு
கூர்ந்துதோத்திரஞ் சொல்லிக்கொண்டாடினார்
ஆர்ந்த நான்குகையாலுமணைத்தனன். (சக)

யாது நல்வரம்வேண்டு மெனச்சொல
மாதவன்றனை நோக்கிமகிழ்ந்திவண்
நீ தயங்கி நிலாவுகநாடோறும்
காதலோடெனக்கட்டுரை செய்தனர். (ருய)

பாண்டுரங்கனு நன்றெனப்பாங்குடன்
ஆண்டும்பண்டரி யாகவமர்ந்தனன்
வேண்டுவண்டு விரிச்சிகமாமதி
ஈண்டுகின்ற வெகாதசிதன்னிலே. (ருக)

லகுளைதன்னினு நல்லன்பர்யாவரும்
மிகுவிருப்புடன் வேண்டிவிமலனைத்
தொகுதிகூடித் தொழுது துதிசெய்வார்
தகுவதாகத் தனிநடஞ் செய்தரோ. (ருஉ)

கூர்மதாசர்திருவடிகளேசரணம்

ஆகசரித்திரம் (எ) க்குச் செய்யுள் (அகக)

முற்றிற்று.

ராகாகும்பார் சரித்திரம்.

வயிராக சிரோன்மணியாய் வருராகா கும்பாராசாம்
செயிாதிருங் குசராத்தி தேசத்திற் சோகுயவா
பயில்வாழ்க்கைத் துணையான பாங்காபா யிமனைவி
உயிர்போலு மகள்வங்கா வுடனேபண டரிவாழவா. (க)

நவபாண்டஞ் செய்துவிற்று நண்ணுவதால் சீவிபபார்
உவமையிலா வரிநாம மோதிவெகு நாள்வாழநதா
தவநேயத் தொவொழ்வு சார்ந்தவொரு நாடனிலே
அவர்புரிந்த பச்சைமட்பாண் டங்காய வதுதனிலே (உ)

ஓர்பூனை மூன்றுகுட்டி யீன்றதனுள் ளேவைத்து
நேர்பாலங் கிரவுபக னேயமுற்று நோந்தளிதது
சார்போதி விரைக்காகத் தான்பிரிந்த காலததில்
ஆர்சாலைச் சுடும்பாணடத் தொடுகூட்டி யழவிட்டாா. (ங)

குட்டியிருப பதுதெரியாக் குயவரழல் மூட்டிவிடக்
கிட்டியது தாய்பபூனை குட்டிச்சால் கிடையாமல
மட்டறுதன் பத்துடனே வலிந்தழுது கத்துதருன்
சுட்டிடுசூளையிலிருந்த குட்டிசெவி களிற்றெடா. (ச)

கேட்டவையுங் கத்தவது கேட்டிதுவுங் கத்தவங்ஙன்
மாட்டியரா காதெரிந்து வயிற்றுமுகத் திலுமோதி
நீட்டுதுய ரொடுமனைவி முகநோக்கி நேயமிக
நாட்டுகுட்டி யிருப்பதனை நான்றெரியா தேயிட்டேன். (ரு)

சூளையின்மட் சாலதிலே யிருந்துகுட்டி படுதுயரும்
கோளையுணர் மார்ச்சாலத் தாய்புணருங் கொடுந்துயரும்
வேளையருள் பாண்டுரங்கன் விலகவருள் செயவேண்டும்
வாளையிலேய் கண்மடவா யெனவருந்தி மயங்கினர். (சா)

எரிந்துறுசூ ளையைச்சூழ்ந்து வரும்பூனை யிசைகேட்டும்
பரிந்துவிழும் பதிதுயரைப் பார்த்தும்பாங் காபாயி
கரிந்துவிழுங் கொடிபோலக் கதறியழு துடன்வீழ்ந்தார்
தெரிந்தருளப் பாண்டுரங்கன் றிருவடியை நினைந்தழுதார். (எ)

பண்டரிநா தாபக்த பாலனருக் மணிரமண
அண்டியபாண் டவூரரக்கு மாளிகையி லவியாதும்
தொண்டர்பிர கலாதரெரி துளைந்துமடி யாதுமருள்
புண்டரிக நயனத்தாய் பூனைக்குட்டி களைக்காப்பாய் (அ)

காப்பாயே லினியிந்தக் கடுந்தொழிலாஞ் சுடுந்தொழிலை
நீப்பாவே னெடுமாலே யெனவேண்டி நெடுங்கண்ணீர்
வாய்ப்பாக மனைவியொடு புரண்டுமண்ணில் வருந்தியரி
பேர்ப்பாடல் புரிந்திருக்க விரண்டுநாள் பின்னிட்டு. (சு)

மூன்றுநாள் நெருப்பாறி முடிந்தபின்பு குட்டிகளும்
தோன்றுதுள் ளிருந்துகத்தச் சூழ்ந்துறுபூ னைபுங்கத்தச்
சான்றுரு மனைவியருஞ் சார்ந்தோடித் தாம்பார்க்கக்
கூன்றுழி வேவாதொன் றிருந்தகுட்டி களைக்கொண்டு (எ)

கண்டுமிகு களிகூர்ந்து மூன்றுநாள் பால்காணு
தண்டுகுட்டி களைநோக்கி யனுதபித்துப்பாண்டுரங்கன்
மண்டுதயை புரிந்ததனை மனத்துணர்ந்து தாமிகவுங்
கொண்டகொடுந் துயர்கடிந்தா ரவைகண்டு கொண்டோரார் (கக)

இருவர் பத்தி தனை வியந்தா ரித் தொழிலை விடுவெனென்று
திருமகளு யகனறிய வேண்டியதாற் றீர்துமென
மருவியவத் தொழில் விடுத்து மறையவர்க்கெல் லாமளித்துத்
தருவிறகு காட்டில் விழுந் தவை திரட்டித் தாங்கொண்டு (யஉ)

விற்றதிதி களுக்கீந்து மிகுந்த வற்றைத் தாமுண்டும்
நற்றுறுபண் டரிவாழு நாதனது திருநாமம்
சொற்றுறுகுப் பையிற் கிடக்குங் கிழிந்ததுணி களையெடுத்து
முற்றுறமூ டுவர்மானந் தெரிவதனை மூதுரார் (யரு)

பார்த்துலகத்தவர் தெய்வம் பரவிமகன் பொருள்வேண்டல்
தீர்த்திவர்கள் வேறேயோர் சிவனுக்காத் தொழில் மறுத்துக்
கூர்த்தசெய னன்றென்று குறித்துமிகக் கொண்டாடச்
சீர்த்தவொரு நாள் வங்கா வீமநதிக் கரை சேர்ந்தாள் (யச)

அப்புனலி லுமதே வருள் புதல்வி யாடை தனைத்
தப்பினளங் கிருக் கவங்காத் தான் மூழ்கிப பூசைசெயத்
துப்புடன்மற் றவள் துவைக்குந் துளிதெறித்து மேற்றூவ
இப்படி நீ தப்புவது மியல்போ சொல் லெனவவளும் (யரு)

பாண்டுரங்கன் றனைவேண்டிக் காமியத்திற் பரிவுகொண்டு
வேண்டுகுலத் தொழி லதனை விடுத்து நெறி தப்பியலைந்
தீண்டுகுயச் சாதிகட்கு மேற்குமோ பூசையென
ஆண்டுவங்கா வுனது தந்தை யழுதுவிட்ட லன்றன்றல் (யசா)

செத்தபசுத் தனை யெழுப்பச் செய்ததுகா மியமலவோ
உய்த்துரைத்தி யெனவொருவர்க் கொருவர் மிக வாதாடி
மெத்தமுனிந் தவரவர்தம் வீடடைந்தார் நாமருந்தம்
சித்தமகிழ் கோயினின்று திருமனைமே வியபின்பு (யஎ)

ராகாகும் பார்பயந்த நற்புதல்வி யுமை மிகவும்
ஆகாத தூஷணைக ளறைந்தனளென் றவளுரைக்க
வாகான நாமதே வருளுஞ் சிறிதி யோசித்து
மாகாள முகிலனை ...... வளர் கோயில் மீண்டுவந்து (யஅ)

நாதா நின் னடியரெனும் ராகாகும் பாருன்பால்
நீதான காமியரோ நிறந்துளநிட் காமியரோ
யாதான தவர் கருத்தை யறைதியெனப் பாண்டுரங்கன்
மேதாவி யானவவன் விழைவறுநிட் காமியனே (யக)

எனநகைத்துப் புகன்றருள வெம்பிரா னவர் பெருமை
தனையெனக்குக் காட்டுகெனத் தானுருக்கு மணியுடனே
வினவியநா மனையழைத்துக் கொடுபோந்தான் விறகீட்டும
வனமதனி னடுப்பகலில் வந்துரா காகும்பார் (உய)

மண்ணிலுயிர் மாயாமல் மற்றவர்தந் தேவியொடு
நண்ணுவதுந் தனிவிறகு நாடுவது நனிதெரியக்
கண்ணிவந்த நாமருக்குக் காட்டவவ ரும்மிவரைப்
பண்ணுகசோ தனையென்னப் பதுமைகர கங்கணத்தை (உக)

ஒருபுறத்தில் கிடத்தியதன் மேலுலர்ந்த விறகதனை
மருவவைத்துத் தூரத்தே மறைந்திருக்க ராகாவுந்
தருவிறகு தனைத்தேடி வரும்போது தாங்கண்டார்
வெருவிமிகத் தூரத்தே விலகிநிற்க வேண்டுவார் (உஉ)

விறகுடனே கங்கணத்தை மேவியதம் மனையவளுக்
கறிவுறுத்த வேதோதி தாயிற்றென்றவர் வெருவி
அறவிலகி யப்புறத்தே யகல்வதுகண் டந்நாமர்
நறவொழுகு துளவினனை நன்றுபணிந் துரைசெய்வார் (உங)

கருணைவழி வுறுகண்ணு காகுத்தா நினதடியை
மருவுறுரா காகும்பார் மன்றநிச பத்தியுளோர்
அருளுதிநின் சகுணவடிவதைக்காண வெனவேண்டத்
திருமருவு மணிமார்பன் சிரித்தொன்று செப்புகின்றான் (உச)

நாணிந்த ராகாகும் பார் நடக்கை தனைச்சொன்ன
தானதுவோ வில்லையோ வறைதியின்ன முங்காண
மானநினை வுளதோசொல் லெனவுகுக்க மற்றையவர்
ஊனமிலா ராகாவுக் கொருவருநே ரின்றெனவே (உரு)

ஓவுறுசீ ருருக்குமணி யொடுநாம ரொடுகூடி
மூவரும்ரா காகும்பார் முன் வந்தங் கிருவருக்குந்
தாவிலருள் செய்து நிற்கத் தாள்பணிந்து சேவித்தார்
ஆவலுடன் ராகாகும் பார் மனைவி யுடனடைந்தே (உசு)

ராகாகும்பார் திருவடிகளேசரணம்

ஆக சரித்திரம் அ-க்கு செய்யுள் கூாமஎ

முற்றிற்று.

கோராகும்பார் சரித்திரம்.

சீரதிக மூரி லெல்லாஞ் சிறந்துள தேர டோகி
ஊரதனிற் கோரா குமபா ரொருவரில் வாழ்க்கை மேவி
நேர்தர வுண்ணும் போது நிலைகொடு நடக்கும் போதுஞ்
சார்தர விருக்கும் போதுந் தனித்தவ ரொழுமப் போதும (௧)

பிரபஞ்ச விவகா ரங்கள் பேணுறு பொழுதும் பாண்டம்
திரமுறச் செய்யும் போதுஞ் சிரமந்தீர் பொழுதுந் தம்முள்
விரவுறப் பாண்டு ரங்க விமலனை யிடைவி டாமல்
பரிவுடன் றியானஞ் செய்து பசனையுஞ் செய்து வாழ்ந்தார் (௨)

ஒருபக லிவர்க்கு முன்னே யூர்தரு சேயை விட்டுப்
பருகுநீர் கொண்டு மேவப் பாரியார் போக வன்னார்
மருவுமுற் றத்திற் சேர்த்து மண்மிதிப் பதனுட் சேர
வருமொரு சேயை நாமம் வழுத்திமெய் மறந்தா ராகி (௩)

படருமண் ணோடு சேர்த்து மிதித்தவர் பரிந்து நிற்கக்
குடமுடன் வந்த பாரி குழவியைக் காண்கி லாராய்த்
திடமுட னரிநா மத்தைச் செப்பினர் தியானந் தன்னால்
அடையுமா னந்த பாட்ப ராயவ சத்த ராகி (௪)

மண்டனை மிதித்து நிற்கும் வல்லவர் தம்மை நோக்கிக்
கொண்டபாற் குயங்கள் பொங்கக் குழவியெங் கேயென் றேங்கி
மண்டின குருதி யோடு மண்ணோடு மிதிக்கப் பட்ட
துண்டமா முடலுங் கண்டு துணுக்கென மார்பில் மோதி (௫)

புவியின்மே லலறி வீழ்ந்து புறண்டழு தாகு ழந்தாய்
அவிதர லாயி னையோ ஐயயோ கொஞ்ச மேனுங்
குவிநினை வின்றிச் சேர்த்துக் குழவியை மிதித்துக் கொன்றீர்
இவிடம்விட் டெங்கே னும்போ யிறந்துநீர் படுதி ரென்றார் (௬)

மனைவியார் கடின வார்த்தை வழங்குதல் கேட்டுச் சற்றே
நினைவுவந் தெனதுள் ளத்தே நிலைத்தவை குந்த நாதன்
றனைவிகா தஞ்செய் தேநீ தவிர்த்தனை யன்றோ வென்று
சினமிகத் தண்டங் கொண்டு தேவியார் தமைய டிக்க (௭)

அருகுறும் போதி லென்னை யழகிய விடலனுணை
மருவுறத் தீண்டல் செய்யா திருக்கநீ ரொன்ற வார்த்தை
வெருவுறுத் திடக்கேட் டாங்கே விரைவிலர் பொறுத்தி ருந்தார்
தெரிவுற லாகி யூரார் திரண்டனர் வந்து கண்டார் (௮)

சேற்றிலே குழந்தை சாவச் செய்ததென் வந்து பார்த்தோம்
கூற்றெனக் கோரா கும்பார் குழவியைக் கொல்வ தான
மாற்றரு வெறியெவ் வாறு வந்ததோ வென்பார் சில்லோர்
தோற்றின னுனக்கு நன்றே பதியெனச் சொல்வார் சில்லோர் (௯)

அரிதினை வாயி லேத்து மதிவின்றிச் செயுமோ வென்பார்
தெரிவுறு சில்லோ ரொன்ப திவையெலாஞ் செவியி லேற்றார்
விரிமுகச் சீய நோக்கி வெறுத்தநாய் குரைத்தல் கேளாப
பரிசெனக் கோரா கும்பார் பாண்டுரங் கனைச்சிந் தித்து (௰)

பசனைசெய் திருக்க மற்றை நாளந்தப் பாரி யாரோ
நிசமுற மனத்தி லுன்னி நேசமெய்ப் பதிக்குநேரோ
வசையுறப் பேச லான வார்த்தையை மகிழ் நருக்கு
நசையுறத் தாள்வி ளக்கப் புனல்கொடு நண்ண வந்தார் (௰௧)

கண்டகோ ராகும் பார்பின் னிகழ்ந்தன கருதி மின்னே
பண்டரி நாதனுணை பகர்ந்தனை தொடக்கூ டாதென்
றுண்டது விருக்கத் தீண்ட லுறுவதோ வெனக்க டுத்தார்
அண்டிய மனைவி யாரு மகவின்மே லாசை யாலே (௰௨)

மற்றொரு மணஞ்செய் தேனும் பதிக்குநன் மகனுண் டாகப
பெற்றுறத் தந்தை தாய்வாழ் பெருமனைக் கேகி யன்னார்
நற்றுற வணங்கித் தன்னை நாதனா மறுத்து நின்ற
பெற்றியால் பிள்ளை வேண்டிப பின்னவட் டருகவென்றார் (௰௩)

நன்றென வவரு நேர்ந்து நல்லநாள் கருதிப்பின்னை
மன்றலர் குழலி ஞளை மணஞ்செய்து கொடுக்கும் போது
நின்றகோ ராகும் பாரோ நீரிந்த மூத்தா ளான
பொன்றளிர் மேனி யாளைப் போலிவ ளையும் போற்ற (௰௪)

வேண்டுமென் றுறவி னோர்கள் விருபபுற வழங்கப் பின்பு
பூண்டகோ ராகும் பார்முன் போற்றிய விரதம்போற்றித்
தீண்டிலர் இளையார் தம்மைத் தேர்ந்திளை யவரக் காட்டு
மூண்டது நினக்கெவ் வாறோ வெனக்கதே முடிந்த தென்றார் (௰௫)

பின்னவ ருரைப்பக் கேட்ட பெரியவ ரவளைத் தேற்றி
நன்னரந் நாளி னேரு நடுநிசி நாதர் தூங்கு
மன்னிய வணையிற் சார வந்திரு புறத்துந் தூங்கத்
துன்னினர் தாமுங் கூடத் துயில்பவர் கைக ளேக்கி (௰௬)

இருவரு மிரண்டு மார்பு மேற்றின ரிருக்க வன்னார்
திருவிழி மலர்ந்து நோக்கித் தீர்ந்ததே விரதந் தீண்டி
யரிவையர் தம்மை யென்னு வருவருத் தயில்வா ளாலே
ஒருகையைத் துணித்து மற்றை யொருகையை வாள்வா யூன்றி (௰௭)

துணித்தன ரிருக்கக் கண்ட தோகைய ரிருவர் தாமும்
மணத்தது சேய்வேட் டன்றோ வாய்ந்தது கைபோ தற்கோ
புணர்ப்பதிங் கினியென் னேயென் றலறினர் புலம்பி நைந்து
நணித்துநங் குடும்ப மெங்ஙன நடக்குமென் றழுதல் கண்டு (௰௮)

அன்பரா யாதரிப்போ னாகியபாண்டு ரங்கன்
இன்பொடு துணைசெய்வானு யிருக்கமற் றென்னே நீவீர்
துன்புறு கின்ற தென்று துணைசெய்விட் டலன்ற னுமம்
என்புதா மமிர்தந் துய்த்தா லெவ்வகைப பிணியு நீங்கும் (௰௯)

என்றவர் தம்மைத் தேற்றி யிணையிலாக் கோரா கும்பார்
நன்றரி பஜனை கூறி நண்ணுநா ளாடி மாதந்
துன்றெகா தசியிற் பாண்டு ரங்கனைத் தொடர்ந்து சேவை
மன்றவா னந்தங் கொண்டு மனைவிய ரோடு வந்தார் (உ௰)

சந்திர பாகை யென்னுந் தடநதி தன்னி லாடி
முந்து புண்டலிகர் தம்மைத் தொழுதனர் முழுதும் வாழ்த்திச்
சுந்தர விமல ஞானந் துலங்குபண் டரியைச் சூழ்ந்து
வந்துறு கோயில் மேவி மாதவன் றனைச்சே வித்து (உக)

தழுவினர் தொழுது நிற்கத் தவலறு நாமதேவர்
குழுவொடு தாளம் வீணை மிருதங்க முதல கூட
வெழுமொலி யோடு கையி லுவணநன் கொடியை யேந்தி
நழுவலில் பாண்டு ரங்க னமகீர்த் தனங்கள் பாடி (உஉ)

ஆடின ரதனைக் கண்டு தாமுந்த மங்கைத் தாளம்
போடுத லொடுசே வித்தல் பொருந்தமுன் கரங்க ளின்றி
வாடின ரரிநா மத்தை வழுத்தினர் நாணிக் கைகள்
மூடினர் நினைவு கண்டு முகுந்தனும் பாண்டு ரங்கன் (உ௩)

முன்புள படிக்குக் கைகள் முளைத்திட வருளிச் செய்ய
அன்பொடு கைகள் கொட்டிப் பாடினர் தொழுதா ராடி
இன்புறு தலையெல் லோருந் தெரிந்தனர் வியந்து நோக்கி
மன்பர வசத்த ராகி மருவுகோ ராகும் பாரை (உச)

தொண்டரிற் பெரிய ரென்று தோத்திரம் பலவுஞ்சொல்லி
மண்டினர் கண்டு மூத்த மனைவியார்மலர்க்கை கூப்பிப
பண்டரி நாதா பத்த பாலன பதும நாபா
தண்டுள வணிந்த தாமோ தரவெனத் தொழுதுவாழ்த்தி (உரு)

கைவர வன்பருக்குக் கருணைசெய் கமலக் கண்ணா
மைவரு மேனி மாயா மகவின்றி வருந்து கின்றோம்
நைவது தெரிந்தி லாயோ நங்கண்மேற் கருணை யின்றோ
சைவலம் பொருவுங் கூந்தற் றமைக் கிழத்தி நேயா (உசு)

என்றுளத் தழுங்க லோர்ந்தா னிந்திரை கொழுந னங்கு
நன்றருள் புரியப் பிள்ளை நகழ்ந்துமுன் வருதல் கண்டு
பொன்றின பிள்ளை யென்னே பிழைத்தது புதுமை யென்னத்
துன்றின தாய்கண் டோடித் துணைமலர்க் கரத்தி னேந்தி (உஎ)

மார்பிடை யணைத்துமேன்மேல் மகிழ்வுகொள்பொழுது மாயோன்
சீர்பெறத் தோன்றிக் கோரா கும்பாரைத் தெரிய நோக்கி
வார்குழ லிருவ ரோடு மகிழ்ந்தணைந் தின்று தொட்டுச்
சார்தரல் வேண்டு மென்று தகையறப் புணர்வு தந்தான் (உஅ)

அன்னதோர் புதுமை யெல்லா மறிந்தசீ ரன்பர் யாரும்
பன்னுதோத் திரங்கள் செய்து பணிந்தனர் பாடி யாடி
மன்னினர் மங்க ளார்த்தி மகிழ்ந்தனர் புரிந்து வாழ்த்தித்
துன்னுறக் கோரா கும்பார் தொண்டரை நோக்கிச் சொல்வார் (உகூ)

அன்பர்நீ ரெல்லாருஞ்சேர்ந் தடியனே னகத்து மேவி
இன்புறு கருணை செய்ய வேண்டுமென் றிரந்து வேண்டத்
துன்புறு தொண்ட ரெல்லா நன்றெனத் தொடர்ந்து போந்து
முன்பவ ரிருக்கு மில்லின் முயங்கினர் கோரா கும்பார் (௯௰

பாத பூசனையே யாதிப் பண்பெலாம் பண்ணித் தக்க
வாதனங் கொடுத்தெல் லோர்க்கு மமைந்தபி னறுசு வைத்தா
மோதன மருத்தி மற்று முளவுப சார மெல்லாந்
தீதற வியற்றி யாவுந் தீர்ந்தபின் ஞான தேவர் (௯௧

நீரிவ னுய்த்தல் செய்ய நிரம்பின ரான பாண்டத்
தோர்தரல் வேண்டுஞ் சுட்ட துஞ்சுடா ததுமென் றோத
நேர்தரக் கோரா கும்பா ரெழுந்துகை நிலைத்தண் டத்தால்
ஓரொரு வரையுங்கொட்ட வுரைத்தில ரிருப்ப நாமர் (௯௨)

தலையிலுந் தட்ட வந்த போதவ ரைத்த டுத்த
நிலையிலே பச்சைப் பாண்ட மிவரென நின்று ரைக்கச்
சிலையிலேய் புருவ முக்தா பாயியுஞ் செப்பு கின்றார்
உலைவிலீ ருமக்கெவ் வாறு தோற்றிய துண்மை யென்று (௯௩)

மிகவும்வல் லீரென் றோத வினவினர் தாமெல் லோரு
நகைசெய நாம தேவர் நாணின ரெழுந்து நாதன்
அகமகிழ் கோயின் மேவி யலர் மகள்கேள்வன் றன்னை
முகமலர் பொலியக் கண்டு கண்கணீர் மொய்ப்ப நின்று (௯௪)

எனக்கவ மான மின்று நேரிட்ட விதனால் மிக்க
மனத்துய ரடைந்த தென்ன மாதவன் றழுவிக் கொண்டே
உனக்கியா ரேது செய்தா ருற்றதென் னுரைத்தி யென்னத்
தனக்குநே ரிட்ட தன்மை சாற்றுவார் நாம தேவர் (௯௫)

இன்றுநின் கோரா கும்பா ரெங்களைக் கூய்ச்சென் றில்லில்
நன்றுண வளித்தி யார்க்குநன்குற வமைத்துத் தண்டந்
தன்றிருக் கரத்தா லேந்தித் தலைதொறும் புடைக்க யாரும்
ஒன்றையு முரைக்கா துற்றா ரோங்கின ரென்கம் மீது (௯௬)

அதுகண்டு வீமங் கொண்டே யங்கையாற் றடுக்கத் தாசர்
இதுபச்சைப் பாண்ட மென்ன யாவரு நகைக்க லுற்றார்
விதுமுக முக்தா பாயி மிக்கெனைப் பகிடி செய்தார்
கதுமென வெழுந்து நின்பாற் கழறிட வந்தே னென்றார் (௯௭)

திருமக ணாதன் கேட்டுச் சிரித்துநீ யுபதே சத்தைக்
குருவையிற் பெறாத பெற்றி குறித்தன்பர் குழாத்து ணோர்ந்து
தெரிதரக் கோரா கும்பார் செப்பிய துண்மை யென்னப்
பரிவுறு நாம தேவர் பகவருவான் றொடங்கி னாரே (௯௮)

பண்டரி நாதா வென்றன் பரிபவ மெல்லா நின்பால்
விண்டது மாறித் தேற வேண்டியான் வந்த தற்குத்
தொண்டரைப் போல நீயுஞ் சொல்லுத றகுமா வென்று
கண்ணி னீர்த தும்பக் கழறின ராகப் பின்மால் (௯௯)

என்னுயிர்க் குயிரா யுன்னை யெண்ணியா னிருக்க வென்மீ
துன்னரு முதாசி னச்சொல் லுரைப்பது தக்க தன்று
நின்னது துவித பாவ நீங்கிட வாசான் றன்பால்
மன்னிய வருளைப் பெற்று மற்றெனை யடைதல் வேண்டும் (சo)

என்னலுங் கேட்ட நாம ரீசனே குருவை நாடித்
துன்னுறு பொருணீ யே தொலைவிலா தென்பா லென்று
மன்னயா னுன்னைக் காண மறுவிலா வுபதே சத்தைப்
பன்னிடக் குருவை நாடிற் பயனென்னை யென்று ரைத்தார் (சக)

அவ்வுரை கேட்ட நாத னன்பரை நோக்கி நாமா
இவ்வுல கத்து முன்யா னிராமன்கண் ணனுகத் தோன்றி
வவ்விய ஞான ரூப வசிட்டர்சாந் தீபர் தம்மை
எவ்வமில் சரண டைந்தே யேற்றன னுண்ம ஞானம் (சஉ)

ஆதலா னீயிப் போதே யன்னது பெறுவா யாகிற்
சாதுசற் சனர்ம திப்புந் தத்துவ வழியுந் தோன்றும்
போதுதி யென்ன நாமர்பொன்னடி வணங்கி யெந்தக்
கோதிலாக் குருவைச் சார்வ தென்னலுங் கொண்டல் வண்ணன் (சங)

நளிர்நாரச் சடில நாகைநாதர்வாழ் கோயிறன்னில்
கிளர்ஞான வுருவி சோபா கேசர ரொன்போ ரங்கண்
வளர்வாரிற் சரண்பு கென்ன மால்பிரி வுன்னி யுள்ளத்
தளர்வோடு நடந்து கோயில் சார்ந்தனர் நாம தேவர் (சச)

சினகரம் புகவி சோபா செருப்புக்கா லிலிங்கமீது
நனியுற வைத்து றங்க நாடினர் திகைத்தே னக்கென்
றுகனின் றெடுத்து ரைத்த வாரியன் போலுன் மத்தன்
கனவிலுங் காணே னென்று கருதிமுன் சென்று நின்று (சரு)

ஐயநுஞ் சீர்த்தி கேட்டிங் கணுகயா னடாத செய்கை
வெய்யரும் பொருத தாமும் விபரீத வொழுக்கத் தாலே
துய்யதுஞ் ஞான மெல்லாந் தோன்றின தெனக்கென் றோத
மெய்யரு மடடா வென்றே தவறிக்கால் வீழ்ந்த தென்றும் (சசு)

என்னுடல் மிக்க சோர்வுற் றிருப்பதா லவய வங்கள்
இன்னமோ ரிடத்தில் வைக்க வெடுப்பதற் கில்லை வன்மை
மின்னுறை நிறமா லன்ப மேவிய விலிங்க மீதில்
மன்னிய காலைத் தூக்கி மற்றொரு பால்வைத் திரோல் (சஎ)

பொங்குப கார மாக வுறுமெனப் பொற்று ணமர்
அங்கையாற் றூங்கிப் பாங்கர் வைக்கவவ் விடத்தும் லிங்கம்
தங்குத லேக்கி மற்றோர் தானத்து வைக்க வங்கும்
லிங்கமாய்த் தோன்றப் பாத நிலைகொள வைப்பதற்கு (சஅ)

எள்ளள விடமு மின்றி யெங்கணு மிலிங்க மாக
ஒள்ளிய பதங்க டம்மீ தேனுமூன் றிடுவோ மென்று
மெள்ளத்த னங்க நோக்க விளங்கின விலிங்க மாக
வுள்ளத்து மிகவி யந்தங் கோய்வுறு வாரை நோக்கி (சகூ)

நெடும்பொழு தென்கா ருங்கி நின்றதா லெனக்கு மிக்க
விடும்பையா யுளதென் காலை யிடுக வெற் றிடத்தி லென்னத்
தொடும்பத மேந்தி நாமர் தொழுது மெய்ஞ் ஞான வீச
தடம்பதந் தொடுமெ னக்குத் தாவர சங்க மெல்லாம் (௫௰)

சிவமய மாகத் தோற்று கின்றதாற் சிறந்த பாதம்
எவணுற வைப்பே னைய வென்றுநற் றுதிப யின்றார்
பவமறு ஞான வாசான் பதம்விடு மெனவெ ழுந்து
நவமல ரபயக் கையை நாமர்தந் தலையில் வைத்து (௫௧)

காதில்ஞா னமு தம்பு கட்டலுந் திருநி றத்தின்
ஆதிநா யகனு முள்ளத் தமர்தர வினைக டந்த
கோதிலா னந்த வாரி குளித்த னரசவ மாகித்
தீதிலாக் குருவைப் போற்றித் தெளிந்தனர் பின்போர் நாளில் (௫௨)

பண்டரி புரத்துச் சென்று பாண்டுரெங் கனுக்கு முன்பு
தொண்டரோ டரிநா மத்தைச் சொல்லுநா மனைச்சீர் பொற்றாள்
புண்டரீ கத்துக் கங்கை பெற்றவன் புல்லி முன்னர்
இண்டவை னவனை நோக்கி யினியிந்த நாமர் தம்மை (௫௩)

சுடாததிப் பாண்ட மென்னச் சொல்விரோ வெனவி றைவ
விடாதரி கீர்த்த னங்கள் விளம்பிய தாச ரெல்லாம்
அடாதினிப் பகர லென்று வடையும்யார்க்கேனு மென்றுங்
கெடாதபே ரின்ப நல்குங் கிளரடி தொழுதற் றாரோ (௫௪)

கோராகுமபார்திருவடிகளேசரணம்.

ஆகசரித்திரம் (௯) க்குச் செய்யுள் (௯௰௧)

முற்றிற்று.

பரிசாபாகவதர் சரித்திரம்.

பண்டரியி லேவாழ்வோர் பரிசாபா கவதர்மலர்ப
புண்டரிகை யானரகு மாயியன்பர் பொருந்திமிக
மண்டி யவன் பிறுககுருக்கு மணிதேவி முன்வந்து
கொண்டவரு ணிறைந்தவிழி கொடுபார்த்து மற்றவரை. (க)

உதரமுற வணைத்துமத லாயுனக்கென் வேண்டுமெனப்
பதுமமக டனைநோக்கிப் பரிசாபா கவதரன்னே
இதமிகவென் குடும்பத்தி னிடறின்றி யெப்போதும்
துதியுனையே புரிந்தடியேன் றொழுதிருத்த லேவேண்டும். (உ)

அருள்செய்க வெனப்பதுமை யக்கணத்தோர் பரிசக்கல்
ஒருநீகொள் கெனக்கருணை யுடனுதவி யிதுதினமுந்
தருமிரும்பெல் லாங்கனகந் தானுக்குந் தகப்போற்றி
வருகவென வருள்செய்ய வணங்கிமகிழ் வொடுவாங்கி. (ங)

வந்துமனை யார்கமல சாமகிழ வவர்கரத்திற்
றந்துசெயும் வகையுரைப்பத் தடவுமிரும் பதுபொன்னாய்
முந்துறுத லான்மகிழ்வின் மூழ்கினரை நோக்கியிதைச்
சிந்துதல்செ யாய்பிறர்தஞ் செவியிலெனத் தெரிவுசெய்து. (ச)

மனைவியொடு மகிழ்ந்துருக்கு மணிதேவி தனைவாழ்த்தி
இனைவுசெயுங் கலிநீங்கி யெல்லோர்க்கு முன்போல
அனையருற வொருநாளங் கவர்மனைவி கமலசா
வினைதெறுசந் திரபாகை நீர்முகந்து மீளுங்கால். (ரு)

நாமதே வரதுமனை ராசாயி யெதிர்வருவார்
தாமவரை நோக்கியன்பு சார்கமல சாமின்னே
ஆமதுகொண் டேதிரும்பு மளவுமிங்கே நிற்கவென
மாமதுரச் சொல்லினவணிறுத்திமழை முகந்துவந்தார். (சா)

மிடியில்வருந் துறுகின்ற ராசாயிவிரைவறிந்தே
அடியில்வருந் தியகமல சாவன்பு மிகநோக்கிப்
படியிலெனக் கன்புமிக்க பாவாயுன் வளமதனை
நொடியிலுற மகிழ்வெனென நுவலுதற்கு மிகநாண. (எ)

கண்டுகம லசாவென்பார் ராசாயி கலந்தநட்புக்
கொண்டுறுவோ ரிடத்துவெட்கங் கூடாது மிகமகிழ்வு
மண்டுறவுள் ளதுவழங்க வேண்டுமென வுளநாணம்
விண்டுடனே ராசாயி விளம்புகின்ற தென்னென்னில். (அ)

எனகணவர் நாண்மான மிகந்துகுடும் பங்காப்பத்
தன்கணொரு நினைவுமின்றித் தரித்திரத்தாற் றளர்வுபடும்
புன்கணொன்றுந் தோன்றாமற் புகழ்பாண்டு ரங்கனடி
யின்கணன்பு தனின்மூழ்கி யேதுமறி யாதவராய். (கூ)

அன்னமுடன் வத்திரம்வேண் டாராகி யரிபசனை
நன்னயங்கொண் டேதிரிவோர் கடக்கைதனைக் கமலசா
என்னவகை யுரைசெய்வே னெனவுரைத்த ராசாயி
தன்னருமை முகநோக்கித் தயைமிகுந்து சாற்றுகின்றா. (௰)

உனதுபதி பசிக்கின்ற வுத்தமனோ யோங்கொருவன்
றனதுமனத் தருள்கொண்டு தந்திலனோ மிடிதீரக்
கனகமது வெனவில்லை யெனக்கழறக் கமலசா
அனவிமலன் றனைப்பசித்தென் னுவதுமற் றென்கணவா. (௰௧)

தாயான ரகுமாயி தனைப்பணிந்து வாழ்த்துவசற்
காயார்க்குங் கிடைக்கரிய பரிசக்கல் லதையருளி
நோயான மிடிதீர்த்தா னுவல்பசனை யைக்கேட்டும
காயாத தருவினுக்குப் புனல்வார்க்கக் கடவதேன். (௰௨)

என்றுரைக்க ராசாயி யெழிற்கமல சாமின்னே
நன்றுமக்குத் தந்தகல்லை நான்பார்க்க வேணடுமென
இன்றுனக்குக் காட்டுகின்றே னெனதகம்வா வெனபபேசிச
சென்றுதம தில்லடைந்தார் தெரிவதற்கு ராசாயி. (௰௩)

கமலசா மனைவந்து காட்டுகென வக்கல்லை
விமலமனத் தொடுகொட்டி வீட்டிற்குக கொடுபோயுன்
னமலமனை தனிலுள்ள வயங்களிலே பரிசிதது
நிமலமுறு பொன்கொண்டு நீக்குதியுன் மிடியென்றா. (௰௪)

தந்திதனை யெவாகளுக்குஞ் சாற்றாதென் வயினாக
வந்துகொடு வெனபபோக்க மற்றவரும் வாங்கிவந்து
சொந்தமனை தனிவிரும்புசோதித்துக் கிடையாமற்
றந்தொழில்செய் கத்தரிகை யூசிகளிற் றொன்றடவி. (௰௫)

பொன்னாக்கி யதுகொணடு போனகஞ்செய் துறுபொழுது
நன்னும தேவர்வந்து நாயகிசெய் நலந்தெரிந்து
பன்னாளு மில்லாத படியேதிங் கெனவினவ
மின்னார்மெய் யுரைக்கிலிவர் வெகுள்வாரொன் றுறவெருவி- (௰௬)

நிகழ்ந்தபடி தனையறிநதெ னித்தமுநீ ரமுதுணடு
புகழ்ந்திரும்பண டரிநாதன் பொன்னடியை யெனவுரைக்க
மகிழ்ந்தருளா தேநாமர் மற்றதனை யுள்ளபடி
திகழ்ந்துரையா யெனிலுண்ணேன் செபபுகெனத் தேவியரும. (௰௭)

வேறு.

உள்ள வாறுரை செய்யநன் குத்தமர்
எள்ள லில்பரி சக்கல்லை யீதியான்
கள்ள மின்றதைக் காணவென் றோதலும
தள்ள வஞ்சினா தந்தனா காணவே (௰௮)

குலவு நாமாகைக் கொண்டுகண் டன்னதை
நிலவு பாகை நெடுநதி நீத்தத்தே
வீலக லாக விடுதெதுவிட் டுக்கரைத
தலமி ருந்தரி தன்புகழ பாடினா (௰௯

அதுகண் டஞ்சிரா சாயியை யன்னது
கதுமெ னக்கரந் தந்த கமலசா
விதுப குப்பில் விடக்கொடுத் தாயிது
வெதுக டுபபதென் றெய்திக்க டுக்கவே (உ௰)

கூட்டி வந்து கொழு நரிருப்பிடங்
காட்டி யப்பரி சாபா கவதருங்
கேட்டி தெபபடிச் செய்யக் கிடைத்திரென்
றேட்ட நின்றன ரன்றுரா சாயியே (உக)

அன்ன காலை யளித்த கமலசா
முன்ன நேர்படு வார்முக நோக்கியீ
தென்ன யான்முன ரீந்ததை யீகலா
துன்னு மாநதி வீசியிங் குற்றதே (உஉ)

என்று கூற வெதிர்ந்தவ ரிற்சிலர்
அன்று சீரரி தாசருக் காசையுந்
துன்று கல்லுஞ் சரியெனச் சொற்றனர்
நின்ற சிற்சிலர் நீதியன் றென்றனர் (உ௩)

ஒருவர் தம்பொரு ளைப்புன லுய்ப்பதோ
தரும நீதியென் பார்சிலர் தந்ததைப்
பெருகு மாநதி பெய்திலர் வஞ்சனை
மருவி யுற்றன ரென்பர்சின் மாக்களோ (உ௪)

அங்கு றும்பரி சாபா கவதர்தாந்
தங்கு நாமனை நோக்கித் தகுவதோ
எங்கள் செல்வமெ னுங்கலைக் கைக்கொடே
யிங்கி ருப்பதென் றின்னமுஞ் சொல்லுவார் (உ௫)

நீர்நி ராசையி னின்றவ ரென்றிந்த
ஊர்க ளியாவு முரைக்க வரியடி
யார்கள் போலமைந் திப்படிச் செய்திடில்
நேர்வ தோவுமைச் சற்சனர் நீர்மையே. (உ௬)

எனலு நாம ரிவர்முக நோக்கிக்கோ
கனகை தன்னடி காதல ரோகன்னும்
மனம்வி ரும்பின் மடுவினி டைக்கிடப்
பனபல் லாயிரம் பாய்ந்துகொள் கென்றனர் (உ௭)

கேட்ட யாவருங் கேழ்கிள ராற்றிலே
கூட்ட மாகக் குவிந்தகல் யாவையுந்
தேட்ட மாம்பரி சக்கலைச் சேர்ந்தவோ
நாட்டு கென்ன நகைத்துரைத் தார்களே. (உ௮)

வினவு நாம ரொழுந்து வியனதிப்
புனலின் மூழ்கிப் பொருந்திய கற்களைக்
கனை தாயிரு கைக்கொடு வந்துநும்
அனக மானக லாய்ந்துகொள் கென்றனர் (உ௯)

கண்டு தம்மது கற்றெரி யாமற்பொன்
றொண்ட ரூசி பலகொடு சோதிக்க
அண்டு கன்முழு தும்பரி சக்கலாய்
விண்டு தாசர்கை மேவிச் சிறந்தவே (௯௰)

அன்ன கண்டவர் யாரு மதிசயந்
துன்ன நின்று தொழுது துதித்தினர்
பொன்ன தாசர் புகழரி தாசனை
நன்ன ரோத்தி நயந்துசொல் கின்றனர் (௯௧)

அச்சு தன்றனக் கன்பனொன் றுயநும
மெச்சு மெய்மை பொதிந்துறு மேன்மையி
னிச்ச யந்தெரி கின்றிலெ னேரிலீர்
இச்சை கொண்டல ரோந்திழை தன்னையே (௯௨)

போற்றி யோர்பரி சக்கல் பொருந்தினேன்
ஏற்றி லேனும் மருளை யினிதெனு
மாற்றி யாசையை மற்றவர் பொற்பதந்
தேற்ற மாகி வணங்கினர் சென்னியால் (௯௩)

இதம தாமுப தேச மெனக்கு நீ
ருதவ வேண்டுமென் றோதிட நாமர்தாம்
முதல்கொ ணர்ந்தவக் கற்கண் முழுவதுஞ்
சிதறி யாற்றிடைச் செங்கரஞ் சென்னிமேல் (௯௪)

வைத்து நல்லுப தேசம் வழங்கிட
உய்த்த நாமருக் கோரடி யாரென
மெய்த்த ஞானம் விளங்கிச் சிறந்தனர்
பைத்த சீர்ப்பரி சாபா கவதரோ (௯௫)

பரிசாபாகவதர்திருவடிகளேசரணம்.

ஆகசரித்திரம் (ம) க்குச் செய்யுள் (௧௧௭)

முற்றிற்று.

ஜகமித்திரர் சரித்திரம்.

பரளி யென்னுமூர் தனிற்சக மித்திரர் பார்ப்பார்
வரகு லத்தவ தரித்தவர் வைணவ ராகி
யிரவு கொண்டுதா னியங்களைச் சேகரித் தென்றுந்
தரம தாங்குடும் பரட்சகஞ் செய்வது தனிலே

பொருள்வி ருப்பறு புண்ணிய ராகியே பொருந்து
மிருவ கைப்பற்று மில்லவ ராயரி நாமங்
கருதி யேத்துதல் கடைப்பிடித் துறுகின்ற காலை
மருவுமூரிலுள் ளாரிவர் மான்மியந் தெரிந்து (உ)

இவரிம் மானிடத் தன்மைய ரல்லரொத் தேவர்
அவத ரித்தன ரோவெனப் புகழ்ந்தன ராகத்
தவந லத்தினர் தமைச்சிலர் சாதுசற் சனரோ
இவரொ னப்பொரற் கெய்தினர் கற்றன வியம்பி (௩)

வருத்தி மானபங் கஞ்செய்து மதைமதி யாராய்த்
திருத்து ஞானவை ராகங்க டிகழ்சிறப் புடனே
யிருத்தல் கண்டறி வில்லவர் தாம்பொறு ரிவர்தம்
கருத்த ழிந்திடச் செய்வதற் குன்னினர் கறுவி. (௪)

வருமொர் நாட்சக மித்திரர் மனங்கலங் காமற்
றிருவி ளையகன் றனைப்புகழ் செய்கையிற் றிருந்தி
மருவு மில்லிடைக் குடும்பங்க ளொடுதுயில் வதிந்தார்
கருது தீயவ ரவர்மனை யிட்டனர் கடுந்தீ. (௫)

மடுத்த தீச்சிகை பரப்பியின் முழுவது மாய்ப்பப்
படுத்து றங்கின தாசர்கண் விழித்ததைப் பார்த்தே
அடுத்த தீயவிப் பதற்கொரு வகையுமின் றாகித்
தொடுத்த தண்டுழாய்ப் பண்டரி நாதனைத் துதித்தார். (௬)

தீனர் தங்களுக் காபத்தைக் காத்தருள் செய்யும்
ஞான நாயகா நினையன்றித் துணையில்லை நாடிற்
றனெ னுஞ்சக மித்திரர் துன்பத்தைத் தவிர்க்க
ஏன மாகிமண் ணெடுத்தவன் சக்கர மேந்தி. (௭)

வந்து றங்குகின் றார்தமைத் தீவருத் தாமல்
முந்து சக்கரத் தாற்றடுத் தானிரா முழுதும்
அந்த வீடெரி கின்றதீச் சிகையொளி யதுகண்
டெந்த வீட்டி லுள் ளாருமங் கெழுந்தனர் வந்தார். (௮)

கண்டை யோசக மித்திரர் குடும்பம்வெங் கனறுன்
மண்ட மூழ்கினர் மடிந்தன ரென்றுவாய் குழறிக்
கொண்ட லைந்துகூ கூவெனக் கங்குலுங் குறைந்து
சண்ட வெங்கதிர் தோன்றிடத் தீயெரி தணிந்த. (௯)

உள்ளு றங்கின குடும்பமும் விழித்தன ருணர்ந்து
வெள்ள மேற்றுயி லரிதிரு நாமத்தை வேண்டக்
கள்ள மில்லவ ரியாவருங் கேட்டனர் கருதி
மெள்ள வந்துளே நோக்கினர் வெந்திடா திருத்தல். (௰)

அதிச யித்தன ரரக்குமா ளிகைதனி லவர்
முதிர்நெ ருப்பிடை வெந்திடா தருள்செய்த முறையே
இதுவும் பண்டரி நாதன தின்னருளென்று
துதிசெய் தாரரி தன்னொடுந் தொண்டரைத் தொழுது. (௰௧)

பின்னர் யாவருங் கூடின ரிவரது பெருமைக்
கென்ன தாமள வென்பதா யிவர்தமக் கியைந்த
நன்ன ராகிய குடும்பநாங் காப்பதே நலனென்
றுன்ன லாகிய வயித்திய நாதன்றன் னுழையில். (௰௨)

சிலரி லந்தரு வோமென்று தாசரிற் சேர்ந்து
பலரு மீவது பகர்ந்திடத் தாசரும் பகர்வார்
உலகெ லாந்தனக் குள்ளதோர் குடும்பமா யுள்ளோன்
இலகி யேயுறு பொழுதெனக் கொருகுறை யில்லை. (௰௩)

என்று பந்தமில் லாவெனைப் பந்தத்து ளிசைக்க
நின்று கூறுதி ரெனவவர் யாவரு நெடிது
நன்று நன்றென வலிந்தவர் நாமத்தை நவின்று
துன்று சாதனஞ் செய்தொரூர் தந்தனர் தொகுத்து. (௰௪)

தாங்க ளேயந்த நிலத்தினிற் பயிர்செய்து தரற்கும்
பாங்க ராயின ரப்படி யேசில பருவ
நீங்க லானபி னிருபனு னியமிக்க நேர்ந்தான்
ஆங்கு நீடதி காரியா யறிவிலா வவிநதன். (௰௫)

வந்தெ லாம்விசா ரித்தவன் வயித்திய நாதன்
சொந்த மாநிலத் தூர்சக மித்திரர் தொடக்கத்
தெந்த வாவியைந் ததுவென வரசனுக் கிசையத்
தந்த தாகமுன் றந்தவர் தமையெலாந் தடுக்க. (௰௬)

அவரெ லாமுந்தி யாஞ்சக மித்திர ரான
தவர்த மக்குத வியதரு மந்தனைத் தடுத்துப்
புவனி வேந்தன தாக்குதல் பொருத்தமன் றென்ன
உவன டங்கிடா துலோபமே செய்திட லுற்றான். (௰௭)

பின்னு யச்சக மித்திரர் பெருமையைக் கேட்டுத்
துன்னி னனவ ரில்லினைச் சோதிக்கத் தொடங்கி
என்ன நீர்சக மித்திர ரோபகை யிலையோ
மன்னு மிச்சகம் பகையிலை யுமக்கெனின் மாதோ. (௰௮)

எனது புத்திரிக் கிசைந்தது மணமதற் கேற்ப
அனைக தெய்வபூ சனைசெய்ய வேண்டுமெற் றதற்குச்
சினைமு லாவிய வொருபுலி வேண்டுநீர் சேர்ப்பீ
ரெனவி சைத்தன னன்றெனத் தாசரு மெழுந்தார் (௰௯)

காடு சென்றன ரொருபுடை யிருந்தனர் கவினு
னீடு பண்டரி நாதனை நினைந்தனர் நெடிது
பீடு சேர்திரு நாமங்கள் பற்பல பேசிக்
கூடு வாய்புலி யுருக்கொடின் றெனவுளங் குறித்தார் (௨௰)

பத்த ருக்கருள் பாண்டிரங் கன்னந்தப் படியே
சித்தி ரப்படி வப்பலி யாய்முனஞ் சேர்ந்து
மெய்த்த வச்சக மித்திரர் கண்டுளம் வியப்ப
எத்த லத்தினில் யாருமை நலிந்தவ ரியம்பில் (௨௧)

கொன்று தின்றிடு வேனெனக் குவலய நண்பர்
நன்று வெம்புலி யாய்வரு கின்றவென் னுதா
துன்று நின்னையல் லாதெனக் கொருதுணை யுண்டோ
என்று தோத்திரம் பற்பல வியம்பின ரினிதே (௨௨)

கஞ்ச நாபவெம் மூரினி லோரதி காரி
எஞ்சி லாததன் மகள்மணத் தினுக்கிசை வாக
விஞ்சு தேவதா பூசைக்குப் புலியொன்று வேண்டுஞ்
செஞ்செ யேகொடு வருகென வெனக்குரை செய்தான் (௨௩)

ஆத லாலிவ ணெய்திநின் றனையழைத் தேன்யான்
காதலோடுநீ வருகெனக் கண்ணபி ரானை
நீத மாகவுத் தரியத்தைக் கழுத்தினி னிரப்பிப்
போதலாயின ரீர்த்துறை கின்றவூர் புகுந்தார். (௨௪)

காசி னிக்கெலா மிதகிரர்வேங்கைமைக் கொண்டு
நேச மாய்வரக் கண்டவர் யாவரு நில்லார்
பாய்சி னப்புலி கண்டெதிர் நிற்பரோ படர்ந்து
வாசலிற்கத வடைத்தன ரூர்க்குள்வா ராமல். (௨௫)

உலக மித்திரர் தமக்கு மித்திரரென வுள்ளார்
பலரு நீடிய மரங்களி லெறியே பார்த்துச
சலச லோசனன் குருசரே நீர்புலி தன்னால்
கொலையி யற்றவோ வருகின்றீ ரென்றனா குறித்து (௨௬)

அஞ்சு நீர்புலி யன்றுபாண் டுரங்கனே யாகும்
விஞ்சி நீடதி காரிக்கு மெய்க்கொள வேண்டி
இஞ்சு வந்தன னெனவதைக் கேட்டவ ரோகி
நஞ்சு நேர்துருக் கனுக்குரைத் தனரவ னடுங்கி (௨௭)

தன்ம னைக்கத வடைத்துறச் சார்ந்தவத் தாசர்
நன்ம திற்கத வடைத்திருப் பதுதனை நாடி
முன்ம யக்குறப் புலிவடி வாய்வந்த முதல்வன்
பொன்ம ணிக்கரத் தறைந்துபோம் வழிதரப் புகுந்தார் (௨௮)

துட்டன் வாழ்மனை வாசன்முன் சார்ந்தந்தத் துருக்கன்
கட்ட மைந்தன கதவையுஞ் சார்த்துறல் கண்டென்
னிட்ட னேமுன்ன நீசொன்ன படிக்கியா னின்றே
எட்ட ரும்புலி தனைக்கொடு வந்தன னெனுமுன் (௨௯)

கொண்டு வந்தவெம் புலிகுமு றிடுங்குரல் கொண்டு
மீண்டு வாலடித் தார்த்திடக் கேட்டவன் வெருவிப
பெண்டு பிள்ளைக ளோடழு வவன்கொள்பெண் டாட்டி
அண்டு நீமிகு வயதுசென் றுயத னாலே (௯௰)

வெளிச்செல் வாயெனில் யாம்பிழைப் பேமென விளமப
ஒளித்த துஷ்டனங் கதற்குடன் படாதழு வுள்ளே
களித்த வூரினர் கேட்டற நகைத்திடக் கலங்கி
அளித்திர் நீரென வுலகநண பனையஞ்ச லித்து (௯௧)

அவனி மித்திரர் நீரென்ப தறிந்திலே னுகித்
தவறு செய்தன னென்றநந்தத் துருக்கனுஞ் சாற்றப்
புவன மித்திரர் தமக்கருள் சுரந்துமீப் பொங்கி
உவமை யற்றவப் புலியைக்கொண் டேர்கடந் துற்றார். (௯௨)

கான்பு குந்தொரு தனியிடங் காண்டலுங் கண்ணன்
நான்கு தோளொடு சகுணரூ பங்கொடு நன்கு
தோன்ற வேசக மித்திரர் பொன்னடி தொழலுங்
தேன்ற ருந்துழா யவன்றமு வினனருள் செய்தான் (௯௩)

ஜகமித்திரர் திருவடி கமலோ ரணம

ஆக சரிதநம யக-க்கு செய்யுள் (௬௯௰)

முற்றிற்று.

— ௨ — ௱ — ௨ —

ஜோகாபரமானந்தர் சரித்திரம்.

வாகாகிய பாரசி யென்னுமூர் வந்த
ஜோகாபர மானந்த பக்தரோர் சோர்வு
மாகாதரி நாமசங் கீர்த்தன மான
பாகார்தரு நாவினா தோமறு பண்பார். (௧)

சரியாவிர வேகொடு தஞ்சமு சார
பரிபாலனஞ் செய்பவ ராய்ப்பல நாளும்
அரிதாளிணைக் கெண்ணிரண் டாமுப சார
மரியாதைகொள் பூசையி லேதும்வ ழாமல். (௨)

இனிதாயியற் றிப்பின்ன ரோரெழு நூறு
கனிவாகிய வந்தனை செய்துபின் கண்ணன்
உனவோதிய கீதையி லோர்சுலோ கத்தை
நனியோதிய பின்புவந் துண்பரந் நல்லார். (௩)

இவ்வாறிவ ரெய்துவ திற்பிச கெய்தில்
ஒவ்வாருண வத்தின மேயுப வாசஞ்
செய்வார்மனை யிற்குடி யானவர் சில்லோர்
நைவாறிட வேயிறங் குற்றவந் நாளில். (௪)

மழைபெய்தத னாலவர் வாசல்சே றாகிக்
குழைவெய்திடக் கும்பிடுங் கொள்கைகுன் றாராய்த்
தழைவெய்திய சக்கரக் கையனைத் தம்முள்
விழைவெய்துறக் கொண்டுநின் றார்புகழ் வேண்டி.. (௫)

அரிதன்பத தாசர்செய் யுஞ்செயல் யாவுந்
தெரிதந்தன ரக்குடி யானவர் தேர்ந்து
மருள்விண்டிடு மாதவ ரோயிவ ரென்ன
ஒருவன்கடி தோடின னவண முற்றான். (௬)

கொண்டானொரு பொன்னுடை கொண்டுவந் தன்பர்
கண்டாமுறக் காட்டிநீர் கைக்கொள்க வென்றான்
தண்டாமரைக் கண்ணவன் றாசர்வேண் டாராய்
விண்டார்விலை மிக்குள திக்கலை வேறே. (௭)

பழைதாகிய துண்டெனி லீகெனப் பார்த்து
விழைவேமிகக் கொண்டவர் தம்மிடை மீதே
அழகாயுற வேயுடுத் தேகின னப்பால்
மழைபோனிறத் தான்றுணைத் தாள்மற வாதார். (௮)

வேறு

அருமைசெய் திவரை யன்று னரைதனி லுடுத்துப போன
பெருமையை நினைந்து பீதாம் பரத்தினைப் பெரிது பேணி
மருவுமக் கலையிற் சேறு வாய்த்திடிற் பழுதா மென்று
தருகலை தொங்கு ருமற் றம்மிடை யுடுத்திக கொணடு. (௯)

மருவுதே காபி மான மாற்றிமுன் வணங்கல் போலத்
திருமகள் கொழுநன் றன்னைத் தோர்ந்துகும் பிடுதல செய்யாா
கருதிய கலைமேல் மிக்க காதலின் வணங்க லாலே
பருதிமேல் பாலிற் சார்ந்தும் பணிவது முடிவுரு மலல (௰)

மனத்துளே வருத்தங் கொண்டு மாலடி பணியுங் காலங்
கனத்ததிக் கலையா லன்றோ வென்றகங் கருதி யிந்த
அனர்த்தமா மபரா தந்தீர் வதற்கிந்த யாக்கை தனனைச
சினத்தவா ளாலீர்ப் போமோ தீயிடை யமிழத்து வோமோ (௰௧)

எனப்பல நினைந்து ஞம லேகின ரில்லம் விட்டு
மனக்கிசை வான வேறே ரிடஞ்சென்று மருவும் போது
கனத்ததோர் நுகத்தைப பூண்டு காளைக ளிரணடு கொணடு
சினத்துட னோட்டிச் சென்றான் செறுவினை யுழுதறகாக (௰௨)

ஓட்டியே செல்லு கின்ற வுழவனை நோக்கியன்பர்
ஈட்டிய துயரத்தோடு காளைக ளிரண்டுங் கொண்டோய்
கேட்டியுன் னிரண்டுமாடுங் கிளத்துமென் றனக்குத்தந்து
நீட்டிய விலைகொள் பீதாம் பரந்தனை நீகொள்கென்றா (௰௩)

மற்றவ னுகந்துகொண்டு மாடுக ளிரண்டுந் தந்தான்
குற்றமி லன்பர்பாசங் கொண்டென்கா விரணடுங்கட்டி
உற்றதோர் நுகத்தி லேர்க்காற் கொபபுற மிருந்தபாசஞ்
சுற்றுறப் பிணித்து மாட்டைத் துரந்துபோ கென்னச் சொன்னார் (௰௪)

செயற்கருஞ் செயலிதென்று தேர்ந்திடா ஞதலாலே
மயற்செயுங் கலையைக்கொண்டு மாதவர் சொன்னவாறே
இயற்றினன் போக மற்றை யெருது களிரணடுமீாத்துப
பெயர்த்தன கல்லு முள்ளும் பெருகின விடங்களெல்லாம் (௰௫)

நரம்புட னெலும்பு நிற்க நண்ணிய தசைக டேய்ந்து
குரம்பையில் வழியச்செந்நீர்க் கோலமா யன்பரின்று
நிரம்பப சாரந்தீர நோ்ந்தது நன்றே யென்றார்
வரம்பறு துன்பநோ்ந்தும் வருத்தமெள் ளளவுமின்றி (௰௬)

அரி திருநாமந் தன்னை யறைவது குறைபடாராய்ப்
பெரிதரை பட்டுச்சீவன் பெயர்வுறு மளவதானார்
கரிதுயர் காத்த கண்ணன் கருணைகொண் டோடிவந்தே
எருதுக டமைநிறுத்தி யிசைத்தகட் டவிழ்த்துவிட்டு (௰௭)

அன்பர்த முடல மெல்லா மங்கையாற் றடவுமுன்னே
துன்பங்க ளெல்லாந்தீர்ந்து தோன்றிட வடிவ நன்றாய்
முன்புநின் றவரைநோக்கி மூதறிவினரோ நீர்தாம்
என்புறத் தேயச்செய்தி ரேதுமோா பிழையின்றாக (௰௮)

என்னடி யார்களுண்ப தெனக்குநல் லவியதாகும்
அன்னவர் பேசுகின்ற வவையெலாந் துதியேயாகும்
முன்னுகைத் தொழில்க ளெல்லா முத்திரை கொண்டதாகு
மன்னவர் நடப்பதென்னை வலஞ்செய்த லாகுமின்னும் (௰௯)

அவர்துயில் வதுதானென்னை யன்புடன் வணங்கலாகும்
எவமறக் களிப்பவெல்லா மெனதின்ப வடிவமாகும்
நவமுற வென்று கொண்டு நானும்மை நோக்கிநிற்கத்
தவலரும் பரமானந்த தாசரோ நீரொன்செய்தீர் (௨௰)

இப்படி யாகச்சொல்லி யெதிர்நின்ற பாண்டு ரெங்கன்
மெய்ப்படி வத்தைநோக்கி விரைமல ரடியில் வீழ்ந்தும்
ஒப்பறு துதிகள் செய்து மூவமையில் லானேயின்று
தப்பறக் கருணைசெய்க வென்னலுஞ் சார்ங்கபாணி (௨௧)

நன்றென வருளிக்கோயி னண்ணிநல் லன்பர்க் கெல்லாம்
ஒன்றிய பரமாநந்த ருஞற்றிய செய்கை கூற
நின்றுணர் ஞானதேவர் நின்னடி யார்கள்செய்கை
என்றும்யா ராலுஞ் சொல்லற் கெளிதலவெனத் துதித்தார். (௨௨)

ஜோகாபரமானந்தர் திருவடிகளே சரணம்.

ஆகசரித்திரம் ௰உ-க்கு செய்யுள் ௩௫௰உ.

முற்றிற்று.



நரஹரிபக்தர் சரித்திரம்.

கலிவிருத்தம்.

பரமன்வாழ் பண்டரிப பதியி லேயொரு
நரகரி யெனும்பெயர் நண்ணு பொற்கொல்லன்
அரனெனு மல்லிகார்ச் சுனனை யனபுறு
திரமிகப் பூசனை செய்து வைகுவான். (க)

குடநடன் கோயிலுக் கணித்து மேவியும்
நடையுறு கோயிலின் மார்க்க நணணியும்
படவர வமளியான றன்னைப பார்த்திடான்
அடமுட னுறைகுவா னுன நாளிலே (உ)

மிகுதன முளனொரு வணிகன் விணணவா
தொகுதனம் போலொளிா துளவ மாலையான
நகுதருங் கோயிலில் வந்து நாதனை
நெகுதரு முளத்தன்பு நிரமபப பூசிதது (ந)

தோத்திரம் பலபல செய்து தூயனும்
தாத்திரி நாதவோர் தனைய னல்குதி
சீர்த்திற மிகவெனக் கென்று செபபியத்
தீர்த்தனை வணங்கித்தன் மனைக்குச் சென்றனன். (ச)

சென்றபின் சிலபகல கழியச சீதரன்
நன்றரு ளாலொரு நந்தன தோனறினன்
ஒன்றிய வுவகைமிக் கோங்க லுறறவன்
மின்றிகள் மார்பின னருளை வேணடியே. (ரு)

நவமணி பொதியரை ஞாண்செய் திடுதிரை
தவனிடைச் சாத்திடத் தழைக்கு முள்ளத்தான்
அவனிநா யகனுறை கோயி லண்மினன்
எவமிலன் புடன்றொழு தேத்தி நின்றனன். (சு)

அர்ச்சகர் தம்மை நோக் கியாரிவ் வூரிலே
சர்ச்சனன் பொன்னரை ஞாண்செய் தக்கவன்
மெய்ச்சரி தன்னிடை மேவச் சாத்தற்கு
நிச்சயஞ் சொலுமென வவர்நி கழ்த்துவார். (எ)

இச்சின கரத்தரு கிருக்கின் றானொரு
மெய்ச்சுபொற் கொல்லன்மற் றவனில் வேறிலர்
நச்சின படிசெயற் கென்ன நன்றெனக்
கச்சமில் பொருள்வணி கன்வந் தெய்தினன். (அ)

நம்மியன் றனைக்கண்டு கமலை கேள்வற்கு
ரம்மிய மணியரை ஞாண்செய் கென்னலும்
விம்மிய தனத்திரு விரும்பு மார்பினன்
அம்மிய விடையனை வறிந்து வாவென்றான். (கூ)

வணிகனவ் வளவெடுத் துதவ மற்றவன்
மணியளை ஞாண்செய்து வழங்க வாங்கிவந்
தணிதிகழ் விமலனை யருச்சித் தேத்தினன்
பணிவுட னிடையிட விறைபற் றுமலே (௰)

இருப்பது கண்டுமீண் டெய்திக் கம்மியன்
விருப்புறச் சொலிச்சரி செய்ய வேண்டினன்
சரிபடுத் தித்தரக் கொண்டு சார்ந்திடை
தரிப்புற நீண்டது தனைக்கொண் டேகினான். (௰௧)

நீண்டது குறைசெய்து நேர்க வென்றனன்
ஆண்டதைக் கம்மிய னன்னவா செய்து
பூண்டுகா ணெனத்தர வந்து பூட்டினான்
மீண்டது குறைவுற விம்மி மீண்டனன. (௰௨)

நீட்டுறிற் குறைவுறுங் குறைக்கி னீள்வுறும்
பூட்டுறத் தக்கதா காது போவது
வேட்டிடு விமலற்கு விருப்ப மில்லையோ
ஈட்டுமென் பிழையினோ யாதினோவென. (௰௩)

மீளவும் வந்துகம் மியனை வேண்டி நீ
கோளிடை யளவது குறிக்க வாவென
நீள்சடை நிமலனை யன்றி நேருறேன்
வாளர வமளியான் மாட்டென் றோதினான். (௰௪)

ஓதலும் வணிகன்மிக் குறுக ணெய்தியே
நீதயை செய்தென்ற னியம முற்றுதி
மாதக வுனக்குறு மென்று வாழ்த்திநீ
போதரு கெனக்கொடு கோயில் போந்தனன் (௰௫)

வந்தகம் மியன்விழி மறைய வாடையாற்
பந்தனை செய்துகொண் டளவு பார்ப்புற
முந்தினன் வணிகன்கை பிடித்து முந்தலும்
நொந்தனர் கண்டவர் நுவல்வ தாயினார். (௰௬)

உயர்பரஞ் சோதியை யுற்று நோக்கிட
நயனங்க ளாயிர நாங்கள் வேண்டுவேம்
இயலிவன் கண்மறைத் தேக லென்னையோ
செயலெனத் தீவிழி தெறிப்பச் செப்புவார். (௰௭)

கற்பகம் போனிமிர் கமலக் கண்ணனார்
பொற்பிவன் கட்புலம் பொருந்துறாததோ
சிற்பர வடிவுகண் சேர்வ தேயன்று
பற்பல சொலியென்ன பயனென் றேசினார். (௰௮)

ஆகவந் தமலனா ரங்கந் தீண்டலும்
வேகவெம் புலியதள் வேழத் தோல்செறி
பூகநீள் சடைநுதல் பொருந்து தீவிழி
மாகவெம் மழுத்துடி மான்வி ளங்கவே. (௰௯)

துணுக்கெனக் கண்களைத் திறந்து தோன்றிய
இணர்த்துள வணியலு மிடையிற் கைகளும்
திணர்த்தசெங் கல்விலே திகழுந் தாளுடன்
மணித்திரு மேனிமால் வடிவுங் கண்டனன். (௨௰)

காண்டலு மூடினன் கண்கள் முன்புபோல்
நீண்டசெஞ் சடையவ னிலைய தாகவே
தீண்டிய கைகட்குத் தெரியப் பட்டது
மீண்டுதன் கண்களை விழித்து நோக்கினான். (௨௧)

பச்சைமா மலைநிகர் பசும்பொற் சோதியை
அச்சுத னாகநின் றருளு மையனை
மெய்ச்சிவ வடிவமாம் விழிகள் மூடினால்
[illegible]யே திறக்கினா ரணனி தென்னையே. (௨௨)

என்றுற மயங்கினா னெதிர வஞ்சினான்
தன்றுணைக் கண்கணீர் ததும்ப நோக்கினான்
மன்றலஞ் செழுஞ்சரண் வணங்கி வாழ்த்தினான்
ஒன்றல பலதுதி யுருகு முள்ளத்தான். (௨௩)

நின்னில்வே றேசிவ னெனநி னைக்கநின்
றன்னில்வே றிலையெனச் சமைத னன்றரோ
என்னிலா மையமின் றேத விர்ந்தது
பொன்னிலா வியநிறப பூமி கேள்வனே. (௨௪)

சிவனுரு நின்னுளே செறியச் செய்தியேல்
புவனமேல் லாமுன துந்தி பூத்ததே
தவறிலை தவறிலை யென்று தாழ்ந்தனன்
அவன்முக நோக்கியீ தமலன் கூறுவான். (௨௫)

வேற்றுமை கொள்ளலை சிவன்வே றெனத்
தோற்றுமென் னிடத்துநீ தொழுஞ்ச தாசிவன்
சாற்றுமென் சொற்படி தயங்கக் கண்டுநீ
போற்றுகென் றுரைசெயப பொருந்த நோக்கினான். (௨௬)

தலைமிசைச் சிவகுறி தயங்கக் கண்டனன்
நிலமிசை வீழ்ந்தடி நெடிது தாழ்ந்தனன்
அலைமிசைத் துயின்றவ னடியை யன்றுதொட்
டிலைமிசை யுருகுபொன் னொத்துப் பற்றினான். (௨௭)

பற்றிநின் றுன்றனைப் பழிப்பி னாமர்செய்
துற்றபோ னகவமு துண்கிற் பாரொடும
இற்றைநீ யும்வரு கெனலு மெய்தினான்
கற்றையஞ் சடைமுடிக் கண்ணு ளானொடும். (௨௮)

அடியரோ டிருவரு மமுதுண் டார்ந்தபின்
சடிலவான் பிறையவன் றமணி யக்கோலன்
படியைநேர் கண்டுநீ பதும நாபன்றன்
[illegible] யவரொடு குழுமி வாழ்வதே. (௨௯)

எனக்கிசை வெனவிரு யவனு மின்றுதொட்
டுனக்கிசை வேயெனக் குறுதி யாமென
மனக்கிசை நரகரி தாச வாழ்கெனக்
கனக்கிசை வணையடி யார கன்றனர். (௯௰)

நரஹரி பக்தர் திருவடிகளே சரணம்.

ஆக சரித்திரம் ௰௯-க்கு செய்யுள் ௲அ௰௨.

முற்றிற்று.





ஜனாபாயி சரித்திரம்.

எழுசீராசிரிய விருத்தம்.

கார்த்திகை யேகா தசித்தின மெவருங் கருதுசீர்ப் பண்டரி புரத்தில்
யாத்திரைக் காரர் பலரவண் வந்தா ரதிலொரு கன்னிகை யீன்ற
தாய்த்தரு தந்தை யொடுவந்து கண்டு சவுரிவாழ் பண்டரி மகிமை
ஏத்தினள் மகிழ்ந்து தந்தைதாய் தம்மை யின்பொடு நோக்கின ளிசைப்பாள் (௧)

நானிவி டத்தி னிரந்தர வாச நனிசெய வேண்டினே னுங்கள்
பானினை வில்லே னுடன்வரு கில்லே னென்றவள் பகர்வதைக் கேட்டு
மானினை விவளுக் கிச்சிறுவயதில் வந்ததென் னென்றவர் வியந்து
மீனிகர் விழியா டனைத்தனி விடற்கு மிகமனம் வருந்தினர் மீண்டும். (௨)

பலவிதத் தழைத்து முடன்படா தரியின் பாததா மரைநறை பருகி
நலமிகக் களித்துப் பொருந்துநிச் சயத்தை நன்றறிந் திருவரு நயந்து
மலர்மகள் கொழுநன் கோயிலில் விடுத்து வந்தனர் தங்களூர் பின்பு
நிலமளந் தவனைச் சேவிக்கக் கோயி னேர்ந்தனர் நாமதே வென்போர். (௩)

பாண்டுரங் கனைக்காண் பவரவ ணுலவு பாவையைக் கண்டவள் மீது
வேண்டுறு கருணை பிறந்துநீ தனியாய் விரும்புதாய் தந்தையை யின்றி
ஈண்டுவந் தனையா ருன்பெய ரென்னை யியம்பெனச் சனாயிதா னென்பேர்
தாண்டுறு தரங்கக் கடனிறத் தவனே தந்தைர குமாயிதான் றாயே. (௪)

எனக்குவே றொருவ ரின்றென விங்ங னிருக்கின்றே னென்பது கேட்டு
மனத்திடைத் தயைமிக் கெய்திய நாமர் மற்றந்தச் சிறுமையை வருக
எனக்கொடில் லேகிக் குனாயியை நோக்கி யிச்சிறு மியின்வர லாறு
தனைத்தெரி வித்து மற்றிவள் கண்ணன் றாசியா கியவொரு கூனி. (௫)

கலியுகத் துதித்துப் பண்டரி புரத்துக் கருணைமா னுமத்திற் களித்து
மலிதரு மனத்தா ளென்னலுங் குனுயி வளர்த்தனள் மருவியன் புற்று
மெலிவுற வளர்ந்து பெரியவ ளாக வேறுளோர் யாரைநீ யென்றால்
குவிசிசேய் பாக னடிபுகழ் நாமர் குடியடித் தாசியா னென்பாள் (சு)

இப்படி நாம தேவர்தம் மனையி லியன்றவூ ழியமபல செய்து
மைப்படி மேனி மாயனை நாமர் வாழ்த்தலகேட் டுளமகிழ் வாவாள்
அப்படி யாக வொருதினத திரவி லந்துநா ழிகையள வதிலே
மெய்ப்படி நாமர் முதலினர் துயில மேவின காற்றொடு மழையே (எ)

மழைதெறுங் காற்றன் மாடம்வேய் கூரை மாய்ந்தன பலபடி யாகத்
தழைதுழாய் மார்பன் றன்பொறு ஞகிச் சக்கரத் தாற்றடைசெய்தான்
விழைதரு நாமர் முதலினர் துயரா விதம்பின்பு தானவண் மேவிக்
குழைசுவ ரொடுத்துக் கூரையும் வேய்ந்து கொணடுறு போதிலே நாமா (அ)

விழித்தனர் வெளியே வந்துமுன் கண்டார் விமலபீ தாம்பரம் விளங்கச்
செழித்தகே யூர குண்டல மகுடந் திகழ்திரு மேனியைப் பணிந்தார்
வழுத்துசீ ரடியைப் பற்றிநா தாநீ மற்றிநத விரவிலவந் தென்னை
இழைத்துள தென்னத் தொண்டரைக் காபபோ னியம்புவா னெறிமழைக்காற் [றால்

உன்னது குடிசை யழிந்தது போகா துறச்செவ்வை செய்தன னீநின்
றன்னது குடும்ப வியற்கையை விட்டென் றனைச்சரண் புகுதலா லின்னே
என்னது சுமையா யிதுசெயே னுகி லெனையுனை யீன்றவள் வைவாள்
மன்னது தனைநீ யறிதியே யெனுமுன் வநதனள் குனுயிமால் வடிவை (௯)

கண்டடி வணங்கிப புகழ்ந்தன ளாகக் கலநதுமூ வருமனை புகுந்து
கொண்டுறை போது ஜனுபாயிவந்து கொண்டல்வண ணன்பதம் வருடி
மண்டப சாரம் புரிநதன ளிருக்க மாலடி வணங்கியே நாமர்
தொண்டுகொண் டவனே யெம்முட னமுதுசெய்கென வேண்டினர் சொன்னார்

நாயக னிசைந்து கோவிந்தன் விட்டலன் நாரணன் மகாதேவ னென்போர்
ஆயபிள் ளைகளு நாமருங் குனுயி யன்னையு மனைவியு மாகப
பாயவோர் கலத்தி லமுதுணும் போது பார்த்தனள் ஜனுபாயி மனத்தில்
மேயதோர் வருத்தங் கொண்டுபண் டரிவாள் விமலனே யெனைவிடுத் தனையே

இழிவுநீ செய்வ தியல்புனக் காமோ வெனைபபர தேசியென் றென்ன
வழுவில்சீர் விடல னுமனை நோக்கி மற்றெனக் கருத்துமிவ் வமுது
கழியகன் கிலதென் றுரைத்தலு நாமர் கருதினள் ஜனுயியு முண்ணு
தொழிவதே யென்ன வதுதனு லுணவிங் குருசியா யிலதுனக் கென்றார் (௰௩)

எனலுமுண் பவன்கேட் டெழிற்கர முதறி யெழக்கண்ட ராஜாயி நாதன்
றனதுகை கால்கள் சுத்திசெய் தனள்பின் சாமியோர் பாயன்மீ திருந்தான்
பினரனை குனுயி ஜனுயியை யழைத்துப் பெறுகென மிச்சிலைத் தந்தாள்
அனகமா மிதுதான் பிரமருத் திரர்க்கு மகப்படா வமுதெனக் கொண்டாள். ( )

கொண்டவ டனது குடிசிடை வைத்துக் கோகன கத்தவள் கொழுநா
அண்டிய வெனதில் வருகென வேண்ட வன்புள நாமரோ டாங்கு
மண்டுறத் துயிலு மாதவன் விழித்து வந்தந்தச் சனுயியை மடந்தாய்
உண்டிடும் போது நீயிலா ததினு லுண்டி லே னிரம்பவிப போது (௰௫)

பசியுள தன்ன மெனக்கிடு கென்னப் பாண்டுரெங் காபவ நாசா
நிசியிடைக் குனுயி தந்தனள் மிச்சி னினக்கது தக்கதோ வென்று
கசிவுறு மனத்துச் சனுயிதான் சொல்லக் கண்ணனன் றதையிடு கென்ன
வுசியறு ஜனுயி யிடவவ ளுடனே மாதவ னுண்டுள மகிழ்ந்தான் (மசு)

பின்புகை கால்கள் சுத்திசெய் தங்குப் பேசிய விருவருந் துயில
வன்புறு குனுயி விழித்தனள் வெளியே வந்துதன் புதல்வனைக் கூவி
அன்புள நீயு நானுந்தூங் கினபின் பகிலகா ரணனிந்தச் சனுயி
தன்புடை வந்து மிச்சிலே யுண்டு சயனங் கொண் டனனங்கே யென்றாள் (மஎ)

நாமதே வன்று மெவருளந் தூய்மை நணுகிய தோவங்கு நணுகக்
காமனூர் தாதைக் கிலேயொரு கால நியதிதான் கருதிய போதே
போமதே செய்கை மிச்சிலுண் பதுமோர் பொருளன்ற தியற்கையே யென்ப
தாமது கேட்டுத் துயில்செயும் விமலன் சாமமொன் றுறவிடி யற்கே (மஅ)

எழுந்திரு ஜனுயி திரிகையிற் றூசி யெலாந்துடைத் துன்வர வினையான்
விழைந்தினி திருக்கின் றேனென விழியாள் விழித்திட வெடுத்தினி திருத்திச்
செழுந்தனிக் கரத்தா லவடலே மயிரைச் சிக்கறத் திருத்திமுன் றானைக்
கொழுந்தினைத் தலேமேற் றந்துதா னேயோர் கூடையி லரிசியைக்கொணர்ந்து

நானரைக் கின்றேன் மாவையிங் குனது நன்கையால் முளைதொட்டுக்கொண்டு
தேனெனப் பாடு கென்னலும் ஜனுயி தீண்டின ளன்பினிற் சிறந்து
ஞானதே வாதி யடியர்பால் விமல னல்லருள் செய்தினி தாடத்
தானெலா மோவி யபங்கமாங் கவியாற் சாற்றிடக் கேட்டனன் சௌரி (உம)

தலேதுளக் குடனே பரவச னாகிச் சார்ங்கவிற் கையன்மா வரைக்கும்
நிலேதெரி குனுயி ஜனுயிபால் வந்து நின்வயி னரிசியே தரைக்கச்
சொலேயெனப் பேசா திருப்பது கண்டு சுளித்துவேத் திரங்கரங் கொண்டே
அலேவுற வடித்தாள் யாருடன் பேசி யமர்ந்தனை யிங்ஙனே யென்று (உக)

சினத்தின ளடிதான் சீதரன் முடிமேற் சேர்தலு நான்விடோ பாவிம்
மனத்திலன் புடைய ஜனுயிபால் வந்தேன் மாவரைத் திடற்கெனே யடியேல்
எனத்திரு நாத னமதே வறிந்தே யீன்றதாய் தன்முகநோக்கி
வனத்துழாய் மார்ப னென்றுநீ யறியாய் வருகெனக் குனுயியு மயங்கி (உஉ)

நாணின ளுலக நாதனை யடித்தே னேயென நலிவொடு மனத்திற்
கோணின ளாகி ஜனுயிதா னரியைக் குறித்தன டன்வசங் கொண்டாள்
ஏணிலே யெனக்கென் றிருத்தலும் ஜனுயி யெம்பிரா னிடத்துறு மன்பாம்
ஆணியைத் தொட்டு விராகமாந் திரிகை யரைத்தனள் சஞ்சித வரிசி (உங)

அவ்வியத் தத்தில் வியத்தமா யரைத்த வந்தமா வனைத்தையும் வாரிச்
செவ்விய கூடை நிரப்பிவைத் தன்பின் றிருவினு யகன்றுயில் செய்யு
வவ்விய ஜனுயி விடியுமு னெழுந்து மாதவன் றனைத்துயி லெழுப்பி
இவ்விடைவிடுத்துன்கோயில்சே ராம விருத்தியேற் கலகமா மென்றாள் (உச)

என்றலுந் துயின்றோன் விடிந்ததோ வென்ன வெழுந்துசித் திரமயக் தத்தால்
தன்றனிப் பீதாம் பரத்தையும் பதக்கந் தன்னையுங் கிடத்தியச் சனுயிக்
கொன்றிய கந்தை யுடுத்தித்தன் கோயி லுட்புகுந் துறைந்தனன் விடிந்த
பின்றையர்ச் சகர்தாம் வந்துபொற் கோயிற் பிறங்கிய கதவினைத் திறந்தார். ( )

கந்தையைப் போர்த்துச் செங்கன்மே னின்ற கருணையங் கண்ணனைக் கண்டார்
எந்தையே பீதாம் பரமெவர்க் கீந்தா யெங்ஙனே தேடினாய் கந்தை
நிந்தையி லுனது மேனிக்குக் கந்தை நேர்வதோ வென்றதை நெகிழ்த்து
விந்தைசேர் பதக்கந் தன்னையு மார்பிற் கண்டிலர் வெருண்டனர் வியந்தார். ( )

மூடின படியே கதவுதா னிருக்க முந்தின தெவ்வழி யென்பார்
கூடினும் போவ தியாரக மென்பார் கொண்டவிக் கந்தைதா னுமர்
தேடின தாசி தன்னது போலத் தெரிகின்ற தறிகுவ மென்று
நேடினர் நாம தேவரிற் புகுந்து நின்றதோர் ஜனாயியைக் கண்டார் (உஎ)

நின்னிடைக் கண்ணன்வந்தாதா லிங்கேநேர்ந்ததுபொன்னுடையெனக்கொண்
டுன்னிடை யவன்றன் பதக்கமு முளதா முதவுதி யென்னலும் ஜனாயி
என்னிடைக் கிடையா தென்னலு நீதா னெப்படி·யன்னவ னிங்கே
துன்னிடச் செய்தா யென்றவ டகிலைச் சோதிக்கப் பதக்கந்தோன்றியதே (உஅ)

கண்டவர் வெருட்டுங் காலையி லூரார் கலந்தனர் நாமர்தம் மனையோ
பண்டைய தன்று நேற்றுறு காற்றிற் பறந்தன கூரைக ளெல்லாம்
கொண்டநம் மனையோ புதுக்கில மிதுவோ கூரிருள் விடியுமுன் புதிதாய்
அண்டிய தென்னே யதிசய நாமர்க் கமைத்தவன் கண்ணனே யாமால். (உகூ)

என்பது கேட்டோர் கண்ணனே யருளி னீகல னேபெரு மாடம்
நன்பொரு ளென்பார் சிற்சிலர் செல்வ நனிதரிற் செருக்குமிக் காகி
அன்பில ராவா ராதலா லுதவா னமலனென் றுரைப்பவ ராக
முன்புசோ தித்துக் கொண்டவர் ஜனாயி மோசஞ்செய் பவளென முனிந்தார் ( )

இங்கிவள் சாமித் துரோகியா தலினு லேற்றுதுங் கழுவினி லென்றே
அங்கவ ளைக்கொண் டம்புலிப் பாகைக் கணுகலுஞ் சனாயிதா னமலா
செங்கன்மே னின்ற சீதரா வடியேன் செய்ததெ னிங்ஙனே செயற்கென்
றங்கைக டலைமேல் வைத்தனள் புலம்ப வநாதர க்ஷகனரு ளாலே (௩க)

கழுமர நீராய்க் கரைந்தது ஜனாயி கண்கலக் கந்தனைக் கரைப்பான்
வழுவில னோடி வந்தனன் கண்ட மகிதலத் தோரொலா மகிழ்ந்து
குழுவினர் புகழச் சனாயியைப் பிடித்தோர் கோதிலாய் நின்பொருட் டமலன்
தழுவிவ னோடி வந்ததநானீ தன்னியை யெனவிடுத் தகன்றார். (௩உ)

விடுத்தபின் ஜனாயி வீட்டில்வந் தமர்ந்து விமலனை முன்புபோல் வேண்டித்
தொடுத்தன ளபங்கக் கவிகள்செய் நாளிற் றுளவணி தோளினன் மைக்கூ
டடுத்தெழு துங்கோல் காயிதங் கொண்டங் கவள்சொலு வனவெலா மெழுத
மடுத்தனன் கோயி லிருக்கநேர் வந்தார் மாறிலா ஞானதே வருமே (௩௩)

ஞானதே வரைக்கண் டெழுதிட வுள்ள நாணிமை முதலெலா மறைத்துத்
தானமர் போதுகண்டவர் வணங்கிச் சாற்றுவார் தேவகி தனயா
ஊனமின் றேகாந் தத்திருந் தென்னை யெழுதினை யுரைக்கென நாதன்
றானரு ளுடனே ஜனாயித னபங்கக் கவியெழு தினனெனச் சாற்ற. (௩௪)

கேட்டலுஞ் சிரித்து ஞானதே வமலா கிளத்திய ஜனாயிநின் புகழே
நாட்டல்செய் கின்றா ளதுபிற ராலே நயந்திடத் தக்கது நீயே
தீட்டல்செய் வதுதான் சிறந்ததன் றென்னச் சீதரன் ஜனாயிதான் செப்பல்
வேட்டன னினிதா யிருத்தலா னுனே யெழுதவும் விரும்பினே னென்றான். ( )

முன்புபோ லெழுது கின்றவன் ஞான தேவர்த முகத்தினை நோக்கி
நன்கிது தன்னை மறைத்தது கமல நான்முகற் குந்தெரி யாது
நின்புலந் தோன்றிற் றெவ்வித மென்ன நிமலனை ஞானதே வென்போர்
அன்புட னேக்கி யையநின் பெருமை யடியருக் கெளிதுதா னென்றார். (௩௬)

வினவிய விட்டலன் சிரித்துற ஞான தேவரவ் விமலனை நோக்கி
அனகநீ வருக நாமனைக் காண வென்னலு மமலனும் விரும்பிப்
பினருணர் ஞான தேவர்தங் கையைப் பிடித்துட னுமதே வமரும்
மனைபுகுந் திட்டலு நாமதே வெதிர்ந்து மார்புறத் தழுவினர் மகிழ்ந்தார். (௩௭)

ஆசனத் திருவர் தம்மையு மிருத்த வப்பொழு தன்பரொல் லோரும்
நேசமுற் றடைய வவர்கள்யாவரையு நிமலனுந்தழுவின ரிருத்தி
மாசறு நாம தேவரை நோக்கி மாலடி யார்களைக் காணக்
கூசமில் லாமல் ஜனாயியை யிங்கே கொடுவரு கென்றனன் கூற. (௩௮)

அடியவர் கேட்டுத் தாய்க்குரை செய்ய வவள்மரு மகட்குரை செய்யக்
கடிதிரா ஜாயி வெளியிலே சாண மிகுத்துற ஜனாயிக்குக் கழறப்
படிறறு ஜனாயி கால்கரஞ் சுத்தி பண்ணினள் விரைந்துவந் தங்கே
நெடிதம ரன்பர் குழாத்திடை யிருந்த நிமலனைக்கண் டடிபணிந்தாள். (௩௯)

நின்றவப் போது ஞானதே வென்போர் நிறைகுண நாமரை நோக்கி
இன்றுள தான வதிசயங் கேளீ ரெம்பிரான் ஜனாயிபா டுவதை
நன்றினி தெழுதிக் கொண்டுறு வதனை நான்கண்டு வந்தன னென்ன
மன்றலந் துளவோ னெழு துவதால் வந்ததோர் குறையென்னை யென்றான்.

பின்னரு மெனக்கு ஜனாயிசொல் வதெலாம் பெரியதோ ரின்பத்தைத் தரலால்
நன்னரங் கெழுத லாயின னதனை நவிலுவோர் கேட்பவர் தம்மேல்
முன்னரன் புடையே னாகிப்பின் றருவேன் மோக்கமு மெனவவன் மொழியத்
தன்னரு கிருந்த தொண்டரொல் லோருந் தனித்தனி சிரித்தனர் மாதோ. (௪௧)

ஜனாயியை நோக்கி ஞானதே வென்போர் தங்குமிந் நாமதே வென்போர்
முனாளிர ணியற்கு மைந்தனாய்ப் பின்பு முரணிய வாலிக்கு மகனாய்ப்
பினாளிலுத் தவராய்ப் பாண்டரங் கனுக்குப் பெரிதன்ப ராயினர் நீதான்
இனாளென வுரைத்தி விமலனுக் கன்பா யிருத்தலின் காரண மென்றார். (௪௨)

பத்தவ தாரஞ் செய்தவனை பரமனர்ச் சாவதா ரத்தும்
உத்தம னாகி யுறைதலால் யானு முடனுடன் றோன்றிவந் துற்றேன்
இத்தனை தானென் றியம்பலு ஞான தேவென்போ ரின்பொடு கேட்டு
மெய்த்துள மகிழ்ந்தார் பின்புபாண் டரங்கன் மெய்யடி யவர்க்குரை செய்வான்

நீவிரொல் லோரும் பாடுமெய்க் கவிக ணிலைபெற வெழுதுகி றதற்கு
மாவிர குள்ளோர் தம்மையான் வகுப்பேன் வழுவிலா ஞானதே வியம்பும்
பாவினைச் சச்சி தானந்தர் நிவர்த்தி பாட்டினைச் சோபான தேவர்
மேவிய முக்தா பாயிதன் கவிவை ஞானதே வெழுதவும் விதித்து. (௪௪)

பரமவா னந்தர் பாடலை விசோபா கேசரர் சாவந்தியாமா
ளரகவி சிவாகு ரவர்கூர்ம தாசர் நன்கவி யாவையுஞ் சுதேவர்
அரமிய சோகா மௌர்தந் தொடர்பை யனந்தபட் டராகவு நாமா
வரமிகு தூக்கும் ஜனாயிதன் யாப்பும் வரைகுவன் யானென வகுத்தான். (௪௫)

அங்குள ராண வன்பரெல் லோரும் ஜயிஜெயைய புகழ்ந்தன ராகப
பொங்கிய வுவகை கொண்டுள நாம ரன்பரைபபூசனைபுரிந்து
மங்களஞ் சொல்லப பாண்டுரங் கனுக்கு மாதவன் கோயிலுக் கெழுந்து
தங்கின னூருக்கு மணிக்கிவை யுரைக்கத் தாசாதந தமதிடஞ் சாரநதார. (௫௬)

ஜனுபாயி திருவடிகளே சரணம.

ஆக கதை ௧௨-க்கு செய்யுள் ௬௱௨௰௮.

முற்றிறறு.

மச்சேந்திரநாதர் சரித்திரம்

சங்கரனொரு நாள்பாற் சாகரதீ ரத்தில
மங்கையொடினி துற்று மகிழ்தருகிற ராமன்
தங்கருளுரு வத்தைத் தனதுளமுற வைததுப
பங்கமிலவ ணுமமபகர்தருமவ னுஜன். (௧)

அதுதெரிபனா யான வம்பிகைபதி யான
விதுவணிமுடி யானை வேண்டினளுனை மிக்க
தெதுவுளதொரு தெய்வ மெனவினவலு மன்னுன்
கதுமெனரகு ராமன் காரணமுனா செய்வான. (௨)

பிரமனைமுத லாகப் பேசிமையவ ரோடே
அரனெனவுள யானு மாவதுமவ னுலே
திரனிலையித னுலே ஸ்ரீஹரிதிரு நாமம்
பரவுவெனவ னீலப் படிவமுமுளம் வைபபேன் (௩)

என்றதுவின வுற்ற விம்மலைமக டோர்ந்து
நன்றது னுகத்தி னண்ணியுமிது காறும்
ஒன்றதுதெரி யாம லுறைவதுதக வாமோ
இன்றதுமொழி கிற்பா யெனவிரசித வெற்பான். (௪)

பணிவுடனெதிர் நிற்கும் பார்வதிதலை மேற்கை
அணிவுடனுப தேச மறைதருகிற போது
துணிவுறுநினை வின்றிச் சோர்துயிலது மேவ
மணிதருகடல் மீனின் வயின்மகவும் மென்றே. (௫)

சிவனருளுடை தேசஞ் செவிகொடுவின வுற்று
நவுநரவுரு வாகி நண்ணியவது கண்டு
திவமிகவுறு மச்சேந் திரனெனுமொரு நாமம்
பவனிலகுற நல்கிப் பார்வதியொடு போனான். (௬)

அம்மகவுட னேயீ சானனதரு ளாலே
செம்மைகொள்வை ராகசீலமென்மேலாகி
வெம்மயலது வின்றி மேவரிதிரு நாமம்
தம்மணிநா வோதத் தனிகிரி தரலானார் (௭)

தாய்வயிறது விட்டுத்தாம் வருகிற போதே
மேயினஹம் சோஹம் விடுகிலரத னாலே
ஓய்வருதிரி காலமும்முணர்தரு சக்தி
ஆயினர்யா ராலு மரிவருநிலை யுற்றார் (௮)

அகலிடமுள தீர்த்தம் யாவையுமே மூழ்குந்
தகவுறுநினை வோடு தாம்வருமூர் தோறும்
நுகர்தரலிர வூணாய் நோன்பது செயல் காடாய்
மிகவயதீ ராறு மேவினர்வரு நாளில். (௯)

ஒருதினமோ ரூரிலோர்தனவணி கன்வாழ்
தருமனைமுன நின்று சாற்றினரா லக்கென்
றருமைகொ ளொலி கேளா வம்மனையுறை கிற்பாள்
இருகரநிறை பிச்சை யேந்தின ளெதிர்வந்தாள். (௰)

வந்தவளெதிர் நிற்கு மாதவர் தமைநோக்கி
அந்தமிலுப சாரத் தஞ்சலிபல செய்து
நிந்தையிலுரு வத்திர் நீரிவண்வரு மாயான்
எந்தநல்வினை செய்தே னென்றுருகின ளன்பால். (௰௧)

அன்புறவெதிர் நின்றீ ராதலி னடியேற்கோர்
துன்பிலைமக வில்லை யெனுமொருதுய ரன்றி
நன்பொருளுணர் கிற்கு நற்றவமுதி யோரே
இன்புடனருள் செய்வீ ரொன்றரிசியை யிட்டாள். (௰௨)

அன்றவளுரை செய்யு மன்புறுமொழி கேளா
மன்னினதவ யோகர் மற்றவள்முக நோக்கி
நின்னிடமக வுண்டா நீயிது பெறுகென்று
நன்னிற முளநீறு நல்கினருரை செய்வார். (௰௩)

நீயிதையுண் பாயே னின்வயி னெடுமாறன்
தூயநலம் சத்தாற் றோன்றுவன்மக வென்றே
ஆயவரகல் வுற்றா ரானபி னம்மாது
போயயல் மனையாளைப் புகவகம்வரு வித்தாள் (௰௪)

வருமவடனை நோக்கி மானனவிழி யாளே
ஒருதுறவின ரிங்கே யுற்றனர்பெறு பிச்சை
தருதல்செய்தவர் தம்மைச்சந் ததியருள் கென்றேன்
அருளினர்திரு நீற்றை யயில்கெனவவர் போனார் (௰௫)

கானுணவிளே கின்றே னவிலுகினிவிளே வென்ன
மீனுறழ்விழி யன்ருள் வேண்டலேதிரு நீறு
தானுணவுத விப்பின் றம்வசம்வரல் செய்வோ
ராணுணர்வது மாறி ருர்பலரறி யென்ருள். (௰௬)

அவளுரைகொடு தீயி லன்னதை யிட்டாள்பின்
நவமுடனொரு மூன்று நண்ணின வாண்டாக
உவமையின்மச் சேந்த்ர நாதருமுவ ணுற்ருர்
இவள்மனையிலும் வந்தே இடுகென வெதிா நின்ருா. (௰௭)

மற்றவளிடு பிச்சை வாங்கினாமுக நோக்கி
அற்றையினிளே வுண்டா யரிவைநின்மக னெங்கே
இற்றையெனெதிர் காட்டு கென்றனரவ ளஞ்சிச்
சொற்றருகில னின்ரு ளுள்ளது சொல்கென்ருா. (௰௮)

மாதவரோ நீற்ருல் வஞ்சனே யுளதென்றே
ஓதயன்மனே யாளா லுளவடைப புறுதீயில்
மேதகுதிரு நீற்றை யிட்டனன்வெகு ளன்மின்
ஏதமிதென வென்ரு ளெதிர்துறவினா சொலவார். (௰௯)

நீறிடுபலி யெங்கே நீயிடுமிட மென்ன
மாறிலள்பணி ரண்டு வருடமுமிடு சாம்பர்
வீறொருகுழி யுண்டென் றக்குழியிடை மேவ
ஆறினர்தமை யுய்த்தா ளன்னவரவ ணின்றே (௨௰)

அதிர்தரவா லக்கென் ருரதுவின வுற்று
முதிர்குழியிடை நின்று முந்தினதா தேசென்
றெதிரொலிகுரு சாமி யென்பதொடது கேளாப்
பொதிரதிசய ராகிப பொங்கினரு ருள்ளார் (௨௧)

அவ்வயின்மச் சேந்தர ரானவர்வணி கன்றன்
செவ்வியமனே யாட்குச் செப்பினராட் கூட்டி
இவ்வயினுறு குப்பை யெடுமெனவெடுப் பிக்கத
தீவ்வியவுரு வோடு சேயுறுவது கண்டார் (௨௨)

பன்னிருவய துள்ள படிவமொடுரு யோகு
மன்னினர்படி மீது வைகுதலில ராக
முன்னுறுவது கண்டு முற்றியதவ யோகர்
சென்னியின்மிசை யத்தஞ் சேர்த்தினர்நிலேதீர (௨௩)

அக்குழியிடை யுற்ருே ரப்பொழுதெழ லுற்றுத்
தக்கவரிரு தாளிற் ருழ்தலுநா மந்தான்
தொக்கதொர்பலி கின்றுந் தோன்றினரத ளுலே
மிக்கதொர்கோ ரக்க னென்றனர்விளே தீர்ந்தார் (௨௪)

வேறு.

குழியினின்றும் வெளியில்வந்த கோரக்க நாதர்தமைக் கூட்டிக்கொண்டு
பழியிகந்த முனிவர்செல்லப் பார்த்ததன வணிகன்றன் பாரிதன்னே
மொழிகடந்தின் னனசெய்தா யெனவெறுக்கப் பெரியதவ மோனர்கண்டு
விழியினருள் சுரந்துமக்கு மகனுண்டா மெனவாழ்த்தி மேவி னுரோ (௨௫)

போம்பொழுது கோரக்கர் மச்சேந்திரர் தமைப்பணிந்து பொருந்தெனக்குத்
தாம்பதுமக் கரமெனது தலைவைத்துத் தாரகமந் திரத்தைச்சாற்றி
மேம்படுத்து கெனவேண்ட மச்சேந்தர நாதருடன் விளம்ப கில்லார்
ஓம்புகுரு சேவைசெய்தாற் பின்புதெரிந் துபதேச முறுதி யென்றார் (உ௬)
நன்றென்று கோரக்கர் நவில்குருவின் றாள்வணங்கி நடந்து கூடச்
சென்றங்கோர் நகரத்தின் புறத்திருந்து பிச்சைகொண்டு சேர்கோ ரக்கா
என்றந்த மொழிகேட்டுக் கோரக்கர் மனைகடொறு மிரந்து சென்று
முன்றுன்று பிராமணபோ ஜனமனைமு னுலக்கு மொழிந்து நின்றார் (உ௭)
அம்மனைவாழ் பார்ப்பினியச் சொற்கேட்டு வடைபோளி யதிர சம்பை
விம்மநிறைத் தலுங்கொண்டு மேவிவெளிப் புறத்திலுறு விமல ருக்குத்
தம்மனதன் புடன்கொடுக்கத் தாமுண்டு சந்தோஷந் தழைப்ப தாகி
இம்மதுர வடையெனக்கு ருசியாகி யிருத்தலா லினமும் வேண்டும். (உ௮)
நாளைக்குங் கொணர்கவெனக் கோரக்க ரப்படியே நகருட் சென்றிவ்
வேளைக்குந் தரல்வேண்டு நேற்றளித்த வடையென்று வினவக்கேட்டு
வாளைக்கு நிகர்விழியா ளின்றேது தானியநீ வாங்கு கென்னக்
காளைக்கு நிகர்சிறுவர் குருவுக்கு வேண்டுமெது கடி தீ கென்றார் (உ௯)
அதுகிடையா தெதுவேண்டு மாயினும்யான் றருவலென வன்னாள் கூற
எதுவளித்தா லும்வேண்டே னிகலையேற் போகிலனென் றிவருங் கூற
மதுமலர்சூழ் குழலினவள் மாதவவே டங்கொண்டு வருகின் றோருக்
கிதுதெரியா தோ விலதிங் கெங்கிருந்து வருமென்றே யிகன்றுசொல்வாள் (௩0)
உன்கண்ணைக் குருவினவிற் றருவாயோ தரத்தக்க துளதேல் யானும்
நின்கண்வடை தரத்தக்க திப்போதென் றுரைசெய்ய நிமலர் கேட்டு
நன்கணொன்றைப் பறித்தவர்க்கு நல்குவதை யுனக்கீவே னென்று நல்கப்
புன்கணுடன் பயந்தவளு மவர்விழிவார் செந்நீரைப் போக்கிநின்றாள். (௩௧)
தயைசாந்தி வைராகந் தாங்கிநின்ற கோரக்கர் தம்மு னின்று
பயநீளும் பார்ப்பனியை யஞ்சேனீ வடைசெய்து பரிந்தீ கென்னும்
நயமான மொழிகேட்டு விரைவினெய்யிற்செய்ததனை நல்கலோடும்[ட்டார். (௩௨)
துயர்தீர்தி யென்றுரைத்தோர் கரத்தாற்போம் விழிமறைத்துச் சோரார் மீண்
வந்துகுரு வடிவணங்கி வடைபுசித்தி ரெனமுன்பு வைக்கக்கண்டங்
கெந்தவிதத் தாலுனது கண்போன தெனவுள்ள தியம்ப லோடும்
இந்தநெடுந் தீரமரி தெனக்குமற்றைக் கண்ணுதவு கெனக்கோ ரக்கர்
அந்தவிழி யையும்பறித்து முன்வைக்க மச்சேந்த ரதிச யித்தார் (௩௩)
உடனேநல் லன்பனென வுகந்தவரைத் தடவிவிழி யுடைய ராக்கித்
திடமேவு மான்மஞா னந்தன்னை யுபதேசஞ் செய்தா னுண்டார்
மடமேவு மயலிகந்த கோரக்கர் தமக்குமிச்சில் வாய்ப்ப நல்கித்
தடமேவு சீடனுனைப் போலெனக்குக் கிடைப்பரிது ஜகத்தி லென்றார் (௩௪)
கோரக்கர் சாம்பவரத் துவயர் பிர பாவர் கைனி யர் நிவர்த்தர்
போரப்பொங் கியஞான தேவர்விசோ பாநாமர் புகல்ஜ னுயி
சீரொத்த விவர்களொரு வருக்கொருவ ருபதேசஞ் செய்யப்பெற்று
நேரொத்த வான்மஞானம் புவியிற் பரம்பரையாய் நிலவிற் றம்மா (௩௫)

மச்சேந்திரநாதர் திருவடிகளே சரணம்.
ஆக சரித்திரம் ௫-க்கு செய்யுள் ௲௬௩௫.
முற்றிற்று.

கோபிசந்தராஜன் சரித்திரம்

உத்தரகண் டத்துளே கௌடபங் கா லென்னு மிராச்சி யத்துள்
சித்திரகாஞ் சனபுரிக்கோ ரரசனுந் திரிலோக சந்த னென்னும்
அத்தகுசீ ரரசன்மிக வும்பிரதா பசாலியா யாண்டு வந்தான்
சத்திய னாகியவிவன்றன் பட்டமனை யாளழகு தனிற்சி றந்தே. (க)

நற்குணநற் செய்கைகள்யா வும்பொருந்தி னவளாமை னாவ திக்கு
மிக்குளரூ பலாவணிய மிகுந்தமகன் கோபிசந்தன் மேவு நாளில்
தக்கவவன் பிதாவான திரிலோக சந்தென்போன் சாத லாக
பிற்குழந்தை யாகியகோ பிசந்தனர சாளுங்கா லத்தின் மாதோ. (உ)

ஆயிரத்தோ டிருநூறு மனைவிகளை விவாகஞ்செய் தமர்ந்தும் போகம்
தோய்தலுக்கோ ராயிரத்தோ டறுநூறு தோகையர்நா டகசா லைக்கண்
மேயிருக்க வைத்திராப் பகற்சகல விபவமுடன் விடயா னந்தம்
தேய்தலின்றி யனுபவித்து வந்தான்று யாமைனு வதிசீர் சான்ற. (ங)

பதிவியோ கத்தினன் மிகுந்தவயி ராகமுற்றோர் பகன்மேன் மாடம்
அதிலேறி யுதாசீன மாய்நான்கு திக்கிலும்பார்த் தமரும் போது
நிதிமேவு மந்நகரத் திற்சகல சித்திகளு நிறைவு நேர்ந்த
விதிமேவு மாசாபா சங்கள்கன விலுநினையா வான்ம ஞானி. (ச)

ஆகியரி தன்னையிடை விடாமமற்றியா னித்திடுவே ராயும் பிச்சை
வாகொடெடுத் துண்பவரா யும்விகார சீலமுள வராயுஞ் சால
யூகமிகு தயைசாந்து விகமுடைய ஜாலந்த ரர்க னற்றற்
கேகியா ரணியத்திற் சென்றுலர்ந்து கிடக்கும்விற குகளெ டுத்து. (ரு)

கட்டாகக் கட்டித்தந் தலையேற்றி வழிநோக்கிக் கடுகும் போது
கிட்டாத விவர்தேக நிழற்பூமி யிற்கிளா திந்த னங்கம்
ஒட்டாதோர் முழத்துக்கு மேல்விறகு கட்டுவரு முதனைநோக்கி
எட்டாத வாச்சரிய மிதுவென்னை யென்றுதிகைத் திந்த மாது (சு)

இவரோமா னிடரல்ல ரிறையவனே யெனநினைந்திங் கிவரொ னக்குப்
பவரோகந் தீர்த்தருள்வா ரெனத்துணிந்து மானவெட்கம் பலவு நீத்தே
அவர்தாளே சரணெனவேண் டியதென்றங் கவர்மேவு மடத்தை நோக்கித்
தவர்பாதந் தனக்குபசா ரம்புரிய வேண்டுவன தருவித் தேக. (எ)

ஆராய்ந்து தாதியரோ டம்மடத்திற் சதானந்த ராகிச் சீமந்
நாராய ணன்பதத்திற் சித்தம்வைத்துத் தங்குகின்ற நல்லோர் முன்பு
சீராகச் சிரமீது கரங்குவித்துப் போய்வணங்கிச் சீரி யோரே
நேராக வுபதேச நல்கியெனைக் காத்திரென்று நின்று வேண்ட. (அ)

வினவுமவர் நானெளியேன் கண்டவிட மெலாந்திரிவே னீயோ வேந்தற்
கனையுனது பெருமைக்குத் தக்கவரா யாய்ந்திதோ பதேசம் பெற்றால்
நனிநலமா யிருக்குமென வும்மின்மிக்கோ ரின்றென்று நான்ம தித்துப்
புனிதமுள்ளவுமைச்சரணம் புகுந்தவெனக் குபதேசம் புரிக வென்றார். (கூ)

அதற்கவடன் றிரிகரண சுத்திகண்டா னந்தங்கொண் டருக ழைத்தங்
கிதத்தொடுதங் கரஞ்சிரம்வைத் திணையிலுப தேசத்தை யினிது நல்க
மதர்க்கும்விழி யவட்குடனே மமதையகன் றிறையவனை மனத்திற் கண்டு
சுதத்தைவிட்டுக் குருநாதன் றனைவணங்கி யானந்தங் கதித்து நின்றாள். (௰)

விடையுதவ மனைமேவி யவகாச நேரிட்ட வேளை யெல்லாந்
தடையறத்தன் குருநாத னருகில்வந்தா னாறுபவந் தனைப்பே சிக்கொண்
டடையுமனை புகுந்துள்ளம் பரிசுத்த மாயரியை யானந் தத்தோ
டிடையறத்தேர்ந் திருக்குநாள் சிலகழிய மகன்செய்கை யியம்பு கிற்பாம். (௰க)

வேறு

மைந்த னான மகிபதி யோர்தினஞ்
சந்தமேவித் தனக்குப் பிரியையாய்
முந்த லாமனை யாண்முக நோக்குற
வந்த னன்வந்த போது மகிழ்வுடன். (௰உ)

சயன மேவித்தாம் பூலங் கொடுத்தெனக்
கியைவ தாகிய வென்பிராண நாதனே
மயல்செ யான்சொலும வார்த்தையைக் கேட்டினித்
தயைசெய் வீரெனச் சாற்றுகின் றாளரோ. (௰௩)

உமது தாய்க்குப தேசம் வகுத்துநன்
கமைவு செய்தவ டன்வச மாக்கிய
விமலன் போல்பவன் பாற்றின மேவலால்
நமர்களுக்குப் பழிப்பு நணுகின. (௰௪)

என்ன வேயவ் விறைவனுக் குச்சினந்
துன்ன லாகிநீ சொல்வதைக் காலையில்
இன்ன தென்றறி வேனென் றிராச்செல
மன்ன வைக்குவந் தோன்மந்தி ரிதனை. (௰௫)

நோக்கி யிங்கொரு நோன்பினர் பற்பலு
ளாய்க்கி ளார்ந்துசா லந்தர ரென்னும்பேர்
வாய்க்கின் றோர்தமை நான்கண்டு வந்திக்கப்
போய்க்கொ ணுவெனப் போக்கினன் போயினான். (௰௬)

பரிச னங்க ளுடன்சென்று பண்புளோர்த்
தரிச னஞ்செய்து தாழ்ந்துமை யெம்மிறை
துரிசி லாது தொழற்கழைத் தானென
கரிசி லார்நடந் தேகவக் காவலன். (௰௭)

எதிரெ ழுந்துவந் தன்பினி றைஞ்சித்தன்
அதிர வைக்கழைத் தாசனந் தந்ததிற்
றுதிசெய் தேத்தியின் றைத்தினந் துன்னிதிர்
முதிய ரேயென்று நன்றுமொ ழிந்தனன். (௰௮)

அன்றி ராவவ ரன்னவன் சொற்படி
துன்றி னார்துயி லக்கண்டு தோன்றலான்
வென்றி வீரரின் மேவுங்கி னற்றிடைச்
சென்றி வன்றனைச் சீக்கிரம் வீழ்த்தியே (௰௯)

மீதி லத்தியின் மூடித்தூர் மின்னென
நீதி யின்றிவி ழுத்திநி ரப்பினார்
கோதி லாதவர் கூவத்து ணீரின்மேல்
தீதி லாதுதி யானத்தி ருந்தனர் (௨௰)

உதயமாயின பின்மயி னாவதி
சிதைவி லாததந் தேசிக னைத்துரீஇ
இதய நொந்துநீ ரின்றிம யங்குமீன்
அதையு மன்னையில் லாதம கவும்போல் (௨௧)

தத்த ளித்துத்த யங்கிப் புலம்பியென்
உத்த மக்குரு வெங்கணுற் றார்கொலோ
எத்தி சைச்சென்று காண்பெனென் றேங்கியூண்
நித்தி ரைக்கொள்வ தின்றி நினைப்பிலாள் (௨௨)

ஆயி ருக்கச்சால ந்தரர் சீடரில்
நேயமிக்கசா ணபாவென் போர்பவ
நோய றுத்தெழு நூற்றுவர் தம்முடன்
தூய விப்புவி முற்றுந் துருவுற (௨௩)

இங்கு வேந்தனொ ருதினத் தின்பொடு
தங்கு முன்றிலி னோரந்த யங்கொளி
பொங்கு மாசனத் திற்பொலி வாயுற
அங்கு மாத ரமைத்தத யிலத்தால் (௨௪)

தலையிற் றேய்த்துடம் பெங்குந் தடவமீ
துலவக் காலுற வீசவு லாசமாய்
இலகு றத்திரி வோமொழில் கண்டுகோன்
கலவைச் சேறு கமழக் களித்தனன் (௨௫)

என்னைப் போல்பவ ரெங்குள ரின்றெனத்
தன்னைத் தான்மதித் துற்றது கண்டனள்
மின்னைப போலுமை னாவதி மேனிலை
மன்னச் சாளர வாயுறீஇக் கீழரோ (௨௬)

இனைய பேரழ குள்ளவென் மைந்தனோ
வினையி னாலெமன் கைவச மேவுவான்
எனநி னைந்தழு தாளிரு கண்ணினீர்
அனையன் மேல்விழ யார்தெளித் தாரெனா (௨௭)

மீது பார்த்தன்னை மிக்கழு தற்கிவண்
யாது காரண மென்னலு முன்பிதா
தீது தீருன்னி லுஞ்செவ்வி யோர்திறம்
பாது காலன்கைப் பட்டனர் போலவே. (௨௮)

வாயுஞ் செல்வ மனைவிம காருடன்
ஏயுங் காமத் தழுந்தியி ருப்பதில்
நீயுங் காலன்கை நேரிடு வாயெனா
நோயி னான்மன நொந்தழு தேனெனா (௨௯)

தோன்றும் யாவுந் தொலைவதன் றிநிலைத்
தேன்ற தொன்றுமின் றுண்டென்ப துண்டெனில்
ஆன்ற நீசொல் லெனவவ ளாசைநோய்
ஈன்ற தாகக் கிளர்குரு நாதனை. (௯௰)

சரண டைந்துன் சரீர மமரமாந்
திரம தாகநீ செய்கென வப்படிக்
குரமு ளோரெவ ரோதுகெ னச்சாலந்
தரர்செய் வாரவர் தம்மையான் கண்டிலேன். (௯௧)

பனிரண் டாண்டள வாகநீ பார்ப்பதற்
கினிதின் றென்றழு கின்றதைக் கண்டு கோன்
தனின டந்ததைத் தேர்ந்தொன்றுஞ் சாறறிடா
துனிவெந் நீரின் முழுகியூ ணுண்டனன். (௯௨)

உண்ட பின்னறு தாபத்துடன் முன்னே
கொண்ட வோர்மனை யாள்சொலக் கோபநதி
மண்டக் கூவலின் மாய்த்தன னிந்நகா
அண்டத் தேசிக னையென் றழுங்கினன. (௯௩)

வேறு

எழு நூறுநற் சீடரோ டெழுந்து கானேபா
தாழ்வில் புண்ணியத் தலங்களுங் கங்கையுஞ் சாரந்து
வாழ்வு சேர்நக ரங்களும் வளங்கொணா டுகளும்
சூழ்தல் செய்துதே சிகனைத்தாந் துருவின ரௌகும். (௯௪)

தெரிகி லார்சென்று பரததே சந்தனைச் சேர
வரமச் சேந்திரர் தமைத்துரு விவந்துகோ ரக்கர்
திருபர் சேருமந் நகரிடைச் சென்றுகா னேபா
உரம்வி ராவுறத் தழுவினர் மகிழ்வொடங் குறுங்கால் (௯௫)

வந்த கோரக்கர் நோக்கிமற் றவர்தனைக் கோபி
சந்த னுங்குரு நாதனைக் கிணற்றிடைத தள்ளி
மூந்த லாயது பன்னிரண் டாண்டதை முன்னு
இந்த மேதினி யெலாந்திரிந் தென்பய னென்றார். (௯௬)

குருவி ருப்பிடந் தெரிந்தின்பு கொண்டுகா னேபா
மருவு கோரக்க ரோமலை யாளத்தி லும்மால்
பரவு தேசிகர் பெண்மயல் கொண்டுபா லனைப்பெற்
றொருவு றுதிருப் பதையுண ராதெமை யிகழ்ந்தீர். (௯௭)

எனவி னோதமா யிருவரும் பேசின ரெழுந்தார்
அனகராங்குரு நாதர்பா லடையக்கா னேபா
புனித சீடரோ டினையகாஞ் சனபுரிப் பொழில்வாய்
இனிது சென்றிருந் தனர்மயி னாவதிக் கிசைக்க. (௯௮)

ஒருவ னைச்செல விட்டன ரவனுட னேசென்
றருண்மி குந்தமை னாவதி தனைக்கண்டா தேசு
பரிவு டன்சொலிப் பைம்பொழி லிறங்குகா னேபா
[illegible] லைச்சொல்லக் கேட்டு மைனாவதி மகிழ்ந்தாள் (௯௯)

தேசி கோத்தமர் தமைமினைத் தழுவது தெரிந்து
மாசி லாதநீர் கவலுறேன் மகிமையின் மிகுந்து
காசி லாதஜா லந்தரர்க் காண்பிரோழ் தினத்தென்.
றேசி லார்சொல வின்பமிக் கெழுந்தனர் மகன்பால் (௪௰)

சென்று நித்திரை செய்பவன் றெளிவுறத் தேற்றி
இன்று நங்குரு நாதர் தஞ்சீடர்கா னேபா
துன்று சோலையி லிறங்கியுற் றுரவர் துணைத்தாள்
நன்று கண்டுநீ சரண்புகி னவையெலாந் தீர்வாய் (௪௧)

அவர்த முள்ளமோ வெண்ணெயின் மென்மய தாகித்
திவளுஞ் சந்திரன் றன்னிலுஞ் சீதளந் தங்கும்
நவையி னின்மல ரொன்றுநா னவில்வதை நம்பில்
உவமை யில்பத முறுதியென் றுரைத்ததை யுணர்ந்தான் (௪௨)

நாணி தம்பெற நவின்றதை நழுவுறே னெனத்தாய்
ஊன மில்பதம் வணங்கின னுடனவை யுற்றுன்
ஆனமந்திரி யுடன்சது ரங்கத்தோ டடைந்து
தேன லம்புதீம் பொழிலுறு கின்றகா னேபா (௪௩)

இருப தத்தினு மன்பினே டிறைஞ்சின னேத்தப்
பெருமி தத்தநீ யாரென வினவக்கோ பிசந்தென்
றுரைசெ யத்தெரிந் துடன்றுகள் ளிற்கமு தென்றும்
கரப முற்றிடக் கற்கியென் றுங்கழ றுதல்போல் (௪௪)

உனக்குப் பேரொவ ரிட்டன ரயோக்கியா நீதி
மனக்கொ வாவிவே கங்கெட்ட நீமனை யாள்சொற்
றனக்கி சைந்திடச் சற்குரு நாதனைக் கிணற்றில்
சினத்தொ டாழ்த்தினை தினையள வுஞ்சிந்தி யாமல் (௪௫)

பருதி சந்திர ருளவள வும்படர் நரகம்
தருகி ருத்தியஞ் செய்தனை யெனக்கோபி சந்தன்
வெருவிக் கால்கர நடுங்கியான் செயுமிகு பிழையை
ஒருவி யாள்கென வேண்டினன் வணங்கின னுடனே. (௪௬)

அந்த வேலைமை றுவதி யெதிர்வந்தா தேசு
வந்த காணிபா தனக்குரைத் திடவவர் மகிழ
நந்த னைப்பிடித் தவர்கர நல்கிமற் றிவனும்
மைந்த னேயிவன் பிழைபொறுத் தாள்கென வணங்க. (௪௭)

காணி பாவது கேட்டுளங் கனிந்தன ராக
ஞான மிக்கவ ரோயெங்க ணகரம்வந் தபயந்
தான ளித்திடு கெனவவ ரனைவருஞ் சார்ந்தங்
கான வாசனத் திருத்தினர் கோபிசந் தனன்பின் (௪௮)

பாத பூசனை செய்துபோ ஜனம்பரிந் தளித்துச்
சீத சந்தனம் புட்பதாம் பூலமுஞ் செவ்வே
ஈதல் செய்தனன் காணிபா விறைவனை நோக்கி
கோதி றுதரை யெந்தக்கூ வத்திடை வீழ்த்தாய் (௪௯)

மெய்சொல் கென்னலு மவனிந்தக் கிணற்றிற்றான் வீழ்த்தேன்
செய்கை தேர்ந்திலேன் றனக்கருள் செய்கெனச் செப்ப
உய்வை யஞ்சிடே லிரும்பிலுஞ் செம்பிலு முயர்ந்த
மய்யில் வெள்ளியி லும்பொன்னி லுந்தகு வடிவம் (௫௰)

உன்னை யொப்பதாய்த் தனித்தனி செய்கென வுரைக்க
மன்ன னப்படிச் செய்வித்துக் கூவத்தில் வந்து
துன்னி லத்திலை யெடுப்பித்தான் றுகளறு நாதர்
மின்னு சந்திரன் போலங்கு விளங்கினர் யாரும். (௫௧)

கண்டு கண்களித் தனரதி சயித்தன ராக
அண்டு கானிபா சாலந்த ரரையுளத் தமைத்துக்
கொண்டுஞ் சீடனா கியவெனுற் கொடுத்திடு மபயம்
பண்டு பெற்றன னாகிய பார்த்திபன் றன்னை (௫௨)

நீர்சி னந்துடன் சபிப்பிரோ லந்நெடுஞ் சாபஞ்
சார்கி லாதிவன் மேலிவ னுருவதாய்ச் சமைத்த
சீர்கொ ளும்பிர திமைகண்மேற் சேர்தரல்வேண்டும்
பேர்பெ றுந்தமா லருள்வர மிவன் பெறச் செய்க. (௫௩)

வேறு

எனவுளந் தனிலே வேண்டி யினிதுகோ பிசந்தன் றன்னைப்
பினுமுக நோக்கி லோகப் பிரதிமை யினையக் கூவந்
தினுமரு குறநீ நின்று சுவாமிக்கா தேசு சொல்லென்
றினிதுரை தரவவ் வண்ண மிறையுரைத் திடக்கூ வத்துள். (௫௪)

உறுங்குரு நீயா ரோது கெனலும் யான் கோபி சந்தன்
மறுவிலீ ரொனநீ சாம்ப ராகென வழுத்தச் சாபம்
பெறுகிலா னாகி லோகப் பிரதிமை சாம்பராகி
வறிதுற மற்ற மூன்று மாய்ந்தன வந்த வண்ணம் (௫௫)

கானிபா வரசை யந்தக் கயத்தரு குறநி றுத்தி
மானிநீ குருவுக் காதே சுனாபய மிலாம லென்ன
நானினித் தனியாய் நின்று நவிலிலென் னாமோவென்று
தானின லடைந்து நீரோ கதியென்று தேசு சாற்ற. (௫௬)

கேணியி லிருந்தோ ராய்ந்து கேட்டு நீ யாரொன் றோத
மாணொளி ரடிய னேன்மை னாவதி மைந்த னென்னப்
பேணு நீ யமர மாகப் பெறுகெனக் கேட்டோர் யாரும்
பாணிகள் புடைத்தா னந்த பரவச மாகினார்கள் (௫௭)

உடனவர் தம்மை மேலே யெழச்செய வெழுந்து ளோரை
மடனறு மந்த மைனா வதியவர் தாளைப்பற்றிக்
கடலெனக் கண்ணீர் வாரக் கழுவினாள் பாத பூசை
இடமுறப் புரியக் கோபி சந்தனும் வணக்கஞ் செய்து (௫௮)

மந்திரி களைப்பார்த் தென்றன் மைந்தனுக் கரசு வாய்க்கத்
தந்திடு கென்று ஜாலந் தரர்தமை நோக்கிச்சாமி
நுந்தம துசம்ப்ர தாய நோன்பெனக் கருளு கென்ன
[illegible]லே யமர மாக மொழிந்தனெ னதனைப் பெற்றே (௫௯)

அரசிய னடாத்திப் போக மனுபவித் திருத்த லோவி
விரகுறு விராகங் கொண்டு வீணுடற் கிலேச மென்கொல்
தரணியில் விராகங் கோட றனிலுநஞ் சருந்த லாமம்
பரமதி லுலாவ லாமேழ் பரவையு நீந்த லாமால் (௬0)

யாவையுஞ் செய்ய லாமிவ் விராகமோ கடின மென்னத்
தாவிலக் கோபீ சந்தன் சற்குரு சரணந் தாழ்ந்து
மேவிது காறு நான்கொள் விடயவா னந்தஞ்சாலுந்
தேவரீ ராணைக் கேற்கச் சேர்த்தருள் செய்ய வேண்டும் (௬௧)

எனலுஞ்செய் வனசெய் தைய ரிருக்கச் சே௱ ளிகையை யேந்தி
மனைதொறும் பிச்சை யேற்று வருமவர் தமதில் லாள்பால்
இனைவிரீஇ யாலக் கன்னே யென்னலு மதைவி ளுவித்
துனைவுடன் வெளியின் மேவித் துணைவனை நோக்கி யச்சோ. (௬௨)

நாதரோ யடாத கொண்டு நடந்திரென் ஹற்சில் கோது
நேர்தரல் குறித்தி யாவு நீத்திவ ணேரிட் டீரிப்
பூதலத் தினிலிக் கோல மெவர்கண்டு பொறுப்ப ரென்று
ஆதர முடனன் றோர்தா ளடைந்தன ளலறி நைந்தே (௬௩)

புவிதனிற் புரண்டு மோதிப் புலம்பலை நோக்கி வேந்தன்
றவிரழு கிறதை யென்று சவிப்பதை யெவர்க்கும் போக்கிக்
குவிமன முறுதன் றாய்பாற் குறுகிக்கும் பிட்டு நிற்க
அவிதலி லன்னை யன்பி னணைத்தன ளுச்சி மோந்தாள் (௬௪)

அன்னையே யுன்கை யாற்பா லனமிடு கெனவிட் டாளாய்
நன்னரங் கமுது செய்யு நந்தனன் றன்னை நோக்கி
என்னையே யென்னை யேயென் னுதரத்தி லுதித்த நீதால்
துன்னிய விராக முற்றுன் றொல்குல மெலாமீ டேற்ற (௬௫)

பெரியப தவியைப் பெற்ற பேற்றினைப் பார்த்தெ னுள்ளம்
மருவிய மகிழ்விற் குண்டோ வரம்பென வாழ்த்தி மைந்த
திரிதரு தலங்க ளெல்லாஞ் சென்றொரு பனிரண் டாண்டு
கொருதரம் யான்காண் டற்கிங் குறுதியென் றுரைக்க வுண் (௬௬)

அன்னைத னடியிற் றாழ்ந்தங் கவள்விடை பெற்று நீங்கி
நன்னதி பலவு மாடி, நலதலங் களும்போய்க் கண்டு
பன்னருந் திவிய தேசம் பலவும் பார்த்தினிது சென்று
மன்னுபத் திராவ திக்கண் வதியுந்தந் தங்கை யாக (௬௭)

வயங்குசம் பாவ திக்கா மனைசென்று லக்கென் றேகி
நயந்துணும் பிச்சை கேட்க நாடிமற் றவடன் றாசி
வியந்து வந்தவளைப் பார்த்து மீண்டசம் பாவ திக்குள்
அயர்ந்திடப் பிச்சை கேட்டிங் கடைந்தவர் கோபி சந்தர். (௬௮)

போலவென் விழிக்குத் தோற்று கிறதிது புதுமை யம்மே
சீலமிக் கவளை வந்து தெரிந்திட வேண்டு மென்னச்
சாலவுந் திடுக்கிட் டங்குச் சார்ந்துதன் றமைய னென்றே
எலநன் குணர்ந்தி யாக்கை யிடியுற்ற மரம்போல் வீழ்ந்தாள். (௬௯)

ஆகியங் கழுது தேம்பி யரற்றின ளண்ண ரோநீர்
பாகியல் கிளவி யார்பற் பலராம் னையனைப் போல்வார
வாகுசா லளகை போன்ற வளநகர் வாசவன்வாழ்
போகநன் மனையொன் பானன் னிதிகண்மற் றிவையெ லாம்போய். (௭௰)

வறிதிந்தக் கோல மாக வரற்குக்கா ரணமே தென்ன
நெறிசெய்சற் குருக டாக்ஷ நியமம்பெற் றதின்பின் செவ்வே
செறிவுசெய் பதும நாபன் றிருவடித் தியான மல்லால்
வெறிதொன்றும் வேண்டே னாகி வெளிவந்தே னயர்வு றேனீ. (௭௧)

என்றுதந் தங்கைக் கோதி யிருநிலத் துள்ள தீர்த்தம்
சென்றன ராகியெங்குந் திரிந்துபன் னிரண்டாண் டாக
நன்றுதன் றுய்பான் மேவி நளினமெல் லடிசே விக்கத்
துன்றனை தழுவித் தீம்பாற் சோறிட வுண்டு சென்றார். (௭௨)

மங்கையர்க் கரசாம் பிரேமளா வென்பா ளாண்மலை யாளமச் சேந்திரர்
அங்குறக் கண்டா ளவரழ குள்ளத் தழுந்தின ளாகமற் றவரும்
பொங்குற மயங்கி யிருவரும் விடய போகசா கரத்தினுண் மூழ்கி
இங்கித மாக வனுபவித் திருக்க விவளுக்கோ ராண்மகன் பிறக்க (௭௩)

அம்மக னுக்கு நாமமீ னநாத னாகமச் சேந்திர நாத
ரும்மிக வாஞ்சை யுற்றுமா யாசம் பந்தத்து ளுறப்பிணிப் புற்றார்
ரம்மிய மான பிரேமளா முகத்தை நோக்கிநான் றீர்த்தமா டவந்துன்
விம்முகா மத்தீ மிகமிகச் சிக்கி வீழ்ந்துனைப் பிரியமாட் டாமல். (௭௪)

மேவிய வென்னை யழைத்துமீ ளுதற்கு மேவுவான் கோரக்க நாதன்
ஆவலோ டவனே வெனதுமா ணாக்க னென்றறைந் திடவவள் கேட்டுத்
தாவுதன் மனத்தில் வருத்தமாய் வெளியிற் சார்ந்துமந் திரிகளை நோக்கி
வீவிலென் னகரைச் சுற்றிலுங் கொலையா ளிகடமை மேவுற விதித்தே (௭௫)

எவ்விதத் துறவோ ராயினும் வந்தாற் றலைதுமித் திடுமென வேவ
அவ்விதத் தவருங் காவல்செய் தனரோ யாகவா சான்றனைத் தேடி
செவ்விதின் வருகோ ரக்கரோர் வீட்டிற் சென்றுநின் றலக்கென் றோத
கவ்விநேர் விழியாள் வெளிவந்தங் கவரை நோக்கின ளவிலுகின் றனளே (௭௬)

அன்னவ ரழகு மிளமையுந் தேசு மனைத்துங்கண் டிரக்கமேற் கொண்டே
இந்நக ரத்துட் புகுந்திட வேண்டா மேனெனி லிதிலர சாளும்
நன்னலப் பிரேம ளாவெனு நங்கை நண்ணுறுந் துறவினர் தம்மை
துன்னுமே வலராற் கொலைசெயத் துணிந்தாளெனவவர் துணுக்கமுற் றுளத்தே

எப்படி நமது குருவினைக் காண்ப தென்றெணி யொருமர நிழலில்
அப்புடை யிருக்கத் துயரொடு வேட தாரிக ளடைந்தன ராக
தப்பிலகோ ரக்கர் நோக்கிநீர் துயரஞ் சார்ந்திவண் வந்ததென்னென்ன
ஒப்பிலிந் நகராள் பவரிடஞ் சென்றெம் முடைநட னங்களைத் தெரித்தால் (௭௮)

வேண்டிய பரிசு கிடைக்குமற் றதற்கு மிருதங்கி நோயின னானேன்
ஈண்டிவண் செய்வ தென்னென வெண்ணி யின்னலுற் றேனெனுவிசைக்க
ஆண்டது புரிதற் கியாம்வரு கின்றே மழைத்துநீர் சென்மினென் றறைந்தார்
மீண்டது கேட்டோர் மிகவிருப் புற்று மேவுமந் நகர்வயிற்சென்றார் (௭௯)

மச்சேந்தி ரரும்பி ரோமளா வுஞ்சேர்ந் தொருதனி யாசனம் வதிய
அச்சேர்வு நோக்கி யவர்கண்முன் வேட மடைவுட னடைக்கோ ரக்கர்
கைச்சேர்வி னன்மத் தளங்கொட்டத் தன்னைக் கண்டிடா திருந்தது கண்டு
பொச்சாப்பி லாதோர் தெரிவுறத் தமது சீடன் வந்தானென்று பொருந்த (௮௰)

மத்தளத் தொனியாற் றெரித்தன ரதுபி ரோமளா மனந்துணுக் குற்றுக்
கைத்தல நெரித்து வினவிமச் சேந்தி ரர்தமைக் கறங் குமத் தளத்து
இத்தநல் லிசையைக் கேண்மெனக் கேட்டுச் சீடனென் றறிந்தன ரெழுந்து
சித்தமொத் தணைத்து மகிழ்வொடு முகமன் றெளிவொடு பேசின ரிருக்க (௮௧)

வேடதா ரிகட்கு வேண்டிய வுதவி விடுத்தபின் றனதுநா யகரைச்
சீடனாய் வந்தோ ரழைத்துடன் செல்வா ரெனத்திகைத் தன்னபா னங்க
ளுடுறு தல்லும் பகலுநைந் திருக்க நண்ணுகோ ரக்கர் சற்குருவின்
நீடுநல் லமயம் பார்த்தொரு தினத்தி னீவிரென் னுடன்வரு கென்றார் (௮௨)

நேயநா யகியை நீங்கமாட் டாதார் நீர்வளம் பொருந்துமின் னகர்போல்
ஆயதா யுடற்கு முயிராக்குமின் பஞ்செய் தொன்னக ரெங்கணுங் கிடையா
தாயதா லுஞ்சே யவன்மிகப பிரிய னாகலா லும்மிவ ணீங்க
வாயகில் லாம விருக்கிறே னீவா வென்பதும் வழுவுறன் மாட்டேன். (௮௩)

யாதுசெய் கேனென் றழுங்குசற் குருவி னின்னலைக் கண்டுகோ ரக்கர்
எதுசெய் வோமென் றெண்ணினர் சின்னா ளிருக்கவங் கொருதினத் திரவில்
மாதுடன் சயனித் திருக்குமச் சேந்த்ர ரருகுறு மகவுமெல் லணையின்
மீதுநீர் மலத்தை வீழ்த்திட வறிந்து விரைந்துகோ ரக்கரைக் கூவி. (௮௪)

இக்குழந் தையைநீ கழுவிவா வெனலு மெடுத்துப்போ யுதயகா லத்தில்
மொக்குணீ ராற்றி லலம்பிக்கன் மீது மோதின ருடம்பெலாஞ் சிதற
மிக்குநன் ருகத் துவைத்துவந் துலர வெயிலிடை யிடமச்சேந் திரர்தாம்
புக்குமீ னருதை னெங்கென வினவபுனலிடைத் துவைத்து வெய்யிலிலே (௮௫)

உலரவைத் தேனென் றுரைத்தலுஞ் சுதனை யுளுற்றினன் கொலையெனத் துய
அலறிவாஞ் சையினன் மூர்ச்சித்து மணமே லழுந்துற விழுந்தன ரப்போ [ரால
திலகிய பிரோம ளாவயிற் றிலுமார் பிலுமுகத் திலுந்தலை யினிலுங்
குலவுற வறைந்து கொண்டுகோ வென்று கொதித்தழு துறப்புரண்டனளால் ( )

தெளிந்துறு மயக்கந் தேசிகர் தமது சீடரை நோக்கியென் சேயை
விளிந்திடச் செய்தா யிதுநினக் கழகோ மீனரு தனையிது பொழுது
குளிர்ந்தியா னெக்க வரவழைத் திடாயேல் கோதினற் சீடனீ யலனென்
றளிந்திடப புகலு முன்னெரு நூற்றெட் டாயமீ னருதனை யியல (௮௭)

செய்தன ரதனைக் கண்டபி ரோம ளாமிக வதிசயஞ் சிறந்து
பொய்தவி ரவரை நோக்கியென் வயிற்றிற் பிறந்தபுத் திரனின்னெனென்று
மெய்தெரி விக்க வேண்டிய தென்று வினவலு மறைந்துநூற் றேழ்சேய்
எய்தின தொருசேய் தனையவள் கையி லிவனுன்சேய் கொள்கென வீந்தார். ( )

பின்குரு நாதர் தமைத்தொழு தையே பெயர்கிலா திவ்விடை வெகுநாள்
இன்புட னிருந்தீ ரிப்பொழு தென்றே டினிதுவம் மெனவிரைந் தியம்ப
அன்புறு மச்சேந் திரரிவ னுடனு னனுகுரு துறிவிவ னின்னும்
என்புரி குவனே வென்றுளத் தெண்ணி யெதிர்பிரோ மளாமுக நோக்கி (௮௯)

போய்வரு கிறெனென் றோதலும் பிரேம ளாமிகு போகத்தி லிச்சை
யாயவர் தம்மை நிறுத்தல்செய் வேனே லாம்விப ரீதமென் றேவென்
றோய்வுறு போது வழிச்செல வுக்கென் செய்வரொன் றோர்தங்கப் பாளம்
ஞாயவர் சோளி தனிலிட்டுச் சீடர் தெரிவுறா தணைந்துகண் டொளித்தாள். (௧௰)

உம்மைநா னினிமே லென்றுகாண் பேனென் றுய்த்திடச் சீடரோ டணைந்து
செம்மைசேர் நகர்விட் டோரர ணியத்திற் செலும்பொழு தொருவருஞ்செல்லா
வெம்மைசே ரிடத்திற் சீடனை நோக்கி வெறுவலுண் டோவிவண் களரால்
இம்மைநீ யோது கென்னலுஞ் சீடரீ யாவையுந் துறந்துள வுமக்கு. (௧௧)

யாதொரு பொருளு மிலாதுறச் சோரர் பயமெங்ஙன் வருமெனவியம்பிக்
கோதறு தடாகக் கரைவயிற் குறுகிக் கோரக்க ரிடத்திற்கைச் சோளி
தீதறக் கொடுத்துச் சென்றனர் சௌச விதிசெயச் சீடரப் போது
நீதிசேர் நமது தேசிகர் தமக்கு நெடும்பயம் வருதற்கே தெதென்று. (௧௨)

சோளியைப் பரிசோ தித்திட வதனுட் சுடர்தங்க பாளத்தைக் கண்டு
நீளிய விதனு னல்லவோ வென்று நினைத்தந்தத் தடாகத்தி லெறிந்து
பாளமெவ் வளவோ வவ்வள வாகப் படுங்கற்கள் பையுளே நிறைக்கத்
தாளொடு கைக ளலம்பினர் வந்து தமதுசோ ளியைப்புயந் தரித்தே. (௧௩)

இருவருங் கூடி வழிநடந் தேக வெகுவொரு வனத்தினைக் கண்டு
வெருவுறு சீடர் தம்முக நோக்கி மேவுமிவ் வழியிடைச் சோரர்
தருபய முண்டோ வென்னலுஞ் சீடர் தவிர்ந்தது பின்னரோ யென்றார்
குருவதை வினவி யென்னிவ ணிங்ஙன் கூறின னெனவதி சயித்து. (௧௪)

தனது சோ ளிகையைப் பார்த்ததிற் றங்குந் தங்கப்பா ளத்தினைக் காணு
தினமிகு கற்களிருந்தது கண்டா ரவையெலா மெறிந்துகோ ரக்கா
எனதுபி ரியனு யகிவழிச் செலவுக் கீந்தபொ னெறிந்துகற் செறித்தாய்
நனரிது நன்று யிருக்கிற துலகி ருறடிலா ரியற்குறு சீடர். (௧௫)

உடல்பொரு ளாவி யுதவுவ ரதைவிட் டென்வயி னுறுபொரு ளனைத்துங்
கெடலியற் றினைநீ யாதலா லெனக்குக் கிளருநற் சீடனே யல்லை
படரொனக் கடியச் சீடர்செல் வழியில் பறம்பினைப பார்த்ததிற் சிறுநீர்
விடமலை முழுதுங் கனகம தாக மேவுமா ரியர்தமை நோக்கி. (௧௬)

தமக்குவேண் டியபொன் கொள்கென வாசான் றங்கமா கியமலை தனைப்பார்த்
தமைப்பரு மாயை யாலறி வழிந்தே னெனத்தெளிந் தாய்ந்துகோ ரக்கா
இமைப்பிலர்க் கமுத மீந்சமா லேநீ யென்பதை மறந்தன னெனநீர்
உமைக்கொரு பாக ரவதரித் தெனக்கு மாண்மிய மோங்குவ தாக (௧௭)

உலகினர் மாயை யாலுறப் பிணிப்புற் றலைவபோ லபிநயம் புரிந்த
நலகுரு நாத ரல்லவா வென்று நயந்துகொண் டாடிநன் கிறைஞ்சத்
தலமெலாம் வணங்கத் தக்கவர் சிரித்துத் தமனிய மலைதனை முன்போல்
இலகுறப் புரிந்தங் கிருவரும் வந்து புட்கர தீர்த்தத்தை யெதிர (௧௮)

ஞானிபா வுடன்ஜா லந்தரர் வந்து கண்டுநன் காலிங்க னஞ்செய்
தானபின் பிவர்கண் முகமனன் கியம்பி யானந்தக் கடலிலாழ்ந் தனராய்த்
தேனென வரிதன் குணவனு பவத்தைத் தெவிட்டிடா தியம்பினர் சிலநாள்
யோனபி னன்பி னொருவருக்கொருவர் விடைபெறீஇப் போந்தனரம்மா (௧௯)

இத்திரத் திவளைத் தியாணிப்போர் தமக்கு மிவர்புகழ் வினவுவோர் தமக்குஞ்
சித்திக ளெவையுஞ் சித்தித்து மகிழ்வு சிறப்பமெஞ் ஞானமுஞ் சிறந்து
நித்திய நிலைபெற் றுயர்வற வுயர்ந்த நிமலநா ராயணன் பதமாம்
முத்தியு.மெளிதிற பெற்றுகல் வாழ்வு முயல்வின ராகிவீற் றிருப்பார். (௩)

கோபிசந்த்ராஜன் திருவடிகளே சரணம்.

ஆகசரித்திரம் (௬௬) க்கு செய்யுள் (௩௨௬௬).

முற்றிற்று.

சாங்கதேவர்சரித்திரம்

ஒருசின ஞானந லுத்தமர் விமலன்
மருவுறு கோயிலில் வந்துவ ணங்கித்
திருமக ளையக செல்லுவ னளகா
புரியிடை யருள்கென வருள்கொடு போனார். (௧)

ஆரவணி பயனெனு மங்குறு சித்தே
சுரனிடை மேவினர் சுதரிச னத்தான்
வரவுரு வானவர் வந்தது சாங்கர்
தெரிவுற லாயினர் செய்கைதெ ரிபபாம்· (௨)

அயமொரு தினமுதல யாமம தற்குள்
நயமக பதிபதி னல்வர்பி றந்து
மயறரு கருமவ சத்தின ராகிப
பயமிகு சிறையடை பட்டனர் முன்னே. (௩)

முந்தின நாரத முனிவரை யன்னோர்
வந்தனை புரிதலு மகிழவொடு கண்டு
நந்தலி லரிதிரு நாமந வின்று
சிந்தையின மகிழ்வுசி றக்கவி ருந்தார். (௪)

உறைபதி னல்வரி லொன்றிய சாங்கர்
சிறையிடை நாள்பல செல்லவி ருந்தோர்
மறைதெரி நாரதர் மாமுக நோக்கி
இறைசிறை தீரவெ னக்கரு ளென்றார். (௫)

என்றதை நாரத ரினிதுதெ ரிந்து
நன்றது வானந கர்க்கணு றுதால்
நின்றது பண்டரி நிலவுல கத்தில்
சென்றது சேருதி தீவினை தீரும். (௬)

பண்டரி யென்பது பாரிடை நீள்வை
குண்டமெ னத்தகு கோநக ரங்கே
புண்டலி கர்க்கருள் பொங்கரி செங்கற்
கண்டன தாளுற விடைகர முறவே. (௭)

நிற்பது தன்னைநெ டுந்தல மேவுஞ்
சற்சனர் கண்டடி தாழ்வுற லாகப்
பொற்புறு பஜனைபு ரிந்துற லாலே
அற்புட னீயவ ணடைதரல் வேண்டும். (௮)

என்பது வினவியி சைந்துள சாங்கர்
துன்புள யாக்கைது றந்தவ ணேக
அன்பினு பாயம றைந்தருள் கென்று
மன்பெறு நாரத முனியைவ ணங்க. (௯)

மற்றவர் துவாதச வக்கர மறையைச்
சொற்றன ரன்னது சொற்றிட வன்றே
பற்றற லாயினர் பண்டுள தேகம்
உற்றுள ஜானவி யொழுகொரு தீரம். (௰)

உளவொரு கிழமறை யவனிலு தித்தார்
அளவறு மகிழ்வின ராயனை தந்தை
இளமைகொ ளெட்டென விசைதரும் யாண்டில்
வளவுப நயனம கிழ்ந்தனர் செய்தார். (௰௧)

அன்னதொர் மகனெவி டஞ்செல லாக
உன்னினு மேகவு ரம்பொலி வுற்றும்
பன்னின படிவச னங்கள்ப லித்தும்
முன்னிய சித்திகள் யாவுமு டிந்தும். (௰௨)

எழிரு வித்தையு மியலறு பத்திற்
சூழொரு நாலுள தொகையுறு கலையும்
ஊழினு ணர்ந்தனர் யோகம தெட்டும்
வாழ்வுற வாயள்வ ளாதுவ இந்தார். (௰௩)

ஈரெழு நூறுவ ருடபரி யந்தம்
சாருற யமவச மாதற விர்ந்தார்
நேருறு வார்த்திக நிலையடை யாமற்
பேருல கிற்பிர தாபமி குந்தார். (௰௪)

கானதெ சத்தொர்ம டுக்கரை தன்னிற்
ஆனம டத்தில்வ சிப்பது மாகி
ஊனமி லாதகோ தாவிரி யுற்றும்
ஞானமி யற்றுவர் நாடொறு மம்மா. (௰௫)

எழிரு நூறுள சீடர்களெய்திச்
சூழுற யோகுதொ டர்ந்தன ராகி
வாழ்வுறு வோரெனில் வல்லவ ரில்லை
ஆழ்கடல் சூழுல கத்தென லானார் (௰௬)

அன்னத றிந்தச ரீரியு ணர்மை
தன்னைய டக்குறு தத்துவ ஞானி
மன்னிய சீரள காபுரி வந்து
துன்னினர் பாலருள் சூழுதி யென்ன. (௰௭)

வினவிய சாங்கர்வீ கோதமி தென்று
சொனவவ ருக்கொரு சூழ்கடி தத்தை
முனமெழு தித்தெரி வோமென முன்னிப்
பினமொழு தாதுபி றழ்ந்தன ரொன்ப. (௰௮)

ஆசிபு கன்றெழு தும்படி யானல்
தேசிக ரையவர் சேர்தற காது
மாசறு தேவரீ ரொன்றுவ ரைந்தால்
ஆசுறு நான்முதி யோனென லாலே. (௰௯)

என்றுவெ றுங்கடி தத்தினை யீந்து
சென்றவ ருக்கிது சேர்த்துதி யென்று
ஒன்றிய சீடனெ ருத்தனை யுய்த்தார்
நன்றென வான்வழி நண்ணின னன்றே. (௨௰)

பண்டரி நாதனை யுன்னுவோர் பக்கல்
அண்டின னியுமு னறிந்துரு ணர்ந்து
கொண்டிது சாங்கர்கொ டுத்தது வன்றே
வண்டவ வென்றிட வாமென வைத்தான். (௨௧)

ஊனமி லார்கடி தத்தையு டைத்துத்
தானதெ ழுத்தில தன்மைதெ ரிந்தே
ஈனமி லாவய தேழிரு நூறும்
போனது வெறுமையி தென்றது போலும் (௨௨)

இத்தனை வயதுக ழிந்தின முஞ்சீர்
உத்தம ஞானமு ணாந்திலை யென்ற
சுத்தசை தன்னிய சொரூபம தெங்கும்
ஒத்தது பெரியது சிறியது மூதே. (௨௩)

இளையது மூத்தது வென்பது லாது
கிளர்பொருண் மாயைகி டைத்தசரீரத்
துளதினி யேனுமு ணர்ந்துகொ ளென்று
வளமுட னெழுதிவ ழங்கினர் மாதோ. (௨௪)

வாங்கின சீடனெ ழுந்துடன் வந்து
சாங்கரி டத்தது தந்திட வாசித்
தாங்கதி னுட்பொருள் யாவுமு ணர்ந்து
நீங்கின நாள்வெறி தாய்நெடி தென்றே. (௨௫)

ாதெழு தினவரி வீசனை யின்றே
அசர மொடுதரி சித்திடுவோமென்
றேதமி யற்றுவி யாக்கிர மேறித்
தீதியல் பாம்புசெ லுத்திட வந்தார். (௨௬)

வருவது சுவ பிசைவைகின ரோர்ந்து
தெருவழி யேசுவர் செல்கென வேவி
மருவுறு சாங்கனை யெதிர்கொள வந்தார்
கருதின ரெதிர்வரல் கண்டுக ளித்தார். (௨௭)

உயிரில தேறின ருறுமவர் முன்னே
உயிருள தேறி ஏறுறமிக நாணிச்
செயிரறு மன்புசெ ழிக்கவி ழிந்து
செயிரறு மறிவரு டேசிக ரொன்றே. (௨௮)

நெடிதுப ணிந்துமு னின்றனர் நீரோ
படியைய ளந்துறு பண்டரி நாதன்
அடியெனை யாள்கென வாலநி ழற்கீழ்
முடிவுறு தேசிக மூர்த்தியு முந்தி. (௨௯)

இருவரு மொருமன மெய்திய பின்பு
மருவிய சாங்கனா வாழ்த்திநன் ஞானம்
அருளினர் ஞானந லாரிய ரிந்தத்
தருவடி நின்றவர் சார்குவர் மோக்கம். (௫0)

என்றனர் சாங்கனா யில்லிடை மேவச்
சென்றனர் மங்கள தீர்த்த தாடி
அன்றவர் தங்கை நிர்வாண மாதாக
ஒன்றது கண்டனர் சாங்கரோ ளிந்தார். (௫௧)

மேயின சாங்கருண் மேவுத லின்றிப்
போயின ராயுறு போதறி முக்தா
பாயிமெய்ஞ் ஞானப ரந்தனை யுற்றும்
ஆயிலே சுத்தந லறிவென வன்பர். (௫௨)

உமதறி விபபடி யுறுமென வறியேன்
றமமக ளுறயென வந்தடி தாழநது
நமவென ஞானந லாரியர் நன்காய்
அமர்தர வாழ்த்தினா சாங்கனா யமமா. (௫௩)

சாங்கரு மற்றவா சாற்றிய படியே
தீங்கறு ஞான மிகுந்து சிறபப
நீங்கறு முடலபி மானநெகிழ்ந்தே
ஓங்கரி நாமமு ரைப்பவு வந்தார். (௫௪)

வேறு

ஞான தேவரன் றிரவுற வரிதிரு நாமம்
ஆனகீர்த்தனஞ் செயததொடங் கினாதி லறைவார்
ஈன மேவுமிக் கலியுகத் தினிலெவர் களுக்கும்
தீன ரக்ஷக ஞமமோ துறுமொரு செயலே. (௫௫)

அன்றி வேறிலைத் தவமெனப் பாகவ தத்தில்
நன்று சொல்லினர் சுகர்த ஹலரி நாமம்
ஒன்ற வோதுறு மவரடி களிலுள வாகும்
துன்ற வோதிய நால்வகை முத்தியுந் துலங்க. (௫௬)

நாம மோதுறு மவரடி ரேணுவி னலத்தால்
தோம கன்றுமூ வுலகமு முய்வுறுஞ் சொலுமிம்
மாம டந்தைமார் பினன்றிரு நாமத்தின் மகிமை
யாம மைந்துமுற் றுறுங்கொலோ வென்றுத யத்தில். (௫௭)

விட்ட லன்றனக் காரதி செய்துமே வுறுவோர்க்
கிட்ட மாம்பிர சாதமு மருளின ரினிதாய்
மட்டி லன்புள சாங்கனா நோக்கிமா தவனை
முட்டில் பண்டரி போய்த்தரி சியுமென மொழிந்தார். (௫௮)

சென்று கண்டவர் தமையெலாம் பாவனஞ் செய்யும்
மன்ற லந்துள வோனுறு பண்டரி வாழ்க்கை
நன்று நன்றென நால்வர்க்கும் வந்தனை நவின்றார்
ஒன்று நல்விடை பெற்றனர் சாங்கரங் குடனே. (௫௯)

தாளம் வீணைமத் தளமுத லியவெலாந் தயங்க
நீள வாமனு ஞைமங்கள் வாய்தொற நிரம்ப
ஆள ரானவ ருடன்பயின் றனந்தா வேச
கோள ராய்நடந் தார்திருப் பண்டரி குறித்து (சo)

கோபுரங்கண்டு கும்பிட்டுப் பாசங் கொண்டு
மாபு ரந்தழு வலும்வணங் கலுநடி க்கலுமாய்
மீபு ரந்தா நகரிதின் வேறிலே வம்மின்
ஒபு ரஞ்செல வென்றன ரொருவருக் கொருவர் (சக)

இவ்வி தத்தின ராய்நகர் சென்றவ ணிருக்கும்
செவ்வி பெற்றசா துக்களைக் கண்டுசே வித்து
மெய்வி திர்ப்புடன் றழுவினா விதித்துண்ட மேவித்
தெய்வி கப்புனல் படிந்துபுண டலிகனைச சோந்து. (சஉ)

கண்டு பூசித்து நகர்வலம் வந்தகை குவித்துக்
கொண்டு கோபுர வாயிலிற் படிந்து கும்பிட்டு
மண்டு மன்பொடு கருடகம் பதத்தை வணங்கித்
தொண்டு கொண்டபாண் டுரங்கனைக் கண்டடி தொழுவான். (சங)

கோயிலுட் சென்று மகிழ்வுடன் றழுவிக் கும்பிட்டுத்
தாயி லன்புள தயாநிதி தன்னைநோ க்கண்டு
வாயி லேதுதி யாபபா வசக்கண வீமல்கி
ஆயில்வேதமு மளவுறு வமலன்பா லன்பால் (சச)

வழுத்தி னார்பல வகைபெறுந் தோத்திர மழுத்திப்
பழுத்த பொன்னலர் மேன்மங்கை சதியா பாமை
முழுத்த சீர்பெறு மாருதி கோயிற் கணமுந்தி
அழுத்து மன்பொடு கண்டுதோத் திரத்தொடஞ் சலித்தா (சரு)

போற்று றுஞ்சபா மண்டபம் போந்துகீர்த் தனங்கள்
சாற்றி நின்றுபின் சாங்கரச் சநதிரபாகை
ஆற்ற கன்கரைப புறத்திலோா மருங்கினி தமர்ந்து
நோற்றி ருந்தனா தீர்த்தமா விட்டலனை நோக்க (சசு)

உணவு நித்திரை யொழிந்து மூந் நாளள வற்றோர்
மணநி ரம்பு பைந் துளவி றைன் றனைமற வாமல்
அணவு மன்பினா திடவயி ராக்கிய மாந்தான்
வணநெ டுங்கடல் போல்பவ னந்நிசி வந்தான் (சஎ)

தனது மெய்வடி வத்தொடு தோன்றலுஞ் சாங்கா
மனநி ரம்புறு மன்புட னெழுந்து வணங்கித்
கனமி குந்துதி சொலலினா ற்றலுங் கண்ணன்
அனகா கைத்தலம் பற்றின னாற்றிலுட் சென்றான் (சஅ)

மணிம யத்தொரு மண்டபங் கண்டெற் றதனுள்
அணிமி குத்தசிங் காதனத் தகிலகா ரணனும்
துணிம றைபபொருள் பொன்புவி நீளைபாற் றுலங்க
நணியி ருப்பதுங் கண்டசங் கதியினை நண்ணி. (சகூ)

புண்ட லீகரு ளித்தரு முத்தரும் பொலியக்
கண்டு மிக்கதோ ரானந்த மேவினர் கனிந்து
தண்டு ழாய்முகில் சந்நிதி முன்புசாஷ் டாங்க
தெண்ட னிட்டெழுந் தாடினர் பாடினர் சீர்த்தி (௫௰)

பரவ சங்கொண்டு கண்களி லானந்த பாஷ்பம்
தாரமு னிற்கின்ற சாங்கதே வரைத்தனி நோக்கிப்
பிரம னைப்பெறு கண்ணனுன் செங்கன்மேற் பெரிது
வரம ளித்துளேன் யாவர்க்கும் பேரின்பம் வாய்பப. (௫௧)

தீர்த்த மாகியும் க்ஷேத்திர மாகியுந் தெரியா
மூர்த்தி யாயுறை கின்றனன் முன்னுக முயலுன்
சீர்த்த பத்தியின் சீலத்தை மகிழ்ந்தனெ னுனக்கு
நேர்ந்த நல்வரம் வேண்டுகென் றுனரு ணிரம்பி (௫௨)

என்ன முன்னின்ற சாங்கர்தே வாகிதே வேசி
நன்ன லந்தெரி யாவெனக் கருள்வது ன் னளினம்
அன்னபொற்சர ணத்தியா னத்தினை யன்றிப
பின்ன மொன்றுமின் றெனவுளைத் தாரன்பு பெருகி (௫௩)

நன்ற தாகுக வென்றன னந்தர்கோ னந்தன்
என்ற கண்ணனை யிறைஞ்சினர் வெளியில்வந் தேகிச
சென்று கோயிலிற் பாண்டுரங் கனைத்தெரி சித்து
மன்ற லார்திரு நாரண புரம்வந்து வசித்தார் (௫௪)

வேறு.

அங்குறு நாளி லோர்நா ளவர்தியா னஞ்செய் போதில்
செங்கன்மே னிலவுந் தேவன் றிகழ்ந்தனன் சாங்கர் நோககிப
பைங்கழல் வணங்கிப் போற்றப் பரமனுண் மகிழுந்து நீ போய்ப
பொங்கிநீர் நிரம்பு கோதா விரிக்கரை பொருந்தி நாளும் (௫௫)

கேசவமூர்த்தியாகக் கிளர்ந்தசா ளக்கி ராம
பூசனை புரிந்து வாழ்தி யெனவது பொருந்த நல்கி
மாசறு சோதி செல்ல மற்றவர் மகிழுந்து பொற்றுக்
காசவிர்திரைநீர்க் கோதா விரிநதிக் கரையைச்சார்ந்தார் (௫௬)

புண்ணிய தம்ப மென்று பொருந்துமோ ரூரில் யாரும்
நண்ணுற மடங்கோ டித்து நல்குசா ளக்கி ராமம
கண்ணுறப் பதிட்டை செய்து கனிந்தன்பு நிரமபிப பூசை
பண்ணின ராகி நாளும் பயின்றனர் சீட ரோடு (௫௭)

பரமனைப் பாடி யங்குப பயிலுநா ளினிற்கல் யாண
புரமதிற் றனவா னுகிப பொருந்துசங் கரனென் றோத
விரவுமோர் பார்ப்பான் வீந்தான் விதவையா யினம ளூட்டி
இருதுவா யினளன் னென்று யிரங்கின ளடிது சோர்ந்தாள் (௫௮)

உளதனம் யாவுந் தான தருமங்க ளூளுற்றி மைந்தன்
கிளையொலும் பெடுத்துப் போய்ப்பா கீரதி விடுதற் கெண்ணித்
தளர்வுறு மருகி யோடு காசியாத் திரைக்குச் சார்வாள்
வளர்புகழ்ச் சாங்க தேவர் வசிக்குமூர் வந்தி றுத்தாள். (௫௯)

வந்தவன் சாங்க தேவர் மகிமைகள் கேட்டன்றோ னாச்
சிந்தையிற் காண வெண்ணி மருகியுந் தானுஞ் சென்று
முந்து தான் வணங்கச் சாங்கர் மொழிந்தன ராசி பின்னர்
அந்தமில் மருகி தானு மவரடி பணிந்து நின்றாள் (௯௰)

சுரிகுழ லிளைறவு கண்டு சுமங்கலி யிவளென் றெண்ணி
அரியநன் மகனுண் டாக வுனக்கென வாசி சொன்னார்
பெரியசோ னக்காள் கேட்டுப் பிள்ளையும் விதவைக் குண்டோ
தெரிவைமற் றிவளை வேட்டோ னனதொரு சிறுவன் செத்தான். (௯௧)

யாமிரு வருமன் றன்ற னெலும்பினைக் கங்கை சேர்க்கப்
போமிடை நுமைச்சே வித்துப் போவது கருதி வந்தோம்
சாமிமற் றிவளுக் காசி சாற்றிய துண்மைத் தாமோ
நோமிது வெனக்கண் ணீர்விட் டழுதன ளுவன்றுநின்றாள் (௯௨)

நின்றவ டன்னை நோக்கி நிறைபுகழ்ச் சாங்க தேவர்
ஒன்றுமென் னுரைபொய் யாதுன் மருகிக்குப் புதல்வனுண்டாய்
நன்றுநுங் குலம்வி ளங்கு நாளுமென் றங்க முன்பு
துன்றுறப் புரிந்தவ் வங்கந் தோய்வுறத் தீர்த்தம் பெய்து. (௯௩)

அத்திதோய்ந் துறுநீர்த் தத்தை யளகத்தாள் பருகச் செய்தார்
வித்ததாய் மருகி கர்ப்பம் விளங்குற வயிறு வாய்த்துப்
பத்துமா தமுஞ்சென் றீன்றாள் பாலனைச் சாங்க தேவர்
புத்திரன் றனக்கீ ரைந்து பகல் செலப் புனிதஞ் செய்து. (௯௪)

விட்டல னென்னு நாமம் விளங்குறப் புரிந்தா ரூரார்
மட்டறு மிகழ்வு செய்து வரமைந்தன் றனக்கைந் தாண்டு
கிட்டலு முபவீ தஞ்செய் கிறதற்கு நிச்ச யித்தார்
தட்டறு பாண்டு ரங்கன் சந்நிதிக் கழைத்துச் சென்றார். (௯௫)

சென்றனர் பாண்டு ரங்கன் சேவைசெய் தான பின்பு
நன்றதா முகூர்த்தந் தேர்ந்து நான்மறை யோரைக் கூவ
அன்றவர் மகன்றன் பூரு வோத்தர மறிந்திச் செய்கைக்
கொன்றல மென்னச் சாங்க ருந்தியங் கமலத் தோன்றல். (௯௬)

இம்மகன் பிறந்தா றூத லாலிதைக் குறித்து நீவிர்
நும்மன மிசைந்து போதல் செயுமென நுவன்று வேண்டச்
செம்மலர் மகள்கோ மான்றன் செயலினாற் பிறந்த தானால்
கைம்மைதன் மகன்செய் கைக்கு வருவனோ காணவென்றார். (௯௭)

வருவன்விட் டலனென் றோதி மதித்துண்ட தீரத் தெய்திட
பெருகமு தாகி யாவு மமைத்திரு பிறப்போர் மேவக்
கருதினர் கூவப் பார்ப்பார் கண்ணன்வந் தனனோ வென்றார்
இருவரன் வந்தா னென்றார் செப்பிய தறிவோ மென்று (௯௮)

மேவினர் கோயி லேக்க விட்டலன் றனைக்கா ணாமல்
மாவியப் படைந்து போந்தார் மதித்துண்டக் கரையி லேக்கக்
கூடிய மறையோர் வந்தா ரெனச்சதுர்ப் புஜங்கு லாவத்
தாவிலின் னமுது பெய்யச் சார்ந்தகண் ணனைக்கண் டார்கள். (௯௯)

வியந்தன ரின்பு கூர்ந்து மேவுசாங் கரைபபு கழுந்து
நயந்துசெய் வினைமு டித்து நல்லமு துண்டு சென்றார்
உயர்ந்தநற் குணத்துச் சாங்கர் மூவரோ டுலகம புத்தோ ன்
இயைந்தகோ யிலிற்போய்ச சேவித தேத்தினா விடையும பெற்றார் (எ0)

மீண்டுதா முறைபு மூர்க்கு மேவின ரிருக்கத் தேசாந்தார்
ஆண்டுளோர் யாரும் போற்ற வம்மக னணிவி வாகம்
பூண்டுறப் புரிந்து சின்னாள் போனபின் மகன்மே லன்பு
தூண்டுற வருள்பு ரிந்து சொற்றனா விரத மாக (எக)

கடகங்கார்த் திகையென் றோது மதிதொறுங் ககனந் தீண்டும்
தடமதில் சூழ்வ தான பண்டரி சார்ந்து நின்ற
குடநட மகிழ்வோன் றன்னைக் கும்பிட்டு வருக வென்று
திடமுற வுரைத்துச் சென்றார்து வாரகை சீடரோடு (எஉ)

வேறு

வருவழி தனிற்று ரூரிலே வாழும் யாதவ பண்டி தா மகிழுந்தார்
அருண்மிகு சாங்கர் வருகிறா ரெனக்கேட் டயாதமை யெதிர்கொளச் சென்று
திருவடி பணிந்தங் கவரருள் பெற்றுத் திகழுவயி ராக்கிய ஞானம
பெருகின ராகி ஹரிதிரு நாமம் பேணின ரவருடன செலல (எ௩)

முயன்றன ரதுதோந் தெழுமதிச் சூலின் முதி நதமற றவர்மகிழ் துணைவி
நயந்தெரி கணவ ருறவினர் தடைக்கு நணுகுறா துடனவினர் நடந்தாள்
வியந்துபண் டிதருஞ் சாங்கர்பின் றொடர்ந்து விரைவுறச் சூலின ணடையில்
அயர்ந்துபின் செலுங்கான் மதிநிறை வாயிற் றணிமகி ரத்தினருகில். (எச)

உறுபிர மார ணியத்தினில் வயாக்கொண் டுளைவுற லாயின ளந்தோ
பெறுமமை யத்தென் கணவரோ சாங்கர் பின்றொடாந் தேகின ரிங்கே
மறுகுமென் றனக்கோர் துணையிலை குருவாய் மன்னிய சாங்கரோ துணையாய்ச்
சிறுமியென்வருத்தந் தீர்த்தல்செய்யாரோ வெனச்சொலித் தேம்பின ளழுதாள்

அக்கணத் துற்றான் றுவரையிற் கண்ண னரிவைதன் னுருக்கொடு தோன்ற
மைக்கணம் மடந்தை நோக்கியெங் கிருந்து வருகிறா யம்மனை யென்னச்
சக்கர பாணி நின்வயா நீக்கச் சாங்கரிங் கனுப்பினு ளொன்பேர்
தக்கிருஷ் ணுபாயி யென்றந்தவடவி தன்னிலோ ரூரமைத் தன்னே (எசா)

அமைத்தவூ ரதிலோர்மனைவர மெள்ள வழைத்தவ டனைப்புக விருத்திச்
சமைத்துப சார மெளிதினிற் றனையன் றனைப்பெறச் செய்துதாய் சேய்க்கோர்
குமைப்பதின் றாக வுபசரித் தினிதோர் மதிவரை கூடியங்கிருக்க
நமைப்புரந் தருள்வோன் றுவரையைச் சாங்கர் நண்ணினர்கோமதி நதியில்(எஎ)

மும்மதியளவும் வழியுள தீர்த்த முயன்றினி தாடிய முறைபோல்.
அம்மணி நீரி லாடினர் கண்ண னமர்திருக் கோயிலுட் சென்று
கைம்மலர் முகிழ்த்தட் டாங்கம தாகக் கனிவொடு வணங்கியக் கண்ணன்
தம்மனத் தமையக் கருதினர் தோன்றாத் தகுதிகண் டவன்செய லறிந்தார் (எஅ

நாதனுக் கென்னு னந்தனைப் பெறச்செய் காரிய நண்ணிற்றே யென்று
வேதனை மிகுந்து மகப்பெறுவித்த வீட்டகத் திற்றனி விரைந்து
போதரல் செய்தங் கம்மனைவாசற் குப்பைபோக் குறுஞ்செயல் பொருந்தும்
மாதுவனை மாதினைக்கண்டார் மற்றவள் வந்து கும்பிட்டாள். (எகூ)

கண்ணனமா மையிருந் குமபமமவளைக கண்ணனென றுயவுரா சதனத
துணணணி யகளைப பெற்றுறு மவளை யுனக்குநற் றுணையதா யுற்ற
வணணமே கலையா ளெஙகென வாசல் வைகுவோ டானென வருத்தாள்
துணனென வநது நோககலுங் காணா சோாநதுநின் றனாது போதில் (௮௧)

பெறறவள பிளளை தனைககொடு வநது சாங்கர்பா தத்திடைப் பெய்து
நறறவா தமமை வணஙகிமுன் றனககு நடந்தது நவின்றுதே சிகரோ
பறறது வாயகீ ரனுபபின கிாஷணு பாயிவந் துபசரித் ததுவும் [ல்லி
சொறறனள கேட்டின புணணியங கணணன் றுணைசெய்தா னென்றிதஞ் சொ

மகனொடு தாயை யழைததுடன கொணடு வழியெலாங் கணணனை நினைந்து
தகவுசோ துவலா சாாநதுகோ யிலிறபோய் ஜநாாததனன் றனைததரி சிதது
திகழுா யிநத லோசனு நின தயாநிதி யேதிருமாலே
நிகழுமுன செயகை களையெவ ரறிவாா ணிலதவென்றுதோத் திரிததாா ( )

பணடித ரிடதகின மனைவிபுனு சேயும பயிலவொப புவிதகிவ ளிடததில
மணடுமன பொடுநீா வாழநதரி பஜனை வழுததுதல செயதுநா ளுனும
அணடுறும பிளளை யாதியுன குலததா ரனைவரு மரிககன பராகித
தொணடுசெய திருபபா ரொனறினி தாசி சொலலியூாக கனுபபினா மாதோ. ( )

வேறு

திஙகளோா நானகவ ணிருநது சீதான
பஙகயப பதஙகளைப பணிநது டேரோ
டஙகணின றினிதுமுன னயாநது வைகிடம
தஙகலசெய தமாநதனா சாஙக தேவரோ (௮௪)

அவிநதனுமை பேதரி யானும மேநதனுல
எவனுசெய வரிசிவா லயஙகள யாவையும
துவநதனை யாயமறை யோருந துன்புறப
பவநதெறு விடடலன பரிவு கொணடனன் (௮௫)

சாஙகனைப பேதரி நகரிற சாாகெனப
பாஙகுற நலவிடை பகாநது போக்கினன
நீஙகருஞ சீடாக ணிறையச சென றனா
ஓஙகரி கீாததன முனுறறிக கொணடரோ. (௮௬)

தாரியிற சஙகமா தலைவ னுகியும
ஆரிய னுமலய காாசு னனபெரும
சீரிய தனகுரு வருளிற சிற்சில
காரியமா னமாந திரியங கறறுளோன் (௮௭)

ஆதன மொனறுமபெற றதிலவந தோாதமக்
கீதலசெய் திருததிமற றதிலி ருந்துழி
மீதுறநீஇத தலைகிழக் காக வீழநதபின
நிதுறச சிரிததவ மானஞ் செய்குவான். (௮௮)

சீடரோ டிபபடிச செய்யு மன்னவன்
தோடலா துளவினுன் றொண்டர் தம்பெரும்
பீடறிந துளமபொரு ளுகிப பேணுந்தன்
மாடமை நாய்க்கவா பெயரை வைத்தனன் (௮௯)

ஆயவ னுறுசெய லறிந்து சாங்கர்தாம்
தீயவன் றீமையைத் தீர்க்க வெண்ணினா
போயவன் மடத்திடைப புகுதக் கண்டவன்
மேயநன் னயத்தொடா சனத்தின் மேவென்றான் (௯௰)

ஆசனத் தின்செய லறிந்து நோக்கலும்
தேசனல் பட்டது தீர்ந்து போயிற்றால
மாசடை மனத்தினன் கண்டு மாழ்கினான்
யேசலன் வாய்நனி பயந்து பேசுவான். (௯௧)

இத்தவி சான்மிகு மகிமை யேற்றயான்
அத்தநும் மகிமையை யறிவு றாதுசெய்
கைத்தவென் பிழைதனைக் கமைசெய் தாள்கெனச
சித்தர்தஞ் சேவடி சேவித் தானரோ (௯௨)

கண்டஜங் கமர்சுன னுக்கு வைத்தபோ
கொண்டதால் விளைவதென் கொலோவென் றஞ்சியே
அண்டருஞ் சிறையிடை யதனை வைததனா
ஒண்டவ ருடனய லேகி யுற்றனர் (௯௩)

அஞ்சுநூ றளவின ரான ஜங்கமர்
விஞ்சுறு சுவையமு தமைத்தீ வேணடிடத்
துஞ்சுறப் போனக முணத்தொ டங்குபோ
தெஞ்சுற லின்றிப்பூ ணிலிங்கங் கைக்கொள்வாா. (௯௪)

பொதிவற நோக்கினர் போர்த்து றந்துணி
அதினுறு மிலிங்கமின் றாகச் சாங்கரைாத
துதிசெயா தியற்றிய தோமி லாயதென்
றெதிர்செலீஇச் சாங்கருக் கியன்ற தோதினா. (௯௫)

பற்பல முகமனும் பகர்ந்து மற்றவர்
பொற்பதம் பணிந்துசெய் பிழைபொ றுத்தெங்கள்
சிற்பரக் குறிவரச் செய்யு மென்றனர்
சொற்படி கேட்டெதிர் சொல்லு கின்றனர். (௯௬)

நீயிர்சேர் நாய்தனை நிரம்பப் பட்டினி
யாயிற வறையிடை யடைத்து வைத்ததால்
மேயின பசிகொடு விழுங்கிற் றென்றனர்
நாயிது புரியுமோ நவில்வ துண்மையேல். (௯௭)

குரைமுக வாய்ச்சிவக் குறியெ லாம்வர
விரைவினிற் றருகென வெளிக்கொண் டக்கனைப்
புரைதவிர் வோர்வயிற் பொருந்த வுய்த்தனர்
இரையென விழுங்கிய விலிங்கம் யாவையும். (௯௮)

அக்கணே கக்கென வருட்கொண் டோதநாய்
கக்கவைஞ் ஞூறிலிங் கங்க ளும்விழத்
தொக்கவை கண்டனர் வியப்புத் தோன்றிமே
தக்கயோ கத்தினிச் சாங்க தேவர்தாள். (௯௯)

பணிந்தெழுந் தும்பெரு மகிமைப் பண்பினை
அணிந்துரைத் திடவெவ ரால டங்கும்யாம்
துணிந்துடைக் கருவங்க டுடைத்துச் சூதெலாம்
தணிந்துமைச் சரண்புகத் தக்க வாசெய்தீர். (௱)

ஆதலா லெம்மையீ டேற்றற் கச்சுதன்
போதரல் செய்தன னென்று புந்தியில்
காதல்கொண் டனமெனக் கழறு வோர்தமைத்
தீதற நோக்கினர் செப்பு கின்றனர். (௱௧)

முன்புபோற் றீமைகண் முயல்கி லாதிறைக்
கன்புசெய் தரியடி யாரைப் பூசித்துத்
துன்புதீர்ந் திருமெனச் சொல்லிப் பேதரி
என்புரஞ் சேர்ந்தனர் யாவ ரோடுமே. (௱௨)

வேறு.

நானம் புரிந்து புரிபூ சையுநன்கு செய்தோர்
தானங் குலாவி யரிகீர்த் தனந்தானுஞ்செய் காலை
ஆனந்த மேவி யவனுள் ளவர்கேட் டிருக்க
ஊனந் தவிர்ந்து திருமா லடிக்குண்மை யன்போன். (௱௩)

ஹரிதா சருக்கு மிகுமன் பினனந்த ராஜன்
பெரிதா தரிக்க வுறும்வே தியன்பேர்வி லன்பர்
புரிகீர்த்த னங்கள் விழையுற் றனன்பொங்கு மன்பாய்
விரிதா சருக்குப பிரசாத மெய்யன்பர் நல்கி. (௱௪)

விடைநல்க லாக வரும்வே தியன்மேவு சாங்கர்
புடைவந் திறைஞ்சி யெமையாட் கொளப்போந்த சாமி
மிடையிந்த வூரி னரசன் மிகுதுஷ்டன் வெய்யோன்
இடையொன்று வேத ரரிகோ வயினிற்று வேசி. (௱௫)

ஒருத்தன் மனைவி விடபபாம்பி ருலாவி தீர்ந்து
போவ ளதனல் வருகின் றிலன்போன தின்றேல்
தாறெள் புவிமீ தரிகீர்த் தனஞ்சாற்ற லுற்றால்
நோவ னவனைக் கடிவான் மிகநோ விழைப்பான். (௱௬)

திருமால புகழ்நீ ருரைத்திங் குறுஞ்செய்தி கேட்டால
வருவான் வருத்த வெனச்சாங்க ரவ்வார்த்தை கேட்டுப
பொருபாம் பின்மாணடா ளெழச்செய் குவன்போந்து வேந்தற்
கொருவாய்மை கூ று கெனச்சொல் லினருள் ளிரங்கி. (௱௭)

உடன்வே தியானன் றெனவோடி மன்னற் குரைத்தான்
திடனோ யொளிற்கூ வுதியிங் கெனவேந்து செபபப
படநா கணைபபள ளியன்றொண்டர் தம்பக்கன் மேவி
அடன்மே வியகோன் வரச்சொன் னதையாங் குரைத்தான் (௱௮)

குழுவும்பல் சிட ரொடுமால் பெயர்கூறி வந்தார்
வழுவின்று சாங்கா வரல்கண டெதிர்வந்து மன்னன்
பழுதின் றழைத்தோர் தவிசே றுறும்பாங்கு செய்து
முழுதும் புகழ்ந்து விடந்தீர்க்க முந்துற் றுளோரால் (௱௯)

செய்யுந் திரங்கள் பலசெய்து மென்றேவி யாளுள்
உய்யுந் திறமொன் றிலளா லுதரங் கிழித்துப்
பெய்யுந் திரமா மணப்பைந் துகள்பெய்து வைத்தேன்
நையுந் திறங்கொண் டுளளுன்கு நாளாக நானே (௱௰)

நானைக் கழனைக் கொடுநண்ணி மசீதில் வைக்கும்
கோனைக் கருதித் துணிவுற் றுளங்கொண் டிருக்கும்
வேனைக் கெதிர்மே வினிர்சாமி நீர்வெவ் விடங்கொண
டானைப் பிழைபயித்திடினும்மை யொப்பாவ ராரோ (௱௰௧)

என்றோத லுஞ்சாங்க தேவோர் துளசித தளத்தை
நன்றே யழன்மே லிடுகென் றவன்கையி னல்கக்
குன்றே புரைதோ ளவனன் றெனக்கொண்டு ளேகித்
தன்றேவி தன்மே லிடமற் றவடா னெழுந்தாள் (௱௰௨)

எழுந்தா ளிடவார வாரித்திடவேந்தல் கண்டு
செழுந்தா மரைபோன் முகந்தே சுறவாத்தைத செப்ப
அழுந்தா தாத்தோ டவள்பே சலளாகி யார்க்கக்
கொழுந்தா ரரச னிதுவென் னெனக்கூசி யஞ்சி (௱௰௩)

வெளிவந்து சாங்க ரிடையென் மனைவிக்கி னைவி
தெளிவந்து முன்னை நினைவின்றி யென்னை சிமை
களிவந் திலாமை யுறுகின் றனள்கண்ணை னன்பால
ஒளிவந்த சீரி னிறவீ ரெனவோதி நின்றான் (௱௰௪)

அவன்சொன் னதுகேட்டு நீபோ யுனதன்பி னானை
எவன்செய் வதுநா னுனக்கென்று கூறன் னவள்யாவ தேனும்
நவன்செய் திடசெப் புறிலொப புறுகென்று நாளும்
தவன்செய் துயாந்தோர மயக்கந்தெறச் சாற்றினாரோ (௱௰௫)

நன்றென் றிசைந்து மனையாள் வயினண்ணி யோத
இன்றென்னை யுய்யப புரிந்தோர் வயின்யானு நீயும்
சென்றின்பு கூரச் சரணு கதிசெய்து வேண்டி
நின்றின்னு மன்னு றதுவேண் டினு நேர்தல் வேண்டும். (௱௰௬)

இவைசெய் திலையேற் பிழையே னெனவேந்த னீசொன்
னவைசெய்வ லென்றன் னவளோ டவர்சார்பின் மேவி
எவைசொல் லினினும் பணியே புரிவேமெ னாத்தி
நவைகொய் தவர்தாள் பணிந்தேத்தி முனண்ணி நின்றான (௱௰௭)

உன்னாலு முன்னை யுறுவோ ரினுமூரி லெங்கும்
மன்னு லயங்கண் மறைவே தியர்வைகு கோகக்கள்
இன்னு வுருமா லரிதா சனையேத்தி யன்பு
பன்னாளு மேவி யரசா ளுதிபண்பொ டென்றார். (௱௰௮)

குருசாமி சொல்லு வதுகேட் டுளங்கொண்டு நன்றென
னுருகா தரத்தி னொடுமந் திரிக்குணமை யாகத
இருகாது சாமி யுரைசொற் படிசெய் திடுவென்று
தருகா தலிக்குண் மகிழ்வாக வந்தா னமைந்தான். (௱௰௯)

அன்றே யவிந்த னடங்கப் புரிந்தங்கு நின்று
நன்றே தொடர்ந்து வருசீ டர்களோடு நாடிக்
குன்றே புரைகோ புரப்பண் டரிக்கோயின் மேவி
நின்றே பணிந்தார் பணிவிட் டலன்றன்னை நேர்ந்து. (௱உ0)

வேறு.

பாண்டு ரங்கா விட்டோ பாதீ னதயாளா
ஈண்டு நான்ச மாதியடைதற் கிசைவானேன்
வேண்டு மதனுக் கெந்தத் தலநீ விழைகின்றாய்
தூண்டு கென்று கேட்க விமலன் சொலுகின்றான். (௱உக)

நீதங் கும்புண் ணியதம் பத்தி னிலைகொண்டே
பேதந் தீர்ச மாதி யடையப் பெறுகென்று
ஏதந்தீரா ஷாட சுத்தத் திதியென்னப்
போதம் மேகா தசிதோ றும்போ துறுகின்றேன். (௱உஉ)

என்றே வரமும் விடையு நல்க விசைவாகி
நன்றேய் பரமன் றன்னோ டலர்மே னங்கைக்கு
நின்றே துதிசெய் தடைவே கும்பிட் டிறசோ
குன்றே புரைசற் குணர்புண் டலிகர்க் கும்பிட்டு. (௱உங)

ஆனந் தக்கண் ணீரோ டவ்வூர் வலம்வந்து
தானந் தக்க தென்புண் ணியதம் பஞ்சேர்ந்து
மோனங் கைக்கொண் டுறுச மாதி முறைமேவற்
கூனம் பற்றா துறுமூர்த் தம்பார்த் துடன்மேவ. (௱உச)

தம்புத் திரரின் முன்னோ னங்கே சவனோடு
பின்புற் றவனோ கியவிட் டலனும் வரல்பேணி
முன்புற் றவனுக் காறக் கரமந்திர முன்ன
இன்புற் றருளியான்ச மாதி யுறலாலே (௱உரு)

என்பூசனையா தியசம் பிரதா யத்தெய்தி
மன்பூ தலமேல் வருகார்த் திகைமா தந்தோறும்
பொன்பூ மகள்கேள் வன்பண் டரிபோய்ப் பொலிவாக
அன்பூ டுருகப் பணிவுற் றினிதிங் கடைவாயே. (௱உசா)

வேறு

என்றுதம சீடருக்கும் யாவருக்கு மதிநலங்க ளிசையச் சொல்லித்
துன்றுசக மிரட்டியறு நூற்றெருடிரு பத்தேழிற் றோன்றுமாண்டாய்
நன்றுறுகு ரோதனவா ணித்திங்கட் சுத்தசத்த மியினோ யிற்றின்
அன்றனைவோ ருங்குழுமி அரிநாமம் புகலவர சடியிற் சாங்கர் (௱உஎ)

பதுமவா தனத்திருக்க யாவரும்வந் தனைசெய்து பல்லாறேத்தக்
கதுமெனமற் றவரவர்க்கா சீர்வதித்து விட்டலனைக் கருதக்கண்ணன்
எதிரில்வந்தங் கவராவி யாவருங்கா ணத்தனக்கு ளேகமாக்கித் [ரும். (௱உஅ)
துதிகளெல்லோ ருஞ்சொல்ல மறைந்தனன்பின் கண்டுநின்ற தொண்டர் யா

ஜயஜயா காரஞ்செய் [redacted]ராமங் களைப்புகழ்ந்து சமாதிபூசை
இயல்வொடுசெய் தவரவர்தம் மிருப்பிடஞ்சென் றூர்பின்ன ரீராறுண்டு
பெயர்வுறத்தம் மிளையகுமா ரனுக்கன்போ டெதிர்தோன்றிப் பெறற்குரூத
உயர்வுறுநல் லுபதேச முதவிவிட்ட லன்றனக்கு ளூற்றூர்சாங்கர். (௩௨௬)

சாங்கதேவர் திருவடிகளே சரணம்.

ஆகசரித்திரம் ௪௬-க்கு செய்யுள் ௩௯௮

முற்றிற்று.

சோகாமேளர்சரித்திரம்

உலகவை குந்தமா யுற்றபண் டரியிலே
இலகுபஞ் சமகுலத் திற்பிறந் தார்நலம்
விலகலின் றுறுசொகா மேளரொன் பார்தினம்
நிலவுதுண் டத்திலே நெடிதுவந் தாடுவார். (க)

அரிதிரு நாமமே அமுதபா னமதெனப்
பெரிதுகொண் டாடியப் பெருகுமூர் சூழ்வதாய்
மருவுதண் டுளவினன் வளர்பெருங் கோயின்முன்
கருதிவந் தனைசெய்வார் கணிதமில் லாதரோ. (உ)

ஆனபின் றங்குடும் பத்தைர க்ஷணைசெயற்
கானமின் றுறுவர்பின் பொருதினந் தன்னிலே
ஞானசஞ் சீவியாய் நவில்விடோ பாவின்முன்
போனவன் பரையெதிர்ந் தனர்சிலோர் புகலுவார். (௩)

கோயிலுட் புகுதலுங் கொண்டலைக் காணவும்
நீயியைந் தவனலாய் நெடிதுகும் பிடுதலுண்
டாயினென் வருமகத் தாயவூண் விழையுமோர்
நாயினென் பார்தமை நனிபணிந் துரைசெய்வார். (௪)

சினகரம் புகுதவுந் தேவனைக் காணவும்
எனதுபுன் குலமொவா தாயினு மிரவிதான்
உனருமோ சனையிலக் கத்திலுற் றுலுநீர்
வனசமா மலர்செவே மலர்கிலா தொழியுமோ. (௫)

சந்திர னளவிரட் டித்ததிற் றங்கினும்
உந்துநே மிப்புளுக் கிரைதரா தொழிவனோ
அந்தநீ திப்படிக் கடியெனுக் கச்சுதன்
தந்திடா தொழிவனோ தனதுசே வடியையே. (௬)

தூரநின் றிடுவதென் குலமுடைத் தொன்மையே
ஏரதன் றெனவிழித் திடுதலா லிலைபயன்
பேர்திரொன் றவர்தமைப் பிரிவுகொண் டினிதுதஞ்
சார்விடந் துன்னி னரரிபதந் தவிர்கிலார். (௭)

அன்றிரா விமலன்வந் தவரையன் பொடுவரு
கென்றுகோ யிலினகத் தெய்தவைத் திரவெலாம்
நன்றுபே சினனுனை நான்விடே னமனோ
டின்றுமுண் பொழுதுநின் னினைவினெய் தினனென (௮)

அதுவினுய் நீயநா தரையளித் தருள்வதே
கதவுமுன் செயலெனக் கழல்பணிந் தினிதிறா
வதுவிடிந் திடுமுனே வருமவர்ச் சகர்தெரிந்
திதுவெனோ புதுமையிங் கியலுவோ ரெவரொறு. (௯)

இறைதிகைத் துறுவனோ புலையனிங் கேயென
அறைசெவித் துளைபுகப் பினுமடுத் துறவினாய்
உறைவதப்பு லையனோ யெனமகித் துறுவனோ
மறைமுதற் றலனிடத் தெனமனத் தளர்வொடே. (௰)

அகமுளாய் வெளியில்வா வெனவழைத் தவனைநேர்
புகநிறுத் தகமுறத் தகுவதோ புலையனே
தகவினீ சென்றதெத் தகைமையே சாற்றென
மிகநயத் துறல்செய்தான் விமலனா னென்செய்கேன். (௰௧)

என்றுனைப் பவனையிவ் வூனைவிட் டேகு நீ
நின்றிடிற் றண்டமே நேருமென் றுனைசெயச்
சென்றுதம் மனையுடன் றிங்களம பாகையா
னொன்றுமக் கனையிலோர் குடிசைசெய் துற்றனர். (௰௨)

நாடொறும் பாண்டுரங் கனைவிடார் நாமர்போற்
பாடுகின் றவரொரு பகலினிம பத்தரு
ளூடுணும் பொழுதுருக் குமணிநா யகவெனே
கூடுகின் றிலையென்முன் கோபமோ வெனுமுனே. (௰௩)

விடலிலா ருடன ளாய விட்டல னமுதுணக்
கடவுனா யமர்தரக் கண்டுசோ காமேளர்
உடன்மிகப புளகமுற் றுருகியுட் களியின் மூழ்
கிடவடுத் தனரவண் கேடிலர்ச் சகரரோ. (௰௪)

அந்தவே ளையிலிடுந் துணைவியை யமலனுக்
கிந்தநற் றயிரைநீ யிடுகெனத் துணைவியார்
சிந்துபோ தவளவுஞ் சிந்திமற் றதுதெரித்
துந்துசீ ரமலனா ருடயின்மிகுந் துற்றதே. (௰௫)

நாதனார் துகினனைந் திடல்செய்தா னன்றதோ
பேதையே யென்றுகோ பித்திடும் பொழுதிலே
மீதுலாங் கொடியுமெச் சத்தைமேல் விடவுணர்ந்
தேதுநீ யுஞ்செய்தா யிறைவன்மே லென்றனர் (௰௬)

ஓட்டினார் கொடி யைமற் றதையுணர்ந் தர்ச்சகர்
காட்டில்வந் துண்பனோ கண்ணனின் னோடனை
நாட்டிநீ நகுதியோ நன்றெனக் கவுண்மீசை
நீட்டியங் கையி னாணிறைவுறத் தாக்கியே. (௰௭)

குளிரநீ ராடிமால் கோயிலிற் சென்றுகா
ணளவின்மா லாடையெல் லாந்ததி யாகவும்
மிளிர்தரக் கவுள்கள்வீங் குற்றதும் விழிகள்சேந்
தொளிர்வதுங் கண்டுதுண் ணெனவுசா வினரரோ (௰௮)

தாம்வரும் பொழுதுவேப் பந்தருக் கீழ்நிகழ்ந்
தாமதிங் குற்றதென் றகம்வெரீ இயையனே
மாமகிழ்க் துற்றசீர் மார்பனே புலையரும்
யாமுமொப் பேயுனக் கென்பதோர்கிலமரோ (௰௯)

பிழைபொறுத் தருள்கெனப் பெரிதுகொண் டாடிமா
லுழைவிடுத் தோடிவந் துற்றதா சனைமிகும்
விழைவுடன் கண்டுநீ விமலனன் பதனிலே
தழைவதா யுனதுவ சஞ்செய்தா யறிகிலேம் (உ0)

ஆதலா னீயெம்மே லருள்செய்தங் கவனிடம்
போதுவா யெனவழைத் தங்குளே புகவிடக்
காதலோ டமலனைக் கண்டுசோ காமேளர்
கோதுறு தணையமுன் குறியெலாம் போயவே (உக)

அந்தவா றுன்தங் கனைவருந் தெரிவதாய்
வந்துகொண் டாடினர் வருசோகா மேளரும்
எந்துமோர் தடையிலா தன்றுதொட் டென்றுமே
மூந்துவா ராயினர் முதல்வனார் கோயிலே (உஉ)

சோகாமேளர் திருவடிகளேசரணம்

ஆகசரித்திரம் ௯௪-க்கு செய்யுள் ௬௨௱உ0.

முற்றிற்று.

கபீர்தாசர்சீடராகிய

பத்மநாபவேதியர்சரித்திரம்

காசிப்பதி தனிலோர்வணி கன்செல்வநி றைந்தோன்
மாசற்றவ னுக்கைந்துநன் மகவுந்திரு மாணுந்
தேசிற்பொலி மனையாள்குண வதியுமனை சேரக்
காசற்றுறு முறவோர்பலர் கவினத்திகழ் நாளில் (க)

குட்டப்பிணி யுடன்மேயது குழைபுண்மி கலாகி
முட்டக்கிரு மிகள்புண்டொறு மொய்த்துத்துயர் செய்யக்
கிட்டத்தகு மவர்கிட்டில ராகக்கெடு நாற்றம்
எட்டப்படு துன்பத்திடை யெய்த்தான்வெகு காலம் (உ

நற்செய்கைகள் பலவும்புரி நல்லோன்மிக நல்லோர்
இச்சைப்படி பலநல்லற மெல்லாமியை வித்தும்
மெய்ச்சப்படு பரிகாரநல் விதமொப்பன செய்தும்
எச்சப்பட லிலவாகிய தெதுசெய்யினு நோயே (௩)

பிணியாற்றல ஞறுனுறு பெரியோர்தமை யழையாத்
தணியாதுறு நோய்சானவி தனிலென்னைவி டற்கே
துணிவாயினி துடனேகொடு தொலைமின்னென வேண்ட
வணியாங்கவ ரொல்லாமினி யென்செய்குவ தென்றே (௪)

இசைவின்படி செய்யாவிடி லெய்தும்பழி யெனவே
நசைதுன்றின ரெல்லோர்களு நனிதுன்றின ராகி
அசைவின்றினி தவனைக்கொடு வருஜானவி யருகே
மிசையொண்கரை யிடைவநதனா விடவேதுணி வுற்றார் (௫)

அப்போதினி லதுகண்டவா யாருங்குழு வாகத்
துய்ப்போரரி பெயராயப துமநாபனென் மறையோர்
ஒப்போவறு நீராடிட வுற்றாரது கண்டே
இப்போதிவ ணெய்துங்குழு வேதென்றயல் வந்தார். (௬)

கையிற்சப மணியுந்திகழ் களனிற்குலை வடமு
மெய்யிற்றிரு நாமம்பனி ரணடுநதனி மினனப
பொய்யற்றறு நாவச்சுத ஞமம்பல புகல
மையற்றவ ரிங்கேகுழு வாய்பபேதென வகுத்தா. (௭)

ஐயாவிவன்வணிகன்மிக வறமேநனி புரிவான
மெய்யார்வினை நோய்தீர்கலன் விளிவானதி யிடையே
உய்யானென லால்வந்தனனுறவோடென வுரைததாா
பொய்யாதவ ரதுகேட்டனா புகழ்வார்வரு மறையோர் (௮)

மாறுதன ஜன்மம்பல வகையும்புக லின்றி
ஆறுய்நர ஜன்மம்பெற லரிதன்னது பெற்றும்
வீறுய்நதி யிடைவீழ்ந்துயிர் விட்டானர கெய்துங்
கோறுதின நோய்போக்கிட வலதுண்டது குறிக்கில் (௯)

காரப்புய லனையானது ராமவெனு நாமம்
ஈரக்கர முக்காற்சொலி லுடனேபிணி யெல்லாந்
தீரத்தகு நீவிரிது செப்புங்கடி தென்ன
ஆரத்தனை பேருஞ்சொல வவனுஞ்சொலு மளவே (௰)

புண்ணும்படி வசியுந்தவர் புரமோடெழில் வணிகன்
நண்ணும்படி யாறுன்வரு நரரும்வினை தீர்ந்தார்
விண்ணும்படி யும்போற்றுறு விமலன்றிரு நாமம்
எண்ணும்படி யுரைசெய்தவரி ருதாள்மிசை வீழ்ந்தார் (௰௧)

விழுந்தேபல துதிசெய்தனர் விசுவோத்தர ணஞ்செய்
கொழுந்தே மறைக் குலத்துக்கொரு கோவேயெங்க டேவே
செழுந்தேசுற வினைதீர்த்தருள் செய்தோயெனப் புகழ்ந்தே
எழுந்தேகினர் காசிப்பதி யெல்லோர்களு மின்பாய் (௰௨)

அவரிற்சிலர் மறைவேதியர்க் கருள்செய்தக பீரர்
பவனத்திடை வந்தேயவர் பாதங்கள்ப ணிந்து
நவமிக்குள வுமையண்டின நற்சீடர்மென் மேலுந்
தவமிக்கவ ரிரண்டக்கரந் தன்றுநீபிணி தீர்த்தார் (௰௩)

முக்காற்சொலச் செய்திங்ஙகர் முழுதும்மது வேசொற்
றெக்காலமு மிருக்கும்படி யிசைவித்தன சொன்ன
அக்காலையி லதுகேட்டருள மைகின்றக பீரர்
மிக்காகிய விரண்டக்கர விழுச்சீர் சொல லுற்றார். (௰௪)

சதகோடியெ ணுளராமன சரிதந்தனை மூன்று
விதமாகிய வுலகங்களு முயன்றேநனிவிரும்ப
அதுமேவுறப் பகுத்தீந்திட வதில்விஞ்சு மோர்சுலோகம்
பதிறைறிரு மேவக்கரம் பகுத்தீந்ததில் விஞ்சும். (௰௫)

ஈரக்கர மரனார்தமக் கென்றேகொடு விடத்தால்
சாரப்படு நோய்தீர்ந்தன ரதனாற்றனி ராமப
பேரொப்பதொர் பேர்வேறிலை யதையோர்தரம் பேசில்
தீரப்படும் வினையாவையு முக்காற்சொலல் சிறப்பே. (௰௬)

அவ்வேதிய னப்பேரின தருமைப்பெரு மைகளைச்
செவ்வேயறி யானென்பது செவிவாய்த்திட வந்தார்
மெய்வேதியர் தந்தேசிகர் மென்கான்மிசை வீழ்ந்து
எவ்வேலையுந் துதித்தேசுகத் திருந்தார்பெரி தென்றும். (௰௭)

பத்மநாபவேதியர் திருவடிகளே சரணம்.

ஆக சரித்திரம் ௰௮-க்கு செய்யுள் ௲௨௱௯௰௭.

முற்றிற்று.

ரோகிதாசர்சரித்திரம்

சரும வேலைபுரி சக்கிலி யர்க்குள்
ஒருவர் யாவரிலு முத்தம ரோதில்
மருவு றுஞ்சம தமாதிகு ணங்கள்
பெருகு வோர்வைண வத்ததி பெட்பார். (௧)

பரார்த மக்குபக ரித்தருள் பண்பார்
நரஜா ரிக்கினிய நல்லுயிர் போல்வார்
விரவு யிர்க்கருள்வி ளைப்பவர் மாலைப்
பரவு சற்ஜனர்ப தம்பணி நேயர். (௨)

யாத்தி ரைக்கனுறு வோர்களை யண்மித்
தோத்தி ரித்துபச ரிப்பவர் சில்லோர்
சேர்த்தி டத்தமுப தேசம் வருத்தங்
கேத்தி டப்பெரிது மின்புறு சீலர். (ங)

நாளும் வைகறையெ ழுந்து நயந்து
மூளும் வெம்பசித ணிந்தபின் முந்தி
நீளு நீர்முழுகி நேயமொ டென்றும்
ஆளு நாயகனை யர்ச்சனை செய்வார். (ச)

கலியு கத்தில்மிகு காய்பசி யுற்றால்
மெலுவு றுத்திமன மெய்யுணர் வெய்தா
தலைவு றப்புரியு மாதலி னுணடே
பொலிவு றப்புரிவர் பூசைபி னன்னூர் (ரு)

நாமம் ரோகியென நாட்டவர் கூறத்
தாமி யன்றவர் தனித்தொரு நாளில
தோம றும்புனறு ருத்திநி ரபபி
ஆம தாயமடி யாசனம் யாவும் (சா)

தோலி னலமைவு செய்துது ழாய்சேர்
வாலி தாயவனம் வந்துபு குந்து
நாலு வேதமுந வின்றறி யாத
மால தாம்வடிவை வந்தனை செய்தார். (எ)

பக்கன் மேவினனோர் பணவன வற்குத்
தக்க தாகவுப சாரமி யற்றி
மிக்கு யர்த்தவவன் விஞ்சின தேசா
ளக்கி ராமசப ரிச்செயல் யார்க்கும் (அ)

அன்ன தைச்சரும மீதி லமைத்துத்
துன்னு பூசைசெய லாயது தாமோ
என்ன விப்பரிசி யற்றினை யீது
பன்னு வேதியர்ப ராவுவ தன்றோ. (கூ)

என்று வேதியனி யம்பிய யாவும்
நன்று ரோகியெனு நல்லவர் கேட்டே
என்றும் யாவையினு மெய்திய மாலைத்
துன்று கின்றமன நிற்பது தோலே. (ம)

துதிசெய் நாவுமொரு தோலல வோநேர்
விதிகொள் பூசைபுரி கைமிகு தோலே
முதிரு மூவகையு முந்திய வான்மாப்
பதித லுஞ்சரும மூடிய பையே. (மக)

எனவு ரைப்பதனை யெய்திய பார்ப்பான்
வினவி முப்புரியின் மேவுப வீதம்
புனையும் வேதியர்க ளேபுகல் பூசை
தனைப்பி யற்றுமவர் மற்றையர் சாலார். (மஉ)

நீயி வாறுசெய னின்னை யடுக்குந்
தீய பாவமிது செய்யலை யென்று
ஆய வேதியனு மைப்ப வதற்குத்
தூய ரோகியெனு நல்லவர் சொல்வார். (௰௩)

என்னி டத்திலுப வீத மிருக்கை
தன்னை நீயறிதி யென்றுத நெஞ்சை
மன்ன வேபிளவ தாகவகிர்ந்து
மின்னு நூலைவெளி யாகவி டுத்தார். (௰௪)

மனது சுத்தமுள மாண்பினர் யாரும்
அனக பூசைசெய லாமென வன்றோன்
நினைநி கர்ப்பவரி னீணில மீதே
யெனவ முத்திமனை யேகினன் மாதோ. (௰௫)

போன பின்பரிபொ ருந்தரு ளாலே
ஞான ரோகியெனு நல்லவர் மார்பங்
கூன மின்றியொரு மித்துற வன்றா
வான நாயகனை வாழ்த்தி யிருந்தார். (௰௬)

ரோகி தாசர் திருவடிகளே சரணம்.

ஆக சரித்திரம் ௰௬-க்கு செய்யுள் ௲௬௱௫௰௩.

முற்றிற்று.



பிம்பாஜிபக்தர்சரித்திரம்

உலகத் தோர்கடே மண்டலி யென்னுமூ ருக்குத்
திலக னுயுயர் பவித்திர னும்மிகச் சிறந்த
அலகி லாத்தரு மங்களு நடத்துகின் றவனாய்
இலகு சாதுசற் சனங்களுக் கினியதா சனுமாய் (௧)

கிளர நீள்சவு ரியபராக் கிரமமுள் ளவனாய்த்
தளர்வில் சீலவு தாரனாய்த் தைரியத் தவனாய்
வளரும் புத்திர காந்தையா தியவளத் தினனாய்
இளகு சக்தியு பாசக னுயினி திருந்தான். (௨)

அரச னுயபிம் பாஜியென் பெயருடை யவன்றன்
விரசு நாடொறும் விடியுமு னெழுந்துமே லோரால்
உரைசெய் நித்திய கருமங்க ளுளுற்றிநீ ராடி
முரச மார்ப்புறக் காளிவாழ் கோயில்போய் முந்தி (௩)

எட்டி ரண்டுப சாரத்தோ டியன்றுள பூசை
தட்டி லாதுசெய் துற்றனை வேத்தியந் தன்னை
இட்டமோ டந்தக் காளியுண் டிடவினி தியற்றி
மட்டி லன்புசெய் தேவரு வானரண் மனைக்கு (௪)

அப்ப டிக்கவன் வருமொரு நாள்வயி னவர்கள்
ஒப்பி லாததோர் தீர்த்தயாத் திரைசெய்வா ருற்றார்
தப்பில் யாகயக் கியங்களே காதசி விரதம்
செப்பு தாய்தந்தை சேவையே தீர்த்தயாத் திரையே (௫)

வாவி கூபத டாகங்கள் கோயில்கள் வகுத்துத்
தாவில் கண்ணனர்ப் பணமென வன்னதா னுதி
யாவு முன்ஜன னங்களி லியற்றிய வவற்றால்
மேவி னரவ னகரத்தில் வைணவ மேலோர் (௬)

அதுதன் சேவக ராலறிந் தரசனங் கவருக்
கெதுவு மோர்குறை யின்றிச்சி தாமுத லெல்லாம்
உதவி நானஞ்செய் தம்பிகை கோயில்வந் துற்றுச
சிதகில் பூசனை செய்துமுன் வந்தனை செய்ய (௭)

கண்டு காளிமுன் பிரசன்ன மாகியுள் கனிவாய்
அண்டு முன்னகர் வந்தசா துக்களை யடைவே
கொண்டு போயுன தகத்திடைப் போனகங் கொளச்செய்
தி ண்டுவந்தபின் றனுன்பூ சையையினி துணபேன் (௮)

ஏனென் றற்பிர மாண்டங்கள் யாவுக்கு நாதன்
தானென் றோங்கிய வைகுண்ட வாசியாய்ச் சத்தி
ஈானென் றுள்ளவர் யாவர்க்கு நாயக னுகிக்
கோனென் றோங்கிய பிரமருத் திரோந்திரர் கோமான். (௯)

ஆய ஸ்ரீதர னன்பருன் றவத்துன தகத்து
மேயதாலுன்றன் பாக்கிய மிகவுமேன் மைத்தென்
றேய போதர சுன்னிலு முயர்ந்ததே யெனவே
தூய விண்டுவை நீசொலத் தெரிந்துநான் றுணிந்தேன் (௰)

அனைய தேவனைக் காணநா னருளுதி யெனநல்
வினைய மோடடி வணங்கியே வினவலுங் காளி
தனையொ வாதவன் றன்னையான் காட்டிடத் தகுமோ
நினைவி லேயரி நேயரோ காட்டுவர் நினக்கு. (௱௧)

அன்ன ராகிய வைணவர் தமைச்சர ணடைதி
என்ன வேநர பதியவ ளடியில் வீழ்ந் திறைஞ்சி
கன்ன ராம்வயி னவருறை விடந்தனை நணுகித்
துன்று மாங்கவர் சேவடி பணிந்தனன் றுதித்து (௰)

ஜீவி ரொன்னகம் வந்துநா னிரப்பபூ சனையை
மேவுகென்று கூஉய் விருந்தமைத் தமுதுசெய் வித்துத்
தாவி லன்புடன் சந்தன புட்பதாம் பூலம்
யாவு நல்கினன் வணங்கின னேத்தின னிசைப்பான் (௰௩)

அடிகளேயடி யேனும் ஸ்ரீ ராமனை யறியும்
படிசெய் வீரெனப் பார்த்திபன் றனையவர் பார்த்து
முடிவில் சீர்த்திரா மானந்த சாமிபான் முந்தி
மடிவி லாவவ ரருள்பெறின் மாறனைக் காண்பாய். (௰௪)

எனலுங் கேட்டவேந் தின்புடன் விராகமேற் கொண்டு
தனது மந்திரி தன்வயி னரசினைத் தந்து
கனக வஸ்திர பூஷணா திகளெலாங் கலைஞர்
மனமு வந்திடக் கொடுத்தனன் மனைவியுங் கண்டு (௰௫)

தானு மப்படி யேபல தானமுந் தந்து
கோனு டன்வர விருவரு மொருவழிக் கூடி
ஈனு ஞானரா மானந்த ரொழிற்கம லத்தை
மானு மார்திரு வடிகளை வணங்கினர் வந்து. (௰௬)

பொருளு டம்புயிர் மூன்றையுங் குருவுக்கே பொருந்தத்
தருதல் செய்தவர் தாள்களைத் தந்தலைத் தாங்கி
இருவ ரும்மெதி ரேநிற்பத் தாரக மென்னும்
அருமை மந்திரந் தனையுப தேசித்தா ரவரும் (௰௭)

தேசிகோத் தமர் திருவரு ளாலிவர் சிறந்து
மாசி லாச்சிர வணமன னுதியில் மகிழ்ந்து
நேச மாயின ரரிபஜ னத்திலே நிமிர்ந்து
காசி லாதொரு நாள்குருக் கழல்களை வணங்கி. (௰௮)

சேர்ந்து கண்ணனைத் துவரையிற் கண்டு சேவிக்க
நேர்ந்து நீரருள் செய்மென வவரது நேரச்
சார்ந்து கண்ணனைத் தரிசித்து ஜயஜய முகுந்தா
ஆர்ந்த ஸ்ரீஹரி யாகிய வச்சுதா வமலா. (௰௯)

என்று தோத்திரம் பலபல செய்தன ரேத்தி
நின்றபோதந்த நின்மல னேமிசங் கேந்தி
நன்ற தானகே யூரகுண் டலமுடி நலஞ்சேர்
மன்றன் மாலைபீ தாம்பரம் மயங்குற மருவி. (௨௰)

சகுண ரூபத்து டன்பிர சன்னமாய்த் தழுவி
மகிழவு செய்தன னிருவரு மலரடி வணங்கி
நெகுத லாயுள மாடினர் பாடினர் நிற்கத்
தகுதி யாயின் சொற் சாற்றியே சனுதனன் மறைந்தான். (௨௧)

இருவரும்பின்பு நான்குமா தம்மவ ணிருந்து
மருவு ஸ்ரீஹரி பஜனையிற் றழைத்தனர் மகிழ்ந்து
திருவி னுயகன் விடைபெற்றுக் கான்வழிச் சென்றார்
வெருவு காட்டிலோர் வியாக்கிரம் விரைந்துவந் ததுவே. (௨௨

மனைவி யார் கண்டு பயந்துதம் மகிழ்நரை நோக்கிச்
சினவு வெம்புலி இனவரு கிறதென்று செப்ப
அனக ரானவ ரதனுளும் ஹரியமர் கின்றான்
வனிதை யேனஞ்சு கின்றனை வருகென மனவில் (உ௩)

இன்ன வந்தவெம் புலிமுகக் குறிப்பினைத் தெரிந்து
தன்ன தோர்கழுத் துறுதுல்லைத் தாமத்தை யெடுத்து
நன்னர் வீசலும் புலிகழுத் திடையது நண்ண
முன்னர் நின்றது கொடுந்தொழில் முழுவது மறந்தே. (உ௪)

நின்ற வெம்புலி தலைமிசைத் தம்கையை நிரப்பி
நன்ற தாகிய ராமநா மந்தனை நவின்றே
இன்று தொட்டு நீ கொடுந்தொழில் செய்யற்க வென்ன
அன்று ராமநா மஞ்சொல்லிக் கொண்டவ ரகன்றார். (உ௫)

அவர கன்றபின் புலிக்கனு தாபம்வந் தண்மித்
தவவு திர்ந்துகாய்ந் துளவனச் சருகுகள் புசித்து
நவமி குந்தஸ்ரீ தரனது நாமத்தை நயந்து
திவச மேழினிற் றேகம்வே றுயது நீர்ந்து (உ௬)

பிம்பாஜி பக்தர் திருவடிகளே சரணம்.

ஆக சரித்திரம் (உ௰) க்கு செய்யுள் ௩௬௱௭௰௫.

முற்றிற்று.

நரசிம்மமேதாசரித்திரம்

அணிகொ ளுஙகடே மணடலி யெனனுமூ ரதனில
நணு கு நாகர வேதியா தமககொரு நநதா
பணவ ராவணி பவனுடை யமசமாயப பிறநது
தணிவி லாநர சிஙகமே தாவெனத தழைததாா. (௧)

தாயுந தநதையுங களிததுப வீதரா றயஙகத
சோயு நனமணம புரிநதபின சுவாககமபோயத துனன
எயு மைநதனைச சிறுகநதை முதலினா யாரும
நேய மாயவளாத தாாவளாந தனமொழி னிரமப. (௨)

வளாநத மைநதரவ னூரிலே மருவுபிள ளைகளி ர
கிளாநது கூடி னா கலவியிற றெழுமுத லினறி
விளைநத நாளவிளை யாடடிலே கழிநகிட வீணுயத
தளாநதொா நாணமிலா வநதனா தாகமாயத தாமே. (௩)

வநது கநதமை யனமனை யாடனை வலலே
முநது நீாகரு கெனனலு மனனவள முனிவாய
இநத வேளையி லெனனகா ரி மபுரிந கினறதாய
நொநது வேணடினை நீயெனச சிநதில நயலயாள. (௪)

மூாகக ளுகிநீ சிறுவாக ளொடுமிக முயனறு
வோகக வேயிர வுமபக லுமவிளை யாடடிற
போககு கினறனை காலததைக கலவிபோற றமல
மாாகக மோவிது சோறுண வயிறறினை வளாததாய (௫)

இனன வாறுநீ திரிநதுபி னெழினமனை யாடடி
துனன லானபின பவளுண சோறறுககென செயகி
னனன வேகடிமொழிகளை யிமமடடில வேடட
புனனி ளு வெறுப புறறனா மனவிடுத தொழிநதாா. (௬)

காடு சென றனா வருகினா டாலமரங காலை
நீடு சநதைதா யிறப பதும யவவன நிலையிற
கூடு பனனிகான மரிபபதுங கொடி யமூப பினிலே
தேடு மைநதாக ளிறபபதுந சயிணைப பயனே (௭)

அனன வாறென தனனையு மபபனு மகனமா
னனன ருஙகரு மதகினு லெனறவ ரோஙகித
துனனி னுமொரு சிவாலயங கணடனா தொழுது
மனனு கோயிலுட புகுநதனா சிவனறனை வாழததி. (௮)

அருளசெய தேயெனை யாளுதி யேழைபங காளா
ஒருவ ருமமிலை யெனககுறு துணையுனை யனறி
இருநி லததிலென றுவிடை மேறசய வாததா
மருவி யேழுநா ளுணவினறிச சோாவுடன் மாதோ. (௯)

கண்டு சங்கர னுலகிலென் னடியவர் கனிந்து
மொண்டு நறும்புனல் கொளவிய மூழ்ந்துதே னிளநீர்
கொண்டு மூழ்கிடச் செய்துபின் சந்தனங் குசுமம்
மண்டு றத்தரித் தாடையா பரணங்கள் வனைவார். (௰)

இவனென் மேற்றனை வனைந்தன னென்றமுற் பவத்திற்
கவன வெம்புலி யாகிரா மனைத்தொழல் கருதி
அவர்தன் மேன்மிக வருளுட னேந்துமா முகமும்
பவர்த டம்புயம் பத்தும்பன் னகமணிப் பணியும். (௰௧)

சடையும் பூதியுந் தயங்குறப் பிரசன்ன மாகி
அடையு மன்னவ னாத்துயி லெழுப்பிநீ யநநாள்
மிடைபிம் பாஜியால் யான்செயும் ஜபத்தைமே வினையிவ்
விடையு னக்குவேண் டுவதைநீ யியம்புதி யென்றான். (௰௨)

எழுந்து வெள்ளியங் கிரியில்வா ழீசன்ற னடியில்
விழுந்து தோத்திரம் பலபல செய்துபின் விமலா
குழந்தை யாகிய யானெது பெரிதென்று கொள்வேன்
விழைந்து நீபெரி தென்பதே யருள்செய வேண்டும். (௰௩)

எனக்கெ னப்புக லன்னவர் சுகுர்தத்தை யேத்தித்
தனக்கு வந்தகண் ணன்றிரு நாமத்தைச் சாற்றி
உனக்கு நானந்தக் கண்ணனைக் காட்டுவே னுறுக
மனக்கி சைந்தென வவருண வுணவுகள் வழங்கி. (௰௪)

கண்ண னுனவன் யமுனையங் கரையிலே காதல்
நண்ணு கோபிகை மாரொடு நடனங்கள் புரிவான்
தண்ணு மைதனைத் தாக்குவேன் யானங்குத் தழைப்ப
எண்ணு மன்னவன் சேவையே யெனக்கிட்ட மென்றான். (௰௫)

ஊன்ற தாமுகந் தன்னிலே நடந்தது முன்னே
என்ற விக்கலி யுகத்திலே யியங்குமோ வென்னில்
ஆன்ற வன்பர்தங் கண்ணுக்கவ் வானந்த மனைத்தும்
தோன்று மென்று தாஞ் சொல்லின னிளமதி சூடி. (௰௬)

பின்பு கோபிகை வேடமற் றவர்பெறப் பிணைத்தே
அன்பி னேடுகைக் கொண்டுகா ளிநதியை யடைந்தான்
முன்பு தோன்றின சந்தனங் குங்கும முதலா
மன்பெ ருந்தருப் பெருகின வானளாய் வளர்ந்து. (௰௭)

சண்ப கம்புன்னை பாதிரி மகிழ்பாரி சாதம்
தண்புகுந்துறு மல்லிகை முல்லைநற் சாதி
ஒண்ப லாநரந் தங்கொக்கு மாதுளை யோங்கிப
பண்ப கர்ந்திட வண்டுகள் மஞ்ஞைகள் பயில. (௰௮)

அன்னங் கோகிலங் கிள்ளைமென் பூவையோ டனைத்துந்
துன்ன மாமணி வகைகளும் பரிசமுந் துலங்கி
மின்ன வாயிடைத் தென்றலு மெல்லென விரவப்
பன்னு வோங்குபூங் காவன நிரம்புறும் பாரம். (௰௯)

வேறு.

இப்படி யெழிற்கோ ளுங்கா ளிந்திதீ ரத்தில் மேவி
ஒப்பற விளங்குங் கண்ண னுழையுமை மேவு பாகன்
தப்பறு நரசிங் கம்மே தாவொடு வந்து கண்டு
மெய்பபுடன் வணங்கி நிற்க விருப்புடன் கமலக் கண்ணன். (௨௰)

தழுவின னநேக மென்கோ பிகைகளி னடுவிற் றங்கி
வழுவறு பூட ணலங் காரத்தின் மகிழ்ந்தி யாவுங்
குழுவுற வேணு கானங் குறிக்கக்கோ பிகைகள் கூடி
நழுவுத லின்றி யாட நக்கன்மத் தளங்கை கொட்ட. (௨௧)

விளங்கிநிற் கின்ற கண்ணன் மெய்யெழில் கண்டு சில்லோர்
துளங்கிதழ் சுவைக்க வேண்டச் சிலர்தழு வுதற்குச் சூழக்
களங்கமில் சில்லோர் செய்ய கரந்தொட வேணடச் சில்லோர்.
உளங்குளிர்ந் தினிது முத்த முதவுதற் கடுத்து வேண்ட. (௨௨)

கண்ணனவ் வொருவ ருக்கோர் கண்ணனா யவர வர்க்குள்
நண்ணிய மனோர தங்க ணல்கின னுடல் செய்து
பெண் ணூறுபாகன் றன்னை நோக்கிக்கோ பிகையாய் மேவப்
பண்ணினை யாரை யென்னப் பசுபதி மிக நகைத்து. (௨௩)

நரசிங்க மேதா வுக்கு நயனத்தாற் குறிப்புச் செய்ய
விரைவுட னோடிவந்து விமலனை வணங்கக் கண்ட
முராரி தன்னை நோக்கி முந்திய பிறப்பி லின்னான்
உரமிகு புலியாய்ப் பிம்பா ஜிதனரு ளுறுத லானான். (௨௪)

செய்தவெம் பாவ மெல்லாந் தீர்ந்துவே தியர்கு லத்தில்
எய்தின னன்னை தந்தை யிறந்தபி னென்பால் வந்து
மெய்தனைத் தந்தா னேழு நாளுப வாச மேவி
நைதல்கண் டிரங்கி முன்னே நான்பிர சன்னமாகி. (௨௫)

உனக்கென்ன வேண்டு மென்ன வுறுவது தெரிந்தி லேன்யான்
நினக்கித மானதொன்றை யருள்கென நின்னை யன்றி
எனக்கித மில்லை வேறே யென்றியான் கூட்டி வந்தேன்
அனுக்கிர கஞ்செய் கண்ணா விவனுக்கென் றறைந்து நின்றான். (௨௬)

வினவிய கண்ண னந்த நரசிங்க மேதாவென்னும்
அனகர்தந் தலைமேற் கைவைத் தனுக்கிர கித்து நீயிவ
வனநதி தீரத் தென்னை மருவுகோ பிகைக ளோடு
மனம்வியந் தினிது கண்டாய் மற்றிந்த வாட றன்னை. (௨௭)

பிரபந்த மாகச் செய்தி பெரிதுல கத்தோர் கேட்கச்
சரதநின் கண்கள் காணத் தயங்குவ னின்ன வாறே
வரமிது வுனக்கென் றோதிச் சிவனுக்கும் விடைவ ழங்க
நரசிங்க மேதா வோடு நக்கனும் வணங்கிப் போந்தான். (௨௮)

தானமர் கோயில் மேவித் தக்கதங் கவர்க்கு நல்க
லானபின் பமல லீலை யனைத்தையும் பாடல் செய்து
ஞானநற் சோதி தன்னை நயந்தகக் கண்ணிற் கண்டே
ஊனமின் றோடிப் பாடி யுளமகிழ் வெய்த லானார். (௨௯)

இவர்மனை தன்னிலுள்ளோர் யாவரு மிவரைக் காணு
தவரவர் தேடித் தேடி யலைந்தன ருலையுங்காலைச்
சிவனது கோயில் மேவித் திகழ்குஜ ராத்தி பாவைக
நவமுறு லீலைப் பாட னணுகினர் கேட்டு வந்து. (௯௰)

தேடுவோர் தமக்குச் சொல்லத் தெரிந்தவர் வந்த ழைத்து
நீடுறு மனையிற் சேர்க்க நிமலனைத் தினமும் பாடி
ஆடுறு மகிமை கண்டோ ரந்தணன் மகளைத் தந்து
கூடுற மணத்தைச் செய்யக் குலவினர் வாழு நாளில் (௯௧)

மகளொடு மகனைப் பெற்று மருவுமூ ராரெல் லோரும்
தகவொடு மிகக்கொண் டாடச் சௌரித னமல லீலை
அகவிழி தினமுந் தோற்ற வருள்கொடு பாடி யாடி
மிகமகிழ் வெய்தி யுஞ்ச விருத்திசெய் திருக்கு நாளில். (௯௨)

அப்பதிக் கடுத்த சாம புரத்தினிற் றிரிபு ராந்த
கப்பெயர்ப் பார்ப் பான் பெற்ற கன்னிகை விவாக காலம்
இப்பொழு தென்ன நேரிட் டிருப்பதைப புரோகி தர்க்குச்
செப்புறக் கிஷ்ணபட்டர் சென்றனா வரனைத் தேடி. (௯௩)

விண்டுபானேய ராகி விளங்கிய கிஷ்ண பட்டர்
அண்டிய பதிக்கு வந்து நரசிங்க மேதா வான
தொண்டரைக் கண்டு மற்றுஞ் சுதனுக்கென் னெஜமா னன்றன்
பெண்டனைக் கொடுப்ப தாகப் பேசுகென் றென்னை யேவ (௯௪)

வந்தன னென்று சொல்ல மற்றவர் சம்ம திக்க
அந்தணர் பொருத்தம் யாவு மமைவது தெரிந்து வந்து
முந்தினர் நிச்ச யித்து மொழிதிரிபுராந்த கற்கு
நிந்தையில் லாது தாம்போய் மீண்டதை நிகழ்த்தி னூரால. (௯௫)

அவ்வுரை கேட்ட யாரு நகைத்தன ரைய ரோசிர்
செவ்விய வரனைத் தேடி வந்துளீர் சிரி தாமோ
வெவ்விய மிடியி னைந்தோ னரசிங்க மேதா வென்போன்
எவ்வியல் பும்மில் லாதோன் மகனுக்கோ விசைந்து வந்தீர். (௯௬)

நன்றுநன் றென்னக் கேட்டு நவிலுவார் கிஷ்ண பட்டர்
என்றுமப் பேயோ டாடிக் கிமவரை யினி துபெற்ற
தன்றனி மகளை யீயத்தக்கதன் றென்பார் போல
நின்றநீர் மறுப்பீ ராயி னிச்சய மான பின்னர் (௯௭)

உங்குலத் தவர்கள் செய்த வூழ்வழு வாம லுங்கை
அங்குலி யீயத் தக்க தாமென வதற்கு வேட்கும்
மங்கையைப் பெற்றோன் சொல்வான் மணமக னெமது செல்வப்
பொங்கினுக் கேற்ப வஞ்ஞூ றுனையும் புரவிக் கூட்டம். (௯௮)

ஐஞ்சகத் திரமுந் தேர்க ளாயிர முங்குன் றுமல்
மைஞ்சரு மங்கை மாரு மருவுறு மவைகட் கேற்ப
விஞ்சபூ டணம் பொன் னுடை விளங்குற வெகுவி னோத
பஞ்சவாத் தியமு நாளைப் பகன்மண மான தாலே. (௯௯)

குறைவிலா தெய்தல் வேண்டுங் குறிபுரோ கிதரோ யென்ன
வறியவன் வரனென் றெண்ணி மகடர மனமில் லாளை
முறைகெடக் கூறும் வார்த்தை முகக்குறிப் பதனாற் றேர்ந்து
மறையவர் நாளை நீசொல் வகைவரு வாரென் றோதி. (௬௰)

நரசிங்கமேதா பக்க னண்ணினர் நாளை யேதான்
பரவுநன் மணத்துக் கேற்ற பகலுள தாத லாலே
விரவுவை பவத்தி னோடு வருகென விளம்பிப் பின்னுந்
திரிபுராந் தகனை நணணிச் செபபினார் சிறபப மாதோ. (௬௧)

கேட்டவன் சிரித்து நீர்சொல் கின்றவன் மிடிய னென்று
நாட்டமில் லாது சொல்லு நயந்தெரி யாம னீர்போய்
மீட்டுவந் துரைத்தீ ரொந்த விதத்தவர் வருவர் போம் போம்
கூட்டியே வருதற்கென்ன கோபமிக் குடையர் போனார். (௬௨)

மறுதினங் காலை யேசொல் வார்நர சிங்க மேதா
முறையுட னெழுந்து நித்தக் கடன்களை முடித்துநானங்
குறைவறச் செய்தி ராறு நாமமுங் குலவச் சாத்திக்
கறையறு துளசி மாலை கழுத்தினிற் றரித்துக் கொணடு. (௬௩)

வீரவை ணவர்க ளோடு மனைவியுஞ் சேயு மேவச்
சீரரி பஜனஞ் செய்து சென்றனர் விவாகத் துக்குச்
சாரது துவரை மேவுஞ் சக்கர பாணி [illegible]ந்து
நேருருக் குமணி தன்னை நோக்கின னிகழ்த்து கின்றான். (௬௪)

என்னடி யவனே யானநரசிங்க் மேதா வென்போன்
றன்மகன் மணத்துக் கின்று சார்கின்ற றூதை லாலே
நன்மணந் தன்னை நீயே முன்னின்று நடத்தல் வேண்டும்
நின்னது கூட்டத் தோடே நேருதி யென்று கூறி. (௬௫)

உத்தவ ரக்குரூர ருறுசுகர் பிரக லாதர்
சுத்தநா ரதர்வான் மீகர் தும்புரர் புண்ட லீகர்
மெய்த்தப ராசரர்சௌ நகர்விபீ ஷணர்வி தூரர்
பொய்த்தவி லாஞ்ச நேயர் வீடுமர் சுதாமர் போல்வார். (௬௬)

கோவலர் கூட்டத் தோடு குழீஇவரச் சாது ரங்கம்
மேவரத் தேவி மாரும் வியநதுற வியமு ழங்கத்
தாவறு நரசிங் கம்மே தாவொடு கலந்து கூட
ஆவலின் வணங்கி யன்றொ ரொடுமண வூர்க்கு வந்தார். (௬௭)

வந்தவர் நகர்பபு றத்து வதிநதுதிரி புராநத கற்கு
முந்துபோ யொற்ற ராலே மொழிந்திடச் செய்யக் கேட்டுச்
சிந்தையிற் றிகைத்துப் பந்து சேகரனாகி வாத்தி
யந்தமின் முழங்க வந்தான் கருடன்முன் மசக மன்னான். (௬௮)

மணமகன் வருவ தான மங்கள சம்பர மத்தை
உணர்வுற லாகி நாண முற்றனன் கிஷ்ணபட்டர்
துணர்செறி துளவ மாலைத் தூயவ னருளி னலிவ்
வணமுற லாய தென்று மகிழ்ந்தனர் பின்பு மாதோ. (௬௯)

விச்சுவ கருமன் வந்து விவாகமண் டபத்தை யாரும்
நச்சுறப் புரிய ரம்பை மேனகை நடனஞ் செய்ய
மெய்ச்சிமே னின்று தேவர் முனிவர்வே டிக்கை பார்க்கக்
கச்சமில் பொருள்க ளெல்லாங் கலந்தமை வாகக் கொண்டு. (௬0)

வதுவைமண் டபத்தைச் சேர்ந்து மருவுருக் குமணி யாதி
அதிகரஞ் சிதஞ்செய் கின்ற வரிவையர் மொய்த்தி ருக்க
யதுகுல நாதன் றன்னோ டியல்பவ ராருங் கூடப
புதுமணம் புரிய வேண்டிப் புகுந்தினி திருக்கும் போது. (௬௧)

மணம்புரி மகனை யீன்றோன் வந்துதஞ் சுற்றஞ் சூழ
அணங்கினைக் கொடுவந் தாங்கே யனுகவை குண்ட நாதன்
இணங்குதன் குழாங்கள் சூழ வெழுந்துப சரிக்கக் கண்டு
கணங்கொளுந் திரிபு ராந்த கன்னதி சயித்துச் சொல்வான். (௬௨)

உம்மைநா னின்று காறுங் கண்டில னும்மூ ரேது
செம்மைசேர் நாம மேது செப்புதி ரென்னக் கண்ணன்
நம்மதூர் துவரை நாமஞ் சாமள நம்பி யிந்த
வெம்மையில் சிங்க மேதா மித்திர னெனக்கென் றோத. (௬௩)

அக்கணந் தனிலே பெண்ணோ டமையமாப் பிளைகோ தூளி
லக்கன முகூர்த்தந் தன்னி னல்லமங் கலநாண் சாத்த
மிக்கமா மறையோ ரெல்லாம் வேண்டுவ ராசி சொல்ல
எக்கிய முடிந்த பின்ன ரியலுமூர்க் கோலமாக. (௬௪)

ஐந்துநாட் சடங்குஞ் செவ்வே யானபி னிரவலாக்கும்
வந்துள மறையோ ருக்கும் வழங்கினன் றானங் கண்ணன்
பந்துபோ ஜனஞ்செய் விக்கப் பரிவுடன் பெண்ணை யீன்றோன்
முந்துமாப் பிளைக்குத் தக்க படிசெய முயன்று நின்றோன். (௬௫)

என்னுடைப் பொருள்க ளெல்லா மிவர்பொருட் குறையும்போதா
நன்னரொன் செய்கே னென்று நாணுதல் கண்டு கண்ணன்
முன்னரோ தனக்குத் தக்க சம்பந்த முயல்கி லாது
பின்னர்யோ சித்து நாணிற் பிழையுனக் குளதே செய்க (௬௬)

எனுமது கேட்டுத் தன்னா லியல்வகை செய்யச் செய்து
பினரவன் றன்னை நோக்கிப் பெரிதரி தாச ருக்கு
நினதுபெண் கொடுத்து நன்கு நின்றதா லென்றும் வாழ்தி
இனிதென வாழ்த்தி நார சிங்கமே தாவே யின்றே. (௬௭)

வருகென யாருங் கூட மாப்பிளை பெண்ணோ டெய்தத்
திரிபுராந் தகனு நேரோ வழிவிட்டுச் செல்லத் தாசர்
மருவுமூர் சேரச் செய்து மற்றுநீ நினையும் போது
பரிவுடன் வருவ னென்று பகர்ந்தனன் றுவரை சேர்ந்தான். (௬௮)

வேறு.

வந்தவ ருடனருள் மாதவ னேக
சிந்தையி லரிபத நேயர்தி னந்தோ
றுந்திரு நாயக னுறுவகை யாவுஞ்
சிந்தையு ளேகொடு பஜனைசி றந்தார். (௬௯)

வளர்வுறு நாளிடை வந்தனர் துவரா
அளவுற லாகிய யாத்திரை யாரிற்
கிளரொரு நல்லவர் கேசவ பட்டர்
களவள தென்பது கருதின ருற்றார். (௬௰)

போகிற வழியுள பொருள்களை வுற்றல
ஏகுவ தெப்படி யெனவெண்ணி யாரே
ஈகைகொ டவ்விடை யீவகை செய்வோர
வாகுட னென்னவு சாவிட மானார். (௬௧)

இங்குள ரீவகை செய்பவர் நார
சிங்கனொ ணும்பெய ராரெனல் செப்ப
அங்கவர் தம்முழை யன்னவை யெய்திப
பங்கமி லீனொன வுற்றது பகர்வார். (௬௨)

நம்முழை நாளுறு நூறுவி ராகன்
செம்மைய டன்றரு கின்றது சொர
நம்மது நாயக னணுறுது வாரை
தம்மிடை யென்வயி னீதல்ச மைபர். (௬௩)

என்றுரை செய்வதி னியல்புணர் தாசர்
நன்றென வேகொடு நல்கி னாரீட்டுத்
தன்றனை யேநிகா சாமள நம்பிச்
கன்றது வேசொல் சென்றன ரன்றே. (௬௪)

தருபொருள் கொண்டரி தாசர்த மில்லில்
வருவயி னவர்பெற மகிழ்வின்ப ழுங்கித்
திருநெடு மால்பெயர் செபமியி ருக்க
ஒருதுவ ராபதி யுற்றது மைபபாம். (௬௫)

போமவர் தம்பொருள் கொண்டவா புரிவ
தாமதை யுன்னிய கத்தில்வி யந்து
தாமதி தூரந டந்தயல் சாருங்
கோமதி யாறுகு டைந்தனா சென்றார். (௬௬)

சென்றது வாரகை யிற்றிகழ் கண்ணன்
மன்றன்ம லர்ப்பதம் வந்தனை செய்து
நின்றரி நாமநி ரம்பநி கழ்த்திப்
பின்றணி யர்ச்சகர் தம்மடி பேணி. (௬௭)

தூமதி யீர்துவ ராபதி தன்னிற்
சாமள நம்பியெ னும்பெயர் தக்கோன்
ஆமக மெங்கறை வீனொன வன்றோர்
நாமம றிந்திலெ மென்றுந வின்றார். (௬௮)

பின்புறம் வந்தும்வி னவினர் பேரோர்
இன்பினிவ் வூரினி லில்லையெ னக்கேட்
டென்புரி தும்மென வெண்ணின ரங்கே
துன்புமி குந்துறல் கண்டவர் சொல்வார். (௬௯)

என்னிவ ணிங்ஙனி னைந்தயர் கின்றீர்
சொன்மென வுற்றது சொல்லினர் கேட்டோர்
நன்மதி யீரான சிங்கனெ னும்போ
துன்னினன் வெம்மிடி துன்னின னின்னும். (௭௰)

மானமு நாணுமி லான்வயி னெங்ஙன்
ஈனமி லும்பொரு ளீந்தனி ரன்றே
போனது நீர்துயர் புக்குற லாலென்
றூனுறு மென்றுச லிப்பைய கன்ற. (௭௧)

பின்னரு மிவ்வகை பேதுற வேயான்
முன்னரி யற்றிய தேதென முன்னிப
பன்னரு மின்னல்ப டிந்தனா தம்பால
நன்னர டைந்தொரு சாமள நம்பி. (௭௨)

இவணடை நீரொவ ரொட்டிய தென்னை
நவநா ரோயுளா செய்ம்மென நாணித்
துவரையின் மேவுது ழாய்விரி மாாபத்
துவமையி லாதவ னைத்தொழ வுற்றேன் (௭௩)

கள்ளர்ப யத்தினில் வைத்தது காமம
வில்ளுநர் பாலறு நூறுவி ராகன்
கொள்ளவர் திட்டி து கொண்டுகொ பேபாண்
தள்ளரு மாளொரு சாமள நம்பி (௭௪)

இங்கிலை யென்றனர் யாவரு மீதால்
மங்குறு கின்றனன் மாதுய ரத்திற்
பொங்கிய தேர்மிசை வந்துபு குந்தோ
யெங்குளை யாரென யாமள நம்பி (௭௫)

என்பவன் யானினி யும்பொருள் யாவும்
இன்புட னீாபெற வையுற வில்லை
அன்புட னென்யஜ மானன ளித்த
நன்பொரு ளாதர வெங்கென நல்க (௭௬)

பெற்றரு ணன்குபி றங்குவி ழிக்கண்
ஒற்றுதல் செய்நரு குத்தவ ராதி
மற்றுமு ளார்முக நோக்கிம கிழ்ந்து
நற்றிய வென்யஜ மானன யந்தே (௭௭)

எழுதிய சீரினை யென்சொல்வெ னென்ன
வழுவறு முத்தவ ராதியர் மாயம்
ஒழிகிலை யுன்கப டத்தினை யொன்றூ
அழிவுறலின்றருள் செய்வத னாலே (௭௮)

பற்றிலர் *பற்றென நின்றருள் பண்பே
உற்றுளை யென்றுளு கந்தன ரோத்த
நற்றுணை யாய்வரு நம்பிந யந்தோ
டுற்றதொ கைப்பொருண் முற்றுமளித்தான் (௭௯)

கேசவ பட்டர்கி டைத்தனர் கண்போய்
நாசமி லாதது பெற்றென நாடி
ஈசனு டைச்செய லிங்கிது வென்ன
நேசமி குந்துநி கழ்த்துத லானர் (அ௰)

நின்யஜ மானனை நீடுற நோக்கிற்
புன்மிட யோவென லாயது பொற்பார்
உன்வ யினுற்றசி றப்பினை யுன்னில்
மன்மக னென்னம திக்கிட வாய்த்தாய் (அக)

இப்படி யாயுற லெங்கணு மில்லை
தெப்படி யென்னலும் யாமள நம்பி
அப்படி யாயின தன்னவர் மையற்
குட்படி கின்றிலர் சீருறல் வேண்டார். (அஉ)

ராமந ஞமைந வின்றுறு வாயார்
தாமடை கின்றவி திக்கெனெ சாற்றல்
யாமனை சேயையெ ழிற்செயல் போல
மாமலி வாயெனை வைத்தன ரிங்கே (அங

அன்னவர் தம்மரு ளாலல வோநான்
இன்னற விர்ந்தமர் கின்றன னென்று
தன்னுடன் வந்தவர் தம்மொடு பூமேற்
பொன்னமர் மார்பனு வபபொடு போனன் (அச)

போனபின் வந்தபொ ருட்குவை தன்னை
ஊனமி லாதெண வுற்றது மென்மே
லானது கண்டம லன்செய லீதென்
றீனமில் கேசவ பட்டரொ ழுந்தார் (அரு)

தானமெ னைத்துள வத்தனை யுந்தந்
தானபி னங்கமர் கோயிலை யண்மி
ஞானமு தற்றனி நாதனை வந்தித்
தூனமி லார்மகிழ் வுற்றனர் மீண்டார் (அசு)

மீண்டவர் தாநர சிங்கரை மேவி
ஆண்டுந டந்தன னைத்துமு ரைத்து
நீண்டவ னைக்கட னுய்க்கநி றைத்தீர்
வேண்டிய நுநதுணை மேன்மைய ருண்டோ (அஎ)

என்றுபு கழ்ந்தினி தேகினர் பின்பு
நன்றுண ருந்தனி நல்லவர் கண்ணீ
ரொன்றுற நாதனை யுள்ளுள்வி யந்து
நின்றரி நாமநி கழ்த்தியி ருந்தார் (அஅ)

வேறு

பங்கமறு ஞானமிகு பத்தராம்
சிங்கர்மகள் மாமிமனை சேர்தரா
அங்கணுறை காலைதெரு ளாகவே
பொங்குமகிழ் கொண்டதுபொ ருந்தவே. (அகூ)

தாய்மனை தனக்கறித ரச்செய்வான்
ஏயவொரு வன்னிவணி லெய்தினன்
ஆயதனை யோடுரைசெய் தானதை
நாயகனை நோக்கிநவில் வாரரோ, (கூ0)

பாபமகல் பாகவதர் பத்தியில்
தீபநிகர் வீர்நமது செல்வியின்
சோபனாக லந்திகழவு சொல்லினன்
கோபமறு குன்றுநிகர் கொள்கையீர். (அக)

நாமகிழ நல்வரிசை நல்குமா
ருமதனை நீரறைநதி ராலெனா
ராமனது நாமநல நம்வயின்
ஏமமென நின்றதுணர் கென்றனர். (கூஉ)

என்றவரொ ழுந்துமக ளில்வயிற்
சென்றபொழு தங்கவர்சி ரித்துநீர்
நன்றுதுள வத்தொடையு நாமமும
ஒன்றுஜப மாலையுமொ ருங்கவே. (கூங)

மகடனது சோபனம ணத்தினுக்
கிகழ்வுறவெ றுங்கையுட னெய்தினீர்
தகவிதுகொ லோமகிழ்த ழைக்குமோ
மிகவயிணவீரெனவி ளம்பினர். (கூச)

வரிசைகளில் மிக்குயரும் வஸ்தெலாம்
தெரியவெழு தித்தருதிர் சேர்க்கென
அரிபதநி னைப்பினர றைந்தனர்
விரிநகைவி ளைத்தனர்வி ளம்பவே (கூரு)

அவ்வயினெ ழுந்தொர்குடி லன்றுணிந்
தெவ்வகைகள் சொல்கெழுத வென்றனன்
கவ்விழி நங்கைமண நாரிதான்
மெய்வனைக லாடையணி வேண்டினள். (கூசா)

அவ்வவர வாவுவவெ லாம்வரை
செவ்வியனை நின்விழைவு சேர்க்கென
திவ்வியகுண பூர்ணருரை செய்திட
வெவ்வினையி னேன்விழைவு மேவவே (கூஎ)

நெட்டயிலி லேகணியி னோர்மணங்
கட்டியென வும்மெழுதல் கைக்கொளா
எட்டிறுவ ராபதியு ளின்பனைக்
கிட்டுநல னேயர்நினை கிற்கவே (கூஅ)

எழுதுவதை யன்றிவர வின்றெனக்
குழுவிடைவி ராவுகுடி லன்சொலத்
தொழுமடியர் சூழுறவு சூழுவான்
வழுவில்சுமை யாளொடவண் வந்தனன். (கூகூ)

மறையவ னெனச்சொல்வடி வங்கொடு
நிறையுமனை வாயிலிடை நின்றுகொண்
டுறையுமடி யார்தெரிய வோதுவித்
திறையறவெ லாருமவ னெய்தியே. (௱)

வந்துசுமை யாளொடுதம் வாயிலின்
முந்துமறை வேதியனை முன்னிநீ
எந்தநக ரிங்கணுக லேதென
இந்தநர சிங்கர்புரி யேவலேன். (௱௧)

வரிசைமக ளுக்குதவு வனவெலாம்
தெரியவொரு பெட்டி யொடு சேர்ந்ததென்
றுறைசெயவ ழைத்துளுறை யச்செய
வருமவன்வ ரைந்ததனை வாங்கியே. (௱௨)

அதிலெழுது கின்றபொருள் யாவையுங்
கதுவும்வகை யொவ்வொருக ணக்குடன்
விரவிதம ளித்தெழுது மெல்லியோன்
அதையுமவ ளோதுதலை யாகவே. (௱௩)

வைத்தபொழு தங்கணுறை வாரெலாம்
மொய்த்ததிச யித்துமகிழ முந்தவே
மெய்த்துநகை செய்துமதி மெல்லியோய்
மொத்தைமனு ளோதுதலை மோதவோ. (௱௪)

பெற்றனையெ னப்பலபி தற்றினர்
மற்றவனு நாணிமிக மாழ்கினன்
நற்றவமி குத்தநர சிங்கனை
உற்றனைவ ரும்புகழ்த லுற்றனர். (௱௫)

ஞானநல மிக்கநர சிங்கரோ
ஜானகிம ணாளனருள் தங்கினீர்
ஆனவதை யிப்பொழுத றிந்துளோம்
ஈனமதி யேமெனவி றைஞ்சினர். (௱௬)

பின்புமக ளுக்கணிபி றங்கவே
இன்புதரு சோபனமி யற்றினர்
அன்பின்விடை பெற்றுதம தாயவூர்
முன்புதிகழ் கண்ணனொடு முந்தினர். (௱௭)

கூடவரு கண்ணன்மகிழ் கொள்ளவே
நீடுபுகழ் கூறியெனி மித்தமாய்
ஆடரவின் மீதுதுயி லப்பனே
வாடுசிர மம்படவும் வாய்த்ததே. (௱௮)

என்றவரை நோக்கிமகிழ் வெய்தியே
குன்றவரை கொண்டமுகில் கோதிலீர்
ஒன்றவரை வுற்றபடி யுய்த்துளேன்
துன்றவனை வீருமது தோளென. (௱௯)

தனதொருக ழுத்திலுறு தண்டுழாய்
வனவணிய லேக்கொடுமெ இழ்ச்சியாய்
அனகர்கள னிற்பொலிவ தாக்கினான்
பினரவர்வ ணங்கவிடை பெற்றனன். (௫௰)

அன்றுமுத லன்னவர்க ழுத்திலே
நின்றபஜ னைப்பொழுதி னேரவே
துன்றரிக ழுத்திலுறு தொங்கலுந்
நன்றுவிழ லாயதுந ருளெலாம். (௫௰௧)

ஆகவரு கின்றதைய றிந்துமண்
டேகவர சன்பெரிது மூங்கியா
மோகமுறும் வித்தையென முன்னியே
ஏகியது சோதனையி யற்றுவான். (௫௰௨)

அந்தநக ரிற்சினக ரத்துளே
வந்தரிக ழுத்திலுறு மாலையை
முந்துகவ சத்தொடுமு டிநதது
சிந்துதலி லாதுசெறி யச்செய்தான். (௫௰௩)

இனையநர சிங்கருமி யற்றுப
சனைபுரிய நாளும்வரு தன்மைபோல்
முனைவிரவி நின்றதுமொ ழிந்தபோ
தனையவர சன்புகல்வ தாயினான். (௫௰௪)

நீருலகி லேதினமு நேருவோர்
யாரையுமி யக்கிடவ றிந்துளீர்
தாருமது தோள்விழல்ச மைபபதை
நேரறிவ னின்றெனநி கழ்த்தியே. (௫௰௫)

மேவுதொடை தோளிடைவி ழாவிடில்
நோவுபட வேறுமைவ ருத்துவேன்
காவுமென வேயருள்செய் கண்ணனை
ஆவலுட னேதுதிய றைந்தனர். (௫௰௬)

என்றும்விழு தொங்கலவ ரின்களம்
துன்றலில தாகியது சோதனைக்
கன்றுவரு வோனறிய வாதரித்
தொன்று துதி நன்றுறவு ணர்த்தினார். (௫௰௭)

பின்னரும்வி ழாதுறுதல் பேணியே
இன்னலுட னேயிறையை யின்றுநீ
நின்னதுது ழாயணிய னோர்தியேல்
என்னகுறை வாமுனதி லென்றனர். (௫௰௮)

பரிவுடனி னைந்துதுதி பண்ணுமுன்
வரிவதுவ ரிந்தபடி மன்னவும்
ஹரிகளனி லாகியவிர் கின்றவோர்
தெரியலிவர் தோளிலொளி செய்ததே. (௫௰௯)

சிங்கரிவர் தோளிலொளி செய்துறும்
செங்கலைய நிந்தவொரு தோன்றலும்
அங்கரிச மூத்துறம லங்கரோன்
எங்கெனவ நிந்தனனி லாததே. (௱௨௰)

பயமிகவி யந்தவர்ப தத்திலே
நயமுடன்வ ணங்கியிவா நாகமே
வியவிடம திற்பிறவி மேவினா
ஜயஜயவெ னப்புகழ்த ழைக்கவே. (௱௨௧)

முகமனுரை செய்துமது முந்துசீர்
தகவறிகி லாதுறுத ருக்கிறேல்
மிசநுமைவ ருத்திநவை மிக்கதே
அகமகிழ்வி னேடுபொறை யாற்றுவீர். (௱௨௨)

எனுமவனை யாசிகளி யம்பியே
துனவகம்வி டுத்தரிது ணைபபசம்
மனனுறநி றுத்திமிக வாழ்த்தியே
அனுதினமு மிவ்வகைய மர்ந்தனர். (௱௨௩)

நரசிங்கமேதா திருவடிகளே சரணம்

ஆகசரித்திரம் ௨௩க்கு செய்யுள் ௲௱௨

முற்றிற்று.

இராமதாசர்சரித்திரம்

ராம சற்குணர் பக்தரிற் றிலகர்பார்ப் பாரில்
விரவு முத்தம ராமதா சென்றொரு மேலோர்
தரமி குத்தடாங் கூரிலே வாழ்பவர் தாஞ்சென்
றிரவு பிச்சையூ ணேடுரும் பம்பெற வியல்வோர். (க)

ராம நாமமே நவிடிய றவுடை நல்லோர்
மாம ரந்தனைக் குடைந்தநிற் றுளசியை வளர்த்துத்
தோமி லாதுநூற் றைம்பது கோசதூ ரத்தி
லேமு யங்குது வாரகைக் கேகுவ ரொடுத்து. (உ)

வருமெ காதசித் தினந்தொறுங் கண்ணனை மருவித்
தரிச னஞ்செயும் விரதத்தைத் தவிர்கில ராகி
விரவுமார்க்கத்தி னடக்கும்போ தானந்த மேவிப்
பரம னாமத்தைப பாடின ராடினர் பயில்வார். (ங)

தேக மீதபி மானமில் லாதவர் சென்று
வாக தாகிய கோமதி மூழ்கிமா தவன்பால்
எகி யன்பொடு வணங்கியென் பிறப்புட னிறப்புப்
போக நீயருள் கெனத்துழாய் கொண்டுபூ சிப்பார். (ச)

மீண்டு தாமுறை யூர்வரு வாரிந்த விதமாய்
ஆண்டு நாலைந்து மைந்துமே கழிதர லாக
வேண்டு கோளினை யொருதம மேவுதல் விலக
மூண்டு றுநதுயா கொண்டவர் துவரையை முந்தி. (ரு)

பதித பாவன ககபதி வாகன பரமா
அதிதி ரக்ஷகா வெனக்குமூப படைந்த தனுலே
நிதித ரித்திற் கெனநின்ற நின்னிடை நேரும்
விதித வீந்ததா லசக்தியு மெனக்குமே வியது (சா)

இனிநின் பால்வரு கின்றில னேலுமென் னிடத்தில்
கனியு மின்னருள் குறைவுறு தருள்செயக் கடவை
எனவு ரைத்தனர் கண்கணீர் பெருகுற வெனையாள்
அனக நின்னையான் காண்பதெப் போதென வழுது (எ)

முடிவ தாகிய சேவையீ தாதலால் மொழியும்
படியெ தாயினுங் கிடைத்தில னென்றுபோய்ப் பரமன்
அடிபி டித்தன ராயுற வருணிறை கண்ணன்
துடிது டித்தது பொறுக்கில னுன்குதோ ளுடனே (அ)

ஐம்பெ ரும்படை யொடுமுக மண்டல மவிரப்
பைம்பொ னூர்கலை விளங்குற பக்தர்முன் றேன்றி
அம்பொன் மார்பகத் தணைத்தன னெடுத்தவர் தம்மை
நம்ப னேவெகு நாளெனைச் சேவித்து நயந்தாய் (கூ)

ஆத லாலுனக் கியான்கடன் காரனே யானேன்
ஏது செய்குவ னெப்படி யிக்கடன் தீர்ப் பேன்
போதல் செய்குவ னின்னுட னெனைகொண்டு போதி
காத லோடென ராமதா சென்பவர் கருதி (௰)

உன்னை யெப்படி யான்கொண்டு போவதென் றுரைப்ப
பின்னை நாயக னெனதுதேர் வரும்வந்த பின்னா
என்னை யன்னதி லேற்றியின் றிராவிடை யேநீ
நின்ன தூர்புகு கென்றுதேர் வரவுட னினைத்தான் (௰க)

நினைத்த மாத்திரை வந்ததேர் கண்டன்பா நிமலன
றனைச்சு மந்தெடுத் தங்கதி லேற்றியூ சாரங்கார்
பினைச்ச ரணடொழு தமலனை யென்னையாள் பெரும
உனைக்க ரந்தெங்கன் வைப்பதென் னகததுநீ யுற்றால (௰உ)

அங்குக் கண்டிலா தேடிவந் தடியெனை யலைபாரா
தங்கு நின்னினை வெப்படி யோவெனத் தளாவோ
டிங்கு றபபின்பு விடிந்தபி னெழிற்றுவா ரகையிற்
பொங்கு மாச்சகர் காணகிலா கண்ணனைப புகுநது (௰ங)

வியந்து விம்மினா மயஙகலு மவரிலோர் விரகர்
நயந்து நேற்றிரா ராமதா சென்பவர் நணுகி
இயைந்து பூசனை யியற்றினர் தினந்தொறு மியற்றப
பெயர்ந்து டன்கொடு போயின ரோவென்று பேச (௰ச)

யாரு மப்படி யாயினு மாமெனட் டாங்கூர்
சாரு வோமெனத் தெரிதரச் சார்ந்தன ராக
நேரு மன்னதை ராமதா சென்பவர் நினைந்து
சோரு நெஞ்சொடு கண்ணனைத் துதித்தனர் சொல்ல (௰ரு)

கண்ண னேதொன்றுங் கழறில னுயுறல் கண்டு
திண்ண மேவருந் தணடனையென்றுசீ தரனை
நண்ணு மங்கொரு கூபத்திற் கிடத்தினர் நண்ண
எண்ணி வந்தவர்ச் சகரிவ ரில்லிடை யெய்தி. (௰சா)

கொண்டு வந்தகண் ணனைக்கொடு மென்றவா குறிக்கத்
தொண்டர் யான்கொடு வந்திலே னெனதகந் துருவிக்
கண்டு கொண்மினென் றுரைத்திட வர்ச்சகர் கடுகி
அண்ட கந்தொறுந் தேடினர் கண்டில ரயர்ந்தார் (௰எ)

கேணி வாவியிற் கிடத்தினுங் கிடத்தலா மென்று
வாணி மாமனைத் தேடின ரீட்டியான் மார்பில்
ஆணி பாய்ந்திடக் குருதிநீர்க் குமிழிமே லாகக்
கோணி னுரிது வென்னென மூழ்கினர் கொண்டார். (௰அ)

கொண்டு கண்ணனைக் குருதிநீர் துடைத்தொரு கொடித்தேர்
அண்டு றக்கொணர்ந் தேற்றின ரூர்செலலாகக்
கண்டு ராமதா சென்பவர் கலங்கினர் கண்ணு
விண்டு போதியோ கொண்டிலே னென்றுபோய் விளம்ப (௰கூ

என்று சொல்வதைக் கேட்டருள் கண்ணனங் கிரங்கி
நன்று மற்றவ ருள்ளத்திற் றெரிந்திட நணுகி
ஒன்று பண்டலீ கன்றுவா ரத்துறு வதுபோல்
என்று நின்னகத் திருப்பனீ துயருற லென்றான். (உ௰)

எனலு ராமதா சென்பவ ருன்னையர்ச் சகர்தேர்
தனிலு யர்த்தினர் தாங்கொடு போவதைத் தவிர்த்திங்
கினிதி னெப்படி யென்னகத் திருப்பைநீ யென்று
பனிம லர்க்கணீ ரொழுகுறப் பகர்ந்திடப் பகவன். (உக)

நீசொ லர்ச்சகர் தம்மிடத் தெனதுமெய் நிறைக்குத்
தேசி கங்கொடுத் தென்னைநீ கொள்கென்று செப்ப
மாசி லாதவர் நினதுமெய் நிறைக்கொத்த மாழை
பேசு மென்னிடத் தேதெனப் பின்னைநா யகனும். (உஉ)

நினது நாயகி மூக்கணி யோடென்னை நிறுக்கிற்
கனநி ரப்புவ னதைத்தந்து நீயெனைக் கைக்கொள்
கெனவு மின்புட னர்ச்சக ரிடத்தவ ரேகி
அனக ரேதுவ ணாயினின்று மமலரங் காறன். (உங)

யாது காரண மோதெரி கிலமிவ னணுகுஞ்
சீத ரன்றனை யேன்கொடு செல்கிறீர் சிறக்க
மாத னந்தரு கின்றனன் மாதவ னிறைக்குப்
போத ரும்படி யமலனைத் தருகெனப் புகன்றார். (உச)

கேட்ட வர்ச்சகர் நகைத்திவன் கிளைபொரு ளில்லான்
நாட்டும் யாசக நன்றுநன் றெனநவில் வதைநாம்
ஈட்டு மிவ்விடத் தறிகுது மெனவவ ரிசையக்
கூட்ட மாயின ரருளார் கொடுப்பது குறிக்க (உரு)

வந்து கூடினர் தங்களை மாதவர் நோக்கி
இந்த வர்ச்சகர் பொருள் கொடு தருவமென் றிசைந்தார்
உந்த மக்குமு னுமைபிற ழாதுறல் வேண்டும்
முந்த ளிப்பனீர் காண்குற நிறுத்தென மொழிந்தார் (உசு)

ஊருளா ரந்த வர்ச்சகர் தமையுற நோக்கிச்
சீரு ளீரிது சம்மத மோவென்று செப்ப
யாரு நோக்குற விவன்றரு கிற்பனே லளித்தும்
நேரு மூர்த்தியை யென்றன ரர்ச்சகர் நிலைக்க. (உஎ)

யாவ ருந்துலை மீதம லன்றனை யேற்றித்
தாவி லன்பரை நோக்கிநீர் பொருடரு கென்ன
மேவி யில்லிடை மூக்கணி கைக்கொடு மேவ
நீவிர் போய்க்கொடு வந்ததே தென்றனர் நின்றோர். (உஅ)

கைக்கு ளாயதைக் காட்டலுங் கண்டவர் நகைத்து
நிற்கு மோவிது நிறைக்கென வன்பரு நிறுத்தால்
ஒக்குமீதென வுச்சிமேற் கரங்குவித் துன்சொல்
பொய்க்கு மோவம லாவடி யார்க்குறு பொருளே. (உகூ)

முன்ன நாரதர்சத்திய பாமையை முயக்கி
உன்னை யேகொடு போம்பொழு துருக்கும ணித்தாய்
அன்ன நற்றுலை யிடுந்துள வத்தள மலவோ
என்ன தின்பொரு ளெனத்துலை யிட்டன ரோற்க. (௯௰)

இட்டமூக்கணிக் கெம்பெரு மாளிறை யேலாத்
தட்டு யர்ந்திட மூக்கணித் தட்டது தாழ
வட்ட மாகிநின் றொலாம் வியந்தனா வானோர்
மட்டு மாமலர் சொரிந்தனர் வாழ்த்தினர் மாதோ. (௯௧)

முன்வி னோதமா யிசைந்தவர்ச் சகலொலா முன்னிப்
பொன்னி றையக னிங்ஙன மிவர்க்கருள் புரிந்தால்
என்ன தாகுநஞ் செயலென மூர்த்திதா னிங்கே
நன்னர் வைகுக வெனநிலை செய்தனர் நல்கி. (௯௨)

நல்கி யன்பரைப் புகழ்ந்தனர் துவாரகை நண்ணி.
பல்க வேறொரு மூர்த்தியைப் பதிட்டைசெய் துறமூர்
மல்கு றுந்துவ ராபதி வருமவர் டாங்கூா
புல்கு கண்ணனைக் கண்டுபோ வாரினறம் பொருந்த. (௯௩)

அகச்சரித்திரம உஉக்குச் செய்யுள் ௬௪௯

இராமதாசர் திருவடிகளே சரணம்

முற்றிற்று.



பிரமசாரிசரித்திரம்

அரிசது வாரமெ னும்பெய ரேயரப
பரித்த பார்மிசைப பல்கிய மாநகர்
தரித்த மாமறை யோர்சகத தாசைமா
சிரித்து ளோரகலி யாணசு வாமியே· (க)

ஹரிப தாம்புயத் தாசைவிஞ் சன்னவா
பெரிது தீர்த்தமா யாத்திரை பேணிஞா
புரிதரபபுகும் போதினன் பாயுடன்
றுரிசி லாரொரு வன்னியுந் துன்னிஞா. (உ)

இரவி நன்பக லும்மிரா மன்பெயர்
பரவி யேயுள பற்பல தீரதசமும
விரவி யாடிமால வீற்றிருக் கும்பதி
கரவி லாபல கண்டுகொண டேகிஞா (ங)

ஏகி யான்மவின் பம்பெரி தெய்தியே
வாகு நாலுடை மால்குண மாணைபவி
வேகர் பேசிமேன் மேன்மது ராபுரி
யாக நீள்யமு ஞநதி யாடிஞர். (ச)

ஆடி யம்மது ராபுரி யண்மியே
நீடு மாயனைக கண்டுநீ டாதரங்
கூடி வேண்டுறும் பூசைசெய் தேகுலாயப
பாடி ஞாபுகழ் பற்பல பன்னியே· (ரு)

மூன்றி ராவவண் முந்தினர் தங்கிஞர்
ஆன்ற காலைகல் யாணசு வாமியங்
கூன்று மாறுதா பசசுர முற்றதால்
ஏன்ற வன்னியு மேகில ரெய்திஞர்· (சு)

பராபொ ருட்டுப காரமே பண்ணுமா
தரவி ரக்கமுஞ் சாந்தமுந் தங்கிய
பிரம சாரிநோய் பேர்சரப பத்தியம்
உரம ருந்துதந் துற்றனர் நாளெலாம். (எ)

ஆறு மாதமங் கானபி ணையறத்
தேறி ஞர்கலி யாணசு வாமிதோந்
தீறி லாதெனைக் காத்துளீ ரேயெனக்
கூறு வாருப காரநேர் கொள்வே. (அ)

ஆண்டொ ரொட்டுளா ளானவென் றன்மகள்
வேண்டு நற்பதி நீரோன வேண்டினேன்
ஈண்டு நின்றுநா மேகின பின்புநீர்
பூண்டு கொண்மி னென் ருரை பொய்க்கிலார். (கூ)

சொன்ன வாசகங் கேட்டவர் சொல்லுவார்
அன்னை தந்தையோ டாருமில் லேனெனக்
கென்னை நன்மண மெய்தவு மென்மனந்
துன்னு றுததது துக்கமென் றேதவே. (ய)

ஓது வன்னியை நோக்கியும் பாலுறு
தேத மற்றதற் கெம்பிரா னேயுளன்
ஆத லாலெனக் கானபெண் ணீர்கொளா
ஈதல்செய்தன னென்னலும் வன்னியே. (யக)

நீரு ரைத்தவர் நேர்வரோ நும்மனை
யார்ம றுத்திடி லென்செய்வீர் நீரெனத
தேர்த வத்தினர் சேரவா ரும்மெனப்
பாரளிப்பவன் பாலழைத் தேகினர். (யஉ)

அன்ன மாதவன் முன்னர்நின் றன்பினோ
டென்ன தோர்பெணை யின்னவர்க் கீகுவேன்
சொன்ன சொற்றவி றேனெனச் சொல்லினா
பின்னை கேள்வனைச் சான்றெனப பேணியே. (யங)

வன்னி கையினீர் வாக்கிய பின்புமால
பொன்னி ரைடிப்போதினைப போற்றியே
பின்னர் வன்னியைக் கைக்கொடு பேர்ந்தனா
மன்ன ரித்துவா ரத்தில்வந் தாரரோ. (யச)

வந்து வன்னியை வைத்தோாம ருஙகுற
முந்து போதில்மு கங்கொடுத் தின்னுரை
தந்தி டாதுத னையரும் பன்னியும்
நொந்தி ருந்தபின் றந்தையை நோக்கியே. (யரு)

மனைய றத்தைம றந்துபொன் னீட்டுத
றனைவி டுத்துநீர் சார்ந்தனிர் யாத்திரை
புனைவி னுள்பல போக்கிபபு கும்பொழு
தினைய னைக்கொடிங் கேன்வந்தீ ரொன்னவே (யசா)

மைந்தன் கூறியி கழ்ந்திட மற்றிவர்
நொந்து தம்மனை யாள்முக நோக்கியே
எந்த நாட்டினு மேகிம துரையில்
வந்த போதுதா பச்சுரம் வந்ததே (யஎ)

சுரத்தி னொந்துதொ லைவுப டாதெனைத்
திரத்தி னுறுதிங் கள்வரை தீர்மருந்
துரத்தி னல்கியு தவிசெய் தானிவன்
றரத்தி லென்செயத் தக்கதென் றெண்ணியே (யஅ)

நமது கன்னியை நல்குத லேநல
வமைதி யென்றறி முன்னரன் பாகிநீர்
சமைய நல்கிய ழைத்திங்குச் சார்ந்தனென்
அமரு மொப்புதி ரொன்றுநு வன்றனர். (யகூ)

பாத்தி ரைக்க ணிறத்தனன் றன்னது
நீத்து ளீர்நெடு நாள்வரை நின்றநோய்
தீர்த்த னனிவ னென்றுநீர் செய்தகைப்
பேர்த்தி ருக்கெனப் பேசினள் பின்னரும். (௨௰)

உலகி னன்றியொ ருவர்க்கொ ருவர்செய்
திலக லென்றுமுன் னுன்னாதற் காகநங்
குலந லக்கன்னி தன்னைக்கொ டுப்பதோ
நலமி லன்னியற் கென்று நவிலவே. (௨௧)

மதுரை நாதன்முன் யான்சொன்ன வார்த்தையைப்
பிறிர்வு செய்வதெவ் வாறெனப் பேதையும்
மதுரை வேறென்று செய்தும கட்பெற்று
நொதும லற்கருள் கென்றுது வன்றனள். (௨௨)

அரிய தத்திநல் லன்புசெய் யோற்குநந்
தெரிவை யைத்தரல் செவ்விய தேமிறல்
புரிகு புற்குயி லேயெனப் பொன்னொளா
விரிசி னத்தின்வி ளம்புகின் றுளபோ. (௨௩)

இன்று மிச்சொலி யம்பவி லேலென்றக்
கன்னி யைத்தன்று வேண்டியத் தென்னனும்
மன்னு மைந்தரு யற்றநு வேசொல
என்ன செய்வர்கல் யாணசு வாரியே. (௨௪)

வாட்ட மிக்கவ ராய்மற நாளுடன்
கூட்டி யந்தவவ் வன்னியைக் கூய்க்கொடு
நாட்டு வேந்தன்மு னண்ணியெ லாஞ்சொலக்
கேட்ட மன்னவன் வன்னியைக் கேட்கின்றான். (௨௫)

கோணி லாவியா பெற்றரு மாரிதன்
பாணி பற்றெனப பாணிகை வார்க்குபோ
தாணி யாயவன் யாருந் தாரொன
வாணி மாமனென் றோர்ந்த வன்னியே. (௨௬)

ஆயி லந்தம துரையில் வாழுறி
நேய மோடிவண் வந்துநி கழ்த்திடில்
ஏய லாமிவர் பெண்ணையு னக்கென்றான்
மேய பூதல வேந்தன்வி றுவியே. (௨௭)

நன்றெ னக்கொடு நம்பியவ் வன்னியுஞ்
சென்று கூட்டிவ ருவெனெ னச்சென்று
நின்ற மாமது ராபுரி நித்தன்முன்
ஒன்றி யஞ்சலித் தோதுகின் றாரரோ. (௨௮)

ஐய னேயகி லங்களுக் கன்பர்க்கு
மெய்ய னேயுன்றன் முன்னந்த வேதியர்
கையி னீர்தரக் கண்டனே யாதலால்
வைய மன்னன்மு னீவரல் வாய்த்ததே. (௨௯)

அரசன் முன்வந்த றைகிலை யேவினிப்
பிரம சாரிசம் சாரியெ னும்பெயர்த்
தரமி ரண்டிலொன் றும்மின்றிச் சாம்புவேன்
கரணி னீர்கொண்ட காரணத் தாலென்றார். (௬0)

உன்னை யன்றியொ ருதுணை வேறிலா
என்னைக் காத்தியென் றேத்தவி ரங்கின
பின்னை நாயகன் பின்வருகின்றவென்
றன்னை நோக்கலை சாருதி முந்தென்றான். (௬௧)

திரும்பி நோக்குதி யேலுடன் சேர்கிலேன்
விரும்பி யவ்விடத் தேநிலை மேவுவேன்
அரும்பு மன்பின னேயெனு மவ்வுரை
தரும்பொன் னாதனைத் தாழ்ந்துமுன் சாா்ந்தனர். (௬௨)

செல்லு வோர்திரு நாயகன் சேவடி
புல்லு நூபுரம் பொங்குறு மோசையை
நல்ல தாகவி னவிந டந்தனர்
தொல்ல ரித்துவா ரத்தினைத் துன்னவே. (௬௩)

கோச லைக்குப்பு றத்துக்கொ ழுஞ்சிலம்
போசை கேட்கில ருன்னித்தி ரும்பினார்
நேச மோடுடன் வந்தநி மலனும்
ஈச னின்றன னேக்குமி டத்திலே. (௬௪)

நின்ற மாயவன் வன்னியை நோக்கிநீ
ஒன்று நான்முனு ரைத்தநி கந்ததால்
நன்ற தாமிங்கு நண்ணுவ னண்ணிடேன்
வென்றி மன்னனி லென்றுவி ளம்பியே. (௬௫)

சென்று மன்னனைச் சேர வழைத்திவண்
ஒன்று கென்னவு டனந்த வன்னிபோய்
நன்றி மன்னனைக் கண்டுபொன் னாதனைத்
துன்று றக்கொடு வந்ததைச் சொல்லினார். (௬௬)

வினவி மன்னன்வி யந்துவி ளங்குமா
சனமி ழிந்தவர் தம்மைவ ணங்கித்தன்
அனிக மோடிய மார்ப்பவம் போருக
வனிதை நாதனை வந்துவ ணங்கினான் (௬௭)

வணங்கி யானந்த மாக்கடல் மூழ்கியிங்
கிணங்கு மூர்த்தியெ ழில்மது ராபுரிக்
கணங்கி ளர்ந்தொளிர் கண்ணனன் றேகண்ட
குணங்கி ளர்ந்தவ ரோயெனக் கூறினான். (௬௮)

கண்டு வந்தவர் யாங்கண்ட கண்ணனே
அண்டு மூர்த்தியென் றோத வரசனுந்
தொண்ட ரோடுதொ ழுதரி நாமத்தை
மண்டு றச்சொல்லி வாழ்த்திம கிழ்ந்தனன். (௬௯)

சல்ல மங்கல நாள்குறித் தஞ்சுகோ
செல்லை மிளமி லங்குறப் பந்தரிட்
டொல்லொ லிப்பல்லி யங்களு மோங்குறப்
புல்ல யாவும்பொ ருந்தவ மைத்தரோ. (௬௰)

மான மைந்தும கிழ்ந்துவி ளங்குகல
யான சாமிம கிழைய லங்கரித்
தேனை நன்மண மன்னிக்கி யற்றியே
பூணு மாடையும பொங்கவ ழுங்கினன். (௬௧)

சான்ற தொண்டற்குச் சாற்றம துரைவழி
தோன்ற லிவ்விடைத் தோன்றின னென்றுதேன்
கான்ற மாமலர் நூவிக்க ளித்தனர்
ஆன்ற தேவர னைவரு மங்ஙனே. (௬௨)

மதுரை மாநகர் மற்றொரு மூர்த்தியால்
அதுவி ளங்கவ மைத்திங்கொ ராலயம்
புதுமை செய்துபொ ருந்தவெல் லாம்புரி
மதுரை மன்னன்ம கிழ்ந்திருந் தானரோ. (௬௩)

அன்று தொட்டுத்த பதிசை யாகியே
நின்ற ரித்துவா ரபெயாந் தொன்னகர்
ஒன்று தக்கணத திற்பண்ட ரியொளிர
நின்ற மேற்கிற்று வணகி ழங்கியே. (௬௪)

மேவு றுஞ்சக நாதமவி ளங்குவான்
பூவின் மங்கைபொ ருந்துநி றத்தி றன்
ஓவி முழுதி சைக்கணு முள்ளவா
தேவ தேவவென் றேத்திச்சி றக்கவே. (௬௫)

ஆகசரித்திரம் ௨-க்குச் செய்யுள் ௩௬௮

பிரமசாரி திருவடிகளே சரணம்.

முற்றிற்று.

சூரதாசர்சரித்திரம்

துவாரா புரிமே வியதோன் றலுளங்
கவரா தரமே வுகளிப பின்மகிழ்
பவரா ணவர்சத் தியபா மையகத்
தவரா யினராக் குரூரார் ஒருநாள். (௧)

யர்தா ருறவா சனம்வண் மைபெறத்
தந்தா தரவிஞ் சுசன்மா னமிக
முந்தார் தருவோர் முகநோக் கிமனத்
துந்தா தரமோ துவர்பா மையரோ. (௨)

முன்போ லெனின்மே யிமுயங் கமுகுந்
தன்பா லினிதோ துசமர்த் துடையீர்
அன்பா லெரிநே டமளா வுதலால்
என்பா லெவனெய் தவியற் றுதிரோ. (௩)

என்று பரியின் பிரிவான் மயமேறய்
துன்று மிழையார் புகுசோர் வுதனை
நன்று புணரக் குரூரா இனிநா
தன்று னிவரில் விடைசா கிலனேல். (௪)

இவரா ருயிர்போ மெனவெண் ணியனே
லவலா துறுமிவ் விடைகண் ணனையான்
தயலா துறுமா றுசமைப் பெனென்று
அவரூர் வடிவத் தொடுமெண் ணினரோ. (௫)

பெண்ணை னெதிர்நின் றதுகண் டவுடன்
பண்ணின் மொழியா ளொருபா மைமிக
உண்ணைந் துயிரோ வுதலோ விமகிழ
நண்ணும் பொழுதே கினன்று ரணனே. (௬)

தன்னின் னெதிர்நின் றவர்தம் மையெனே
என்னின் னிவணெய் தினையா னிலையாய்த்
துன்னும் பொழுதென் றுதொடர்ந் தகலி
மன்னந் தகனும் பவம் வாய்க் கவெனு. (௭)

சளர்சத் தியபா மைநிதா சியெனக்
கிளரப் பவமே வல்கிடைத் திநிலத்
தளவக் கலிகா லமதிற் கடிதென்
றுளமொப் பவுளாத் தனனப் பொழுதே. (௮)

குருடா மவர்கோ கநகை கணவா
அருடா னிதுவோ வெனவஞ் சலியாத்
தெருளா தவனே வெனைநீ தெளியாச்
சுருளார் குழலா ருறுசோர் வறவே. (௯)

அன்போ லிவணின் றனனீ யதனை
என்போ லெனவெண் ணிணையா வருளும்
பொன்போ லொளிர்புங் கவனே பொறைசெய்
உன்போ லிலையா கியவுத் தமனே. (௰)

எனுமின் னுரைபற் பலியம் பிடலும்
வினவுந் திருமா லறிவேன் மெயினைச்
சினமொன் றிலென்மே தினிநீ தறவிங்
கனமும் மைநவின் றனனென் றனனே. (௰க)

ஆயிற் கலிகா லமதிற் புவியான்
ருயிற் பவமே வுதலைத் தவிரா
நீயிப் படியென் னெதிர்நிற் கவென
வாயிற் றுதிவைத் துவகுத் தனரோ. (௰௨)

கலிசேர் வுறுகா லமதிற் பிரிவாற்
சலிபா மையொர்தா சியெனப பவமே
புலிமே வுமிடத் துநீபோ தருபோ
திலியா னுமையென் னிடைசேர்த் துவெனே. (௰௩)

வேறு.

என்று மாயனி யம்புமா
நன்று மாமது ராநகர்
துன்று கண்ணொளி துன்னிடா
தொன்றி னார்செய லோதுவாம் (௰௪)

சூர தாசரொ னச்சொலும்
பேர ராயரி பேணையே
தீர ராயுளா செய்துறுஞ்
சீர ராயினர் தேறியே. (௰௫)

பலந லப்பிர பந்தமுங்
குலவ ரிப்பெயர் கொண்டதாய்
இலகு றச்செய்தி லங்குவார்
திலகர் வைணவ சேகரர் (௰௬)

ஒருதி னம்புரு ஷோத்தமன்
திருவ டிப்பணி செய்கையில்
கருதி யிப்பவ காரணந்
தருதி ருக்கண வன்றனை. (௰௭)

எண்ணி யன்புட னேயெதிர்
நண்ண வேண்டினர் நாடியே
கண்ண னன்புக லந்தசீர்
அண்ணல் கோயில டைந்தனர். (௰௮)

சன்னி திக்கெதிர் நின்றுதாழ்ந்
துன்னி யுச்சியின் மேற்கரந்
துன்னி டத்தமி சொல்லினார்
மன்னி யிப்பவம் வாய்த்ததே. (௰௯)

ஊரிதி ருப்பெய ரன்புடன்
விரிக ருத்தினர் மேவுநாள்
வரிபுக ழ்ச்செய வந்திவாழ்
குரிசில் பேரவை கூடுவோர். (௯௰)

தேறு பாடகர் திரளைஞ்
ஞூறு பேரினு ணங்கியோர்
ஆறு தீபம விர்ந்திடக்
கூறு வாரொரு கோதிலார். (௯௧)

முகம்வி ரும்பினன் முன்னியே
சகமெ லாமகிழ் தானசேன்
நிகர்வர் யாருமை நேடுறின்
மிகவு மேன்மைவி ராவினீர். (௯௨)

என்று கூறிட வின்னவர்
ஒன்று சீரிலு யர்ந்துளோய்
நன்று மென்னின லங்கொடு
துன்று வோர்பலர் சொல்லிலே. (௯௩)

பெரிய தென்றுரை பேசிய
கரிய வேலைய கத்தியர்க்
குரிய வங்கையொ டுங்கிய
தரியெ னுந்திர லண்மிஞேய் (௯௪)

காசி னித்தரு கஞ்சனுங்
கோசி கற்கொளி குன்றினுன்
ஆசில் மாருதி யங்கையால்
மாசு ணுரிம முங்கினுன். (௯௫)

பல்ல மென்மகள் பண்புசால்
வல்ல மாயன்ம ணத்தினில்
நல்ல சாம்பன்மு னுரதன்
அல்லல் பாடவி லாயினுன். (௯௬)

இப்ப டிக்குல கெங்கணும்
ஒப்பி லீசனு ளுற்றினுன்
அப்ப டிக்குற லானபோ
தெப்ப டிக்கெனை யெண்ணுவேன். (௯௭)

எனலு மன்னவ னேசிலீர்
நனிசி றந்துமி னண்ணுவோர்
இனைய றொன்றுரை செய்கென
அனையர் கூறிட லாயினுர். (௯௮)

அரச னேமது ராபுரி
சுரந லந்தெரி சூரதா
சரொளின் மிக்கவர் தாமெனப்
புரவ லன்புகல் கின்றனன். (௯௯)

ஆகி லன்னவ ரொத்தனை
ராகம் வல்லவர் நன்றெனப்
பாகி னின்னிசை பற்பல
வாக வல்லவர் மன்னனே. (௪௰)

என்னு முன்னர சின்பமாய்
மின்னும் யானம் விடுத்தவர்
துன்னு முன்றுதி சொல்லிநேர்
மன்னு தாளில்வ ணங்கியே. (௪௧)

ஆச னத்துற வைத்தவர்க்
கேசில் பூசையி யற்றியே
நேச மோடுறு நீளவை
மாசில் பாடகர் மல்கினார். (௪௨)

தான சேனரி தாசனை
ஆன வன்புட னஞ்சலித்
தூன மின்றும துத்தம
ஞான கீர்த்தன நாமெலாம். (௪௩)

வினவ மிக்கவி ருப்புளேம்
அனக ரோயருள் செய்ம்மெனக்
கனமி றந்திகழ் கண்ணன்மேல்
மனமு ளோர்சொல்வ ழங்குவார். (௪௪)

நானி சைப்பது நாரணன்
கான நுஞ்செவி கட்குநேர்
ஆன தாயினி சைப்பெனென்
றேநல் வீணையெ டுத்தரோ. (௪௫)

எழுசு ரங்களு மேலவே
வழுவி லாதுவ குத்துமால்
பழுதி லின்னிசை பாடினார்
குழுமி னோர்மயல் கொள்ளவே. (௪௬)

கங்கை பெற்றரு ளுங்களிற்
றங்கை தாள மமைக்கவெண்
பங்கை யாசனி பஞ்சரம்
பொங்க நன்குபொ ருத்தவே. (௪௭)

கண்ண னுடல்க லந்துற
விண்ணு லாவிய மேனகைப்
பெண்ணொ டெண்ணிலர் பெட்புறத்
தண்ணெ னோசைத ழைக்கவே. (௪௮)

துன்பு றுரிசை சோர்விலா
தன்பர் பாடின ரங்குளோர்
இன்பின் மூழ்கிட வில்விதம்
மன்ப ராவவோர் மாதமே. (௪௯)

அரசன் மேவுமைஞ் ஞூறராந்
தெரிவை மாரிவர் செய்கையைப்
பெரித றிந்திசை பேணியே
குரிசில் பாலிது கூறினார். (௫ ௰)

நாங்க ளும்மவர் நல்லிசைப்
பாங்கு நேர்வினை வும்பழித்
தீங்கி லோயருள் செய்கென
ஓங்கு சீரின னுன்னினன். (௫க

கண்ணி லாரிவர் கண்முனே
நண்ண லாமென நாடகத்
தண்ண ரங்கிடை சார்வுறப்
பண்ணி யின்னிசை பாடவே. (௫உ)

செய்து தேவிய ரும்வரப்
பெய்த போதவர் பெட்புற
ஐது பாடிட லானபோ
தெய்தி னளிசை யின்பினால். (௫௩)

சாவ மானது தாங்கியக்
கோவி லேய்பணி கொண்டுறும்
பாவை யாகிய பாமையை
மேவு மன்பர்கண் மேவியே. (௫௪)

கண்டு பாடுறு கானமுட்
கொண்டுகூவல்கு றித்திடா
தண்டு கின்றனே யாலென
மண்டு தேவியர் மாழ்கினார் (௫௫)

விழியு ளாரொன வெள்கியே
முழுக நீடினை மூடினார்
வழுவ லிவ் விரு வரு முடன்
கழும லாகிய காலையே (௫௬)

கண்ண னங்குக லந்துமாப்
பெண்ண ணங்கொடு பேசுசீர்
அண்ண லன்பனை யுந்தன
தெண்ண ரும்வடி வெய்தவே (௫௭)

சேர்த்து நீளொளி சேர்ந்தனன்
சீர்த்த மன்னொடு சேர்ந்துளோர்
பார்த்து மற்றிவர் பண்பினைத்
தீர்த்த மொன்றிசை செப்பினார் (௫அ)

ஆகச்சரித்திரம் உ௪ க்கு செய்யுள் ௬௱௩௰அ

சூரதாசர் திருவடிகளே சரணம்

முற்றிற்று.

சேணுநாபிகர்சரித்திரம்

நாணு நன்மையு நல்க விந்தர்வாழ்
மாணு வூரில்வ திந்து ளோர்குலம்
எணு தியவொளி னும்வி ரக்தராய்ச்
சேணு நாபிக ரென்றோர் செவ்வியோர். (௧)

அன்னார் வாழும கத்தி லேவலை
மின்னா ராழிவி ளங்கு கையனும்
பொன்னார் மார்பனை வைத்துப் பூசனை
பன்னா ளும்புரி கின்ற பண்பினோர். (௨)

அரிநா மந்தனை யனுதி னஞ்சொல்வார்
புரியாள் மன்னவன் வேலை பூண்டுளார்
கரியா னைக்கரு தற்கு நந்தொழில்
பெரிதா குந்தடை யென்று பேணிடார். (௩)

கண்ணன் பூசனை யேக ளிந்துறப்
பண்ணுஞ் செய்கையி லேப யின்றுளார்
நண்ணும் போதொரு நாளின் மூள்கிநீர்
எண்ணங் கொண்டரி பூசை செய்தினார் (௪)

எய்தும் போதர சன்ற னேவலார்
வெய்தின் வந்துவி ரைந்த ழைத்திட
மெய்தங் கன்னவர் தேவி யார்வினாய்
நொய்தி னோகினர் கேட்டு நோன்மையோர். (௫)

நானிங் கில்லென நாட்டு கென்றிடத்
தேனின் மென்மொழி மாதர் சென்றழை
கோனி னேவலர் கட்குக் கூறிட
ஊனின் வேலர சன்க ணோகினார். (௬)

அப்போ தன்னவ ரிற்க டுத்துளோன்
வெப்போ டோடியவ் வேந்த னோர்ந்திட
இப்போ தில்லுழை யேயி ருந்துகொண்
டுய்ப்போர் பான்மனை யாளை யுய்த்தரோ. (௭)

இல்லென் றோதவி சைத்து ளானெனச்
சொல்லும் முன்னர சன்சு ளித்துமுன்
புல்லும் வீரனை நோக்கி நீர்புகா
இல்லி லெய்தும வன்க ணேகியே. (௮)

பாசத் தாற்பிணி செய்து பையுளின்
மூசக் கொண்டிவண் முந்து கென்றுமன்
பேசக் கண்ணபி ரான்பொ றுப்பனோ
மாசற் றோருரு வாகி வந்தனன் (௯

தோளி லோர்புடை தூங்க டப்பமோ
டாளு மன்னன்மு ளுகி யேசலாங்
கோளும் மாறினி தேகு றித்திட
மூளுங் கோபமெ லாமு ரிந்தவே. (௰)

சினமா றிம்முக வேலை செய்கையில்
நனிநன் காயது கணடு நாபிகர்
முனநீ செய்பணி தன்னில் மூந்திய
தினநாள் செய்பணி யென்று கோமகன் (௰க)

உன்கை யாலெணெ யென்ற னுச்சிமேல
நன்கு பூசுக வென்று நானநெய்
மின்கொண டாரமணி வேய்வ ளத்துறத
தன்கண ளுசன மீது தங்கினான். (௰உ)

சேளு நாபிக ளுய ஸ்ரீ ஹரி
தாளு ரெண்ணெய்த லேகக ணிநதிடக்
கோளுர் வள்ளம திற்கொள் குணடலம
மேளு ருண்முடி தோள்க ளுல்விராய (௰௩)

பொன்மா ளுடைபொ ருந்த நீனிற
மன்மா மேனிவ யங்கு றதெரிந்
தென்மா மாயமெ ணத்தி கைத்துமேல்
தன்மா நாபிகர் தம்மை நோக்கினான். (௰௪)

மயிர்கொய் நாவித ளுய்வ யங்குறச்
செயிரில் கிண்ணம தைததி ரும்பவும
பயில்பீ தாம்பர தாரி பணபினை
உயிர்தா னின்புற வுற்று நோக்கினான். (௰௫)

அவசங் கொண்டன ளுக வெணணெய்பூ
சுவரும் பூசுற வுள்ளு ளாலொலாம
இவர்தஞ் செய்கையெ னேயெ னததிகைத்
தவர்தங் கோனைய டைந்து கூறுவார். (௰௬)

அரசே யிங்கிரு ஜாம மாகியும்
விரசாய் நானம்வி ரும்பி யென்னுமவ்
உரையா லேயுணர் வுற்று மன்னவன்
புரைதிர் நாபிக ரைப்பு கழ்ந்தனன். (௰௭)

இங்கே நீயிரு வென்ரு ராதனம்
அங்கே யீதலு மவரி ராதுறத்
தங்கா யாகிலெ ளுவி தங்கிடா
தெங்கே னுஞ்செல லென்று கூறினான். (௰௮)

வேந்தே நானக மேவி மீளுவேன்
போந்தா டின்புன லென்ற போதவன்
ஏந்தே மங்கடி தேகி வாவென
ஏந்தா நாபிக ரிற்க ணேகியே. (௰௯)

அளையும் பொன்னடப் பத்து ளேயுற
முளையின் மாட்டிமு ராரி சென்றனன்
திளையு மெண்ணெயி னானந் தீர்ந்தபின்
வளையின் மன்னவன் வந்த வைக்கணே. (உ௰)

ஏவ லாளரை நோக்கி யேயிவண்
மேவ நாபிகன் வேண்டு நீர்செலீஇக்
கூவல் செய்துடன் கூட்டி வம்மெனக்
காவ லின்றன மீதி லென்றனன். (உ௧)

உடனே யேவல ரோடி நாபிகர்
இடனே கிவ்வரு கென்ன மற்றவர்
கடனே சென்றுநாங் காண லென்றுதோள்
வடனோ டாரடப் பத்தை மாட்டியே. (உ௨)

கோபங் கொண்டனன் கோனெனா மலர்
நாபன் றன்னடி யார்ந டுக்குடன்
பூபன் றன்னவை போத லும்பிர
தாபஞ் சேரர சன்னெ ழுந்தனன். (உ௩)

கண்டோர் யாவருங் கல்லெ னாநகை
கொண்டா ரன்னதெ லாங்கு றித்திடான்
வண்டார் மாலைய மன்ன னாபிகர்
ஒண்டா வும்முக நோக்கி யோதுவான். (உ௪)

உதயத் தும்முரு வதனை யன்னுமென்
இதயத் தின்புற வின்று காட்டினீர்
அதைமற் றின்னமும் யான றிங்கிடச்
சிதைவற் றீரருள் செய்க வென்னவே. (உ௫)

பாதங் கைக்கொடு பற்ற வற்றிவர்
ஏதம் வந்ததென் றேதி கைததும்
போதங் கன்னவர் நீழ லுட்புக
வேதங் கெணணெயி லெய்த நோக்கினான். (உ௬)

கானான் முன்னெனக் காவ லன்மல
ராறா தாவெளி யாக னாதரா
மாறா வென்னுமை வந்து கீழ்த்தொழில்
கோனா தேபுரி கோவ லாகனா. (உ௭)

என்றென் றுன்னியி ரங்கி நாபிகா
துன்றுஞ் சேவடி பற்றி யேதொழு
இன்றும் மாலினி தெய்தி னேன்மலர்ப்
பொன்றன் னாதனை யென்று போற்றியே. (உ௮)

ஹரிநா மந்தனை யன்பு மிக்குறப்
பெரிதோ தத்துதி பேசி நாபிகர்
பரிவாற் றம்மடப் பத்தி னுட்பொருள்
கரியான் வைத்தது கண்டு கைக்கொளா. (உ௯)

மறையோர் கொள்ளவ ழங்கி யேதரும்
இறையோன் முன்னுற வேத்த மன்னவன்
கறையார் மூக்குடைப் புட்க டாவுவோன்
நறைநே ருந்திரு நாமம் வாழ்த்தினன். (௯௰)

அந்நா டொட்டவ னுதி நாமமே
எந்நா ளுஞ்சொல லாக வின்னவர்
மன்னு வான்விடை கொண்டு வாழ்மனை
துன்னு வாழ்ந்தனர் சோர்வி லாதரோ (௯௧)

ஆகச்சரித்திரம் உ௰ க்கு செய்யுள் ௬௱௯௰௧

சேனாநாபிகர் திருவடிகளே சரணம்.

முற்றிற்று.



சாத்வீகராஜன்சரித்திரம்

வேறு.

ஜகநா தப்பொன் னகாதனை யாண்டு தனிவாழ்கோ
மகன்மால் பத்தி தனின்மிகு நேயம் வளர்கின்றோன்
புகழா நின்ற சாத்துவி கப்பேர் புனைவானான்.
முகனார் தாதை பூசனை நாளு முயல்கிற்பான். (க)

திரிகா லத்துஞ் செய்துது ழாய்நீர் செங்கைக்கொள்
பரிவா னேரு மதிதிக ளுக்கும் பயில் பூசை
பெரிதே செய்து பின்புண லான பிரியத்தான்
விரிவா யன்ன சத்திர மாதி மிகவைத்தான். (உ)

சகலபி ராணி களினுமி குந்த தயையுள்ளான்
இகலினர் சீய மெனமிகு சீரி னியல்வானோர்·
பகல்பொழு தேகக் கவறுரு ளாடல் பயில்போதிற்
புகழரி கோயிற் றிகழபிர சாதங் கொடுபோந்தார்· (ங)

அர்ச்சக ரானோர் கவறுருள் செய்கை யதின்மூழ்கி
நச்சுறு மன்னற் கப்பிர சாதந் தனைநல்கப்
பச்சையு கக்கப் பட்டதி தென்னும் பரிவின்றிப்
பிச்சரின் வாமக் கைதனை நீட்டப் பிசகென்றே· (ச)

அன்னவ ரீயா தேகினர் பின்பவ் வரசன்றான்
முன்னரி னாடன் முற்றிட நின்றார் முகநோக்கி
என்னிடை மேவு மின்பிர சாத மெங்கென்றான்
மன்னினர் வாமக் கைதனி லீயா மற்போனார்· (ரு)

என்றுமு னின்றார் கூறிட மன்ன னிதுவென்னே
அன்றுசெய் பாவ மின்றொரு சூதா யபசாரந்
துன்றிட வேசெய் ததுநனி நன்றே தொலைவுண்டோ
இன்றியல் கின்ற தென்றனன் மாளா விடருற்றான். (சா)

கள்ளைவி ரும்பிப் பாலைய கற்றுங் கலர்செய்கைக்
குள்ளுற லானே னென்றரி கோயிற் குளுமேகான்
கொள்ள கிலாவிக் கைபிர சாதங் கொளலாமோ
எள்ளல்செ யாதென் றெண்ணிய றுத்தற் கிசைவுற்றான். (எ)

மந்திரி தன்னை வருகென வந்தான் வதனம்பார்த்
திந்தவென் மாடச் சாளர வாய்வந் திரவோர்பேய்
முந்தொரு கைநீட் டுகிறதி னாலே முதிரச்சந்
தந்துறு கின்ற தக்கர மதைநீ தடியென்றான். (அ)

அன்னது செய்வே னென்றிர வூடவ் வகன்மாடந்
தன்னிடை வந்து சாளர வாயிற் சார்ந்துற்றான்
மன்னவ னங்ஙன் பின்புற முருமா றாய்வந்து
துன்னுறு கையை நீட்டினன் வாளிற் றுணிசெய்தான். (கூ)

துணிசெய மன்னன் வீழ்ந்துது டித்துச் சோர்கிற்கப்
பணிபுரி கின்ற மந்திரி வெளியிற் பதறுற்றே
அணுகினன் வந்து நோக்கலு மன்ன னவனுகத்
தணிவறு துன்பங் கொண்டெதிர் நின்றே தளா வுற்ருன். (ய)

சோர்வுறு மன்னன் றுயர்கொள மைச்சன் முகநோக்கி
நேர்வுறு மிக்கை சார்பிழை போக நீசெய்தாய்
ஆர்வுறு மென்று லேயல வோநன் ருயிற்றுச்
சார்வுறு துன்ப நீயொழி கென்ருன் றளாவின்றே. (யக)

விடியள வேகை சிவிகையின் மேவ மிசையேற்றி
நெடியவ னேசெய் பிழையது தீர நிறைதண்டம்
தடிவதை யன்றிப் புரிவது முண்டேற் றடையின்றிக்
கடிகென மால்வாழ் சினகர மேவக் கடிதுய்த்தான். (யஉ)

சொல்லிய வண்ணந் தூதர்கள் சொல்லத் தொழுகோயிற்
புல்லின ரங்கே பொலியடி யாகட் பொருவேந்தன்
மெல்லிய கையைக் காட்டினா சொன்ன விதமெல்லாஞ்
செல்வகை சொல்லத் தேறின ரீதோ செயலென்றே. (யந)

தழைவிப வத்தா னுடனசை விட்டுச் சகநாதன்
உழைமனம் வைததான் மிகவும்வி ரக்தியுளனென்று
குழையும னத்தார் ஜயஜய வென்று கொணர்கைமேல்
விழைவுறு கந்த பொடிகளி றைத்தார் விரைநாற (யச)

பொடிபட லுங்கை தவனம தாகிப் பொலிவெய்த
அடியவர் கண்டு மிகவும்வி யந்தங் கதுதன்னை
நெடியவ னடியிற் படிவது செய்து நிகழ்நாண்முன்
படிபிர சாத முடனர சன்றன் பாலுய்த்தார் (யரு)

வருபிர சாத மொடுதவ னத்தை மகிழ்விற்கண்
டரசனி ரண்டு கரமுமி ணங்க வவையேற்ருன்
கரமும்வ ளர்ந்து குறைவற லாகக் கண்டோர்கள்
பரவினர் நாமம் ஜயஜய வென்று பணிவோடே (யசு)

ஆகச்சரித்திரம் உசு க்கு செய்யுள் சூருஅரு

சாத்வீகராஜன் திருவடிகளே சரணம்

முற்றிற்று.



கருமாபாயி சரித்திரம்

வேறு.

நாடுஜக நாதமென நண்ணுநக ரத்தின்
ஊடுகரு மாபாயி யென்றொருவ ருள்ளார்
நீடுதரு மம்பலவு நீதியொடு செய்யக்
கூடுமென முள்ளவர்கு ணந்திரிபி லாதார் (க)

கருவயினு றீஇமருவு காலமவர் கண்டன்
ஒருவியுயிர் போனபினு யிர்த்தனரொர் சேயை
அருமையின்வ ளர்த்துவளர் வானமக னுக்குத்
திருமணமி யற்றினர்தி கழ்ந்தணிசி றகக (உ)

அந்தமக னுயிழையை யன்பொடும ணந்து
தந்தனனொர் சேயதுத வழ்ந்துவளா நாளில
மைந்தனு மிறக்கமிக மாழ்கினா தளர்ந்து
நொந்தனர்க வன்றரித னுமநாவெல் கிற்பார். (ங)

நாரணத யாநிதியெ னந்தன்மக னெனுஞ்
சீருறிலெ னக்குதவு மென்றனர்சி றககப்
பேரன்மக னுகநினை பெற்றியின்வ ளாத்தார்
ஆரமகன் மைந்தனும ணங்குறவி றந்தான். (ச)

அம்மகவி றக்கவவ லக்கடலின் மூழ்கித்
தம்மனநி லைப்பதில ராய்த்தளர்த லானார்
மைம்மலிநி றத்தமல ராள்கணவ நீயென்
இம்மலின வெந்துயரி லென்னைவிழ விட்டாய். (ரு)

என்றுமிக நொந்தனரி ரங்கியுறு நாளில்
துன்றுஜக நாதவிறை தன்னடிதொ ழற்கு
நன்றரிந லோர்களவ ணண்ணியவர் நல்வீ
டொன்றினரு ணர்ந்தனரி டர்க்குளுறு வாளை (சு)

என்னையிவ ளீர்துயரி லெய்துகிற தென்ன
மன்னுதுயர் மூழ்குமவர் மற்றவளை நோக்கி
முன்னைநிகழ் வுற்றசெயல் யாவையுமொ ழிந்தார்
அன்னவர்தெ ரிந்துதுய ராறும்வகை சொல்வார். (எ)

அணுவளவு நன்மையிலை யானசமு சாரப்
புணர்வுநிலை யற்றதத னுட்புகுத லாகிப்
பிணியுறுவ தென்னமது கண்ணனடி பேணுந்
துணிவினிடர் தீர்திரென வேயவர்து ணிந்தார். (அ)

ஸ்ரீதரன ருட்குரிய சீரினவ ரோநீர்
பேதையடி யேனொருநி லைக்கணுறு பெற்றி.
யாதனையு ரைத்தருள்க வென்றனரி ரந்தார்
மாதரவ ருக்கவரு மன்னுநிலை செய்வார். (கூ)

நாதனரி நாமமதை நன்கினுப தேசித்
தேதமகல் கண்ணனது விக்கிரக மீந்து
மாதகவ தாகமக வன்பிதனில் வைத்து
நீதமொடு பூசனைநி ரப்பநிய மிசதா. (௰)

நன்றெனவு கந்துகொடு நல்குமவா தமமை
மன்றவுப சாரமொடு வந்தனைபு ரிந்து
ஒன்றுமவர் போனபின ரோவுதலி லாமல்
அன்றுமுத லந்நியதி செய்கையில மாநதா. (௰௧)

பெற்றவொரு கண்ணனொடு பேசிவிளை யாடி
முற்றுதயி லந்தடவி மூழகுதல்செய் வித்துச்
சுற்றுடையி னீரமற வேநனிது வட்டி
நற்றுடைகி டத்தியுணா யௌடதமு நல்கி. (௰௨)

பாலமுத ருத்திவளர் தொட்டி லுறல் பண்ணி
மாலரிகு ணங்களைவ குத்தினிதி ருட்டிக
கோலவிழி மூடுதுயில் கொணடபினெ டுத்துப
பாலரின்வ ளாததனர்செய் பாவனைத வாதே. (௰௩)

ஆடையணி சோக்கவளா வாகிவரு கணணன்
ஈடனமு ணற்கிசைவ தெய்துபரு வந்தார்
கூடினதெ ஞவயிறு கொள்குழைவு கணடு
நாடியுறு கண்ணனையு ணற்குநவில கி[illegible]. (௰௪)

உண்கவினி துணகவென யாவுமினி துணட
பண்பினனை நன்குபச ரிககுமது பாரததுக
கண்கள்களி கூரவுள மானதுக னிந்து
நண்பினமு துண்டுமகிழ் செய்தனன யநதே. (௰௫)

அன்னையனை யாருபச ரிக்குமத னாலே
இன்னவித நாடொறுமி யைந்தமுது செய்தான்
மன்னுகரு ணாநிதிவ ளர்ந்துவரு நாளில்
துன்னினன வில்லிலொரு சுத்தமறை யோனே. (௰௬)

முந்துபெறு தேவகிவ ளர்க்கமுய லாமல்
நந்தன்மனை விட்டகுறை நன்குநிறை வேற
இந்தவகை யெய்தியதி யின்பினமர் வாரை
வந்தமறை யோனறிக லானவண்வ திந்தான். (௰௭)

அத்தினம்வி டிந்தவுட னன்னையென லானோர்
நித்தனையெ ழச்செய்துநெ டும்பசித ணிப்பான்
உய்த்தவமு தைக்கடிதி னுண்கவினி துண்க
முத்தமனை யாயெனமொ ழிந்துறுதல் கேட்டான். (௰௮)

யானையவ னுண்கெனவ றைந்துறுதி ரொன்னக்
காணைநிகர் கண்ணனையெ னக்கழறல் கேட்டு
நீரயிலு விப்பதுந னீர்முழுக லாதோ
சீனையிலி ராயஃது செய்வதுத காதே. (௰௯)

என்றவனு ரைத்தபடி யேபுரிவ னென்று
துன்றுமறு நாள்விடியு முன்றுயிலு ணர்ந்து
நன்றுபுன லேய்ந்துபுது நன்புனல்கொ ணர்ந்தே
அன்றகமெ லாமெழுகி னரடுத லானார். (உய)

தினமுநுகர் காலமது சேர்ந்துணுத லாக
மனதுசகி யாதுஜக நாதமழை வண்ணன்
சினகரமி ருந்துபணி செய்துறும வன்றன்
கனவினிலி ராவிடைக லந்துரைசெய் கின்றான் (உக)

நானமுது செய்துவரு காலமினி நண்ணத்
தானடுதல் செய்வகைச மைத்தனமெ னுருத்தன்
ஆனதனை முன்படிய மைத்திடுமொ டாபாய்
பான்முடுகி நீயினிதி னென்றுரைபு கன்றான். (உஉ)

அன்னதனை யர்ச்சகனு ணர்ந்துவிடி யாமுன்
மன்னினன சோலையின்வ ளாத்துவரு வார்பால்
பன்னுருக மாகிதனி றைந்தபர மான்மாத்
துன்னுகரு ணாநிதிய ருத்தும்வகை சொல்வான் (உங)

சீலநனி கொண்டடிசில் செய்திரது முறையே
காலமிக நீடியது கண்ணனமு துண்ணச்
சாலமிகு கின்றபசி கொண்டுதளர் கின்றான்
ஞாலமுத னாதனதை யென்வயின வின்றான். (உச)

வெளியின்மிகு சீலமுற வேண்டல்பய னின்றாற்
களிகொடுள மானதுக னிந்துபரி சுத்தம்
கொளினதுமி கப்பெரிது கொண்டனிகர் வண்ணன்
அளிமிகமு னீர்செய்வத வாவியுள னென்றான். (உரு)

என்பதைவி னவினரி சைத்தபடி செய்ய
அன்பினமொ லாமறிய வையனினி துண்டான்
நன்புதுமை யென்றுதுதி நன்குசெய லானார்
இன்பினது கண்டவரொ லோர்களும்வி யந்தே. (உசா)

தூயமக மோமமொடு சோர்வருநல் யோகம்
ஆயபல செய்துமடை யாதபர னுக்குத்
தாயெனவ ளர்த்துமகிழ் தங்கியவொர் கர்மா
பாயிதவ மேபெரிய தென்றிசைப கர்ந்தார். (உஎ)

கண்ணனைவ ளர்த்தவவர் காண்மிசைவி ழுந்தார்
எண்ணரிய தோத்திரமி யம்பினர வாறே
பண்ணியமை கிச்சடிப ரற்கினிய தாகி
நண்ணியது நாளுநலம் விஞ்சுஜக நாதம். (உஅ)

ஆக சரித்திரம் உயளக்கு செய்யுள் சூகூாயகூ

கருமாபாயி திருவடிகளே சரணம்.

முற்றிற்று.

ஜயவந்தபக்தர் சரித்திரம்

ராமவுபா சகராகிச் சயவந்த ரெனுநாம நண்ணி நாளும்
காமனையீன் றவனடியார் களைபபூசை புரிவாராய்க் கருதுதாரி
யாம்வணிகர் புத்திரரோ ரைவருள ராகலக்ஷா திபதி யானோர்
சோமறுசம் பத்துடனே ஹரிபஜனை செய்துகொண்டு துலங்க வாழ்வார் (௧)

ஒருசாது ஜனங்களுக்கு மதிதிகட்குஞ் சுயம்பாகம் வழாம னல்கிப
பெருகாத ரத்தினைப் புத்திரர்கள் பக்குவராய்ப் பேணாராகி
மருவாத துஷ்டதுரா சாரதுன்மார்க் கத்தின்மிக மலிவா ரோதும்
கருதா துபிரமகுலத் துற்பவித்த ராவணனைக் கடுப்ப தானார். (௨)

தந்தைதரு மச்செயலுக் கொவ்வாராய் விருத்தனுக்குத் தகாத பித்தம்
முங்கியதால் வாணிபத்துக் குளபொருள்க ளெலாஞ்செலவின் முற்று விக்கச்
சிந்தைகொண்டா னிதற்கென்ன செய்துமென வுளபொருளிற சிலம றைத்து
மைந்தரொன்போ ரோதந்தை தனைவருத்த வேந்தனிடம் வந்து சொல்வார். (௩)

எங்கள்பிதா வெமக்குள்ள பொருள்களெல்லாம் வீண்செலவே யியற்று கின்றான்
அங்கனுல கத்தரசே பொருள்செலவுண் டே லுமக்கு மமையத் துக்காம்
தங்கும்வகை விருத்தனைக்கூய்த் தண்டிக்கத் தக்கதெனச் சாற்றக் கேட்டுப்
பொங்குபுகழ்ச் சயவந்தர் தமைக்கூவி விசாரிக்கப் புகல்வ தானார். (௪)

புத்திரர்க்கு வைக்காமல் வீண்செலவேன் புரிகின்றா யெனபபு கன்றீர்
அத்திரமே பொருள்புதல்வ ரனைத்துநிலை யாவதுதா னறமே யன்றோ [ன்று
முத்தணிவெண் குடைவேந்தே யெனலுமிவன் பயித்தியத்தின் முதிர்ந்தா னெ
மெத்தவருத்து கிறதிலுங் கொலைசெய்த னலமெனன்று வெகுண்டு வேந்தன். (௫)

உங்கள்பிதாத் தனைக்கொல்வ துங்களுக்குச் சம்மதமோ வுரைத்தி ரென்ன
எங்களுக்குப் பிதாவல்ல னிவன்பகைஞ் ஞனதனாற் பொதியி லுள்ளே
தங்கவமைத் துக்கட்டி யாழியநீர் தனிவிடல்வேண் டியதே யென்ன
வெங்கடுங்கோ லுடைவேந்தன் ஜயவந்தர் தமைக்கட்டி வீழ்த்தற் கெண்ணி. (௬)

கற்களொடு கனமாகப் பொதிந்தாழ நீரினிடைக் கவிழ்க்கச் செய்தான்
தற்சமமை யானவர்நீ ரிடைமூழ்கு முன்வந்து சௌரி தானோர்
வற்கடின முதுகாமை வடிவாகித் தம்முதுகின் மலையிற் றாங்கி
நிற்கவய மேன்மிதக்கும் ஜயவந்த ரியல்கண்டா னிருபன் மன்னோ. (௭)

அகிலவியாபகனான வநாதரக்ஷ கன்கருணை யமைந்தி ருக்க
இகலியிவர் தமைக்கொல்ல வெண்ணியது தகாதசெய்கை யெனப்பயந்து
மிகவிரைந்தங் கவர்தம்மைக் கரையேற்றிக் கட்டவிழ்த்து விடுத்தன் னார்கருத்
தகவுமிகவுபசரித்துத் தாள்பணியத் தனையர்களுஞ் சரணந் தாழ்ந்தார். (௮)

அரசனொடு மைந்தர்களும் யாஞ்செய்பிழை பொறுத்தருள்க வடிக ளென்று
பரசுதலும் ஜயவந்தர் மைந்தருக்கு மரசனுக்கும் பரிந்து வாழ்த்த
விரசரசன் ஜயவந்தர்க் கடியவனா யன்றுமுதல் வேண்டி வாழ்ந்தான்
சரசமுடன் றனையர்களும் பிதாச்சேவை செய்துமுறை தவாது வாழ்ந்தார். (௯)

ஆகச்சரித்திரம் ௨௮க்கு செய்யுள் ௲௯௨௨

ஜயவந்தர் திருவடிகளே சரணம்.

முற்றிற்று.

சூரதாசர் சரித்திரம்

அத்தின புரியை யாளு மகபர வரசன் றன்னை
எத்தினங் களும்வி டாம லியன்றவன் றயையி னாலே
மைத்தபூம் பொழில்கள் சூழ்ந்த மதுரைமா நகரத்திற்கு
மெய்த்தவோர் தலைவ ராக விளங்கினர் சூரதா சென்போர். (க)

மதுரைகோ குலம்பி ருந்தா வனமெலாம் புனித மான
புதுமைசேர் தலங்க ளாகப பொருந்தலா லவண்வந் துற்ற
சதுரசச் சனங்க ளுக்குத் தகவுப சரித்து நாளும்
முதுரச போஜ னங்கண் முதலிய வழங்கி வந்தார். (உ)

நலமிகு வழியி லுள்ள பொருளெலா நல்கி நல்கிச்
செலவுமிக் காக மற்றுஞ் செலவுசெய் வதற்குத் தம்பாற்
பொலனிலை யாக நல்லோர் பொருந்திடிற் றருவ தற்கு
வலமிலை யேயென் றுன்னி மனத்திடை யழுங்கி நைந்தார். (௩)

நம்மையே நாடிச் சாரு நல்லவர் தமக்கீ யாமல்
இம்மையில் வாழ்க்கை யுற்று லென்பய னினியெங் கோவின்
செம்மைசேர் பொருள்க ளீவோஞ் செலவுகண் டரசன் சீறி
வெம்மைசெய் திடினு நல்லோர் விஷயத்தின் மேவ னன்றே. (௪)

என்றுதம் வசத்தி லுற்ற விறைபொரு ளெல்லாம் தம்பாற்
றுன்றுசா துக்க ளுக்குத் துயரற வுபச ரித்தும்
நன்றறச் சாலை கட்கு நல்கியுங் கட்டு வித்தும்
மன்றல்செய் துளவி னானை மதனமோ கனனென் றாக (௫)

தாமுறு மதுரை தன்னிற் றயங்குறப் பிரதிட் டித்தா
ஆமத னாலே யெண்ப திலக்கமு மயுத முஞ்சேர்
ஏமநல் விராக னான செலவினை யெதிர்ந்தோர் தேர்ந்து
தோமிலத் தினபு ரிக்குத் தோன்றல்பால் வந்து சொல்வார் (௬)

வேந்தநின் பொருள்க ளெல்லாம் வீண்செல வாகச் செய்தான்
போந்துள சூரதா சென்போ னென்றவர் புகலக் கேட்டுச்
சாந்தனு மரசன் கோபந் தான்மிக லாகித் தன்பால்
வாய்ந்தசே வகரை நோக்கி மதுரைநீர் விரைந்து சென்று (௭)

அங்குள பொக்கி ஷத்தி லமைந்துள பொருள்க ளோடு
தங்குறு சூரதா சென்போன் றன்னையுங் கொணர்க வென்று
பொங்குகைத் தீட்டு நல்கப் போந்தவர் மதுரை சென்று
சங்குசக் கரத்தா னன்பர் தம்மவை வந்து சார்ந்தார் (௮)

நிருபன்கைத் தீட்டு நல்கி நிகழ்ந்தவை யாவுஞ்சொல்ல
மருவிய சூரதா சென்போர் வாசித்துத் தெரிந்து கொண்டு
வெருவுறு தரச னென்மேல் வீண்சினங் கொண்டான் யானே
தருபொருட் கமைய மாணிக் கங்களாய்ச் சமைவு செய்தேன். (௯)

அம்மணி கலைக்கோன் கண்டா லன்பென்மேன் மிகவுஞ் செய்வான்
இம்மணி மண்டபத்தி லிருத்திரொன் றுரைத்தல் செய்து
தம்மணி மனைக்குட் சென்று தக்கபே ழையினி ரம்பச
செம்மணி யெனநி னைக்கப் பரற்களைச் செறிவு செய்து. (௰)

மன்னநின் பொருள்க ளெல்லா மருவுநல் லோாக ளுககும்
துன்னறச் சாலைகட்குந் தொகுத்தொரு கோயி லுககும
நின்னது புகழ்வி ளங்க நிரப்பிநின் றேனே யன்றி
மின்னனு வேறு மிங்ஙன் வீண்செல வியற்று கில்லேன். (௰௧)

எனவரைந் துன்பா லேம மெய்தில வெனவென் மேனி
சினமிகு வாயென் றியானித் தினத்திரா விடையெங் கேனும்.
வனமதின் மறைவே னென்றும் வரைந்துபே ழைக்குள் வைத்துக்
கனமிகு பேழை தன்னைக் கடுகிவந் தவர்பா லீந்தார. (௰௨)

இன்னதை யானே கொண்டங் கெய்துற விருகரும் போதில்
நன்னர்நீ ரடைந்த தேநன் றாகிய தெனாநவி னறே
அன்னவர் தமக்குப் பொன்பூ ணுடைகள் சிறப்ப நல்கித்
துன்னவ ருடன்று யின்று நடுநிசி வனந்தொ டர்ந்தார. (௰௩)

வனம்புகுந் தரித ருமம் வழுத்தின ரிருக்க விங்கே
தினஞ்செயும் பரிதி தோன்றச் சேவக ரொழுந்து பார்த்து
மனந்தெளி சுரதா சென்போர் மனையிலு மிருக்கக் காணார்
சினந்ததம் மரசற் கேது செப்புது மெனபப யந்தார். (௰௪)

அந்நகரு ரடுத்த வூர்மற் றுறிய விடங்க ளெல்லாம்
முந்தினர் தேடிக் காணார் முனிவனென் றரசற் கஞ்சி
எந்தவூ ருற்றா னோவென் றெண்ணியப் பேழை தன்னைத்
தந்தலை சுமந்து வந்து சார்நதன ரரசன் றன்பால். (௰௫)

உற்றதை யுரைத்துப்பெட்டி தனையொரு வேந்தன் காண
மற்றவ னிடத்து வைத்தார் மன்னவன் பீர்ப லென்று
சொற்றரு மமைச்சற் கோதிச் சுரதாசர் பெட்டி தன்னை
நற்றியே திறந்து கற்க ணனிநிரம் புறுதல் கண்டான். (௰௬)

பின்னரோர் கடித மந்தப் பேழையி லிருக்கக் கண்டு
மன்னிய வொருவ னாலே வாசிக்கத் தெரிந்து மன்னன்
முன்னர்கோ ளுரைத்தோன் றன்னை முனிவுட னோக்கி நீமுன்
சொன்னதோர் சுரதா சென்போன் வீண்செல வேது சூழ்ந்தான் (௰௭)

நல்வழி களிலென் னேம நனிசெல வழித்த தன்றி
அல்வழி செய்தா னென்றிங் கறைந்தனை பிழைய தாக
ஒல்வகை யெழுதி வைத்துப் பயந்தன னொளித்து றாமல்
செல்வகை செய்தா யன்றோ நீயென மிகச் சினந்து' (௰௮)

வயிணவ துரோகி யென்று மற்றவன் றனைக்கண் டித்து
வியனுறுங் கடிதந் தன்னை வாங்கியே விரைந்து பார்த்துச்
செயிரறு சுரதா சென்போன் றீட்டின தேயென் றோர்ந்து
கயனீர் பெருக லாகி நல்லமந் திரியைநோக்கி, (௰௯)

திரிபுவ னங்க ளெல்லாந் தேடினுஞ் சுரதா னைப்போல்
ஒருவனைக் காண லாமோ வுயர்ந்த வென் மதத்தி னாலே
வெருவுறக் கோபித் தேனே யெனமிக வருந்தி வேந்தன்
இருவிழி குளிரப் பார்க்க வெங்கிருந் தாலுந் தேடி. (உ௰)

சொணர்கென வுரைக்கக் கேட்டுக் குறைவில்சீ ரமைச்ச ரானோன்
புணரிசூ ழுலக மெங்கும் போய்விராய்த் தேடிக் காணும்
வணமிகு தூதர் தம்மை வல்விரைந் தனுப்ப மற்றோர்
துணர்விரி நிழற்பைங் கானிற் றுருவினர் வந்து கண்டார். (உக)

ஹரிபஜ னத்தோ டுற்ற வவர்தமைக் கண்டு நீர்முன்
புரிவுறுஞ் செயலுக் கன்பு புரிந்துமைக் காண வேண்டிப
பரிவுட னெமைவி டுத்தான் பார்த்திப னென்று கூறத்
தெரிதரு சுரதா சென்போர் தேறினர் நினைய லுற்றார். (உஉ)

எங்கணு நிறைவா யுற்ற வெம்பிரான் செயலி தென்று
சங்கையின் மனத்த ராகிச் சார்ந்தனர் தூதரோடு
துங்கவத் தினபு ரிக்குத் தோன்றலை வந்து கண்டு
செங்கையிற் சலாஞ்செய் வாரைத் தேடிய வேந்தன் கண்டான். (உ௩)

ஆசனத் திழிந்து முன்வந் தவர்தமை யழுந்தப் புல்லி
நேசமிக் குவகை தாங்க நுமக்குநே ரொருவ ருண்டோ
மாசறு வழியிற் பொன்னை வழங்கிமற் றெனக்கு நல்ல
தேசுறப் புரிந்தீ ரிந்தச் செய்கைக்கோர் செய்கை காணேன் (உ௪)

உமதுசீ ரறிகி லாவோ ருன்மத்தன் சொல்லைக் கேட்டு
நுமதகம் வருநதச் செய்தே னேக்கியென் பிழையைப் போக்கித்
தமதுளப் படியே செய்க மதுரையிற் சார்ந்து செம்பொன்
நமதெனத் தகுமோ பூமின் னுதனுக் கினிய தென்றான். (உ௫)

என்பது சுரதா சென்போர் கேட்டுளத் திசைவி லாராய்
மன்பிர தாபங்கொண்ட மன்னனே யுலக வாழ்க்கை
துன்பென விடுத்த வென்னை யின்னமுந் துயரத் தாழ
வன்பர சியலுக் கேற்க நடக்கவும் வருக்க லாமோ (உ௬)

எனுஞ்சுர தாசர் தம்மை யரசனு மினிதி னேக்கி
மனஞ்சலித் துலக வாழ்க்கை விடுத்துளீ ரெனுநும் மாண்பின்
கனந்தனை யறிந்தே னேலு நுமைவிடக் கருத கில்லேன்
முனஞ்செயும் படிநீர் செய்ய முயன்றுளேன் மொழியக் கேண்மின் (உ௭)

நீதியி னீரங் கீட்டு நிதியும துளத்துக் கேற்ற
சாதுசச் சனங்க ளுக்குந் தருமங்க டமக்கு மீயப்
போதுறு தாயி லென்பா லுள்ளன பொருளுங் கொண்டு
ஸ்ரீதரற் கடிமை யாக வென்னையுஞ் செய்தி ரொன்றான் (உ௮)

ஆயது கேட்ட தாச ரரசன துளமுந் தம்பால்
நேயமு மினிய சொல்லு நிரப்பலாற் றமதுள் ளத்தை
ஏயது செய்தாற் சாது சேவையு மீனையி லாத
தாயதும் வருதற் கில்லை தடையெனத் துணிந்து சொல்வார். (உ௯)

ஹரிதன தடியர் சேவை யனுதினந் தடையி லாது
புரிவதற் கான செய்கை பொருந்தவெற் கருளு கென்று
பரிவுகொண் டுரைப்ப வேந்த னவிந்தனு மிருந்தும் பணபாற்
றிரிகர ணமுநன் ருகி யங்ஙனஞ் செய்க வென்ருன். (௬0)

கண்ணனுக் கன்ப ளுகி யுளமிகக் களித்து வேந்தன்
பண்ணுசன் மானம் பெற்றுப் பரமனுக் கன்ப ராகி
நண்ணிய சுரதா சென்போர் மதுரைமா நகரஞ் சென்று
தண்ணளி மதன மோக னன்றனைத் தரிசித் துற்ருா. (௬க)

அன்றுதொட் டரிதா சர்க்கு மடுத்தவர் தமக்கு மற்றும்
துன்றுனர் தமக்கு நல்ல போஜனந் துகில்பூண யாவும்
ஒன்றநிர்ப் பயராய் நல்கி யுத்தமன் குணங்கள் பாடி
என்றுமா லுருவுட் கொண்டா ரிடைவிடா திருக்கு நாளில் (௬உ)

மாலடி யார்க்குத் தொண்டு வகுப்பதி லிவர்போ லிலலை
ஞாலமீ தென்றெங் கெங்கு நவில்வது தெரிய வோர்நாள்
நீலமா முகில்கோ யிற்குச சிவிகைமே னேரும் போது
சீலமா ரொருவர் வந்தார் செருபபுக்கா லோடு மாதோ. (௬௩)

வந்தவர் சுரதா சென்போர் மதிமுக நோக்கி யைய
இந்தவென் செருப்பைக் காத்திங் கிருக்கயான் கண்ணன் சேவை
முந்தவே பெற்று மீளு மளவுமென் றுதவ முந்தித்
தந்தருள் கென்று கொண்டார் சிவிகைவிட் டிறங்கித் தாழ்ந்தே. (௬௪)

கொண்டதோர் செருப்பை யாடை கொண்டுமூ டித்தம் மார்பில்
அண்டுற வணைத்துக் கொண்டங் கிருந்தன ரதனைத் தந்தோர்
தண்டுழாய் மார்பன் கோயிற் சார்ந்தனர் வாரார் பானு
மண்டல மறையுங் காறு மற்றிவர் தமைச்சோ திக்க. (௬௫)

வருமள விவருந் தந்த வயினுறத் தந்தோர் மீண்டு
தருமிடம் வந்து சார்ந்து கணடன ரன்பர் தம்மைத்
திருமகள் கொழுந னன்பர் செருப்பினை யவர்முன் வைக்க
ஒருவரு நும்மைச் சாது சேவையி லொவ்வா ரென்ருர் (௬௬)

சோதனை செய்தோ ரந்தச் சுரதாசர் தமைம தித்து
மேதகு புகழ்கொண் டாட விண்டுவி னடியா ரெல்லாம்
காதலி னேதக் கண்ணன் கனிந்தங்குக் காட்சி காட்டக்
கோதறப் பெற்று வாழ்ந்தார் குவலயம் விளங்க மாதோ (௬எ)

ஆகச்சரித்திரம் உ௬க்கு செய்யுள் ௲௬௫௬௬

சுரதாசர் திருவடிகளே சரணம.

முற்றிற்று.

ரசிகமுராரிபக்தர்சரித்திரம்

மெய்த்த மாமது ராபுரிக் கருகதாய் விளங்கும்
சுத்த மாநகா சாயமென் பதிலொரு தூயா
நித்த மாலரி பத்தியி னிரம்பிய முராரி
பத்த ரானவர் பரமவை ராக்கியப் பண்பர் (௧)

நாளுங் காளிந்தி நதியிடை நானஞ்செய் தரியை
நீளுஞ் சோடசோ பசாரங்க ணிறைவுறப் பூசை
மூளு மன்பொடு முடித்தபின் வைணவ முதலோர்
தாளுந் தீர்த்தங்கொண் டாட்டியந் நீர்கொளுந் தக்கோர் (௨)

பின்ன ரின்னமு தட்டரி தாசரைப் பேணி
நன்ன ருண்பித்த சாதுசஜ் ஜனங்களை நாளும்
பன்னு மால்வடி வாகவே பாவனை பண்ணி
முன்னு மெய்யன்பு குறைவில ராகவே முயல்வார். (௩)

அன்ன வர்க்கு நல் லன்பினர் பற்பல ரடியார்
துன்னி யன்னவர் சம்பிரதாயமே தொடங்கி
மன்னி மாலரி பஜனையி னொடுறும வதிவார்
இன்ன நாளிலங் கெய்தினார் பலரசிக ரென்பர். (௪)

வந்த மாலடி யார்களுக் காசனம் வழங்கி
அந்த வாசனத் திருந்திடச் செய்துபின் படைவே
முந்தோர் சீடனை விடுத்துநம் முகுந்தனுக் கடியார்
விந்தை சேரடி விளக்கிநீர் தருகென விதித்தார். (௫)

தேசி கோத்தமர் செப்பிய படியந்தச் சீடன்
ஆசி லாதவ ரடிகளைப் புதியநீ ரதனால்
மாசி லாதுற விளக்கினன் வரவொரு மறையோன்
பேசி டாவரு வருப்புமிக் கான்மிகு பிணியால். (௬)

சீல மேதுமில் லாதவன் றனைக்கண்டு சீடன்
சால வேயரு வருத்தவன் றொடொடான் விடுத்து
மேல வாவிலா பாதங்கண் முறைப்படி விளக்கிக்
கோல நீர்தன துத்தமக் குருவின்பாற் கொணர்ந்தான். (௭)

கொண்ட வன்றரு பாதநீ ரதனையுட் கொண்டு
கண்ட மற்றதின் சுவைருசி யிலதென்று கருதித்
தொண்ட ரானவர் தமையெலா மழைத்திந்தத் தூநீர்
உண்ட போதிலென் னுருசியின் றுயதென் றுரைத்தார். (௮)

பாத நீர்கொடு வந்தவன் றன்முகம் பார்த்து
நீத ரும்புன லிற்சுவை யிலதுநீ நிசத்தைக்
கோத றச்சொல்லு வென்னலு மவனுளங் கூசி
வேத மற்றசற் குருவெதிர் நின்றுதா னிசைப்பான். (௯)

ஐய வந்தவர் தமிலொரு வேதிய னசுத்த
மெய்யன் கால்களு மிகவெந்து வெடித்தபுண் ணாகி
வெய்ய தாலதைத் தொடுதற்கு வேண்டலேன விடுத்தேன்
மைய லென்பிழை யிதன்றியே றின்றென வுரைத்தான. (௰)

கேட்ட மாதவ ரப்படி யோவெனக் கிளர்ந்து
நாட்டு சீலமில் லாரிடை விரைந்தனர் நண்ணிக்
கோட்ட மின்மனத் தோடவர் பதங்கள்கைக் கொண்டு
நீட்ட மாய்விழுந் தெழுந்துபற் பலதுதி நிகழ்த்தி. (௰௧)

தங்கை யாற்புனல் கொண்டவர் தாள்களை விளக்கிச்
சங்கை யின்றுப சாரமுங் குறைவறத் தந்து
கங்கை நீரிலுஞ் சிறந்ததாய்க் கழுவிய நீரை
அங்கை கொண்டுவாய்ப் பெய்துதீஞ் சுவையென லானார். (௰௨)

சுவைநன் றாயதென் றவர்களி கொள்வதைச் சூழ்ந்த
நவையி லாதசா துக்கள்கண் டதிசய நண்ணி
கவையி லாவிவா மனநினை யறிபவன் கண்ணே
இவைய மீதில்வே றருள தொன்றன ரோத்தி. (௰௩)

பாத நீர்ச்சுவை யறிதரு மற்றிவர் பண்பால்
ஓத லாமினி ரசிகமு ராரியென் றொருபேர்
காத லோடென வவர்தலை மேற்கரங் கவித்து
நீத மாயரி நேர்வந்து நினைவுமுற் றுவிப்பான். (௰௪)

என்று வாழ்த்தினர் போனபின் ரசிகதா சேத்தத்
துன்று தேசிக ராகிய தயார்ணவர் துழாய்சேர்
மன்றல் மார்பினன் பூசையி னியதராய் மருவு
கின்ற போதுவந் தானொரு கோனடி கெழும. (௰௫)

வந்து மற்றவர் பூசையி னியதியை மகிழ்ந்து
முந்து பாதங்கள் வணங்கினன் முறைவழு வாமல்
தந்த னன்கிரா மங்களோர் நான்கவை தம்மால்
உந்த மாலது பூசைக்கு நோக்கென வுரைத்தான். (௰௬)

உரைத்து மன்னவன் போனபின் றயார்ணவ யோகி
விரைத்து ழாயவ னருளிது வெனக்களி மிகுந்து
நிரைத்து நாடொறு மடியவர் பூசையு நெடுநாள
சரைத்து மேவுநாள் வந்தன னோரதி காரி (௰௭)

சாய மென்னுமூர் தனில்வரு பொருள்களிற் றலைவற்
கேய தீந்துமிக் கதுதனக் கானவேற் றவன்றான்
ஆய தாற்றயார் ணவர்க்குள கிராமங்க ளவற்றின்
மேய வோண்பொரு டருகிலன் றகைந்தனன் வெஃகி (௰௮)

தகைவு செய்தபோ தந்தவூ ருள்ளவர் சார்ந்து
மிகைய தாத்தயார் ணவர்க்குள பொருளைநீ வெஃகல்
பகைசெய் யேலெனப் பலபடி சொல்லியும் பாரான்
நகைசெய் தின்னவர்க கியான்றரு கிலனென நவின்றான் (௰௯)

போன பின்றயார் ணவருணர்ந் திதுதனைப் பொருந்தத்
தான்வ ரைந்தொரு திருமுகம் ரசிகராந் தாசர்
ஆனவர்க்குத வுகவெனத் தூதன்பா லனுப்ப
ஞான மிக்கவர் மடம்வந்து சார்ந்தந்த நல்லோன். (உ௰)

உண்டு கொண்டுறை போதந்த ரசிகர்பா லுதவக்
கண்டி டக்கையின் வாங்கினர் தலைமிசைக் கவித்துக்
கொண்டு கண்களி லொற்றின ரொப்பணி கொளினும்
விண்டு வாவெனுங் கருத்தறிந் தெழுந்தனர் விரைந்து. (உக)

உண்ட கைகழு வாமலா சானிடத் தோடி
மண்டி வந்துகண் டவரடி வணங்கினர் வாழ்த்தி
அண்டி நின்றபோ தவர்கண்டீ தென்னென வினவத்
தொண்ட ரானவ ராணையின் படிவரல் சொன்னார். (உஉ)

அமுது செய்வதை விடுத்துண்ட கைகழு வாமல்
தமது பால்வந்த சீடரை மகிழ்ந்தனர் தழுவி
உமைநி கர்ப்பவர் சீடரி லொருவரு மில்லை
எமது பாலெனத் தயைமிகப் பெருகின ரெழுந்து. (உ௩)

அவர்க ரத்தொடு வாயையுங் கழுவின ராகித்
தவர்த மக்குநே ரிட்டசங் கடத்தினைச் சாற்றிக்
கவர்மி டுக்கினன் பாற்சென்று மீட்டிடக் கற்றோர்
எவரு மக்குநேர் வாரொரு வருமில்லை யென்று. (உச)

புகழ்ந்து பேசிநீர் கண்ணன்றன் பெயரது பொருந்தத்
திகழ்ந்த பத்திரங் கிராமங்கட் கியைவது செய்து
நெகிழ்ந்தி டாதிவண் வருகவென் றுரைத்தலு நேர்ந்து
மகிழ்ந்து தேசிகர் பதந்தொழு தந்தவூர் வந்தார். (உரு)

வந்த போதந்த வூரின ரிவர்தமை மருவி
இந்த வூர்க்குநீர் வருவதென் காரண மென்ன
அந்த வன்பர்தந் தேசிகர் குறைதனை யறைய
நொந்து மற்றவ ரன்னவன் செய்கையை நுவல்வார். (உ௬)

துடுக்கன் மிக்கதுன் மார்க்கனன் வைணவத் துரோகி
மிடுக்கன் காதக னிரக்கமில் லாதவன் வெருள்வோன்
கடுக்கும் வார்த்தையன் றனைக்கண்டு நீர்சொலு மிதங்கா
தடுக்கு மோவவன் றன்னுழை யேகலா காது. (உஎ)

என்று கூறுதல் கேட்டி யான் குருவரு ளினைக்கொண்
டொன்றி யேனது செய்குவ தேயெனக் குறுதி
நன்ற தென்றுபோம் பொழுதுசிற் சிலர்முன்பு நண்ணித்
துன்று கின்றவர் செய்கையை யவனுக்குச் சொன்னார். (உ௮)

கேட்ட வன்சிறி துன்னிவா துவன்வரக் கிளத்தி
நாட்டு மென்வயின் வரும்வழி யவன்றனை நால்வாய்
ஓட்டி முன்சென்று காலிலுற் றுவைத்து யிர்போக்கில்
வேட்ட தீகுவ னென்றவன் றனைமுன்பு விடுத்தான். (உ௯)

வாது வன்னந்த வகைசெய்வே னென்றுதன் மதமா
ஆது வம்பெரி தூண்டிட நிரப்பிமீ தமர்ந்து
போது றும்பொழு தெதிர்பல சீடர்கள் பொருந்தச்
சாது வானவர் பஜனைசெய் தின்பொடு சார்ந்தார். (௬௰)

அடுத்து வீதியிற் சிலர்வரும் ரசிகரை யண்மித்
தடுக்கன் யானையாற் கொல்வது சமைந்ததைச் சொல்ல
நடுக்கி லார்குரு காரியத் தானுயிர் நவிவாய்
விடுத்து மாயிலீ தேமிக நன்றென விளைந்தார். (௬௧)

யானை முன்வரச் சீடர்கள் கண்டியா மிதனால்
வானை யெய்துவ மெனப்பயம் வாய்ந்தவ ராகிப்
பூனை கண்டுபோங் கருப்பையின் கூட்டம்போற் போக
ஏனை மாதவ ரோடுவோர் தமக்கிவை யிசைப்பார் (௬௨)

நீவி ரொன்வயின் மூவகைக் கரணமு நிரப்பித்
தாவி லாவுப தேசம்பெற் றீரதைத் தவிர்ந்து
மேவு தேகத்தில் விருப்பமுற் றோடுவீ ரானால்
ஒவு றுங்களத் தேன்றுழாய் மணியென [illegible] (௬௩)

அன்ன வாசகங் கேட்டலுஞ் சீடரோ [illegible] ரும்
இன்ன மாலைக ளெங்களத் திருக்கில [illegible] ரீா
பன்னு சீடரொன் றுரைப்பது கொண[illegible] ப பரிந்து
மன்னு மாதவர் கையிடை வழங்கின[illegible] றா (௬௪)

கொண்ட மாதவர் தனியரா யரியை[illegible] கொண்டு
மண்ட வோடிய சீடரு நகர்வதி வாரு
கண்டு நின்றிட வாதுவ னேவிய கரிதா[illegible]
அண்ட வந்திந்த ரசிகர்தாள் வணங்கி[illegible] ங்கி. (௬௫)

யாவ ருங்கண்டு வியர்திட ரசிகர்த மங்கை
மேவு மாலையெல் லாமொரு மாலையாய் வளங்கக்
கோவை செய்தந்தக் கோட்டுமாக் களத்திடைக் கொளுவித்
தாவி லாஹரி நாமத்தைச் செவியிடைச் சாற்றி. (௬௬)

இனியுன் மத்தத்தை விட்டுநல் லோர்களுக கிணங்க
நனிக ளித்தியென் றுரைத்தந்த மிடுக்கன்பா னணைத்
தனிந டப்பவ ரால்வினை செய்கையைச் சடன்பால
முனிவொ டுங்கிடக் கண்டவர் சிலர்சென்று மொழிந்தார். (௬௭)

ஆய வன்பயந் ததிசயித் தெதிர்பத சரணுய்த்
தூயர் முன்வந்து நும்முடை மகிமைதோன் றுமல்
நாய னேன்செய்த பிழைபொறுத் தருள்கென நல்லோர்
சேய தாண்மிசை விழுந்தனன் ஸ்ரோத்திரஞ் செய்து. (௬௮)

ஐய ரோதுமக் கேதுவேண் டுஞ்சொல்லி யருள்க
வெய்ய னேனது வேண்டுகின் றேனென விளம்பப்
பொய்யி லாவன்ப ரொன்குருப் பொனறரு நிலமும்
மையி லென்னுப தேசங்கொள் யானையும வழங்கி. (௬௯)

என்னி டத்தியான் செல்வகை செய்தியென் றியம்பச்
சொன்ன சொற்படி சன்னது பத்திரந் தொடுத்து
மன்னும் யானையுந் தந்தடி வணங்கினன் வாழ்த்த
இன்ன வன்பர்கொண் டேகினர் குருமரு விடத்தில். (௬௰)

எய்தி யாரியர் பதந்தொழு தவையெலா மியம்பிக்
கைத ரும்பத்தி ரத்தொடு கரியையுந் தந்தார்
மைத ருங்கரி யன்றுதொட் டங்குமா ஞமம்
பெய்து காதிடை யின்புட னமர்ந்தது பேணி (௬௧)

தொலைவில் கானகம் பகலிடைச் சென்றெங்குந் துருவி
இலையொ டிந்தன மடத்துக்கு வேண்டுவ வெல்லாம்
நிலையில் வந்துறக் குவித்தரி நேயருண் மிச்சில்
மலையெ னக்குவி வனவன்றி யுண்பதில் வாழ்ந்து. (௬௨)

களிறு செய்வது கண்டவர் களித்ததி சயிக்கப்
பிளிறு வெங்கரி தான்பெறு பேற்றினைப் பேணி
வெளிறு ளோன்முன்பு செய்தவ மேதென வியந்து
குளிறு மாலரி பஜனைகேட் டமர்ந்ததுட் கொண்டு. (௬௩)

இன்ன வாறுபற் பலபகல் கழிந்தபின் ரசிகர்
தன்ன தாரியர் விடைபெற்றுத் தடினிக ளாடத்
துன்னு மால்கரி மேற்பல பொருள்களுஞ் சுமத்தி
நன்ன ரன்பர்க ளுடன்சென்றார் நாமங்க ணவின்று. (௬௪)

செல்லு மார்க்கத்திற் றிருடர்க ணலிவுகள் செய்ய
மல்லல் யானைகண் டிவரரி நாமம்வாய் வழங்கார்
புல்லு றார்துழாய் மணித்தொடை யாதலாற் பொருது
கொல்ல லாமெனக் கொன்றதங் கவரைக்கோ பித்து (௬௫)

ரசிக ரானவர் பின்பல வுந்திக ணண்ணி
உசித மாங்குருக் கேத்திரம் போகவு முன்னி
வசியி லாரரு ளுவதி நகர்வழிக் கண்டு
கசியு மன்பின ருடனங்குத் தங்கினர் கலந்து (௬௬)

மூன்று நாளுற வங்கந ராளுவோன் மூர்க்கன்
ஆன்ற வுன்மத்த னவிந்தன்பாற் சிலர்வினாந் தண்மித்
தோன்ற லேநம தூரிடை வைணவத் தொகுதி
ஏன்ற தோர்கரி யிலக்கணஞ் சிறந்ததோ டென்றார். (௬௭)

கேட்ட மன்னவ னக்கரி மேன்மயல் கெழுமி
நாட்டு வேந்தனுக் காங்கரி நல்கென நவின்மின்
கூட்ட மாயினர் நல்கில ரோன்மிகக் கொடுமை
பூட்டு கென்றுதூ தரையவண் போக்கினன் மாதோ. (௬௮)

தூத ரோடினர் செப்பலும் வைணவர் துன்னி
ஈதெ னேவிவ னுன்மத்த னீதிவா யிசையான்
யாது செய்வதென் றெண்ணினர் தூதரை நோக்கிப்
போது ருதுநும் பால்வயி னவரன்றிப் பொருமா (௬௯)

என்ற போதந்தத் தூதர்மெய் யெனவதை யெண்ணு
துன்றி ஞர்கரி தனைக்கொளத் துளவொடு நாமம்
இன்றி வந்தவர் தமைக்கண்டு கரிமுனி வெய்தி
நின்று சீறலும் பயந்துபோய் நிருபனுக் குரைத்தார். (௫௦)

அரச னன்றென வாதுவ னொருவனை யழைத்துப்
பரசு வைணவ வேடத்தை நீயுடல் பரித்து
விரசி யானையைக் கொண்டுவா வெனவவன் விரைந்து
புரசை யானைமுன் போயினன் வைணவம் பூண்டு (௫௧)

கபட மாயிவன் வந்தன னெனக்கரு தியுமவ்
விபம வன்சொலு நாமத்திற் கிசைந்தெதிர் நிற்க
நிபமில் யானையை வாதுவ னேர்ந்தனன் கொடுநி
ருபன்முன் சென்றிடக் கூடத்திற் புகுத்தென வுரைத்தான். (௫௨)

கூடத் தய்த்தலும் யானைசா துக்களைக் குறித்து
வாடி யிங்ஙன மெய்திய தேயென வருந்தி
நீடு நித்திரை யுணவதில் லாமலே நின்று
வீடிற் றேயொழு நாளிடை வைகுந்த மேவ (௫௩)

அப்ப டிக்கரி யானபின் ரசிகரு மறிந்தே
ஒபபி லன்பரோ டிப்படி யுறுதலா காதென்
றெய்ப்பி லாதரி பஜனைசெய் தெங்கணு மேகி
வைப்ப தாகிய தீர்த்தங்க ளாடினர் வாழ்ந்தார். (௫௪)

ஆக சரித்திரம் ௯௨-க்குச் செய்யுள் ௩௭௰௯.

ரசிகமுராரிபக்தர் திருவடிகளே சரணம்.



முற்றிற்று.

மீராபாயிசரித்திரம்

இந்துஸ்தா னதேசத்திற் பெரியவுதே யபுரமென விசைகொ ளூருண்
டந்தச்சீர் நகரத்திற் கரசன்விஷ்ணு பக்தியுடை யவன்றன் பக்கல
வந்துற்ற வதிதிகளுக் கன்னதா னஞ்செய்தும் வருநல் லோனா
முந்துற்றுப பூசித்துச் சேவைசெயும் ராணாவா முதல்வன் மாதோ. (க)

கோபால மூர்த்தியைத்தன் னகத்தில்வைத்துக் குறைவிலுப சாரமான
பூசனைபுரிந்தவ் வரிபிரசா தத்தைநன்கு தினமுங் கொள்ளும்
பூபாலன் பின்புசித்து வருமவற்கோர் புதல்விமணி போற்பி றக்க
மாபால னஞ்செய்தக குழவிக்கு மீராபா யெனும்பேர் வைத்தான். (உ)

அன்னைகுழ வியையெடுத்துக் கண்ணனடி யிற்கிடத்தி யன்பு செய்து
நன்னர்வரு நாளுக்கு நாள்வளர்ச்சி யாகமிக நன்கு போற்ற
மின்னுகுழ வியினுருவ லாவணியங் கண்டுதந்தை மிகக்க ளிக்க
இன்னபடி வருநாள்கண் ணன்கோயிற் கப்பெண்ணை யெடுத்து வந்து. (௩)

மகுடகுண்ட லங்களொடு மணிமுத்து மாலைவைஜ யந்தி மாலை
நகுதுளவ மாலைகவுத் துவமான மணிமாலை நவில்கே யூரம்
உகுமொளிசேர் பொன்னுடை யிடையணிநூ புரம்விளங்க வுற்ற கண்ணன்
நெகுபுனகை முகவொளியு ஞம்பமடையுங் கண்டுதெரி சித்து நின்று. (ச)

தினந்தோறுந் திவ்வியமங் களமூர்த்தி சேவைசொன்ன படிசே வித்து
மனந்தாவி லன்புகொள வருதந்தை தாயுடனே வருமீ ராபாய்
எனுந்தூய வனிதையுமக் கோபாலன் சேவைதனி லீடு பட்டுப
புனந்தோயு மயில்பொழியும் புயல்கண்டா லெனமகிழ்வு பொங்க லாகி. (ரு)

எனக்கிந்தக் கண்ணனன்றி வேறொர்புரு டனைவேண்டே னென்ற வண்ண
றனக்கன்பு பூண்டிருக்கத் தந்தைமனை வியினிடத்துச் சார்ந்து மாதே
மனக்கின்பந் தருநமகண் மணப்பருவ மேவியதுன் மனங்கொ ளாயென்
வனக்கன்னி தனக்கினிய வரன்வேண்டு நாடுகென வலிந்து சொன்னான். (சு)

அவ்வாறு தந்தைதன தன்னையுடன் பேசுகின்ற வதனைக் கேட்டுச்
செவ்வாயின் மீராபாய் தந்தைவயின் வந்துதந்தாய் செப்பக் கேண்மோ
தவ்வாதி யானொருத் தமபுருடன் றனைக்குறித்துத் தங்கு கின்றேன்
எவ்வாறு வெனினீவிர் தினந்தொறும்பூ சிக்குங்கோ யிலனே யாமால். (எ)

அந்தக்கோ பாலனுக்கே யென்னையர்ப்ப ணஞ்செய்யு மதற்கோ ராயம்
சிந்திக்கா தெனைத்தருக வெனவுரைக்கு மகள்வார்த்தை தேர்ந்து மன்னன்
எந்தக்கா லத்தெவர்தாம் விக்கிரகந் தனைமணந்தா ரிசைகோ பாலன்
இந்தக்கா லத்தர்ச்சா ரூபமதாய் விளங்குகின்றா னிணங்கு வானோ. (அ)

ஆதலா லிவ்வுறுதி தனைவிட்டுப் புகழ்குணங்க ளனைத்துங் கொண்ட
நீதனா கியவரச குமாரனைத்தேர்ந் தேமணக்க நினைத்தி யென்ன
நாதனர்ச்சா ரூபமதா யிருந்துநிஜ பத்திக்கொண்ட நாமதேவர்
போதுகென வருகின்றா னுடனுண்கின் றான்விபவம் பொருந்தி மாதோ. (கூ)

ஜயவிந்தக் கலியுகத்தி லர்ச்சாரூ பம்விபவ மாகித் தோன்றும்
மெய்யறிகி லாயோநீ பலவுண்டு நிஜபக்தி விளங்கிற் றுலை
வையநுகர் கோபால னெனக்குமெய்யாய் விளங்குவனீ மறுத்தல் வேண்டாம்
செய்யவனுக் கர்ப்பணமென் றுரைசெய்தாள் மகள்வார்த்தை தேர்ந்துமன்னன்

சிறுவயதி லரிபஜனை புராணசிர வணஞ்சிறந்த திவ்விய ஞானம்
பெறுமகளை யதிசயித்திக் கோபாலன் றனையுனக்கென் பிரியத்தீநதேன்
நிறுவியவுன் மனைகொடுபோய் நிதநிஜ பாவமது நிரம்பப் பூசை
உறுதிகொண்ட படிபுரிகென் றுரைத்திடமீ ராபாயி யுகந்து கொண்டார். (௰க)

கண்ணனைத்தன் மனையில்வைத்துத் தினமுமவிடி யற்காலங் கடி தெழுந்து
தண்ணியநீ ராடல்செய்து நித்தநிய மக்கிரியை தனையுஞ் செய்து
புண்ணியநற் புனல்கொண்டு கோபாலற் கபிடேகம் பொருந்தச் செய்து
வண்ணவஸ்தி ராபரணங் களும்பொருத்தி யுபசார வகையுஞ் செய்து. (௰உ)

பூசித்து வீணைகைக்கொண் டரிகுணங்கள் பலபாடிப் புகழ்ந்து போற்றி
நேசித்துச் சாதுக்க டமையழைத்துப பிரசாக நிவேதித் துபபின்
பாசித்துத் தான்புசித்துப புராணசிர வணஞ்செய்து மான்ம ஞானம்
வாசித்து மாலரிதன் குணனுபவ பிரபந்தம வருக்கு நாளில். (௰௩)

அப்பதியிற் சிலகுடி ல தாபபுததி யுடையரிங்க வரசன் கன்னி
பற்பல்புரு டர்களிடையே பாடுகலோ டாடுசலம் பயில்கை தன்னால்
இப்பதிதன் குலத்துக்கோ ரிழுக்கமென வறிகின்ற னில்லை யென்று
செப்பலுணர்ந் தரசன்முனி வாய்மனைவி தனைநோக்கிச் செப்பு கின்றான். (௰௪)

இது காறுஞ் சிறுவயதா யிருந்ததனால் வைணவரோ டிருக்கச் செய்தேன்
முதுஞானம் விளைந்தாலும் யௌவனத்திற் புருடரொடு முயல்வ தாகா
ததுதேரு ராரிகழ்ந்தா ரெனையதனை லினிவரனை யணைவ தாச்செய்
வதுதானுத் தமமென்றுன் மகட்கறைந்து சொல்வதனை வருத்தி யென்றான் ( )

அன்னைமகண் மனைவந்து மகளேநீ மணங்கொள்ளா தமைத லாலே
உன்னையூ ராரிகழ்ந்தா ரிகழ்ந்ததனை யுனதுபிதா வோபொ றாமல்
என்னையுனை மணஞ்செய்து கொள்ளும்வகை யிசைத்தியென விசைக்கவந்தேன்
முன்னைநினை வதைவிடுத்து நல்லவரன் றனைமணக்க முயறி யென்றாள். (௰௬

கண்ணனன்றி யுலகிலுள்ளோர் பிதாக்களெனக்கருதுமென் றன்கருத்தைநீபோய்
அண்ணறனக் குரைசெயெனு மவருறுதி தனையறிந்த வன்னை தான்போய்
மண்ணுலகா ளரசனுக்குச் சொல்லவவன் வைணவரால் வாய்த்த தீதென்
றெண்ணி யினிமகளைக்கொல் லாதிருத்து மேலிகழ்ச்சி யெய்து மென்றான். ( )

மனைவிதனை அழைத்துவிடங் கலந்தசோற் றினையளித்துன் மகளைக் கொல்க
வெனலு மவள்கணவன்சொற் கடக்கமாட் டாளாகி யிசைந்து நஞ்சு
தனைவிரவு சோறுகொண்டு மகளிடஞ்சார்ந் துனதுபிதாத் தானுன் செய்கை
யினையு கவா தடுநஞ்ச மிடுசோறுண் பிக்கவென்னை விடுத்தா னென்றாள். (௰அ)

அழுதுசொல்லுந் தாயுரைகேட் டந்தமீ ராபாயி யன்னே நன்று
வழுவிலரி பக்தியினால் யான்மடித லென்றுமா தவன்முன் வந்து
தொழுது நின்று கண்ணநின் பக்தியினால் யான்மடிந்தாற் சொலாரோ நின்னைப்
பழுதுமுழு வதுமென்றுன் பூசையினி யார்புரிவார் படலா னேனேல். (௰௯)

எனப்பலவா றியம்பிநைந்தி யான்பூசை புரிவதுனக் கிச்சை யானால்
முனைப்பிரக லாதனர விடத்தாற்சா வாதுசெய்த முகுந்தா நீயென்
றனைச்சாவா திருக்கச்செய் யாயோவென் றேத்தியன்னை தராமுன் வாங்கி
மனத்தார்வ முடனுண்டா ருடனேமா தவன்பச்சை வடிவங் கொண்டான் (௨௰)

விடவமுதுண் டுங்கன்னி வீயாமற் கண்ணனுரு வேறு பாடாய்
இடல்கண்டு தாய்வியந்து கணவனிடஞ் சென்றியம்ப விதுமெய் யோவென்
றடலரச னவணேகி மகளையும்பார்த் துக்கண்ண னுரை பச்சை
உடலையும்பார்த் ததிசயித்துக் கண்ணாநான் விடமுண்ண வினைச்செய் தேனே. ( )

தகுமோவென் றனுதபித்துச் சாஷ்டாங்க தண்டனிட்டுத் தனது கன்னி
மிகுமன்பை மிகவியந்து மகள்காலில் விழுந்தெழுந்து மிகத்து தித்து
நெகுமுன்றன் மகிமையறி யாதுசெய்த பிழைபொறுத்தி யென்று நேர்ந்து
புகுதந்தை தனைவணங்கி நின்றாற்கண் ணன்கருணை பொருந்தி னேனே. (௨௨)

எனுமீரா பாயிதனை நோக்கி யன்னே யான்விடச்சோ றுனையுண் பிக்கப்
புனிதநிறம் வேறான கண்ணனைநீ யேயினிது புகழ்ந்து போற்றி
அனகன் முன்னை வடிவாக யமைத்தியெனப் பிதாவேண்டு வதனைக் கேட்டு
வனிதைகண்ணன் றனைவணங்கிப் பூதனைதன் விடப்பாலை மாந்தி னேனே (௨௩)

நிறம்வேறா யினையோநீ யதனாலே யின்றுமுன்னை நிறமே யாகி
விறல்வேந்தன் றனக்கருள்க சேவையென வேண்டுதலும் விமலன் கன்னி
உறவேண்ட றனையுகந்து கண்ஞ்சிறிது பச்சைநிற முறாத லாகப்
பிறவுடலெல் லாமுன்னை வடிவாகி யதிசயிக்கப் பிறங்கி னானே. (௨௪)

ராணாவேந் தன்கன்னி நிமித்தமாய்க் கண்ணனிந்த நன்மை செய்ய
மாணாத துர்ச்சனருஞ் சாதுஜன ருந்தெரிந்து மகிழ்ந்து போற்ற
காணாருங் கண்ணனின்று மவ்வாறே விளங்குகின்றா னவிலுங் கன்னி
ஆணாதன் கருணையா லான்மஞா னம்விளங்கி யமர்ந்தா ளம்மா. (௨௫)

ஆகச்சரித்திரம் ௬௬க்கு செய்யுள் ௬௱௬

மீராபாயிதிருவடிகளே சரணம்.

முற்றிற்று.

தாசி கான்ஹோபாத்ரா சரித்திரம்

பண்டரி புரத்தின் றென்பாற் பகரொழு கோசு தூரம்
கொண்டமங் களவே டத்திற் குடியிருப் பவளோர் தாசி
உண்டவ ணுமஞ் சாமா வவள்வயிற் றுதித்தா ளோர்பெண்
கண்டவர் வியப்ப நாளுங் கவின்மிக வளருங் காலை. (க)

நாமந்தான் கான்ஹோ பாத்தி ராவென நவில்வ தாக
மாமைமிக் குறுதல் கண்டு வானவர் மகளிர் நாணம்
தாமிக வடைவ ராளுற் சகத்தவர் தமக்கு நேர்வே
றுமவ ருண்டோ நாட்டி யக்கலை யனைத்துந் தேர்ந்தார். (உ)

இளமையிற் பாடி யாடு மெழிலெலா மரம்பை யாதி
யளமைசோ வான நாட்டு மாதாக ளறிந்து மெய்ச்ச
உளமயி லனைய கன்னி யெளவன முறுத லாகக்
கிளாமச டன்னை நோக்கித சாயொன்று கிளத்த லுற்றாள். (௩)

சொற்றவ ளிடத்துற் றாலுன் கோலமோ டாடல்·பாடல்.
நற்றலா பணக்கு வேண்டி நலமெலா நல்கு கிற்பான்
முற்றறி மாளே போக வருகென மொழிதல் கேட்டு
மற்றவ ளதற்கொவ் வாமன் மறுத்தன ருளைக்க லுற்றார். (௪)

மனதெழிற் கதிக மான வெழிலுள புருடன் றன்னை
மனதினில் விரும்ப லன்றி மற்றையோர் தமைவி ரும்பேன்
என்தலை யமை யதாயே யெனவவ ருறையுங் காலை
வினையைப் பிறன்பார் கற்கு விளைந்தது திருநன் றேளே. (௫)

தாளமிர தங்கம பன்னகசா டரிதாக் கியபதாகை
நீளகா திரமபத தமா நிமலநன் றமைம் பாடித்
தோரணி துளமசு தான்வாழ துவளில்பண டரிக்கு மேவ
யானான சணனா கணடு மறறவா தமைவ ணங்கி. (௬)

யரிதிரு நாம சீதத னஞ்சொலுந் தாச ரோநீர்
மருவுவ தெங்கே யென்ன மற்றவா புண்ட லீகாக்
கருளசெயும பாண்டு ரங்க னமாந்தபண் டரிக்கென் றோத
திருமா ளனைய கான்ஹோ பாத்திரை செபபு கின்றார். (எ)

நிரபுகல் பாண்டு ரங்க னழகெங்க னிகழ்த்து கென்னச்
சோரவறு கமல நாப னழகினைச சுருதி யாலும்
வேரிமுண டகத்தோ னாலும் விளம்புதற் கரிய தென்று
சாபரி தாசா சொல்லத் தாசிபுத் திரியார் சொல்வார். (அ)

தாசரோ நீர்கொண் டாடத் தக்கபாண் டுரங்கன் றன்னை
வேசியான் சரண டைந்தால் விரும்புகிற் பானோ வென்ன
மாசிலார் மதுரைக் கூனி வணக்கமு மகிழ்ந்து கொண்டான்
வசிலாக் கண்ண னுக வெய்திய போதி லென்றார். (௯)

ஈனராஞ் சோகா மேளா ரென்பவர் முதலி யோரைத்
தானருள் செய்து காத்த தயாநிதி பாண்டு ரங்கன்
அனதா லுன்னைக் காப்ப தரிதன்று மாதே யென்ன
ஞானமுண் டாகித் தாய்வாழ் நன்மனை விரைவிற் புக்கார். (௰)

தாய்தனை நோக்கி நான்பண் டரிதனைச் சார்ந்து மீள்வேன்
நீயிவ ணிருத்தி யென்று நிகழ்த்துசா துக்க ளோடு
மேயினள் வீணைகொண்டு விமலகீர்த் தனங்கள் பாடித்
தூயரோ டாடிக் கொண்டு தொடர்ந்துபோ யவிடஞ் சேர்ந்தார். (மக)

தளிதனிற் புகுந்து பாண்டு ரங்கனைத் தரிசித் தேத்தி
முளரியந் தாளில் வீழ்ந்து முகுந்தகோ விந்த நின்சீர்
தெளிகுந ருரைக்கக் கேட்டுச் சிறியவென் சாதித் தீமை
விளியவிட் டுன்னை நம்பி மேவினேன் சரணந் தாழ்ந்தேன். (மஉ)

ஆதலா லங்கி காரஞ் செய்தெனக் கருளல் வேண்டும்
நீதயா நிதியன் றோவென் றுரைத்தனர் நிமலன்பாத
மீதுதன் றலையைச் சார்த்தி விழியினீர் பனிப்ப நின்று
மாதுதி பலபு கன்று வதிந்தனர் சினக ரத்தில் (மங)

அப்படி யிருக்க வோர்நா ளொருதுரா சார னன்றா
மெய்ப்படி யெழிலைக் கண்டு வியந்திவள் போலு முண்டோ
இப்படி மீதி லோர்பெ ணென்றுபே தரியை யாளும்
மைப்படி யுளமி லேச்ச மன்னவன் றன்பால் வந்து (மச)

வேந்தபண் டரியின் கோயின் மேவின ளொருபெ ணன்னாள்
மாந்தளி ரனைய மேனி வனப்பினை யென்சொல் கேளுன்
நீந்துத லரிதி யார்க்கு நிரம்பெழிற் கடலுட் பட்டால்
வாய்ந்தனை யறிதி யென்றான் மற்றவன் வியந்து சொன்னான். (மரு)

தூதனை நோக்கி நீர்போய்த் துளவினோன் கோயில் மேவும்
மாதனைக் கொணர்க வென்ன மற்றவர் விரைந்து சென்று
ஸ்ரீதரன் கோயின் மேவுங் கருடதம் பத்தைச் சேர்ந்து
மாதவன் கீதம்பாடி வதிபவர் தம்மை நோக்கி (மசா)

உனையெங்க ளரசன் றன்பா லுறுகென வுரைத்தானின்றே
சினகரம் விடுத்தங் கேகி சேர்கசீக் கிரஞ்சே ராயேல்
நினைவலிந் தங்கே கொண்டு நேர்குவோ மென்று சொல்ல
அனையவ ரரியைத் தாழ்ந்து வருவெனென் றவருக் கோதி (மஎ)

மாதவன் கோயிற் கர்ப்ப கிரகத்துட் புகுந்து மன்னன்
றூதர்கள் வெளியே நிற்கச் சுவாமியை வணங்கிச் சென்னி
மீதுறக் கைகு வித்துப் புண்டரீ கவர தாமேற்
போதகந் தனக்கா பத்தைப் போக்கிய புனித சீலா (மஅ)

நின்னடித் தொழும்ப தாக நேர்ந்தவென் றன்னை வேந்தன்
றன்னிடத் துய்த்தி யேலுன் றனைப்பணி சாது சங்கம்
மின்னிட நகைப்ப தாக விளையுமே யறிகி லாயோ
என்னநற் றுதிகள் செய்யு மின்னுரை யினிது கேட்டு (மகூ)

கருணையங் கடலாங் கண்ண னுடனவர் கண்முன் றோன்றித்
தெரிவைதன் றாவி தன்னைத் திகழுந்தன் றுடையிற் சேர்த்தான்
அருகிலர்ச் சகரோ டுற்ற சாதுக்க ளனைவ ருங்கண்
டிருகினர் ஜயஜ யாவென் றுரைத்தனர் வியந்து நின்றார் (௱)

இன்னமும் பாண்டு ரங்க னெழிற் றுடை தனிலே யந்தக்
கன்னிசேர் குறிகாண் கின்றார் சேவைகாண் போர்க ளெல்லாம்
மன்னவ ருடலைக் கொண்டு போய்த் தெற்கு வாச லோர்சார்
துன்னுறப் புதைத்தார் கோயி லர்ச்சகர் துதிகள் செய்து (உ௧)

புதைத்தவவ் விடத்தப் போதே யொருதருப் பொலிந்த தாக
மதத்தகோன் றூதா கோயிற் குட்புக்க மாத ரெங்கே
இதத்தவர்ச் சகரோ யென்ன வெழிலிவண் ணன்க வானிற்
பதித்தனன் மாத ராவி யென்னலும் பதரித் தூதர் (உ௨)

உயிரிலா வுடலைக் காட்டு மெனவுடல் மரமா யுற்ற
தயலெனக் கேட்ட தூத ரதிசயித் தவ்வா றாமோ
மயிலனு டனைம றைத்துப பொய்புரை வகுக்கின் றீர்நீர்
அயிலுடை வேந்தன் றன்பால் வருகென வழைத்துச் சென்றார். (உ௩)

போமவ ரினிய கந்த பொடி யுடன் பிரசா தங்கொண்
டேமயல் கொணட வேந்த னிடஞ்சென்று நல்கலோடும்
ஆமதி லுரோமங் கணடே தேதென வனைய ரச்சம்
தான்மிகக் கொணடு சாமி தலைமயி ரென்று சொன்னார். (உ௪)

வேறொரு மயிரென் றேடுகில் வேந்தன்றண் டிப்பா னென்று
கூறிய வார்த்தை கேட்டுக் கோன்மயி ருண்டோ சாமிக்
கீறுசெய் முன்னன் சொலகெ பொய்யென வினையா கோயில்
காறும்வந் தறிக வென்ன வேந்தனுங கடுகிச் சொன்னன். (உ௫)

நன்றுநா ளைழைத்த தாசி யெங்கென நடந்த தோத
இன்றதை யறிவோ மென்ன வெய்தினன் றொடர வன்னார்
துன்றினர் சாமி தன்னைப பலவகை துதித்து ரோமம்
ஒன்றநீ யுறுமேல யாங்கள் மடிவதா மெனவு ரைத்தார் (உ௬)

உடன்வரு மரசன் கோயிற் குட்புக்குச் சாமி தன்னைத்
திடமுட னோக்கும் போது சீதரன் மகுடத் தின்கீழ்ப்
படிசுரு ளுரோமங் கண்டு பயந்தன னுகிமற்றை
வடிவுடன் கவானி லுள்ள குறியுங்கண் டுளம கிழ்ந்தான். (உ௭)

பலவகை துதித்துப் பாதம் வணங்கினன் பகர்ந்த வண்ணம்
இலகுறக் கண்டே னென்ன வர்ச்சகர் தமக் கியம்பி
நலவிழி களிலா நந்த நீர்வர நங்கை யிந்தச்
சலசலோ சனன்க வானிற் சாரவெத் தவஞ்செய் தாளோ. (உ௮)

என்றனன் வியந்து சாமி யிணையடி தழுவி யேத்தி
நன்றுகொண் டாடி மாத ருடன்மர நயந்து கண்டு
பின்றையா னுணரா தேசெய் பிழைபொறுத் தருள்க வென்று
மன்றலந் துளவோன் பாதம் வாழ்த்தினா னூர்போய் வாழ்ந்தான் (உ௯)

உடலுறு மிடத்தி லுற்ற மரமின முளது காணக்
கடவதாய் வானோர் மற்றுங் கலந்துள மரங்க ளோடு
படர்சிலை யாகி யங்கே பரவின ராய தன்மை
திடமுறச் சேட னுலுஞ் செப்பொணா தென்ப மாதோ. (௩௰)

ஆக சரித்திரம் ௩உ க்குச்செய்யுள் ௲௩௰௮.
தாசி கான்ஹோ பாத்திரா திருவடிகளே சரணம்.
முற்றிற்று.

தாமாஜிபண்டிதர்சரித்ரம்

போதரிமா நகராளு மவிந்தர்பிரான் மங்களவே டப்பேர் பூண்ட
நீதிமிகு வளம்பதியைத் தனதாள்கைக் குள்ளாக்கி யதற்கு நேரில்
ஸ்ரீதரன்றன் பஜனையிலே சிறந்தவராய் மனம்விரக்தி திகழ்வோ ரான
சாதுவெனுந் தாமாஜி பண்டிதரா லதிகாரந் தழைக்க வைத்தான். (க)

பண்டிதர்தங் குடும்பமுட னவ்வூரி லிருந்துதம்மாற் பார்க்க லாக
மண்டதிகா ரந்தனைச்செவ் வேநடத்திக் கொண்டுதினம் வருத லான
தொண்டருக்கு மதிதிகட்கும் பூசையன்ன தானமிகச் சுரந்து நல்கி
விண்டுபஜ னையுஞ்செய்து வெகுகாலங் கழித்தினிது மேவு நாளில். (உ)

பஞ்சமிக வந்ததனாற் சிவகோ டிகளெல்லாம் பசிபொ றாமற்
றுஞ்சுதலா வதையன்றிச் சோறுணக்கிட் டாதுமிகு துன்ப நேர்ந்து
நஞ்சுறுகா லத்திலுயர் பண்டரியி லிருந்தோர்மறை நல்லோ னிந்த
விஞ்சுபுகழ்த் தாமாஜி பண்டிதர்வாழ் வீட்டிற்கு மேவினனே. (௩)

இன்றுநமக் கமுதுதப்பா தேகிடைக்கு மென்றுபசி யாலி ளைத்துத்
துன்றுமறை வேதியனைப் பண்டிதாசத் பாவமுடன் றொழுது நீர்போய்
நன்றுபுன லாடிவிரை வாய்வருக வமுதுணற்கு நன்கென் றோதச்
சென்றுமறை வேதியனும் புனலாடிப பண்டிதர்வாழ் மனையைச் சேர்ந்தான்.()

வந்தவுடன் சன்மானஞ் செய்தொருதம் பந்தியிடை வதிய வைத்து
முந்துபல விதமான வுத்தமபோ ஜனம்படைத்து முயல்சங் கற்பம
நிந்தனையில் லாதுபுரோ கிதர்கூற வேதியனை நோக்கி நீவிர்
நந்தலிலாப போஜனஞ்செய் யுங்களெனப் பண்டி தர்தா நவிலும் போதில். (ரு)

பண்டரியி லிருந்துவந்த வேதியன்கண் ணீர்பெருகப் பரிதபித்துக்
கொண்டுறுதல் கண்டுசக லருந்திகைக்கப் பண்டிதர்முன் குறுக வந்து
விண்டடிய ரோநீரோ னழுகின்றீ ரெனக்கேட்க வேதி யன்றான்
அண்டெனது குடும்பமெல்லா நாலுநா ளுபவாச மானதாலே. (சு)

இங்குணும்போ தவர்நினைவு வந்தழுகின் றேனென்றா னென்னக் கேட்டுப்
பொங்கழலி விடுமெழுகு போலுருகிப் பண்டிதர்மற் றவனைப் போற்றி
நுங்குடும்பந் தனக்காண்டுக் குறும்பொருள்க டருகின்றே னெனநு வன்று
மங்குதலில் லாதுசெய்து போஜனமுண் பித்தெவரு மகிழ்வ தாக்கி. (எ)

தக்கணைதாம் பூலமது பெற்றெவரு மாசிமிகச் சாற்றிச் செல்ல
மிக்கதொரு பண்டரியி லிருந்துவந்த வேதியற்கு விளம்பு மாறே
தொக்கபொதி களிற்றானி யங்கனக்கச் சுமையேற்றித் தொடர்ந்து கொண்டு
புக்குமனை யிடைச்சேர்த்து வருகவென வூழியர்க்குப் பொருந்தச் சொன்னார்.()

ஊழியர்தாங் கொடுபோந்து பண்டரியின் மேவவங்கே யுற்றோ ரெல்லாம்
சூழுறவந் துற்றவெல்லாஞ் சூறையா டினர்கொண்டு சுமந்து சென்றார்
வாழ்வருளத் தாமாஜி வடிவாகிப் பாண்டுரங்கன் வந்தா னென்று
தாழ்வறுசீர் மறையோனு லூழியராற் றடைசெய்யத் தகாத தாகி. (௯)

கிடைத்தனவூ ரார்கொள்ளக் கூகூவென் றலறிபழு கின்ற பார்பபான்
உடைப்பொருளோ விவையென்னப் பண்டரியிலுள்ளவர்க ளொருங்கு கூடிப்
புடைத்தழுகின் றேயுனக்கித் தானியங்கள் யார்கொடுத்தார் புகறி யென்னப்
படைத்தபுகழ்த் தாமாஜி பண்டிதராற் கிடைததென்று பரிந்து சொன்னான்.()

யான்செய்வினை தானியங்க ளெலாங்கொடுபோ யிற்றேயென் றிரங்கிப் பின்னு
வான்செய்புகழ்த் தாமாஜி பண்டிதர்பாற் றிரும்பிவரா றுமை யாலே (ம்
ஊன்செயுடம் பிளைத்தமறை யோரெல்லா மவன்பின்னே யொருங்கு கூடி
மீன்செய் கடல் போலொலித்துத் தாமாஜி பண்டி தர்வாழ் வீட்டைச சூழ்ந்தார்

வந்துநிரம் பியதுகண்டு பண்டிதரம் மறையோர்க்கு வணக்கஞ் செய்ய
முந்தியவே தியரெல்லா மாசிசொலவி யாமுழுது மிடியின் மூழ்கி
நைந்துயிர்போங் காலமதா னீர்தீர வுதாராதயா நலமுள் ளோரசீர்
நந்துதலில் லாதுசமா ராதனஞ்செய் பவரென்று நவிலக் கேட்டு. (௱௨)

அடைந்தவெங்கள் பசிநோய்தீர்த் தருளுமென வவர்சொலுந்தி னவார்த்தை கே
மிடைந்தபுகழ்ப் பண்டிதரங் கவர்களைநன் குறவிருத்தி மெலிவு றேன்மின் ட்டு
குடைந்துவண்ட ரிசையொடு மலர்த்தலஞ்சூழ் பண்டரிவாழ் கோபா லன்முன்
உடைந்துறசெய் பசிநோய்தீர்த் தருளுவா னென்றுமனைக் குட்புகுந்தார் (௰௩)

தமதுதர்ம பத்தினியை நோக்கியன்னங் கிடையாமற் றளர்ந்து வாடி
நமதுபண்ட ரிக்கணுள்ளார் வந்துமொய்த்திங் கிருக்கின்ற ரவர்க்கு நங்காய்
உமதுகுறை தீர்ப்பான்கோ பாலனென்று சொல்லிவநதே னுறுகண ுரா
தெமகிடத்தி லொன்றுமில்லை யெனமறுத்தா லவர்களெல்லா மிறந்து போவார்.

ஆதலா னம்மிடத்திற் றானியங்க ளேதுமில்லை யளிததற் கிப்போ
தேதுசெய்து மெனவினவக் கற்பின்மிக்கார் கொழுநர்முக மினிதி னேக்கி
நாதரொயெவ் விதத்தேனும் வந்தோர்தந் துயாதீர்த்த லலனென் றோத
மாதரார் தமைநோக்கி மன்னனுறு பொருளுளது வழங்க லாகும். (௰௫)

வழங்கிலென துயிர்போகும் போனலிங் கிவாகளெல்லாம் வாழ்வ தாகும்
முழங்கிவர்தம் பொருட்டெனுயிர் விடுதன்மிக நன்றென்று மூன்னுகின்றேன்
கழங்குபயில் கைமானே யிருத்தியென வெளிவந்து கலந்து மொய்த்துத்
தழங்குமறை யோர்முதலோர் தங்களைக்கூய்த் தானியவைப் பதனைச் சார்ந்தார்

கதவுதிறந் துங்களுக்கு வேண்டுவகொள் ளுங்களென்று கழறி விட்டார்
பதறிவந்தோர் கொள்ளைகொண்டு பண்டிதனை மிகவாழ்த்திப் பகரோர் மாதம்
மிதமிலதாய்க் கொடுசென்றார் பஞ்சத்தால் வருந்துயிர்கள் மிடியுந் தீர்ந்த
நிதமுமரி பஜனைசெய்து பண்டிதர்கண் ணனைமறவா நினைவோ டுற்றார். (௰௭)

வேறு

வழுவலி லரசன தாக வாய்பொருள்
முழுவதுங் கொள்ளையின் முடிய விட்டதோர்
பழுதறு பண்டிதர் தமக்குள் ளேபணி
கெழுமிய வொருவனுற் கிளர்ந்த தோதுவாம். (௰௮)

பண்டிதர் பார்த்திபன் பொருளைப் பல்படி
கொண்டுபோ கக்கொள்ளை விடுத்தல் கொள்கையோ
அண்டிய யான்சும்மா விருக்க லாகுமோ
[illegible] வேவினை யொறுப்ப னேவென, (௰௯)

கண்ணிலன் பொருளெலாம் போன விவ்வகை
அண்ணலுக் கறிவுற வறைந்த னுப்பினான்
நண்ணிய வதுதெரிந் தவிந்தர் நாயகன்
ஒண்ணுமோ விதுசெய வெனவு ருத்தனன். (உ0)

எனதரு ளாணையில் லாம லிங்ஙனம்
வினைபவன் றனதுயிர் வதைத்தல் வேண்டுமென்
றனையவர் தமைப்பிடித் தனுக வீரரைத்
தனதுரைத் திட்டொடு சார வேவினான். (உக)

பண்டிதர் பால்வினைத் தடுத்துப் பார்த்திபன்
கண்டனைத் திட்டினைக் காட்டி நீர்விரைஇ
அண்டுசெல் வேண்டுமா லரசன் பாலெனக்
கொண்டன ரோதிடக் கடித்துக் கூறினார். (உஉ)

கூறிய வீரர்சொற் கேட்டுக் கோமகன்
ஆறுசெ யாணையின் பார மடைந்திடத்
தேறினர் பண்டரி சேர்ந்து நாதனை
வீறிணை யடிதொழு தேக வேண்டினார். (உங)

வீரருக் கின்னுரை விளம்பிக் கொண்டுதாம்
சீரரி பண்டரி புரத்தைச் சேர்ந்தனர்
சார்தரு சந்திர பாகைத் தண்புனல்
ஆர்வமோ டாடினர் கோயி லண்மினார். (உச)

சன்னிதிக் கருடதம் பத்தின் சார்புற
மன்னினர் வணங்கினர் செங்கண் மேல்வழி
பொன்னினா யகனது பாதப் போதினைச்
சென்னிமேற் சேர்த்துக்கை குவித்துச் செப்புவார். (உரு)

ஞானநல் லுருவபொன் னாத நாடொறும்
ஈனத யானவா பத்தைத் தீர்ப்பவ
வானவர் நாயக வெனவ ழுத்தினார்
மான்மணி மேனியை மகிழ்ந்து புல்லினார். (உசா)

சென்னியின் மேற்கரஞ் சேர்த்து நின்றுமுன்
உன்னது சேவையென் முடிவி லுற்றதால்
என்னது பவம்பரி சுத்த மெய்திய
தன்னது முனதரு ளாமென் றோதினார். (உஎ)

நாதன துருவெலா நயந்து நோக்கினர்
ஆதரம் பெருகவுள் ளமைவு செய்தனர்
காதலிற் கண்கணீர் ததும்பக் காருழாப்
போதுகே னெனவிடை கொண்டு போந்தனர். (உஅ)

திருமக ணிலமகள் முதல தேவிமார்
மருவுறுங் கோயின்முன் வந்து நின்றுமுன்
கருணையம் பிராட்டிதன் கமலத் தாள்களை
வெருவுற வணங்கினர் வேண்டு கின்றனர். (உகூ)

பிரமருத் திரேந்திரர் பேண நீயுமோர்
வரனது கருணையே வடிவ மாயினை
தரமதா கியதிரி புவனந தாங்குவாய்
உரனிலே னுன்வயி னுரைபப தென்னெனு (௫0)

மற்றைய தேவிமார் தமையும் வந்தித்துச
சொற்றனர் துதிபல சொல்லிப பின்புமுன
முற்றமார் வினதைதன மைந்தன் முன்னுறீஇப
பொற்றுணை யடிகளை வணங்கிப போற்றுவார். (௫௧)

தலைசிறை வாலுட லென்னத் தக்கவே
நிலைகுலா மறைகணின் மேனி லாவுவோன்
அலைகுலா யதில்வள ரமல ஞனபோ
திலையுனை யலதுவே றுளசதிற் கேய்வதே (௫௨)

உளத்தினுக் கமைவதென் றுற்றுப போற்றினோ
களத்துவெண ணிலாவணி கனக மேனியான
வளத்துநீள் கோயிலை விடுதது மாருதி
விளக்குநீள் கோயிலை மேவிப போறறினா. (௫௩)

மேவிய வுயிர்க்குயி ராய மேலவன்
ஆவியைக் காணவல் லவனென் றல்லவோ
தீவினை யறநினைச் சேவிப பார்சள்சஞ்
சீவிதந் தருள்சிரஞ் சீவி யேயெனு (௫௪)

அங்குநின் றும்புறம போந்தம் மன்னவன்
வெங்கடு வீரரோ டேக மேவினா
அங்குபண் டரிநகர்ச் சனங்கள் யாவரும்
பொங்கினர் கண்டனர் பொருமி விம்மினா (௫௫)

விழியினீ ராறெனப் பெருகி மேலெலாம்
வழிவுற வெங்கடம் வறுமை நோய்தெறீஇ
அழிவதில் லாமலே யாவி காத்தவர்க்
கெழிலிவண் ணன்செய லென்னை யெய்துமே. (௫௬)

என்றனர் பற்பல வியம்பிச் சூழ்ந்தனா
துன்றினர் வரவிவர் தொழுது பணடரிப
பொன்றிரு நகாவலம் போநது மன்னன்பா...
சென்றனர் கண்ணனை யுளத்திற் சேர்த்தியே. (௫௭)

வேறு.

இன்ன வாறிவ ரேகுமுன் னேதயை
துன்னு பண்டரி நாதன்று ணுக்கெனப
பன்னு பண்டிதர் பற்றறச் செய்திடா
தின்னு நானிங் கிருக்க வமையுமோ. (௫௮)

மோன மாயிவ ணெய்திடின் முன்னையோா
ஆன வன்பர்கள் பாலனன் யாதுமில்
தீன ரக்ஷக னென்பெயர் சேருமோ
ஈன மெய்திடு மப்பெயர்க் கென்றரோ. (௫௯)

அம்ப ரம்பழு தாகித்த லேயறக்
ம்ப லச்சுயி ருக்க முழத்தினில்
மபு கோவண நாலம விணமாய்
வெம்பு மோசம கையில்வி ளங்குற. (சய)

அழ களிற்செருப பாரயாப பண்டிதர்
டிது கிட்டிநி சபுத்திரா தந்துதாம்
படிகொள் பத்திர முங்கையிற் பாங்குற
வடிவி னீலமைவ ழாமெலெ முநதனை. (சக)

வெட்டி டானென வேடங்கொ டையுதுவே ற்
கிட்டி நின்றுகி ளாகம லாசனி
முட்டி லாவருண் மூர்த்தியி தென்னைநீ
பிட்டு நாணம்வி ளங்குகின் றுயென்றாள் (சஉ)

தெய்வ தேவன்றி ருமக டன்னைநீ
வ தொன்றறி யாயுன தன்பினைக்
காவ லன்றிருக் கண்டனை செய்வதற்
கேவ லாளரை யழைத்தன ரேகுவார். (சங)

மே தூரிலுள் ளார்நவி லைவுத்தெ ய
மைமை யோராக்குறு ஞ்குமெதெ றுபபாகு
ம்மை யாபறு நாணமெ னக்கிலை
சம்மை நமவயிற் சாத்தினா சாபிலே (சச)

என்று சேர்பொரு ளெய்திய சாளிகை
ன்று தனறலை மீதுற நண்ணவே
சென்று பேதரி மாநகர்ச் செம்மறன்
முன்றி லெய்தி வரவுமொ ழிந்தனன். (சரு)

வாயில சாப்பவர் செல்லவம் மன்னவன்
மேய வன்றனை மேவுக வெனனலும்
போய ழைக்கபபு குந்துமுன் னேசலாம்
ஏய வேசெய்து நிற்கவென் னென்றனன. (சசா)

பண்டி தர்தரு பதுதிர மேயிது
கொண்டு வந்தது கோனுன்பொ ருள்களை
கண்டு கொள்கெனக் காவலன் கண்ணெனு
அண்டவோ ரிளெ முழுதும றிந்தனன். (ருஎ)

மேய நின்பெயா யாதென வெவ்வராப்
பாய லன்விடோ பாநாக னென்றனன்
ஆய பத்திரத் தாகிய தென்னெனில்
ஏய பஞ்சம தில்விலை யேறவே. (சஅ)

தானி யங்களெ லாம்விலைக் குத்தந்து
மேனி றைந்தவி ராகனெல் லாம்பையு
ளேநி ரம்பவ டக்கியென் வெட்டியான்
பானி னக்கனுப் பப்பட்ட தாதலால். (சகூ)

முழுதுங் கொண்டர சிமு றைப்படி
யெழுதி யுய்க்கவெ னக்கென்றி ருப்பதைப்
பழுதில் மன்னவ னோர்ந்துப டர்பொருட்
குழுவ னைத்துந்த ருகெனக் கூறினான். (௫௰)

வெட்டி யான்விரை வாகப்பொ ருட்பையைக்
கொட்டி யெண்ணிக்கொ ளுமென வைச்சலுங்
கிட்டி நின்றவ னெண்ணிக்கி டைப்பது
முட்டி லாதுகொண் டாரர சன்முனே (௫௧)

லக்கத் தைம்பத்து நாலாயி ரமெனத்
தொக்க தானவி ராகனெ லாந்தொகத்
தக்க தோவொரு பையெனத் தானெணார்
மைக்க ரும்புயல் போல்பவன் மாயையால். (௫௨)

எண்ணி யெண்ணிக்கை யேசலிப் பெய்திட
நண்ணு றும்பொருள் யாவைய நலகின
ஒண்ணி றப்பையைப் பொக்கிஷத் துய்ப்பென
அண்ண லாணையி னுலமை யாளர்கள் (௫௩)

கன்ன டன்கீழக்க ணக்கனை நோக்கி
சொன்ம திப்பினிற றுதனை யேவினான்
நன்ன யத்துநீ நலகுவ தோகிலேன்
என்ன நன்மையெ யூகிய பின்னரும். (௫௪)

செல்ல வேண்டிய தாதைகள்செல் லாயின
புல்லு கென்று சித்தமபொ ருந்தவே
ஒல்லை திட்டினன் றந்துபல் லக்குடன்
பல்வ ளங்களுந் தந்தனன் பார்த்திபன். (௫௫)

வெட்டி யானுக்கும் வேண்டுவ தந்துந்
கிட்டு மங்கள வேடமெ னக்கினா
மட்டி லீசனன் றென்று மகிழவுடன்
விட்ட பண்டிதா வாழ்மனை மேவினார். (௫௬)

மன்னன் றந்தவ ரிசையெ லாமனை
துன்ன வுய்த்தர சீதுந்தெ ழுதத்தகும்
பொன்னெ னத்தகு பொற்பினர் தம்வயின்
நன்ன ரங்கையி னல்கின னேகினான். (௫௭)

பண்ட ரிநின்று வந்தவப் பண்டிதர்
அண்டு வீரரோ டண்மினர் பேதரி
மண்ட வேந்தன றிந்தெதிர்வந்தனன்
கண்டு வன்புக னிந்துத ழுவினான். (௫௮)

நீரி னுப்பதி ரம்புபொ ருள்கொடு
சார வந்துத னந்தரு வெட்டியான்
தேடொ திர்ந்தில னேவுமை நேர்ந்தியான்
தீர நல்குமர சீதுட னென்றனன். (௫௯)

என்று பண்டித ரோயெனக் கின்பொருள்
துன்ற நீயொழு தும்பத்தி ரந்தனை
நன்று காண்கென நல்கினன் பண்டிதர்
அன்ற தாலமை வானத றிந்தனர். (௬௰)

நானெழுதிய தோவிது நன்றுநன்
ஞான காரிய மையவிவ் வையகம்
போன கங்கொள்பு ராதன பொய்யிலார்
ஞான நாயக வென்றுந வின்றனர். (௬௧)

பொன்னின் மாமகு டம்புனை யுந்தலை
தன்னி லேபழங் கந்தைத ரித்தனை
மின்னு செம்மணி மாலைமி ளிர்கனம்
பன்னு கம்பளப் பாசந்த ரித்தனை (௬௨)

சங்கு சக்கரந் தாங்கிவி ளங்கிய
செங்கை யிற்றடி சேர்த்தினை தேசிக
பைங்க லிங்கமு டுத்தனை பற்றினை
மங்க ழுக்கும லிகோவ ணத்தையே (௬௩)

தேவா தாழுந் திருவடி யாகிய
பூவி லேசரு மச்செருப புபபுக
மேவி னுய்வினை யென்பொருட் டிற்றகாப
பாவ மேவிய வாரதைப கர்ந்தனை. (௬௪)

நிலையில் காமநி ரம்படி யேயொரு
தலைக டுக்கத்த ணப்பைசு மந்தனை
அலைகு லாவிய வாழியின் மேலோரால
இலையி லேதுயி லேய்புரு டோத்தமா. (௬௫)

பற்ப நாபப சுந்துள வம்புனை
பொற்ப பதத்தை யென்றும்பு ரபபவ
நிற்ப தாகிநி லாவியொர் பண்டரிக்
கற்பகக் கனி யேசுவைக் கற்கண்டே (௬௬)

எனப்பி தற்றின ரேங்கினர் கண்கணீர்
துனக்கு ரற்கம்ம நின்றுது ழாய்முகில்
வனப்பி னிற்கருத் துற்றும யங்கினார்
நினைப்பி னைக்கண்டு கொண்டநி ருபனே. (௬௭)

ஆதி யாவரு மாச்ச ரியங்கொடு
சாத ரூபந்த னைக்கொடு வந்தவன்
மாத வன்மது சூதன னேயெனத்
தீதி லாதுதெ ரிந்தில முன்னையே. (௬௮)

சாற்று மத்தொகை யாவுமொர் சாளிகை
ஏற்ற தோதலை தானவை யேற்குமோ
தேற்ற மேதெனத் தேர்கிலம் பண்டிதர்
ஆற்ற லானத வத்திங்ங னுயதே. (௬௯)

என்று தேறியி றைஞ்சிப்பு கழ்ந்திட
நின்ற பண்டித ரோவெண்ணி மித்தமாய்
மன்ற லந்துள வோன்வ ரலாயதால்
நன்ற தன்றித்தொ ழிலென நாடினூர். (எ)

வேந்த னேயெனக் காகவி திதொழில்
ஆந்த கைத்ததன் ருதலி னீவிடை
போந்த வெற்கரு ளென்றுபு கன்றிட
எந்தல் கேட்டங்கி யமபுகின ருனரோ. (எக)

கேளும் பணடித ரோகிள ரும்மல
ராளி ருதனும் மாளென வந்தனன
நீளு ஞானத்தி னிர்கிம லன்றனைக்
கோளுங் கண்களிற் காணக்கொ டுத்திடே (எ2)

ஆத லாலுமைப் போல்பவ ராருளா
தித லாதெந்தி றத்திடை நீருறல
காத லேதொழில கைக்கொண்டி ருமென
மேத கச்சொல்வி னுன்மிக வேணடினை (எங)

வேண்டல் பண்டிதர் வேண்டில ராகியப
பாண்டு ரங்கன் பதிக்கினி தெய்தினா
ஆண்ட மாலைக்கண் டார்வமிக கன்பினிற்
பூண்டு தாள்களைப் போற்றிபபு கலுவார. (எ)

தேவ தேவதி ருமக ளையச
பாவி யென்பொருட் டாகவோர் பார்க்கிடை
மேவ வைக்கண டைந்துன்வி ளங்குறு
சேவை தந்தனை சேவித்தி லேனெனு. (எரு)

கண்க ணீருகப் பாதங்க ழுவினர்
மண்கொள் வாமன நின்னைம றக்கிலா
தெண்கொ ளும்மெனக் கேனெதிர் தோன்றிடா
தண்கொண் மேகவு ருக்கொடு தானெனு. (எ

உற்ற பண்டித ருண்மைதெ ரிந்தவக்
கொற்ற வன்பண்ட ரிவந்து சோதினும
பற்ற தாகப்ப ரமனைக் கண்களால்
மற்றுங் கண்டுமே கிழவ ருள்கெனு (எஎ)

வேண்டல் செய்யவி ளக்கஞ்சு டர்மிகத்
தூண்டல் செய்தெனத் தோமறு பண்டிதர்க
காண்ட மாலின்ன ருளுருக் கோனெனக்
காண்டல் வேண்டுங் கருத்துவ ளர்ந்ததே. (எஅ)

காதல் விஞ்சின ராகிக்க மலக்கண்
மாத வன்றனை வாழ்த்தினர் பன்முறை
ஸ்ரீத ரன்முனர்ச் சென்றவு ருவுடன்
போதல் செய்தனன் மன்னனும் போற்றவே. (எகூ)

கண்டு பண்டி தர் கண்ணனி னதருள்
மண்டு கின்றதிவ் வண்ணம தோவெனப்
பண்டரீகப பதங்களைப போற்றலும்
தொண்டர் தம்மைத்த மீஇத்தொழப போயினான். (௮௰)

போன பின்பா சன்புகழ்த் தொண்டரை
ஞான தேசிக ராகந யந்தவர்
பான லம்பெறு பண்பில ரைச்செலத்
தேன லம்புசெ ழுந்துள வோன்றொண்டர் (௮௧)

குடும்ப மும்வரக் கொண்டா சாலவரும்
இடும்பை யேதுமி லாதருள செய்தவன்
நெடும்பொற் பாத நினைவு விடார் விண்ணைத்
தொடும்பொற் கோபுரப பண்டரி துன்னினார் (௮௨)

இனைய ராகிய பண்டி தர் சீரெலாம்
துன்னு பண்டரி யோர்தெரிந் தேதுதி
பன்ன நாம பஜனைசெய் துற்றனர்
மன்னி ராவும் பகலும்வ ழாமலே. (௮௨)

ஆக சரித்திரம ௩௩க்கு செய்யுள் ௲௮௱௪௰௯.

தாமாஜிபண்டிதா திருவடிகளே சரணம்.

முற்றிற்று.

மிருத்யுஞ்சயபக்தர்சரித்திரம்

சாந்தப மணியென நாமஞ் சாற்றுற
வாய்ந்தவன் பேதரி நகர்க்கு மன்னனாய்
நோந்துள வவிந்தனந் நகரி னீள்பகல்
சேர்ந்தர சாண்டுவாழ் தினத்தி லோர்தினம். (௧)

தன்மனை யாளொடு தனது மாளிகை
மன்னுமே லுபரிகை வதிந்து மான்மதம்
துன்னுசந் தனகந்த புட்ப முந்தொக
நன்னயச் சுகசல்லா பத்தி னண்ணினான். (௨)

மனையவ ளொடுமுதிர் வாழைத் தீங்கனி
தனையுரித் தினியசர்க் கரைக்கு ளேயதை
நனிமிகத் தோய்த்துண்டு நண்ணுந் தோல்களை
இனிதெதிர் சாளரத் தேயெ றிந்தனன். (௩)

எறிவதிற் கீழ்விழுந் தோலெ லாமொரு
வறியவன் கண்டெடுதி ரொடுத்து வாய்பபெய்து
நறியதென் றுண்பதை நன்கு கண்டனள்
வெறிகம ழலங்கலுழ் வேந்தன் றேவியே. (௪)

கண்டதைக் காவலன் றனக்குக் காட்டலும
மண்டல வேந்தனிவ் வறிய னெபபடி
அண்டினன் காவல்சே ரகத்து ளேயெனக
கொணடகோ பத்தொடு கூவி ஞனரோ. (௫)

காவலர் தமைவரக் கண்டிக் கள்வனிங
கேவர விடுத்தவர் யாரொன் றெற்றிஞன
ஆவயின் வறியனை யவர்கள் கைக்கொடு
நோவகை சாடினா ரொருக்க மற்றவன். (௬)

அடிகளைப் பொறுத்தன னகைக்க லாயதை
முடிகொள்கோன் கண்டனன் வியந்து முனனுறத
தடிகிற வீரரைத் தடுத்துத னினனைக்
கடிதுதன் முன்வரக கணடு கூறுவான (௭)

இவ்விடை வருமுனைப பிடித்தென் னேவலா
நைவகை செய்திட நலிவு ழுதுநி
எவ்வகை சிரித்தனை யியம்பு கென்னலும
அவ்வர சன்றனக் கறியக் கூறுவான (௮)

உரித்தெறி தோற்சுவை யுணவி னேயது
மரித்திடத் தக்கதோர் வருத்த முட்சுவை
தெரித்தினி திருக்குநீ சோவ தேதெனச
சிரித்தனெ னெனப்பினுஞ் செபபு கினறனன. (௯)

நின்மனைப புறம்புநா னேர வின்னது
துன்னிய துள்ளுறு முனக்கென் சூழுமோ
என்னலும் விரக்திமிக் கெய்தி யோதலுன்
பொன்மனை விடுத்தனன் புறம்பு போநதனன. (௰)

வேறு.

அனைசோடு மனைவிமக்க ளானவெலாம வெறுததுவன மணுகி யோபாபட
தனைசார விருந்துதெய்வந் தனைபபஜிபப தெவவாறு ஜனனந தீாநது
கனைசேர்வ தெவ்வாறு கருத்தறியா வெனகருவழி காட்டு மாசான்
உனைசார்வ தெவ்வாறென் றெணணியங்கே சிலகால முழலுங் காலை. (௰௧)

பண்டரியி லாடியெகா தசித்தினததி லரிசேவை பணணற் காகத
தொண்டர்சில ரவ்வனத்தின் வழியாக மிருதங்கந் தொனிககத தாளம
மண்டுறையாழ் வீணைபல வாசிக்க ஹரிநாமம் வழுததி யேத்திக்
கொண்டொருவர்க் கொருவர்தழீஇ வணங்கியன்பு பெரிதுறக குழுமி வநதாா

கருடனெடுங் கொடியோடு போதுவதைக் காவலன்முன் கணடு சாாவோா
அருகில்வந்துமுன்வீழ்ந்து பணிந்தெழுந்து சாதுசங்கத் தன்பு கூாந்து
மருவுமின்றுசுதினமிந்த வகைவருவார் தமைக்காண வாய்த்த தாலென
ஒருங்குமனத் தொடுகூடி யவர்சேரும் பண்டரியூர்க் குவந்து வந்தான். (௰௨)

வந்துநிலாப் பாகைதனிற் றோய்ந்துபுண்ட லிகர்தமையும் வணங்கிப் போற்றி
உந்தநெடுங் கெத்திரத்தை வலம்வந்து கோபால னமருங் கோயில்
முந்துநின்று சாதுஜனஞ் செயுநாம கீர்த்தனத்தை முயன்று கேட்டுப்
பந்தமற வோராதமையும் பணிந்துவரு மானந்தம் படிந்து சொல்வான். (மச)

பலதீர்த்தம பலதெய்வங் களைக்கண்டேன் கேட்டேனிப பாரி லிந்த
நலமெகொளும்பண் டரிபோலெங் கணு மில்லை நிலாத்துண்ட னோர்ந்து சூழ்கின்
மலையமப் மானம்விட்டு மகிழ்வினெரு வருக்கொருவர் வணங்கச் செய்யும்
நிலைவறுதற் புத்தியுள்ளோ ரையினும்பண் டரிசேரி னுசித ரைக்கும். (மரு)

இவ்விதநன் மைமையச்சேர்ந்த தீர்த்ததல மகிமையையா ரிசைக்க லாகும்
செவ்விதெனப் புளகரும்பிக் கருடதம்பத் தருகில்வந்து சென்னி தாழ்த்தான்
அவ்வயிற்கூ ம யசாதுக் களைவணங்கித் தழுவியபின் பழகார்ந் துள்ளே
நவ்விய பழத்துடனே செங்கலின்மே னிலவுசெழுஞ் சோதி தன்னை. (மசு)

கனகனிகூ ர்ந் துறநோக்கித் தழுவியிரு தாட்கமலங் களிற்கீழ் வீழ்ந்து
பன்கொளும்வா மனபகித பாவனவுத தமபுருட வரகோ பால
பணகொள்சுவை யாமிருடி கேசபாந தாமபாண் டுரங்க பார்க்கத்
தணகொளரு ளுருவவுன திசைகேட்டு வந்துபைம்பொற் சரணந் தாழ்ந்தேன்.

சகரக்கை யாவுனது வடிவென்மனந் தனில்விளங்கித் தழைக்கச் செய்வோர்
பக்கல்கிடை யாதுழல்கின் றேனுணர்த்தும் போதகரைப் பார்பப தாகித்
தககபடி யெனதுமஞே ரதங்கூட நீயேதண் ணருள்செய் தாள்வாய்
மிக்கதிது செயுமளவும் விடேன்கோயில் வாயிலென வேண்டி வீழ்ந்தான். ( )

வீழ்ந்துஜல பானமுதல் வேண்டாதங் கேகிடக்க விரும்பி யேதத்
தாழ்ந்தபொரு ளாம்விமலன் மூன்றுநா ளிரவிலவன் கனவில் வந்து
சூழ்ந்தகலி யாணபுரத் துறைசகஜா னந்தசுவா மிகள்பாற் சென்று
வாழ்ந்திடநல் லுபதேசம் பெறுகெனவி வேகசிந்து வழங்கிப் போனான். (மக)

போனவுடன் கண்விழித்து வேந்தனரு கேயுறுபுத் தகத்தை நொக்கி
ஞானவிவே கசிந்திதுவோ வெனவியந்து பாண்டுரங்க நாத ரைன
தீனதயா ளன்கருணை யாலென்னைப் பாலனஞ்செய் தானென் றெண்ணித்
தானதையே காந்ததலந் தனிலிருந்து படித்துமன னஞ்செய் காலை (உம)

கனவுதனை நினைந்துகலி யாணபுர மேகலந்து கமலக் கண்ணன்
அனகவடி களைவணங்கி விடைகொண்டு குருவிடஞ்சேர்ந் தவரைத் தேடப
புனிதரிலா திருந்ததினாற் பண்டரிக்கு மீண்டுவந்து பொருந்து நாளில்
இனியகுரு கார்த்திகையே காதசியிற் பண்டரிவந் தெய்தி னாரோ. (உக)

எய்தியதே சிகாதமைக்கண டுறுகனவி னியலோத வினிது கேட்டுப்
பொய்தவிருங் குருமகிழ்ந்து வேந்தனுக்கங் குபதேசம் பொருந்த நல்கி
மெய்தரும்பே ரதுமிருத்தி யுஞ் சயனொன் றேவிளங்க விளம்பப் பெற்றோர்
மைதவிர்நா ரணபுரத்தை யணுகியங்கே கேட்டதனை மனனஞ் செய்து. (உஉ)

தெளிந்துசா க்ஷாத்காரஞ் சேர்ந்துவிஞ்ஞா னத்திதியிற் றிகழு நாளில்
மிளிர்ந்தவவ்வூ ரினிலொருநாங் கமர்டவரா யனொனகலம் விளங்கு பேரார்
ஒளிர்ந்தமிருத தியுஞ்சயனைக் கண்டிசர ணடைந்துபதே சத்தை யுற்றோர்
குளிர்ந்துறுநாட் சங்கமரிற் பிரோட்டனொரு சமூச்சியெனுநாமங் கொண்டோன்

தன்சாதி யானபவ ராயனெரு துலுக்கனுப தேசஞ் சார்ந்தான்
என்சாலுஞ் செருப்புபுதி தென்றாலுந் தலையினமிசை யேற்ற லாமோ
கொன்சாலு மிவனடக்கை கூடாதென் றிகழ்வதனைக் குறித்தது த நீதத
ரின்சார்பு வந்து சொல்லச் சீடனுளந் திடமாக வியம்பு கின்றான். (உ௮)

மதபேதி சொல்வதனை மனத்தெண்ணு தென்வார்த்தை வழியே நின்று
நிதம்ராம பஜனைசெய்தி யெனவுறுதி நிலைகூறி நியதி செய்தா
சிதமான பூதியணி ஜங்கமரா ஜன்போர்கா சிபதி யென்போன்
சதநூறு ஜங்கமரைக் கூடவைத்துத் தானுண்பான் சால நாளும். (உ௯)

வேறு

ஒருதி னத்தி லெல் லோரு மூண்பதாய்
மருவு பந்தியி லசனம் வணசறி
பெருக வேபரி மாற லானபின்
நிருப னன்னவர்க் குரைநி கழததுவாம். (௧)

நீவிர் யாவரு நினையுந் தேவுக்குத
தாவில் பூசனை சமையு மென்னலும்
ஓவி றேவனுக் குடன ருத்துவான்
மேவு தங்களம் விரவு பூட்டையே. (௨)

திறந்து நோக்கினர் தேவைக் கண்டிலர்
இறந்த தெங்ஙனே யெனம யங்கினா
மறந்த பூணூல் வழுவ வீழ்த்தியோர்
சிறந்த வேதியன் றேடு மாறுபோல் (௩)

மயங்கி நாணுடன் வருநதி யாவரும்
தயங்கி லிங்கமில் லாத தன்மையால்
தியங்கி யாம்பிராய்ச் சித்தஞ் செய்வதாய
முயங்க லாயதே முழுது மின்றெனு. (௪)

அனைவ ருந்திகைத் தமுது செய்திடா
ரினைதல் கண்டுகோ னென்னை யென்னயாம
புனையி லிங்கமெங் ககன்று போயதோ
நினைகி லோம்வகை யெனநி கழ்த்தினா. (௫)

அதுவி னுயகா சிபதி யையமீர்
இதுவி ராவுதற் கேதி யாவதே
சதுரர் தூஷணை தனில்வி ராயதீ
தெதுத னுலுமன் றெனநி கழத்தினன். (௬)

துலுக்கன் பாற்பவ ராயன் றுன்னினன்
கலக்க னன்றதன் றெனக்க ருத்துளே
குலுக்க நீள்வசை கூறி னேன்முனித
தலக்க ணென்னவே சமுச்சி கூறினன். (௭)

அவ்வி தத்தினி ரறைந்து ளீரெனில்
செவ்வி பெற்றவத் தேசி கோத்தமர்
இவ்வி டத்திலுற் றுரைத்துக் காண்மெனத்
தெவ்வி னைத்தெறும் வேந்தன் செப்பினன். (௮)

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

பானுதாசர் சரித்திரம்

பகரும் பைடண புரத்துளோர் சூரிய பூசை
இகபு வேசெயும் வேதியா திலகர்சூஞ் ஞானர்
இகழுவி லன்னவர்க் கொருவர்சே யெனப்பிறந் தெயர்க்குர
தகவு மாதர வளர்ந்தனர் தாய்மகிழ் தழைக்க (௧)

வளர்ந்து கல்வியிற் பயின்றபின் வேதமும் வாய்ப்பத்
தெளிந்து தந்தையே கூறுநா ளொருதினஞ் சேய்மேற்
கிளர்ந்த தாயது சினங்கல்வி கிளத்துறுந் திறத்தில்
தளர்ந்து மற்றதிற் சிறுவரா னவர்புறஞ் சார்ந்தார் (௨)

எங்குச் சென்றொளிப் போமெனப் பயத்துட னேகித்
தங்கு மூர்க்கரு கேயொரு கானிடைச் சார்ந்தார்
அங்கு மணணிடைப் புதைந்துள வலரிநா ரணன்றன்
பொங்கு கோயிலைக் கண்டத னுள்ளிடைப் புகுந்தார். (௩)

புகுந்து மூர்த்தியைத் தொழுதன ருள்ளன்பு பொலிய
உகந்து சூரிய நாரணன் றோன்றியு னன்பு
தகுந்த தென்றுகொண் டாடின னபயமுந் தந்து
முகுந்த னைத்தியா னித்துநீ முயல்கென மொழிந்தான் (௪)

பாலை வட்டிலிற் கொணர்ந்தந்தப் பால்கற் கருத்திக்
கோல மைந்தனே யுனக்கிடை யூறுகள் குறுகில்
ஏலு மற்றதை யான்வந்து நீக்குவே னென்று
சால வோதினன் மறைந்தனன் பின்னரத் தனையர் (௫)

தாயுந் தந்தையு மூரிடைத் தேடினர் தளர்ந்தே
ஏயுந் துன்பத்தோ டேறுநாள் வரையுங்கா ணாமல்
ஓயு நாளந்தப் புதல்வரக் கோயிலு ணின்று
மேயி னாவெளி வரவொரு வேதியன் கண்டான். (௬)

கண்ட வேதியன் புதல்வரைக் கூப்பிடக் கடுகிச்
சண்டன் கோயிலுட் புகுந்தனர் மறையவன் சார்ந்து
விண்ட தாய்தந்தைக் குரைத்தனன் விரைந்துசில் லோரோ
டண்டி னாரந்த விருண்மிகு கோயிலி னருகே. (௭)

இருள கன்றிடத் தீவர்த்தி கொண்டகத் தேகி
மருவி னோர்களெல் லோரும்போய்ப் பார்த்திட மைந்தர்
பரிதி நாரணன் றாளிடைத் தலைவைத்துப் படுத்து
வெருவ லின்றிநித் திரைசெயக் கண்டனர் வியந்தார். (௮)

அனையுந் தந்தையும் புதல் [illegible] த்துமார் பணைத்துத்
தனைய நீயிங்குத் தனிவ [illegible] ற் றங்க
எனைய தெய்திய தெழு [illegible] றி யிருந்தாய்
உனையிங் கேவர்போற் [illegible] ட்டன ருவந்து (௯)

இனமு மிங்கொரு தெய்வவே தியன்வந்து நீம்பால்
மனமு வந்துதந் தேகுகின் ருனதை மாந்திக்
கனமி கும்பசி யின்றியுய்ந் தனனெனக் கழற
ஜனக ராதியோ ரதிசயித் துன்னினர் தாமே (௱)

மைந்த னன்மையைக் கண்டிந்தப் பானுவே மகிழ்ந்து
தந்த னன்பரு கற்குப்பா லென்றுநிச் சயித்து
வந்த நன்மையாற் பானுதா செனப்பெயர் வகுத்தார்
அந்த மைந்தனை யழைத்துக்கொண் டகம்வந்து சேர்ந்தார். (௱௧)

சேர்ந்த தாய்தந்தை தினகர னேயிந்தச் சேயை
ஈந்த னனென்று பானுவை யேத்தின ரிருக்க
வாய்ந்த தந்தையிம் மைந்தர்க்கு வேதநூல் வகுக்கில்
ஆய்ந்தி டாதுமுன் போற்செயிற் செய்வதே தாமே. (௱௨)

விதியி னுவதே யாமெனப் பெண்விசா ரித்து
வதுவை செய்துவைத் தனர்பின்பம் மைந்தாபொன் மனாளன்
துதியில் விஞ்சின ராயுறத் தந்தைதாய் துளவோன்
பதிய டைந்தன ரிவனொரு தொழிலிலும் பயிலார். (௱௩)

மிடியி னுற்றுகி லனமில ராகியும் விமலன்
அடிம றந்திலர் பஜனைசெய் திருந்தன ராக
நெடித நிந்தபந் துக்கள்வந் தவனொடு நேர்ந்து
முடிவி லின்னலைக் குறித்திது செய்கென மொழிவார். (௱௪)

உமது தந்தைதாய் குடும்பர க்ஷணைமுன்செய் துற்றார்
அமைய நீரது செய்கிலீ ராயரி பஜனை
சமைதி ரோற்குடும் பச்சுமை தாங்குவார் யாவர்
எமதுரைப்படி கேண்மென விசைவுற வியம்பி. (௱௫)

ஈதவி ராகன்யாந் தருதுமற் றதுகொண்டு தானே
யீதவி தங்களாய்க் கொண்டுவிற் றதில்வரு விபவம்
ஈதமு மூண்பதற் காகநீர் கொள்கென நேர்ந்தார்
அதனை வேண்டுபோ நீகெனப் பின்னரு மறைந்தார். (௱௬)

தங்க ளாவணத் தருகுறக் கடைவைக்கச் சமைத்து
மங்க ளம்பெறு பானுதா சருக்குடை மாறும்
இங்க வில்லதோர் பாஷையைக் கற்பித்துச் சீலக்
கங்கு விற்பதோர் விலைகளின் வகையறி வித்து. (௱௭)

வாணி பஞ்செய்து வருவதின் மெய்சொலின் வாராப்
பேணு மூதியம் பொய்சொலின் வரும்பெரி தென்னத்
தாணு வாய்முதற் றருமவர் தங்களை நோக்கிக்
கோணி லார்தலை போகினும் பொய்சொலக் குறியேன். (௱௮)

மெய்யி னல்வரு மூதிய மிகச்சிறி தேனும்
உய்வதற்கது போதுமென் றுரைத்தன ருற்றோர்
கையெ னச்சிரித் திவன்பிச்சை யேற்பதே சமைவான்
[illegible]ஞ்சொலைக் கேட்குறு னிவனுக்கென் வருத்தல். (௱௯)

என்று சொல்லும்போ தொருவன்வா ணிபத்திற மிவன்றான்
நன்ற றிந்திடி னமையப்பா குவனென நவிலத்
துன்றி னேயொலாஞ் சரியென்று தொழில்செய வைத்தார்
அன்று தொட்டிவா ணிபஞ் செய்திட வமைந்தார். (௨௰)

ஆங்கு வேறவரி வின்னதே கிரயமற் றதற்குப
பாங்க தாகிய லாபமின் னாதுசரிப பட்டால்
ஏர்கு லாதுகொள் ளுங்களென் றேலயல் சேர
நீங்கு வீரென்று ராமநா மஞ்சொலி நிறைவார். (௨௧)

போன்று வோரிவர் பொய்சொலா ரெனநனி குறித்து
வின்று மவ்விலை தந்துமே னாவாங்கு வினவி
என்னி லூருளோர் யாவருங் கொள்வதா யின்றுர
உள்ள வாறிவர் வாணிபத் தேசு பொங்க. (௨௨)

மாடு றுங்கடை களிற்செய் வாணிப மின்றி
ஓடு வாரழுக் காறுகொள் ளுளதுசொல வாமேல
நாடு றும்மிவன் றனைநம்பல் போனமை நம்பார
நீடு நாண்முன்பு பொய்சொலல லாலென நினைவார். (௨௩)

வேங்கை சாந்தத்தை மேவினுங் கொல்வதற் கென்பார
ஓங்கு லோபியு தாசின முறிற்பொருட் கென்பார
வீங்கு சாரன்யாத் திரைசெய மெவ்வா றயின்
ஆங்கு மேபர தாரத்தை யடைவதற் கென்பார. (௨௪)

என்ன வாயதா லிவனில்வந் தெய்திய *இன்னல்
நன்ன ரிங்கிவன் றனக்குப காரஞ்செய் நமக்கு
மன்ன லாயது பெருங்கடன் செய்வதென் மாற்ற
இன்ன காலையி லென்றெரா கொயில்போ யிருந்தார். (௨௫)

பானு தாசரோ கடை வைத்துப பகாந்தன ரிருக்கல்
ஆன காலையி லந்தவூர்க் கூடு கரி தாசர்
ஞான நாமசங் கீர்த்தன நடத்துகின் றுதொன்
றேந வின்றிடக் கேட்டனர் போவதற் கிசைந்தார். (௨௬)

கோயில் கூடிய கூட்டத்துள் ளாரகளைக் குறித்து
மேய வின்றெகா தசியரி கீர்த்தனம் வினவப்
போயிங் கியான்வரு மளவுமென் கடைதனைப் போற்றி
நீயி ரோதரல் வேண்டுமென் றிரந்தனர் நேர்ந்து. (௨௭)

உனக்கு யாங்கடை வைத்துத வினமதை யலது
கனத்த வுன்கடை காக்கவு மாள்களோ யாங்கள்
மனக்கு வந்தது சொல்லிநீ போதரின் மடிகள்
இனத்தை யாங்கள்காத் துறுவதில் லெனமறுத் திசைத்தார். (௨௮)

மடிகள் போதரில் யாங்கள்பாத் தியப்பட மாட்டோம்
திடம தாயென வயற்கடைக் காரர்கள் செப்பப்
படங்கள் போயிலெ னிருக்கிலெ னென்றுபாண் டுரங்கன்
மடண்ம லர்ப்பத நினைத்தனர் வழுத்தினர் போனார். (௨௯)

௩௧

போன பானுதா சங்கரி கதைகளைப புகல
ஞான மிக்கனர் கேட்டனர் நயந்தினி திருக்கல
ஆனகாலையி லயற்கடைக் காரர்க ளவர்தம்
பான லந்தருங் குதிரையின் றளையறப பண்ணி. (௯௰)

ஓட்டி விட்டுள புடவைக ளனைத்துமோர் மடுவின
மாட்ட மிழ்த்தினர் மருந்தின்றிப பிணியகல வகையில
வாட்ட மிக்குள நமக்கிந்தச் சமயமவாய்த த தென்று
வழுவி நாவிகொள் சுக்கெனக்கொடுவந்து வேண்டுவ நல்கினன்
தழுவுசர்க்கரை யோடுசீடனை நோக்கி மற்றிது சாற்றுவான். (௪)

இன்றுசந்தை யிணங்குமவ் வயினேகி யுற்றன னென்மகன்
துன்று கின்றில னுதலா லரிகீர்த்தனம் புகல் சூழல்வாய்
ஒன்று கின்றிலெ னியிர் யாணினி யுதவு சுக்குகளுங் கொடு
சென்று வந்தவருக்கெலா முண நல்கெனச் சிலதந்தனன். (௫)

நீர்கொள் சுக்கவ ணேருவோர்பெற நல்குதற்கு நிரம்புறு
தார நான்றரு சுக்கையுங் கொடுசெல்லு மென்றவ னல்கலும்
தேர்கிலார்தரு நாவியைப்பெறுசுக்கெனக் கொடு சேர்ந்தனர்
மாரனூர்மகிழ் தாதையாகிய வாசுதேவ னறிந்தனன். (௬)

இன்று நேர்பிர சாதமுண்பவர் யாவரும் மரணங் கொள்வார்
நின்று சாவுறி லரிபெரும்புகழ்வினவலாலிவர் செத்தனர்
என்று நம்வயி னெய்துறும் பழியன்றி யும்மிது மூலமாய்
ஒன்று கின்றிலர் கீர்த்தனங் கொலைசெய்வ தென்றுல கத்துளோர். (௭)

கீர்த்தனம் புகல்சாது சற்சனர் தம்மையும் புகழ்கிற்கிலார்
ஓர்த்த நந்திரு நாமமானது தாரகம் மெனலும் பொயாம்
சேர்த்த தன்றிது வென்று நாவி செறிந்த சத்திணையுண்டனன்
நேர்ந்த கேசவ சாமிராத்திரி நாலு ஜாம நிரம்பவே. (௮)

வீணைதாள மிர்தங்கநாதம் விளங்குறப் புகல் கீர்த்தனம்
கோணையின்றி நடத்தியா ரதிகொண்டல் வண்ணனு வப்புற
ஆணையின்படி செய்து பாகவதர்க் கருட்பிரசாதமும்
காணையம்பெற நல்கினு ரவர்நன் கருந்தி நடந்தனர் (௯)

புலரி காரவெழுந்து செட்டியு நாவியையப் போதிவுற்றமை
குலவு முன்னவிழ் வுற்றிருந் ததுகண்டு நெஞ்சு குழங்கி[illegible]
அலகில் மாதவர் சுக்கெனக்கொள லகினே னிதையல மேவா
நலவு மொத்தனேபோ மடிந்தனரோ வருந்தி நலிந்தரோ (௱)

அன்ன வாறவர் சாவுறும் படிசெய்து பாதகனையினேனா
என்னை யிவ்வித மென்றறிந்தவர் யாவருங் கொலை சூழ்[illegible]
இன்னலாகி யிறந்தபின்னரும் ரௌரவாதியை யெய்துமா
துன்னுமோசம் விளைந்ததே மிகநனறி தென்று துளங்கி[illegible] (௱௧)

இகபரத்திவை யெய்தினே னெனவனு தபித்தினி [illegible]
உகவி யற்றுதல் செய்யவேண்டிய தென்றுனிக் கடை [illegible]
அகநிரப்புள வீதிவாய் வரலான போதில வூரிலே
தகவ ரற்றுறு குரலிலாமைதனைத் தெரிந்தக முன்னுவ[illegible] (௱௨)

அந்த ராத்திரியிற் கதைக்குறலான போதமி லொருவ[illegible]
எந்த நற்பிரசாத நும்வயி னிந்துளானென லும்மவா
மூந்து சுக்கொடு சாக்கனைப பிரசாத நல்கினா முற்றவும
வந்தவர்க் கவையுண டுளோமென வணிகனும் மகிழ [illegible] (௱௩)

சுடு மயான மடைந்து செத்தொருவரும் வாராமை [illegible]
டும நாவியினு விறப்பதி லாமைசெய் தவனுழிகை
தொடும விட்டலனே யெனததெளிவுற்று நெஞ்சு தழ [illegible]
நெடும் வியப்பொடு மீண்டுதன் கடைநோந்து மாலடி போற்றினன. (௱௪)

வைகறைக்க ணெழுந்து கேசவ சாமி வாசியின் மூழ்கியி[illegible]
குய்கருத்தொடு தாங்கினங்கின மொழிவிலாதுயா பூசனை
செய்கனத்தியல் விட்டலனறிரு மூாத்தியைத தெரிசி[illegible]
மெய்கறுத்து விளங்க நோக்கியிதென்னை யென்று மெல[illegible]. (௱௫)

தின்னன் யாவையினுஞ் செறிந்து விளங்குகின்ற தெ[illegible]
கண்ணனின்று கறுததுறற்கென சாரணம் மென வேகவன
றெணணன் மேவிய போது செட்டி யெழுந்து கேசவ சாமிமுன்
அண்ணன் சேவடி தாழ்ந்திராத்திரி யான செய்கையை யோதுவான. (௱௬)

தாமியற்றுறுகின்ற மெய்க்கதை கேட்க மேவுவர் தாமுன[illegible]
காமினுக்கலில்போது நும்முடை யன்பரொன கடையண [illegible]
நீமிகக்கடி திக சுக்கென நாவிதந்து நிகழ்ததொனுத
தோமி யற்றினெனன் குணர்ந்தி லெனென்று துன்பொடு சொலவி[illegible] (௱௭)

நாவிசுக்கெனவே செய்தான ளினைக்கு நாயகனன்கு செய்
யாவிடிற் கடிதாவி போவர்களுண்டயாவரு மாதலால்
பூவிலப்படியோ தெரிந்திலனுயி யற்றிய போக்கறப்
பாவி யெற்க பராத மேது பணித்தி ரென்றடி பற்றினன். (௱௮)

கேட்ட கேசவசாமி கண்களினீர் சுரந்து கிளர்ந்திட
வாட்ட முற்றழுதந்த மூர்த்தியை நோக்கி மாதவவாமனு
[illegible] தீனதயாள பக்தர்கள் வற்சலாகருணை நிதி
[illegible] பண்டரீ விட்டலாவெனை நென்னலாண்டருணின் மலா. (௱௯)

கருது நின்பிரசாத முண்டவர் தம்மையுங் கழியாத நின்
திருவை யுந்தி கழ்வித்தளித்தனை விட நுகர்ந்து கறுத்தனை
ஒருவ னின்ன பெயரோது பிள்ளையு முமைதனைப் புணரொருவனும்
தருவிடக்கனை யுண்டிறந்திலா தங்கடந்திற மாறிலா (௨௰)

தென்னவர் பெருநாவி லெவ்வழ வானை தானிற மாறுதல்
பன்றுநல லமுதுக்கு நோயது பற்றவும் பருதிக்கிருள்
தின்னலும் பனி மாமதிக் குடல்வோ தலுந் துணையாகுநின்
பொன்னடிக்குறு தாசனுக்கணி பூணநீ விளையாடினாய். (௨௧)

என்கணின்னருள் செய் துநின் னிறமாறன் மாறுத லேய்கெனப்
புன்கணுற்றிவர் வேண்டுகின்றது புந்திகொண்டு புராதனன்
தன்கணுன கறுப்பகன்றொளிர் தங்கு முன்னுரு வாயினன்
முன்கணின்றது நோக்கினோர்கள் வியந்து போற்றினர் மொழிகுவார். (௨௨)

நிகழு மிக்கலி யுகமதிற் கடவுளை வசிப்பது நேயமே
புகலின் மற்றிலை யெனநெடுங்கை புடைத் தொலித்தனர் பொங்கினோர்
தகவதைக் கணிநேர்க்கு செட்டியும னுதவித்தனர் சார்புற
திகமையற் களகன்ற கேசவ சாமிதன் கணிருந்தனன். (௨௩)

வேறு.

வைரிராமஞ் சிரமணிப்பதி
பெரிதானந்த மதெனப்பிரான்
விரிசிரின்புற விளையாசற்
குரியாருந கிடமுறுக்கினர். (௨௪)

கேசவசுவாமி திருவடிகளே சரணம்.

அகசசரித்திரம் ௭௰-க்கு செய்யுள் ௩௲௩௱௭௮

முற்றிற்று.

கோமாயியம்மாள்சரித்திரம்

சீரப்பதில் லாவடை யுந்தநல் செய்துசேர்
நார்ப்பவனத் தொறுமிரந் துண்டிட்டுப்பசி
தீர்ப்புறுந்தார் பலதினையே யொரு
பார்ப்பன விதவை கோமாயி பாயியே. (௧)

என்பதங்கி யாவரும் புகலவேற்பவர்
இன்புசெய் பண்டரி யாத்திரைக் கென
வன்பிரவாகமாய்க் கரை வழிந்து போம்
துன்பறு சந்திரபாகை துன்னினார். (௨)

நீடிய பெருக்கினைக் கண்டு நீங்தொரு
தோடமிந்நதி கடந்துறுவ தெங்ஙனின்
றூடிமாதஞ் சுத்தத சமியாயதே
நாடு மேகாதசி நாளையல்லவோ. (௬)

எனவுளத் தெண்ணினரி னைந்து பாண்டுரங்
கனையடி வணங்கிடக் கருது சிந்தையேன்
றனை யெவரக்கரை சேர்க்கத் தககவர்
முனமிரங் குதலுட னெனவு மாழ்கினர். (௭)

எதிருறு மவர்களை யோடத் தேற்றுவோன்.
கதிமுகங்கொண்டு நீயெனை யுமக்கரை
பொதிவுறச் சேர்க்கெனப் புகன்று காசிலே
துதிகொளன் றூடமீ தேறத் துன்னினா. (௮)

கண்டவ னீரிடைக் கவிழ்த்துச் சென்றனன்
மண்டு நீரிடைத்து கினைந்து மாழகினர்
அண்டிய கரையிவர்ந் தரற்ற லாயினர்
விண்டுறு பெருங்குரல் கொண்டு விம்மவே. (௯)

ஓடமுய்ப் பவரவ ருறுக ணோக்கினர்
நாடியோய் கிழவி நீகாசு நல்கினல்
ஈடுறுநதி யினக்கரையி னேறலாம்
வாடிலென்பய னெனவாய்ப் பச் சொல்லினர். (௧௦)

காசிலே கொஞ்சமாவுண்டு கைக்கொண்டு
பேசெனை யக்கரை சேர்க்கிற் பீமான
மாசறுது திபலவருக்க மற்றவர்
சீசியென்றி கழ்ந்தனர் சிறிதிரங்கிலர். (௧௧)

காசுதந்த வரையக் கரையிற் சேர்த்தனர்
மாசில்கோமாயி தாந்தனி வருந்தினர்
ஆசிலிக் கரைநின்று மக்கரைக் குற
ஏசிலே தொன்றுமிலலா திரங்கினர். (௧௨)

தேவர்தந்தேவ பாணடுரங்க தேசுடன்
நீவதி கின்ற வித்தலத்தி னேருனா
யாவருங் கடின சித்தத்த ராயினர்
ஆவயின் வருவதெப்படிக்கியா னென்றூர். (௧௩)

உன்னடி சேவிக்க வுற்றுளேன் றனக்
கென்னிடையூறு வந்தெய்தல் கூடுமோ
பொன்னியல் மார்பிறை யெனப்புலம் பூறச
தன்னிகர் தானலா தானறெரிக் தனன். (௧௪)

தோணி யய்ப்பவ னெனத்தோன்றி யமமைமீ
யாணியைக் கடந்தந்தப் பாரஞ் சேர்தியேல்
ஆணியாயுனக்கு நானமைவன் வாவெனக்
காணியே தொன்றுமில்லாதகைம்மையார். (௧௫)

என்னிடைக் கொஞ்சமா வுண்டு காசிலை
நின்னிடைத் தரக்கொடு நீந்தி யக்கரை
துன்னிடச் சேர்ப்பை யேற்றொடர்வ னின்னுடன்
பன்னிடு கென்னலும் பரமன் கூறுவான். (௰௩)

யானிவணை திக்கரை யேறவெய்து வோர்
தீனர்களா யுறிற் சேர்பபெனக் கரை
நானெதும் வேண்டலே னதியின் பாலுறு
வேனடைவோரை யக்கரைக்க ணேற்றவே. (௰௪)

யென்றலு மம்மையாமொம் பிரானருள்
நன்றென வியந்துட னயந்து தோணியோய்
இன்றிராயாம மொன்றெய் திற்றுதல் யாண்
மன்றவும் விருத்தை தர்பபலை வருந்தினேன். (௰௫)

குளிர்பொறே னொருது கிலன்றிக் கூறைவே
றெளிமையி னில்லை மற்றிது நினைந்திடில்
அளியள் யான்செய்வதே தென்னவம்மை நீ
நளிர்புனல் காலுறு நணுகென்றே னென்றான். (௰௬)

தோளிடை யேற்றினன் றூக்கிச் சென்றனன்
நீளிய புனலொரு நிமிடததிற் கடந்
தோளிய கரைமருங் குய்தது நின்றனன்
தாளினு நீருறறனக் கின்றுகவே. (௰௭)

நின்றபேரரு ளுடையவனை நோக்கிநீ •
ஒன்ற நின்காலிடைப புனலுறு திவணை
துன்ற லெவ்விதத தெனவம்மையார் சொல
மன்றலந் துளவமால் வருககின் றனரோ. (௰௮)

இவ்வயிற் றோணியுய்ப் பவரலேன் பவப்
பவ்வ நீந்தச் செயும்படகு காரன்யான்
எவ்வயி னிருந்தியா ரெய்தினுங்கரை
செவ்வயிற் சேர்ப்பெனீர் சிறிதுறுதென்றான். (௰௯)

கேட்ட கோமாயி நீயைய கிட்டியென்
மாட்டு பகாரமோ மழையிற் செய்தனை
ஈட்டு மென்னிடத் துளமாவை யேற்கென
நீட்டலும் வாங்குறு னிமலன் கூறுவான். (௨௰)

எவர்வயினும் பொருளேற்கி லேனதால்
துவதசித தினத்திலிம் மாவைச் சுட்டடை
கவர்மனப பிராமணர் கையி னலகென
உவமையில் லானுரைத்துடன் மறைந்தனன். (௨௧)

மறைந்தபினம் மையார் மணிவண்ணன்றனைச்
சிறந்தபொற் கோயிலிற் சென்று சேவித்துப்
புறந்துயின் றெழுந்துறு புலரிதன்னிற் போய்
அறந்திகழ் சந்திர பாகை யாடியே. (௨௨)

உந்துப வாசமாய் மாயவன்றனைப
புந்தியுளன் பொழுதொழுது போற்றினர்
அந்த வேகாதசி யிரவிலன்பு ளோரா
முந்தரி கீர்த்தன மொழியக் கேட்டனா. (உ௩)

காலையிற் சந்திர பாகையைக்கலந
தேல நீராடினர் கரையி னெய்தினா
சாலுமன்று றுதுவாத சிமற்றுதலால
நாலு மாமறை யவாககு தவ நாடினரா (உ௪)

உப்பொடுபெ ருபபுமற்றொன்று மிலலைநங
கைப்படி யுறுவெறு மாவைக்கைககொள
எபபடி நல்குவ தென்றி யோசிததுத
தப்பறு மறையவா தமமை நோக்கியே (உ௫)

ஜயமீரொன் வயினருள செய்தி யானறரும
நொய்ய விமமாவதை நும்மில யாரொனும
கையுறப் பெறுமி னென்றுரைகககக கணடொ
தைய லாரரு குருதயலிற் சார்நதனா. (உ௬)

ஒருவருங்கைக் கொளா துறுதல் கணடு சீ
மருவு பாண்டுரங்க பகததரை வாழவிபபவ
அருமறையவாக் குணவளிப பதினறியான
கருதுமித்தின முணவெங்ஙன காணகுவென. (உ௭)

எனவருந்தின ருறவிவாத நிசசய
மனநிலைகணடு பாணடுரஙக மாவோ பாப
பனவடிவங்கொடு பாாக்க முனவநது
தனதருளவர் பெறசசாறறு கின்றனன. (உ௮)

அம்மை யான்றுாப பலன் கிழவ ளனதால
செம்மை சோது வாதசிததின மின்றுண பதற்
கும்மருங் கெய்தினே னொருகை மாவெனும
தம்மி னென்றவர் தரச்சாறறி னனரோ. (உ௯)

கேட்ட கோமாயியார் மகிழ கிளாந்துளே
வாட்ட மின்றாய் வெறுமாவை நல்குமுன
காட்டலர் துளவினன கடும் பசிககுண
ஓட்டடை சுட்டு நீருதவு கென்றனன் (௩௰)

அடைசுடற் கிடமிலை யசகத னெனனும்
நடைதெரிந்துடன் விறகுகணன் றாய்ந்து கொண்
டிடையழல் மூட்டின ரினிது சுட்டடை
உடையவன் கைதர வுண்பதாயினன் (௩௧)

அருந்துமுன் மலரின்மே னங்கை யவ்வயிற்
பொருந்தினள் மூப்புடன் புனித மங்கலம்
இருந்து மோராசனி யாகிச் செவ்வையாய்
விருந்து நீருண்பதோ வேனவிநது தென்றாள். (௩௨)

அருகொருசுமங்கிலி யண்மி னுளமமே
மருவுநுந் தானையி லிருக்கு மாவையும்
தருகசுட் டெனபபிரான் சாற்ற வம்மையார்
பெருகின துகிலின்மா லிருக்கப் பேணினார். (௩௩)

கண்டனை சுட்டுடன் கையி னலகலும்
ஒண்டொடிச் சுமங்கிலி யும்வந் துறறதும்
பெண்டவ மெனப்பிரான் பெரிது பேசியே
உண்டனன் ருமறை யுறையு மாதுடன். (௩௪)

பின்பிரு வருங்கைகால் பெரிது சுத்திசெய்
தன்புடன் மறைந்தன ராக வம்மையார்
இன்பொடு நாமுமங் கருந்தி யேகினார்
முன்புறு முரகரி பெயர்மொ ழிந்தரோ. (௩௫)

கோமாயியம்மாள் திருவடிகளே சரணம்.

ஆகச்சரித்திரம் ௪௧-க்குச் செய்யுள் ௩௭௱௯௩

முற்றிற்று.



லதீப்ஷா பக்தர் சரித்திரம்

வேறு

ஈதை பாகவத முதற்புராண மிக்க கேள்வியோர்
தீதிலாத பரமபக்த வைணவச் சிகாமணி
ஓதிராம பஜனையே யிராப்பகலு ளுற்றுவோர்
கோதிதென்ற விந்தரான குலமதத்தை விட்டனர். (௧)

ஹரிதனக்கு நித்தநேம மாய்மிகுந்த பூசனை
பெரிதியற்றுவார் லதீபெனச் சொல்கின்ற பெயருளார்
திரிதலாகி யதையறிந்த விந்தரான தீமையோர்
துரிதரா யடைந்துதங்க ளரசன் மாடுசொல்லுவார். (௨)

நங்குலத் தொருத்தன் வேறு நாமமோதி நன்றதென்
றங்குளுற்று பூசைசெய்வ தாயினு னவன்றனைத்
தங்குநங் குலத்துமேவு மாறுநீ சமைக்கநின்
பொங்குமாணையா லெனக்கருத்திலாத புன்மையோன் (௩).

மதவிரோதியான மற்றவன்றன் மாமனைபபுகுந்
தீதமதான கைத்தெலா மியற்று மின்கள் கொள்ளையென்
றுதவுமேவ லாளருக் குரைப்ப வன்னர்யாவரும்
கதமொடெய்தி யவரகத்திருப்பை நின்றுசண்டனா. (௪)

காணுமுன் னரோபுகுந்த கடுமையா வையுங்குலைந்
தெணுசாந்த ராயிரங்கி யேவின்வந்த தங்களைப
பூணு தாங்களே யிகழ்ந்து பொருமிராஜ சேவைதான்
மாணுகின்ற தன்றுகெட்ட தென்றுதாம் வருந்தினார். (௫)

இனிநமக்கொணாத சேவையென்று பாகவதமுதற்
றனிசெய் கீதை சிரவணித்து மிவர்கணென்று தங்கினா
துனியிருந்த செய்கைகேட்டு வேந்தனெஞ்சு துணுணென
முனிவுகொண்டு நேரொதிர்ந்து மோதுகிற்ப நாமெனு. (௬)

விரைவின்வந்த போதிலிங்கு வீட்டுளே லதீபுஷா
புரைதவிர்ந்து ளோர்கண்முன்பு பொருவில் பாகவதமதை
நிரைபிருநதை யருகிருந்து நித்தமுந்தெ ரித்தலபோல
உரைசொல்கின்ற தாயிருக்க வுற்றவேந் துணர்ந்தனன். (௭)

கண்டுநாமு மிறையிருந்து கேட்டுமென்று காவலன்
மண்டுவோர்க ளூடனிருநது மாடுமுற்று நோக்கினான்
அண்டுசார்பெ லாமெழுக்கி யதிகசுதத மாய்மணம்
கொண்டுமேவு புஷ்பஜாதி யுங்குலுங்க லாகவே. (௮)

சுவொலாந்த சாவதார முந்துலங்க வெழுதிய
நவமெலா முணர்ந்துகணடு நரபதிக்கு வெகுளிதான்
இவர்தலாகி யும்மிராதை கணணனுககு வெற்றிலைப
பவர்மடிப்ப ளிக்குமோ வமதையுமுன்பு பாரத்தனன் (௯)

பார்த்துடன்றுபகவனும மோதுகின்ற பணபராம்
தீர்த்தர் தம்மை நோக்கியிங்கி தென்னை செபபு கென்னலும்
சீர்த்த ராதை கண்ணனென்று செபபராதை கையிலென்
ஆர்த்த தென்ன மகிழ்நனுக்களிக்கும் வெற்றிலை யென. (௰)

துணை வி நல்கு சுருள்கொளா திருப்பதேது சொல்கெனப
பணைவிநோத மாயுரைக்க வவர் பரிநது பார்த்திபா
இணைவி தோர்தி யென்றெழுந்திரண்டு கைகளுங்குவித
தணைவியாள மிகு தயாளவன் பரன்ப வச்சுதா. (௰௧)

ராதை நல்கு சுருள்கொளா மனீ யிருத்தனன்கதோ
ஏதை யின்றியம் புகிற் பெனென விரைந்து சுருளையம்
போதை வென்ற வாய்வயிற்கொள் போற்றெனக் கிரங்கி யென்
றோதை கொண்ட சங்கிடங் கொணு தன் முன்ன ரோதினார். (௰௨)

தீனராயிருந்து வேண்டு செய்கை கண்டு சித்திரத்
தான கண்ணனுள மிரங்கி யருளின்வாய் திறத்தலும்
மோனராதை வாயிலீய முன்பிருந்த பைஞ்சுருள்
போணுதக்கணத் தெதிர்ந்த புரவலன்றிகைக்கவே. (௰௩)

ஓவியப் பெணங்கையுற்ற சுருள்மடிப்ப துறவுருள்
மேவி நிற்க நாதன் வாயு மூடவேந்து மிகவியந்
தாவியுற்ற தெவ்விதத்திலோ வியத்திலென வகம்
தாவினற்ற வத்திஞே ரடிக்கண் வந்து தாழ்ந்தனன். (௰௪)

நீரியற்று பஜனையே நிலைத்ததும் முணிலை தனை
ஓர்வதற்று நுமை வருத்த வந்த நானுஞற்று மென்
தீர்வில் குற்ற நீர் பொறுக்க வென்று செப்பி யேகிஞன்
ஆர்த வத்தரரிதனும மோதியங்க மர்ந்தனர். (௰௫)

லதீப்ஷா பக்தர் திருவடிகளே சரணம்

ஆகச்சரித்திரம் ௪௩-க்குச்செய்யுள் ௩௲௭௱௨௰௮

முற்றிற்று



சந்தோபாபக்தர் சரித்திரம்



ராஞ்சண மென்று மூரிஞ மஞ்சந்தோபா வென்னத்
தாஞ்ச துரங்க சேனை தழைத்திடத்தன சம்பத்தில்
காஞ்சன பதியை நேராய் வாழபவர் காவலன்பால்
ஆஞ்சனர் தம்மின் மேலாயதி கரித்துறு வதாஞோர். (௧)

ஒரு தினந்து காராம் ஸ்வாமியுடைய மெய்க்கதையைக் கேட்டுக்
கருது மிக்குடும் பவாழ்வுங்காயமும் பொய்யேயென்று
மருவு நிச்சய நன்ஞானம் வாய்ந்து வைராக மென்னப்
பெருகு மண்டபத்திற் கோர்தூணுயினர் பிறவி வேண்டார். (௨)

இனியரை நிமிடமேனும் வீண்பொழுதி யற்றலாகா
தெனவுளத் தெண்ணித்தம் பாலிருக்கு மூழியனா [illegible]
நணியு மதிடங்கள் செல்க வென விடை நல்கி வேண்டும்
தனமினி தளித்துப் பின்னந்தணர் தமை யழைத்த வர்க்கு. (௩)

தம்முடைத்தன சம்பத்து முழுவதுந் தத்தஞ் செய்து
கைம்முள நான்கதான கலிங்கந்தம் மிடையிற் கட்டிச்
செம்மு நாண் சிறிது மின்றிச் சீரரி கீர்த்தனம் வாய்
விம்முறப் பாடியாடி வெளி வந்தார் விமலராகி. (௪)

பீமரதி நதிக் கூலத்தோர் புறம் பிறங்குகின்ற
தாமலை யேறிக் கூட்டின் விடுபட்ட தான கிள்ளை
மாமரத் தேறிவைகல் போலவு மலரிலாத
தாமரை யகத்து வண்டு வெளியுற்ற தெனவுநாங்கி. (௫)

பரவசராகிக் கண்ணன் பஜனை செய்திருக்கத் தோந்து
திரவவரன்னை மிக்க துயரத்துட் செறிந்து சேயா
தரமுற வெனக்குண்டா மோர்தனையன் வைராக முற்றுப
புரமகல் வாகி வெற்பிற் போயினனே யென்றேங்கி (௬)

வடிவினிற் குணத்தின் மிக்க மருகியை யலங்கரித்துப
படிமை யுற்றவன் பாற் செல்ல விடுத்தது மேற்பார்த்து மோகம
நெடிதுறீஇ வருவனென்று நிச்சயித்த வணபுரிந்து
கடிமனை தனிலிருந்த கற்புடை மருகி யாளை. (௭)

சிவிகையிலேற்றி யுய்க்கச் சென்றனா துணை சம ல
அவிர் மலரடி வணங்கி யருகுற விழிகள் மூடிக
தவிர் கிலரரிதியானந் தனிலுறு வோரா விழித்து
செவி மிகுமனைவியாளை நோக்கினர் செப்புகின்றார் (௮)

என்னிடை யேன் வந்தாய் நீ யிங்கு ருதினி மீணபோகுத
துன்னு தியென்ன வன்னார் துணைவா தம்மடி வணங்கிப
பன்னருங் குணத்தீர நும்மை யல்லது பற்றிலாதால
பொன்னடி பிரிதலாற்றே னெனவவர் புலம்பல கேட்டு. (௯)

ஹரிபதம வாவலான் மற்றவா வெலாம விடுத்து ஏ நதேன
சுரிகுழனீ யுமவ்வாறு றுதியேறுன்னு கென்ன
அரிவையார் தாமுமவ் வாறமை குவனென்ன வாடபா
தெரிவை நின்று கில்பூ ணெல்லாந தீாந்திப்பனி ருதநியெனப் . (௰)

இருவெனச் சொன்னதே போதும் மெனவின் புளாரூறி
மருவிடைக் குடித்தநான்கு மூளம்வைத்து மற்றையாவும
கருதுவதின்றி வீசிக்கணவ ஞாரு கிருநதாா
திருமகணுதனும கீர்த்தனஞ் செய்து கொண்டு. (௧)

சிலபொழு தகலச் சந்தோ பாவுக்குப் பசிசெறிநது
நலமனை வியளை நோக்கி நாரிநீ யூாக்குட் சென்று
பலருளுறவோர் நட்போர்தங்களைப பார்தது வெகா
திலகு மொவ்வோர கத்துமளா யடைக்கதிக மேறகேல (௰௨)

வாங்கினை வருதி யென்ன மயலறுகற் பின்மிக்கா
நீங்கரு மரிதியான நினைவினர் தமைவணங்கி
ஓங்கி யவழகுந்தேசு முருவமு மாறிவேறாய்த்
தாங்கின தாலிமூண்டு தவிரவெல்லாந் தவிர்ந்து. (௰௩)

பூங்கமலத்தை நேரும் பொன்னடி பாலுறுத்த
தூங்கு நின்றார்க்குண் மேவியகந் தொறுமைய மேற்றுத்
தீங்கறு நாதனார் தந்தங்கை வாழின்முன் சென்று
பங்கயக் கண்ணனுமம் புகழ்ந்தனர் பிச்சை கேட்டார். (௰௪)

அன்னதோர் குரல்கேட்டில்லுளமர்ந்தவ டெரிந்துவாயின்
முன்னமர் வோர்பாலோடி வந்தழு துறமுயங்கி
நின்னது செல்வமெல்லா நீங்கினை பல்லக் கின்மேல்
துன்னுறும் பூவின் மென்காறுகள் படலாய தென்றே. (௰௫)

நினதகி ரூபலா வண்ணிய மெலாநெகிழ்ந்து பிச்சை
வினவுவோர்க்கீ யுங்கையும் பிச்சை வேண்டுவ தாயிற்றே
எனமனந் தளர்ந்து தெய்வச் செயலிப் படிக்கு முண்டோ
கனவு லகத்திலென்றுங் கதறினுள் பதறி வீழ்ந்தாள். (௰௬)

அழுமவடன்னை நோக்கிக் கற்பினுக் கரசியாரும்
பழுதிலென்றலைவர்மிக்க பசியுட னிருப்பர் மின்னே
எழுக கால்விடுக வென்ன வேங்கின ளெழுந்துட் சென்று
முழு அடையி ரண்டு நெய்சர்க்கரை தகக்கொடு முன்வந்து. (௰௭)

கொடுத்தலு மரையடைக்கு மேற்கொளிற் கொழுநர் கோபம்
அடுப்பரிவ் வளவுவேண்டா மெனமறுத் தறையக் கேட்டு
விடுத்திடற் கரியவென்பா விரண்டடை வேண்டா மென்று
தடுப்பது தகுதியன்று கொள்கெனத் தந்துட் போனுள். (௰௮)

வலிந் தவடரு மிரண்டும் வாங்கிக்கொண்ட விடம்விட்டு
நலிந்திடர் செய்யுங்காட்டின டந்துவந் தாவிநாதர்
பொலிந்துறை யிடமுற்றன்னா புசித்திட வேண்டலோடும்
மெலிந்தில ரிதன்னுமம் விடாதுரைப் பவருங்கண்டு. (௰௯)

எற்றுவந் தவற்றிரண்டு முழுவடையாயிருக்கத்
தோற்றிவை முழுமையாகக் கொணர்ந்த தேன்சொல்லு கென்ன
சாற்றினர் நடந்தவற்றை யவர்பரி தாபத்தோடு
மாற்றி நீதந்தோர் பக்கல் வழங்கினை வந்தா லுண்பேன். (௨௰)

அல்ல துண்ணே னென்றோத வருந்தகி யனையார் மீண்டு
மெல்லடி வருந்தத் தந்த மெல்லியல் மனைக் கண்வந்து
சொல்லினர் மறுத்த செய்கை யடைகளைச் சுருக்கிற் றந்தங்
கல்லிடை மழையும் பெய்ய மீண்டன ருறும் போது. (௨௧)

வருவழி தன்னிலாறு மழையினிற் பெருகிமண்ட
மருவினர் கண்டிவ் வாற்றைக் கடந்துபோம் வகையே தென்றும்
புருட ருண்ணுது மிக்கபசி பொருந்துவரோ யென்றும்
பருவர லுற்றுநைந்து பாண்டரங்கனைச் சிந்தித்தார். (௨௨)

நாதனுக் குதவாப பேதைநாரி யென்றுரு மெள்ளப்
பாதகமெது செய்தேனோ பக்த ரக்ஷக கோபாலா
மாதவ முகுந்த கேசவாவென மாழ்கி நிற்க
ஸ்ரீ தரன்றெரிந்து நீந்துவோ னுருக்கொண்டு சேர்ந்தான். (௨௩)

மாதரைநோக்கிநீ ரேன்வருந்து கின்றீ ரென்றோத
நாதரக் கரையி லுற்றார் நானவர்க் குணவு நல்கப்
போதரும் வழியிலா றுதடுப்ப தாற்புந்தி நொந்தேன்
யாதுற்ற ருணமென்னை புன்றங்கை யென்ன வெண்ணி. (௨௪)

அக்கரை சேர்ப்பையாகி லரிய நல்லு தவியாகும்
தக்க வுத்தமனே யென்னச் சவுரிநன் றென்று தோளில்
மிக்க கற்புடைய மாதையேற்றினன் விரைந்து சென்றப்
பக்கமுய்த்தழைத்துக் கொண்டு பதியுறை பாங்குஞ் சென்று. (௨௫)

கண்டனையா நீகாதற் கணவரை யென்று காட்டி
விண்டனன் மறைந்துபோனான் விட்டலன் போன பின்னர்
ஒண்டொடியார் தந்நாத ருறைமருங் குற்றார்கண்டு
தொண்டரிம் மழையிலாற்றைக் கடந்த தெவ்விதஞ் சொல்கென்றார். (௨௬)

பதிதமக் குற்றவாறு பத்தினியார் பகர்ந்தார்
மதிமுக மடந்தாய் பாண்டுரங்கமாலுனக்கு வாய்த்தான்
எதிரில னெனக்கன்றானவந் தெதிருறு மளவு முண்ணேன்
வதிகுவ னென்றிருந்தார் மற்றந்நாள் ராஞ்சணத்தில். (௨௭)

திகழுமோர் பரம பக்தனாகிய செட்டி காணக்
ககபதி நாதனான காருத்தன் கனவிற் றோன்றிப
புகழுடைச் சந்தோபாத் தான்பொருந் துறுபசியைத் தீர்க்க
நிகழுறு சுவைச் சோறிட்டா னினக்குறுஞ் சுகிதமென்றான் (௨௮)

மறைந் தனனுகச் செட்டி விழித்தனன் மனத்துணர்ந்து
நிறைந்தவின் சுவைச்சோறட்டு நிகழ்த்து சந்தோபா மேவி
உறைந்துறு மருங்கிலெய்தி யுளபடி யுரைத்து நாதன்
அறைந்த வாறுண்க வென்னவ வரடி வணங்கிச்சொன்னான். (௨௯)

சொன்ன வன்றன்னை நோக்கிச் சொற்பனத்துன் முன்வந்தான்
என்னருகேன் வாராம லிருக்கின்றா னிருடிகேசன்
அன்னவன் சேவைநல்கு மளவு நானுண்ணே னென்றார்
மன்னர் பின்னவன் போனானார் மற்றவா் திடத்தை நோக்கி (௩௰)

உடலன்ன மயமேயாகுங் கவியுகத் தென்ப தோரார்
கடவுளைக் காண்பான் வேண்டிக் கருது நிச்சயத்தைக் கண்டு
புடவிமாமகள் மணாளன் பொருந்தினன் சகுண ரூபத்
துடன்வரக்கண்டு சந்தோபா மகிழ்வொடு பணிந்தான். (௩௧)

வேறு.

எழுந்து தோத்திரஞ் செய்தலு மபய மீந்திடையர்
கொழுந்து போய்மறைந் தனனவன் குணங்களுட் கொண்டும்
அழுந்து மன்பொடு நாமகீர்த்தனவ முதுண்டு
செழுந்தண் ராஞ்சண மென்னு மூர்தினந் தொறுஞ்சென்று. (௩௨)

பிச்சை யேற்றுண்டு பிறங்கலில் வதிதர முழுதும்
கொச்சைத் துன்மதியான வோரந்தணன் குடும்பத்
திச்சை மிக்கவனந் தவூரிடைக் குடியிருபபோன்
செச்சையந் தனத்தேவி தன்னுடன் றினந்தோறும். (௩௩)

சண்டைசெய்பவ னயவளை திருநா தத்தால்
அண்டையேய் வனத்தடைந் துறுகின்ற சந்தோபா
கொண்டகோலத்தைக் கொள்குவேன் குடும்ப நீக்குறுவேன்
விண்டபோது நீயென் செய்வை யெனப்பயம் விளைப்பான். (௩௪)

கணவ னோடெதிர் பேசுறி லென்னைக்கை விடுவான்
அணவு றாதுகை விடிலென்ன செய்வதென் றடங்கிக்
குணநலாள்வர வொருதினம் பிச்சையைக் குறித்துத்
தணவின் மற்றவடன் முன்வந்தா ரரிதாசர். (௫௫)

கண்டு மற்றவ ளவரிரு கால்களிற் பணிந்து
கொண்டகேள்வ னென்னுடன் றினம் வீண்வம்பு கொடுத்துச்
சண்டைசெய்வது தவிர்கிலன் மறுமொழி சாற்றில்
அண்டு நும்மைப் போலாவ னென்றுரைக்கு நணுனால் (௫௬)

நானென் செய்வது சாமி நீர்நவில் கென நவின்றாள்
ஞானமிக்க நல்லவரது கேட்டுன் றணுதன்
மானமற்றுறு துறவியாகுவ னெனவகுத்தால்
ஆனவப்பொழுதே துறவெய்தென வறைதி. (௫௭)

பின்னை நான வன்றனக்கு மந்திரஞ் செவிப்பெய்து
நன்ன ராண்டிகைக் குரங்கென நின்வய நணுக
மின்னை நேரிடை செய்வனென் றுரைசெய்ய மின்னாள்
அன்னதாசர் தந்தாள் பணிந்தானந்த மடைந்தாள். (௫௮)

ஐயநல்கக் கொண்டா சிரமத்தினை யடைந்தார்
மெய்யர் போனபினந்த வேதியன் மனைமேவித்
தையலே னின்னஞ் சமையல்செய்யத்தடை பசிதான்
வெய்ய தாயிற்றா தலினுன்னை விடுவனென் றுரைத்தான். (௫௯)

சொன்ன கேள்வனை நோக்கிநீ துறவுறத் துணிந்தால்
இன்ன மேன்றடை விரைந்து செல்கென வியம்பினள்கேட்
டன்ன வந்தணன் கோபங்கொண் டிவளிவ்வா றறைந்த
பின்னர் யாமிவ ணுறில்வரு மோதகும் பெருமை. (௬௰)

இனியிங் கெய்தொணா தென்றொரு செம்புகை யேந்தி
நனிசெறிந்தகாட் டுறுசந்தோ பாவயி னணுகித்
தனி யிருந்தநும் போற்குடும் பத்தினைத் தவிர்ந்தேன்
புனித ரேயும்மை விடுகிலே னெனப்பல புகன்றான். (௬௧)

இதமதாமுப தேசஞ்செய் வீரொனக் கென்பான்
வதன நோக்கியான் றனியென வாய்ந்தது துணையிவ்
விதவி ராகங்கொள் வோருனைப் போலெங்கு மேவார்
உதவு நிற்குப தேசித்தற் கையமென் னென்றார். (௬௨)

என்று செம்பொடு கலையுடுத்துச் செல்வதேற்ப
தன்றுசோர ராற்கவர் வுணுமாதலா லகற்றித்
துன்று கோவணத் தொடுசுரக் குடுக்கையைத் தூக்கிச்
சென்று நீநறும் புனல்கொண்டு வாவெனச் செப்ப (௬௩)

நன்றெனச் சுரைக் குடுக்கையைத் தூக்கிநீர் நாடித்
துன்று கோவணத்தொடு சென்றான்பின் பரிதொண்டர்
சென்றவன் கலையைப் பலதுணியுறச் சிதைத்தார்
அன்று செம்பையு மோர்குழிவிழ வெறிந்தனரோ. (௬௪

போன வந்தணன் பசியொடு புனல்கொடு போநதான்
ஆனபோதிவர் மனைவியுந் தாமுமா யங்குப
போன கம்மென நிம்பவெங் காய்களைப புசித்துத
தாணமர்ந்துழிப் பசியெனைத் தபிக்கின்ற தென்றான. (சரு)

பசியென்றான் வயிற்றா மருந்துற்ற வேபபங்காய்
புசியென்றே சிலவள்ளினா தருதலும் புகலவான
கசிவுறுங் கசப்புற்ற காய்களைக் கருத்துடனே
மிசைவதெப்படி யெனசசொல விளமபுவாா மேலோா. (சசா)

துறவு கொண்டுளே நமக்கருஞ் சுவைக ளேதுககுத
தெறு பசிகெது வாயினுந் தினபது செறிவே
அறிதி யென்னலு மந்தண னுலரடை யேனும
பெறுவெ னென்றுற வேபபஙகாய் கிடைததது பெரிகே. (சஎ)

நன்ற தென்விதி மனைவிடுத தெனபெற நடநதேன
என்றுதேம்பின னழுதன னென்செயவ னெனறு
கன்றுவோன்றனைத தொணடாகண டென்னைநீ கருதி
நின்று தேம்புதி யெனவவ னுளபடி நிகழததும (சஅ

உம்மை நம்பிநான் வந்ததற குணணவேப பஙகாய
இம்மையிற்கிடைத ததுபசித தீயெரிககிறது
பைம்மை யாய்க்குளிா நலிகினற தாடையும பறநத
தெம்மை யெவ்வினை யியற்றின னோவிவை யெய்த. (சக)

மனைவியைத்தினம் வருததின வினைவந்து வாய்த்த
தினையவிப படியினி யுமதிடை யிருபபேனேல
மூனைவன் பாசததான் மனைவியைத துறநததே மோசம
பினையுங் கோவணத தோடெஙஙன் வீடெயதப பெறுதல. (ருய)

நான் மிகுத்தது பசியிலுங குளிரிலு நனறே
ஆண் மனைகருநாண விடுததினி தேகினு மனையாள
மாணுறுத்திய துறவியா னவனவரலாமோ
நீண்மனைக்கென நோ்ந்துளோாக குறைதெனை நீபபாளா. (ருக)

என்செய்வேனிதற் கென்றன னிரங்கின னழுதான
தன்செய்கைகண்டு மாதவரான சந்தோபா
மின்செய் நுண்ணிடை மனைவிதன் னுடன்றினம் வீணே
கொன்செய் வம்பிழுத் துச்சணடை செய்வது குறியோ. (ருஉ)

எதிருரைத்திடி லென்னைபபோற் காட்டிற கெய்துவனென
றதிருறுத்துவ தும்மழகோவிவை யாகா
முதிர் நலத்தினை யேவின்று மூதலுன்றன் மூர்க்கக்
கதியினைத்தையும் விடுத்திநீ மனைவியுட்களிப்ப. (ருங)

உன்னைக்கொண்டுபோ யுன்மனை யாளுறவாக
நன்னர்ச் சேர்த்துவே னென்னலு மந்தண னயந்து
துன்னச் செய்வதும் பெருமையே நானின்று தொடங்கி
மூன்னைச் செய்சண்டை வம்பிவை செய்கிலேன் முழுதும (ருச)

இதுமெய்யென் றுறுதிப்பட விசைத்தனன்கேட்டு
முதுதவத்தினர் பொழுதுபோயின பின்பு முன்னிக்
கதுவுமற்றவன் மனைவரை வழைத்துப்போய்க் கடுகி
விதுமுகத்தின ளேயெனவழைத்தனர் விரும்பி (௫௫)

உன்பதிக் குபதேசஞ்செய் தினிதுற வுன்றன்
முன்பழைத்து வந்தேனினி யுன்வச முயங்க
அன்பனைக் களிப்புட னழைத்தின்புற வமர்தி
வன்புரைத்திடேற் கோவணத்துட னவன் வருவான். (௫௬)

அவனுடுத்திட வஸ்திரந் தருகென வறைந்து
தவன் முகத்தினை நோக்கிநீ யினியுளந் தளரேல்
எவமறபபுண ருன்மனை யாட்கித மியல
நவமுறுத்தினேன் மனைக்கடை யென்றனர் நல்லோர். (௫௭)

சாமி நும்முறை தவிர்கிலே னென்றடி தாழ்ந்து
மாமின் போல்பவள் மனையகம் புகுந்தனன் வரலுந்
தோமில் வஸ்திரந் தந்தனள் சுவையமு திட்டாள்
ஆமில் வாழ்ந்தனன் மனையொடு கலகமில்லாமல். (௫௮)

இவ்விதஞ் செய்துதம் மிடமேய சந்தோபா
வெவ்விதின் மதிமாத மேகாதசி மேவச்
செவ்வி சேர்திருப் பண்டரி யாத்திரை செல்லத்
தவ்வில் வீணையாழ் மிருதங்கஞ் சச்சரி தாளம். (௫௯)

கருட நன்கொடி யுடனரி நாமங்கள் கழறி
மருவியாடித லுடனிரண் டாயிரர்மன்னப்
பொருவினற்றச மித்தின நரசிங்க புரத்தின்
அருகுசார்ந்தன ரங்குறு நதிமழை யதனல். (௬0)

பயமிகப் பெருக்குற் றதுகண்டு பண்டரிபோய்
இயலுருக் குமணீபதி தன்னைநா மெங்ஙன்
நயமுறத் தரிசனஞ் செயற்கிலை நண்ணூறுமோ
அயாவறக் கடத்திடு மொருபஃறி நேராமோ. (௬௧)

என்றியாவரு மினைவுறு போதுசந்தோபா
நின்ற நீருடன் மானங்கொண்டெப்படி நீந்திச்
சென்றுகாண் பதத்திருமகள் கேள்வனைச்சேரத்
துன்றுமென்னுடன் வருகசீரரிபதந்துணையாய். (௬௨)

அளித்தல் செய்யினு மழிப்பது செய்யினும் ஹரியே
ஒளிப்பருங் கதியென நம்புமின் னெனவுரைத்துக்
களிப்பொடுந் தியிலிறங்கினர் முன்செலக் கண்டு
தெளிப்புடன்செல்ல லாயினர் யாவருஞ் சேர்ந்து. (௬௩)

செல்லமாதவன் கச்சபமாகியுட் செறிந்து
புல்ல நீர்கணைக் காலள வாயது போவோர்க்
கல்லலின்றி யாவரும் ஹரிபஜனை வாய்க்கொண்டு
மல்ல னீர்நதி யக்கரையேறினர் மகிழ்வாய். (௬௪)

இணையணைந்தர் தாசரைப் புகழ்ந்துதாங் கருதும்
புணையில்பண்டரி புரம்புகுந் தம்புலிப் பாகை
வினையு நீர்படிந்துற்ற புண்டலீகனை விரும்பித்
தனைவிழுந்தடி பணிந்து கோயிற்குளே சார்ந்தார். (௬௫)

சார்ந்துளோரொடு புகழ்ந்துகொண் டேகுசந்தோபா
நேர்ந்த மாலடி கண்டுசேவித்து நின்மலனை
ஆர்ந்த வன்பொடு தழுவியாலிங்கனஞ் செய்து
கூர்ந்த நாமங்கள் பலசொல்லித் தோத்திரங் குறித்து. (௬௬)

ஐய நீயுல கத்துளவன்பருக் கெல்லாம்
மெய்யறுகிப்பல் விதத்தருள் புரிகின்றாய்மேவி
உய்ய நின்புகழ் சேடனும் வழுத்துதற் குறுமோ
மைய னெஞ்சினேன் சொல்வதெவ்வாறென வாழ்த்தி. (௬௭)

ஆமையாகியின் றனையுங் காத்தனை யருளால்
பூமின் னாயகா நின்னடிப் போதிடைப் பொருந்தித்
தோமி லாதுற வருள்கென மாலருள் சுரந்து
நீ மிடைந்தெனை நீங்குறா திருக்கென நிகழ்த்த. (௬௮)

சலசலோ சனனருள் வழிவேண்டுசந் தோபா
குலவுதம் மனைவியொடு மெய்ம்மகிழ் கூர்ந்தங்
குலவுநாயகன் பெரும்புகழ் பற்பலவோது
நலமிகுந்தனராய் நனிவாழ்த்துநர் நாளும். (௬௯)

சந்தோபாபக்தர் திருவடிகளே சரணம்.

ஆகச்சரித்திரம்௪௯க்குச்செய்யுள் ௩௯௭௯.

முற்றிற்று.



நீளோபாபக்தர்சரித்திரம்.

மாவின்புறு பிம்பளநேரியில் வாழ்வர் நீளோ
பாவென்பவர் யானெனதென்ப தில்லாத பண்பர்
மேவன்பொடு மாலரிகீர்த்தனம் வேண்டுகிற்போர்
நாவின்புற முந்தடியார் கதைநன்கு வைப்போர். (க)

குடும்பத்தினைத் தம்மதென்றே யுளங்கொண்டிலாதோர்
தொடும்பற்றிலயா சிதவிர்த்தியிற் றுன்னல்கொண்டு
நெடும்பற் றறுமா லடியார்க்கு நிரப்பினர்க்கும்
இடும்பத்தி கொண்டே குடும்பத்தையு மின்புசெய்வார். (உ)

இத்தன்மையரா யவர்கன்னிகைக் கின்மணந்தான்
ஒத்தன்று களத்திரந் தாசனை யுற்றுநோக்கி
வித்தம்பெரு குற்றவர்நங்கினை மேவுகிற்போர்
அத்தன்மை யருக்குநா மேழைக ளாதலாலே. (௩)

எவ்வா றுறழ்வாகுதலே னமெய்து மென்று
செவ்வாய் திறந்தோதலுந் தாசரச் செய்திகேட்டுக்
கைவா ரணங்கூப்பிடச் சென்றவக் கண்ணனுண்டு
தவ்வாது காத்தாளுதற் கென்றனர் தங்குநாளில் (௪)

மணநாட்கு முன்னாட்கிழ வேதியனாகி மாயோன்
வணராக் கையிற்கொண்டுள ஜீரண வஸ்திரத்தில்
உணவாக் குதற்கேற்றன சிற்சில வுய்த்தல்செய்து
தணவாத் தனகீர்த்தனஞ் செய்பவர் தம்முன்வந்தான். (௫)

கண்ணுற் றவர்தம்மை நான்றூர்ப்பலன் கைத்ததீனன்
நண்ணுற்றன னுண்டிசெய்கைக் கிறை நல்கல்கொண்டு
பண்ணுற்றுண வீதல் செய்தாற் பசிதீருமென்றான்
எண்ணுற்றவர் வேதியன்றாள் பணிந்தீ துரைத்தார். (௬)

நீரோது நல்கன்மின்யான் பண்டரி நின்றமாலுக்
காரா தனஞ்செய்தமு தீவனிங் கண்முகென்னக்
காரோத வண்ணற் கிடும்போனகங்காய் பசிக்கு
நேராதிறை யாதலினென் வயிறோ நிரம்பா. (எ)

வயிறார நானுண்பதற் கெய்தினனென்ன வாழ்கைக்
குயிர்போ லுறுகின் றவர்தம் முகநோக்கி யுற்றோர்க்
கியல்வாக நீயட்டமுதீ வயிறார வென்ன
மயினேர்பவர் நன்றெனவுண்டி செய் மாலைவந்தோன். (அ)

கற்பாலுயர் சாலியன்னீர் கரங்கொண்டு வந்த
இப்பாக மென்பண்டமும் பெணமணத்திற் கிசைந்த
அப்பா லுறுகின்றபல் பண்டமோ டாகவைத்தால்
ஒப்பாயிடும் போனகம் யானினி துண்பெனென்றான். (௯)

வாங்காதுறில் வேதியர் போனக முண்ணமாட்டார்
நீங்காயுறுமென் றவனீந்தன செங்கைகொண்டு
பாங்காய் மணத்திற் குறுபண்ட மூடாக வுய்த்தார்
நீங்காதரி கீர்த்தனஞ் செய்பவர் நேயமிக்கார். (௰)

கனவேதியன் மாலடியார் தமைக்கண்டுநைவே
தனமானதை யீதிர் முனுண்டு பின்றான்சமைகஞம்
அனமானதை யுண்குவனென்வயி றாரவென்றான்
வினவா வவர்நன்றென நல்கினா வேணடியுணடான் (௰௧)

இல்லா ளனைநோக்கி நீ சீக்கிரத் தெய்த வுணடி
நல்லாய் சமைக்கென் றரிதாசரு நன்குகூற
வல்லார் முலைமா மயிலன்னவர்மற்ற வாறே
தொல்லா தரத்தட் டிடவேதிய னன்கு துய்த்தான். (௰௨)

அடியாரு முண்டானபின் ராத்திரியாக வையன
ஒடியாத வன்புள்ளவர் தம்முகநோக்கியுஙகள்
கொடிநே ரிடைப்பெண் மணநாளை நோ கூடலாலே
நெடிதா மணவேலை யெல்லாஞ்செய நோநதுநின்று (௰௩)

ஐதா மணமுற் றுறுங்காறு நன்காற் றியுணணற்
கெய்தா தரங்கொண் ளெதென் மனமொறு கூறப
பொய்தான் றவிர்தாசரு நன்றெனப போற்றலசெயய
மைதாணெடுங் கங்குலுஞ் சென்றது காலைவாய்பப. (௰௪)

உடனேயெழுந்தா னுயர்மாட முற்றுமவிளக்கித்
திடனுமெழுகிப் புனற்காவடி கொண்டுசென்று
குடனுர் தரநீர் நிரப்பிக் கொடுவந்து வீட்டில்
கடன்யாவு நிரப்பினோர் காரியஞ் செய்திருந்தான். (௰௫)

அப்போது மாப்பிள்ளையுங் கேள்களுஞ் ஞூறுபேரும்
மெய்ப்போ டுறைவைத்த பண்டங்களில் வேண்டல்கொணடு
நெய்ப்போ னகம்வந்தவர் யாரு நிரம்பவுண்ண
ஒப்போரி லானட்டினி திட்டனனுளொர் நான்கும் (௰௬)

பலகார வர்க்கத்தொ டுண்டானபின் பற்றுமெச்சில்
இலையா வையுந்தா னெடுத்துய்த்தபி னெச்சின்மாற்றி
நலபாகடை சந்தன புஷ்ப சுகந்தநல்கி
உலகோர் வியப்பப்பணியாவு முஞற்றிநின்றான். (௰௭)

முதுவே தியன்றாழ் விலன்செய் பணிமுற்றுமோர்ந்து
மதுவார் துளவத்தினன் றாசர் மனங்களித்தே
எதுவோ துதிர்நும் பெயரொன்றலு மெய்துபார்ப்பான்
[illegible]முன நோதினன் விட்டலனென்று தன்பேர். (௰௮)

பின்னும் பெரியீர் நுமக்கன்புறு பெண்மணைத்தில்
துன்னும்வயி ற்றார நானுண்டனன் சோர்வுதீர்ந்தேன்
என்னுங்கிழ வேதியன்மேற் பரிவெய்தி யன்பர்
மன்னுங்கலை யொன்றவர்க்கீய மனங்கொ டுற்றார். (௰௯)

ஐந்தாந் தினத்தெய்திய கேள்களெல் லாருமேக
மைந்தார் கலையொன்று கொண்டுய மற்றோனை நேடி
நந்தாவிடோபா விடோபாவென நன்குகூவ
முந்தா தகல்வுற்றனன் வேலைமுற் றும்புரிந்தோன். (௨௰)

காணாமையி னோர்ந்துணர்ந்தா ரிவன் கண்ணனென்று
நீணாகணைப் பள்ளியன் பண்டரி நேமிநாதன்
மாணாதரங் கொண்டு நம்மிற்பணி வாய்ந்துசெய்தான்
வீணானபராதி யானேனென விம்மலுற்றார். (௨௧)

தாங்கா திரங்குற்றவர் நித்திரை சார்ந்தபோது
பூங்கார் முகில்போல் பவனன்றிராப் போதிலன்னார்
பாங்கார் கனவிற்றனி வந்திடைபற் றுகைகொள்
நீங்காதுற நின்றனன்பேரருளா னிறைந்து (௨௨)

உம்மன்பினுக் காதர மிக்குளே னென்றுமுண்மை
இம்மண்ணுல கத்தவர்ராண நாளிங்குநிற்பேன்
செம்மன்புட னெப்பொழுதும் மெனச்செப்பியத்தம்
கம்மன்னுற வைத்தருள் செய்தனன் காதல்கூர. (௨௩)

துண்ணென் றெழுந்தார் தனிநோக்கலுஞ் சுவாமியந்த
வண்ணமெதிர் நின்றனன் வந்தனை செய்து வாழ்த்தி
எண்ணுந்திருநாம சங்கீர்த்தன மென்றுமோதி
கண்ணன்கழல் பூசைசெய் துற்றனர் காதனீட. (௨௪)

அங்கெய்து மவ்விட்டல மூர்த்தியை யாதரித்துப்
பொங்கும் வருடந்தொறும் பங்குனித் திங்கள்பூணத்
துங்கந்தரு கண்ணபக்கத் துதியைத் தினத்தில்
எங்கும்புகழ்ந் துற்சவமெய் தியதின்று மாதோ. (௨௫)

நீளோபாபக்தர் திருவடிகளே சரணம்.

ஆகச்சரித்திரம் ௪௪க்குச்செய்யுள் ௩௲௮௱௨௰௨.

முற்றிற்று.



உத்தவசித்கனர்சரித்திரம்.

தத்துவனுட் பொருண்முற்று முணர்ந்தவர் தாரூர்வாழ்
உத்தவசித் கனர்மெத்த விரக்தவுளத் தோர்மா
பத்தரனேக கிரந்தமுடித்துள பண்போர்சீர்
சித்திரைசுத்த பிரதமை தினத்திடை சேர்வுற்றார். (௧)

பேதரி யென்றுசொ லூரிடைவந்து பிறங்காழி
நாதனகீர்த்தன நன்குமூலாச நலஞ்சார
ஓதலுமெய்தினர் கேள்விகொளப் பெருகொண்ஞான
போதனர் பத்தர் பல்ஜாதிநலோர் வருபொற்போடே (௨)

கேட்டு வியந்து மகிழ்ந்தவ சத்துள் ளிளர்ந் திந்த
நாட்டு மிராமநவ மிவணை வைகுதிர் நல்லீரொம்
மாட்டு மெனத்துதி செய்ய மறுத்திலர் வைகுற்றார்
கூட்டு மிடங்களெலா நிறைவாயணி கோடித்தார. (௩)

ராமபிரானை நலமபெறவைத் தனர்நன் றுய்மால்
நாமநலந்திகழ் கீர்த்தன மன்பின வின்றேத்தித்
தாமவிழாத் தினமும் புரிவுற்றனர் சதுராக
மாமறையோ ருணநாளுநன் மூரல் வழங்குற்று. (௪)

உற்சவ முற்றுதினத்தி லியம்பலவுஞ் சேர
மெய்ச்ச முழக்கி விகங்க நெடுங்கொடி மின்னச்சீர்
அச்சுத ஞமமுலா சமதாக வறைந்தேத்தி
நிச்சயவன் பொடு புரம்வலம வந்தனர் நெடிதாக. (௫)

வலம் வருபோதவ ணெய்தும சீதிடை வைகுற்றார்
நலமில விந்தர்களெங் துறுநூற்றுவர்நணுகுற்றோர்
பலவையு நலிவுபடுத் துவமென்றுனல் பண்ணிக்கொண்
டலமரல் செய்வகை யாயின ரவரதி காரத்தால். (௬)

நீதியிலாத வுன்மத்தவ விந்தர் நெருங்குற்ற
வேதிய ராதியர் மேலுருள் சாணிகள் வீசுற்று
மோதினர் கேதனமுங் கொடிவீணை முழங்காமற்
காதினர் தந்தமிர்தங்க முடைத்தனா கடிவுற்றா. (௭)

தாசரொலோரு நடுங்கின ரோடினர் சாராமல
ஈசனை நாடுறு முத்தவ சித்தனரிற் சென்று
பேசின ரிங்கு நடந்தவை கேட்டவர் பேராமல
ஆசறவைகிய ராமபிரான் முனடுத் துற்றா. (௮)

கேசவ வாமன தீனதயாள கிர்பா மூர்த்தி
நேசமொ டென்றிரு நாமநவின்றுறனோர் வின்றே
கூசறினஞ் செய்வதேனுன துள்ளிது கொள்ளாயேல்
நீசர் நெருங்கி யுனன்பரை மோதலுனேர் வேயோ. (௯)

பத்தர்களுக்குறு தீமையகற்றுறு பண்பாலே
உத்தம பத்தர்கள் பாலனனென்ப துணர்ந்தோர்கள்
சித்தமு நின்னை யவிந்தர் திறத்தினை நீக்காதால
மெய்த்துறு பேர்பழு தாயினதின்றென வெகுள் வுற்றார். (௰)

அங்குறு ராமபிரானையொர் மாடமதிற் சேர்த்துப்
பொங்குமலங் க்ரதமெங்கு மழித்தல் புரிந்துற்றார்
தங்குறு மவ்விடை சார்வுறு மாருதி தானோர்ந்து
இவ்வவில் கோபமடைந்தன னன்பர் திறக்காலே. (௰௧)

ராம பிரானது தாசரை யிங்ஙன லிந்தோரைச்
சாம்வகை செய்குவ னென்றும சீதுதனைத் தீண்டத்
தாமதரான வவிந்தர் செய்தீவினை தன்னாலீ
தாம்வகை யென்றய லுற்றவொர் ஞானப ரோனேன். (௰௨)

முனிவுட னெய்திய மாருத புத்திரன் முகநோக்கி
இனி திருகைகள் குவித்து முனின்றெளியேன் வாழும்
தனிமனை யொன்று தவிர்த்து நீர்செய்வது தான்செய்க
புனித மருந்தருள் வீரொனவன்பொடு போற்றுற்றான். (௰௩)

போற்றுதல் கண்டு துலுக்கர்கள் வந்திது போதென்னே
தோற்றுப கீர்மயல் கொண்டனனென் றெதிரோ சொல்லச்
சாற்றுப கீரவர் தங்களை நோக்கிம சீதைத்தான்
காற்றுத வுந்திறலோர் பொடிசெய்குவர் கண்முன்னே. (௰௪)

ஆதலினீவிர் விரைந்தய லோடுக வெனவன்பால்
ஓத லுணர்ந்திலர் துஷ்டர் பகீர் முனுரைக் கின்றார்
தீதற நின்றம சீதையிடித்தல் செயற்காமோ
வாதமகற்கவனைப் பெறுதாதையு மாட்டானே. (௰௫)

என்பதறிந் தெதிர்மாருதி வெஞ்சின மெய்திக்கண்
முன்புறுகின்றம சீதினையோர் கையின் மோதாமுன்
பொன்பிறழ் மேருவிடிந்து விழுந்தது போல்வீழ
வன்புரை யைந்துறு நூறுதுலுக் கர்மடிந்தாரோ. (௰௬)

வேறய னின்ற துலுக்கர்கள் கண்டுவிரைந்தோடிக்
கூறினர் தம்மது கோவயினின்று கூ கூ வென்று
மாறில ராகிய விந்தர்வணங்குற மன்கேட்டுச்
சீறின னுகவயிற் றுழைநோய் நனிசெம் மிற்றே. (௰௭)

போதரு நோய்மிகவுந் துயர்செய்தல் பொறாஞகிப்
பூதல மீதுபுரண்டுப கீரனுமார் போரை
மேதக முன்ன ருரைத்த துணர்ந்து வியந்துள்ளே
காதரம் விஞ்சின னுத்தவசித் கனர்கண் வந்தான். (௰௮)

அன்புடனன்கு பணிந்து புகழ்ந்தடி கேணும்மைத்
துன்பு செய்தோர்களெலோரு மடிந்தனர் சுவாமீ நீர்
இன்புடன் மாருதி தன்னையி வேளையிரந் தெம்பால்
வன்புற நன்கருள் செய்வகை செய்மென வந்தித்தான். (௰௯)

உங்கண லுற்சவ பங்க நடந்ததை யோராமல்
எங்களை யாள்க வெனப்பொரு ளெண்ணிலவா யீந்தான்
அங்கப ராதமதாக மனைக்கணடைந் துற்றான்
பங்க மிலுத்தவசித் கனர்பின்பு பரிந்தாராய். (௨௰)

தாளமிர்தங்க நல்வீணையுடன்றிரு மாறுசர்
நீளமுழங்குற நின்றுது வாதசிநிறைவாக
ஆளரி நாமமியம்பிய வூர்வலமாகித் தாம்
மீளரு மின்பு சிறப்ப விருந்தனர் மேன்மேலும். (௨௧)

உத்தவ சித்கனர் திருவடிகளே சரணம்
ஆகச்சரித்திரம் ௪௫-க்கு செய்யுள் ௩௩௮௪௰௩
முற்றிற்று.

நாபாஜிபக்தர்சரித்திரம்

காசிநகர் தனிற்பத்தி ஞானவயிராக் கியத்திற் கனிந்த சீலர்
ஆசிலரா மானந்த சாமிதனக் கனந்தானந்தச் சுவாமி
மாசிலடியாராகு மவர்தமக்குப் போகாரி தாசர்வந்தங்
கேசிலடியா ராஞரிவர்க் கக்கிரஜி கிலஜியென்போர் சீடர் (க)

ஆனதில் மூத்தவ ரானவக்கிரஜிய னுதினமும் விரக்த ராகி
ஊனமிலா விண்டுபக்தி யுடைய வராயரி குணங்க ளுரைக்கிற் பாராய்
ஞானமிகுசாந்தி தயைக் காதாரராய்ப் பிரபோதனியு நாடும்
ஈனமிலாப் பத்மஹஸ்தியும் முதலோர்க் கரிபத்தி யினைப்போதித்தார் (௨)

சிரவணமே முதலான நவவிதபக்தியு மொவ்வோர் திறத்தோர்க் கீந்து
பரவவறை யீடேறச் செய்தவராயி ருப்பவாக்குப் பதுமை நாதன்
வரசகுண ரூபத்தை நினைத்தபோதெல்லாஞ் சேவைதந்தாள்வான்
திரமுடனிவ்வா றிருக்கவத் தேசமழை யின்றிச சிறுமை கூர. (௩)

உணவுதகங் கிடையாமன் மிகுந்ததுயரு றும்போதவ் வூரிலேயோர்
குணவதிதன் பிள்ளைக்குச் சோறின்றி மிகுந்த துயர்கொண்டு சார்ந்து
தணவில் கரையிற் சேயை வைத்தாற்றில விழுந்திறந் தாடனிசை யாஞ்சேய்
அணவனையைக் காணமற் பசிவருத்தக் கோவென்றே யலறும்போது (௪)

அக்கிரஜி தாசரங்கே நீராடவந்தனர் கண்டலறிப் பிள்ளை
யிக்கரையி லிருப்பதென்னை யெனவிரங்கிப் பிள்ளையரு கிற்சென் றேங்கித்
துக்கமுறு கின்றனையே னெனக்கேட்கத் தாய்தன்னைச் சோறுகேட்டேன்
மிக்கபசியா லென்னை விட்டகன்று ளெங்கேயோ வெனவிளம்ப (௫)

வினவிய வக்கிரஜி யென்போர் மிகக்கருணை கூர்ந்து புனலாடி மீண்டத்
தனையனுடன் வரவழைத்துப் பயப்படே லெனவுரைத்த தன்மையாலே
புனைபெயர் நாபாஜி யெனப்பொருந் திற்றுப்பின்பு மடங்கொண்டு போந்தார்
அனையர் மடந்தனின் மேவும்பெரியோர்க ளெச்சிலுண்டு வளர்வ தானர் (௬)

அக்கிரஜி தினம்புரியு மர்ச்சனையே முதலான வினைத்தும் பார்ப்பார்
தக்கவெளிப் புறத்திருந்து வரும்பெரியோர் தமையெல்லாஞ் சரணந்தாழ்வார்
மிக்கமடத்தினி னடக்கும் பாகவத முதலியவும் வினவு கிற்பார்
புக்கவிவர் நடக்கையினற் சஞ்சித கர்ம்மங்க ளெல்லாம் பொடிந்துபோக. (௭)

மெய்யறி வுண்டா யுலகத்தெல்லோர்த நினைவறியும் விவேகியாகி
ஐயமறத் திரிகாலங் களுந்தெரிய வல்லவ ராயண்ட மெங்கும்
எய்து செயலுந் தெரியலாயினர் மௌனமாயிருக்கு நாளில்
பொய்யற சீரக் கிரஜியொரு தினத்திற் கங்கை நீராடிப் போந்து. (௮)

விண்டுபூசனை செய் தாரதிசெய்து விமலன டிவிரும் பித்தாழ்ந்து
கொண்டு பினரவ்விடத்திருந்து நாபாஜி தனைக் கூவியுள்ளே
அண்டும் வகையொரு வரையும் விடாமல் வெளிப்புறத் திருக்கவாணை செய்து
மண்டு கதவடைத் தொருகம் பளம் போர்த்து மானச பூசனையின்மேவி. (௯)

சித்த மொருதன்மை யராய் ஸ்ரீ ஹரியைத்தியானிக்கத் திருமால் வாரா
தத்தினத்திலுளம் வருந்தித்தியானித்துத் தியானித்தங்கயர் வதாலுர்
இத்த குதிதனை வெளியிலிருந்த நாபாஜி தெரிந்தின்று சாமி
அத்தியிலோர் வணிகனது கலமுழுகலாகு கின்ற வதனை நோக்கி. (௰)

துவரை நகருறு வோனை யெனது கலமுழுகாமற் சூழ்தியானுற்
கவரின் மனத்தக் கிரஜிக் கைகந்திலொன்றிக் கலத்திலுள கனக மீவேன்
தவறுதல் செய்யேனென்று வேண்டினனவ்வணி கனது தன்றலோர்
உவமையு மில்லான் சென்றுனு மக்கிலா பங்கிடைத்தற்குன்னி மாதோ. (௰௧)

ஆதலினீர் சற்றுழலாத மைந்திருக்க வெனவோ தவவரவ்வாறு
மாதவனை நினையாமற் சற்றிருக்க நாபாஜி மறுத்துங் கூவி
மேதகையீரிப்போது கலங்காத்துக் கண்ணபிரான் மீண்டானீயிர்
போதரு மாநினையு மெனவக்கி ரஜிதியானிக் கக்கண்ணன் போந்தான். (௰௨)

பொன்றுடை நனைந்திருக்கச் சார்ங்க தரன்றோன்றுதலும் புகழ்ந்து போற்றி
மின்றுருந் திகிரியினு யிங்நேர மெங்கு கன்றாய் விளம்பு கென்ன
மன்றுழி முழுகாமற் கலங்காத்து வந்தேனவ்வணி கனுய்ப்பான்
தன்றன பொருளிலந் திலொரு பாகங்கொண்டு மடந்தனக் குநேர்தி. (௰௩)

செலவுனக்கு மிகுதியாயிருக்கின்ற தெனக் கூறிச் செய்யும் பூசை
நலமுடிந்த வுடன் மறைந்தானளினை நாயகன் பின்பு நனிவியந்தங்
கிலகு கதவைத்திறந்து நாபாஜிதனை யுள்ளே யெய்தக் கூவிச்
சலசமலருறை வாற்குந் தெரியாத தறிந்த தெங்ஙன் சாற்று கென்றார். (௰௪)

நகை முகராய் நாபாஜி சாதுக்கள் பிரசாத நாளு முண்ட
வகையதனுலுந் தேவரீர் கருணை வசத்தாலு மனத்துணர்ந்தேன்
தகைமிகு சீர்க்கண்ணனது செயலை யென வக்கிரஜி தயவு கூர்ந்து
மிகைநலஞ்சேர் நாபாஜிமுக நோக்கி மறைப்பொருளை விளம்புகின்றார். (௰௫)

ஹரிகுணங்களே புகழு மதிலும வனடியர் புகழடைவிற் கூறில்
சுரிமுகச் சங்கேந்து மவனுக்கு மிகமகிழ்வுண்டாமிது தோன்றாது
விரியு முலகத்தவர்க் கிம்மறைப் பொருளையுனக்கு நான் விளங்கச் சொன்னேன்
தெரிதி யென நாபாஜி யக்கிரஜிபாத மலர் சேவித்தேத்தி. (௰௬)

தேசிகராணைப் படியே பக்த சரித்திரங் குவாலேர பாஷை
மாசில் பிராக்ரத பாஷையிலும் வழங்க நாடோறும் வரைத லானார்
ஆசிலிவர் வரைவது கேட்டத்தேசங்களிலுள்ளோ ரவரைப்போற்றி
ஏசில் சிரவணஞ்செய்து மனனஞ்செய்தும் புகழ்ந்து மிருக்கலானார். (௰௭)

நாபாஜி பக்தர் திருவடிகளே சரணம்

ஆகச்சரித்திரம் ௭௫ க்கு செய்யுள் ௩௲௬௱௭௰

முற்றிற்று.



நானகதாசர் சரித்திரம்.

வேறு

நீடுமௌனஞானியாய் நெடிய வைராக்கியம்
கூடுவோராரிதனு மந்தினங் கூறுவார்
நாடு பஞ்சாபு தேசத்துளார் நானகர்
சூடுபேர் மிக்க சம்பத்துளார் துகளுறார். (௧)

ஆசையா லாசையு மளவிலா மோகமும்
மாசு சேர்டம்பமும் வளர கங்காரமும்
நாச மேய் கொலையு நன்மார்க்க நண்ணுமையும்
நீசமாகிய வெலாநிறை தலாணினிவிலே. (௨)

அத்தகைப்பொருள் கணல் வழியிலே யமையுமா
உய்த்தல் செய்திடருமு துவண கேதனனுடைச
சுத்த நாமந்தினஞ் சொல்லவுத் தேசராய்க்
கைத்தினால் விண்டுவுக் காலயங் கட்டினார். (௩)

அந்த நாடான தவிந்தர் நாடானதால்
இந்த மாகோயில் கண்டேவரு மிசைவுறா
நிந்தை செய்துறு மவர் நினைவை நானகர் தெரிந்
தைந்து மாமனமிக நாடு வாராயினார். (௪)

துட்டராகிய துருக்கக் குரோதியர் துணிந்
திட்ட விண்டாலயமினை செய் தேவாலயம்
நட்ட மாகச் செய்வார் நான் மறைக் குலமையும்
தொட்ட சற்சனரையுந் தொலைவு செய் வாரரோ. (௫)

ஆதலாலிவர் கடம்மரசனுக் குரை செய்து
மாதவன் சினகரந்தனையு மாய்க்கும் முனம்
சேதமாகும் வகை செய்து நாமே யென
ஏதமோடந் தவாலய மிடித்தாரரோ. (௬)

அத்துருக் கர்க்கு வப்பாக மசீது கட்
டித்துலக்கஞ் செய விந்தெலா மேசினார்
அத்தையோர் நானகரதையு முன்போலிடித்
துத்த கர்த்துச் செய்தார் தொலைவில் கொல்லைகளரோ. (௭)

கைத்தெலா நானகர் கழியுமா செய்ததால்
பித்தராயின ரெனப்பெரிது கண்டோ ரெலாம்
தத்தம் வாய் வந்தவா சொல்லியத் தாசரை
மெத்த நிந்தனை செய்தக்கவை நேர் வினவுவார் (௮)

சிலர் துணிந்திணைய நீர் செயலெனேபகர் கெனச்
சிலர்கள் சங்கரனையுஞ் சிலர் கணெண்கணனையும்
சிலர் முகுந்தனையு நேர்சிலர் பதங்கனையு மோர்
சிலர் களிந்திரனையுஞ் சிலர் செழுந்தழலையும். (௯)

கடவுளென்றடி தொழக் கருது கின்றனரினும்
புடவி யிங்கிதின் மதம்பல படப் புகலுவார்
அடைய நன்கென விசைந்துறவி வாறயர்கிறேன்
மிடை மினென் கொல்லை முற்றிலு மெறு விசை செய்தார். (௰)

யாவரும் வினவி யின்னகை செய்தாராகவே
தாவரும பொருளெலாஞ் செலவு செய்தனர் மகிழ்ந்
தோவருஞ் சுத்த சாத்து விகவைராக்கிய
ராய்வருங்காம மாதிய வெலாமறல் செய்தார். (௰௧)

அறிப கீரலது பைராகி யென்றறி யொணுச்
செறியுமோா வேடராய் ஸ்ரீ கரன் சிந்தையிற்
பிறிவுறு துறவுடற் பேணு மானங்கழீஇ
நெறிகொளான் மாவுறூஉ நிலையிலே நிலவினுர். (௰௨)

ஏவரோனுந் தமைச்சாணெறு வெய்திறல்
ஆவதாமவகை யவாகருள செய்வாராயுற
மேவரோ செயலெலா மிடைய விந்தாக ளுணர்ந்
தாவறீ ருமடச்ரோ பயிராகியோ (௰௩)

இனையனென் றறிகொறு திவணலந் திடலெனே
நினையின்மந் திரமுறீஇ நிலைதவிாநதன னதால
புனைவிலுண மருளுடன் புரள்கிறுன் பொருளெலாம்
அனையகன றிடமனத கள்ர்வினேங் குறுகிறுன். (௰௪)

இந்தவ, ரிற்பலோ ரெய்துகின் றனாதனம்
விந்தநேர் குவையினிவ் விதமியற் றினர்கொலோ
தந்தகொல் லையினுறுஞ் சனாகளுக் குதவியே
முந்தினன் ஞானியாய் முழுதும்விட் டனனரோ. (௰௫)

என்றுபற் பலரெலா மெனையசொற் சொல்லினும்
துன்றிராக் கதிரினோர் சுனகன்வாய்க் குரையெனு
நன்றுநா னகரெணி நாடொறுந் தமதுளே
மன்றலா துளவினுன் வாழவை குற்றனா. (௰௬)

வேறு.

இவ்வகை யியலுகின்ற நானக ரியல்புநோக்கி
வெவ்விய துருக்கரெல்லா மிகப்பொரு தரசன் பாற்போய்
ஒவ்வுநங் குலத்துளுற்றே னங்குலத் தொழுக்கந்தீர்ந்து
தவ்வினன் றிரிகின்றனென் றுரைத்தனர் சாற்றக்கேட்டோன். (௰௭)

ஏவலா ளொருவன் றன்னை யேவிநீ குலத்தொழுக்கம்
ஓவலின் றுகநிற்க வுரைக்கென வுரைக்கக் கேட்டோர்
மேவுமண் ணென்றேபற்பல் விதங்கலம் பொன்னுமொன்றே
தாவிலாப் பணிகள்வேறு தன்மைய வாதல்போல. (௰௮)

துணிமறை யுரைக்கும் விண்டு மயஞ்சகத் தென்றுதந்த
கனிமொழிப் படியேதெய்வ நாயகன் விளங்குகின்றான்
முனிவிறைய் வங்களாகப் பலவகைமுயலுஞ் சாதி
இனிலுந்தெய்வங்களாலும் பேதமின் றேனுங்கேண்மோ. (௰௯)

துலுக்கர் சிப்பியர் குலாலர் புலையர்தோல் வினைஞரான
நலக்கபீர் நாமர்கோரா நயம்பெறு சோகாமேளர்
விலக்கரு ரோகியென்போர் விண்டுவே கடவுட்கெல்லாம
சொலற்கருங் கடவுளென்று சூழ்ந்துநற் றொண்ட ராஞரா (௨௰)

ஆதலா லாதித்தெய்வம் விண்டுவே யாமென்றெண்ணி
மாதவன் றனுட்கொண்டு நாமநான் வழுத்துகின்றேன்
ஈதறி கென்றோர்பாட்டை யெழுதினரவன்கை யீயத்
தூதன்போ யரசன்கையி லீந்தெதிர் தொழுது நின்றான. (௨௧)

உய்த்தவக் கவியைநோக்கி யுளமகிழ்ந் தரசனுய்த்தோா
சுத்தமெய்ந் நிலைமைதன்னைச் சோதிக்க நினைவுகொண்டு
மெத்தவுங் கோபங்கொண்டான் போல்வெளிக் காட்டிமேவசாய்
இத்தலத் திருக்குமென்சொ லிகழ்ந்தனன் மறுத்தலாலே. (௨௨)

கைப்பிடி யாயன்னனை கொணருங்கள் கடிதினென்ன
ஒப்பறு படாணி யீராஞ் ஞூறுபே ரொருங்குசெல்லத்
தப்பிலர் தம்பாலே விஞ்ஞவர் தாமுஞ் சூழ்ந்து
பற்பலா யுதங்களோடு நானகர் பதிக்கு வந்தார். (௨௩)

உள்ளுற முயலும் போதுள்ளுறைநத நானக ரறிந்து
புள்ளிவர் வோனை யெணணப போந்தனர யுதவீரா
தள்ளருங் கடுமை பூண்ட சததிர வததிரங்கள
கொள்ளையின் வீசி யெய்யக் குலைந்தனர் படாண் களெல்லாம. (௨௪)

பயந்து போயரசன் பக்கல் பார்த்திப நாங்கள் சார்ந்தோம
ஐயந்தரு மயுத வீரர் சார்ந்தன ரவரகத்துள்
வியந்திடப் படைகள் கொண்டு வெளிவந்தெம் மேல் வீசுறறா
அயர்ந்தெதிர் நிற்க வஞ்சி யடைந்தனமும் பாலென்றார். (௨௫)

அன்னது கேட்ட வேந்தனட்ட சித்தியும் பெற்றோரை
நன்னயந் தெரி விலாதோர் நவில்வது கேட்டு வீணே
இன்னல் செய்தன மென்றெண்ணியனு தபித்திரணடு கையும்
துன்னுற வஞ்சலித்துத் துதித்துட னெழுந்து வந்தான். (௨௬)

நானகரகத்துள் வந்து நயந்து சாஷ்டாங்கமாகத்
தானடி பணிந்து மிக்க சாதுவாய் விளங்கு நும்மை
யானஞரு றுத்தினேனே யாயினுங்கிருபை கூர்ந்தஞ்
ஞானமிக் குடைய வென்னை நாதகாத் தாள்க வென்றான். (௨௭)

வேண்டி னன்று தித்தன்னோர் தம் விடை பெற்றுச் சென்றானுக
ஆண்டன செயல்களெல்லா மறிந்தன ரூரிலுள்ளார்
நீண்டன கீர்த்தி யெங்கு நிமலரை யடிவணங்கிப்
பூண்டன ருபதேசங்கள் பொருள் பல தருதலானார். (௨௮)

வருபல பொருளுங்கொண்டு சாது சர்ச்சனர்க் குவாய்ப்பத்
தரும முதிட்டு வந்தாரவர் மடந்தங்கு சீடர்
பெருகினரிகத் திலாசை பிறழ்கிலராயிருந்தார்
இருவர் சூத்திரா மர்தானு வென்பவர் தேசிகர்க்கு. (௨௧).

உடல் பொருளாவியர்ப் பணஞ்செய் திவ்வுலக வாழ்க்கை
விடல் செய்து தேசி கோத்தமமை விடார் சேவை செய்து
மடனறு மவர் தம் வார்த்தை வழி வந்து கருணை பூண்டார்
திடமுடனிவ்வாருகச் சென்றன சின்னாள் பின்பு. (௩௰)

ஊனமில்வாழ் வென்றுன்னி யுற்றனர் மடத்தி லீதும்
ஈன மற்றதிலு மென்ன வெண்ணினர் மடத்திருக்க
நானகர் சூத்திராவை வைத்து மர்தானு நண்ணத்
தேனமர்துள வோனுமஞ் செபபினரழைத்துச் சென்றார்- (௩௧)

நிலைபெறுங் கண்ண விக்கிரகந்தனை நிலையிற் பேர்த்துக்
குலைவுற மாட்டெலும்பைக் கூட்டிக் குபபுறக்கிடத்தி
அலைவு செய்தனர் மக்காவி லெனவகத் தெண்ணிச் செய்யாள்
தலைவனைக் காணவேண்டிச் சார்ந்தனர் வழிக்கொண்டம்மா. (௩௨)

சார் தரு வழியிலோராறனது ஜலமிக்காகி
ஆர்தரக்கண்டா ரோர் காலலக் நிரஞ்சன மென்றோதி
நீர் தனினடந்து சென்று ருடன்வரு சீடர் நேரார்
வார்தரு கரையினின்றார் மனத்துறு பயங்கொண்டம்மா. (௩௩)

தேசிகர் தமைக்குறித்துச் செங்கை ளிரண்டுங்கூப்பி
ஆசில்சீ ரையரோ யானும்முட னடையவஞ்சிக்
கூசியிங் குறுவேனும்மைக் கூடுறத் தகுமுபாயம்
பேசியங் கழைத்துக்கொள்க வென்றுபே துற்றார்மாதோ. (௩௪)

பேதுறு சீடர்தம்மை நோக்கினர் பிரளயத்தின்
மீதுற நின்றுகொண்டு வேண்டுசெத் குருதியானம்
போதுற மனத்துட்கொண்டு போதரு கிற்பையானல்
தீதுற லின்றிச்சார்வா யென்றெடென் றினிதுசெப்ப (௩௫)

அவர்சொன்ன படியேயாசா னைத்தியா னித்துக்கொண்டு
புவனமங் கிடையளாவப் போயினர் நடுவினின்ற
தவரிட மிவர்கணைக்கா லளவுறச் சார்தலாக
எவமொடிவ் வாற்றுநீரொன் னிடையள வாயிற்றென்னே. (௩௬)

அலக்நிரஞ் சனமென்றோதா மையினல வோவென்றெண்ணி
நலக்குரு நினைவைவிட்டு நானகர்போனடந்து
செலற்கது செப்பநீர்தான் றிரள்கழுத்தளவதாகச்
சொலற்கருங் குருவேயாற்றி லமிழ்கின்றே னென்றுசொன்னன். (௩௭)

திரும்பினர் நோக்கியாசான் றியானமேன் விடுத்தாயென்ன
விரும்பினர் குருதியான மேவலுமுன்போ லாக
அரும்பெறற் கரைபோய்ச்சேர்ந்தா ரணுகுதே சிகரன்னார்க்குக்
கரும்பிர சம்போற் கொள்ளக் கனிந்திதோ பதேசஞ்செய்வார். (௩௮)

கேடரா னோராசான்முன் செப்பிய வழியே செல்லல்
நாடரு நலமதாகு நவில்வழி நடவாராகில்
கேடது வாகுமென்னக் கிளர்ந்தது நன்றென் றாசான்
பீடமர் கமலபாதம் பேணினர் வணங்கினின்றார். (௬௩)

பின்னிரு வரும்போய் மக்கா வருகுறப் பேசவ்வூரார்
மன்னுமாட் டிறைச்சிசோறு விற்பதிந் துக்கள்வந்தால்
துன்னிடா தகற்றறப் பிவரிற் கொலைசூழ்த லன்னோர்க்
கின்னன வழக்கமாக விருப்பதை யிவரறிந்து (௬௪)

மக்கமா நகரிலுள்ளோர் கண்ணுக்கு மறைவதாகப
புக்கிரு வரும்போய்க் கோயிற் புகவுறு முஜாவர்கண்டு
தொக்கதெவ் வாறிங்கின்றே றெனவியப புற்றுத்தோன்றும்
மிக்கவர் தம்மைநோக்கி நீவிர்யாரெனவினவ (௬௫)

உற்பத்தி லயத்துக்கேற்ற காரணமாகியோங்கும
சிற்பரஞ் சோதியாகித் திரிகுண ரீதமாகிப
பற்பல்வியா பகமுமாகிப் பதிநிரா மயமுமாகித
தற்பர மாகிநிற்ப தெதுவது தான்யா னாகும் (௬௬)

அடியரைக் காத்தற்காக வவனியில் யாருங்காணிவ
வடிவொடு வந்தேனென்ன முஜாவர்நீ வழங்குமாறறம
முடிவுறப் பரிக்ஷை யீந்தால் மொழிதல்சத தியமாமென்ன
மடிவறு தாசரோது பரிக்ஷைநீர் வகுக்கவென்றார். (௬௭)

இந்துக்கள் வணங்குதற்கா யியற்றுவிக்கிரக மிங்கு
முந்துற்ற தனமணிற் புதைத்தன ரஃது முன்போல
வந்துற்று நிற்கச்செய்வீ ராயினீர வழங்குமாற்றம
மைந்துற்ற தென்னச்சொல்ல நானகா மனத்துட்கொண்டார். (௬௮)

கண்ணனை நினைத்துக்சீரக் கடலுறு வோனே பூமேல
நண்ணுமங் கைக்கின்பா கருணைநிதி நளினநாபா
எண்ணுறு பக்தவற்ச லாவிய லான்மராமா
மண்ணுல களந்துகொண்ட வாமனாவென்றுவாழ்த்தி (௬௯)

அடியனே னுரைத்தவார்த்தை யவமுறா தவிந்தர்காண
நெடிதெழுந் தினிதுநின்று நிலைதரல் வேணுமென்னப்
படியளந தவனன்பர்க்குப பரிந்தெழுந்தாழிசங்கம
வடிவுறத் துலங்கி நின்றான் மனத்துப சாரமெல்லாம (௭௰)

செய்தனர் கண்டுபோற்ற முஜாவர்மற் றதுதெரிந்து
மெய்தனி னடுங்கியஞ்சி நானக ரடியில் வீழ்ந்து
பொய்தவி ரன்புகொண்டு போற்றிநீ ரோமெய்யான
தெய்வமிங் குதித்துவந்தீ ரெனத்துதி செய்தல்கேட்டு (௭௧)

அங்குநின் றெழுந்துவெற்பின் சாரல்க ளனைத்துநீங்கிப்
பொங்குமோ ராற்றின்பாங்கர் போந்தன ரங்கோர்வேடதன்
தங்குதன் சேனையோடு நதிக்கரை தன்னிற்சார்ந்து
சங்குமே வாற்றைநீந்தத் தகாதவ னாகியுற்றான். (௭௨)

தாசரைக் கண்டுபோற்றித் தாழ்ந்தடி வணங்கிமிக்க
நேசமுட் கொண்டிவ் வாற்றை நீந்துதற் குபாயஞ் சொல்க
மாசறு மடிகேளென்ன மற்றவர் காயித்ததால்
காசறு கல்லைசெய்தங் கவர்கரந் தந்துவேந்தே (சகூ)

நீயுன் றனிகத்தோடு நோக்கிதன் மேலே யேறிப்
பாயுநீ ராற்றைத் தாண்டு கெனப்பகர்ந் துற்றனரீடா
மேயுற்ற காங்கடந்து விரைந்துவந் தனரவ் வாற்றை
ஆயுமவ் வாசனீந்தக் கல்லையையாற்றில்விட்டு (ருo)

எய்தினர் றோற்றவேற யாவர்க்கு மிடமுண்டாகி
மையில்புட் பகமானம்போல் வந்தது நதியின் மீதாயப்
பொய்யிலா தந்தக்கல்லிற் பூவல னனிகத்தோடும்
கையற வின்றியாற்றிற் கரைவந்து சேர்ந்தான் மன்னே. (ருக)

திரமவந் தடைந்தவேந்தன் சிந்தையின் மிகவியந்து
காரண புருடனொன்று கருதின னவர்தம் பாதம்
சாரவீழ்ந் தெழுந்துபோற்றிச் சாமிநீ ரேயெனக்கு
நாரண னுருவங்காணச் செய்யுமி னென்ன வின்றான். (ருஉ)

நிராமய ரூசியெங்கு நிறைந்தநின் மலனைநேரோ
பராவுறக் காணவேண்டிற் பரமசற் குருவைப்பற்றி
விராவுறு முபதேசாசா ர விளங்குறக் காணலாமித்
தராதலந் தனினமற்றென் றுலுந்தெரி தரலகூடாது (ருங)

என்பது கேட்டவேந்த னிவ்வுரை மெய்தா னென்ன
அன்பரை வணங்கிச் சென்று னணிநகர் சீடரோடு
பின்புநா நகாவருமவே தவ்வுழிப் பிரமன்போலும்
இன்புறு தவத்தரான யோகக ரொயதக கண்டு (ருச)

வணங்கின னவரைநோக்கி வந்தகோ ரக்கர்சொல்வார்
நுணங்குநுண் ணறிவினீர்நீர் நுமமகத் துவங்கள் பாரமீ
திணங்குற வெளியிட் டுள்ளீ ரின்றறிந் துவாரந் தனனில்
கணங்கொள் நாவில்கம போகலந்துற்றனாமாதோ (ருரு)

அனைவரு மரிதென்றுச் சாதலா லவர்கட்கெல்லாம்
புனைவுண வளித்தல்வேண்டு மென்றனர் புகலக்கேட்டு
நினைவினீர் முன்னரச் சென்றங் கவருண வுண்டற்கு நேர
முனைவரோ சொன்மினென்ன முந்தினர் சென்றனாமாதோ. (ருசா)

நானக ரவாமுன் சென்று நாவில்கம் பேருக்கும்
போனகந் தரலுமுண்டு புகழ்ந்தன ரிருக்கும்போது
யானக மாக்கமவந்த கோரக்கர் மற்றெல்லோர்க்கும்
நானக ருங்களுக்கு நல்குவ ருணவின் றென்றார். (ருஎ)

சேரநீர் வாருமென்னச் செப்பநா னகரெங்கட்குப்
போரனன் குணவளித்துப் போயினரிப்போதென்னத்
தீரராகியகோரக்கர் மிகவியந் திருக்குஞ் செவ்வி
நேரநா னகர்வந்தந்த நிமலரை வணங்கினின்றார். (ருஅ)

நின்றநா னகரைக்கண்டு கோரக்கா நெகுமன்போடு
துன்றமார் புறவணைத் துச்சூக்கு மவடிவங் கொணடு
நன்றிவ ணூற்றோர்க்கெல்லா நலகினீர் விருந்துவந்கின்
றொன்றரி தாசரும் போலுல கிடையொருவ ருண்டோ. (௫௧)

கண்டிலே னெங்குமென்று களித்தனர் ககன மாாக்கம
அண்டினர் சென்றூர் செல்ல நானகர் மடமடைந்து
தொண்டரோ டிருந்துமன் றற்றுழாய வனுமஞ் சொல்லிக்
கொண்டனர் வாழ்ந்தார் நாளுங்குளிர் மகிழசிறபப மாதோ. (௬௰)

நானகதாசா திருவடிகளேசரணம
ஆகச்சரித்திரம் ௪௭-க்குசசெய்யுள ௬௩௬௱.

முற்றிற்று.



பிரோமாபாயி சரித்திரம்



வேறு

சாதுசர்சனர்தம் மிடத்தன்பு மிக்கவர்தாம்
ஓதுபாகவதம் வினவுறுகுண முடையார்
ஸ்ரீ தரன்பெருங் கீர்த்தனத் தன்பு செய்திறத்தார்
பூதம்யாவை யிலுந்தயை பொருந்திய பொற்பார். (க)

ஊரிதியான மேயன்றி வேறொன்றையு மறியார்
பெரிய காசியில் வளர்பவர் பெயர்பிரோ மாபாய்
தெரிய மங்கலியார் தினங் கங்கை சேர்ந்தாடல்
புரிவர்தம்மகத் தொருகண்ணன் மூர்த்தியைப் பொற்ப. (உ)

அர்ச்சித் தெத்துவர் தினமும் பாகவதங் கேட்பாராய்
இச்சித் தானந்த பாஷ்ப மோடவச மாயிருப்பார்
குச்சிற் கெய்தின மொருதினம் பசிமிகக் கொண்டு
மெய்ச் சிச்சாது சஜ்ஜனர் வயக்கண்டனர் விரும்பி. (ந)

வணங்கியங்கவ ராசனத்துற வகம் வைத்து
நுணங்கலின்றி மற்றிவருணவ முகிட நோக்கில்
இணங்கு ... று பாகவத சிரவண மின்றுகும்
உணங்குவார் பசியால் வினவுறச் செல்லுவோ மேல். (ச)

அன்றியும் வருசாதுக்கள் சேவை கிட்டாமல்
இன்றுநானடை ராதியாயி துவளை யியற்றும்
நன்றதாகிய சுகிர்தமெல்லாங் கெடனண்ணும்
என்று தம்மனத் தெண்ணினர் செல்லுறுதி ருந்தார். (ரு)

வயது பத்துள ஞனதம் மகன்றனை நோக்கி
நயமொடின்று போய்ப் பாகவதந் நன்கு வினவி
அயர்விலா தெனக்குவந்து நீயுரைத்தி யென்ற னுப்பி
மயர்விலா தரிநாமங்கள் வழுத்தி நீராடி. (சா)

வந்துபோனக மட்டுவந் துளவயி ணவர்க்கு
முந்துபாத பூசனைசெய்தம் முளரிநீர்கொண்டு
தந்துசோட சமா முபசாரமுந் தகவாய்
உந்துபோனக முண்ணச் செய்தார் மிகவுவந்து. (எ)

உண்டபின் கரங்கால் சுத்திசெய்திடவுஞற்றி
மண்டு சீதளச் சந்தன மருவுதாம் பூலம்
விண்டு தாசருக் கீந்து பசரித்தனர் விரும்பி
அண்டிஞன் மகனவனுடன் றமுமுண்டாராய். (அ)

மத்தியானத்தின்மகனை நீகேட்ட பாகவதம்
உய்த்தயான் வினவுறச் சொல்லு கென்னலு முரைத்தான்
மெய்த்தகோ குலத்துறு நந்தகோபற்கும் விரும்பு
மைத்தகண்ண சோதைக்கு மோர்குழந்தையாய் வளர்வான். (கூ)

அன்னை யோர்தினந்தயிர்கடை போதினி லழுது
தன்னியந் தரவேண்டினான் கடைதலைத் தவிர்ந்து
மன்னு மங்கவள் பால்கொடுத் துறவவன் மனத்தில்
உன்னினான் விநோதஞ் செயவடுப் பிற்காயும்பால். (௰)

பொங்கிமேல் வழிவுறத் தழன்மிகும் படிபுரிய
அங்கிமிக்க தாய்ப்பானை யிற்பாலெலா மழன்று
தங்குபானை யுட்சிறிது மில்லாமலே தவிர
நுங்குபால்கருகியதறிந்தமலனை நூக்கி. (௰௧)

ஓடிவந்து நோக்குறு பொழுதுள தயிர்த்தாழி
சாடிவீதியிற் றவழ்சிறு பாலரைத்தான் கூஉய்
நாடிமற்ற வருடன் சிதறிய வெண்ணெய் நயந்து
கூடியுண்டனன் கொள்ளைசெய் தாயிடைக் குறுகி. (௰௨)

பாலெலாஞ் சிந்திப்போயவே யெனவுளம் பரிந்து
சாலமீண்டனள் கண்டன ளுடைதயிர்த் தாழி
ஏலும் வெண்ணெயுந் தயிரும் போயின வெனவிரங்கி
மாலின் மேலுடைத் தானென மனங்கொதித்தனளே. (௰௩)

இனையன் போற்புரி வாருலகத் தெங்குமில்லை
மனைக டோறுமிப்படிச் செய்வா னெனவுள மதித்தங்
கனையர் சொல்வதும் பொய்யன்றித தீங்குசெய்பவனை
நினைவி லேபய முறமிகத் தண்டிக்க நினைந்தாள். (௰௪)

கையிலோர் பிரம்பைக் கொடுகண்ணன் பாற்கடுக
ஐயனோடின னடிப்பளென் றச்ச முள்ளவன்போல்
வெய்யகோபமோ டவன்றனைத் தொடர்ந்தனள் விரைந்தாள்
மையல் சேருறு கோபிகள் கண்டனர் வருப்பார். (௰௫)

ஆதியே மிகவன்பு செய்த தினடங் காமல்
தீதிலே மிகச் சிறந்தன னிவனென்று சினமுற்
றோதினார் முனம் யாங்கள் சொல்லுவதெலா முன்னாய்
கோதியாவு நீயுந் தெரிதர வின்று குறித்தான் (௰௬)

எரிதழற்க ணெய்யு குத்தெனக் கோபிக ளியம்பத்
தெரியசோதை மிக்காள் சினங்கொண் டவற்றேடி
இரிய மற்றவ னெங்குங் காணு தொளிந்திட்டான்
ஹரியை நேடினள் காண்கிலாள் மிகவயர் வுற்றாள். (௰௭)

சோர்வு கொண்டன ளுடன் மிகவருந்தித் துண்டத்தில்
வேர்வு சிந்திடத்தாய் நிற்பதைத் தெரிவிமலன்
சார்வு வந்தன னிற்கமற்ற வன்றனைத் தாய்கண்
டோர்வு கொண்டன ளுரலிடைப் பிணித்தடித் துரப்ப. (௰௮)

வியந்துமற்றவர் தாளிடைப் பணிந்துவீழ்ந் தெழுந்து
நயந்துமக்கலர் மேன்மங்கை நாயகன் கருணை
இயைந்திருக்கின்ற தியான்செய்த பிழைபொறுத் தருள்க
உயர்ந்துளீரெனத் துதிபல வுரைத்தனர் போனார். (சா)

சிலதினங் கழிந்தபின் பொருதினஞ்சுகா நந்தர்
உலவும் யாத்திரை செல்வதற்குன்னினர் மனைவி
திலகவாண்முக நோக்கிநீ நம்மனை செறியும்
நலவருக்குமுக் காணமுஞ் சுத்தியாய் நாளும் (எ)

பூசை செய்தவர் சேவைகொள் கெனநனி புகன்று
மாசில் யாத்திரை சென்றனர் சாதுபோல் வடிவத்
தேசிலான் வரக்கண்டனர் சுரசுரீயென்போர்
நேசமிக் குறப்பூசிக்கக் கண்டுள நெகிழ்ந்து. (அ)

நினது ரூப சுந்தரத்திடை மூழ்கின னீயென்
மனதுகந்திடப் போகதானங்கொடு மாதே
எனலுங்கற்புடை யார்மனத் திரங்குத லின்றி
அனகரோபுசித் தருள்க போகதா னம்பின்பாக. (கூ

உம்மதெண்ணமென் றறுசுவைப்போனக முடனே
செம்முவேடதா ரிக்கிட வுண்டனன் சிறக்க
நம்மதெண்ணமுற் றிற்றெனக் காமத்தை நயந்தான்
அம்மனைக்கணே யிருந்தனன் பொழுதத்தமிகக. (௰)

யாமமொன்றுசென் றபின்பந்த விணையில் கற்புடையார்
தாமமர்ந்துறு பள்ளியிற் சயனநன் கமைத்துள்
ளேமணந்தவ ரடியிணைக் கமலங்க ளெண்ணிக்
காமம் விஞ்சின கசடனுள் வரவழைத்தனரோ. (௰௧)

வேடதாரி யுட்சென்றனன் மாதவமின்றோர்
ஆடல் வெம்புலி யாகத்தன் கண்களுக்கமைய
ரீடலர்ந்ததீ பத்தொளி யிற்கண்டு நில்லா
தோடவெம்பய முடையனாய் வெளிப்புறத்துற்றான். (௰௨)

பொன்னி னாரமென் றெடுத்தது புயங்சமாகியதும
நன்னர் நல்லமு தாயது நஞ்சதாகியதும்
என்ன நெஞ்சுற வெண்ணின னடுக்கமுற் றிருந்தான்
பன்னு பள்ளியி னின்றுரு முழக்கொடு பார்க்க. (௰௩)

அஞ்சினான்வெளிப் புறத்திலே நின்றுகொண் டன்னே
விஞ்ச நிற்கப ராதியாகிய வென்றன் மிகைதான்
எஞ்சுறப் பொறுத்தருள்க வென்றெதிர் நின்றுவணங்கித்
துஞ்சினான்மிகு தூரத்தே வந்தொரு சூழல். (௰௪)

மறுதினத் தருணோதயத் தெழுந்தங்தமாதர்
குறுகிவாயிலிற் சாணத்தைக்கொண்டனர் தெளிக்க
உறுவதாயின போதுகண்டனன் வெளியுற்றோன
நறுமலர்ப்பதம் வணங்கினன் றுதித்தன னயந்தான். (௰௫)

பிழைபொறுத் தருள்கெனப பிரார்த்தித் தனன்பெரிதுய்
குழைவுறக்கண்டு கொமளக் கோம்ப ரன்னாரும்
தழைவுறச் சமாதானமாய் நன்றென்று சாற்றத்
தொழுது மற்றவன் காமமாதிய வெலாந்தொலைத்தான் (௰௬)

ஊழியஞ் செய்தங்குற்றனன்றிங்கணான் கொழிய
ஆழிமாலன்ப ராகிய சுகானந்தரடைந்தார்
கேழிலாதவர் தமைக்கண்டு வேடமேற்கிளர்ந்தோன
வாழியென்றடி பணிந்தன னிகழ்ந்தன வகுத்தான். (௰௭)

நன்றெனச் சுகாநந்தருமபய நல்கினராய்த்
துன்ற வன்றனக்கின்னருள் சுரந்து நாடோறும்
மன்றலந்துழாயவனடி வழுத்தினர் வாழ்ந்தார்
ஒன்றி மற்றவனும் மரிதாசனா யுற்றான். (௰௮)

சுகாநந்தர் திருவடிகளேசரணம்

ஆகச்சரித்திரம் கூசக்கு செய்யுள் சுதுளாகூ௰௬

முற்றிற்று

மாதவதாசர்சரித்திரம்.

வேதசாஸ்திர நிபுணர் மிகுவிரக்தர் பிரபஞ்ச விவகாரத்தில்
காதலிலாதில் வாழ்க்கை தனிலிருந்து பல்காலங்கழிந்த பின்பு
மாதர் மனைவியர் பரமபதஞ் சென்றாரன்றே மாதவரென்பேரார்
நோதருசம் சாரபந்த மற்றதெனச் சமாதான நுனித்துக்கொண்டு. (க)

மனையிலுள தனதான்ய பாத்திர வஸ்த்திர முதலாம் வகைகளெல்லாம்
சனநேயத்தொடு மறையோர்க்குத தத்தஞ்செய்து பாதிகள் கழிந்து
தனைநேரில் ஜகந்நாத யாத்திரை சென்றார் சென்று சமுத்திரத்தில்
நனர் நானஞ்செய்து ஜகநாதன் சன்னிதி சென்று நமஸ்கரித்து. (உ)

சகுண ரூபங்கண்டு சேவாநி தேவாவை குண்ட நாதா
நிருபந்த மறுபட்டவெனக்குச் சுஜனபுத்ரர் மனைவிமித்ரர்
வெகுதனந் தாய்தந்தை குருதெய்வ நீயேயல்லால் வேறொன்றில்லை
தருவாய்மை யாதவென்று சாதனமு நின்பஜனை தான்வேறில்லை. (ங)

என்றரியின் பாதார விந்தங்களைச் சிரத்திலேந்திவேண்டி
நின்றபொழு தாச்சகன் கண்டேன் சுவாமியை நலிவு நோகின்றாய்நீ
ஒன்றுமிலாக் கையொன்ற்று விழுந்து விழுந்தே கும்பிடுகிறாயுன்னி
நன்றுபுறஞ் செலகென்று தள்ளிவிட்டான் மாதவரு நனிகலங்கி. (ச)

தனியிடஞ் சென்றங் கிருந்துசாமியுன்றன் சகுணரூ பத்தைக்காண
நனிவிரும்பு கின்றேனீ வந்தருள்வா யெனமூன்று நாளிருந்தார்
புனலு முணவ தில்லாம லரிதியானஞ்செய்த வசந்தாம்பூண்டு
மனவுருக்கு மணிகாந்தற் கருள்பிறந்து தேவிதனை மகிழ்ந்து நோக்கி. (ரு)

இன்றுநீ சகுணரூ பங்கொண்டு மாதவதா சன்முன்னேகி
நன்றுபோனக மிடுக வெனவுடனே லோகமாதா நன்றென்று
துன்றுசுவை யோதனமோ பொற்கலத்தினிறைத்தங் குச்சுன்னி முன்னே
நின்று தியானித்திருக்குந் தாசர் தமை யெழுப்பியுண்க நீ யென்றோத. (சா)

துயிலுணர்ந்து ஜகன்மாதா வடிவழ கெல்லாங்கண்டு துணுக்கென்றஞ்சி
மயிலனையதாயே நீயார் சொல்லு கெனவுருக்கு மணித்தாயைய
செயிரற நீயாரைத்தியானிக்கின்றா யோவந்தச் செல்வன் மார்பில்
உயிரனையளாயமரு முருக்கு மணியாளுனக்கிங்குணவு நல்க. (எ)

பரம புருஷன்றந்தான் விடை யெனக்குன்றனக்குஞ் சில்பகலிலீவான்
வரமருளுஞ் சகுண ரூபத்தை நீவிரைவிலுண்டு மகிழ்தியென்று
திரமொழிரை செயத்தாசர் தேவியடிகளில் வணங்கி யுண்டல் செய்தார்
கரமொடு கால்சுத்தி செய்யப் புனலுந்தந்தாள் கருணைக்கடலே யன்னாள். (அ)

பொலன்றட்டத்துடன் மணிகள் பொதிந்த வகப்பையுமங்கே புகக்கிடத்தி
நிலந்திகழ் கோயிற் சென்றாள் மாதவரங்கவற்றை நனி சுற்றஞ் செய்தத்
தலந்தனிலே வைத்துக்கொண்டுறங்கினார் பின் பருணோதய காலத்தில்
வலந்தரு கோயிற் கதவைத்திறந்துள்ளாரதி செய்வோர் வந்து நோக்க. (க)

கனகத் தட்டினைக்காணார் களவாயிற்றென்று நனி கலங்கித்தேட
மனம் வைத்தாராய் வெளியில் வரும்போது மாதவர் தம்மாடுகண்டு
சினமுற்றிங்கிவனுலு நாளாகக் கொக்கைப் போற்றி யானங்காட்டி
அனகச்சொத்தினைத் திருடினனென்று பிணித்தனர்போயறைக்குள் வைத்தார்.

அன்றிரவிற்சக நாதனர்ச்சகர் தங்கன விடைவந்தந்தத்தாசன்
நன்றெனக்குப் பிரியமுள்ளோன் மூன்று நாளுபவாச நண்ணலானன்
சென்றுருக்குமணி தன்னைப்போன கந்தந்தருள்க வெனச் செப்பினேன் யான்
மன்றன் மலரவளங்கே மறந்திட்டாளவனை யென்னீர் வருத்து கின்றீர். (௰௧)

விடுகவெனச்சொலி மறைந்தானர்ச்சகர் கண்விழித்தெழுந்து வீணேயன்றே
கடுமை செய்தோம் பத்தரை யென்றனுதபித்து மாதவரைக் கட்டவிழ்த்து
நெடுநயஞ் செய்தடி வணங்கியறி யாமற் செய்தபிழை நீர் பொறுக்கென்
றடுசுவைச் சோறிட்டவன் பாற்கொடு வந்தாலிங்கனஞ் செய்யச்செய்தார்கள்.

பின்பு கண்ணன் பிரசாதமுந் தந்தாரன்று முதற்பேணி யன்பற்
றின்பு செய்து பிரசாத மீந்து வந்தார் மாதவதா சென்போரங்கே
மன்பிரசாதத்தையுண்டு வாழ்ந்திருந்தாரிப்படிக்கு வரும்போதோர் நாள்
அன்பொடிர வினிலிறையை யர்ச்சித்துக் கறபகிரகத்தைப பூட்டி. (௰௩)

தங்கண் மனையடைந்தனரர்ச்சகர் வெளியிற்றங்கிய மாதவதா சென்போா
செங்கணெடு மாறியானத் துடனே தூங்குதல் செய்திருக்கும போது
அங்க நடுங்குறக் குளிருண்டாயததனைத் தெரிந்த வமலன்றன்மேல்
பொங்கு நெடும்போர்வைதனைக்கொடு வந்து தாசருக்குப் போர்த்திபோனன்.

அருணோதயத்திடை வந்தர்ச்சகர் பொற்கதவு திறந்தங்கு நோக்கக்
கருணாநிதியின் போர்வை காணாராயதி சயித்துக் கலங்கித் தூங்கும்
தெருண் ஞான மாதவர் பாலோடி வந்து போர்த்திருக்கத் தெரிந்திவர்க்கு
மருணீவு கண்ணபிரான் முழுதன்பு கொண்டிற்றே னெனவணங்கி. (௰௫)

துதிசெய்தா ரவ்வூரிலரசனிவர் பெருமை தனைச்சொல்லக் கேட்டான்
அதிநேயங் கொண்டிவர் பாலடைந்து நமஸ்கரித்துத் தோத்திரமுஞ் செய்ய
மதிஞான மாதவர் கண்டிவ்வளவு நமக்கேதுக்கென மறுத்தப
பதி நீங்கிவடமதுரா நகரடைந்து கண்ணபிரான் பதிக்குட்சென்று. (௰௬)

கர்ப்ப கிரகத்திடைப் போய்ப்பிரானடி சேவித்து நிற்கக் கண்டங்குற்றோர்
சர்ப்ப சயனத்தனரு குறத்தகுமோ வென்று வெளிதள்ளி விட்டார்
பிற்பணிய வந்த தொண்டரங்கு நின்றும் வேறொரு பாற்பெயர்ந் திருந்து
பொற்படியுந் திருமார் பன்றனை யுள்ளங் கொண்டு புகழ்புகலும் போது. (௰எ)

கனவாள னெனுமொருவ னிவர்கண்ணன் றேசனெனக் கருதியுண்பொ
ஜனசாமக் கிரியை யெல்லாங் கொடுவந்தட்டுண்க வெனச் சாற்றத் தாசர்
அனயாவும் பாகஞ்செய் தடலரியைத் தியானிக்க வப்போதே மால
வனமாலை கிரீட குண்டலங்கள் சங்கு சக்கரங்கள் வயங்க வந்தான். (௰அ)

பீதாம் பரந்துலங்க வெதிர்நின்றோன் றனைநோக்கிப் பெயரா வன்பர்
பாதா ரவிந்தத்திற் பணிதலுந் தாசனை யெடுத்துப் பரிந்தணைத்து
நீதானென் பிராண சினேகித னுன்னைத் தள்ளிவிட்டார் நீதிதேரார்
மேதாவி யானவுன்னைத் தேடிவந்தே னென்று விழிகளி னீர்விட்டான். (௰௯)

தாசர்தாமுங் கண்கணீர் பெருகவழுது சாப்பிடுகெவென்று
போசனமிட் டிருவரு முண்டானபின்பு கால்கைசுத்தி பொருந்தச் செய்து
வாசவனத் திருமார்பன் கோயில்வந்தபின் பங்குவைக ரேறும்
நேசமுடன் பூசிப்போர் நிவேதனங் கொண்டெதிர் சாரநிமலன் கண்டு. (உ௰)

இப்போதுதான் யான் மாதவதாசருட னுண்டிங் கெய்தினே னீர்
கைப்பாகஞ் செய்துதரும் போனகம் வேண்டாம் பசியகட்டிவில்லை
மெய்ப்பான வெனதுமாதவ தாசர்தமை வெளியில்வெருட்டி விட்டீர்
அப்போதேயவர் கோபம் கொண்டய லோரிடந் தனிலே யமர்ந் திருந்தார். ()

ஆதலா லவரைச் சமாதானஞ் செய்தழைத்து வந்தாற்றான் யான்
ஓதனமுண் பேனன்றே லுண்ணே னென்ற சரீரியா யுரைக்கப்
போதவியந்துந் திகைத்துந் தெளிந்து மாதவதாசர் புறம்போய்க் கண்டு
மேதகவாய்ச் சமாதானஞ் செய்தழைத்துவந் தனரர்ச் சகர்விரும்பி (உஉ)

வந்தமாதவ தாசர் வடமதுரா புரிதனிலே நான்கு மாதம்
விந்தைய ரிபஜனைசெய்து விடைபெற்றுக்கோ குலபிர்ந்தா வனத்தின்
முந்தியரு ளனைச் சேவித்துப்பின் ஜகநாத முடுகிச் சென்று
கந்தமலிதுளப வோனைக்கண்டு சேவித்திருந்தார் கழிந்த சின்னாள். (உ௩)

அதிசார நோய் கூடவதனாலே மிகவ சக்தராய் நடக்கக்
கதுவாமல் மெள்ள மெள்ள நடந்துபோய்க் கடலின துகரையைச் சார்ந்தார்
மெதுவாக வடிக்கடி போய்ச் சவுச்சியஞ் செய்யக் கூடா மெலிவு கண்டு
மதுவா ருந்துழாய் நெடுமால் சகுண ரூபங்கொண்டு வந்துமாதோ. (உ௪)

கலசத்தி னீர்முகந்து கொண்டுவந்து கொடுக்கிற துங்கலை துவைத்தங்
குலரவைத்துக் கொடுக்கிறதும் பின்னும் வேண்டிய பணிகளுளுற்றல்செய்தும்
நலமுறுத் தறனைக்கண் டூழியஞ் செய்ய நண்ணினையே நாதா நீதான்
அலமுறுத்திந் நோய்தீர்க்க வல்லையல்லையோ வென்னவமலன் கூறும். (உ௫)

உடலிற்கு பிராரப்த முள்ளதெதோ வதைத் துய்த்தே யொழிக்க வேண்டும்
குடலுற்ற விந்தநோய் தனைத்தீர்க்க வெனக்கியாதோர் குறையுமில்லை
தொடலுற்றநோய்துய்த்துத்தொலைக்காமல்யான்றொலைத்தாற்றொடரும்ஜன்மம்
படலுற்ற நோய்ச் சேஷந்துய்ப் பதனுக் கினிநான்கு பகல்கழிந்தால் (உ௬)

விட்டேகும் வெய்யவினையா ரோக்கியம் பிறக்கு மென விளம்ப
முட்டாத நெடுநேயர் நன்றென்று நாளுன்கு முடிந்த பின்பு
தட்டாதா ரோக்கியம் பெற்றுச் சிலநாள் கழிந்த பின்பு தர்க்கந் தேர்ந்தோன்
மட்டாருந்துழாய் முடியோற் கன்புறு மாதவதாசர்வயின் வந்தானால் (உ௭)

வந்துகண்டு நீரோமா வேதாந்திநும் முடனே வாது செய்யப்
புந்தி கொண்டு வந்தேன் யானென்று சொல்ல நன்றென்று புகன்று தாசர்
இந்தவமயங் கொல்லைக்கேகி நான்வருகின்றே னிருமென்றோதி
உந்து திரைக்கடற் கருகே சென்றுவந்தோன்றனை யுன்னியுணர்வ தானூர் (உ௮

வாதஞ் செய்போதவனுக் கவமான நேரிட்டால் வருவ தென்னே
மாதங் கந்தனைக் காத்தவை குந்தா விதனையெந்த வகையிற் றீர்ப்பாய்
நீதங் கொண்டென வேண்டியிருக்கும் போதினை யில்லா நிமலன் றேர்ந்து
போதங் கொண்டுயர் தாசர் வடிவங்கொண்டு தர்க்க வேதியன்பாற்போந்தான்

அவனோடு வாதித்து வென்று மறைந்தான் பின்று சரவண னுகக்கண்டு
தவபண்டிதன் வணங்கித் தலமெல்லாம் ஜயித்துவந்தேன் றர்க்கத் தாலே
இவனொன்று நீவிரொரு வார்த்தையா லெனைவென்றீ ரொன்று கூறப்
புவனங்களுண்டவன் செய்புதுமையிது வென்றவற்குப் புகன்றார் தாசர். (ருο)

பண்டிதனுந் திரிகரண சுத்திகொண் டானாய்த் தாசர் பதம் வணங்கி
அண்டு மெனக் கனுக்கிரகஞ் செய்தருள வேண்டு மெனவன் பினேத்த
வண்டுளை வோனடித் தாசரருள் செய்தார் பக்தி மார்க்கத்தை வாய்ப்பக்
கொண்டவனு முத்தரிக் கவிவரு மரிபஜனை செய்து கூடிவாழ்ந்தார். (ருக)

மாதவதாசர் திருவடிகளே சரணம்.

ஆகச்சரித்திரம்சூ௬-க்குச்செய்யுள்சூ௩அ௱உ௰சு

முற்றிற்று

ஹரிவியாசர் சரித்திரம்.

புரிபளே புகழ்பொருந் தடமாம துறைதொழ
கரியனை முந்துகருணை கரனை நெஞ்சுகவர் வோர
தெரியுநான்மறை துணிந்தபொருள் சிந்தை திகழ்வோர்
ஹரிவியாசர் தெருளான பின்சிறந்த வறவோர். (க)

சகலஜீவர்களை யுந்தமது ஜீவனெனவே
முகமனன்குடையா முனிவனர் சிறக்க வொருநாற
றகவினீடு ஜகநாத மதுசார வுடனே
இகலிலாததம சீடருடனே குமளவில். (உ)

புனிதமான வொரு பூம்பொழிலை நோக்கியவிடத்
தினிதிறங்கினர்க ளெய்தின தொர்காளி பதிதான்
தனியொர் சூத்திர னடைந்தொர் தகளைப் பலிசெய்தான்
மனியகாளி வயினன்னது தெரிந்து மதியோர். (ங)

ஜீவவெங்கொலை இருந்து மிவணெய்து தறகா
ஓவல் செய்கென வெழுந்துதம சீடருடனே
ஆவயின் சமயல் செய்வது மொழிந்தகல்வுறு
மேவலாயினர் மிகுந்ததுயர் கொணடன ரரோ. (ச)

இனையதே சமியல்கின்ற ஜனர்தீமை யியல்வோர்
அனையசோலையி லிருந்தது மரும்பவமெனு
நினைவினோர் பசிந்பம் புறநடந்த கல்வுறப
புனைவுசேர் குமரிகண டயர்வு கொண்டு புகல்வாள். (ரு)

எனைநி கர்த்தபல சக்திகளுமே வல்புரியப்
புனையுமச்சுத னடிக்கினிய புண்ணியர்பசித்
தினையலுற்றி வணகன்று நெடிதே கறகவோ
அனையரப் படியுறிற் பெருமையெற் கமையுமோ. (சு)

அன்றியும் பெரிது சாருமப சாரமெனவே
சென்றுமற்றவர் முனின்றுபல செஞ்சொல் பயிலா
நின்றுதாளிணை வணங்கியரிநேய நிறைவீர்
ஒன்றுகேண் மெனநி றுத்தின ளுணர்த்தினளரோ. (எ)

நீயிரென் வயினடைந்து பசிநீட நெறிமேற்
போயிலென்னது தெய்வத் தருகிபோ மதனிலென்
கோயிலைமேவி யமுதுணடு குளிர்கொண்டடை மெனுத்
தீயின்மேய கொடியிற்று வளல்செய்துளை செய (அ)

தாசர்நீகொலை விரும்பு தறவிரந்து றுதியேல்
நேசமோடடை வமீயுறுதி சொல்லுதி யெனக்
கூசமின்றி யுயிர் வெங்கொலை கொளே னிதுதிடம்
வாசமேவ வினிவாரு மெனவந் தனரரோ. (கூ)

வந்து சோலை புனிதம்பெற வகுத்தடை வுடன்
முந்துறுஞ் சமயல்செய்து முறையிற் பசிதெற
அந்தவீரி யனகர்க்கரசன் மாடிரவி லேய்
தந்துறுங் கனவி லேயது தனைத்தெரிவுற. (௰)

ஓதியிந் நகருளா ரெனையுனிக் கொலைசெயா
நீதிசெய்தியினி நீயிது செயாதமை வுறில்
காதியுன்னை யெனின் மேவுகணனுக் கிறை செய்வேன
நீதிலிந் நகருளா ரொடெண வோதல் செயவே. (௰௧)

அவனுணர்ந்து துயில்மந்திரி வரக்கடி தழைத்
திவணடைந்த கனவைப் பயமுடன் றனியிசைத்
தெவனுமின்று முதல்வெங்கொலை செயாதியல தெனக்
கவன மாயதனை யாருமறியக் கழறினான். (௰௨)

காளிகோயி லிடைமேவு மரிதாசர் கழலின
மீளியா னவரசெய்தி விரைவிற பணிவுறு
ஆளினென்னை யணுகச் செய்துபதேச மருள்கிந்
நாளி னென்ன வவர் ஜீவவதை நாடுற லென. (௰௩)

செப்பிமால் பஜனை செய்யவுபதேச மருள
ஒப்பி யன்னவர் தனூர் புகவழைத் திடனடைந
தப்பதிக் கணுறுதிங் களளவு மவருறத
தப்பில் பூசனை புரிந்து தழைவித தனனரோ. (௰௪)

அந்தமா நகருளா ரொவருமால் பஜனையில்
முந்திவாழ்வுற முயன்றொரு மடம்புனைதல் செய்
தெந்த யோகியரு மெய்தும்வகை செய்தவ னுறத
தந்தசீடர் சிலர்தங்கும் வகையுஞ் செய்தனரோ. (௰௫)

ஆனபின்பு ஜகநாத மடைவேயடை வுறீஇ
ஞானநாயகனை நன்குதரி சித்தடி தொழாத்
தீனபாவமொடு நின்று துதிசெய் பொழுதிலச
சான கிரமண னன்புட னெய்தித தழுவினான். (௰௬)

அபயநல்கி மறைவா கவரிதாச ரிதன்
உபய பாதமிக வுன்னினர் வணங்கி யுடனே
இபமு னெய்து மவனெய்தும் வடமா மதுரைபோய
நியமி லானடி நினைந்தினி துறைந்தன ரோ. (௰௭)

ஹரிவியாசர் திருவடிகளேசரணம்.

ஆகச்சரித்திரம ௬௬-க்குச்செய்யுள் ௩௯௮௱௪௰௧.

முற்றிற்று.

திரிபுரதாசர் சரித்திரம்.

வேறு.

மதுரா நகரராசானவன் மகிமங்கிரி யாகிய
பொருந்நீவுகல புரிவார் திரிபுரதாசரெனும்பேர்
அது நீடினர் நலகேசிக ரருளானது பெறவே
முதுஞான மிகுந்தார் துறவது சேர்முயன்றார். (௧)

உளவாகிய கனகாதிய முதலியாவையு மூரார்
கொள்ளையே கொள்ளவிடல் செய்தனர் குறைபா நிறையொடு சீர்
வளையார் நெறிபுகு பத்தினி யுடனே வரமதுவார்
துளவார் வனமதில் வந்தனர் துயர்கீர் வுறலானார் (௨)

அங்கே யோர்வுறு கண்ணனை யானந்த முடன்கண்
டிங்கே யுறுவது நன்றென வெண்ணங் கொடவன்றன்
பொங்கேழ புகழ்பாவார் பணைபுகல் கின்றன ருற்றோர்
சங்கேய காமினியார் முன்னோக்குற்றனர் தாசர் (௩)

கண்ணுற கொருகலை வகுவு கருகதேயங்க தெனக்கென
வெண்ணப்படி செடல்வேண்டின னெனச் செப்பின ரோர்நாள்
நண்ணுற கருநல மிகருயார் ஞானசகிரு வன்றோ
அண்ணுற நல்லவனை நோக்கின னன்போ டிவையறைவார் (௪)

நம்பாலொரு பொருளு மிலைநாளுமெ தேனும்
அன்பார லயலார் ஈவதில்டு வெம்பசி கூவேம்
கொம்பார் நடுமலர் மாமகள் கொழுநற்கெது குறைவு
வன்பார் கலையொடு பூடண வகைபற பலவுள்வால் (௫)

நீரோன வனுக்குக் கலைகருமா நினைவுற்றுச
சேர்வாகிற தென்னக துணைவியை நோக்கினர் சொல்வார்
நேர்வாயொரு மின்னே யிவணீ சொல்வது மெய்தான்
சேர்வான தெனனுள்ளத் ததுதெரியே னதுசெய்வேன். (௬)

எனவே தமதில் வகுதுறுமசிக கூட்டினை யெடுத்து
மனநேய மொடெய்திக் கடைமருங்கினவிலை செய்தங்
கனகாம வருமீ ரொட்டென ணுவைகக்கொடு கொண்டார்
உனலகிய கலைகொண்டுடனே கோயிலை யுற்றார் (௭)

ஏந்தகு சமலத்தார் தருணையுற கிறைதன மேல்
இந்தக [illegible] தனை யாசசகரோ போர்த தெனதுள்ளத்
துந்தக கரைவையை நீக்குதி யெனவோதின ருவனகை
அந்தகக்கலை கனை நல்கிட வவ்வாச சகணறைவான. (௮)

சாமிக்குடன் மேற்போர்த்திடத் தக்கில்லை தனைக்கொண்
டேமிக கவனமேற போர்த்தேதென வீந்தாயில்லையோ நாண்
டேமிகக்குறு துள்வோர்றகிது சிறப்பன்றெனச் செப்ப
நேமிக்கிறை வயினெனக்குறை நிகழ்த்தித்தனி நீரோ (௯)

ஒப்புக் கொளும் வகைசொல்லுதி ரென நன்கினி தோதித்
தப்புற் றிலர் போனாரது தன்னைச்சரணை வீழ்த்திச்
செபபுற்றதொர் பாயரகிணை மேயபேததுயப் . ம்சேய தான்
கைப்புற்றவ னுடனேகுளிர் கண்ணற்குடல் கலந்த (௱)

நிற்கும் வகை கூடாதுற நடுக்கந்தா நிலைரோ
ஒற்கந்தர லேதோமிக வொளிகண்ணனுக் கென்ன
மற்கொண்டுறு கலையிற்பல வகைகொண்டுடல் போர்த்தா
பொற்கண்டன துடனின்றில துறவுங்குளிர் பொங்க (௱௧)

இச்சட்டியும் வைத்தாரத னோலுங்குளிர் இரா
தாய்ச்சிட்டர் பிரானுக்குறு வதையர்ச்சக ரன்பால்
வாய்ச்சிட்டவர் முதலோரது கண்டார்மன மனுங்கி
ஏய்ச்சிட்டித னுக்கென்செய்து மென்றேருலை கின்றா (௱௨)

அடியார்தரு கலைமேற்றுயி லன்றோன்கணவினிலே
நெடியோனுட னேசென்றென தடி யானருள் கலை
மடியா துறு குளிர்தீரவெ னுடல போர்த்தென வருகசத
துடியா வவனெழுந்தேயய லுறுவோர்க்கது சொன்னான் (௱௩)

எல்லாரு முணர்ந்தக்கலை யினைநாதனுடன்மேல
உல்லாசம தாகப்புனை வுறலுங்குளிர் தீர்ந்து
மல்லாரைவெல் கண்ணன்முனை வகையாயுறநின்றான்
நல்லார்பல ருங்கண்டனர் வியந்தார் நனிமாதோ (௱௪)

கலைநல்கிய வடியார்கணமே நன்றென மகிழா
உலைவில்லவர்பாற் சென்றவருபயக்கழல்பணிந்து
நிலையுள்ளவர் நமக்குச்செய லெல்லாநனி நிகழ்த்தத
தொலைவில்லவ னடியாரது தெரிந்தே துதிசெய்து. (௱௫)

கோயிற்குள லணந்தே யெதிர்குளிர் மாமலர் கொணகன்
தாயிற்பரிவது செய்ததுதனை யெண்ணினர் கணணீர்
பாயப்பெரி தின்பங்கொடு பணிந்தார் பரந்தாமா
நேயத்திரு மகணாயக வென்றே துதிநிரபப. (௱௬)

தெருள்சேர் வுறுசகுணப் படிவச்சேவை செய்திடவே
அருளாழிய னெதிர்வந் தபயந் தந்தினி தகன்றான்
மருள் போயினராகித் திரிபுரதாசா மகிழ்ந்து
சுருளார் முடியுறு மாதவன் பெயர் சொல்லினர் வாழ்ந்தார். (௱௭)

திரிபுரதாசர் திருவடிகளே சரணம்.

ஆகச்சரித்திரம் ௯௰௭க்கு செய்யுள் ௪௲௯௱௮௰௫.

முற்றிற்று

லாடுபாவாசரித்திரம்

தொலைவிலாவளஞ் செறிந்துள தாகிய ஜோத்பூர்
இலகுகின்றவா விரக்தர் தம்முயிரி னெவ்வுயிரும்
குலவ வெண்ணு கின்றவர ரிபக்தியிற் றுறையா
தலவுமன் பினர் லாடுபாவா வெனுமுறையோர். (௧)

தீர்த்தயாத்திரை செய்வதற் கெண்ணித்தொடர்ந்து
மார்க்கத் திள்ளமா லாலயங்களைக் கண்டு மகிழ்ந்தும்
கார்க்கருங் கடல்வண் ணன்றனடியாரைக் கண்டும்
சீர்த்தி லாதுகா வூரொன்றுஞ் சேயத்தனைச் சேர்ந்தார். (௨)

உயிர்களுக் கன்புசெய்பல ராயந்த வூரார்
செயிர் தருஞ் சக்திதனைக் குலதெய்வமது செறியப்
பயிலும் பூசையார் புருடனையும பலியாகவும்
இயலி னொன்று பூசைக்கு நரபலி யினைப்பி. (௩)

தேடுகின்றவர் லாடுபாவா வதைத்தெரிந்து
நீடுகால வரும்பற்றினர் போலவே பொய்ம்மொழி
கூடிக்கோயிலின் னுள்ளேற வினர்தம்மவர் கொள்ள
மாடு நின்ற மற்றொருவன் வாளாருயி ரன்வதைக்க. (௪)

மூவர் பற்றுற நின்றவர் முனைந்தனை முனிந்தனி
யாவு மாயைய னென்னன் றொண்டரேனு நன்றன்றி
வீயிலாவகை செய்யிறு நன்றெனவே யவனடி
மேவி நின்றனர் திடத்துடனிற் கின்றபவேலை. (௫)

கோரரு பியாகிய சக்திகோயிலி னின்றும்
கோதாகிய காதகர் நால்வ னேர்ந்து
சாரவாரு யிருண்டுடன் சாந்தமாய்ச் சார்ந்த
தீராகிய லாடுபாவாச் சரண் சேர்ந்து. (௬)

வணங்கி மாவடி யவரொருமுகக் கொள்ளைவந்த
அணங்க தாம பராதத்தைப் பொறுத்தருள் கென்றே
இணங்கு மாசொலி யுமக்கு வேண்டிய தியம்பு கென்று
குணங்களா லுயர்ந்தி ரொனவேண்டினள் கூற. (௭)

தாசா கேட்டி நீயிதுவரை நரபலி தந்தே
டாசதா முயிர் வதைத் தெசைந்திருந் தீயையிலேய
மாசு தீர்ந்து நல் வேண்டு மற்றினம் முறு முனது
தேசவாசிகள் கொலை யிகந்திருக்கவுஞ் செய்து. (௮)

ஹரிதன் குசரா யினிப்பஜனங்கள் செய்தமையப்
புரிதிவேறு வேண்டி யதிலையெனக் கெனப் புகன்றார்
தெரிவதாகிய சக்திநன் றவ்வகைசெய்வேன்
பரிவினீ ரிவணிரு மெனப்பகர்ந்தனள்பின்பு. (௯)

அந்தவூ ரரசன் கனுவினி லெதிர்ந்தரச
முந்துன் னூருளோர் யாவரு மிற்றைநாண் முதலா
நந்துஜீவனை நலிவது தவிர்ந்தினி நான்வாழ்
மந்திரந் தனில்வந் துறைபவ ரடிவணங்கி. (௰)

அன்பராகுத லன்றியு மெனக் கெனயாரும்
முன்புசெய்கிற வுயிர்வதை முறைமையுந் தவிர்ந்து
துன்புறுவகை செய்துமற்றின் னருழாயேல்
நின்புரந்தனை நாசஞ் செய்வே னென்று நிமலி. (௰க)

மறையவேந்தல் கண்விழித் தந்தவூருளே வாழ்வோர்
முறையினிற் கொலைபுரிவது தவிரநதுசாமுண்டி
உறையுங் கோயிலி லுற்றவர் தமைச்சரணுறுமா
பறையறைந் திடச்செய் தடைந்தான் சத்திபாழி. (௰உ)

வந்துகாதகர் மாண்டுறல் கணடதிசயித்துள்
நொந்துறப பயங்கொணடு மிக்கன்பொடுநுவன்றுன்
நந்துகால மெல்லா மநியாயமாய் நலிந்தோம்
முந்துஜீவனை யெனவனுத பிதததனன்முன்னி (௰௩)

அடியர் தஞ்சர ணடைந் தருளடைநதன னப்பால்
முடிவிலா நகராரொலாம் வந்தடி முயங்கி
நெடிது பெற்றன ரருளெந்தவுயிரி லுநேயம்
படியலா யரிபஜனைகள் பரவினா பயின்றா (௰௪)

அன்புமிக் கெகாதசி விரதமும் புரிந்த மர்ந்தார்
பின்பு லாடுபாவா வெனும் பெயரினா பெருமான்
றன்பதங்களை வழுத்தின ரொளிரபரந்தாமா
நின்பெரும் புகழினுஞ் சொலவெனைநியமித்தாய் (௰௫)

இனியெனக்கு நின்சகுண ரூபந்தனையிலங்க
நனி தெரிந்திட வேண்டுமென் றுள்ளினர் நயக்கப்
பணிமலர்த்திரு நாயக னெதிர்ந்த பயந்தந்
தினிதி னேகினன் பின்படி யாரவணிகந்து (௰௬)

உலகிலே யுளதீர்த்தங்கள் யாவையு முற்றுக்
குலவி யாடியங் கங்குள மால்பெருங் கோயில்
பலவுங் கண்டன ராகித் தம்பதி யிடைவந்து
சலச லோசனன் பெயர்சொல்லி வாழ்ந்தனர் தழைத்தார் (௰௭)

லாடுபாவா திருவடிகளே சரணம்.

ஆகச்சரித்திரம் ௬௮க்கு செய்யுள் ௪௲௭௱௭௰௫

முற்றிற்று

திரிலோசனதாசர்சரித்திரம்.

சாது சஜ்ஜனர் தஞ்சேவை தவிர்கில ரரிதியானர்
மேதகக் குடும்பத் துற்றும் விரக்தி மிக்கவர் தட்டாரொன்
றேதிரி லோசனப் பேரிசைந்தவர் பணிகள் செய்யும்
பீதம் வெள்ளியிலே தேனும் பெட்புறா தமைந்து வாழ்வார். (௧)

அவரின்னபடி யாராக விருக்கு மூர்க்கரசன் வீட்டில்
நவமண முற்றதாக நரபதி யிவரைக் கூவித்
தவறிலை யென்று சொல்லத்தக்க நீமணிகு யிற்றி
உவமையில் ஜேகியொன்னு மொன்று செய்து தவல் வேண்டும். (௨)

என்று பன்மணியு மிக்கவேமமு மீந்துமுந்நாள்
ஒன்று முன்றருக வென்ன வுத்தமர் கொண்டு வீட்டிற்
சென்று சேமித்துப் பின்பு வெளிவரத்திரண்டு சேர்ந்தார்
மன்ற லந்துள வோனன்பர் வரக்கண்டு மகிழ்வு கூர்ந்து. (௩)

தாழ்ந்து தம்மனைக் குணமேவத் தந்தினி திருக்கச் செய்து
முழ்மையு யுபசாரங்கள் சோடசத்துட னல்லுண்டி
வீழ்ந்துணச் செய்திரண்டு நாள்வரை வீட்டிருந்து
வாழ்ந்தனர் செல்லத்தாசர் மறந்தனர் பணி யியற்றல். (௪)

தினமொரு மூன்றதாகச் சேவகர் தம்மாற்கூவி
வினவினன் வேந்தன்றாசர் மிகுபய முடையராகிக்
கனகநல் லணியை நாளைக் காலையிற் றருவெனென்றார்
இனநிலை தவிரிற்றண்ட மியற்றுவ னென்றுசொன்னான். (௫)

சொற்படி தருவேனென்று சொல்லினர் மனைக்குவந்து
பொற்பணி யியற்றநான்கு தினம்வரை பொருந்துமேமற்
றெற்பணி யரசற்கெவ்வா றீவது நாளைக்கின்றேல்
வற்புறு தண்டஞ்செய்வான் மன்னவ னெனமயங்கி. (௬)

இல்லிடை யிருத்தலாகா தென்றெணிக் கொண்டோர் காட்டில்
புல்லின னொருபுறத்திற் போந்திருந் தலர்மேன்மங்கை
வல்லவன் றனைத்தியானித் துறவுருக் குமணிமார்பன்
நல்ல தன்றாசர் வார்த்தை நவையுறா தியற்றல் வேண்டி. (௭)

தாசர்தம் வடிவுகொண்டு தக்கவர் மனைக்குண் மேவி
ஆசையு மணியுங்கொண்டங் கமைத்தன னணியப்போதில்
காசுறு பணிகொண்டெய்தக் காவலன் கடுகிக் கூவ
ரசனப் பணிகொண்டெய்தி யெதிர் சலாஞ்செய்து நின்றான். (௮)

பணிதரக் கொண்டு பார்த்துப் பார்த்திபன் மகிழ்ந்து நன்றிவ்
வணியென வெகுமானித்தா னளவறு பொருள்கள் கொண்டு
மணிநிறமாயன் மீண்டு மனைக்கண் வந்தடியர்க் கேற்ற
தணிவில் கற்பினர் தங்கை யிற்றந்தனன் பொருள்க ளெல்லாம். (௯)

இன்று நீசெய்ய வேண்டுஞ்சாது சஜ்ஜனருக் கேற்க
நன்று போஜன மென்றோத நன்றென வவருஞ் செய்ய
அன்று சாதுக்கள் சேர்ந்தார நேரமற்ற வருக்கெல்லாம்
ஒன்றுறப் பாதபூசையு ஞற்றியோதனமு மிட்டான். (௰)

இருத்தி யாயவர்க ளெல்லாஞ் சென்ற பின்றுனு முண்டு
பொருத்த முன்றனை தன்னிற் போனகம் பொதிந்து கொண்டு
கருத்திலே தன்னைக்கொண்டு காட்டுறைவோர் சம்பக்கல்
அருத்தி கூர்வேரோர் தாசயடிவுடனனுநிறு றல். (௰௧)

கண்டவர் தம்மையிந்தக் காட்டினே வழியெங்கேயான்
மண்டுறற் கென்னக் கேட்ட மாதவ ரிவர் மாலன்பு
கொண்டுள தாச ரொன்று குறித்தடி வணங்கிப போற்றி
தொண்டர் நீராறு தூங்குத் தூரமேன் வந்தி ரொன்றோ. (௰௨)

இவ்வனந் தனையடுத்த வெழினகரொறு தட்டானைச்
செய்வன பணிகள் செய்யத் தோந்தவருள போலிலலை
கைவினைவலலோ யென்றுகாவலன் புகழ்ந்து கூறி
நைவறு பொருள்க ளீந்தான னியவைகொணடு போந்து. (௰௩)

கம்மியன் மனைக்குட் சாதுசஜ்ஜனர் கணக்கி லோரை
செம்முறக் கூயியின்றைத் திருசுவை யமுது தந்தான
அம்மனை தனிலுண போரில் யானுமுண்டபடு சால
விம்மினன் மயக்கந் தன்றல் யிட்டன னெறியை யின்னும் (௰௪)

ஒருதரத் துண்டி வேண்டி யுதவுறக் கொண்டு போந்தேன்
மருவிய நீயுளுசார யருந்தினா பசியினென்று
கருதநின் முகஞ் சொலகினற சாதலிற் கனிந்திதுண்டு
பருவர லொழிக வென்றான் குசரும் பரிந்துணபாராய். (ப௫)

வியந்தி யானிங்கே போதவேறென்பேர் கொண்டு செய்தார்
நயந்தியா ரொன்றையுற்று நல்லமு துணட பின்பு
பயந்தப வுரைத்தோர் தம்மைப பதி கினிதழைத்து வந்தங்
குயர்ந்த திண்ணையிலிருத்தி யுட்புக்குத் துணைவியாளை (௰௬)

பார்த்தின்று நிகழ்ந்த தென்னைப்பகர்தியென் றினிது கேட்கச்
சீர்த்தகற் புடைய ரானதேவியார் பதியை நோக்கி
நேர்த்துமக் கென்னைச் சித்தப் பிரமையோ நிருபற்கோதும்
வார்த்தை தப்பாமல் ஜேகீர் செய்து நீர்வழங்க லாலே. (௰௭)

மகிழ்ந்தர சுதவலான மாழைகொண்டிங்குப் போந்து
முகுந்தன தடியாரொல்லா மொய்ப்பவுற் சவஞ் செய்துண்டு
இகழ்ந் தினி முதுகொற்றார் [illegible]னையிற் பொதிந்து [illegible]
நிகழ்ந்ததை மறந்தீர் போலுநீா வினவுதனன் றென்றார். (௰௮)

மறைந்துறை கானிலென்பால் வந்தொரு திருமாலன்பர்
அறைந்துள படியே யாயிற்றென வதிசயித்தன் றனைப்
புறந்தனில் வந்து நோக்கிக் கண்டிலர் புந்தி செய்யச்
சிறந்தவை குண்டவாசி செய்ததிததிற மென்றோர்ந்தார். (௰௯)

கண்கணீர் பெருகிநாதன் கம்மியனுகி யெற்காய்
மண்கொளும் வேந்தற் கேற்கும் வகைசெய்ய லாயிற்றே யென்
றெண்கொடிவ் வபராதத்திற் கென்செய்து மெனக் கலங்கித்
திண்கொள் பாரளந் தான்றன்னைச் சிறப்பத் தோத்திரங்கள் செய்தார். (உ௰)

தெய்வ நாயகன் வந்தன்னார்க்கருள் செய்து தீர்ந்த பின்னர்
அவ்வகை யறிந்தோ ரெல்லாமடியரைப் புகழ்ந்தார் நாதன்
செய்வகைப் படியே தாசர் செய்தனர் வருடந் தோறும்
மெய்வகை யுற்சவத்தை விரும்பினர் மகிழ்ந்து வாழ்ந்தார். (உக)

திரிலோசனதாசர் திருவடிகளே சரணம்.

ஆகச்சரித்திரம் ௬௬-க்கு செய்யுள் ௩௲௪௱௬௰௬

முற்றிற்று.

சஜ்ஜனகசாருகர் சரித்திரம்.

இல்வாழ்க்கை தனிலிருந்து மிகுந்தவயிராக்கிய ராயிதயத்துள்ளே
செல்வாய்த்த திருமேனி ஹரிதியானத்தை யனுதினமுங் கொண்டு
கொல்வாய்த்த சாருகரிற் பிறந்துமது செய்யா தகுணத்த ரொன்னும்
சொல்வாய்த்த சஜ்ஜனர் தஞ்சுய ஜாதியாரில் விலைத்தூவு வாங்கி (க)

விற்பனை செய்ததில் வருமூதியங்கொண்டு குடும்பநடை விளங்கப் பேணும்
பொற்பினராய்ப் பொய்யிலராய் ஹரிதாசர் தமைக்காணிற் புகழ்ந்து போற்றி
அற்பொடு தம்மாலியன்ற வளவு முபகரிப்பவ ராயமருஞ் சீலர்
கற்பினரு மவர்மனத்துக் கிசைந்தவரா யொழுக நலங்கலந்து வாழ்நாள். (உ)

தசைநிறுக்குங் கல்லாகக் கோபாலனுகிய சாளக்கிராமம்
நசையுறக் கொண்டிருப்பபொரு தினத்தந்தவழிச் செலுநாள் மறையோனொடி
இசைபெருக்குங் கோபால னென்றறிந்து சஜ்ஜனர் பாலெதிர்ந்து நோக்கி
வசைதவிர்க்கும் வேதியர் பூசிப்பதை நீ பூசித்தல் வழக்கன்றுகும். (௩)

அன்றியுமத் தசையுளதை யூனிறை கல்லாக்கி யதையமைத்தல் கூடா
தின்றெனது வயினளித்தி யெனக் கேட்கவே ரென்று மியம்பா தீந்தார்
நன்றுகொடு போயந்த நான்மறை யோன்றனதில்லினனி நல்லோர்கள்
துன்றும் வகை செய்து கண்ணுற் கபிஷேகஞ்செய் துபரி சுத்தமாக்கி. (௪)

முகமனெரு பதினாறு நன்கியற்றிப் பூசித்து முகுந்தற் கேற்பத்
தகவுறமா நி வேதனமுஞ் சமைத்துத் தாபனஞ் செய்து தக்கோ ரெல்லாம்
நுகரவு முதளித்து மகிழ்ந்தரி திருநாமம் பலவு நுவன் றின்றுற்றான்
பகலொழிய விரவிலவன் கனவில் வந்து பரந்தா மன்பகர்வ தானுன், (௫)

சாருகளுகிய சஜ்ஜனன் வீட்டிற் சுகமாகத் தனிவாழ்ந்தேனை
ஒருணர்வு மில்லாமலேன் கொண்டுவந்தாய் நீயுனது வீட்டில்
நேருற வோர்கணமு மெனக்குள மில்லையினி யென்னை நீயே கொண்டு [ருன்
சேருறு சஜ்ஜன ளிடத்திற் சேர்க்கா யேற்குலத்தொடுன்னைச் சிதைப்பேனென்

என்னலும் வேதியன் விழித்து மிகுபயங்கொண்டுறக்கண்ணன் றன்னையீந்தோர்
அன்ன கண்ண னகன்றது தொட்டள கபானமுமின்றிய ஞர்மிக் காகிச்
சொன்ன சாளக் கிராமத் தீர்த்தந்துய்க் காமற்றுய்ப்ப தெங்ஙன்
இன்னயினி யெனவருந்தி யிருப்பவர் பால்வை கறையிலெழுந்து பார்ப்பான்.

கனவி லுரைத்தருள் கண்ணன்றனைக் கொண்டுவந்து கண்டுகெங்குலான
தனது கனவினை யுரைத்து நான்ஜாதிய பிமானந்தனைக் கொண்டும்மை
மனம் வருந்தப் புகன்று கொண்டவ பாரதம் பொறுத்தருள்க மதியின் மிக்கீர்
உனலரிய வுமைப்பத் தசிரோ மணியென் றுணர்ந்தன னென்று வந்து கூறி ( )

நீர்தா மேயிந்தக் கண்ணனை நாளுஞ் சுகமாக நிறுவிபபூசை
சீர்மேவப் புரிதிரெனத் தந்து சென்றுன் சஜ்ஜனருஞ் செங்கை யேற்றுக்
கூர்காதலுறப் பூசித்துத் தீர்த்த முள்ளுக்குக் கொணடு பின்பு
நேர்காதற் கற்புடை யாருடனுண்டு மகிழ்ந்திருந்தார் நெடுநாட் செல்ல. (கூ)

ஜகநாதன் றனைக்காணச் செல்வோர்களுடன் கூ டித் தாமுஞ் செல்ல
மிகலான வாதரங் கொணடார் தமதுகண்ணனையும் விரும்பிக் கொணடு
புகலானூர் வழிதோறும் பூசித்துப பிச்சையுண்டு போயோ ரூரிற்
றகவாகப் பிச்சைகொள்ளச் சார்ந்தன ரங்கோர் வியபிசாரமாது. (ய)

இவர்தமைக் கண்டதிக காமாதுரையா யுபசார மினிதியற்றி
அவரை யழைத்துக் கொடுபோய்ச் சமையற் சாமக்கிரியை யனைத்துந் தநது
தவரும் விரும்புறு நல்லீரட்டுண்டின்றிங் கிருத்தி ரெனத்தான் வேணட
உவரவடன் மனையிலட்டுண் டினிதிரவி னிற்றுயி லவுவந் தங்குற்றுர். (௰க)

நள்ளிரவி லெழுந்துவந்து சஜ்ஜனனை யெழுபபிவரு நானின்றும்மை
உள்ளமுவப் புறப்புணர வேண்டினே னெனவனை யாளுரைக்க நல்லோர்
கொள்ளுமகிழ் நனைவிட்டுப் பரபுருஷன் றனைச்கூடல் கூடாதி யார்க்கும்
பிள்ளை மைதீர்ந்துன் புருஷனங்குற்றுன வறபுண ரபபெயர்தி யென்றுர். (௰உ)

புருஷனுறுதலி னென்னை வெறுத்தனர்மற் றிவரென்று புருஷன் றூங்கும
அருகினில் வந்தவன்றலையை யரிந்துகொண்டு சஜ்ஜனாபா லணுகிக்காட்டி
மருவு புருஷன்போறு னினியேனு நீர்புணர வருதிரென்ன
வெருவிலள் பேயேயென்று மனந்துணுக் கென்றுடன்ப டார்வெறுத்து நீத்தார.

உமைப்புணர வேண்டியென் றன்புருஷனைக் கொன்றுற்றேனுக் குடன்படீரோல்
நுமைத்தடியும் வகைசெய்வேனிப்போதே காண்மினென்று நுவன்றுளாகி [கூவ
இமைப்பின் முன்னம்புறம் போங்தென் புருஷனைக் கொன்றுறொருவ னென்று
அமைப்பருமக் குரல்கேட்டுப் புறத்துள்ளோரனை வருமங்கணுகிப் பார்த்தார். ()

வந்தவரெல்லார் தமையுநோக்கியொரு திருடனின்றென் மனைக்குள்வந்தான்
மூந்துதுவாதச நாமமிட்டு நல்லசாது வெனமுனத் தக்காளுய்
இந்தவிரவினி லெனது புருஷனைக் கொன்றெனைக் கூடவிசை விக்கின்றுன்
நொந்துபயந் தலறினேனினிக் கொள்ளை கொள்வனென னறுவன்றுள்மன்னே. ()

நுவல்வது கேட்டவரெல்லா மவரைவிரைவி னின்மனைக் குணுழைந்து பற்றித்
தவலருமவ்வூ ரரசன்தனிற் கொண்டு போய்நிகழ்ந்ததைச் சொன்னார்கள்
பவமிலரசன் சஜ்ஜனரைப்பார்த்து நிகழ்ந்தவுண்மை பகர்கவென்னப்
புவனமளந் தவனடியார் போந்ததுவு நிகழ்ந்தனவும் புகன்றுநின்றார். (௰௬)

கொலைசெய்யா ரிவரென்று குறித்துமரசன் கொய்த தலையைக்கண்டு
தலைகொய்தா னிவனென்று சாற்றினதி லனுமானஞ் சார்வதாதல்
நிலைமெய்யேயெனி னீயேமற் றிவன்கைகளை யறுத்தியென நிகழ்த்திப்
புலைபொய்யே புகல்வாள் கைதனிற் கொலைவாளீந்து கைகள் போக்கிவிட்டான்

கரங்கடுணிவாகிய சஜ்ஜனர்மிகவுந்து யருழந்து தம்மைக் கண்டோர்
இரங்கிலர் மற்றிவன் சாதுவேடங் கொண்டே திருடற் கெய்திருனென்
றரங்குலைய விகழ்வது கேளாராகி யாத்திரை செல்வோருட்கூடி
நிரந்தரமும் ஜகநாத னினைவுகொண் டவ்வூரருகு நெடிது சேர்ந்தார். (௰௮)

வேறு

யாத்திரைக் காரரோ டேனைந்திறங்கின
நீர்த்தனைவளர் ஜகநாதன் றேர்ந்தனன்
ஏத்து மர்ச்சகர் கனவெதிர்ந் திவ்வூர்ப் புறம்
வாழ்த்து சஜ்ஜன ரெனைவணங்க வந்தனர்.. (௰௯)

அவரை நீர்விரைந்தெதிர்ந் தணிகொள் பல்லக்கில்
நவமுற வேற்றிநன் கழைத்துநண்ணுமின்
இவணெனவர்ச் சகர்விழித் தெழுந்துடன்
தவவியந்தி யானத்தைக் கொண்டு சார்ந்தனர் (௨௰)

புறநக ரிறங்கின புனிதசீல ரிற்
றிறமிகு சஜ்ஜனர் யாவர் தேர்கிலேம்
அறவினை யீரென வவரைக் காட்டலும்
மறவினை யிலர் வயின்வந்து சொல்லுவார் (௨௧)

எமையரு ளைதனுக் கினியிராதலால்
உமையிநி லேற்றியங் குய்க்கவென்றனன்
சமைவருந் தவத்தினீர் சார்கவென்றலும்
அமைவதுகேட் டதிசயித்தி யாவரும். (௨௨)

கொலைசெய்துகை குறைபட்ட சோதிறேன்
விலையறு பல்லக் கின்மீதி வர்ந்துற
நிலைபெறு நேமியோன ருணிரம்பிறேன்
மலையிது வெனத்தமிழ் வசனித் தற்றனர். (௨௩)

சிலரிவர் மனநிலை தெரிந்தன்றேவிரை
மலர் மகளையகன் வழுத்தவர்ச் சகர்
குலவுபல்லக் கினைக்கொண்டு வந்தனர்
இலகுற விதுதெரியாம லென்னையே. (௨௪)

ஜகபதியடி யாரிற்றவுறு சொல்வதிங்
கிகழ்வதின் மிகுபவ மெய்து மென்றனர்
தகவுறு மர்ச்சகர் சஜ்ஜனர்க்கு முன்
முகம ஜடிதிலிவர் கென மொழிந்தனர். (௨௫)

வின்வினர் யாரொரு மிகையுஞ் செய்திலேன்
எனகை கடுணிகுற வேணியற்றினேன்
கனமுகிலனே யவனென்று கண்களிற்
புனல்வர் நெஞ்சிடைப் பொருமி விம்மியே. (௮௪)

தீனதயாளன நாதபந்து சோ
வானதன்னடியர்க்கு வங்கவாபத்தில
நானெனக் காபபவ னென நவிற்றவா
ஞானநல்ல வரது நவையுணடாயிற்றே. (௮௫)

பதிதபாவன னெனும விருது பற்றினை
எதுசெய வெனபபல பிதற்ற வெமபிரான்
முதுதயை யுடனவர் கணமுன் முந்தினை
கதைசிலை சஙகுசக்கரங கட்கத தொடே (௮௬)

நான்கு தோளிலங்குற நளிர கிரீடமும
தோன்று குண்டலமும் பொன்னுடை யும பைந்துழாயத
தேன்றுளி மாலையுந திகழக காணடலும
சான்றவரி ருகையுங குறைதவிாநதவே. (௮௭)

மணிக்கரம் வளாதலு மகிழந்து சஜ்ஜனா
அணித்துழாய் மாாபின னடியில வீழ்ந்தன
துணைக்கரததவா தமைத தொட்டெடுதது மாா
பணைத்தன னருடகடலான நாதனே. (௮௮)

நன்கருள் செயும ஜகநாதன் றன்னையேன
புன்கண் யாவருக்கும் யான்புரிசிலாதுற
என்கரந் துணிக்கு மாவியறறு விடுதனை
நின்கருணை நலநிகழததற பாலதோ (௮௯)

வேறு

என்னக்கேட்ட வெழிற் சகநாதனி
முன்னர்க் காலமுது மறை வேதியன்
துன்னக்கங்கை துளைநது கரையிடை
மன்னக்கொணடனை யென்னை மனததரோ. (௯௰)

அந்தவேளையி லங்கொா கசாருகன
நந்துவெங்கொலை செய்து நவிவுறப
பந்தனஞ்செய் பசுவறுத்துக கொடு
வந்ததாகமற் றன்னது நாடியே (௯௧)

கிட்டவந்துனைக கேட்டன னோபசுக்
கட்டவிழ்த்துறக் கணடனை யோவென
கிட்டை கொணடு நெடுங்கை குவித்தநீ
சுட்டினாய் கையின் வாயிற் சொல்லாமலே (௯௨)

காட்டுகைவழி சென்றக்க சாருகன்
மாட்டைப்பற்றினன் கொண்டுவதை செய்தான்
வீட்டுமப்பசு மேவினதோர் பெண்ணாய்
நாட்டு சாருகனுயக னாயினன். (௯௩)

இருவரும் புணரில்லுழைச் சென்றனே
மருவ நின்னே மகிழ்ந்து மகிழநனே
வெருவுருடலே கொய்தனள் வேண்டுரு
தொருவு நின்கையுங் கொய்வது ஏற்றினள். (௯௬)

முன்பவத்தி லெனேயுள முன்னியே
அன்புசெய் பொழுதந்தக்க சாருகன்
நின்புறத்துறக் கண்டனே நீயதால்
வன்புறுத்துக சாருகனுய் வந்தாய். (௯௭)

காட்டுகைகுறை பட்டனே காசிதே
வேட்டென் பாலன்பு மிக்கதளவிலே
ஈட்டு நின்றவத்தெய்தினெனுன் முன்யான்
வாட்ட நீங்குதி யென்று மறைந்தனன். (௯௮)

அன்னகாலே யிலங்குறுவோ ரெலாம்
மன்னுதாசர் கரங்கள் வளர்ந்ததிங்
கென்னேயென்னே யெனவியப் பெய்தினார்
பொன்னினுதன் செயலெனப் போற்றினார். (௯௯)

வாடனீங்கி மனமகிழ் சஜ்ஜனர்
ஆடினார் கடலாடியம் மான்றனே
நாடினார் கண்டு நான்கு திங்கள்வரை
கூடினாரங்கு மால்பெயர் கூறியே. (௱)

பின்பு தன்பதி யெய்திப்பிரான்வயின்
அன்பு மிக்கனராகி ஹரிபெயர்
துன்பறத்தினந்தோறுந் தொழுது சொற்
றின்புறப் பெருவாழ்வுற்றிருந்தனர். (௱௧)

சஜ்ஜனகசாருகர் திருவடிகளே சரணம்.

ஆகச்சரித்திரம் ௭௰-க்கு செய்யுள் ௪௲௯௱௯௰௭

முற்றிற்று

அங்கதபூபதி சரித்திரம்.

இறையி ராயசிங் கங்கத பூபதி யென்போர்
முறை சகோதரர் பின்னவர் முயங்கு பத்தினியார்
துறை யளந்தவற் கர்ச்சனை செய்து சஜ்ஜனர்கள்
குறைவில் சேவையும் ஹரி திருநாமமுங் குறிபபோர். (௧)

ஆகியச் சுதனடி யவரொருவர் பாலருள்கொண
டேகமிக்கவராயின ரொருதினத்தவ்வூ
வாகதாய்த் தனக்கரு ளியதேசிகா வாய்ப்பப
பாகுசேர் மொழியாரல் தறிந்து பணபாக (௨)

அவர் தமக்கு நன்குபசரித்திட வகத்தெண்ணி
இவர் முயற்சி செய்வதைப பதியறிந்திக லெய்தித
துவரிதழ்க் குலமகளிர்க்குத் தொழுகுரு தெய்வம
எவரிசைத்தனர் புருடனை யன்றி வேறென்று. (௩)

உளவெனிற்றெரி யெனக்கென வுருத்தன னுரைக்சத்
தளவமென்ன கையதற் கெதிர் சாற்றுறு தன்னம்
அளகமுண்டிடா தமர்ந்தனர் மூன்று நாளாகத
துளவமால் மறுதினத்திர வினிலவா துணைவன் (௪)

ஆனவங்கத பூபதி கனவிடை யருள்சேர்
ஞானநல் வடிவுட னெதிர் நின்றன னயந்து
தானவச் சுதன்றனை யன்பு கொண்டடி தாழ்ந்தான்
ஏனமானவ னங்கத பூபதிக் கிசைபபான் (௫)

நீயுன் றேவியை நீவணங்கு றத்தகு தெய்வம்
ஆயதே தனைக் காட்டு கென்றனை யதனாலே
மேயினேன் கண்டு கொள்ளென விளம்பினன் மறைந்தான்
காயுமன்னவன் பயந்துட னெழுந்து கண்விழித்து. (௬)

மனைவி பக்கல் வந்துனது பத்திக்கு மான் மகிழ்ந்தென்
றனையறிந்து கொளென்று தன்வடிவு காட்டினனுன்
னினைவறிந்திடா துனை மிகமுனிந்தன னீதான்
இனைவதின்றியே பொறுத்தருள் கெனவினி திசைத்தான். (௭)

அன்னகற் பினர்க்கினி துபதேசித்த வாசான்
தன்னகத் துறத்தா னழைத்தினிதுப தேசம்
மன்னலாயினன் ருனுந் தம்பதிகளாய் வணங்கிப
பன்னிரண்டுட னன்குப சாரமும் பண்ணி (௮)

பூசித்தாரது முதலிருவரும் பணிபுரிந்து
நேசித்தார் விண்டு நேயமுஞ் சாதுசேவையுந்தாம்
வாசித்தார் தொடை ராயசிங் கென்பவன் மால்சீர்
ஆசித்தார் கருதம்பியைப் பகைவர் மேலாக (௯)

சிலதளங்களைச் சேர்த்துட னனுப்பினன் சென்று
வலதந்தெவ் வினை வென்றரண் கொண்டவண் வயங்கு
பல தனங்களு மணிகளும் வைணவர் பற்ற
நலதரத்துட னல்கினன வையறு குணத்தான் (௰)

விஞ்சுறும் பொருளனைத் தையுந் தம்பதிமேவச்
செஞ்செவே செலவுய்த்தன னதின்மிகு தேசு
மஞ்சுகீடிய வயிர மொன்றைக் கண்டு மகிழ்ந்து
தஞ்சமாம் ஜகநாதனுக் கர்ப்பணஞ் சமைக்க (௰௧)

வேண்டுமென் றுகைக்க கொண்டு தன்னரண்மனைமேவி
யாண்டிருந்திட வங்கத பூபதியுடனே
ஈண்டினோர் தமையன் புறஞ்சென் றிப்பிசைத்தார்
மாண்டகாதல னுயது வாங்கி வம்மென்று (௰௨)

சிலரையேவின னங்குச் சென்ற வரதுசெப்ப
மலரினுந் தியான்றனக் கென்று வைத்தனன் வழங்கேன்
நலமு லாவிய வயிரத்தை யென்றன னவில
நிலமெலா முடையவன் வினவிச்சின நிமிர்ந்தான். (௰௩)

தனது தங்கையைக் கூடியிந்த வங்கதன்தன்போ
சனமுடன் விடங் கலந்திட்டுக் கொல்கெனச் சாற்ற
அனமடந்தை யின்றேன் சொன்னபடிக் கொல்லேனுயில்
எனை யடர்ந்திடுவா னெனவஞ்சின ளேகி. (௰௪)

தமையனல் கியவிடத்தை யங்கதனுண் போசனத்தில்
அமைவு செய்திட வாயபோதச் சுதன் றன்னைச்
சமையவுள்ளத்திற் கொண்டன னந்தவோதனத்தை
இமையவர்க்கெல்லா மீசனுக் கர்ப்பண மென்று. (௰௫)

உண்ணலுற்ற போதவன் கருத்துணரு வானுன்னி
அண்ணலாம் ஜகநாதன தங்கைமே லாகி
நண்ணலான சோறிது நஞ்சுக லந்தது மிசைய
எண்ண லென்றனன் கேட்டந்தவங்கத னிசைப்பான். (௰௬)

அச்சுதன் றனக் கர்ப்பணமாகிய வன்னம்
நச்சியுண்டிடாதிரே னெனநனி நயந்துண்டான்
மெய்ச்சி யுண்டபின் மனைவி பான்மேவினன் விளைந்த
இச்செயற்கைகள் யாவையுந் தெரிவுற வியம்பி (௰௭)

இனியிங் கெய்துறத் தக்கதன் றெழில் ஜகநாதம்
துனிமுருந்தனைச் சேவித்துத் துன்னுவோ மென்று
முனிவுகொண்ட தன்றமையன் முந்துத லறியாமல்
நனி விரைந்தனன் மனையொடு செலச் சகநாதம். (௰௮)

இவையெலாந் தெரிந்தன னந்தராய சிங்கென்போன்
நவையிலாத தன்மந்திரி தன்முக நாடிக்
குவைகொள் சேனையோடேகிநீ யங்கதன் கொடுசெல்
அவை யிரந்தனைப் பறித்துவா வென்றனுப்பினனே. (௰௯)

அந்த மந்திரி தன்னுடைச் சேனையை யணிந்து
வந்தனன் விரைந்தங் கதபூபதி வழிக்கொண
டுந்து தெண்டிரை யொருநதிக் கரைமருங் குற்றுன்.
முந்தினன் றெடர்ந்தெதி ருறவளைத்தனன்முடுகி. (உ௰)

அங்க தன்றெரிந்தான் வயிரம் பறித்தகல
இங்குவந்தனன் சேனையோ டமைசச னென்றெணணிப்
பொங்கு சோதிகொள் வயிரதகைப பொருந்திஞேரா காணத
தன்கை தோன்றுறக் காட்டி மற்றிது ஜகநாதன. (உக)

தனக்குநன் கினிதர்ப்பண மென்றன் பிறசாற்றி
மனக்குவந் தெறிந்தானந்த யாற்றின் மநகிரியும
ஒனக்கொடுந் திறற் சேனையைச் சிநது விலிறகலிக
கனத்தமா மணிதனைத் துருவுற்றனன் கவர. (உஉ)

தேடுவோர தமைநோக்கி நீராற்றிடைத தேடி
வாடுகின்ற திற்பயனிலை ஜகபதி மாரபிற்
கூடிநின்ற தென்வாரத்தை யிலையநீர கொணடரல
நாடி யென்னுடன் வருதிகாட்டுவ னென நவினறன. (உங)

நன்று காண்டு மென்றமைச சனுதியா நனிவிரைநது
துன்றுமங்க தனுடன வழிமூன்று நாடொலைததுச
சென்று சீரசசக நாதன்வாழ கோயிலிற சோநது
நின்று கணடனா மாயவன பதக்கததி னிலவல. (உச)

ஆற்றிலே யெறிந்தது ஜகநாதன மாரபணுகித
தோற்றுகின்ற தெவ்விதத திதுபூசிகருந தொலவீர
சாற்றுமின்னென மந்திரி வினவலுஞ சான்றோர
நேற்று முன்னிரணடாந் தினமிந்தமா நிமலன (உரு)

கனவி லெம்வயின் வந்து நன்பக லிலங்கத ருமை
அனகவன் பினனெனக் கொருவயிர மூய்த்தன ளீர
எனதுமார் பிடைத்தி கழ்வுறச்செய்மி னென்றிசைததான்
வினவியா மெழுந்துட னிங்குமேவி நோக்குறலும. (உசா)

சன்னிதானத்தி லிவ்வயிரந் திகழ்தரக்கண்
டுன்னியிப்ப தக்கத துறப்பதித் திங்ஙனுளிரவோன்
பொன்னின் மார்புறச் சார்த்தின முடனெனப புகன்றா
அன்னதாற்றிடை யங்கத னெறிந்ததே யென்று. (உஎ)

அமைச்சனுதியோர் தெளிந்திங் கிதற்புத மென்று
தமைச்செலச் சொன்னராய சிங்கென்பவன் றனக்குச்
சமைத்த செய்கைகள் யாவையுஞ் சடுதியி லெழுதி
இமைப்பின் முன்கடிதே கெனத்தூதன் கையீந்தார். (உஅ)

தூதனோடினன் விரைந்து சென்றது தரத்தோன்றல
நீதமாயதைப் படித்ததி சயிததுடனேமி
நாதன் பொன்னடிக் கன்புசெ யெம்பியை நாடா
நோதல் செய்தன னெனவுள நடுங்கின னுடங்கி. (உகூ)

இனியை யாயினை நீ ஜகதீசனுக் கென்று
கனிதெரிந்திலேன் செய்துள நவையெலாம் பொறுத்துப
புனிதனாகிய நினைக்கண்டி யானலம் பொருந்தத்
தனிநிலாம் ஜகநாதனை தாணை சார்கென்று.. (௯௰)

எழுதியங் கதபூபதிக் கீகநீ யென்று
வழுவி றாதன்கை யீந்தனன் வாங்கினன் வந்து
தொழுது நல்கலும் வாங்கினன் மற்றதிற்செ றுத்த
பழுதில் செய்கை யெல்லாந் தெரிந்துணர்ந்தனன் பரிந்தான். (௯௧)

உலகநாத னென்றமையனுக் குறநல்லபுத்தி
இலக நல்கின னெனமிக வுவந்தன னிணையில்
சலசலோசனன் றாள்பணிந்தன்புடன் றுதிகள்
பலநவின்றனன் விடைபெற்றுத் தன்பதி படர்ந்தான் (௯௨)

வந்ததம்பியை மகிழ்மிகத் தழுவினன் மன்னன்
அந்தநாண் முதலரி பஜனையின் மிகவன்பாம்
சிந்தைகொண்டனன் றம்பியு மனுடன் சேர்ந்து
விந்தைமேவுற மனைவியாரொடு விழைந்திருந்தான். (௯௩)

அங்கதபூபதி திருவடிகளே சரணம்.

ஆகச்சரித்திரம் ௧க்கு செய்யுள் சதுகாளம்

முற்றிற்று.

குணவதிபாயிசரித்திரம்

மாதவ சிங்கென் கோன்மனை குணவதி பாயிக்
காதர முளமக்க ளிருவர் களுள ராணர்
தாதிகள் பலராணர் தமிலினி தொருதாதி
போதுகள் பலவெல்லாம் புவிபதி திருநாமம். (௧)

மெள்ள நவின்றுள் வாய்மினு மினுவென் கிற்பாள்
துள்ளுறு மிதழாளைத் தொகுகுண வதிகண்டென்
விள்ளிதழ் பலகாலு மிகவசை கிறதென்னே
உள்ளது புகல்கென்னவவளி னிதுரை செய்வாள். (௨)

இக்கரு மசரீர மினிதினி யீடேறத்
தக்கநலரி நாமந்தனை யினிதுரை செய்வேன்
மிக்கந லெழின்மானே யெனவின வியமின்னார்
அக்கட வுளினும மருளுட னடைவாக. (௩)

நானினி துணர்கிற்க நவிலுதி யுபதேசம்
தானென நனிவேண்டத் தாதியும முதன்ன
மானென விழியார் தமன நிலைநனி கண்டு
தேனென மொழியாளைத் திம்புன வினிலாட்டி. (௪)

நியதியொ டிறைவைத்து நீணிற முறுகண்ணன்
நயமலி யுருவொன்றை நல்கினளது தன்னை
மயவிலள் பூசிக்கும் வகையு மிவகை யென்றே
அயர்வறு திருநாம மதனை யுமருள் செய்தாள். (௫)

அருளிய படியந்தக் குணவதி ஹரிநாமம்
மருளற வெதுபோதும் வாய்வழுவுத லின்றித
தெருளுட னினிதோதிச் செயும்வகை பூசிததுப
பொருளுண ரரிதாசர் பூசையு மியல்கின்றார். (௬)

கண்ணன தொளிர்பாத கமல நவிதயத்தில்
நண்ணுறும் வகைசெய்து நாடொறு நலம் விஞ்சி
எண்ணினர் பொழிகண்ணீரினின் முழுகின ராகி
மண்ணுறுவிவ காரமறவி யொடுறு நாளில. (௭)

மனைவியர் செயலெல்லா மன்னவ னறிவானுய
இனையவ ளிடையே தோவெறி யணுகிய தெனறு
வினைதெரி பவராலே விடும்வகை பரிகாரம்
தனைநனி புரிவித்துந் தணிகில தெனவெண்ணி. (௮)

குணவதிதனை நோக்கிக் குவலய விவகாரம
புணர்கிலை வெறிகொணடாற் போலெனை புரிகின்றாய
உணர்வுற வுரையென்ன வுரைபதிதனை நோக்கி
இணர்விரி துளவோனு மிறைபரமான் மாவை. (௯)

எப்பொழுதுந் தியானித் திடுதலி னவனென்னைக்
கைப்படவசி வுற்றுங்கண் ணெதிருறு கில்லான
அப்படி யவனின்னு மணைகில னதனாலே
இப்படி யுறுகின்றே னென்றழுதனர் சொன்னா. (௰)

அவ்வகை சொலல் கேட்டவரசனு மிகுகோபம்
வவ்வின னொளிர்பல்லின் வகைநெறு நெறுவென்னக்
கவ்வி நயன மெல்லாங் கனலுக நனிநோக்கச்
செவ்விய செயலாருஞ் செறிபய மிகலாகி. (௰௧)

பதிமுக நோக்காத படிவிழிகளை மூட
எதிருன லுறுகண்ண னெய்தினன் மணிபொன் சோ
மதுவிரி வனமாலை மார்பொடு படையைந்தும்
கதிர்முடி யொளிவீசக் காதணி நனிமின்ன. (௰௨)

பொன்னுடையொடு கோலம் பொலிவுறு முருவத்தை
மன்னு தலவர்கண்டு நமவென வடிமீது
துன்னுற வருள்வாரி துவளிடை தலைமீது
[illegible] கரம்வைத்து மனமயர் வுறன் மின்னே. (௰௩)

காணுறு பொழுதெங்ங னணுகுவ தினவில்லை
மானுறழ் வழியாயுன் வசமுறை குவனென்று
தானுடன் மறைவுற்ருன் றையலர் மகிழ் வுற்றுக்
கோனுடை முகநோக்கிக் கூசலொதிர் நின்ருர். (௰௪)

மாலெதிருறலான வகைதெரியா மன்னன்
நூலெனு மிடையாளை நோக்கி யிவகையே நீ
ஏலுறின் மிகுதண்ட மியல்வகை புரிவே னென்
றேலுறு குரல்காட்டி யுரைசெய்து புறமேகி. (௰௫)

இன்னவள் யாரோவோர் யதிமொழிவழி நின்ருள்
அன்னதினிவண்யாரு மணுகுற லாகாமே
மன்னுதிரினி யென்று வாயிலினுறு வோரிற்
பன்னின னுடனே தன்பரி ஜனமொடு கூடி. (௰௬)

மகரிரு வருமுந்த மந்திரிதனை நோக்கி
இகலுறு புலிவேட்டைக் கேகுவெ னிருவென்று
திகழ்வொடு வனமூடு சென்றன னிவணுற்ற
ஜகபதி பணிகொண்ட சத்குண வதிபாயி. (௰௭)

கண்ணனை மறவாது கருதின ரடியார்கள்
நண்ணுற வெதிர்கூவி நன்குற நனிபூசித்
தண்ணுறல் புரிவித் தங்குறுவது மிகலானுர்
மண்ணுல கதையாள் வோன்மந்திரி யவைகண்டான். (௰௮)

பதிதன துரைவிஞ் சிப்பன்னியர் செயலாமோ
மதியின தலதென்று மன்னவ னுணர் கிற்கக்
கதுமெனவரை வுற்றுக் கானக முறவுய்த்தான்
அதுதெரி வுறலாகி யரசுள நனிசீறி. (௰௯)

காதகரொரு நால்வர் கடிது நளைகரோகி
மாதவடனை யின்னே வதைசெய்மி னெனவுய்த்தான்
போதரு மவருள்ளே புக்கனர் கொலைசெய்ய
நாதனை யுளம்வைத்தோர் பூசையினனு குற்ருர். (௨௰)

அவ்விய லறிகண்ண னடுபுலி வடிவாகிச்
செவ்வி யினியல் பூசைத் திருவுரு வினினின்றும்
வெவ்வியல் கொடுதோன்ற மினிர்குண வதிகண்டே
இவ்வியல் கொடுநீயின் றெய்திய தெனையென்ருர். (௨௧)

எதிர்மொழி தரவின்றி யெய்திய கொலையாளர்
முதிர்கொலை யுறநூறி முந்தினனி மிடத்தில்
அதிர் குரலது கேளாவனு கினரய வுள்ளோர்
கதிர்செறிவாளோடு காதகர் படல் கண்டார். (௨௨)

புலியக நிமிர்கின்ற பொருகுரல தினஞ்சி
மெலிவின ரொலிகொண்டு விம்முத லுறுபோது
கலிகடலன மேனிக் கண்ணனதியல் பூசை
பொலிவுற முடிவித்துப் போர்தனர் புறமன்னர். (௨௩)

ஹரிதன தடியாரை யன்பொடு பூசித்தற்
குரியன கொடுவந்தோருவர் கொலையுறல் கண்டு
கரிய நன்முகில் போல்வாய் காதகா படுதற்கோ
வரிசெறி புலியானு யெனமன மறுகுற்ருர் (உச)

சாது நலோரொடு சார்ந்தவ ரெல்லோரும்
காதுற வந்தோரைக் கடுகியொர் புலிவந்து
தீதுற வதைசெய்த செயலதி சயமென்று
மாதுறு மணிமாா பனருளிய வகையென்ருா. (உரு)

குணவதி பெருகன் பைக்கோதிலா கொண்டாட
அணவிய ஹரிதாசர்க் ககமகிழ்வொடு பேணி
மணமலி வனமார்பன் மன்னுற வுறலானூ
உணர்வுறவிவை யாவுமுட னெழுதின னுய்த்தான. (உசு)

மந்திரி வரைவுற்ற வகையர சறிவுற்றுப
புந்தியின னியச்சம் பொதிவுற மதிமிககாள்
ளைந்திடும் வகைசெய்தேனு னென நலிவுற்றுச்
செந்திரு வனையாடான் செய்வன செய்கென்று (உஎ)

வேறு

தமைப்பெருங்குணக் கணவிககேற்பவை
தமைக்கொணர்ந்துதந் துதவிசசாகென
இமைப்பின் முன்கடி தேகுதூதா பால்
அமைச்சன்றேர் வகைவரைந்தனுபபினுன். (உஅ)

பின்பு சூழ்வரும் பிழைபபில் சேனையும்
தன்புறந் தொகுந்தனையருந் தொடாந
இன்பு சேர்வுறவெய்து மார்க்கத்தின்
முன்பொராறு நீர் முடுகக்கணடனன். (உகூ)

ஓடஞ்சேர்வகை யுஞற்றி மற்றதன்
ஊடமர்ந்து தானுறவு மோடந்தான்
நீடமா நதி நடுவினீள் சுழற்
பாடலைந்து பம்பர மிகர்த்தரோ. (௩௰)

முழுகு மாசுழல் முடுகு காலையில்
குழுவியாவருங்கோனு மஞ்சினுர்
வழுவிலாது போய்க்கரை மருங்குறக்
கெழுவுதந் திரங்கிடைப புருமலே. (௩க)

மனநடுங்குறுங் காலை மன்னவன்
றனது பத்தினி தன்னை யுன்னினுன்
உனலு நீர்ச்சுழலுற்ற வோடம்வார்
புனலினின்று நீள்கரைக் கட்போந்ததே. (௩உ)

அரசனுனந்த மடைந்தெல்லோருடன்
விரசினுனரண் மனைக்கண் மேவினுன்
உரைசெய் புத்திரரோடு தேவியைக்
[illegible] செயற் கருங்குளிப்பிற் கண்டனன். (௩௩)

அன்புடன்றழீஇ யரிவை நீமுருக்
தன்பெருங் கயிங்கரிய மேதழீஇ
இன்பு கூ ரு நின்னியற்கைதேர்ந் திலேன்
துனபு செய்வதே துணிந்து சூழ்ந்துளேன். (கச)

உனது சீர்மை தானுரைக்கற் பாலதோ
நினது நாமமே நிகழ்த்தி நீணதிப்
புனலின் மூழ்குறேங் கரைக்கட் போந்தனோம்
இனமு நின்னில் வேண்டு வதியாதென்றான். (கரு)

என்று பத்தினியாரை யேத்தினன்
அன்று தொட்டனே யாருடன் குலாய்த்
துன்றுறுஞ்சிறார் தொழும்பு செய்யக்கோ
நன்று மால்பெயர் நவின்று வாழ்ந்தனன். (கசு)

குணவதிபாயிதிருவடிகளே சரணம்.

ஆகச்சரித்திரம் எஉ க்கு செய்யுள் ருதுசு.

முற்றிறறு.

குபராபாயி சரித்திரம்.

சரவாகனன் பொருவி லரசாயவன்றனவை தவிராதுணர்ந்துறுதியாய்
வருகாரியம் புகலவலர் பால்வருந்தனையை குபராவெனும் பெயரினர்
திரமார் குழந்தை யெனும்வயதாதியன் பிறெடு திருமால் பதந்தொழுதலோ
டுருகாதரம் பெருகி ஹரிநாமமின்புதரவுரை வாயுடன் குலவுவார். (க)

அனையாரிளம்பரு வமதிலே மணஞ்செய்துற வமைவாகி யௌவனமுமா
யினபோதுணர்ந்து மணமகன் வீடு துன்றியவரிவர் போதுறும் படியெணு
மனமே வலுந்துணையில் குபராவறிந்து மிகமனநோவொடுங் கருதுவார்
எனமேவுறுந்தமர்கள் கொடுபோயின் விஷயானுபவமே யிசைந்துறுமரோ. (உ)

சந்தான மதனலடைந்தான் மயற்கொண்டு சலியாததுயர் மேவுறும்
நைந்தார் பவஞ்சேரு நந்தாத ஹரிபத்தி நணுகாதவகை கூடுறும்
சிந்தாகுலஞ் சாலவருமாதலாலென்னை செயலென்று பலவாறெணு
நொந்தாரிருந்தன்று நடுராவெழுந்தாரு நோக்காது புறமேவினார். (ங)

தனியாய் முகுந்தனையு ளிடையே நினைந்துருக றவிராது நகர் வாயிலூ
டினிதாக வருபோது கரூவான தெதிர் மூடியுற நோக்கியினை வாகியே
பனிமேவு துளவோனை நனிநாடி நினை போதுபவநாசனது போதிலே
நனியேழை வடிவாகி நனிமூடினதையோவி நலியாது செலுமா செய்தான், ()

அப்போது குபரா நலானந்தமாகி வெளி யாகித்த மேலிருந்த
ஒப்போதரும் பணிகள் யாவுங்கழற்றி மடி யுட்கொண்டு துளவார்வனத்
திற்போகிய முனைக்கணிசைவான சிரகாட்ட தென்கின்ற துறைவாய்படிந்
தெய்ப்பே துமிலரான சாதுக்களுக்குத்த மெழிலான கலனீந்தரோ. (ரு)

ஸ்ரீ பக்தலீலாமிர்தம்.

கோயிற்குளே வந்து கோபாலனைக்கண்டு குவிகின்றகை யோடு நின்
றுயிற்றயா மேவுதேவாதி தேவா நினைடைதீன பாதாயவா
நீயிற்றை நாண்மே லெனைச்சன்ம பந்தத்தினீக்கிப் புரக்கதாள்கெனு
வாயிற்புகன்றே நல்வகை மேவு சாஷ்டாங்கமாகப் பணிந்தாரரோ (சு)

பின்பங்கொா புறமேவி ஹரியே நீ யென்சாபு பெரிதான தயையேபுரிந்
தன்மைம்பொனுருவங் கொடென கணகளானேக்க வுற்றெனறன மயநீத
றன்பங்கு மிகமுததினந் தங்கிஞா மாதவனறனறியானததிலே [திமெனா
இன்பந்தருங கணணனவரன பினிலேகணடெகிாநதனனா தலைமீதிலே (எ)

கைவைதது மினனே நிகவலறகவினி நீடு கவினராதை குணடததடைந
துய்வைககொடுறை கெனனவடிதாழந்துகுபராவுடன செனறுரைநகினபமாய
நைவைத் தவிாக்தார நவநீத முணகள வனுஞளு மினிதுணடுறத
துய்வைக கொணாநதீய வுணடாரிருநதாா துலஙகத தருகதநதையாா [அ]

மனைமேவுறக கணடிலா மறறியஙகிப பின வழிதேடி யெஙகுநதிரிந
தினைவாகிராதா வெழிறகுணட மெய்திகணிறகணடு மகளைபபொனே
அனையாதியனை வோரையும விட்டு நீயிஙகனைடைதற கெனேகாரணம
உனை மாமணஞசெய்த கொழுநறகெவன சொலலுதுமெனப பினுஙகூறுவாா.

ருதுவான பின பிங்ஙனுறலாகுமோ வெட்கமுறலாகுமே நஙகுலம
கதுவாத செயல் செய்தி யெனலும பிதாவின முகஙகணடு குபராவறு
பதுவான வயதுறறு மரிநாம முறைசெயது பவநாச மாககாதினும
சதுரோது மிலதான மனைவாழவு தனிலே சழககுறறிருககின றீரோ (ங)

மனைவாழ்வு கொடிதெனறு கோபால நாமஙகள வாயாா நுவலவுற்றியான
இனைவேது மிலதாகி யிசசெனம மீடேற விவணெயதி யுறைவேனையும
புனைபாச பாதததி லுறவே யழைககினற புனாதானுமககு முறையன
றெனையோவி யினியேனு மரிநாம மினிதோதி யீடேறு கெனறாரரோ (ஙக)

மகள்வாய்மை முழுதும பிதாவாகி யவாகேட்டு மகிழவாகி மகளாாதிரு
முகமான மலாகணடெனா ஊயே யெலாநனறு முகிாதாரு வளாகானிலே
புகலாகி யுறைகினற விதுசால வினிதனறு புரமேவி நமதிலலிலே
ஜகநாத னதுநாம மினிதோதி யுளமேவு தகவாக வுறைநீயெனு (ஙஉ)

பலவாறு புகலபோது திருமாலு னதுதநதை பகாவாய்மைதனை யேவினுய்
இலமேவி யெனதாய திருநாம நனியோதி யிருநாளு முனையோவுறேன
செலமேவு கெனுமவேலை குபராவும வருதநதை செறிவாக வுடனேகியே
நலமான வுயாபூசை யகமான தமைவாக நலிவினறி யதிலவைகவே. (ஙங)

வேறு

கண்ணனை நிறுவிநாளுங் கருதுசோட சோபசாரம்
நண்ணுறக் கரணமூன்று நனிசுத்தி யாய்ப்பூசிதது
விணணிரு ளிரவினும விமலகீாத தனங்கள்செய்து
தண்ணளி மிகுசா துக்கள் பூசையுஞ் செய்து சாாந்தாா. (ஙச)

தந்தைசொற் படியே யிலலந் தனிலிருந் தரிதன் கீாதத
னந்தனைப பகர்ந்துமேவ நாட்டுளோா யாருந்தோகது
வந்துகேட் டவசராகி மகிழ்கின்ற றொன்னும வார்த்தை
அந்தனு ராசன்கேட்டுப் புரோகிதா வரவழைத்தான். (ஙரு)

உமதிகு மாரி மால்பே ரோதலிற் பிரியை யாகி
அமைவரு பிரமானந்த மாய்ப்புகல் கின்றதாக
விமலர்க ளுரைப்பக் கேட்டு விரும்பினே னுமோர்நாள்
நுமதக மேவியின்ப நுகருவே னென்றுவேண்டி. (௰௬)

ஒருதினத் திரவின்மேவி யுவமையில் குபராபோற்ற
மருவலங் காரத்தோடு வளர்திரு மான்முன்னாகக்
கருதுறு தாளம்வீணை மிருதங்க முழங்கக் காலில்
பரிபுரந் தரித்துநின்று பாடலோ டாடல்செய்து (௰௭)

பெருகவா னந்தக்கண்ணீர் பெயர்வில்சா துக்களெல்லாம்
உருகினர் வினவிச்சார்ந்தங் குற்றதும் பிறவுங்கண்டு
திருவன குபராபாயி செவ்வியும் வயதுந் தேர்ந்து
பொறுவரு முகவிலாசப் பொற்பினி லீடுபட்டான். (௰௮)

காமமிக் கவனாய் மோகங் கலந்துமெய் மறந்தானாகி
நாமகீர்த் தனங்கள்செய்யு நல்லவை தனிலிருக்க
ஆமள வற்றதான வாறுகண் டக்கணைக்கண்
கோமளக் குபரா விந்தக் கோலத்தோ டிருந்துகொண்டு (௰௯)

இக்கணை யிருக்குந்தன்னை யிகழ்ந்துகூஉய்ப் பாவிநீயென்
பக்கலிவ் வாறுநீந்திப் படர்கெனப் பகர்வதாக
அக்கணங் கனவுகண்டு துணுக்கெனவெருவியாங்குத்
தக்கதில கனவென் னென்று தன்னுளே யாலோசித்தான். (௨௰)

நதிபவக் கடலேயாக நாட்டுமெக் கணையின் மேவி
வதிதரு குபராபாயி மன்னுமிக் கணையதான
கொதிநர கத்தில்வீழ்ந்து குறைவுறு மெனக்குறித்துப்
பொதிபவக் கடலைநீந்திப் போதுக விரைவிலென்று. (௨௰௧)

அழைத்ததாய் நிச்சயிக்கு மளவின்மெஞ் ஞானந் தோன்றிக்
குழைத்தனு தாபங்கூர்ந்து பயபக்தி யுடனே கொண்டு
தழைத்தசீர்க் குபராபாயி தாளிணை வணங்கி நும்பால்
பிழைத்தது பொறுக்கவென்று பேசினன் றுதித்து நின்று (௨௰௨)

இனிதுநீ ருபதே சஞ்செய் தென்னையீ டேற்றுகென்ன
வனிதையா ருபதேசிக்க மனமகிழ்ந் தினிது பெற்று
நனியுயர் கோயில்சார்ந்து நாடொறு நளின நாபன்
புனிதநா மங்களேத்திப் பொருவின்மா லன்பனானன். (௨௰௩)

குபராபாயி திருவடிகளே சரணம்.

ஆகச்சரித்திரம் ௭௰௯க்குக் செய்யுள் ௫௲௨௰௧.

முற்றிற்று.

கிரிதரலால் சரித்திரம்

வரமிகுத்த பிருந்தை வனத்திலே
பரமபக்த சிரோமணி பன்னரும
திரமுறுத்து மெஞ்ஞான முஞ்சீலமும்
விரவு முத்தமர் விண்டு வுக்கன்பரோ. (௧)

சால்பொருங்குறும் பூததயாவினர்
மால்பெறுஞ் சிந்தை மன்னுங் கிரிதர
லால்எனும் பெயர் நண்ணினர் சாதுக்கள்
பால்விரும்பு பசாரப் பரிவினர். (௨)

காலினூ புரங்கத் தக்கடல் வளர்
மாலினுடல் வருத்துச் சங்கீதத்தி
னுலினீளன் பமைந்தரி கீர்த்தனம்
கோலிநாளும் வருதலைக் கொண்டோர் நாள். (௩)

கண்ணன் கோயில் கலந்துறு காலையங்
கெண்ணன் சாதுக்களீறிலர் கூடினர்
நண்ணுஞ் சீரமை ராசக்கி ரீடைநன்
கண்ணுங் கீர்த்தனஞ் செய்ய வென்றுரரோ. (௪)

கேட்டவாய்மை கிரிதரலா லென்போர்.
நீட்டு சந்நிதி முன்னெழுந்து நின்று
நாட்டுராசக் கிரிடைக்கு நல்லுடை
வீட்டி லுள்ளது வேண்டு மிப்போதென (௫)

சென்று கொண்டு திரிது மென்றுலிவன்
நன்றுசாலுஞ் செறுழிகை யென்செயல்
என்று கண்ணனை வேண்டி யெதிருற
ஒன்று பொன்னுடை வானின்று குந்தவே. (௬)

எழுந்து நின்றிவ ரோத்து மிடத்தின் முன்
விழுந்து வேண்டிய பொன்னுடை மேவிய
செழுந்தண் சாதுஜனங்க ளெல்லாருங் கண்
டழுந்துமன் பினரன் பைவியந்தனர். (௭)

கேழ்விளங்குடை கண்டு கிரிதர
லால்விரும் பியங்கைக்கொடு நன்குதம்
மேல்விளக்கத் தரித்து விளம்பினர்
மால்வியந்துறக் கீர்த்தன மாண்பெலாம் (௮)

யாருங்கேட்டின்ப வாரியழுந்தினர்
சேருமற்றோர் தினத்துத் துவாதசம்
அநசனமத் தரித்தோர் பைராகியவ்
வூரின் சார்பிருந் துற்றதைக் கண்டனர். (௯)

சாதுபூசை தவிர்கில ராதலர்
லோதுமற்ற தனுக்குப சாரமப்
போதுசெய்தடி பூசித்துப் பாதநீர்
கோதுறுது குடித்துக் குளிர்ந்தனர். (ம)

கண்ட வேதியர் யாருங் கனன்றனர்
விண்ட வெம்பிணம் பட்ட வெள்ளத்தினை
ௐ ணடதான் மறை போதத் தக்காயலை
கொண்ட ஜாதி யொழுக்கங் குலைந்தனை. (மக)

என்றுகீழ்மை யியம்பக் கிரிதரர்
நன்றுபூமி நலம்பெற நல்லவர்
ஒன்றினுரிறப் புமபிறப் பும்மிலர்
பொன்றி னுறொன் றிகழ்தல் புலமையோ, (மஉ)

நீயிர் நிந்தித்த னீங்குக வொறனர்
ஆயவந்தணா ஞானம றைதலை
எயநம்பல ரிங்கிறந தோன்றனை
மாய்வு நீகுறில் யாநம்பு வமென்று. (மங)

செத்ததைப்பிழைக் கச்செய்வ தில்லையேல
ஒத்தஜாதிக் கிழிவுசெய் வோமென் ,
மெய்த்தஞானம் விளங்குகி ரிதரா
பொய்த்த மூடர்க்குப புத்தியுண் டாகென்று. (மச)

தனிவிளங்குசித் தத்தொடு கண்ணனை
இனிதிரந்து நினைக்கவி றந்தவன்
நனிவிளங்கின னல்லுயிர் கொண்டுடன்
முனிவிகந்த கிரிதரர் முன்னரோ. (மரு)

கண்டுபோற்றிக் கண்ணன்திரு நாமமுட்
கொண்டு போயினன் றன்பதி கூடினோர்
மண்டிநன்கு வியந்து மதித்தனர்
அண்டுதாசனை யன்பொ டிறைஞ்சினார். (மசு)

போற்றினார்நும் பெருமையைப் பூமியில்
சாற்றஞானந் தழைந்தவர் தாமிலை
ஆற்றல்சால வமைந்தவர் நீரெனத்
தேற்றினார்தம் பதியிடைச் சென்றனர். (மஎ)

கிரிதரலால் திருவடிகளே சரணம்.

ஆகச்சரித்திரம் எச-க்குச்செய்யுள் ருகசுமசு.

முற்றிற்று

பலக்புகார் சரித்திரம்

பலக்புகா ரெனுமவிந்த வரசன் பாரிற்
பதினெட்டு லக்ஷநிரை குதிரையுள்ளோன்
அலமொழில்சே ரரம்பைதனை யனையமின்னா
ராயிரத்தொ டறுநூறு முடையானீதி
விலகுதலில் லாதுசெங்கோல செலுத்தித் தானாள்
மேதினியி லோருயிர்க்கு மெலிவுநேரா
திலகுபல வுயிரிடத்துந் தயைமிக் குள்ளா
னேனுமட வார்மோகத் திறங்கி நீங்கான். (௧)

இன்னபடி வருமரச னொருநாளிற்ற
னெட்டுமந் திரிகளும் வரவழைத் தியான்றன்
நன்னலச்சத் தியடைசற் றுபாயமேது
நவில்கவென மந்திரிக ளாலோசித்து
மன்னுதனிக் காசிநகர் வளர்கபீரர்
மாணடிசேர்ந் தானல்ல கதிசேர் வாகும்
என்னவொரு மொழியாய்ச்சொல் வியுங்கபீர
சதாசிவன போதகி தியாயஙகுச சாரநதெதாககியவளவனன
உதாரி நீதருகவெனலு மவவிருவருடன முதுவடனா துகாராம
அதான பின சென்றிருவருஞ செலலவநதவுபரிசிலாவநது
நிதான மிலலாதோா பொதி மிளகாயை நீ யொருதுடன பாலீநது. (௩௰௭)

பின்னுனககாளாம விடோஜி யெனடானை பெறுவில வாஙகி வாவென்று
துன்னுற விடுததாய் துடடனீ யாதாறவொடாஙசமன கழுததினிற சுருககிட்
டெனனதாவியை நீபபேன்றரா யெனனிவெள நூமநிந பொழுதியாஙகள
மனனியே தடுததுப பணந்தருவிகக வாயததுனவலன வகுததா (௩௰௮)

அந்த வூரா சொலவதும பணமெல்லா மணமிபதும முனதராயநதிங
கிந்தமா செய்கை யியன்றதும் விடோபா வெழில விளையாடலெனக தெரிந்து
நந்தலில் கணணனென பொருட்டிஙஙனடதத நேரிட்டதே யெனறு
சொந்தனா புகழநதாரது தெரிநதாரு நுவறுகாராமனைத துதிததா. (௩௰௯)

அங்கு நின்றவர் தம்மூர் புகவெண்ணியதர் வருபோதொரு மோசத்
தீங்கு செய்வஞ்சன் பித்தளைக் காப்பிற் செம்பொன் மேற்பூசியே திகழ்வித்
தோங்கியது காராஞ்செட்டிபாற் காட்டியுனக்கிது தருகின்றேன் விலைக்கு
வாங்குதியாநீ யென்னலும் பார்த்து மற்றிதற் குறுவிலை யில்லை. (௱௨௰)

என்னிடத் தென்ன வுன்னிடத் துளதை யீதிமேற்றக் கதையுன்பால்
மன்னியான் வாங்கிக்கொள்ளுவே னென்னமற்றிதற் கொப்பினருள்ள [ர்
பொன்னினைமுழுதுங்கொடுத்தந்தக்காப்பைக்கொண்டுதம்மில்லிடைப் புகுந்தா
துன்னிய கடன்றந்த வன்றனக் கதனைக்காட்டிநீ தொகுவிலை செய்து. (௱௨௧)

கடன்பொருள் கொண்டு மிகுந்ததை யெனக்குத் தருகெனக்கை தரக்கண்டு
திடந்தெரிவானுய்ச் சிரித்து மற்றெவர்க்குந் தெரிவுறச் செயவவர் துணைவி
உடன்று தன்றலைமே லெற்றினளாகி யுன்னைப்பண்டரி புரத்துள்ளோன்
மடன்பெறச் செய்தானன்றி மற்றில்லை மற்றவன் றன்னை நேசித்து. (௱௨௨)

திரிகிலா யென்றேன் கேட்கிலை யிந்தச்செயல் வரச்செய்தனை யிதனில்
மரிவது நன்றிங் கிருந்தென்னை பயனு மடிந்தது குடும்ப மென்செய்வேன்
தெரிகிலை சிறிது மென்றுராப் புதலுஞ் செறிகடன் காரனுஞ் சென்றான்
எரிசினச்சி ஜாயிகுடும்பர க்ஷணைக்காயெய்தின னொருவணிகன்பால் (௱௨௩)

வாக்குநாணயமாய்ச் சிலபொருடருக வெறனள் மற்றவ னிவளுக்
காக்கமுள்ளோர்கள் சகோதர னென்னவறிந் துனக்கெவளவு வேண்டும்
நோக்கி நீசொல்க வென்றன னிரண்டுநூறு பொன்றரு கெனக் கொண்டு.
சீக்கிரத்தில்லின் மேவிநாயகனை நோக்கினள் செப்புகின்றாளால். (௱௨௪)

நீயினியேனு மோசம்போகாமனிலைத் துவாணிபஞ் செய்தி யென்று
மேயின பொருளைத் தந்தன ளுப்புவிற் பவரொடு விராய்த் துகாராம்
ஏயினபொதியிற் பிடித்தெரு தேற்றியெய்தினர் பாலே காட்டெனு மூர்
போயினர் விற்றப் பணத்துக்கு வெல்லங்கொண்டு விற்றுப்பொருளெல்லாம்.()

கொண்டனர்திரும் பிவணிகரோ டெய்தக்குறுகினன் வழியிலோர் குடும்பி
மண்டு சங்கிலியின் மரத்திழை கலப்பைமாட்டிய கழுத்துடை யவனுய்
அண்டிய வணிகர் முன்னெதிர்ந் தியானேரந்தண னரசிறைக்கி லாமல்
யிண்டெனூரிரக்க வேண்டினன் வந்தே னென்றனன்வணிகர்கள்வெறுத்தார்.

வெறுத்தபின்று காராம்பாலடைந்தையவேண்டுபொன்னிரண்டுநூற்றைம்பான்
மறுத்திலை தரிலென் குடும்பமும் வாழுமாட்டிந்தத் தண்டமுந்திரும்
பொறுத்தருள் செய்க வென்றிரந்தனனப் போதவர்க்கருள் மிகப்பொங்கித்
தெறுத்த தண்டந்தீர்வகை யிருநூற்றைம்பது பொனுந் தந்தனர் செவ்வே. ( )

கண்டசெட்டிகளெல்லா மிவர்தம்மைக் கடுத்தின்னபடி செயத்தகுமோ
கொண்டவுன்மனைவிக்கென்சொல்வையென்றுகூறினர்பிரிந்து முன்சென்றார்
மண்டிவனொடு சேரத்தகா தென்று மற்றிவ ரசிறை செலுத்தித்
தண்டமுந் தீர்தியென்றவன் குடும்பந் தாமுணச் செலவுக்குந் தந்தார். (௱௨௮)

அம்மறையோன் கொண்டடை வொடுதுய்த்தங் கருடுகா ராமனைநோக்கி
உம்மை நேரான ஹரிதனக் கன்பருலகத்தி லில்லை யாதலினும்
தம்மையெஞ்ஞான்றும் ஜகபதிகாக்கத் தகுவனென்றாசி சாற்றினனவ்
வெம்மை தீர்ப்பதற் கென்பொரு ளுதவியதே யென்றுள மகிழ்ந்தனர் விரும்பி.()

இல்லிடை மனைவிக்கென் சொல்வதென் றங்கெண்ணினரிருத்தலும் விடோபா
நலவிய லன்பன் முதலையுங்கிடைத்த லாபத்தையுஞ் செலவழித்தான்
புல்லியவணிகர் போய்மனைவிக்குப் புகலின் மற்றவள் வெறுத்திவனை
அல்லல்செய் கிற்பாளே யெனத்துகாரா மாகிமுன் சென்றனனம்மா. (௯௬0)

சென்றுமுன்கடன்றந் தவனிடை வட்டிசேர்த் திருநூறு பொன்செலுத்தித்
துன்றுபொன் னைந்து ஜிஜாயிபாற் றருகவெனத் தரவவன் சொலுநீயே
நன்றுபோய்த்தருக வென்றன னதற்கு நான்வெகு நாட்சென்று வந்தேன்
என்றுகோபிப்பா ளாதலா னீயே யீதியென்றீந்து போயினனே. (௯௬௧)

அவ்வணிகன் கொண்டவரிலாள் பாற்சென்றைந்து பொன்னுந்தந்தங்கனைத்தும்
செவ்வயி னுரைத்தா னவளவரெங்கே செப்புக வெனவெங்கே யேனும்
திவ்விய ஹரிநாமஞ் சொலித்திரிவான் சினந்திடே லென்றவன் சென்றான்
ஒவ்விய மறுநாள்வீடு வந்துற்றா ருதவரி பஜனைசெய் துற்றார். (௯௬௨)

உற்றபோ துடன்வந் துற்றனர் வணிகரோதினர் ஜிஜாயிபாலனைத்தும்
மற்றவள் கேட்டுவியந்து பொன்செலுத்தின வன்றிருமாலெனமதித்துப்
பெற்றதன் கணவனொடு பிணங்காமலிருந்தன ளுள் சிலபெயரச்
செற்றதவ்வூரிற் பஞ்சமிக்கதனுற்றீனியில்லா தெருதிறந்த. (௯௬௩)

அன்னவஸ்திர நேராதனரிடை யேயழுந்தியுங் கடன்கிடையாதும்
துன்னுவெம்பசிக் குக்கீரைகளட்டுத் துய்த்தும் வெம்பசி தொலையாமல்
இன்னலின் மூத்தமனை விநோயாலு மிறந்தனள் யாவருமெய்தி
மன்னியது காராமென்பவர் தம்மைநோக்கினர் சிற்சிலவகுப்பார். (௯௬௪)

தாங்கரு மின்னலரி பஜனத்தாற் சாருமென் றுரைத்தனமதனை
நீங்கலைவிடா யேற்றுன் பமேன்மேலு நேரிடுமினி யெனுநீக்கில்
ஓங்கியசுகத்திலுறுதி யென்றுரைத்தா ரோது பாண்டுரங்கனைப் பழியார்
தீங்கிலரோசா கார்களோ நீவிர்செபபுதல் செவ்விதன் றென்றார். (௯௬௫)

கண்ணனுமங்கள் கனிந்தனர் புகன்றுகாலம் போக்குற்றனர் சிலநாள்
நண்ணியபின்பு மூத்தகுமார னுமஞ்சந்தோபா வெனபானும்
விண்ணுலகடைந் தானவ னிடத்தன்பு மிக்கனராதலான் மிகவும்
எண்ணருந் துன்பத் தழுந்தினர் கொடிதேயிப் பிரபஞ்ச வாழ்க்கையென்று.

இதிலிருந்தி யாரீடேறினர் சீச்சீ யிதைவிட்டுத் தொலைப்பதே யினிதென்
றதில்வெறுப்புள ராயெனக்கொரு பதின்மூன்றாண்டு நேர்காலத் திற்பாரம்
பொதிதலாய்ப்பதினேழாண்டிற்றாய்தந்தைபொன்றினர் பதினெட்டிற்றமைய
முதிர்வெறுப் புற்றுவனத்திடைச் சென்றார்முந் திருபஃதெனு மாண்டில். [ன்

மனைவியுஞ் சேயுமிறந்த னரின்னமனை யறஞ்செய்வதால் வருதல்
இனைவதேயன்றி வேறிலையினியா னெப்பொழுதினுந் திருமகள் கோன
நினைவிலே காலங்கழித்திடல் வேண்டு மென்றெணி நெடியபோ பநாதென்
றினைவரும் புகலும் வரைமிசை யேறியமர்ந்தனர் விழிகண் மூடினராய். ௯௬அ

வேறு.

ஸ்ரீதரசஞ் சிவியுனைத் தியானித் தெவ்வாறு
சேவித்தல வெழுத்தலெத்திறத்தி லெதிர் நோக்கல்
மாதவனே யெனப்பஜித்துச் சலமுணலுந் தவிர்ந்து
வதிந்தேழுநாள் வரையும் வரையிடத்தே யிருக்கும்
போதமல ரைவாகித் துகாராமர்ச் சூழ்ந்து
பொதி கோரங்கொடு சிறிப்பொருந்தி யதுதெரிந்தும்
தீதறு கண்டிற வாமற்சிறிது மச்சமின்றித்
திருமா ணுமங்களையே செப்பின ராயிருக்க. (ரு௩௯)

அசரீரி பூமகள்கோ னரவாகி யுன்பா
லடைந்தன னென் றதுகேட்டுத் துகாராமரரியே
நிசமாகி லரவுருவை விடுத்துப் பாண்டுரங்க
நிமலவடி வாய்வந்தா னேசமுற்றுப் பார்ப்பேன்
இசைவாயென் றரிநாமங் களையோதியிருக்க
விவரது நிச்சயபாவந்தனைத் தேர்ந்து கண்ணன
நசைமேவிப் பொன்னுடையு மைம்படையும் விளங்க
நான்கு புயங்களு முடியு நன்கொளிர் குண்டலமும். (ரு௪0)

பொலியவெதிர் தோன்றியென்னைக் காணவுள்ளத்தன்பு
பொருந்துதுகா ராமா காணென் றினிதுபுகல
மலியவொளிர் பரஞ்சோதி மயமாகிநின்ற
வடிவுகண்டானந்த மிகப்புளக முடல்பொங்கத்
துலியவடி விடையொன்றி யிருந்தனரிங் கங்கே
துணைவனெனுங் கான்ஹையா தமையனைக்காணமல்
மெலியவுட லிவர்மனையை யொழிந்தனராய் வெளியே
மேவிய நாளாதி ஜலபானமு மில்லாமல. (ரு௪௧)

ராமவியோ கத்தாலே பரதாழ்வான்வருந்தி
நாடிவந்தாற் போனகரு நாடுநெடுங்காடும்
ஆமயலெல்லாந்தேடி யம்மலைமேலேறி
யணைபோதங் கமலனையுந் தமையனையு நோக்கி
ஏமமிக மெய்மறந்தோர் முயற்சியுமில்லாம
லெழிலரியைக் காணும்வகை யெனக்கியன்றதென்று
தோமறுகண்ணீர்பெருகிச் சாஷ்டாங்கமாகத்
தொழுதனரப் போதுடனே சுதரிசனக் கையன். (ரு௪௨)

தழுவியெடுத்துத்துகா ராமரைத் தன்மருங்கிற்
றங்கவைத்துக் கொண்டுநினக் கென்வேண்டுமென்ன
வழுவிலன்னை தனைமறவாக் குழவியென நின்னை
மறவாமல் யானிருக்கும் வகையருளு கென்றார்
நழுவவிடா துங்களுக்கா யிவ்வகை யாம்வடிவு
நான்கொள்வே னின்விழைவு நல்கினன் மற்றினிநீர்
பழுதறுநும் மூர்புகுந்து பஜித்திருமி னும்மைப்
பகுத்திரோ னெனலுமிடைப் பக்கலி னின்றிறங்கி. (ரு௪௩)

எட்டுறுப்பும்படியக் கீழிற் பணிந்தார்தம்பி
　யெனுங்கான்ஹை யாவுமிறைஞ் சப்பரமன் மறைந்தான்
மட்டறுமப் பொருப்பினிடைப் பரமனின்றபாத
　மலர்ச்சுவ டின்னமு மிருக்கின்றன பின்புதுகாராம்
கிட்டிடுதம் மிளவலொடு மூர்புகுந்தங்கருகே
　கிளருமிந்திராயணி தீரத்திருந்தார் பொழுது
பட்டிரவு விடிந்தபின்பு நீராடி நியமப
　படியுமுடித் தெட்டாநாள் பாரணையுஞ்செய்தார். (௱௪௪)

அமலனருள் பெருகவருந் துகாராமசாமி
　யதிகநனி விரக்தராய்க் கான்ஹையாவான
விமலவிள வலைநோக்கி நமதுதந்தைக்குதவ
　வேண்டுகடன் சீட்டையெல்லாம் விரைந்துகொண்டுமேவக்
கமலமுக மலர்ந்தருளிச் செய்தவை வந்த பின்பு
　கடன் வாங்கினோ ளிந்தக் காலத்தெத்திறத்தோ
தமலமறத்தருவாரோ தருகிலரோ நீவிர்
　தகநிர்ப்பந்தஞ் செய்து தரக்கேட்பீரதனுல். (௱௪௫)

வரவேண்டும் பொருட்கான சீட்டெல்லாமிந்த
　மாநதியில் விடுப்பது நன்றென்னலுங் கான்ஹையா
உரவோர்நீர் விரக்தரா யினிர்யானே குடும்பத்
　துள்ளவ னெவ்வாறு பிழைத்துய்யும் வகையென்னத்
திரமாகவ வாவுறுத்த துகாராமசாமி
　சிறிதுன்னி யவற்றையிரு பங்காகச்செய்து
தரலான வொருபங்கைத் தம்பி கையிற்றந்து
　தமதுபங்கை யாற்றிலிட்டுத் தம்பிக்கீதறைவார். (௱௪௬)

ஒருவரையும் வருத்தாமற் பொழுதுபோக் குறுகென்
　றுரைத்துமனைக் கேகும்வகை யுரைத்தருளிப் பின்பு
திருவுறையு மணிமார்பன் கோயிலுக் குட்சென்று
　சேவித்தா ராண்டுகொண்ட பாண்டுரங்கன்றன்னைத்
தருவுறையுங் கானிடைச்சென் றுணவு பெற்றதுண்டு
　தம்மூர்க்கு மூன்றுகோசளவுறு பாண்டார
அருவரை மீதேறி ஹரிநா மங்கள் புகன்றே
　யனுதினமும் விட்டலனை யகத்தமைதது்க் கொண்டு. (௱௪௭)

அங்குறைந்தோர் சார்புபொழு தத்தமித்தபின்பூ
　ரணுகியிராமுழுது மருளமலனுளிர் வடிவம்
பொங்குளத்தும் புறத்தும் விளங்குறக்கண்டும்புகழ்கள்
　புகன்றுதுயில் கிறதின்றிப் பொழுதளவு நடித்துக்
கங்குல்கழிகாலை யிந்திராயணிக்கு வந்து
　கலந்தாடிப்பூசை செய்து கான்வரை மீதேறித்
தங்குமொரு புறத்திருந்து மால்பஜனை சாற்ற
　வவிராதிப்படி நாளுஞ்சரித்து வருமோர் நாள் (௱௪௮)

தினமுமுழுகுறு நதியினீராடிப் பூசை
செய்து கரைதனிலிருந்து விட்டல ஞமத்தை
அனவரதம்புகல்வது போறபஜித்திருக்கச் சமீபத்
தாயவொரு சோளக்கொல்லைக்காரன் பயிரிட்
டினையதற்குக் கதிர்தோன்றும் பருவமணித் தாயிற்
றென்றதற்குக்காவல் வைக்கவேணடு மென்றங்கெண்ணி
மனனமுறுந் துகாராமசாமி வயின்வந்து
வானாகாலம் போக்கேல் வருகவென் பாலென்றான். (௩௯௯)

என்றெனது கொல்லையிற்புள்விலங்கு களைக்காப்பா
யேலுனக்கு முடிவிலனை மணங்களிப்பே னென்ன
நன்றெனச் சொன்னார் யாவரோது செயச் சொலினு
நன்றென்னுந் துகாராம சாமிதனை யழைத்துச்
சென்றெனக் காய்ச்செய்த பரணிதிலேறி யிருந்து
செய்தபயிர்கண்டு முதலா மளவுங் காத்துத்
துன்றெனச் சொல்லிபபோ ஞன்று காாமசாமி
சொன்னபடி சோளக்கொல்லையிற் காககத் துணிந்தார். (௪௦௦)

பரணிருந்து விட்டல ஞமங்களெல்லாம் புகழ்ந்து
பஜித்திருக்கும்போதுவந்து பக்ஷிகள் பாற்சோளம்
முரணிலது தின்பதனைக் கண்டு துகாராமர்
முகுந்தனெங்குநிறைந் திருக்கின்றுன தஹலிவற்றை
இரண முறக்கடிவோ மேற்பாவ மெனக்கடியா
திருந்துதின்று வயிறுநிறைற பக்ஷிகளை நோக்கித்
திரன்மிகு புள்ளினமே நீருதகமினிப் பருகச்
சென்மினென்பார் தினந்தோறுந் திருமாலைப் பஜிப்பார் (௪௦௧)

மனையிலுறுஞ்சி ஜாயிகணைவனைக்காணுத துனைந்து
மகளைப பார்தகெனககோ மிக்கதுபசி நானன்னம்
அனைய வருக்கிடாம லுணணே னவனைப்போய்த் தேடி
யழைதது வருகெனக் காசிபாயி யெனுமூத்த
தனையை பலவயின் ருேறுந்தேடிப போய்த்து காராஞ்
சாமியிருந்துழி கண்டு தந்தாய் சாப்பிடற்கு
நினைவிலே யோவருக வெனக்கொல்லை தனைக்காக்க
நியமித்த முதலாளி யஸ்தமிக்குங் காறும். (௪௦௨)

கொல்லைதனை விடாதிருக்க வென்றன னெவ்வாறு
கூடும் வரவுனதனைக்குப் போய்சொலென்று சொன்னார்
வல்லைமனைக் கணுகித்தன்ருய்க் குத்தன்ருதை
வருத்ததுரை செய்யவவள் மணாள ருண்ண வன்னம்
ஒல்லையி லுய்த்தவ ருண்டபின் பறிந்து கொடுதா
னுண்டன ளிவ்வாறு தினந்தோறு மிரவாகக்
குல்லையணி பாண்டுரங்கன்றனைச் சேவித்தேகிக்
குறித்த பரணிருப்பாரோர் மாதவனையாக. (௪௦௩)

சாவல்வைத்தோன் கொல்லை விளைந்தது காணவந்து
கண்டனன் பார்த்தன வெல்லாம் வெறுங்கதிராயிருக்க
ஓவறு கோபங்கொண்டு காப்போனை நோக்க
வுவர்விடல ஞமம் வாயுனைபப வுறுபரணமேல்
மேவலைக் கண்டியா னுன்னை விசுவசித்துக் காகக
வேண்டினதற்குக் கொல்லைவிளைவு கொள்ளை யிட்டுத்
தாவறு மென்குடி முழுகச் செய்தனையே யென்று
தவவைது மங்கவனைத் தானிழுத்துச் சென்ருன். (ரு௫௪)

அந்தவூர்த்தலைவனிடத் துய்த்துமுன்னே நிறுத்தி
யவன்காண வயிற்றிலெற்றிக் கொணடுளது சொன்ஞன்
முந்தநின்ற துகாராமர் தமைநோக்கித் தலைவன்
முயன்றது நீயெனவென முழுமுதல்வனடியார்
இந்தமுதலாளி யென்னைப் பரணின் மீதேறி
யெய்து பக்ஷிகளைக் காக்கவிசைத்தன னவ்வாறே
வந்தபக்ஷிகளைக் காத்துவைகினேன் போகா
வகைபோக்கினே னென்ருல வருத்ததணடம் பெறுவேன். (ரு௫௫)

புள்ளினந்தம் வயிறுநிறையப பொசித்ததன்றிப்
புகன்றபடி சூறைசெய்து போயின தொன்றில்லை
கள்ளமிலை மெய்யிதெனக் கேட்டன ரெல்லோருங்
கலகலென நகைத்தன ரத்தலை வனதுகண்டங்
குள்ளவர் முன்பயிரிட் டோன்றனை நோக்கியுண்மை
யுரைத்தியுனக் கானகொல்லை யெவ்வளவு விளையும்
கொள்ளவென மணங்கது நாற்பது விளையுமிதற்குக்
குறையா தென்ருன் பயிர்செய்குடியா ஞென்ருனே. (ரு௫௬)

பறவைகளுண்ணக் கொடுத்தபடி யானீதானே
பழுதுசெய்தாயுழுது பயிரிட்டவன் சொற்படியே
பெறவளித்தல் செயவேண்டு மெனத்தலைவ னுரப்பிப
பேசியளிப்பதற் குனக்குப் பெரிது பொருளில்லை
உறவதற் காதர வெழுதிக்கொடுக்க வெனத்துகாரா
முடனெழுதிக்கொடுத்தனர் பின்புறுதி செய்த தலைவன்
அறவழிந்த கொல்லைதனை நாம்போய்பார்ப்போமென்
றங்குள்ளோரொடு கூடியடைந்த தனைப்பார்த்தான். (ரு௫௭)

பார்க்கவரு முன்கொல்லை யளவில் விளைவாகப்
பாண்டுரங்க னியற்றின னப்படி விளைவுபார்த்துச்
சேர்க்க வியந்தனர் கொல்லைக்காரனுங் கண்டெனக்குச்
சேரவிவை செயிலெழுதுஞ் சீட்டை யளித்திடுவேன்
நோர்க்கவெனத்தலை வனிந்தத் துகாரா மன்றிருமா
னினைவுளனுதலி னிவற்கு நெடுமால் செய்யருளால்
தீர்க்கவிளைவாய துனக்குளது கொள்கவென்று
தெளிந்து விளைந்ததை யறுத்துச் சேர்க்கவுனைசெய்தான். (ரு௫அ)

மலிந்துகுவைசெய்தது மூன்னூற்று நாற்பானு
மணங்களவு கண்டு கொல்லைக்காரனுக்கு நாற்பான்
பொலிந்த வளவுள கொடுத்துக் கடன்சீட்டைக் கிழித்துப்
பொருந்து துகாராம் சாமிமுக நோக்கிக் காவல்
நலிந்துசெய்தபடியாலே மனமிரங்கி நாத
னன்றளித்த தென்றுமிகுந்தன வெல்லா நல்கப்
பலிந்தவிந்தச் சோளத்தி லொன்றேனு மாசைப்
படாதிருக்க விளைந்ததிந்தப்படி யெல்லாங் கொண்டால். (௱௫௯)

எவ்விதத்துன்பத்துக் காளாக வியற்றுறுமோ
வென்றனக்கு வேண்டா மென்றனர் தலைவன் கேட்டுச்
செவ்விதென மகதாஜி பண்டிதர் தம்மகத்திற்
சேர்த்து வைத்தான் மிகுந்துள சோளங்களெல்லாஞ் செவ்வே
அவ்விதங் கண்டானந்தங்கொண்டு துகாராம
ரரிபஜனை செய்து கொண்டு வருநாளிலொரு நாள்
திவ்விய விடோபாவின் கோயில் பழுதாகித்
திகழ்வது கண்டது திருத்தச்சிந்தை கொண்டுமுயன்று. (௱௬௰)

மண்குழைத்துக் கோயிலின் மேற்றட வியுடன் மிகவும்
வருந்துதலைத் தெரிந்து விடோபாவுக்கவ்வருத்தம்
எண்குழைக்க மகதாஜி கனவிற்போயினியுன்
னிடத்திருக்குந் தானியமெல்லா மெனது கோயிற்
கண்டுழைத்த வயினெல்லாஞ் செவ்வை செய்கவென்னக்
கண்விழித்தவ்வூரார்க் கக்கனவதனைச்சொல்லி
விண்குழைத்த சங்கொலியான் கோயிலுக்கெல்லோரு
மேவிவந்து துகாராமர்வேலை செய்யக்கண்டார். (௱௬௧)

கனவு நிகழ்ந்ததற்கிது வேகண் கூடென்றறிந்து
கற்சாந்து முதலவெல்லாங்கொண்டு பழுதகற்ற
முனர் நடுவாய் வைத்துள தானியங்களெல்லாஞ் செலவாய்
முற்றின பின்புனித நலைமுடிப்பதில்லாதிருக்க
அனகதுகாராம் சாமி வருந்துதலைத் தெரிந்தா
னகளங்கன் மகதாஜி கனவிடைப்போய் முன்னர்ப்
புனமுடையோன் காத்ததனுக்கரை மணங்குச்சோளம்
புகன்றபடிதராது கொண்டு போயினன் மற்றவன்பால். (௱௬௨)

அரைமணங்குங் கொண்டென் கோயிற் புனிதமாக
வமைக்கவெனவது தெரிந்தங்கனைவருக்கும் புகன்று
வரையளவு தரவாங்கி யூரிலுளோர்க்கெல்லாம்
வரிவைத்துப் பொருடிரட்டி மாதவன் கோயிலுக்குப்
புரைதவிர்த்துப் புனித நலம்பொருந்துறவே செய்யப்
பொருவிறுகா ராம்சாமி யளவிலின்பம் பொருந்தி
நிரைமுன மேய்த்தவன் கோயிற் சபாமண்டபத்தி
னின்றரி கீர்த்தனம்பாடி நிகழ் நடனமாடி. (௱௬௩)

காமதேவொடு ஞானதேவாதி நல்லோர்
நவின்றசாயித்தியம் ராமாயணம் பாரதமென்
றுமதாகிய முத்திக்கடைவான கிரந்த
மனைத்துஞ் சேகரித்துக் கொண்டந்தப் பாண்டார
வாமவரை தனிலேறி யிருந்துகொண்டு நாளு
மனனஞ்செய் துவந்தனர் மற்றவர் மனைவி தினந்தோ
றேமவரைக்கணுகி ரொட்டிசுரைக்குடுவை நீர்தந்
தினிதருத்திப் பின்பகத்துக்கெய்தி யுண்பதியல்பே. (௲௬௪)

வேறு

ஆயவர் வருந்தி முன் விசுவம்பரர் கடவுளாகத்
தேய்வறு குலத்தை நாசஞ்செய் கருங்குறளன்றன்னை
எய்வுற விவ்வூர் வைத்தாரி வனிலென் கணவருக்கு
மாய்வறு பித்தங்கொண்டு மயங்குதலாகி நாளும. (௲௬௫)

இடைவிடாத வன்றன்மை மிசைத்தனர் திரிதலாலென்
னுடைமை கண்முழுதுந் தோற்றேனுணவு மிலாமனேறும்
நடையுறு மக்கடாமு நலிவுறும்படி நன்றாக
அடையுமென் குடும்பமெல்லா மயர்வுறலாயிற் றந்தோ (௲௬௬)

இப்படிக்கியற்றி நின்ற விவனையுந்தெய்வ மென்றியாம்
எப்படிக்கருது கின்ற திவரிக்கணேலும் பாபபாகா
தொப்பறப் பகலெல்லாங்காடேலேந்திடை யிரவில்
மைப்படிக் கியல்வோன் கோயில்வந்து வைகறையாமட்டும். (௲௬௭)

கூத்தியல் கின்ற கொண்கர் குலய்வந்து புசிப்பதின்றி
ஏத்தினர் வரையிலேறி யிருத்தலாற்றினந் தோறேக
வாய்த்தது கால்கனொந்து வருந்தினேனினியெவ்வாறு
மாத்திரள் வரையிலேற மாட்டுவேனென்ன வருந்தி. (௲௬௮)

அப்பமு நீருங்கொண்டங்கணு குழிவெயிலில் வாடி
வெப்ப முற்றடிகனொந்து விரைவுறச் செல்லும்போதோர்
சர்ப்பவன்னெயிறு போலத்தைக்கவோர் கூர்முட்காலில
வைப்பதில் வருந்தி வீழக்குடுவை நீர் கவிழ்ந்து வாரந்த. (௲௬௯)

மயங்கி மெய்மறந்து சற்றுநேரம் வாய்ந்ததன் பின்றேறி
உயங்கி காலை நோக்கவுதிர நீர் பெருகலாகத்
தியங்கியம் முள்ளை யீர்க்கச்செறிந்து வாராமையாலூர்
தயங்கிய கரியகுள்ளன் சமைத்த தென்றுளத்திலோர்ந்து. (௲௭௰)

முன்பந்தக் கரியகுள்ளன்றனக்கியான் முடித்த தென்றோ
வன்பு கொண்டிவ்வாறெல்லாம் வருக்கின்றானெனக்கென் செய்கேன்
என்பனவுரைத்துச் சாலவினை வுழியிரங்கிக்கண்ணன்
தன்படிவத் தோடங்குச் சார்ந்தனன் சாரக்கண்டு. (௲௭௧)

இவனிங்கேன் வருகின்றான் மற்றிவன்முக நோக்கலாகா
தவனியிலென்று வாராவத்திசை முகந்திரும்ப
நவனீதக்கள் வனந்தத்திசை முனு நண்ணக்கண்டு
புவனியில் வேறோர் திக்கை நோக்கவு மங்கும் போந்தான். (௲௭௨)

எங்கும் வந்துறுகின்ருனென்றிணை விழியிருக்மூட
அங்குளந்தனிலுந் தோன்ற வறிந்து நான் வேண்டேனுகப்
பொங்குறு வயிரங்கொண்டு போந்தென்னை வருத்துகின்ருன்
கங்குலினிறத்தானென்று கருதி நிந்திக்கலாக. (௱எரு)

அம்மனுயென்று கூயங்கருகில் வந்தருளின்வள்ளல்
செம்மவிவ்வளவில் கோபஞ்செய்வதேனென் மேலென்று
விம்மவட்கினிமை கூறி வெறுத்திடேலென்றுட்காந்து
கம்மலரன்ன வன்னுள் காலைத்தன்றுடை மீதேற்றி. (௱எசு)

அணுவள வேனுந்துன்ப மின்றியம்முள்ளை வாங்கி
நணுகருட் கண்ணுேக்க நங்கைதன்றுன்ப நீங்கி
எணுளுறை பவனை நன்ரு யெதிருற நோக்கி நின்னை
நுணுகறி வகத்துக்கொண்ட நோன்பினென் கணவரின்னும். (௱எரு)

உண்டியில்லாமலுற்ரு ருங்கியான் செல்கின்றேனென்
றெண்டி ருமாலுக் கோதியே கப்பினெம்பிரானும்
அண்டினன் செல்ல வோங்கலமர் துகாராமசாமி
கண்டிருவரையு நீருங்கனலுஞ் சேர்ந்துறுதல் போலும் (௱எகூ)

நண்ணருமமுது நஞ்சு நணுகி நண்ணுவதுபோலும்
கண்ணனும் ஜிஜாயிதானுங் கலந்துறுகின்ற தென்றங்
கெண்ணதி சயித்திருக்க விருவரு மருகுசார
வண்ண நன்முகிலின் பாதம் வணங்கினர் நிற்கவள்ளல். (௱எஎ)

தழுவினன் மகிழ்ந்து பேசத்தகு துகாராமசாமி
வழுவலின் மனையை நோக்கி மருவுவிட்டலனுக் கன்னம்
பழுதறப் படைத்தி யென்னப் பரிந்தப்பமொன்றை யெங்ஙன்
குழுவிருவருக்கு முண்ணக் கொடுப்ப தென்றிலச்சை கொண்டு. (௱எஅ)

கணவருண் கின்றதின்மண் கலக்கவிக்கரிய குள்ளன்
அணவினன் வயிறுசால நிரம்பினனுக வந்தோ
இணர்விரி துளவினனுக் கென்பசி யொருவரோனும்
உணவயிற்றுக்குப் போதாதோரப்ப மெனவுள் ளெண்ணி. (௱எகூ)

அச்சுதன் முன்னர்வைக்கவ மலனுண்டவள் கலத்தில்
மெய்ச்சு நல்லன்னவர்க் கமிக நிறைத்தாடைமூடி
வைச்சனன் றுகாராம் சாமிவாய்ந்துணச்சி ஜாயியென்பாள்
இச்சையிற் கலத்தினுடையே தெனத்திறந்து பார்த்தாள். (௱அ0)

பலவகைச் சுவைசெயன்னம் பாத்திரத்திருத்தல் கண்டென்
குலதெய்வங் கொழுநற்காக வமைத்த தென்றுளத்திற்கொண்டு
நலதிழை கண்டேராவோ பவானியோ நன்மைசெய்ய
வலபயிரவனே விந்தவகை செய்த தெனவணங்க. (௱அக)

நீவணங்குகின்ற தெய்வமேதது நானே நின்முன்
ஆவண கலத்திலாக வமைத்தன னென்ன வையன்
மேவல் செய்யாளா யன்னமேவிரு வருக்கு நல்க
ஓவறவுண்டார் நன்னீ ருணச்சுத்தமு ஞற்றவேட்டார். (௱அஉ)

மலையினீ ரொங்குமில்லாவகை தெரிந்து துவும் வள்ளல்
உலைவி னீயிங் கேகையாற் றேண்டி னீரூறு மென்றான்
அலைவி லாதையன் காட்டுமெவ்விடத் தகழ்ந்தாள் கையால்
தொலைவி னீரூறக்கண்டு வியந்தன டோகைபோல்வாள். (ா அங)

வெறுங் கலத்தன்ன மேவப்புரிந்த வனிவனே மெய்யாம்
உறுங்கருங் குறளன் மாயமந்திரமு ளுற்றவல்லன்
பெறுங் கணவனையும் பிச்சேற்றி னன்றன் கைவசமும் பெய்தான்
இறுங் கவளவையுங் கொண்டா னென்னிவன் செய்கை யென்று. (ா அச)

சுரந்தநீர் கொடுவந்துண்ணக் கால்கைகள்சுத்தி செய்யத்
தரந்தர நல்கிப்பின்பு தானுநல்லன்ன முணடாள்
நிரந்தரந் தனைப்பஜிக்கு நிமலனை நோக்கி நீண்டு
பரந்த வெற்புறிற் சிஜாயி படர்மிகும் வந்துமீள. (ா அரு)

இன்று தொட்டினி யிவ்வெற் பிலிருந்திடே லெனமால் சொல்லத்
துன்றுபொற்பதம் வணங்குந் துகாராமர் தமைத்தழீஇ மால்
சென்றுறு கோயில்சேர்ந்தான் சிஜாயி யோடினிது தம்மூர்
ஒன்றுறலாகி யால்பே ரொழிகில ருறைத்திருந்தார். (ா அசு)

வேறு.

சாதுக்கள் சேவைசெய்து சகலதீர்த்தங்களுஞ் சாதுக்கள் பாதப்
போதுற்ற தீர்த்தமெனப புனைந்தாடிச் சாதுக்கள் புகழ்தலாகி
மீதுற்ற கீர்த்தனங்கள் கேட்கவருவோ ரங்குவிடு செருப்பை
மூதுற்றோர் போம்போது முன்னெடுத்து வைத்தடியின் முடிவணங்கி. (ா அஎ)

உத்தம மிக்குறு குணங்களுடையராய்த்தயை சாந்தியுளத்தின் மேவும்
வித்தகராய் வருநாளி லொருநாள் வாழ்மனையின் வெளித்திண்ணை மேவி
நத்தமருஞ் செங்கரத்தா ளுமநவின்றிருக் கமனை நண்ணும்பாரி
சுத்தமுறத்துகி லுரிந்தோர் சுவரில் வைத்து நீராடத் துகாராம் சாமி. (ா அஅ)

பக்கலிலோ ரேழைப்பார்ப் பனிவந்தெற் குடுத்தவொரு படாமு மின்றி
மிக்கது யருறுகின்றேன் மானங் காப்பாற்ற மடிவேண்டுந் தந்தாற்
றக்க பலனுமக் குண்டு தருகென் னச்சுவரில் வைத்ததானை தன்னைக்
கைக்கவர்தி யென்றவட்குக் கண்காட்டப் பார்ப்பனியுங் கைக்கொண்டாளாய்.

உம்புண்ணியத்தினுக் கோரள வில்லையுருக்குமணிவர னுமக்கு
நம்புந் தண்ணளி புரிவானனி யென்னக் கூவாமனங் காய்போதி
வெம்புந் துன்பற வென்று குறிப்பித்து விரைந்தேக விடுத்து வேணி
பம்புந் தண்புனலாடிக் கரையிலிருந்தரி நாமம் பஜித்திருந்தார். (ா கூம)

ஈங்கவர் தமனைவி யுடனீராடி யுடுத்த மடியிடத்தைப் பார்க்க
ஆங்கவணில்லா ததுகண்டறத் திகைத்தென் கருமத்தை யார்க்குச் சொல்வேன்
தாங்கவுறு மோராடை தனையு மெவரோ கொண்டு சார்ந்தார் வீட்டின்
பாங்கர் பணிபுரியும்பு பாயியுஞ் சாணங்கொண்டு படர்வான் போனாள் (ா கூக)

பெரியமகனான மகாதேவன் பின்னவனான விடோபாவோடு
தெரியநதிநீராடச் சென்றான் காசிபாயி பகீரதி கங்காமூ
வரியலு கின்றனர் வாசற்புறத்திருக்க வெவர்கொண்டு மறைந்தாரோ வென்
றரியலுன்பத் துடனிரைச்சலிடும் போதிற்றூது லாவயல் வீடுள்ளான். (ா கூஉ)

அவ்விரைச்சல் கேட்டுச் ஜிஜாயிகேட்கும் படியந்தணி யொருத்தி
செவ்விதிற்ரு னுடுத்திட வஸ்திரமில்லை யென்றுரைக்கச் செவியிற்கேட்டேன்
எவ்விதமாய்ப் போயிற்றே வென்றனன் மற்றதுகேட்டுச் ஜிஜாயிபித்து
வவ்வியவென் னுயகரே யார்க்கேனுங் கொடுத்திருப்பார் மற்றிலென்று. (ளகக)

வருந்துறு போதிடைச் சம்பந்தி கடங்கண்மனை நடக்கு மணத்தைச் சொல்லப்
பொருந்தினர் ஜிஜாயி ஜிஜாயி யெனக் கூய்க்கொண்டு புகுந்தன ரவ்வார்த்தை
திருந்துறக் கேட்டுத் தனது மானரக்ஷணைக் காகச்சிந்தை செய்தாள்
அருந்துயருஞ் சினமுமிகுததுத் தத்தளிக்க வுருக்குமணி யாய்ந்து. (ளகச)

தனக்குரிய தானபழந் தானைதனை யெடுத்த வடன்றலை மேலிட்டாள்
மனத்தளுர்கொள் ஜிஜாயிகண்டு வியந்திதுதா மானிடர் வஸ்திர மன்றந்தக்
கனத்தகரு நிறக்குறும்பன் செய்கையென்று நிச்சயித்துக் காத்தான்மானம்
இனத்தவர்மு னென்று மகிழ்ந்தந்த வஸ்திரத்தை யுடுத்திடையிற் புக்காள் (ளகரு)

அந்தவஸ்திரத்தி னொளி வீடெல்லாங் காந்திசெய வடைந்தோர்கண்டு
முந்தவியந்தனர் மணத்தை மொழிந்து போயினர்பின்பு துகாராம்சாமி
சுந்தமனைக் கேகின்மிகக் கோபிப்பாள் ஜிஜாயியென நண்ணுறுமல்
கந்தமலர்க் கான்புகுந்தார் கண்ணனடி கருதியிராக் கடிகைநான்கும். (ளகசு)

சென்றபின்பு கோயில்வந்து விடோபாவைச் சேவித்துச் செங்கைகூப்பி
நின்றுவெண் கற்கைக் கொண்டுதாள மௌனமாறும நிகழ்த்தலானுர்
ஒன்றுமவர் குரற்கேட்டு மகள்கயிலபபங் கீரையுதவி யுய்த்தாள்
அன்றவர் துய்த்தரிநாமம் பழம்படியே பஜித்திருந்தா ரானபோது. (ளகஎ)

துயின் மேவக்கண்க சக்கிக்கொடு பாடப்பின்னு மிக்கதூக்கமேவப்
பயிலிதென்ன சங்கடமென் றுன்னினர்தங் குடுமிதனிற் பாசம்வீக்கி
வெயின்மணித்தூண்மிசைப் பிணித்து விடிவளவுந் தூங்காமல் விமலநாமம்
குயிலுதலோா நான்கிரவிற் றுயில்சோம்பு கூடாமற்குறைத்து நாளும். (ளகஅ)

யாத்திரைசெல் வோருக்குக் கால்பிடிப்பாரரிநாம மியம்புவோர்க்கு
வேர்த்திடிற்கை விசிறிகொண்டு வீசுவரங் கவாசொல்லும் வேலைசெய்வார்
சீர்த்தவெயிற் காலத்தில் வழிநடப்போர்க்குத் தாகந்தீர்ப்பாரந்த
ஊர்த்திறத்தி லெவரோது சொல்லினுமப்படி மகிழவுஞற்று கிற்பார் (ளகக)

இன்னபடி வருநாளி லொருகிழவேதியன் றடியூன்றிக் கொண்டோர்நாள்
மன்னுசிரமத்துடனே வீதிவழிவரக்கண்டு மனம்பொறுராய்த்
துன்னுமவனிடைச் சென்று தூயவரோ நீர்நடக்கத் துயர் கூர்கின்றீர்
என்னதொரு முதுகிலேறிக் கொள்ளுநீர் மேவுமிடங் கொண்டுய்ப்பேன். (உா)

என்றலுமவ் வேதியனுன் விளக்கு நெய்வாங்கப் போகின்றே னென்றோத
நன்றுமதிற் கேகுமெனப் பணத்தையும் பாத்திரத்தினையு நல்கக் கொண்டு
துன்றுகடைக்கு வந்ததனைக் கொண்டு மறையோன் வீடுதுன்னித் தந்தார்
சென்றசிலநாட்குப்பினக் கிழவேதிய னூரார் தெரியச்சொல்வான். (உாக)

எட்டுநாளைக்கு வருநான்வாங்கும் விளக்கு நெய்யிந்தத் துகாராம்
கிட்டிவாங்கித் தந்தநெய் பலநாட்காய திதுகிளர்வியப்பு
மட்டிலென வதுதெரிவான் மற்றொருவனும் மவரால் வாங்கித் தேர்ந்து
முட்டில் வியப்பினனுக யாருமவரால் வாங்கமுயல் வதாகி (உாஉ)

பாத்திரமும் பணமுந்தந்தனராகத் துகாராமர் பரிவிற்கொண்டு
போய்த்தருக வெனவணிகன் மூன்பரப்பிப்பாத்திரத்தைப் பொருளாகச்
சேர்த்தவணிகன் றெரிந்தெப்பாத்திரத்தி லெவ்வளவு சேறிப்பதென்னத்
தீர்த்தரந்தவகைதெரியாதுனக்குத்தோற்றினபடியேசெறித்தியெனருர். (உாரு)

வணிகனைத்தவர் கொடுத்தபொருளுக்குத் தக்கபடி வழுவுருமல்
அணியின் வைத்தபாத்திரங்க ளனைத்தினு நெய்தோற்றினவாறுசப பெய்தான்
மணிநிறத்தான்றுசரந்தப்பாத்திரங் கடமிலுள நெய்வழிவுருமல்
திணிசுருக்கிட்டொருகோலிற்செறித்துத்தோளிடைத்தாங்கிச்செல்லலானுர் ( )

அவரவர் தாந்தரு பொருளுக்கமைவாக வவர்பாத்திரத்தி னெய்தான்
சவர்கில ஒன்றவ ரவரு மொப்பும் வகை கலனுறநெய் கண்ணன் செய்தான்
இவரு மவரிடைச் செல்ல வவரவருந் தங்கலந் தேர்ந்தினிது கொண்டார்
உவர் பரமன் கோயிலுக்கு வந்தரி நாமம் புகன்றங் குறைவதானர். (உாரு)

இத்திறத்தூரா ரெல்லாந் தன்பதி பாற்றினந் தினமூழியங் கொள்கின்ற
அத்திறம் ஜிஜாயிதெரிந்தென்பயித்தியகாரபதி யாலேவேலை
நித்தலுங் கொள்கின்றதன்றியோ ரொருத்தின் சுமைதாங்க நிரப்புகின்றுர்
தத்தமக்கேற்றபடி யெனவிரைந்து வைதறனைக் கேட்டுத்தையலார்கள். (உாசு)

உனதுபதியாரிடத்து மூழியஞ்செய்வதற் கொப்புமுதனலன்றே
மனதொரு மித்தவரி டத்தூழியங் கொள்கின்றுரதற்கு வையலாமோ
எனலுமதனைக் கேட்டுச் சிஜாயிநீர் சொல்லுவது மியல்பேயென்று
தனதுமனம் பொறுத்திருந்தாள் பின்பொருநாட்ஜிஜாயி துகாராமசாமி. (உாஎ)

முகநோக்கி யுமதுபிதாத் தனக்கின்று புண்யதிதி முடிப்பதற்குத்
தகவான தொன்றுமில்லை யென் செய்வதென் றுரைக்குமது தன்னைக்கேட்டு
மிகயான் போய் வனத்தடரு பறித்து வந்து தருகின்றேன் வேகவைத்துத்
தொகலான பிதுர்க்களுக்குத் திருத்திசெய்கென்றரிநாமந்துதித்துச்செனருர. ()

அவ்வயிஞேர் கொல்லைதனிற் பயிரிட்டு விளைந்த கோதுமை யறுத்துச்
செவ்வை செய்வோன் றுகாராமர் வரக்கண்டு நீயுங்கொய்சேர்ந்தெனவே த
ஒவ்வினராய்க் கூலியாளுடன் சேர்ந்துவிட் டலனையுளங் கொண்டுற்ற
கௌவை மறந்தறுத்துக் கொண்டிருக்க வவர்தங்கணவி காணுளாகி. (உாக)

சிறிவைது கொண்டிருக்கப் பாண்டுரங்கன் றுகாராம ராகிச்சென்று
மாறிறிதிக் கானவெல்லா மூட்டைசெய்து தலைமீது வைத்துக்கொண்டு
தேறும்வகை மனைபுகுந்து ஜிஜாயிடைத் தந்துநீ சீக்கிரத்திற்
சோறுகறி சமைத்தியெனச் சொல்லியுடன் கடைநோக்கித் துன்னினுனல். ( )

தருமூட்டை தனையவிழ்த்து நோக்கவதில் வேண்டுவன சமைதல்கண்டு
கருதுளத்திற் களிதூங்க நானஞ்செய் துடனடற்குக் கடுகலானுள்
மருவுகடைக்குப்போனேன் பாத்திரமும் வஸ்திரமும் வகைந்துகொண்டு
தெருவுதொறுஞ் சென்றுறவோர்க் கின்றுதிதிவருகவெனச் செப்பக்கேட்டோர்.

யாவருமங் கதிசயித்துத் துகாராம னின்றுதான கக்குடும்பம்
மேவலுற லாயினுனெனக் களித்தாராய் மேவ விரைந்துவந்தோர்க்
காவலுட னுபசரித்தாசனங்கொடுத்துப் பூசித்தங் கமரச்செய்து
தாவலு புரோகிதரும் வரவிருத்திப் பவித்திரமுந் தரித்துக்கொண்டு. (உகஉ)

வேதவிதி வழுவாமற் றிதிமுடித்தா யினபின்பு மெவமுற்றோர்க்
காதரவோ டிலையிலறு சுவையன்னம் படைத்துச் சங்கற்பதீர்த்தம்
மேதகவிட் டெல்லோருந் திருத்தியுடன் சாப்பிடமோ விரும்பிச்செய்து
பாதமத்தஞ் சுத்திசெய்யப் பாணிதந்தா யினபின்பு பதியிருத்தி. (உகரு)

சந்தனம் புஷ்பந் தாம்பூலந்தந்தான் ஜிஜாயிமுகந் தன்னைநோக்கி [டான்
வந்தவர்க்கினிக் குடும்பச்சுமையுனக்கென் றெவையுமுன்றன் மணாளன்கொண்
முந்தவெ ... ... ரதுகேட்டுச் சிஜாயியுந்தன் மனத்துவகை முதிர்வதாகி
இந்தவகை ... கமபிட்சையில்லையெனக் கென்றுசொல்ல வெழிலிவண்ணன் (உகச

மற்றுமவந்த யாசகர்க்குச் சோறிட்டுச் சமையல்செய்ய வாங்கிவந்த
பற்றுபாத்திரங்களெல்லாஞ் சுத்திசெய்தங் கவரவர்பாற் படுத்திவந்து
துற்றவன் போனகமென்று சொன்னபடியேசேர்த்துத் தோன்றுஞான்
நற்றுறு கோதுமையறுத்தோர்க்குக் கூலிநா லரிசை நல்கப்பெற்றார். (உகரு)

பெற்றதுட னுடம்பெல்லாந் தூளிமொய்க்க மனைக்குவந்து பெறுகென்றீந்து
மற்றிதுகொண் டுறுப்பிதிர்க்குத் திருத்திசெய்கென் றிலலாட்கு வகுக்கக்கேட்டு
முற்றினிருந் தாதை திதியிங் கிருந்தன்னமு மிட்டவர் முந்திஞோர்க்குச்
சொற்றவிது பயித்தியமோ தூளிமொய்க்கச் சுமைசுமந்தீர் சொல்லுமென்றாள்.

வினவுதுகா ராம்சாமி திகைத்துவிழி நீர்பெருக விட்டலாசீர்
அனகபத்த பாலனக ருணாநிதேசீ வந்தென் னகத்துண்மேவி
எனதுபிதாத் திதிமுடித் திடேற்றிட யான்செய்த தவமேதோவென்று
மனதிளகி யுடனிருந்திங் குண்ணுமற் போனதற்கு வருந்தலானார். (உகஎ)

நீவந்தென்னுட னுண்டாலன்றி யுண்ணேனென் றிருக்கவிமலன் றேர்ந்து
மேவுந்தன்னுருக் கொண்டு கிரிடகுண்டலங்க ளுடன் விளங்கக்கண்டு
கோவிந்தா வெனவணங்கிச் சுவாமியுந்தம் நடுவிருக்கச் சிஜாயிகூடத்
தேவுந்தம்முட னுணவுண்டு மகிழ்கொண்டு மனந்திருத்தி யானார். (உகஅ

திருந்துதன தடியவரைத்தழுவி விடோபாத்தனது கோயில்சேர்ந்தான்
பொருந்து துகாராம் சாமிஹரி நாமமிடைவிடார் புகல்வாராகி
இருந்துவரு நாளொருநா ளிரவில் விடோபா வவர்மு னெதிர்ந்துநோக்கி
அருந்துதிசெய் நாமதேவாய் நீமுன்னவ தரித்தவக் காலத்தில். (உகக)

சதகோடி கிரந்தஞ் செய்கிறே னென்றென் மேலீ நிச்சயித்துச் செய்போ
துதவியாய் விரைந்தெழுத வொருவருமின்றென்று நான்வரைந் தேனன்றே
அதனிலஞ்சு கோடியே யைம்பத்தோ ரிலக்கமுள குறையதாக
இதமுடனே யின்றுதொட்டுக் கவிசெய்கென் றருளநன்றென் றிறைஞ்சிநிற்க.()

கருணையார் கவிகடாக்ஷித் தாலிங்கனஞ் செய்து கரக்கச்சால
அருள்பெறுதுகா ராமசாமி வேதவியாசரங் நாட்சொன்ன
பெருமைபெறு பாகவதத்திற் றசமஸ் கந்தத்திற் பின்னைகேள்வன்
மருவியபா லக்ரீடை களைப்பிரா கிருதத்தில் வினைவதாக. (உஉக)

கவிகள்செய்து மிடைவிடாதரி நாமம்புகன்று மரிதினங் கலந்தால்
சவியசுடர் மறைந்தவுடன் ஜாம நான்கிலு மரிகீர்த்தனங்கள்செய்தும்
புவியிலவர் புகழ்விளங்கச் சிஞ்சுவடி மம்பாஜி பாவா வென்போன்
குவிவறுசீர் தேகுவுக்குக் கோசாயிப் பிராமணனுய்க் குறுகியாங்கே. (உஉஉ)

மடங்கட்டித் தனது குடும்பத்தொடு மாணக்கரொடு மன்னுகின்றான்
இடம்பெற்ற துகாராமர் புகழ்க்குமனம் பொறுதவனாய்ச் சீறியின்றான்
இடம்பெற்ற நாம்பார்க்கப் பாடங்கள் படித்தவன் சூத்திரனேஜாதிக்
குடம்பட்டு வேதியரு மேவல்செய்தா சிருதர்களா யுழல்கின்றார்கள். (உஉ௩)

மறையவனும் மகிமைபெற்ற வென்னையொரு வருந்திரும்பிப் பார்ப்பதில்லை
இறையளவுமிவனைமெய்ச்சுமிதற்கிவன்பாற்பெருமையென்னவிவனையோர்காற்
குறைவுபெற வவமதித்து நம்புகழை மிகுதிசெய்து கொள்ளவேண்டும்
தறையிலெனத் துகாராம சாமிகீர்த்தனநாளுஞ் சாற்றுஞ் சார்பில். (உஉ௪)

தினமும்வந் தன்னவரை யவமானஞ்செய்யச் சமயந் தேர்வோ னோர்நாள்
அனகஹரி தினத்திரவி லரிபஜனை செய்துறு சாதுக்களோடு
கனகவிமா னத்தைவலம் வரும்போது முட்களவர் காலிற்றைக்க
மனதொரு மித்தூன்றி வைத்தான் றுகாராமசாமி யந்தமார்க்கமேவி. (உஉ௫)

வரும்போது பதத்திலொரு முட்டைக்க வந்தமுள்ளை வாங்கிவீசி
ஒருங்காக வினிவருஞ்சா துக்களடி முட்டைக்கு மென்ன வுன்னிப்
பொருங்கூர்மு ளனைத்துமங்குச் சோதித்தொன் றில்லாமற் போக்கக்கண்டு
மருங்கோர்சா ரிருந்தவிகன் மம்பாஜி முனிந்தொருமுட் டடியைவாங்கி. (உஉ௬

வந்தோடி யடிக்கவந்தத்தடி முறியமற்று மொருதடிகைவாங்கி
நொந்தாக மெலியவடித்தானதுவு முறியமற்று நோக்கி நேர்ந்த [ன்
கொந்தார்முட்டடிமுழுதுங்கொண்டடித்துக்கைசலித்து மடம்போய்ச்சேர்ந்தா
னந்தாத வன்பரடிக் கயராதுந் தைத்தமுட்கு நலிவுறுதும். (உஉ௭)

அடித்தவனை முனியாதுஞ் சற்றேனுந் துயராதும் ஹரிதன்னமம்
படித்துவலம் வந்துவிட்டலனைக்கண்டு தொழுதவனைப் பார்த்தியாவும்
நொடித்தெனையே னிவ்விதஞ்செய் தனையென்று மூன்றபங்க நுவலத் தீர்த்தன்
வடித்தகண்ணீ ரினனுற னிதுதெரிந்து ஜிஜாயியங்கு வந்துகண்டு (உஉ௮)

அன்பருடம் பினிற்றைத்த முள்ளெல்லா நோவாம லாய்ந்துவாங்கி
முன்புதெரிந் தோரோடு நிற்கவிடோ பாவருட்கண் மூழ்கலாலே
வன்புபத்தி ரவந்தீர்ந்து துகாராம சாமிமன மகிழ்ந்துநின்று
பின்பரிகீர்த் தனஞ்செய்யப் பாகவத ரெல்லோரும் பெரிதுகூடி. (உஉ௯)

நிறைவுறலுந் துகாராம சாமியந்த மம்பாஜி நேரா தோர்ந்து
முறையி னின்றேன் மம்பாஜி வரவில்லை யழைமினென முதுவோர்க்கோத
அறையுமுன ரொருவன்போய்க் கண்டடம்பு சுகமிலையென் றதனைக்கேட்டுப்
பொறை மனத்தன்பருக் கோதவுடனவன் வாழ்மடம்போந்து புகுந்துகண்டு. ()

அடித்தகர நொந்தனவோ வதனாலே யுடம்பெல்லா மயர்வாயிற்றோ
முடித்தவத் தினர்க்கென்று முன்னியவ னடிபணிந்து முகத்தைநோக்கிப்
பிடிப்பெ னஞர்தீர வென்றங்கவ னுடம்பெல்லாம் பிடித்துப் பெரியோரேநீர்
துடிப்பிலிராய்க் கோயிலுக்கு வருகென்று துகாராம சாமிசொன்னார். (உ௩௧)

அடியேன்மே லிவ்வளவு கோபங்கொள்வது தகவோ வடைகவென்றும்
நெடிதான சிரமமுறவபராதியாக யானேர்ந்தேனென்றும்
கொடிதேது மிலதாகக் கூறுவன மம்பாஜி கேட்டுக்குன்றி
ஒடிவாகா நாணுடனே வருககீர்த் தனைக்கென்றங் கவரோடுற்றான். (உ௩௨)

வந்தபின்பு துகாராமசாமி சொல்லுங்கீர்த்தனத்தில் வழுவுண்டாவ
தெந்தவிடத்தென்று கெட்டவெண்ணத்தோடங் கிருந்தா னினையிலன்பர்
தந்தகைத் தாளம்வீணை மிருதங்க மினிதொலிக்கச் சாதுவானோர்
முந்தவைக்கட் பரவசராய்ப் பாடிக்கொண் டிருந்தனரன்முடிவுகாண. (௨௩௩)

மனையில்வந்து ஜிஜாயி துயிலுறு போதிலிரண்டுகள்வர் வந்து முன்னே
அனையவப்பா ஜிகுளவேஜி ஜாயிக்கு வாங்கியன்பி ளளித்தகாரான்
றனையவிழ்த்துக் கொடுமேற்கு முகமனை நாழிகைவழிதாஞ் சாரக்கண்ணன்
நினைவுபர வசமாகித் துகாராமர் கீர்த்தனங்க ணிகழ்த்துகின்றார். (௨௩௪)

இங்கிஃவிற் றூங்குகின்றா ளிவன்றேவி நாஞ் சும்மா விருந்தோமாகில்
கங்குல்கழிந்தாற் றுகாராமனை வீணேவருத்திக் கடிவாளென்று
மங்குலிடைத் தண்டொருகைக் கொண்டவர்போ மார்க்கத்திற்கோரரூபம்.
பொங்குற நேர்ந்தடிக்க வருவான் போலாகக் கண்டு போகுங் கள்வர். (௨௩௫)

அஞ்சிவழி யிடையேதோ பூதம் வருகிறது நம்மை யடிக்கவோவென்
றெஞ்சிலந்த வழிவிலகிக் குறுக்கிலொரு வழிநோக்கி யேகவங்கும்
விஞ்சிவரக் கண்டுமிகு பயங்கொண்டெவ் வழிமேவு வேமென்றெண்ணி
நெஞ்சி லெண்டிக் கையுநோக்க வங்கங்கு முன்பெனவே நேர்ந்துநிற்க (௨௩௬)

பூதமோவிது பிரமரக்ஷசோபசா சோநேர் புகுவதென்று
நோதலா யுயிர்வாங்க வருகிறதென்றவ ருளத்தினைக்கியீதுக்
கேதுபாயஞ்செய்து மெனுமிந்தத் துகாராம னரிதன்னுமம்
ஓதுவா னுதவின் மற்றவள் மாட்டை நாங்கொள லாலுளம் பொறானாய். (௨௩௭)

விட்டலனோர் பூதத்தை விடுத்தனனீ துண்மையென்று மிகவுமஞ்சிக்
கட்டவிழ்த்துக் கொடுவந்த மாட்டையங்கே யுய்க்கோமேற்கவரு மாவி
துட்டநெடுங் கூளியென வதுதொடர மீண்டுசென்று மனையிற்றுன்னிக்
கொட்டமிட்டுப் புறம்போந்து தம்மூர் நோக்கிப் போகக் குறுகும்போது. ௨௩௮

முன்பெனவே வழியிலெதிர் நின்றடிக்க வரக்கண்டு மூகந்திரும்பித்
துன்புடனீ தெங்குறினும் விடாது நம்மைத் தொடர்வதுக்கென்செய்துமென்று
அன்புடன்கோ யிலினின்று விடிவளவுங் கேட்பவர்க ளனைவோருக்கும்
என்புருகப் பாடுமவ ரிடத்துரைத்தா லன்றியிது விடாதென்றெண்ணி. (௨௩௯)

கோயிலுக்குள் வந்து துகாராமரடியிணை பணிந்து குறுகிநின்று
வாயிழுக்காதையரேயாஞ் சோரர்நு மதுதிருமனைக்குளின்று
போயிணைத்த கட்டவிழ்த்துக்கொடுசென்றோமெருமைதனைப்போமார்க்கத்தில்
தீயினுக்கு நிகர் பங்கிப்பெரும்பூத மொன்றெதிர்ந்து செங்கைத் தண்டால். (

எற்றவந்ததது கண்டெத்திசையுறினும் விடாதடிக்க வெய்தலாலே
பற்றலுற்ற வெருமைதனைக்கொடு போந்தும்மனையில் விட்டுப்பரிந்து மீண்டு
சுற்றலுற்ற பூதமடியா தென்றெம்மூர் புகுதத்துன்னும் போதும்
கற்றவரே விடாதடிக்க வருகின்றததனாலுங் கண்வந்தோதில். (௨௪௧)

பூதமெதிர்தடாது செய்வீரென்றடைந்தோ மெனச்சோரர் புகன்றுவேண்ட
மாதவருஞ் சபையிலுள்ள மற்றவரு மாச்சரிய மனத்துட் கொண்டார்
மேதகுஞ் சீர்த்து காராமர் விழிமூடி விட்டலனைத் தியானஞ்செய்யப்
போதலுறாத வனிருக்கச் சோரர் சொல்லு வதுமெயென்று புந்திகொண்டு ( )

பாண்டுரெங்காவாபதத்தைப் பற்றறச்செய்தின பந்தா பதுமநாபா
ஈண்டு நின்றெம்பஜனைதனை வினவாமலெங்க ளன்றுயிளங்காலத்தில்
வேண்டு பசுபாலனத்தை விரும்பியின்னம் பாலிக்க மேவுற்றுயோ
தூண்டு பரித்தேரிரவி வருபோதா கியுமார்த்தி கொளத்தோன்றுயோ. (௨௪௩)

என்று நனிவேண்டு பொழுதெதிராந்தனன் கைத்தடியொடு பாண்டுரெங்கரூபம்
நன்று விளங்குறக்கண்டு துகாராமர் சோரர்தமை நயந்து நோக்கி
இன்றுமக்க வெருமை வேணடுறிவினி நீா கொணடு செல்லு மிகவின்றென்றுர்
அன்று நின்ற சோரரெமக்காவி தந்ததே போதுமென வகன்றுர். (௨௪௪)

சோரர் வந்து சொல்லியதுந்தடியொடு பாண்டுரெங்கன்ரோன்றியது மன்பர்
சாரநின்ற சோரருக்குச் சாற்றியது மவர்போன சமைவுந்தேர்ந்தங்
காரவொன்றி ஞேரெல்லா மதிசயத்தாஹாகார மாயானந்தம்
நேரநன்று துகாராமசாமி[illegible] யொணடாடி நெகிழ்ந்தாா நெஞ்சம். (௨௪௫)

இன்னவை யெல்லாங்கண்டமம பாஜி துணுர்கென்ன வியந்து வெள்கி
நன்னரிந்தத் துகாராமசாமி மிருமகிமை கொணட நலத்தாலன்றே
பன்னகந்தாங்கும் புவியில[illegible]ன சீாகதிகளெல்லாம் படைத்தாரென்று
உன்னலுறுவாருகிச் செரு[illegible]கழிநதாலுலகளநதோற் கார்த்தி செய்தார். (௨௪௬

வேறு

புலரி கண்டபின் பன்பரிந் திராயணி போந்து
அலரின் மூழ்கியாராதனை நாதனுக்காற்றி
நலரி கீர்த்தனஞ் செய்து கொணடிருந்தனர் நண்ணச்
சிலரி ராகிகழ் செய்கையைச் சிஜாயிக்குத் தெரிததாா. (௨௪௭)

இன்றிராகிகழ் செய்கையிப்படி யகோவென்று
நன்றுநன்றென வினவுமுன் வியந்தநத நஙகை
நின்றமாடு முன்பிணிப் பின்றி நிற்பதுங்கண்டு
தன்றுணைப்பதி தன்னிடத்தன்பு மிக்கனளாய் (௨௪௮)

அடகுமப்பமும் பாலொரு வள்ளத்து மமைத்துத்
திடமனத்து நல்லன்பரில லம்புகத் தேடிப
படரவந்தவர் தமையுபசரித்து முன்பரப்பி
உடன்விரைந்துணு மென்றனளன்பருளுன்னி (௨௪௯)

என்றுமில் லுபசாரமின்றே தெனவியந்து
நின்றபாரியை நோக்கினர் நிதிரிகரணம்
ஒன்றவுண்மகிழ்வொடு தினமொரு வள்ளத்திற்பால்
நன்றளித்தி யேல்விட்டலன் றனக்கு நல்குவனென (௨௫௰)

என்னுமுன்னொரு செம்பினிற் பாணிறைத்திந்தாள்
அன்னதைக்கொடு போய்விட்டலன் றனையருத்திப்
பின்னரொய்தியுண் டிருந்தனர் நாடொறும்பேணிப்
பொன்னிறையகன் பருகப்பாலளித்துப் பினபுசிப்பார். (௨௫௧)

இப்படிச்சிலநாள் கழிவெய்திடச் சிஜாயி
கைப்புளத்துற மனைக்குபபாறயிரின்றிக் கையிலோர்
செய்புறச் செறிபால்கொடு தினந்தொறுஞ் சென்று
மைப்படிக்கரு நிறத்தினற் களிப்பதுவழக்கோ. (௨௫௨)

என்ன வெண்ணின டந்தை பின்றினந் தொறுமெய்தும்
கன்னியானபா கீரதி தன்னைநீ கணவன்
நன்னர் நல்கியபால் குடிப்பது மெய்யோ நவிறி
என்னலு மகள் குடித்திறை யெந்தைக்கு மீவான். (௨௫௩)

கண்ணறு டொரு மென்றனளது தெரிகருத்தால்
நண்ணி நான்றருவேனென நாதற்கு நவின்று
தணணுறு வொரு செம்பு பாலுகரிட்டுச்சார
எண்ணிறுனுளத் தெங்கணு நிறைந்துள விறைவன். (௨௫௪)

நமமிடத் திறையேனு மன்பி லளிவணலகும்
வெம்மை மிக்குள பாலையும் பருகுதல விதியோ
செம்மை யன்றென மறுக்கிற் றனபகி தனைசசினந்து
பொய்மை சொலலிலை யெனவெறுததின லுறப புரிவான். (௨௫௫)

யாதுசெய்வ தென்று றுமளவெய்தினள் ஜிஜாயி
வேதுகொண்டுறு பாலையக் கணணன் வாய்வெதும்பும்
கோதுதேர் கிலளாய்க் குடிபபித்தனள் குடி ததுத்
தாதுசோதுள வோனிதழ தொபபுளாந் தயங்கி. (௨௫௬

அனல்பொருந் றலையசைசதத விற்[illegible]ணைடமு மனுங்கித்
தனிலொதுஙகுறச சாநதது நோணலோா சாபு
வ[illegible]ரிலை பால றுழ[illegible] சாது [illegible] ணை [illegible] ராய் வயங்கும்
இனது கின்னுயிரும முளதேயென வியநதாள். (௨௫௭)

பாண்டுரங்கன்றன்மு கன்றனைப பார்த்தனளிதழில்
ரண்டு கொப்புளங் கண்டிதுவும மந்சயமென
ருண்டு நின்று போந்தனள் மனைக்கணபா தமமாசநில்
வேண்டு விட்டலன வர்மனததெய்தினன விரைந்து ௨௫௮)

நீயின்றுன் மனையாள் தொடுபால்வ[illegible] ங்காய்
காயும் பால்கொ[illegible] வந்தெனைக்குடி ப பித[illegible] கடுகி
வாயுங்கொப்புள மாயினது லகியன் மறந்து
நேயமென்னிடை வைததனையாதலாளினையான். (௨௫௯)

மயக்கினேனென நாடொறு மென்னிடை வயிர்த்து
நயக்கிலாப் பகையாயெனை வைவது நாளும்
துயக்கினீ தெரிந்திருந்து மற்றவள் வரதொடுத்துக்
கயககிறயென வன்பா சிந்தனை மிக[illegible]லங்கி. (௨௬௰)

பன்னிதன் முகநோககி நீ வெம்மை சாலபாலை
பொன்னிறுதனுக் காற்றுறுதளிததவன புழுங்க
இன்னல் செய்தனையோ வெனச்சிஜாயி நீ ரென்றும்
மன்னு கோயிலிற் கீர்த்தனஞ் செய்துறும் வகுப்பில். (௨௬௧)

பன்னிரண்டி யோசனையனற் பரப்பினை விருந்தை
என்னு மவ்வனத்துணடன னென்றனிரவனுக்
கின்னபால் வெம்மை யேற்கிலதாய்க் கொப்புளியையில்
முன்னரோதியவது பொய்யே யாமென மொழிந்தாள். (௨௬௨)

அது பொயென்பதற்கின்று நீர் சென்றறி கென்றாள்
முதுமெயன் பரங்கதற் கொன்று மொழிந்திலர் முடுகி
மதுவுலாந்துழாய் மார்பினன் கோயிலுண் மன்னி
விதுவைவென் முகத்திதழ் வெதும்புறு கொப்புள் கண்டார். (உ௬௩)

சாலவுந்துயர் கொண்டனர் விழிகணீர்ததும்ப
ஞாலமுண்டவ நினக்கிது நண்ணிற்றோ வென்று
ஓலமுற்றழு திரங்கினர் பற்பலாறுணைந்திங்
கேலமற்றிதற்கென் செய்கேனென்றனர் புலம்ப. (உ௬௪)

ஆயபோதி தழாகிய கொபபுளமாறி
எயகண்டங் கோணிய தின்றுஞ் செவ்வையாகாமல்
மேயதாயது கண்டன் பருள மகிழ்மேவிப்
போயினார் தமதில்லிடைப் பல்வகை போற்றி (உ௬௫)

ஊரிதன்னுமமே யனுதினம் பஜிபபவராகிப
புரியு நாளொரு நாளிடைச் சாங்கணே புறவம்
மருவினரவண் மசகஙகண் மொய்ப்பதின் வருநதிப்
பரிவிலாரிவையுணப் பயனுயதே படிவம (உ௬௬)

பிறவுயிர்க்குண வாவதிற்பயன் பிறிதில்லை
அறவு நன்றிது வென்று கொண்டாடினரவற்றைத்
தெறல்செயாதினல் சேர்கிலராகித் தஞ்சிந்தை
பறவை வாகனன் பால்வைத்துப் பஜித்தன ரிருந்தார். (உ௬௭)

அதுதெரிந்தன னல்வழிச் செல்பவனுகி
மதுவுலாந்துள வத்தொடை மார்பினன் வந்து
கதுவியீந்துறு தோகையைக் கைக்கொடு கலக்கும்
கொதுகெலாஞ்செல நிசிமுற்று மோட்டிக் கொணடிருந்தான். (உ௬௮)

விடிந்தபின் பன்பர் தேகுவை மேவினர் விரிநீர்
படிந்துபூசனை யாற்றினர்ப ஜித்தனர் பகல்போய்
மூடிந்தபின்றிருக் கோயிலின் முகுந்தனை முன்னி
வடிந்துகண்புனல் வார்தர வணங்கினர் வாழ்த்தி. (உ௬௯)

அன்றிராவெலாங் கீர்த்தனஞ்செய்து நாலாகத்
துன்றுசாமத்தின் மங்களாரதி செய்து துதித்தார்
நன்றிருக்கமா தேவன் முன்னவன் விடோபாபின்
என்றமக்களில் மூத்தவன் கல்லடைப் பெய்தி. (உ௭0)

வருந்தல்கண்டதற் காவளியாகிய மாதா
திருந்தவேண்டபெ சாந்தியோ டௌடதஞ்சேர
அருந்தல்செய்வித் துந்திர்கில தாய்ப்பிணியாகப்
பொருந்த நோக்கவுஞ் சகிக்கில ளாய்மிகப் புலம்பி. (உ௭௧)

அன்னமெவ் வளவுஞ்செ லாதிம் மகனயர்தல்
உன்னுகின்றில ரொன்பதி மதிமயக் குற்றார்
என்னைசெய்குவே னெனவயன் மனையவ ளிடத்திற்
சொன்ன போதவள் வந்துபார்த் துன்னது துணைவர். (உ௭௨)

என்றுவிட்டலன் பஜனைசெய்வதி லியன்றரோ
அன்றுதொட்டுமக் கெய்தின வின்னலோ டனைத்தும்
நின்றுநீதுய ருறிலென்னை பயனென நிகழ்த்தத்
துன்றுமாவளி யாகிய ஜிஜாயியுஞ் சோர்வாய். (உஎங)

கடுஞ்சினத்தொடு நெறுநெறு வெனப்பல்லைக் கடித்து
வடிஞ்சகள்ளுண்டு வெறிகொண்ட மர்க்கட மதைத்தேள்
சுடுஞ்சினத்தொடு கொட்டிய தெனவயற் றேறை
நெடுஞ்சொற் கேட்டுடனி மிர்ந்தனள் கொடுஞ் சொற்கணி ரம்ப. (உஎச)

எனதுநாதனைத் தன்வசப்படுத்தி னனிதன்றிக்
கனநிரம்புமென் குடும்பமுங் கலங்குறக் கண்டான்
மனதில் வஞ்சகம்போற் கருநிறக்குள்ள வடிவன்
எனவிசழ்ந்தனள் பலபடி வைதனளிருக்க. (உஎரு)

நீரிறங்கிலதாய் வயிறுப்புத ளிரம்பிச்
சோர்வுகொள் சாங்காலொடு நினைவுமுட் சுருங்கித்
தேர்வுறு நிலைமகற் குறவந் நிலைதெரிந்து
சார்வதாகிய கோபமுந் துன்பமுந் தாங்காள். (உஎசு)

மகன் பிழைப்பதில் மடிவதே நிச்சய மெனத்தன்
முகங் கடுத்தனள் பிள்ளையை யீாதவன் முன்போய்
அகந்துணுக்குற வெறிகொனென் றதிர்ந்தன ளாகிச்
சகம் பழிப்புற மகற்கொடு கோயின்முன் சார்ந்தாள். (உஎஎ)

பகைவனே யெனத்தனை யெண்ணிதன் முனேபடர்வாள்
வகைதெரிந்தரி நோக்கினன் மலர்மகள் வதனம்
மிகையி னெய்தியென் மேற்கொணர் மகன்றனை வீசி
அகைவு செய்துயிர் கொல்வளேற் பழியெவர்க்காகும். (உஎஅ)

சொல்லெலன் செய்வதிவ் வேளையென் றோதுறு சுகுண
வல்லவன்முக நோக்கி யெங்ஙனு நிறைவடிவோய்
அல்லலேனுனக் ககிலமு மமைத்தளித் தழிப்பாய்
புல்லிலுன்னருள் விழுமகற் குயிர்பொருந் தாதோ. (உஎகூ)

கங்குல் போக்குறக் கனலி யெண்ணுவ தெனக்கருதி
இங்கு நீயெனைக் கேட்ப தென்னெனு மளவெய்திப்
பொங்கு கோபத்தின் மிக்கவச் சிஜாயிமுன் போந்து
மங்குல் வணணன்மேன் மகனைவீ சற்கணமி வந்தாள். (உஅய)

மீதுவீசுறே னில்லென வோருரை விளம்ப
மோதுவான்வரு வாள்விஞ யம்மொழி முன்னிப்
போதுதிக்கையுஞ் சுற்றையு நோக்கினள் புகல்வ
தேது கல்லலதியாருள ரிங்கென வெணுங்கால். (உஅக)

உலக சுந்தரி யுன்மகன் றனக்கனுகூலம்
நிலவலாயது நீகொண்டு செல்கென நிகழ்த்தக்
குலவுமைந்தனை நோக்கின ளேயெலாங் குறைவாய்
இலகிமிக்கது பசியென மகன்சொல வினிதாய். (உஅஉ

கல்லும் பேசின பிள்ளையும்பேசின கண்டேன்
எல்லுங் கங்குலு மிங்குறு மிவனுக்குப் பழிதான்
புல்லுமென்றுநான் வீசுமுனுயிர்தந்து புரந்தான்
செல்லுஞ் செல்லுமென் மகிழ்நனை மயக்கற்குத் தினமும். (உ௯௩)

இவனுக்கின்னது செய்கிலனே லிவனிரங்கான்
அவனிக்கண்ணிவன் மாயை வல்லானென வறைந்து
கவனித்துத் தனதரும்பெறற் புதல்வற்கைக் கொண்டு
பவனத்தெய்தி யூட்டினளுண வின்பொடு பரிந்து. (உ௮௪)

இன்னதோர்ந்தன ரன்பர் பாண்டு ரங்கனுக் கென்னே
துன்னுறச்சிரமம் புரிந்தனனெனச் சூழ்ந்து
பன்னருந்திருக் கோயிற்குப் பகல்செலப் படர்ந்து
நன்னர்நின்றுள பாண்டுரங்கன பதநாடி. (உ௮௫)

சேவைசெய்தனர் கீர்த்தனம் பாடினர் செறிய
ஆவயிற்புகு மொருவர்கங் காஜிமவாளர்
தேவையன் பரொவ்வளவு சாயித்தியஞ் செயினும்
யாவையுந் தெரிந்தெழுது வோருடனிசை யிசைப்போர். (உ௮௬)

சாங்கணம்மெனு மூரில்வாழொரு வர்சந்தாஜி
ஓங்கும் வாணிகர் வேதியரான மற்றுவரோ
டாங்கு வந்துமெய் யன்பரிற் கலந்து பாடுமவர்
நீங்குறூர்தின மிருவரு மன்புள நிரம்ப. (உ௮௭)

பொன் பிறங்கிய மார்பினன் புகழ்துகா ராமர்
பின்பு நின்றிரு வருந்தொடர் கூட்டிசை பேச
அன்பு பின்றள யாவரும் வந்துகேட் டகத்துள்
இன்பு மூந்துறச் சந்ததம் பரவச மெய்த. (உ௮௮)

நாமகீர்த்தனங் கேட்டலி னுதனு மகிழ்ந்து
சாமநான்கினு ம[illegible] யன்பரைத் தழுவப்
போம தாயிருள் புகீர்கரு போதிலா ரதிசெய்
தேமகிழ்ந்தனர் யாவரு தம்மிலே கினரால். (உ௮௯)

வேறு.

பின்புருக்குமணியை நோக்கிப் பின்னைதன்
அன்பனெ னன்பனுக் கருளல் வேண்டுமால்
இன்புப தேசமென் றியம்பக் கேட்டவப்
பொன்பதி மொழிக்கெதிர் புரிந்து கூறுவாள். (உ௯௰)

ஆதியில் வீடண னுமனென்பவர்
சோதி நின்னித வுபதேசத் தூய்மையால்
மேதினி யழியினும் விளிவுறு நிலை
மீதியல் கின்றனர் மெய்ம்மை மேவியே. (உ௯௧)

அப்படிக்குத் துகா ராமனுகுவான்
ஒப்புறு நின்னருட் குரியனுயிருதல்
செப்ப மொடினிதுப தேசஞ்செய்கென
மைப்படி நிறத்திரு மாது நன்றெனு. (உ௯௨)

மாக சுத்த தசமி வியாழ வாரத்தில்
ஆக நித்திரை செயுமன்பர் சொப்பனத்
தேகனத்திரை பரப்பிந்தி ராயணி
வேகநற் றீர்த்தத்தில் விரும்பி யாடியே. (௨௯௩)

மட்டலர் தண்டுழாய் மாலைகைக்கொடு
விட்டலர்க் கணிசெய மேவு போதிலோர்
முட்டறு மறையவ னாகிமுன்வந்தான்
கட்டறு மன்பராங் கவனைக் கண்டனர். (௨௯௪)

பரவச ராயளம் பழுத்தவன்பினால்
கரதலத்தொடை யவண்கழுத்தி விட்டனர்
சிரனில னுறப்படீஇச் சேவித்தேத்தினர்
வரமறை யவனுள மிகமகிழ்ந்ததோ. (௨௯௫)

அன்பர் தஞ்சிரத் திடையங்கை வைத்துநன்
கின்புறச்செவியிற் றன்று மமெய்த்துற
வனபுறவித வுபதேச மேல்வரு
துன்பற வருளினான் பின்னுஞ் சொல்கின்றான். (௨௯௬)

இந்தமந்திரந்தனை யிந்நிலத்திலுஞ்
சிந்தனைக்குகந்தவர் தமக்குச் செவ்விதிற்
றந்தருள் குருபரம்பரை தவாமலே
வந்தனை தரச்செய்தி யெனலு மற்றவா. (௨௯௭)

நல்லதேசிக மறையவனை நாடியென்
இல்லமேவிபப வித்திரஞ் செய்தியான்றர
வல்லதைச் சமைத்துண்டு மகிழ்கவென்றனர்
சொல்லவவ்வேதியனின்னிறுன்னுவேன். (௨௯௮)

எனக்குணவிற்குக் காற்சேர் நெய்யீதியோ
மனக்கு வப்புறவென மகிழ்ந்து நன்றென்று
கனக்கரு நிறத்தனைக்கடி தழைத்தனர்
மனைக்கு வந்தில்லவள்வதன நோக்கியே. (௨௯௯)

நமதின் மேவினர் மறைநாதர் மற்றவர்
அமுதுணற் காவனவளித்துச் சேறொர்கால்
நிமிர்தர நெய்யுநீ நேர்தியென்றனர்
கமையறு சினமிகீ இக்கணவி கூறுவாள். (௩௱)

இம்மறை வேதிய னெங்குத் தோன்றினான்
மெய்ம்மையா யிவனுக்கு வேண்டு நெய்யொடு
செம்மையா யுணவிற்குத் தக்க சேகரித்
தின்மையால் வருந்தும் யானெங்ஙனீ குவேன் (௩௱௧)

பித்தளைப்பாத்திரவகையும் பேர்ந்தன
ஒத்தனவிற்றுநானுதவற் கோடுகள்
மொய்த்தன வன்றிவேறில்லை முந்துவார்
எத்தனை பேர்க்குண வீவதென் செய்கேன். (௩௱௨)

மக்களும் யானுமே வயின்வளர்ப்பது
மிக்க துர்லபமதாய் விளைந்திருக்கவென்
பக்கல்வந் திப்படிப் பலிக்கு நேர்வது
தக்கதோவென மனஞ்சலித் தரப்பினள். (௯௱௩)

உரப்பது கேட்டவ னுற்றவேதியன்
இரப்பது கிடைப்ப தின்றென்ன வேகினன்
வரப்பறு தவத்துகா ராமர் மந்திரம்
தரப்பெறு நினைவுடன் றும்விழித்தனர். (௯௱௪)

உத்தம குருவெதி ருற்றென் ஜன்மவா
பத்தறக் கடத்தின ரவர்பதத்தினுக்
குத்தக வினவுநெய் யுதவப் பெற்றிலேன்
இத்தனையோவென தன்பென் றெண்ணினர். (௯௱௫)

கேசவசைதன்யனெனக் கிளத்தினர்
மாசறு தன்பெய ரும்வகுத்தெனக்
காசறு மிதவுப தேசமுந் தந்தார்
ஏசற வெனக்கவி யூன்றியம்பினர். (௯௱௬)

உயர்வற வுயர்ந்தவா னந்தமுற்றரி
பெயர்பல வோதினர் பின்புதம்வயின்
அயர்வறு மன்புகொண் டடைகின்றார்கட்கு
மயர்வற வம்மறை வகுத்து வந்தனர். (௯௱௭)

இன்னமு மம்மறை யவரிடத்திலே
நன்னயத் தொடுபெற நாடுவோர்களுக்
கன்னவர் தம்முருக் கொண்டடைந்துளம்
மன்னுறு கனவிடை வழங்கி வாய்ந்துளார். (௯௱௮)

வேறு.

பின்புதம்மனை யாள்கறைவிலு நன்மைபேசலில் பெற்றியாள்
என்பதாலிவ ளைத்துறந்திடி லின்பமெய்துவ மில்லையேல்
பொன்புமானடி யார்திறத்தப ராதமாதல் பொருந்துமென்
றன்ப ரவ்வயி னின்றுநீங்கியோ ரரணியத்துற லாயினர். (௯௱௯)

பகலெலாம்ஹரி பஜனைசெய்தன ராகியேபகல் பட்டபின்
நிகரிலானுறை கோயிலெய்தியொர் யாமநான்கு நிரம்பவே
தகவதாகிய கீர்த்தனஞ்செய்து தபனனீ டுதயத்திலே
சுகமுலாநதி வந்துதோய்ந்துறு சோலையெய்துவர் நாடொறும். (௯௱௰)

யாவராயினு முணவளித்திடி லதனிலேயிறை யயில்வதாய்
மேவலாயினர் மதியிரண்டு மனைக்கண்மேவுத லின்றியே
நோவலானஜி ஜாயியிங்கய லாளொருத்தியை நோக்கியென்
பாவமோபதி பித்துறீஇப் பதியெய்தியும் முறைபதிபுகார். (௯௧௧)

திங்களான திரண்டுசென்றுமென் வதன நோக்கிலர் திருமியும்
எங்களின்மையை யிறையுமெண்ணில ரோனுமெம்மொடு முன்புபோல்
தங்கலாவது மில்லையிற்க ணெனத்தயங்கினள் சாற்றினள்
அங்கணோர்தின மிந்திராயணி யணுகினள்புன லுக்கரோ. (௯௧௨)

நீருண் மூழ்கினர் நின்றதன்பதி தன்னைநோக்கின னீவிரொன்
சாருமாத மிரண்டதாகியும் வந்துசார்கிலிர் சார்மனை
நேரும் யானுமென் மக்களும்பசி நிமிரநும்வயி னிறைவதோ
வாரும் யாஞ்செலும் வகைதனைச்சொலு மென்றனார்மடி பற்றினாள். (௯௧௩)

பற்றவன்பரு மக்குறுந்துணை பாண்டுரங்க னுடன்பொனும்
பெற்றதந்தையொ டன்னையென்று பிறங்குபத்தி பெருக்கினால்
உற்றநுங்கட மக்குநேர்குறை யொன்றுமின்றென வோதினார்
மற்றநங்கையு நன்றுநீர்மனை வாருமென்ன வழைத்தனள். (௯௧௪)

யானுரைத்த படிக்கு நீயிவை வாவெனென்றொரு சூளுறிற்
றானுனக்கிவை வாகவெய்துவனென்ன மற்றவள் சாற்றினாள்
கோனுளப்படி மனைவரக்கொடு போயினாளவர் கொண்டலை
மானுமெய்த்திரு மாறனாமம் வழுத்தியுற்றனர் மாறிலார். (௯௧௫)

முன்றிலார் துளவப்பொழிற் கணிருந்து கங்குன் மொழிந்திடு
கின்றமாதவனாமமேவிய கீர்த்தனம் வினவற்கவண்
துன்றநேகரையுஞ் ஜிஜாயி கடுத்து மற்றிவர் தொடர்வதென்
என்றன்மாமனை யென்றுசீறுமுனன்பர் கண்டிதமே சொல்வார். (௯௧௬)

ஹரிதனாமம் வினாவவென் வயினடையு மற்றிவராலுனக்
குரியவொண்பொருள் குறைவதென்ன வருறுவதேநல மெனவுனாய்
பெரிதுசீறினை மனையின்வேலை விடுத்துவந்தின பேசினாய்
அரிவைநிற்[illegible]குவாசச்சென்ன வவளடங்கிய மைந்தனள் (௯௧௭)

இன்னதாகவி னங்கொருத்தரு மேகவஞ்சியிருந்தனர்
மன்னுகின்ற ஜிஜாயி யாலதறிந்தவன் பர்தமனைவியை
முன்னியென்னரு கெய்தியானினி மொழியுமாலரி கீர்த்தனம்
தன்னினுன்மன மொன்றிநீவின வென்றுரைத்தனர் தையலாள். (௯௧௮)

இவருரைப்படி வினவுறாதுறில் யான்முனோதிய வாசகம்
தவறுமென்றரு கெய்தமற்றவ டனிமைகண்டுறு தையலே
எவமதேதரு மிவ்வுடற்றிரமில்லை யாதலினாளெலாம்
அவமதாகவுறாமலுள்ளதனைத்திலும் விழைவற்றுநீ. (௯௧௯)

மக்களுநம தென்றுளத்தின் மதித்திடாம லனைத்துமால்
பக்கலாவ தெனத்துணிந்தொரு பாண்டுரங்கனை யேபிதாத்
தக்கதாய்குரு தெய்வமென்று சலிப்பின்முக்கரணங்களும்
ஒக்கநிற் கவவன்சரண்டனை யொழியுறாதுள முன்னியே. (௯௨௰)

வரிலிசத்திலுனக்குறும் புகழ்மறு பிறப்பும் வராதுமாம்
பெரியமெய்ப்பத மெய்துமாதலி னினியுனாவுடை பேணியிங்
கிரிவலக்கணு றேலேகாதசி யின்றுநாளைது வாதசிப்
பரிதிபற்றுற லிந்திராயணி படிதலாய் மனைபற்றியே. (௯௨௧)

உள்ள சொத்துகள்யாவு மாலடியார் பெறும்படியுதவிநம்
வள்ளல் விட்டலனைக்கருத்தின் மதித்திருத்தி வலிந்தெனத்
தெள்ளு மிப்பொருள் பத்தொடொன்றுறு செய்யுளிற் றெரியச்செய்தார்
எள்ளில் பூரணபோத மென்றசனுக்கு நாமமியைந்ததே. (௯௨௨)

அதைவிளவினரனைவரும் விரைவாய் விரக்தியடைந்துடன்
சிதைவிலாமதி நலமுறும்படி செய்வதாம தனைச்சிஜாய்
இதையமேவவுரைத்து மாறனை யேத்தியாரதி செய்தனர்
உதையமாகு முனைதவிளயினளுக்கு ஞானமுலாயதே. (௩௨௩)

இறைவிரக்தி பிறந்து வைகறை யிந்திராயணியாடிமா
மறைகளைத் தெரிவோரை மாமனை வரவழைத்துள பொருளெலாம்
நிறைவுளத்தொ டளித்துவிட்டொரு நெகிழ் பொளற்கலை நீர்படிந்
துறையு ளூற்றபி னிடையுடுத்திட வுளிவெயிற்க ணுலர்த்தினள். (௩௨௪

அன்னவேலையி லமுதுதித்தவ ளொருபுலச்சி யுருக்கொடங்
கின்னதீருமெ யன்பர்பக்க லெதிர்நதொர் வஸ்திர மீதிரோல்
நன்னராகிய புண்ணியம்பெரி தெய்து நும்வயி னல்கெனச்
சொன்னபோதி லெழுந்துபோயுலர் துகில்கொ டந்தனர் சொல்லுவார். ௩௨௫

நானளித்தன னென்றுநீபிறர் தெரியுமாறு நவின்றிடேல்
மீனெனத்தகு விழியினய்விளை வாகியேகென விட்டனா
பானணித்துள மக்கள்கண்டுத மம்மனைக்கது பகரலும்
கோனுரைத்த தயர்ந்துமாயை குலாவுகோப மிகுந்துளாள். (௩௨௬)

எனது வல்லவ ளொன்றின்மேவ வழைசுறவந்தவ ரிசைவறப்
பனல்விளவியோர் கரியனகிய பாவிபாத நினைக்குமுன்
மனதின்மாளிகை யுளதெலாந்துடை பட்டதாயத மாலடி
உனலின் மேவுறு மிடியெலாமென வுருரைத்துள துண்மையே. (௩௨௭)

என்னிடத்துள தாயதென்றொரு பெரியகல்லை யெடுத்துநான்
முன்னுகாலை முறிப்பனென்றுடன் முனிவுகொண்டதின் மோதவே
உன்னி யெய்தினள் கோயிலுக்குமு னுறலும்விட்டல னுடலெலாம்
துன்னடுக்குட னருகுறுந்துணை விக்குநேரிது சொல்லுவான். (௩௨௮)

என்செய்வேனிவள் கல்லெடுத்தென திருபதத்திலு மிடுவதற்
கஞ்சுறுதிவ ணெய்துகின்றன ளறிதியென்னலு மலருளாள்
வெஞ்சினங்கொடு மோதவஞ்சிலள் மேவுகின்றதை நோக்கிநீ
நஞ்சின் வெஞ்சின முடனெனுதனை நலிகுவான்வர லேதென. (௩௨௯)

வினவிவந்த ஜிஜாயிராத்திரி மேவுமென்பதி விரகுடன்
சொனதினலிறை யுன்னினேனிவ னடியைவைகறை துன்னுமுன்
எனதிலுள்ளவெ லாமழிந்ததொர் மாறுமென்கலை யும்மிலா
தினல் விளைந்தத னுதினமெண்ணுறில் யாவைமேவகி லாதவே. (௩௩௰)

ஆதலாலிவ னடிகளைச்சிதை வாக்கவெய்தின னென்னலும்
போதுலாவிய மங்கைநன்கு பொருந்துன் வாழ்வை நினைத்துநீ
நோதன்மேவலை யென்றுபைம்பொன் விராகனுறொடு கச்சுநன்
மேதகுங்கலை யுங்கைதந் தனள்மேவு மின்பொடு கொண்டனள். (௩௩௧)

தந்தமென்கலை தனையுடுத்தினள் சாமிகோயிலை விட்டுடன்
மூந்தினள்வெளி வந்தபோது நலன்பர் கண்டெதிர் முறுவல்செய்
திந்தமென்கலை யேதுகையினில் யாதுசொல்லென வினவினர்
வந்தவாறு விளம்பிகையது மின்னதென்றும் வகுத்தனள். (௩௩௨)

நன்றுமற்றது தருகெனச்சில நல்கினான் மறையோர்தமக்
கன்றளித்தன ரனபர்மிக்கதை யவரளித்தது கொண்டகம்
துன்றியுற் றனனன்பர் பின்பு புனூவெனபபுகல் சும்மையிற்
சென்றோர்செட்டி யகத்திருந்தரி கீர்த்தனம்பல செப்பினர். (௩௩௩)

ஆகியங்குறு கின்றசெய்கை யறிந்துணர்ந்து சிவாஜிவி
வேகிமன்னவ னன்பரோதுறு விமலகீர்த்தனம் வினவமா
மோகியாகலினந்த நாடுறுவோர் மிலேச்சாதன் முனைவரென்
